ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

மூலமும்

பெரிய ஆச்சான்பிள்ளை அருளிச்செய்த

மூவாயிரப்படி வியாக்யாநமும்,

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த

ஆறாயிரப்படி வியாக்யாநமும்,

சுத்தஸத்வம் தொட்டாசார்யர் அருளிச்செய்த

ஸ்வாபதேச வியாக்யாநமும்,

வான மாமலை ஜீயர் அருளிச்செய்த

ஸ்வாபதேச வியாக்யாநமும்,

மயிலை மாதவதாஸன் தொகுத்த

பல ஆராய்ச்சி அநுபந்தங்களும்.

மயிலை மாதவதாஸன் பதிப்பு.

" திருவருளகம் "

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை - 1.

ஜய௵ மார்கழி௴ க௨

16—12—1954

உரிமைபதிவு செய்யப்பெற்றது }
Registered Copyright. }

விலை ரூபா இரண்டரை
ரூ.

ஸ்ரீ

உரிமையுரை

மணலி முத்துக்ருஷ்ண முதலியார் வழித்தோன்றலும், சென்ன மல்லேச்வரர் சென்ன கேசவப் பெருமாள் தேவஸ்தானங்களின் பரம்பரை தர்மகர்த்தரும், மணலீ மாணவர் விடுதி கல்லூரி மாணவர் இண்டி நகர் விடுதிகளின் ஸ்தாபகரும், திருவரங்கம் பெரிய கோயில் சந்த்ர புஷ்கரிணி வேத பாடசாலை தர்மகர்த்தரும், சென்னை கௌரவ மாஜிஸ்ட்ரேட்டும், எனது மாமனுருமாகிய, பக்த சிகாமணி — ராவ்பஹதூர் — மணலி சரவண முதலியாரவர்கள் நினைவுக்குறியாகவும், அவர்களுடைய திருத்தம்பியார் மணலி கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் நினைவுக்குறியாகவும், ஸ்ரீவைஷ்ணவ தர்சன ப்ரவர்த்தகராக எம்பெருமானார் காலத்திலிருந்து இற்றைவரை ஸேவை செய்யும் பெருமக்கள் பாத காணிக்கையாகவும் இச்சிறிய வெளியீட்டை ஸமர்ப்பிக்கிறேன்.

கேசவன் தமர் திருவடித் தொண்டன்

மயிலை மாதவதாஸன்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பதிப்புரை

திருப்பாவை முப்பதும் செப்புதற் கென்றே திருஆடிப் பூரத்தில் ஜகத்துதித்த ஆண்டாள் திருவடிகளைச் சிரமேற்கொண்டு, திருப்பாவை மூலமும் நான்கு வியாக்யானங்களும், கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர், நான்மறைகள் ஓதுமூர் நல்லபத்தர் வாழுமூர் ஆகிய ஸ்ரீவில்லிபுத்தூர் எனும் இந்த திவ்ய தேசத்தில், வடபெருங்கோயிலுடையான் திருமுற்றத்திலும், ஸ்ரீ ரங்கராஜன் கோதைப் பிராட்டியோடும், பெரிய திருவடியோடும் ஏக பீடத்தில் நின்ற திருக்கோலத்தில் காட்சி வழங்கும் திருமுற்றத்திலும், மார்கழி நீராடல் தொடங்கும் இந்நன்னாளில் வெளியிடப் பெறுகின்றன. ஆறாயிரப்படி வியாக்யானம் தமிழ் லிபியில் 1881-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. அடுத்த பதிப்பு, தமிழ் லிபியில் 73 ஆண்டுகள் சென்ற பின்பு, இன்றே வெளிவருகின்றது. மூவாயிரப்படி வியாக்யானம் 1937-ம் ஆண்டு கடைசியாக வெளிவந்தது. அதன் பிரதிகள் இப்போது விலைக்கு எங்கும் கிடைத்தில. வாநமாமலை ஜீயர் ஸ்வாபதேசம் தமிழ் லிபியில் இன்றே முதன் முதலாக வெளிவருகின்றது. (தெலுங்கு லிபியில் 1911-ம் ஆண்டு வெளியாயிற்று) இவ்வாறு பிரதிகள் அருகியுள்ள நிலையில், இவ்வெளியீடு, காலத்தாற் செய்தற்குரிய கைங்கர்யமென்பதைத் திருமாலடியார் போற்றுவார்கள் என்றே நம்புகிறேன்.

இப்பதிப்பை வெளியிடுதற்குரிய தகுதி ஒரு சிறிதும் எனக்கில்லை. திருப்பாவையில் ஏனையோருக்குள்ள ருசியில்

ஒரு சிறிதும் என்னிடம் குறைந்ததில்லை. திருப்பாவை காலக்ஷேபம் இயலும் அளவு கேட்பதிலும் எனக்கு இச்சையுண்டு. முழுமையும் அநுபவிக்காவிடினும், தென்றலும் சிறு துளியும் பட்டாற்போல ஆங்காங்கு அவ்வப்போது இன்புற்றிருக்கிறேன். ஸ்ரீமான் காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமிகள் காலக்ஷேபங்களையும் ஸ்ரீமான் திருவாலி ராமாநுஜாசார்ய ஸ்வாமிகள் காலக்ஷேபங்களையும் கேட்ட பிறகே, எனக்குத் திருப்பாவையிலும் ஸ்ரீ வைஷ்ணவ தர்சனத்திலுள்ள சாஸ்த்ரார்த்தங்களிலும் ஈடுபாடு பிறந்தது, நாளும் வளர்ந்து வளர்ந்து வருகிறது. இவ்விரு பெரியார்களும் இப்பதிப்பு வெளிவருதற்குச் செய்த உதவிகள் சொலற்கரியன. அச்சிடுதற்குப் பழைய பிரதிகளை உபகரித்தல் தொடக்கமாக, அறிவுத் தொண்டு புரிந்து, இப்பதிப்பின் செம்மை மேன்மை அருமை முதலியவற்றிற்குதவிய பேரறிஞரை உபகரித்தல் போன்ற பல துறைகளில் வேண்டுவன எல்லாம் ஆந்தனையும் கைகாட்டினார்கள். வடமொழி தென்மொழிப் புலமையும் சமய நுட்பப்புலமையும் சொற்பொழிவுத் திறமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்ய ஸ்வாமிகள், இப்பதிப்பு இப்பெரியார் திருநாமத்தையே தாங்குதற்குரியபடி நற்பகுதிகள் எல்லாவற்றையும், எவ்வித கைம்மாறும் கருதாது, கைங்கர்யமாகவே உதவினார்கள். இப்பெரியாருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு இவர்களுடைய திருநாமத்தை வெளியிடத் தவிர்கின்றேன். திருப்பாதிரிப் புலியூர் சுவாமிநாத முதலியார் திருமகனார் ஸ்ரீமான் லோகநாத முதலியாரவர்கள் பழைய அச்சுப்பிரதி ஒன்றை உபகரித்தார்கள். ஆறுயிரப்படி தெலுங்கு லிபியிலுள்ளதைத் தக்கபடி வேண்டும்போதெல்லாம் பயன் படுத்தற்கு, மணலி மாணவர் விடுதியிலுள்ள செல்வர் குண்டுமடுகு கிருஷ்ணமராஜு எனும் ஆந்த்ர இளைஞரும், வேறு பல வழிகளில் செல்வர்கள் கோ. சௌரிராஜப் பிள்ளையும்,

ஆ. அப்பாதுரை பிள்ளையும் தொண்டாற்றினர். இப் பதிப்பு விரைவாகவும், கூடிய அளவு திருத்தமாகவும் வெளிவருவதற்குச் சாது அச்சுக்கூடத்தின் தற்போதைய நிர்வாகி - திரு. மு. நாராயணசாமி முதலியாரும், வேறு பலரும் தொண்டாற்றினார்கள். மேற்கூறிய எல்லோருக்கும் எனது நன்றியை மனமாரத் தெரிவித்து அவர்கள் ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி நீங்காத செல்வம் நிறைந்து எங்கும் திருவருள் பெற்றின்புறு அருளுமாறு ஆண்டாள் திருவடிகளை வழுத்துகின்றேன்.

இப்பதிப்பிலுள்ள பிழைகள் குறைகள் எல்லாம் எனது அறியாமையால் நிகழ்ந்தன. அவைகளை அன்பு கூர்ந்து அன்புடையார் தெரிவித்தால், அடுத்த பதிப்பு திருத்தமாக வெளியாதற்குப் பணிபுரிந்தவ ராவார்கள். இப்பதிப்பு எல்லோருக்கும் எல்லா நலங்களையும் தருக.

ஸ்ரீ வில்லிபுத்தூர்
ஜயவருஷ மார்கழிமீ கஉ
பூரத்திருநாள்
16—12—1954

இங்ஙனம்
கேசவன் தமர் திருவடித்தொண்டன்
மயிலை மாதவதாஸன்.

உள்ளுறை

பொருள்	பக்கம்
அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வைபவம்	520
ஆண்டாள் வாழித்திருநாமம்	607
ஆண்டாள் வைபவம்	516
எழுப்புவதில் வேறொரு முறை	513
ஆறாயிரப்படி வடமொழி மேற்கோளகராதி	522
உரிமையுரை	iii
உலக வழக்கங்கள்	597
உவமைகள்	587
உள்ளுறை	vii
கற்பனை நயங்கள்	593
சாஸ்த்ரார்த்த நுட்பங்கள்	575
சுத்தஸத்வம் தொட்டாசார்யர்	522
சொல்லகராதி	598
திருப்பாவை ஈராயிரப்படி அவதாரிகை	515
திருப்பாவை தனியன்கள்	viii
திருப்பாவை ராகதாளக் குறிப்பு	586
திருப்பாவை வியாக்யானங்கள்	1—457
துணை நூலட்டவணை	603
நாலாயிர திவ்யப்ரபந்த மேற்கோளகராதி	489
பட்டர் முதலிய பூர்வாசார்யர்கள் வார்த்தைகளும் ஐதிஹ்யங்களும்	595
பதிப்புரை	iv
பிழை திருத்தம்	605
பெரியவாச்சான் பிள்ளை வைபவம்	518
மார்கழி நோன்பு ஆகிய தைந் நீராடல்	510
மேற்கோள் விளக்கவுரை (ப்ரமாணத் திரட்டு)	527
வானமாமலை ஜீயர் ஸ்வாபதேசம்	458
ஸம்ஸ்க்ருதம் தமிழ் மொழி பெயர்ப்பகராதி	502
ஸ்வாபதேசம் அந்யாபதேசம்	586

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருப்பாவை தனியன்கள்

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம்ஸ்வம்ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ
ஸ்வோச்சிஷ்டாயாம்ஸ்ரஜி நிகளிதம்யாபலாத்க்ருத்யபுங்க்தே
கோதாதஸ்யைநம இதமிதம்பூயஏவாஸ்துபூய: 1

அன்ன வயற்புதுவை ஆண்டாள், அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம்,—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை, பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு. 2

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்,—நாடிநீ
வேங்கடவற் கென்னை விதியென்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு. 3

---

1. பட்டர் அருளியது. இதன் உரை:—பணைத்தெழுந்த நப்பின்னை கொங்கையென்னும் மலைச்சாரலிலே, கண்வளரும் கண்ணனைத் துயிலுணர்த்தி, மறைமுடிகளின் தெளிந்த பொருளாகிய, தன்பாரதந்த்ரியத்தை, ஓதியுணர்த்திச், சூடிக்களைந்த மாலையால் விலங்கிட்டு வலிசெய்து இன்பம் துய்க்கும் கோதையவளுக்கே ஆகுக மீண்டும் மீண்டும் (செய்யப்படும்) இவ்வணக்கங்கள்.

2, 3. உய்யக்கொண்டார் அருளிச் செய்தவை.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருப்பாவை வ்யாக்யானங்கள்

பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த

மூவாயிரப்படி வியாக்கியானம்

வியாக்கியான அவதாரிகை*

1. தேஹாத்மாபிமாநிகளுக்கும், ஆத்மஸ்வரூபம் கைவந்திருக்கும் ரிஷிகளுக்கும், பர்வதபரமாணுவோட்டை வாசிபோரும்; ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனை வாசிபோரும்; ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் அத்தனை வாசிபோரும்; பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் அத்தனைவாசிபோரும். அவர்களில் இவளுக்கு வாசியென்னென்னில்; "அநாதிமாயயா" (1) என்கிறபடியே, ஸம்ஸாரத்திலே யுறங்குகிறவர்களையெழுப்பி, எம்பெருமான்றானே தன்

*ஆறாயிரப்படி வியாக்கியான அவதாரிகையாக, இந்த மூவாயிரப்படி வியாக்கியான அவதாரிகையையே, அழகிய மணவாளப் பெருமாள்நாயனார் ஏற்றுக்கொண்டருளினார்.

முதல் பிரிவிலே (para) வக்த்ருவைலக்ஷண்யம், ப்ரபந்தவைலக்ஷண்யம், ப்ரதிபாத்யவைலக்ஷண்யம் கூறப்படுகின்றன. ரிஷிகள் ஸ்வயத்நபரர், ஆழ்வார்கள் எம்பெருமானால் மயர்வறமதிநலம் அருளப்பெற்று, ஸம்ஸார உறக்கத்திலிருந்து எழுப்பப்பெற்றவர்கள், பெரியாழ்வார் பொங்கும்பரிவால், எம்பெருமானுக்குத்தீங்குவாராமல் மங்களாசாஸனம் செய்தவர், ஆண்டாள் தானேசென்று எம்

ணக்காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள்; இவள், தானே சென்று எம்பெருமானையெழுப்பித் தன்குறையை யறிவித்தா ளாகையாலே, அவர்களிலும் இவள் விலக்ஷணை. "பால்யாத்" (2) என்கிறப்போலே தொடக்கமேபிடித்து, பகவத்குணங் களிலே அவகாஹித்துப்போரும். புருஷன் புருஷனைக்கண்டு ஸ்நேஹிப்பதிலுங் காட்டில் ஸ்த்ரீ புருஷனைக்கண்டு ஸ்நேஹிக் கை பள்ளமடையாகையாலே, ஆழ்வார்களிற்காட்டிலும் எம் பெருமான்பக்கல் பரமபக்தியுடையளான ஆண்டாளருளிச் செய்த திருப்பாவைக்குக் கருத்து:-மார்கழிநீராட என்று ஒரு வ்யாஜத்தைக்கொண்டு, நோன்பு என்று ஒரு வ்யாஜத் தாலே எம்பெருமான்பக்கலிலே சென்று, "உனக்கு சேஷ மாயிருக்கிற இந்த ஆத்மா அநர்த்தப்படாதபடிபண்ணி, இது க்கு ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யங்களையுங்கொடுத்து, அது தானும் யாவதாத்மபாவியாம்படி பண்ணியருளவேணும்" என்று அபேக்ஷிக்கிறது.

2. இந்நோன்புக்கு மூலமென்னென்னில்; மீமாம்ஸை யிலே ஹோளாதிகரண ந்யாயத்தாலே சிஷ்டாசாரஸித்தம். "மேலையார் செய்வனகள்" என்று ஆண்டாள் தானும் அரு ளிச்செய்தாள். பொய்யே "நோற்கிறோம்" என்று சொல்ல லாமோவென்னில்; விவாஹங்களிலும் மரணபர்யந்தமான தசைகளிலும்வந்தால் பொய் சொல்லலாம். (3) ஆண்டாள் இப்படி திருவவதரித்து வளர்ந்தருளுகிறகாலத்திலே, பெரி யாழ்வார்வயிற்றிற் பிறக்கையாலும் தானானதன்மையாலும் ஜ்ஞாநபக்திகள் க்ஷணந்தோறும் இட்டுமாறிப்போலே வடி

பெருமானை எழுப்பித் தன்குறையை அறிவித்தவள். ஆகையால் வக்த்ருவைலக்ஷண்யம் ஸ்பஷ்டம். பால்யாத் என்பது முதல், கருத்து என்னுமளவும் ப்ரபந்தவைலக்ஷண்யம். கருத்து என்பது முதல் அபேக்ஷிக்கிறது என்பது வரை ப்ரதிபாத்யவைலக்ஷண்யம். இனி 2-ம் பிரிவிலே, ஒருத்திக்கொருத்தி க்ருஷ்ணசம்ச்லேஷத்துக்கு கடகைகளாயிருக்கையாலே, விவாஹம் பண்ணுவிக்குமவர்களாகை யாலும், க்ருஷ்ணவிச்லேஷத்தால் மரணதசையைப்ராப்தைகளாம் படி யிருக்கையாலும் நோன்புநோற்கிறோம் என்று பொய்சொல்ல லாம். (பிரமாணத்திரட்டில் 3-வது காண்க.)

யிலே காணலாம்படி பெருக்ச்செல்லாநிற்க, "பதிஸம்யோக சுலபம்" (4) என்கிறபடியே-ஒருகொள்கொம்பிலே சேர்க்க வேண்டும் பருவமாய், மாணிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழாத தன்மையளுமாய், "கோல்தேடியோடும் கொழுந் ததேபோன்றதே மால்தேடியோடும் மநம்" என்கிறபடியே-அபிநிவேசத்தைப் பண்ணிக்கொண்டு வடபெருங்கோயிலுடையானுடனே தழுவி முழுசிப்பரிமாறவேணும் என்று செல்ல; இவள் நினைத்தபடிகளுக்கு அவன் முகங்காட்டாமையாலே மிகவும் அவஸந்நையாய், "இவளோடுகலந்து பரிமாறப்பெற்றருண்டோ! இல்லையோ!" என்று ஆராய்ந்து பார்த்து, "திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகள் யதாமநோரதம் இவனோடே அநுபவிக்கப்பெற்றார்கள்" என்று அநுஸந்தித்து, "அது காலாந்தரத்திலே யாகையாலே அதுக்கு உதவப்பெற்றிலோமே!" என்று இன்னாதாய்; "இனி அவன் உலாவிப்போன அடிச்சுவடும், அவனும் பெண்களுமாகத் திளைத்த யமுனையும், அவனெடுத்த கோவர்த்தநமும் கிடந்ததாகில் அவற்றைக்கண்டாகிலும் தரிப்போம்" என்றுபார்க்க; அதுக்கு, தனக்குப்போக பலமில்லாமையாலே அவற்றை அநுஸந்தித்து மிகவும் அவஸந்நையாய்[1], ஸ்ரீஜநகராஜன் திருமகளைப்போலே "வில்" என்று ஒரு அவதிபெறுதல், நப்பின்னைப்பிராட்டியைப்போலே "ரிஷபங்கள்" என்று ஒரு அவதி பெறுதல் செய்யப்பெறாமையாலே மிகவும் தளர்ந்து, "நமக்கு தரிக்கைக்குவிரகென்?" என்று ஆராய; சில தார்மிகர், அவ்வளவிலே சொல்லுகிறார்கள்;—"திருவாய்ப்பாடியிலே க்ருஷ்ணனும் பெண்களுமாய்த் திருக்குரவைகோத்து அதிரஸம் செல்லாநிற்க, ப்ரீதியாலே குமிழ்நீருண்டு, 'இனி நற்கேடு கெடவொண்ணாது' என்று இந்த ரஸம் மாறுகைக்காக, பெண்களைப்பிரிந்து க்ருஷ்ணன் ஒளிக்க; பெண்பிள்ளைகள் தங்களாற்றாமையாலே, "துஷ்டகாளிய" (5) என்கிறபடியே அவர்கள் அநுகரித்து[2] தரித்தார்கள்" என்றுகேட்டு, தானும் அவர்களைப்போலே அநுகரித்து தரிக்கப்பார்க்கிறாள்.

---

[1]அவஸந்நை - துக்கத்தால் ஓய்ந்தவள். [2]அநுகரித்தல் - ஒருவரைப்போலச்செய்தல்.

3. இவள்தான் ப்ராஹ்மணியாயிருந்து வைத்து அவர்களைப்போலே அநுகரிக்கும்படி யெங்ஙனேயென்னில்; யாகத்திலே தீக்ஷித்தவர்கள்[3], தேவதத்தாதி நாமங்களைத் தவிர்ந்து, யாகம் முடியுமளவும் "யஜமாநன்" என்றும், "அத்வர்யு" என்றும், "ஹோதா" என்றும் இத்யாதி நாமங்களே யாகிறுப்போலே; இவளும், ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்கள் இடைப் தானும் அவர்களிலே ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலே ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளேநிற்கிறவன் க்ருஷ்ணனாகவும் அநுஸந்தித்து, தன்னுடைய திருவுள்ளம் திருவாய்ப்பாடியிலே சூடிபோய், பாவநாப்ரகர்ஷத்தாலே[4] அநுகாரம்முற்றி, அவைதானேயாய், இடைநடையும் இடைமுடியும் இடைப்பேச்சும் முடைநாற்றமுமாய் விட்டது.

4. ஸ்ரீய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸ்ரீவைகுண்டநிகேதநனாயிருக்கிற ஸர்வேச்வரன், நஷ்டமாய்க்கிடக்கிற ஜகத்தை க்ருபையாலே ஸ்ருஷ்டித்து, ஆத்மாக்களுக்கு கரணகளேபரங்களைக் கொடுத்து, "சாஸனாச் சாஸ்த்ரம்" (6) என்கிறபடியே - வேதசாஸ்த்ரங்களை, தன்னைப்பெறுகைக்கு உபாயமாகக் காட்டிக்கொடுக்க; அவற்றைக் காற்கடைக்கொண்டு விஷயாந்தரங்களிலே மண்டி அநர்த்தப்பட்டுப் போகிறதசையிலே, தான்வந்து பிறந்தருளி, தன்னுடைய ஸௌந்தர்யத்தாலும் சீலாதிகுணங்களாலும் இந்த ஜகத்துக்களை ஈடுபடுத்தி, வாரிப்பிடியாகப் பிடித்துக்கொண்டுபோவானொருவனாகையாலே, ததர்த்தமாகத் திருவாய்ப்பாடியிலே க்ருஷ்ணனாய் வந்து திருவவதாரம்பண்ணி, தன்னுடைய ஸௌந்தர்யத்தாலும் குணசேஷ்டிதங்களாலுமாக, 'பஞ்சலக்ஷம் குடியிலுள்ள பெண்களைத் தோற்பித்துக்கொண்டு, ஒத்தபருவத்திற் பெண்களும் தானுமாய் வளர்ந்;

பிரிவு 3 - இடைப்பேச்சு "நெய்யுண்ணோம் பாலுண்ணோம்" என்கை - இடைநடை முதலியன "ஆயர்சிறுமியரோம்" என்கை.

[3] தீக்ஷித்தவர்கள் - வ்ரதத்தை மேற்கொண்டவர்கள். [4] பாவநாப்ரகர்ஷம் - நினைவின் முதிர்ச்சி.

காலத்திலே; தானும் ப்ராப்தயௌவனனாய், அவர்களுக்கும் யௌவனம்வந்து தலைக்கட்டினவாறே, கோபவ்ருத்தரெல்லாருங்கூடி, "க்ருஷ்ணன் [5]தூர்த்தனாயிராநின்றான், இவன்முகத்திலே பெண்கள் விழிக்கலாகாது" என்று பார்த்து, இவர்களைக்கொண்டுபோய் நிலவறைகளிலேயடைக்க; பெண்களும் க்ருஷ்ணனும்பண்ணின பாக்யத்தாலே வர்ஷமின்றிக்கேயொழிய, பெண்களிருந்து மநோரதிக்கிறார்கள்;-"கோதநராயிருக்கிற இடையர் வர்ஷார்த்தமாக நம்மை நோற்கச்சொல்லக்கடவர்கள், க்ருஷ்ணன் இதுக்குக் [6]கடைக்கூட்டாகவுங்கடவன், நமக்கொரு துக்கமில்லை" என்று பெண்கள் ப்ரீதைகளாய் தரித்திருக்கிறதசையிலே; வர்ஷமின்றிக்கேயிருக்கிறபடியைக்கண்டு, கோபவ்ருத்தரெல்லாரும் திரண்டு, "பசுக்களும் மநுஷ்யரும் பிழைக்கும் விரகு ஏதோ!" என்று பார்த்து "வர்ஷார்த்தமாக நோற்க வர்ஷமுண்டாம்" என்று "இவ்வூரில் பெண்களடைய நோற்கக்கடவர்கள், இந்நோன்புக்கு, இங்குத்தைக்கு அதிபனான ஸ்ரீநந்தகோபர்மகன் க்ருஷ்ணன் [7]கடகனாவான்" என்று அத்யவஸித்து, பெண்பிள்ளைகளையடைய அழைத்து க்ருஷ்ணனையுமழைத்து, பெண்களை நோற்கச்சொல்லி, "இவர்கள் நோன்புக்கு நீ கடகனாக வேணும்" என்று க்ருஷ்ணனை அபேக்ஷிக்க; அவன், "எனக்கு க்ஷமமன்று" என்ன; "இத்தனையும் செய்யவேணும்" என்று மறுக்கவொண்ணாதபடி நிர்ப்பந்திக்க; அவனும் இசைந்தபின்பு, எல்லாரும் திரளவிருந்து "பெண்கள் நோற்பார், இதுக்குவேண்டுவது க்ருஷ்ணன் ஸஹகரித்துக்கொடுப்பான்" என்று ஓம்அறைந்து[8], க்ருஷ்ணன்கையிலே பெண்களைக் காட்டிக்கொடுத்து, கோபவ்ருத்தரெல்லாரும் போனபின்பு, பெண்களும் க்ருஷ்ணனும் கூடவிருந்து "திருக்குரவைகோத்த ராத்ரிபோலே, பெண்காள்! இதுவும் நமக்கொரு ராத்ரியே!" என்று க்ருஷ்ணன் கொண்டாடி, "இனி அசிர்ப்புப்பிறக்க[9] இருப்போமல்லோம், இப்போது எல்லாரும்போய் அபர[10]

---

5 தூர்த்தன் - காமுகன். 6 கடைக்கூட்டு - நிர்வாஹம். 7 கடகன்- சேர்ப்பிக்குமவன். 8 ஓம் அறைதல் - ஸம்மதித்தல். 9 அசிர்ப்பு - ஆயாஸம். 10 அபரராத்ரி - இரவின் பின்பாகம்.

ராத்ரியிலேவந்து எழுப்புங்கோள் நோன்புக்குக் குளிக்கலாம் படி" என்றருளிச்செய்து, க்ருஷ்ணனும் பெண்களைப்பிரிந்து போய் தரிக்கமாட்டாமே, நப்பின்னைப்பிராட்டி திருமாளிகையிலே புக்கான்.

5. பெண்களும் பரஸ்பர ஸம்ச்லேஷத்தாலே கால்நடை தந்துபோய் தந்தாம் மாளிகையிலேபுக்கு உறங்கப்புக்கவிடத்தில்; கண் உறங்காமையாலே, முற்படவுணர்ந்தவர்கள், க்ருஷ்ணகுண சேஷ்டிதங்களை நினைத்து, எழுந்திருக்கமாட்டாதே கிடக்கிறவர்களை, தனித்தனியேசென்று எழுப்பி, எல்லாருங்கூடி, உத்தேச்யமான ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையிலே சென்று க்ருஷ்ணனையெழுப்பி, தங்கள் அபேக்ஷிதத்தையறிவித்து, "யாவதாவர்த்தேசக்ரம்" (7) என்று - ஸ்ரீபராதாழ்வான் பெருமாள்திருவடிகளிலே விழுந்து வேண்டிக்கொண்டாப்போலேயும், அர்ஜுநன் ஷட்கத்ரயத்திலுங்கூட எடுப்பும் சாய்ப்புமாய்ச்சென்று சரமச்லோகங்கேட்டு தரித்தாப்போலேயும் அபேக்ஷிதம்பெற்று முடிக்கிறது.

6. இவள் மடலூராதே நோன்பிலே கைவைப்பானென்னென்னில்; "ராஜமஹிஷி உஞ்சவ்ருத்திபண்ணி ஜீவித்தால் ராஜாவுக்கு அவத்யாவஹமாமாபோலே மடலிலுங்காட்டில் இது அவத்யாவஹ மாகையாலும், சக்ரவர்த்தித் திருமகனைப்போலே குணவ்யஸநியன்றியே தானும் ஒக்கமடலெடுப்பானொரு சுணைக்கேடனாகையாலும், மடல் இவ்விஷயத்தில் பலியாது" என்றுபார்த்து நோற்கிறார்கள். உத்தேச்யம் வேறொன்றாய் நோன்பு வ்யாஜமாத்ரமாகில் இவர்களுக்கு தேவதை

பிரிவு 5-தங்கள் அபேக்ஷிதத்தை அறிவிக்கையாவது:— "இறைவா நீதாராய்" என்று தங்கள் புருஷார்த்தத்துக்கு நீயே உபாயம் என்றும், "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என புருஷார்த்த ஸ்வரூபம் இது என்றும் அறிவிக்கை. ஷட்கத்ரயம் - 18 அத்யாயமுள்ள பகவத்கீதை-எடுப்பும் சாய்ப்பும்-சோகாவிஷ்டனான அர்ஜுநனை க்ருஷ்ணன் எடுக்கவும், மீண்டும் அர்ஜுநன் சோகித்துச் சாயவும் என்றபடி.

பிரிவு 6-குணவ்யஸனி - குணத்துக்குஹாநி வ( )மோ என வ்யஸனிப்பவன். சுணைக்கேடன் - லஜ்ஜாஹீநன்.

வர்ஷிக்குமோவென்னில்; வ்ரதோபவாஸகர்சிதமான வடிவைக்கண்டால், சேதநமன்றே! வர்ஷியாதோ! என்று பார்த்தார்கள். ... ... *

முதற்பாட்டின் அவதாரிகை

7. முதற்பாட்டில், இந்நோன்புக்கு ஒருகாலம் நேர்படுவதே! என்று காலத்தைக் கொண்டாடுகிறார்கள். "மார்கழித்திங்கள்" என்று தொடங்கி, "சிறுமீர்காள்" என்னுமளவும் - ப்ராப்யம்; மேல் ப்ராபகம்: ப்ராப்யப்ராபக ஸங்க்ரஹமென்றுமாம். முதற்பாட்டு ;—

மார்கழித்திங்கள்மதிநிறைந்தநன்னாளால்
　நீராடப்போதுவீர்போதுமினோநேரிழையீர்
சீர்மல்குமாய்ப்பாடிச்செல்வச்சிறுமீர்காள்
　கூர்வேற்கொடுந்தொழிலன்நந்தகோபன்குமரன்
ஏரார்ந்தகண்ணியசோதையிளஞ்சிங்கம்
　கார்மேனிச்செங்கண்கதிர்மதியம்போல்முகத்தான்
நாராயணனேநமக்கேபறைதருவான்
　பாரோர்புகழப்படிந்தேலோரெம்பாவாய்.

பதவுரை :—சீர்மல்கும் - செல்வப்பெருக்கையுடைய, ஆய்ப்பாடி - திருவாய்ப்பாடியில், செல்வம் - கைங்கர்ய ஸ்ரீயால்நிறைந்த, சிறுமீர்காள்-இளம்பருவத்தையுடைய பெண்களாய், நேர்-விலக்ஷணமான, இழையீர் - ஆபரணங்களை யுடையவர்களே !; மார்கழித்திங்கள் - மாஸங்களிற்சிறந்த மார்கழிமாஸமாயும், மதிநிறைந்த - சுக்லபக்ஷமாயும், நல் - நல்ல, நாள்-முகூர்த்தமாயுமிருந்துள்ள இம்மங்கள திவஸத்திலே ; கூர் - சத்ருவர்க்கத்தை நிரஸிக்கத்தக்க கூர்மையையுடைய, வேல் - வேலைத்தரித்தவனாய், க்ருஷ்ணவிஷ

பிரிவு 7—காலத்தைக் கொண்டாடுகையே இப்பாட்டின் முக்கிய கருத்து. பகவத்ஸமாச்ரயணத்திற்கு அநுகூலகாலம் நேர்படுவதே ! என்றுஸ்வாபதேசம் கண்டுகொள்க. திருவாய்மொழி முதற்பாட்டு மேல்பரக்கச் சொல்லும் அர்த்தங்கட்குச் சங்க்ரஹமானாற்போல, இப்பாட்டும். மார்கழித்திங்கள் - சிறுமீர்காள்வரை ப்ராப்யம், மேல்வருவது ப்ராபகம். பறை என்றதால் அடிமை என மேல்சொல்வது ப்ராபகத்துக்கு சேஷமாக ஆம்.

யத்தில் தீங்குசெய்யும் அற்பஜந்துக்களையும், கொடுந்தொழிலன் - க்ரூரமாகத் தண்டிக்குமவனை, நந்தகோபன் - ஸ்ரீநந்தகோபருடைய, குமரன் - பிள்ளையாய், ஏர் - ஸௌந்தர்யத்தால், ஆர்ந்த- பரிபூர்ணமான, கண்ணி - கண்களையுடையவளான, அசோதை - யசோதைப்பிராட்டிக்கு, இளஞ்சிங்கம் - செருக்கும் மேனாணிப்புமுள்ள சிங்கக்குட்டிபோலே யிருக்குமவனாய், கார் - ஆச்ரிதர் தாபம் தீர்க்கும் குளிர்ச்சியையுடைய, மேனி - திருமேனியையும், செம் - செந்தாமரைமலர்போன்ற, கண் - திருக்கண்களையும், கதிர்போல் - ஸூரியனைப்போல் ப்ராகாசமுமாய், மதியம்போல் - சந்த்ரனைப் போல் ஸந்தோஷகரமுமான, முகத்தான் - திருமுகமண்டலத்தையுமுடையனான, நாராயணனே-ஸர்வஸ்மாத்பரனான நாராயணனே, நமக்கே-"அவனால்பேறு" என்றிருக்கிறநம்க்கே, பறை-நம்முடைய அபேக்ஷிதத்தை, தருவான் - கொடுக்குமவனாயிராநின்றான் : ஆதலால், பாரோர்-க்ருஷ்ணனையும் நம்மையும் சேரவொட்டாதவர்கள் தாங்களே, புகழ-கொண்டாடும்படி, படிந்து - இந்நோன்பிலே அவகாஹித்து, நீராடப்போதுவீர் - க்ருஷ்ணஸம்ச்லேஷத்தைப் பெற விருப்பீர், போதுமினோ - வாருங்கோள் என்கிறாள்.

மூவாயிரப்படி :—8. (மார்கழித்திங்கள்) "நாதிசீதாநகர்மதா" (8) என்கிற ந்யாயத்தாலே அத்யுஷ்ணமாதல் அதிசீதளமாதலின்றிக்கே யிருக்கும் மாஸம். நாளுக்கு ப்ராஹ்மமுஹூர்த்தம்போலே ஸம்வத்ஸரத்துக்கு இம்மாஸமாகையாலே ஸத்த்வோத்தரமான காலம். "மாஸாநாம்மார்கசீர்

ஆறாயிரப்படி :—(மார்கழித்திங்கள்) "ஒழிவில் காலமெல்லாம்" என்றும், "அநாதிர்பகவான்கால:" என்றும் சொல்லுகிறபடியே பகவத் விஷயத்தில் இவனுக்கு ஆபிமுக்யம் பிறந்தால், பின்னை, அவன்றன்னை யல்லகாணும் கொண்டாட அடுப்பது; அக்காலத்தை யாய்த்து. "சைத்ரஸ்ரீமாநயம்மாஸ:"

பிரிவு 8-"நாதிசீதாநகர்மதா" என்கிற எம்பெருமான் ஓட்டை ஸாத்ருச்யத்தாலே ப்ராப்யமென்று கொண்டாடினார்கள். ப்ராஹ்மமுகூர்த்தம் ஸாத்விகபல சித்திக்குறுப்பான சாத்விககாலம். வைஷ்ணவமானமாசம் ப்ராப்யபூதன் அபிமானிக்கையாலே. சர்வவஸ்துக்களும் அங்குரிக்கும் காலமே தங்களுடைய போகவர்த்தகமான மனோரதமும் பலிக்கும் காலமாகும். அந்யாபதேசத்திலே, விரோதி நிவிர்த்திக்குடலான காலம்.

ஷோஹம்" (9) என்று – மாஸங்களில் வைத்துக்கொண்டு மார்கழிமாஸமாகிறேன் என்று அவன்றானே யருளிச்செய்கையாலே வைஷ்ணவமான மாஸம். ஸர்வவஸ்துக்களும் அங்குரிக்கும் காலமாகையாலே தங்களுடைய உந்மேஷத்துக்கு அர்ஹமானகாலம்.

9. (மார்கழித்திங்கள்) கோபவ்ருத்தர் குளிருக்கு அஞ்சிப்புறப்படமாட்டாத காலம். தங்களுத்தேசியம்கிடக்கக் காலத்தைக்கொண்டாடுகிற தென்னென்னில்; "சைத்ரஶ்ரீமாநயம்மாஸ:" (10) என்று - ஒரு ஸம்ருத்தியைப்பற்ற காலத்

என்று ஒரு ஸம்ருத்தியைப்பார்த்துக் கொண்டாடிற்றிறே. சைத்ர: அல்லாதாரிற் காட்டில் பெருமாளுக்குள்ள ப்ராதாந்யம்போலே மாஸங்களுக்கெல்லாம்முதலானமாஸம். 'ஶ்ரீமாந்' அவர் எல்லார்க்கும் ராஜாவாகப்ராப்தரானாப்போலே, சைத்ரமாஸம் ஸர்வர்க்கும் ஸுகரமாகையாலே மாஸங்களுக்கெல்லாம் ராஜாவென்கிறது. அயம்மாஸ: அபிஷேக மநோரத ஸமயத்திலே ஸந்நிஹிதமான தன்னேற்றம். அங்கு - சேஷி சேஷபூதரை லபிக்கைக்குக் கொண்டாடின கொண்டாட்டம்; இங்கு - சேஷபூதர் சேஷியை லபிக்கைக்குக் கொண்டாடுகிற கொண்டாட்டம். புண்யபுஷ்பிதகாநந: பாவநஸ் ஸர்வலோகாநாம்த்வமேவ என்றும், பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம் என்றும் அவர்க்கு இரண்டாகாரமு முண்டானாப்போலே, இக்காலமும் பாவநமுமாய் போக்யமுமாயிருக்கை. புஷ்பிதகாநந: படைவீடுபோலே நாம் அலங்கரிக்க வேண்டாதே, தானே அலங்கரிக்கை. பெருமாள் பொன்முடிசூட, காடு பூமுடிசூடிற்று.

பிரிவு 9-ஒரு ஸம்ருத்தியைப்பற்ற என்றது பெருமாளுடைய திரு அபிஷேகத்தைப்பற்ற. அல்லாதாரில்-பரதன் முதலானோர்-காலத்துக்கும் பெருமாளுக்கும் முதன்மையாலே ஸாத்ருச்யம் உபபாதித்து, சுககரத்வத்தாலே உண்டான ஸாத்ருச்யம் அருளப்படுகிறது. சேஷியான பெருமாளை சேஷபூதரான ஜனங்கள் லபிக்கைக்குப் பெருமாள் அவதரித்த மாஸமே, பெருமாள் அபிஷிக்தராய் ஜனங்களை லபிக்கைக்கும் மாஸமாயிற்று. பெருமாளுடைய போக்யதையைப்போலே, காட்டில் போக்யதையும் ஸ்வாபாவிகம்.

தைக்கொண்டாடிற்றிறே. சைத்ர: அல்லாதாரிற்காட்டில் பெருமாளுக்குள்ள ப்ராதாந்யம்போலே மாஸங்களெல்லா வற்றுக்கும் முதலான மாஸம். ஸ்ரீமாந்-அவர் எல்லாருக்கும் ராஜாவாக ப்ராப்தராளுப்போலே, சைத்ரமாஸம் ஸர்வர்க்கும் ஸுகரமாகையாலே மாஸங்களுக்கெல்லாம் ராஜாவென்கிறது. அயம்மாஸ: அபிஷேக மநோரத ஸமயத்திலே ஸந்நிஹிதமான தன்னேற்றம். அங்கு, சேஷியை சேஷபூதர் லபிக்கைக்குக் கொண்டாடின கொண்டாட்டம்; இங்கு, சேஷ

(மார்கழித்திங்கள்) " நாதிசீதாநகர்மதா " என்கிற ந்யாயத்தாலே அத்யுஷ்ணமாதல் அதிசீதளமாதலின்றிக்கே யிருக்கும் மாஸம். (மார்கழித்திங்கள்) தேவர்களுக்கு விடிகிற காலமாகையாலே வ்ரதங்களநுஷ்டிப்பார் தொடங்கும் காலமாயிருக்கை. (மார்கழித்திங்கள்!) இம்மலட்டு மாஸங்களிலே இதுவுமொருமாஸமே! என்கிறார்கள். இம் மாஸத்துக்கு விசேஷ மென்னென்னில்; ஸர்வேச்வரன், "விபூதியில் பரும் பருத்தவற்றை யெல்லாம் நான்" என்கிறபோது, " மாஸாநாம்மார்கசீர்ஷோஹம் " என்று - மாஸங்களில் வைத்துக் கொண்டு மார்கழிமாஸ மாகிறேன் நான் என்றருளிச் செய்தான். (மார்கழித்திங்கள்) குளிருக்கு அஞ்சி கோபவ்ருத்தர்கள் புறப்படாத காலமும், நாளுக்கு ப்ராஹ்மமுஹூர்த்தம்போலே ஸம்வத்ஸரத்துக்கு இம்மாஸமாகையாலே ஸத்த்வோத்தர காலமுமிறே. ஸாத்த்விக பலமிறே தாங்களும் கணிசிக்கிறது. காலக்ருத பரிணாம மில்லாமையைக் கொண்டாடுமாப்போலே, பரிணாமத்தைக் கொண்டாடுகிறார்களிறே. பரிணாம முண்டாகவுமாம், இல்லையாகவுமாம், பகவதநுபவத்துக்குப் புறம்பானது த்யாஜ்யமா மித்தனையிறே. இனித்தான் பர்வத பரிஸரத்திலே கிடந்ததொரு பீஜத்தோடு கடலினருகேகிடந்ததொரு பீஜத்தோடு வாசியற பருவம் செய்யுங் காலமாய்த்து. கைங்கர்யத்துக்கு ஏகாந்தமான காலமாகையாலே, " ஒழிவில் காலமெல்லாம் " என்னுமாப்போலே கொண்டாடுகிறார்கள். அஸாதாரணமானமாஸத்திலே அஸாதாரணமானபலத்தைப் பெறுவோம். ஸத்வோத்தரமான காலத்திலே ஸாத்த்விகபலம் பெறுவோம். எல்லாரும் அபி

பூதரை சேஷி வபிக்கைக்குக் கொண்டாடுகிற கொண்டாட்டம். "புண்ய: புஷ்பிதகாநந:" (11) என்றும், "பாவநஸ்ஸர்வலோகாநாம்த்வமேவ" (12) "பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" (13) என்றும் அவர்க்கு இரண்டாகார முண்டானாப் போலே, இக்காலமும் பாவநமுமாய் போக்யமுமாயிருக்கை. புஷ்பிதகாநந: படைவீடுபோலே நாம் அலங்கரிக்க வேண்டாதே தானே யலங்கரிக்கை. பெருமாள் பொன்முடிசூட, காடு பூமுடிசூடிற்று.

மதம்பெறுங் காலத்திலே நாமும் அபிமதம் பெறுவோமென்கிறார்கள்.

(மதிநிறைந்த) மாஸம் நேர்பட்டாப்போலே யிருந்ததீ! பக்ஷமும் நேர்பட்டபடி! "ஆபூர்யமாணேபக்ஷேபுண்யே நக்ஷத்ரே" என்று மங்களகார்யம் செய்வார்க்கு விதிக்கிற விதியும் இவர்களுக்குக் கோல்விழுக்காட்டிலே சேரவிழுந்தது. பகவத்ப்ரவணரா யிருப்பாருடைய தேஹயாத்ரையை, விதிதானே, பின்செல்லக்கடவதாயிறே யிருப்பது. "த்விதீய கம்பீரமநோநுஸாரிண:" என்னக் கடவதிறே. முன்பு இருள் தேட்டமானாப்போலே, இப்போது நிலாத்தேட்டமாகிறதாய்த்து. காமுகர்க்கும் கோபர்க்கும் இருள் தேட்டமாயிருக்குமிறே. "நள்ளிருட்கணென்னை யுய்த்திடுமின்" என்றிறே முன்பிருப்பது. தாய்க்கும் தகப்பனுக்கு மஞ்சவேண்டா, இருளிலே புறப்பட்டு அணைக்கலாம் என்கிறாள். [இருளன்ன மாமேனியெம்மிறை] இருளோடே சேர்ந்திறே வடிவுதானிருப்பது. "பிஷக்குக்கள்வாசல் ஆர்த்தர் கட்டணமாய்க்கிடக்குமாப்போலே, ஸ்ரீநந்தகோபர்வாசல் க்ருஷ்ணனாலே புண்பட்ட பெண்கள் கட்டணமாய்க் கிடக்குமாய்க் கொள்ளீர்!" என்றுபட்டர். அப்படி நிலாவுக்கு இருய்க்க வேண்டாதே ஊரிசைந்து மேலெழுந்திட்ட நாளிறே. ஒருவரையொருவர் எழுப்புகைக்கும் க்ருஷ்ண முகாவலோகநத்துக்கும் நிலாவுண்டாகப் பெற்றதென்கை.

பிஷக்குக்கள் - வைத்யர்கள். க்ஷயாதிகள் - க்ஷயம் முதலிய நோய்கள். அவனும் - சந்த்ரனும்.

10. (மதிநிறைந்த) மாஸம் நேர்பட்டாப்போலே யிருந்ததீ! பக்ஷமும் நேர்பட்டபடி. "ஆபூர்யமாணபக்ஷே புண்யேநக்ஷத்ரே" (14) என்று - மங்களகார்யம் செய்வார்க்கு விதிக்கிற விதியும் இவர்களுக்குக் கோல்விழுக்காட்டிலே சேரவிழுந்தது. பகவத்ப்ரவணரா யிருப்பாருடைய தேஹயாத்ரையை விதி தான்பின்செல்லக்கடவதாயிறே யிருப்பது. "த்விதீயகம்பீரமநோநுஸாரிண:" (15) என்னக்கடவதிறே. ஒருவரையொருவர் முகம் கண்டநுபவிக்கைக்கும், எல்லாருங் கூடிச்சென்று க்ருஷ்ணனை யெழுப்புகைக்குமாக நிலாவுண்டாகப்பெற்றது. "நள்ளிருட்கண்" என்ன வேண்டாவிறே இவர்களுக்கு; நிரோதிக்கக்கடவ அவ்வூராரே இசைந்து மேலெழுத்திடப் பெற்றதிறே.

க்ஷயாதிகள்போய் பூர்ணனாகிறானிறே அவனும்; இவர்களும், நாமுமுளோமாய் பூர்ணைகளாக வாரீகோளென்கிறார்கள்.

(நன்னாளால்!) மாஸத்துக்கும் பக்ஷத்துக்கும் நாயகக்கல்போலே யிருப்பதொருநாள் நேர்பட்டபடியென்! (நன்னாளால்!) முன்பு கழிந்தவை தீயநாள்போலே; நம்மை க்ருஷ்ணனோடு கிட்டவொட்டாதவர்கள்தாங்களே, க்ருஷ்ணனோடே சேருகைக்கு ப்ரமாணம்பண்ணிக்கொடுத்த நாளாகப் பெற்றதே! பகவத்விமுகனாய்ப்போன இவனுக்கு பகவல்லாபமுண்டான நாளிறே - நன்னாளாகிறது. அவன் எதிர்சூழல்புக்குத் திரிய, இவன்வைமுக்யம் பண்ணுகை தவிர்ந்து, அவன் க்ருஷி பலித்தநாளென்கை. "தாநஹம்த்விஷத:க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந், க்ஷிபாமி" என்று - நானேயிவற்றைக் குழியைக்கல்லி மணலையிடுவேன் என்ற ஸர்வேச்வரனே, "ததாமிபுத்தியோகந்தம்" என்னும் நாளிறே. "அத்ய மேஸபலம் ஜந்ம ஸுப்ரபாதாசமேநிசா" என்னுமாப்போலே - கம்ஸன் சோறுண்டுவளர்ந்த வெனக்கு விடியும் நாளுண்டாவதே! என்கிறானிறே. "ஸுப்ரபாதாத்யரஜநீ

பி. 10-பகவத்ஸமாச்ரயணம்பண்ணிக் கைங்கர்யம் பண்ணும் அவர்களுக்கு சுக்லபக்ஷம்விஹிதம். மதிநிறைந்தநல்நாள், ப்ரகாசகமாய், ஆநந்தகரமாயிருக்கையே நாளுக்கு நன்மை.

11. (நன்னாளால்) மாஸத்துக்கும் பக்ஷத்துக்கும் நாயகக்கல்போலே யிருப்பதொருநாள் நேர்பட்டபடியென்! நம்மை க்ருஷ்ணனோடு கிட்டவொட்டாதவர்கள் தாங்களே, க்ருஷ்ணனோடு சேருகைக்கு ப்ரமாணம்பண்ணிக்கொடுத்த நாளாகப்பெற்றதே!. பகவத்ப்ரஸாதத்துக்கு இலக்காகப் பெற்றநாளிறே-இவ்வாத்மாவுக்கு நல்நாளாகிறது. "க்ஷிபாமி" (16) என்ற அவன்றனே "ததாமி" (17) என்னப்பெற்ற நாளிறே. ஸர்வேச்வரனோடே எதிரம்பு கோக்கை தவிர்ந்து, "அவன் நமக்கு ரக்ஷகன்" என்னும விச்வாஸம் பிறந்த

மதுராவாஸயோஷிதாம்" என்று - ஸ்ரீமதுரையிலுள்ளார்க்கு 1வெளிச்செறித்தாப்போலேயும்; "ஸூப்ரபாதச" திருவாய்ப்பாடியினின்றும் எழுந்தருளினபோது அங்குள்ளார்க்கு அஸ்தமித்து, ஸ்ரீமதுரையிலுள்ளார்க்கு விடிந்ததிறே. "அஸூர்யமிவஸூர்யேணநிவாதமிவவாயுநா" அப்படைவீட்டில்கண்ணில்லாதார்க்கு கண்ணுண்டானாப்போலேயும், ப்ராணனில்லாதார்க்கு ப்ராணனுண்டானாப்போலேயு மாய்த்து இவர்களுக்கும்.

(நன்னாளால்) திருவயோத்யையிலுள்ளார், பெருமாளை முடிசூட்டியநுபவிக்கப் பாரித்துக்கொண்டிருக்க, வெறுந்தறையான நாள்போலன்றிக்கே, மீண்டுவந்து திருமுடிசூடியருளின நாள்போலே. (நன்னாள்) [பகல்கண்டேன்] உதிப்பது அஸ்தமிப்பதாகாநிற்கச் செய்தேயிறே "பகல்கண்டேன்" என்றது. அதாகிறது நாராயணனைக்கண்டேன் என்கை;—அஸ்தமியாத ஆதித்யனைக்கண்டேன். ப்ராதேசிக

பி. 11 - நாயகக்கல் பிரகாசகமாகையாலே-கழிந்தநாள் க்ருஷ்ணனோடு சேரவொட்டாமையால் தீயது, சேர்க்கைக்கு நிர்ணயித்த நாள் நல்லநாள் என்று அந்யாபதேசம். ஸ்வாபதேசத்திலே, பகவத்ப்ரஸாதத்துக்கு இலக்காகப்பெற்றநாள் நல்லநாள். த்வேஷியான கம்ஸன் சோறுண்டு அவனோடை ஸஹவாஸம் அக்ரூரன் பண்ணினநாட்கள் விடியாநாட்கள். த்வரைவெள்ளம் என்றது கொண்டாடுகையில் இச்சாசந்தானம். இதற்கு ஹேது இவர்கள் ப்ராப்யருசி.

1வெளிச்செறிப்பு - விளங்குதல்.

நாளிறே — நல்நாளாகிறது. "அத்யமேஸபலம்ஜந்ம ஸுப்ரபாதாசமேநிசா" (18) என்று—கம்ஸ[illegible]ராறுண்டு வளர்ந்தவெனக்கு, இங்ஙனேயொரு [illegible] உண்டாகப்பெறுவதே! என்றானிறே அக்ரூரன். மா[illegible]த்தைக் கொண்டாடுவது, பக்ஷத்தைக்கொண்டாடுவது, நாளைக்கொ[illegible]ண்டாடுவதாய், இதிலே இவர்களுக்குக்கிடக்கிற த்வரை வெள்ளமென்றான்! இவர்கள் ப்ராப்யருசியிருக்கிறபடி.

னல்லாத[1] ஆதித்யனைக்கண்டேன். ப்ராப்தாப்ராப்தவிவேகம் பண்ணினால் ஓரிரவும் ஒருபகலுமேயுள்ளது. பகவத்ப்ரத்யாஸத்திக்கு முன்பெல்லாம் பகல் விரவாத இரவாய், பின்பெல்லாம் இரவு விரவாத பகலாயாய்த்திருப்பது. "சென்றநாள் செல்லாத" இத்யாதி. கையார் சக்கரத்தின் முன்னாள்போலேயிறே முன்புகழ்ந்தநாள். மாஸத்தைக்கொண்டாடுவது, பக்ஷத்தைக் கொண்டாடுவது, நாளைக் கொண்டாடுவதாய், இதிலேயிவர்களுக்குக் கிடக்கிற த்வரைவெள்ளமென்றான்! இவர்கள் ப்ராப்யருசி யிருந்தபடி.

(நீராட) தோழிமார் ஒருவர்க்கொருவர் பவ்யைகளாயிருந்தார்களேயாகிலும், பகவத்ஸம்பந்தத்தைப் பார்த்தவாறே கௌரவ்யைகளாயிருப்பார்களிறே. வயிற்றிற் பிறந்தவர்களென்றுபாராதே, "கணபுரம் கைதொழும்பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவாரே" என்றும், "பெருந்தவத்தளென்றல்லாற் பேசலாமே" என்றும், "நேரிழை நடந்தாள்" என்றும் சொல்லாநின்றார்களிறே; இப்படியாகையிறே ஸ்ரீவைஷ்ணவர்களை "நீராட" என்கிறது. ஆசார்யர்களை "நம்பி" என்கிறதும், ஸ்ரீமதுரகவிகள் "நம்பி" என்கையாலே. பட்டர்ஸ்ரீபாதத்தைக்கழுவி தீர்த்தங்கொள்ளும் ஆண்டாள்.* எம்பெருமானாரும் ஸ்ரீவைஷ்ணவர்களும் எழுந்தருளாநிற்க, பெரியநம்பி தெண்டனிட்டுக் கிடந்தார்; "நம்மை இங்ஙனே செய்தருளிற்று என்?" என்று கேட்க, "ஆளவந்தாரெழுந்தருளுகிறாரென்றிருந்தேன்" என்றருளிச்

---

[1]பராதேசிகன் - ஓரிடத்திலிருப்பவன். *ஆண்டாள், பட்டரின் தாய்.

12. (நீராட) க்ருஷ்ணவிரஹத்தால் பிறந்த தாபம் ஆறும்படி போய்க் குளிர்ந்திருந்தால் - இவர்கள் நினைக்கிறது க்ருஷ்ணஸம்ச்லேஷத்தைத் தமிழரும், கலவியை, "சுனையாடல்" என்றார்கள். "ஏஷப்ரஹ்மப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மேசீதமிவஹ்ரதம்" (19) என்று-பகவந் ஸம்ச்லேஷத்துக்கு க்ரீஷ்மகாலத்தில் குளிர்ந்தமடுவை த்ருஷ்டாந்தமாகச் சொல்லிற்றிறே. தாங்கள் நினைத்தபடி சொல்லுகைக்கீடான முறை

செய்தார். இவையிறே பகவத்ஸம்பந்தத்தையிட்டு கௌரவிக்கும்படி. (நீராட) இவர்கள் தங்களுக்கு "நீராட" என்று நோயாசையிறே யமுநாஜலம் ஒருத்தியுடைய விரஹாக்நியாலே சுவறுமே! (நீராட) தமிழர், கலவியை, "சுனையாடல்" என்றாய்த்துச்சொல்லுவது. க்ருஷ்ண ஸம்ச்லேஷத்தையாய்த்து இவர்கள் "நீராட" என்கிறது. "ஏஷப்ரஹ்மப்ரவிஷ்டோஸ்மிக்ரீஷ்மே சீதமிவஹ்ரதம்" என்னுமாப்போலே.

அல்பபலமான ஸ்வர்ககாநுபவத்துக்கு அதிகாரார்த்தமாகப் பண்ணவேண்டும் தேவைகளுக்கு ஓரெல்லையில்லை, இந்த நிரவதிகஸம்பத்தைப் பெறுகைக்கு எவ்வளவுயோக்யதை வேணுமென்னில் (போதுவீர்போதுமினோ) நாலுநாள் ஊர்வசீகடாக்ஷம்பெற்று ஸ்வர்க்காநுபவம்பண்ணி, பின்பு "த்வம்ஸ" என்று தள்ளுகிற விதுக்கு, கூச்மாண்டகணஹோமாதிகள் பண்ணவேண்டா நின்றது, "நசபுநராவர்த்ததே" என்று அபுநராவர்த்தி லக்ஷணமோக்ஷத்துக்கு இச்சாமாத்ரமே அமைவானென்னென்னில் ; பெறுகிறபேற்றுக்குஸத்ருசஸாதநமில்லாமையாலே இங்கு அபிமதஸித்திக்கு

பிரிவு 12-நீராட - நோன்புக்காகக் குளித்தல் வாக்யார்த்தம். க்ருஷ்ணனைக்கூடுதல் த்வன்யார்த்தம். (சுனையாடல்-மலையிலுள்ள சுனைநீரில் மறைவாக ஆணும் பெண்ணும் கலந்து குளித்தல்.) பகவத்ஸம்ச்லேஷம் ஸ்வாபதேசார்த்தம். இதையே 19-ம் பிரமாணம் காட்டுகிறது. இதை எண்ணியே இடைப் பெண்களாயினும் "நீராட" என்று கௌரவமான சொல் உபயோகிக்கிறார்கள்.

க்ரீஷ்மகாலம்-முதுவேனிற்காலம். கூச்மாண்டம் - பூஷணிக்காய்.

யுண்டாயிருக்கச் செய்தேயும் அத்தைத்தவிர்ந்து பகவத் ஸம்பந்தத்தையே பார்த்து கௌரவித்து, "நீராட" என்கிறார்கள். புத்ரர்களாகவுமாம், சிஷ்யர்களாகவுமாம்; பகவத் ஸம்பந்தமுடையாரை கௌரவ்யரென்கிறது. "பொற்றாமரைக்கயம் நீராடப்போனாள்" என்னக்கடவதிறே. இத்தால் - தங்கள் ப்ராப்யத்தைச் சொல்லுகிறது.

இச்சையே வேண்டுவதென்கை. இச்சை ஸர்வோபாய ஸாதாரணமாயிருக்குமே. "அல்லோம்" என்றாரெல்லாரும் அதிகாரிகள், இவ்விச்சை, ஸாதநத்தில் புகாது, சைதந்ய கார்யமாமத்தனை. கூடுமநாமுடையீரிறே. (போதுவீர்போதுமினோ) அது அப்ராப்தவிஷயமாகையாலே அதிகாரிஸம்பத்தி உண்டாக்கிக்கொண்டு இழியவேணும்; இது வருத்ததாகையாலே இச்சைக்கு மேற்பட வேண்டுவதில்லை. நெடுங்காலமிழந்ததும் இவன்பக்கல் இச்சையில்லாமை ஆகையாலே, இவனிச்சையேவேண்டுவது. சக்தியும் ப்ராப்தியும் அத்தலையிலே பூர்ணமாகையாலே இனி இவன் சேதநனானவாசிக்கு இச்சையேயிறேவேண்டுவது; இது இல்லையாகில் இவனுக்கு இது புருஷார்த்தமாகமாட்டாதிறே. க்ஷுத்ரவிஷயாநுபவத்துக்குத் தனி தேட்டமானப்போலே, அபரிச்சிந்நமான விஷயத்துக்கு துணை தேட்டமாகையாலே, ஸஹகாரிகளைச் சேர்க்கிறார்கள். (போதுமினோ) ப்ரதிகூலரையுமகப்பட, "தேநமைத்ரீபவது" என்று ஸஹகாரிகளாம்படி திருத்த நினைக்குமவர்கள், அபிமுகரைப் பெற்றால் விடுவர்களோ. (போதுமினோ) "போவான்போகின்றார்" என்று வழிப்போக்கேயிறே பேறும். (போதுமினோ) இசைந்தவர்கள் காலில் விழுகிறார்கள். தங்கள் பேறாயிருந்தபடி. எங்களை வாழ்வியுங்கோளென்கிறார்கள். அவர்கள் முன்னேபோக, அந்த நடையழகு கண்டு தாங்கள் பின்னேபோகவிறே நினைக்கிறது.

(நேரிழையீர்) இவர்கள் வடிவுதானே ருசிக்கு ப்ரகாசமாயிருக்கிறபடி; "ஸௌம்யரூப:" என்கிறபடியே. "நீராடப்போதுவீர்" என்ற ப்ரஸங்கத்தாலே ஒருபடி ஆபரணம் பூண்டாப்போலேயானபடி. "புனையிழைகளணிவும் ஆடையுடையும் புதுக்கணிப்பும் நினையும் நீர்மையதன்று" என்னு

13. அல்பபலமான ஸ்வர்க்காநுபவத்துக்கு அதிகாரார்த்தமாகப் பண்ணவேண்டும் தேவைகளுக்கு ஓரெல்லையில்லை, இந்த நிரவதிகஸம்பத்தைப் பெறுகைக்கு எவ்வளவு யோக்யதை வேணுமென்னில் (போதுவீர் போதுமினோ) இச்சையே அதிகாரம். அது அப்ராப்த விஷய மாகையாலே அதிகாரிஸம்பத்தி உண்டாக்கிக்கொண்டு இழியவேணும்; இது வருத்தவிஷய மாகையாலே இச்சைக்கு மேற்படவேண்டுவதில்லை. நெடுங்கால மிழந்ததும் இவன்பக்கல் இச்சையில்லாமை ஆகையாலே, இந்த இச்சையே வேண்டுவது. சக்தியும் ப்ராப்தியும் அத்தலையிலே பூர்ணமாகையாலே இச்சைக்கு மேற்பட வேண்டுவதில்லை. இனி, இவன் சேதநனானவாசிக்கு அது இல்லையாகில் இவனுக்கு இது புருஷார்த்தமாகமாட்டாதிறே. க்ஷுத்ரவிஷயாநுபவத்துக்கு தனிதேட்டமானுப்போலே, அபரிச்சிந்நமான விஷயத்துக்குத் துணை தேட்டமாகையாலே, ஸஹகாரிகளைச் சொல்லுகிறார்கள்.

மாப்போலே - ஆபரணங்களைமாறுடிப் பூண்டிருந்தபடியாலும் பரியட்ட மாறட்டத்தாலும் வடிவில் வேறுபாட்டாலும் இவள் ஸர்வேச்வரனுக்கு ப்ரஸாதபாத்ர மானுளென்று தோற்றுகின்ற தென்றுப்போலே, "க்ருஷ்ணன் எப்போது அணைக்கும்" என்று அறியாமையாலே ஒப்பித்தபடியேயிறே யிருப்பது. நேர்மையால் நினைக்கிறது - வைலக்ஷண்யத்தை. "இழை" என்று - ஆபரணம்.

பி. 13 — வருத்தவிஷயமாகையாலே, இச்சையே அதிகாரம். வருத்தவிஷயமாகிய பித்ருகார்யம் செய்ய, ஸஹகார்யாந்தரம் தேவை. பகவத்விஷயத்திற்கு இது தேவையில்லை. சக்தியும் ப்ராப்தியும் அத்தலையிலே (எம்பெருமான்பக்கலிலே) பூர்ணமாகையால் இச்சைக்குமேற்படவேண்டுவதில்லை. பித்ராதிகள் ப்ராப்தி கர்மோபாதிகம், பூர்ணமில்லை. போதுவீர் என்று ப்ரதிகூலரையும் சேர்த்துக்கூறும் காரணம், அவர்களைத் திருத்துகைக்கு. பிராட்டியைப்போலே இவர்களும் கடகராகையாலே, திருத்துகை இவர்களுக்குஸ்வபாவம். 'வம்மின்'-என்னுமல் 'போதுமினோ' என்பது, அவர்கள் முன்னேபோகத் தாங்களும் வாழும்படி அவர்கள் நடையழகுகண்டு பின்னே போவதைக்குறிக்கும்.

(போதுமினோ) ப்ரதிகூலரையுமகப்பட "தேநமைத்ரீ பவது தே யதிஜீவிதுமிச்சஸி" (20) என்னுமவர்கள் அபிமுகரைப் பெற்றால் விடுவர்களோ. (போதுமினோ) நாங்கள் வாழும்படி புறப்பட்டு இங்ஙனே நடக்கலாகாதோ. அவர்கள் முன்னே போக, அந்நடையழகு கண்டு, தாங்கள் பின்னேபோகவிறே நினைக்கிறது.

14. (நேரிழையீர்) விலக்ஷணமான ஆபரணத்தையுடையீர். இவர்கள் "போதுமினோ" என்ற பின்பு அவர்கள் வடிவிலே பிறந்த புதுக்கணிப்பிருந்தபடி. அன்றிக்கே, "கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பழிய" என்கிறபடியே க்ருஷ்ணனுடைய வரவைக்கடாக்ஷித்து, அவன் எப்போது வந்து மேல்விழும் என்று அறியாதே, தங்களை யெப்போதும் அலங்கரித்தபடியே யிருப்பர்க ளென்றுமாம். "வஸந்தஹ்ருதி ஸௌம்யரூப:" (21) என்னுமாப்போலே முன்புத்தை க்ருஷ்ணனோட்டைக் கலவியால் பிறந்த புகர் இப்போது தோற்றும்படி யிருக்கையாலே சொல்லவுமாம்.

(சீர்மல்கு மாய்ப்பாடி) பண்டே பாலாலும் வெண்ணெயாலும் ஸம்ருத்தமா யிருக்கச்செய்தே, உபயவிபூதியுக்தன் பிறந்த ஐச்வர்யமுமுண்டிறே. பஞ்சலக்ஷம் குடியையுடைத்தாய், அவர்களுக்கு தநமான பசுமுதலான ஸம்பத்தாலே ஸம்ருத்தமாய், அதுதான் பிள்ளைகள் கால்நலத்தாலே ஒன்று இரட்டியாய், "ப்ரீதிரோதமஸஹிஷ்டஸாபுரீ" என்னும்படியிறே ஸம்பத்து மிகுத்திருக்கும்படி. (சீர்மல்கு மாய்ப்பாடி) இங்குத்தை ஐச்வர்யத்தையுடையவர் கால்நலங்காணும் நித்ய விபூதியிலைச்வர்யம். குணதிக்யத்தாலேயிறே வஸ்துவுக்கேற்றம்; அது உள்ளது இங்கேயிறே. தர்மி அதுவாகையாலே

பி. 14-விச்லேஷவ்யஸநம் ஆபரணம்பூண ஒட்டுமோ என்பதற்கு மூன்று பரிஹாரங்கள் (1) கலவிக்குப்போகிற த்வராதிசயத்தால் அவயவங்களை மாறாடி ஆபரணங்கள் பூணுவதால்வரும் புதுக்கணிப்பு (2) அவன் எப்போதுவந்து மேல்விழும் என்று அறியாதபடியாலே, எப்போதும் அலங்கரித்தபடியிருத்தல் (3) முன்பு க்ருஷ்ணன் ஒட்டைக் கலவியால் பிறந்தபுகர் இப்போது தோற்றும்படி இருக்கையாலே சொல்லவுமாம்.

15. (சீர்மல்கு மாய்ப்பாடி) இவ்வூரிலைச்வர்யம் வழிந்து போய் வேறேரூர்க்கு வெள்ளமிடப் போந்திருக்கை. அதாவது - க்ருஷ்ணனுடைய இங்குத்தை நீர்மை பரமபதத்திலும் சென்று அலையெறியும்படியா யிருக்கை. வஸ்துவுக்கு குணத்தாலேயிறே [1]உத்கர்ஷம். அங்குதன்னிற்குறைந்தா ரில்லாமையாலே குணத்துக்கு விஷயமில்லை ; ஆகையாலே தர்மியைப் பற்றிக் கிடக்குமத்தனை அங்கு; [2]அந்தகாரத்தில்தீபம்போலே ப்ரகாசிப்பதும இங்கேயாகையாலே, ஐச்வர்யம் பூர்ணமாய்த்து இங்கேயிறே. [3]த்ரிபாத்விபூதியிலடங்காத வஸ்து, தன்னை நியாம்யமாக்கி வர்த்திக்கிற வூரிறே. பண்டே கோஸம்ருத்தி யுண்டாயிருக்கச் செய்தே, "பிள்ளைகள் கால்நலத்தாலே கறப்பன கடைவனவற்றால் குறைவற்றிருக்கை. நாழிப்பால் நாழிநெய்போருகை யென்றுமாம்.

மேன்மையும் இங்கேயுண்டு; நீர்மை தன்னேற்றமாம். அங்கு, தான் கும்பீடுகொண்டிருக்கும் ; இங்கு, தான் கும்பிடுகிறவிடமிறே. "தொழுகையு மிவைகண்ட வசோதை" என்னக்கடவதிறே. இது காண்கைக்காகவிறே வைதிக புத்ரர்கள் வ்யாஜத்தாலே நாய்ச்சிமார் அழைத்துக்கண்டது. இங்குத்தைக்கும் அடிஅவ்விருப்பென்னுமிடம் ப்ரமாணம் சொல்லக் கேட்கு மித்தனையிறே ; இவ்விடத்தி லைச்வர்யம் அதிலும் விஞ்சியிருக்குமென்னுமிடம் கண்ணாலே காணலாகிறதிறே. மநுஷ்யத்வே பரத்வமிறே யிங்கு.

(ஆய்ப்பாடி) இடக்கையும் வலக்கையும் அறியாதவூர். உக்த்யாபாஸங்கொண்டு [4]பதகம் பேசுவாரில்லை. தம்பிதீம்புக்குத் தமையன் பெருநிலைநிற்குமூர். "நராம: பரதாரார்வை

பி. 15—சீர்மல்கும் ஆய்ப்பாடி — க்ருஷ்ணனுடைய குணஸம்ருத்தியும் ஆய்ப்பாடியின்கோஸம்ருத்தியும் - பரமபதத்தில் அலையெறிதல் - நாய்ச்சிமார்கள் வைதிகபுத்ரநயந முகத்தாலே நீர்மை காண ஸந்தர்ப்பம் - ஸெளலப்ய குணத்தால் உத்கர்ஷம்.

[1]உத்கர்ஷம் - உயர்த்தி. [2]அந்தகாரம்-இருள். [3]த்ரிபாத்விபூதி - பரமபதம்.

[4]பதகம் - உக்திப்ரத்யுத்தரம்.

16. (ஆய்ப்பாடி) பரமபதம்போலே ஸ்ஹ்ஹாந்தர பரிக்ரஹம்பண்ணிச்சென்றநுபவிக்கவேண்டாதவூர். ஆசாரப்ரதாநரான வஸிஷ்டாதிகள் வர்த்திக்கிற திருவயோத்தியை போலன்றிக்கே, இடக்கையும் வலக்கையுமறியாத இடையர் வர்த்திக்கிற வூர். பெருமாள் குணங்கண்டு உகக்குமூர்போலன்றியே, க்ருஷ்ணன் தீம்பு கண்டு உகக்குமூர்.

17. (செல்வச் சிறுமீர்காள்) இவ்வாத்மாவுக்கு நிலைநின்ற ஐச்வர்யமாவது - பகவத் ப்ரத்யாஸத்தியிறே. ராஜ்

சக்ஷுர்ப்யாமபிபச்யதி" என்கிற குணங்கண்டு பின்தொடர்வாரன்றிக்கே, தீம்புகண்டு மேல்விழுவாரிருக்கிறவூர். "இந்த்ரனுக்கிடும் சோற்றை மலைக்கிடுங்கோள்" என்றால் அதுக்கு இசையுமூரிறே. (ஆய்ப்பாடி) "க்ருதவத்யக்ஷீரவத்ய:பஹூவ: புத்ரஜந்மத:-யதாசக்ருஷ்ணஉத்பூத: ததாப்ரப்ருதிமேவ்ரஜே || யாவத்துக்தம்ஸமுத்பூதம் தாவதேவக்ருதம்பவேத்." நாஸ்திகராயிருப்பார் அநுமாநத்தைக்கொண்டு ப்ரத்யக்ஷத்தை விதிக்கப்புக்கால் ஸம்சயம் வர்த்தியாதே, கண்டத்தை இல்லையாவதென் என்று, கண்டதுக்கு மேற்பட அறியாமையாலே நாஸ்திகரில்லாதவூர். க்ருஷ்ணன் தீம்புசெய்து மூலையடியே நடக்கிலும் அதுவே யமையும் என்றிருக்குமூர்.

(செல்வச்சிறுமீர்காள்) ஆத்மாவுக்கு ஸ்ரீமத்தாகிறது - பகவத்ஸ்பர்சமிறே. "அந்தரிக்ஷகதச்ச்ரீமாந்" என்னக்கட

பி. 16-பரமபதத்தையும் அயோத்தியையும்விட மேலானது ஆய்ப்பாடி என்பதற்கு மூன்று காரணங்கள். வேறு தேகம் தேடாமல் மனுஷதேகத்தோடேயே ஈச்வராநுபவம் பெறுதல், க்ருஷ்ணநுபவம் பெறுதல், சக்ரவர்த்திருமகன் குணங்கண்டுகக்கும் ஆசார நிறைவில்லாமலே க்ருஷ்ணன் தீம்புகண்டுகத்தல்.

பி. 17-ஸ்வாபதேசத்திலே, பகவத்ஸம்பந்தம் செல்வமாவதற்கு இளையபெருமாள், விபீஷணாழ்வான், கஜேந்த்ராழ்வான் ஆகிய மூவர்த்ருஷ்டாந்தம். ப்ரத்யாஸத்தியாவது சம்பந்தம் - ஸ்வஸ்வாதந்த்ர்யம் அந்யசேஷத்வம் எப்போதும் இல்லாதவர் இளையபெருமாள். ஸ்வஸ்வாதந்த்ர்யம் எப்போதுமின்றி அந்யசேஷத்வம் கழித்தவன் விபீஷணாழ்வான். அந்யசேஷத்வமின்றி, ஸ்வரக்ஷணே ஸ்வாதந்த்ர்ய நிஷ்டனாய்ப்பின் அதையும் கழித்தவன் கஜேந்த்ராழ்

யத்தைவிட்டு வெறுங்கையோடே பெருமாள் பின்னேபோன இளையபெருமாளை, "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" (22) என்றதிறே; ராவணபவநத்தினின்றும் கால்வாங்கி, பெருமாளிருந்த தேசத்தைக்குறித்து வருவதாக, " பரித்யக்தாமயாலங்காமித்ராணிசதாராநிச" (23) என்று ஸர்வத்தையும்விட்டு ஆகாசஸ்தனான விபீஷணாழ்வானை, ' அந்தரிக்ஷகதச்ஸ்ரீமாந்" (24) என்றதிறே: அவனை ரக்ஷகனாக அத்யவஸித்துத் தன்பக்கல் முதலற்றுக் கைவாங்கின ஸ்ரீகஜேந்த்ராழ்வானை, " ஸதுநாகவரச்ச்ரீமாந்" (25) என்றதிறே: அப்படியே இவர்களும். இங்கு ஐச்வர்யமாகச் சொல்லுகிறது - க்ருஷ்ணப்ரத்யாஸத்தியை. அதாவது - வலிபாதி, வழக்குப்பாதி, தர்மம் பாதியாக, பஞ்சலக்ஷம் குடியிற் பெண்களில் இவனால் புஜிக்கப்படாதாரொருவருமில்லை. வலியாகிறது-தன்செல்லாமை; வழக்காகிறது - மைத்துனமை ; தர்மமாவது - ஆந்ருசம்ஸ்யம். (சிறுமீர்காள்) க்ருஷ்ணனோடொத்தபருவமாயிருக்கை. " துல்யசீலவயோவ்ருத்தாம் " (26) என்கிறபடியே எல்லாவற்றிலும் அவனுக்கீடாயிருக்கை. பருவம் நிரம்பின ஸ்த்ரீகளையும் புருஷர்களையுங் கண்டால், தேவதாந்தரபஜநம் பண்ணினாரையும், தந்தாமுக்காக நினைத்திருப்பாரையும்போலே நினைத்திருக்கும்.

வதிறே. ராவண பவநத்தினின்றும் நாலடியிட்டவாறே ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ மாலேயிட்டபடி. வலிபாதி, வழக்குப்பாதி, தர்மம்பாதியாக, க்ருஷ்ணனாலே ஸ்பர்சிக்கப்பட்டிறே பஞ்சலக்ஷம் குடியிலுள்ளாரு மிருப்பது. (சிறுமீர்காள், பருவம் கழிந்திருத்தல், முரட்டாண் உளராயிருத்தல் செய்யாதேயிருக்கை. அஹங்கார ஸ்பர்சமாதல், தேவதாந்தர ஸ்பர்சமாதலின்றிக்கேயிருக்கை. இத்தால் சொல்லிற்றாய்த்து - அந்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களின்றிக்கேயிருக்கை.

வான். இவை த்ருஷ்டாந்தங்களுக்குள் பேதம். அந்யாபதேசத்தில் செல்வமாவது க்ருஷ்ண ப்ரத்யாஸத்தி. தன்செல்லாமை-ஸம்ச்லேஷியாவிடில் தரியாமை. ஆந்ருசம்ஸ்யம் - தன்னோடு கலவாவிடில் தரியாத பெண்களிடத்தில் பண்ணும் காருண்யம். பர்த்ருபரிக்ரஹத்தால் தேவதாந்தர பஜநம்பண்ணுகை. தந்தாமுக்காக நினைந்திருப்பார் ஸ்வதந்த்ரர்.

தனக்கு அநந்யார்ஹைகளாக நினைத்திருப்பது இவர்களை. இத்தால்-அவனுக்கேயாயிருக்கிற போக்யதையைச்சொன்னபடி. ஜ்ஞாநலவதுர்விதக்தரன்றியே இடக்கையும் வலக்கையுமறியாத கந்யகைகளாயிருக்கை. இவனுடைய விஷயீகாரத்தாலே இளகிப் பதிக்கை [1](அங்கோலத்தைலத்திற் குறைந்த க்ருஷ்ணகடாக்ஷமில்லையிறே. அதாவது - கோவிந்தனுக்கல்லால் வாயில் போகாதிருக்கை.)

18. (கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன்) ஸ்ரீநந்தகோபர், முன்பு பசும்புல் சாவ மிதியாதவராய்த்து. நம்சிறியாத்தானைப்போலே ஆந்ருசம்ஸ்யப்ரதாநராயாய்த்துப் போருவது. பிள்ளைகள் பிறந்தபின்பு அவர்கள்மேலுண்டான வாத்ஸல்யத்தாலே "அவர்களுக்கு என்வருகிறதோ!" என்று அஞ்சி, வேலைப்புகரெழக்கடைந்து பிடிக்கத்தொடங்கினர். (கொடுந்தொழிலன்) தொட்டிற்கீழே எறும்புபுகுரிலும் ஸிம்ஹத்தின்மேலே விழுமாப்போலே சீற்றத்தின் மிகுதியாலே உதிரக்கையரானர். "நஹிம்ஸ்யாத் ஸர்வாபூதாநி" (27) என்கிற ஸாமாந்யவிதி, "அக்நீஷோமீயம்பசுமாலபேத" (28)

(கூர்வேல்கொடுந்தொழிலன்) நமக்கு அவனை நோக்கித் தருமவனைச்சொல்லுங்கோள் என்கிறார்கள். சிறியாத்தானைப் போலே பசும்புல்சாவமிதியாதவர், பிள்ளை பிறந்தவாறே, வேலைப் புகரெழக்கடையவிட்டாராய்த்து. (கொடுந்தொழிலன்) தொட்டில் காற்கடையிலே எறும்பூரிலும் வேலைக் கொண்டு தொடராநிற்பராய்த்து. பெரியாழ்வார் பெண் பிள்ளையாகையாலே அங்குத்தைக்குக் காவலுண்டென்று தரிக்கிறார்கள். (நந்தகோபன்குமரன்) ஸ்ரீநந்தகோபர் ஸந்நிதியில் கோற்கீழ்க்கன்றாய் நிற்கும்படி. நாலிரண்டு மாஸம்

பி. 18-பகவத் விரோதியை ஹிம்ஸித்தல் நிஷித்தமல்ல என்பது ஸ்வாபதேசத்தில். குமரன் பவ்யதை தோன்றும்படியான சிறுபிள்ளை (யசோதைக்கே இளம் சிங்கம்)

[1](அங்கோல...போகாதிருக்கை) என்ற சொற்கள் சில சுவடிகளில் இல்லை. அங்கோலம் - அழிஞ்சில்.

என்கிற விசேஷத்தில்வாராநிறே. ஸ்வார்த்தமாகச் செய்யு மன்றிறே நிஷித்தமாவது; அத்தலைக்கு என் வருகிறதோ! என்று அஞ்சிச்செய்யுமன்று அவை தர்மமாகக்கடவது. "மந்த்ரிமித்தக்ருதம் பாபம்" (29) இத்யாதி; "நின்பால் பொறுப் பரியனகள்பேசில் - ஆங்கே - தலையை அறுப்பதேகருமங்கண் டாய்" என்றதிறே. (நந்தகோபன்) பிள்ளையைக்கண்ட ப்ரீதி யாலே ஆநந்தத்தையுடையரென்று சொல்லுதல்; நாமதேய மாதல். இப்போது இவரைச்சொல்லுவானென்னென்னில்; உத்தேச்ய வஸ்துவை நோக்கித் தருமவரென்னும் ப்ரீதி யாலே. "நந்தகோபாலா வெழுந்திராய்" என்று - எழுப்பிக் கார்யம்கொள்ளலாம்படியிறே இவர்களுக்கு அவர்விதேய ராயிருக்கும்படி. (குமரன்) வெண்ணெய்களவுகண்டான், பெண்களைக்களவுகண்டான், ஊரை மூலையடியாக்கினான் என்று எல்லாரும் வந்து முறைப்பட்டால், "என் கண்வட் டத்திலே வந்துதோற்றினாகில் நியமிக்கக்கடவேன்" என்று பெரிய உத்யோகத்தோடே யிருந்தால், அவர்முன்பு தோற்

காடுபாய்ந்துபெண்களோடு [2] இட்டீடுகொண்டிறே திரிவது. [ஆற்றிவிருந்து] பிள்ளாய்!, சிலர் எங்களதென்று அபிமாநித் திருக்கும் நிலத்திலேயிருந்தோமோ, ஸர்வஸாதாரண ஸ்தலங் காணும். [விளையாடுவோங்களை] தன்னையொழிய நாங்கள் அந்ய பரைகளன்றோ, தன்னிடையாட்டம் பட்டோமோ, நாங்கள் முன் தீமைசெய்தோமாகிலுமாமிறே,தன்னைக்கடைக் கண்ணால் கணிசித்தோமோ, தன்னை இங்கு இட்டெண்ணி னார் இல்லைகிடீர். [சேற்றாலெறிந்து] பிறர்றியாதபடி கைக ளாலே ஸ்பர்சித்தாலாகாதோ. [வளைதுகில்கைக்கொண்டு] இடைப்பெண்களாகையாலே ஆபரணமும் பரியட்டமும் களைந்திட்டுவைத்திறேகுளிப்பது; இவற்றைக்கைக்கொள்ளு மாய்த்து. [காற்றிற்கடியனாயோடி] தொடர அகப்படாதே ஓடும்படி. தன் ஜீவநத்திலும் ஒன்றும் குறையாதே கொண் டான், எங்கள் ஜீவநமும் ஒன்றும் குறையாமே கொண்டான்.

[2] இட்டீடுகொள்ளல் - ஒன்றைச்சொல்லி ஒன்றைக்கேட்டுச் சொல்லுகை

றும்போது ஸவிநயமாகத் தோற்றுகையாலே, "கெட்டேன்! இவனையோ இங்ஙனே பழியிட்டது" என்று அவர்களையே பொடியும்படியா யிருக்கை. யசோதைப் பிராட்டி பொடியும்போதும், "உந்தமடிகள் முனிவர்" என்றிறே பொடிவது. "படிறுபலசெய் திப்பாடியெங்குந் திரியாமே - கொடியேனென்பிள்ளையைப் போக்கினேன்" என்றிறே யிவ ளிருப்பது.

19. (ஏரார்ந்தகண்ணி யசோதை) யசோதைப்பிராட்டி கண்ணிலே அழகு குடிகொண்டாய்த்திருப்பது. பிள்ளையை

[அகம்புக்கு] வழிபறிப்பது, அஸாதாரண ஸ்தலத்திலேயிருப்பது. [மாற்றமும் தாராளுலின்று முற்றும்] வார்த்தை ஏதேனும் வளையும் துகிலுமோ. வளையும் பரியட்டமும் தரப்பார்த்திலோ மென்றால் ஆகாதோ; இப்படியிறேதீம்பிலே கை வளர்ந்து திரியும்படி. அவர்கள் வந்து முறைப்பட்டால் "இவனையோ இவர்கள் இப்படிசொல்லுவது" என்னும்படி விநயம்பாவித்து நிற்கும்.

(ஏரார்ந்தகண்ணியித்யாதி) க்ருஷ்ணநுபவத்தாற் பிறந்த ஹர்ஷமடையக் கண்ணிலே காணலாயிருக்கை. நாட்டார்க்கு புண்ய பாபங்கள் கலசியிருக்கையாலே ஒரு வைரூப்யமுண்டே கண்ணிலே; இவளுக்கு ஸர்வேச்வரனைப் பிள்ளையாகப்பெற்ற பாக்யமடையக் கண்ணிலேதோற்றியிருக்கும். "அம்பன்னகண்ண ளசோதைதன் சிங்கம்" என்னக்கடவதிறே. "பிள்ளைக்குத் தாய்வழியாகாதே கண்" என்று பிள்ளையுறங்காவில்லிதாஸர்வார்த்தை. ஒரு நாடாக ஸதா பச்யந்திபண்ணி அநுபவிக்கிற விஷயத்தைத்தானே ஒருமடைசெய்து அநுபவிக்கிறவளுடைய கண்ணிறே. (இளஞ்சிங்கம்) "சிங்கக்குருகு" என்று ஆழ்வான்வார்த்தை. "நந்தகோபன் குமரன்" என்று - தமப்பனார்க்கு பவ்யனாயிருக்கும்படி சொல்லிற்று; "இளஞ் சிங்கம்" என்று - தாயார்க்கு அடங்காதபடி சொல்லுகிறது. தன்களவுக்குப் பெருநிலைநின்றன்றி அவளுக்குப் பிழைக்க வொண்ணாதிருக்கை.

பி. 19-ஏர்ஆர்தல் - அழகு நிரம்பியிருத்தல்.

மாறாதே பார்த்துக்கொண்டிருக்கையாலே அவ்வாசியடையக் கண்ணிலே தோற்றும்படியா யிருக்கை. அழுகையும் அஞ்சிநோக்குமந்நோக்கும் தொழுகையு மிவைகண்ட கண்ணிறே. "அம்பன்ன கண்ணாளசோதை" என்னக்கடவதிறே. (யசோதை) " யசோதாயெழுந்திராய் " என்று எழுப்பிக் கார்யங்கொள்ளலாம்படியிறே இவர்கள் திறத்தில் அவள் அநுகூலித்திருக்கும்படி.

20. (இளஞ்சிங்கம்) ஸ்ரீநந்தகோபர் ஹிதகாமராகையாலே அங்கு விநயந்தோற்ற நின்றபடியைச் சொல்லிற்று; இவள் ப்ரியமே நடத்துமவளாகையாலே, செருக்கும், மேனாணிப்புந்தோற்ற நின்றநிலையைச் சொல்லுகிறது. "அஞ்சவுரப்பாளசோதையாணாட விட்டிட்டிருக்கும்" என்று இவன் அஞ்சவுரப்பா ளசோதையிறே. கருத்தறிந்து தீம்பிலே கைவளரும்படி காணும் அவள் நியமிக்கும்படி. இவள் பார்வையறிந்து பரிமாறும் பாவஜ்ஞனிறே அவனும்; இவளும், அவன் ஆணாட்டங்கண்டு ஆநந்த நிர்ப்பரையாயிருக்குமாய்த்து. " அவ்வவ்விடம்புக்கு அவ்வாயர் பெண்டிர்க்கணுக்கனாய்" என்று ஒளிக்கவேண்டுவார் புகுந்தால் ஏதேனுமொரு பதார்த்தத்தாலே மறைத்து வைக்கலாம்படியிருக்குமாய்த்து. இங்கு ஆண்டாள் மந்த்ரலிங்கம் தோற்றாமே சொல்லுகிறாள்காண் என்றுமாம். நிலவறையிலே அடையுண்ட பெண்கள் பக்கலிலேபுக்கு அவர்கள் புத்யதீநமாக, தன்னைச் சமைத்துவைக்குமாய்த்து. இவற்றையெல்லாம்முன்னிட்டு, "இளஞ்சிங்கம்" என்கிறார்கள். "சிறுமீர்காள்" என்றால், " இளஞ்சிங்கம் " என்ன வேண்டாவோ. " நந்தகோபாலா வெழுந்திராய் " என்கைக்கும் " அசோதாயறிவுறாய்" என்கைக்கும் அடியிருக்கிறபடி.

பி. 20-செருக்கும் - இளம் என்கையாலே ஹர்ஷாதிசயம். மேனாணிப்பும் - சிங்கம் என்கையாலே தோற்றுகிறதேஜோவிசேஷம். உரப்பாள் - அதட்டாள். ஆணாட - ஆண்பிள்ளைத்தனம் கொண்டாட. தகணேறும்படியாக - முற்றும்படியாக. சிங்கக்குருகு - சிங்கக்குட்டி.

செய்ததெல்லாம் உத்தேச்யமாகவிறே இவள்நினைத்திருப்பது. ஆரேனும் வந்துமுறைப்பட்டால் [அஞ்சவுரப்பாள்] இவள் தீம்பிலே தகணேறும்படியாய்த்து உரப்புவது. (இளஞ்சிங்கம்) சிறுமியர்க்கு ஏந்தபருவமாயிருக்கை. "சிங்கக்குருகு" என்று பட்டரருளிச்செய்வர்.

21. (கார்மேனி) நம்முடைய ஸகலதாபங்களும் ஆறும்படியான வடிவு. " தாநீர்முகில்போல்தோன்றாய் " என்று ப்ரார்த்தித்த வஸ்துவிறே இவர்களுக்கு ப்ரத்யக்ஷித்து நிற்கி

(கார்மேனி) தாயும் தமப்பனும ஒளித்துவைத்தாலும் விடவொண்ணாத வடிவழகு. இவர்கள் விடாய் தீரும்படியான வடிவு. " மேகஸ்யாமம்மஹாபாஹும் " என்கிறபடியே - வ்ரதகர்சிதைகளான பெண்கள் விடாய் தீர்க்கும் குளிர்ந்த வடிவழகிருக்கிறபடி. (செங்கண்) வாத்ஸல்யத்தைத் தெரிவிக்கிற கண்கள். ஒரு மேகத்திலே இரண்டு தாமரைபூத்தாப்போலேயிருக்கை. இராத்திருநாள் ஸேவித்தார்கண்போலே யிருக்கை. இவர்களிலும் இழவு தன்னதென்னுமிடம் கண்ணிலே தோற்றவிருக்கும். " ஊர்த்வம் மாஸாந்நஜீவிஷ்யே " என்னில், இத்தலை " நஜீவேயம்க்ஷணமபி" என்றிருக்குமவனிறே. (கதிர்மதியம்போல்முகத்தான்) " தத்ரகோவிந்தமாஸீநம் ப்ரஸந்நாதித்யவர்ச்சஸம்." சந்த்ரனைத் தண்ணளியிலே ஆதித்யன்புகரை யூட்டினாப்போலேயிருக்கை. " முகத்தான் " என்று - உபமேயந்தன்னையே சொல்லுகிறார்கள். உபமேயத்தைக் காணுமளவுமிறே அது நிற்பது.

ஆனாலும அநுபவிப்பார்க்கு ஒருதுறையிட்டுக்கொண்டு இழியவேணுமே (நாராயணனே) வடிவழகைக் கண்டு

பி. 21—ப்ரத்யக்ஷித்து-ப்ரத்யக்ஷமாய். கதிர்-தேஜஸை ஏறிட்டபடி, ப்ரதிகூலர்க்குக்கிட்டுதற்கு அரியன். மதியம்-குளிர்ச்சி. அநுகூலர்க்கு எளியன் - "கதிர்மதியம்போல்" என்ற உவமைக்கு மிக மிக மேலான முகம் ஆகையாலே, முகத்தான் என்று உபமேயத்தையே சொல்லவேண்டியதாயிற்று. உபமானத்தால் மறைத்துச் சொல்லாமல் உபமேயத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லுதலுமாகும்.

றது. மாதா பிதாக்கள் தங்களை மறைத்துவைத்தாலும் விட வொண்ணாத வடிவழகு. (செங்கண்) அத்திருமேனிக்கு ப்ரபாகமான சிவப்பையுடைய திருக்கண்கள். அகவாயில் வாத்ஸல்யமடையத் திருக்கண்களிலே தோற்றும்படியா யிருக்கை ; ஐச்வர்யத்தாலும்குதறியிருக்குமிறே. வடிவாலே யணைத்துக் கண்ணாலேகுளிரநோக்குகையிலேயிறே கருத்து. (கதிர்மதியம்போல்முகத்தான்) ப்ரதாபத்துக்கும் குளிர்ச்சிக் கும் ஆதித்யனுடைய புகரையூட்டின சந்த்ரனைப்போலே யாய்த்துத் திருமுகமிருக்கும்படி. ப்ரதிகூலர்க்கு அநபிபவ நீயனாய் அநுகூலர்க்குக்கிட்டிநின்று அநுபவிக்கலாம்படி யிருக்கை. " தத்ர கோவிந்தமாஸீநம் ப்ரஸந்நாதித்யவர்ச்ச ஸம் " (30) என்னக்கடவதிறே. (கதிர்மதியம்போல் முகத் தான்) ப்ரகாசமுமாய் ஆஹ்லாதகரமுமான முகத்தையுடை யவனென்னவுமாம். (முகத்தான்) அவ்வளவிலும் உபமாநம் நேர் நிற்கமாட்டாமையாலே உபமேயந்தன்னையே சொல்லு கிறது.

வேறொரு விஷயத்தைப் பற்றிற்றாகவேண்டாதே, ப்ராப்த விஷயமாயிருக்கை. உகந்தவிஷயமே வகுத்தவிஷயமாகை. அவனாலும் தன்னையநுபவிக்கத் தாரேன் என்ன வொண் ணாதுகாணும். இத்தலை வைமுக்யம்பண்ணினவன்றும் தான் ஆபிமுக்யம் பண்ணிப்போருமவன். நாராயணனுவாக ஸித்த மான வஸ்து, இடைச்சிகளுக்குங்கூட ஸுலபமானபடி. இந்நோன்பிலே அதிகரிப்பார்க்கு மந்த்ரமிது என்கிறது. இவ்வளவேயுமன்று, தமப்பன்மார் சொல்லக்கேட்டிருப்பார் களே. " நன்மைதீமைகளொன்று மறியேன் நாரணா வென்னு மித்தனையல்லால் " என்றும், " நாராயணசப்த மாத்ரம் " என்றும், " நாராயணபரம்ப்ரஹ்ம " என்றும், (நமக்கே) அத்திருநாமத்திற் சொல்லுகிறபடியே ஸர்வ விஷயமாக வன்று, ஸம்பந்த ஜ்ஞாநமுடைய நமக்கே. ஸ்வர க்ஷணத்தில் அந்வயமில்லாத நமக்கு. " நாராயணனே " என்கிற விடத்தில் அவதாரணம், உபாயநைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறது ; இதில் அவதாரணம், ப்ராப்தாவினுடைய ஆகிஞ்சந்யத்தை யறிவிக்கிறது. அவனுக்கு உபாயபாவம்

22. (நாராயணனே) கோவர்த்தநோத்தரணாத்யதிமாநுஷ சேஷ்டிதங்களாலே ஸர்வேச்வரத்வம் பெண்களுக்கும் தெரியும்படியாயிறே இவ்வவதாரந்தானிருப்பது. தேவதாந்தரங்களையறியாத கோபவ்ருத்தர்கள் நோன்புக்கு அங்கமாக ஜபிக்கும் மந்த்ரமாக உபதேசிக்கையாலே சொல்லுகிறார்களென்னவுமாம். இன்னமும், தன்னுடைய தமப்பன்மார் சொல்லவும் கேட்டிருக்குமிறே. "நன்மை தீமைகளொன்றுமறியேன் நாரணனென்னு மித்தனையல்லால்" என்றும், "நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்" என்றும், "திண்ணம் நாரணம்" "நாரணனை நன்கறிந்தேன்"

ஸ்வரூபாந்தர்க்கதம். அத்தலையில் நிறைவாலும் அவனே உபாயம்; இத்தலையில் குறைவாலும் அவனே உபாயம். பலிபுஜிசிசுபாலே தாத்ருகாகஸ்கரேவா குணலவஸஹவாஸாதத்வக்ஷமாஸம் குசந்தீ. போக்கற்றவனுக்குத் திறந்துகிடந்த வாசலிலே புகவேணும்; வைகிறவனுக்கும் பேர்சொல்லி வையவேணும். இத்தனையிறே காகமும் சிசுபாலனும் செய்தது; இத்தனையாலும் விஷயீகரித்தானிறே யிருவரையும்; இக்கைம்முதலும் இல்லையென்கிறார்கள் (நமக்கே) என்கிறவித்தால். (பறைதருவான்) "உக்கமும்தட்டொளியும்" என்று நாட்டுக்கு ஒருபேர் சொல்லிக் கிட்டினவாறே, "உன்றன்

பி. 22—"நன்மை தீமைகளொன்று" முதல் "நாரணனை நன்கறிந்தேன்" என்னுமளவும் ஆழ்வார்கள் அருளிச்செயல்கள். ஸமிதைபாதிஸாவித்ரிபாதியன்றிக்கே - ப்ரஹ்மசாரிகளுக்கு, ஆயிரம் ஸமிதையும் ஆயிரம் ஸாவித்ரியுமாகக்கூட்டி ஒருப்ரத்யவாய பரிஹாராதியாகப் பலத்தை உண்டாக்குமாபோலே அன்றிக்கே நிரபேக்ஷகனாகவே பலத்தைக்கொடுக்கும். நமக்கே - அவனாலே தானே பேறு, வேறாக்ஷராலே அல்ல என்று அநந்யகதிகளாயிருக்கிற நமக்கே. அகிஞ்சநராய் அவன் கைபார்த்திருக்கிற - சக்தியுண்டெனினும் கிஞ்சித்காரம் ஸ்வரூபவிருத்தமென்று உபாயசூந்யரான நமக்கே. பறை-சிறுவர்கையில்வைத்து அடிக்கிற "தப்பட்டை என்று நாடறிய ஒருவ்யாஜம்; அடிமை என்பது இவாகள கருத்து. இதைசாதித்துத்தருவார் இவர்களேயாகிலும், அவன் தரக்கொள்வதே முறை என்கின்றனர்.

என்றும், இவ்வர்த்தத்திலே ரிஷிகளும் "நாராயணசப்தமாத்ரம்" (31) என்றும், "ஏஷநாராயணச்ச்ரீமாந்" (32) என்றும், ச்ருதியும் "நாராயணபரம்ப்ரஹ்ம" (33) என்றும் பலவிடத்திலும் சொல்லிற்று. (நாராயணனே நமக்கேபறைதருவான்) ஸர்வஸ்வாமியானவனே நம்முடைய அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணுவான். இத்தலை இசையாதவன்றும் தான்விடமாட்டாத வாத்ஸல்யம். அவதாரணைத்துக்குக் கருத்து - ஸமிதைபாதி ஸாவித்ரி பாதியன்றிக்கே தானேசென்று தலைக்கட்ட வல்லனென்கிற ஸாதநநைரபேக்ஷ்யம் சொல்லுகையிலே நோக்கு. நாராயணத்வம் ஸர்வஸாதாரணமன்றோவென்னில் (நமக்கே) அத்தலையாலே பேறு என்றிருக்கிற நமக்கென்றபடி. அகிஞ்சநராய் அவன் கை பார்த்திருக்கிற நமக்கேயென்றுமாம். (பறைதருவான்) நாட்டுக்கு "பறை" என்று ஒரு வ்யாஜமாய், தங்களுக்கு அபிமதமான அடிமையையாய்த்துநினைக்கிறது. இத்தை ஸாதித்துத் தருவாரரென்னில்; இவர்கள் தாங்களேயிறே: "இற்றைப்பறைகொள்வானன்றுகாண்" என்றுமேலே சொன்னார்கள். (தருவான்) ப்ராப்தியுண்டானாலும் அவன் தரக்கொள்ளவேணுமென்னுமிடம் தோற்றுகிறது.

23. (பாரோர் புகழ) க்ருஷ்ணனையும் நம்மையும் சேரவொட்டாதவர்கள் தாங்களே கொண்டாடும்படி: க்ருஷ்ணேடுற்றோமேயாவோ முனக்கே நாமாட்செய்வோம்" என்னாநின்றார்களிறே. "இற்றைப்பறைகொள்வானன்றுகாண்" என்கையாலே - யாவதாத்மபாவியான அடிமையை நினைக்கிறது. "பாடிப்பறைகொண்டு" என்றத்தையும் நிஷேதித்துக்கொண்டு, "இற்றைப்பறைகொள்வானன்றுகாண்" என்றத்தையும் நினைக்கிறது.

மாத்ருகாதகனுக்கும் கைநொந்தால் "அம்மே!"என்னப்ராப்தியுள்ளவோபாதி, பகவத்விஷயத்தில் விரோதித்தார்க்கும் திருநாமஞ் சொல்லப்ராப்தியுண்டு. திருநாமந்தான் எல்லா அதிகாரிகளுக்கும் வேணும். கர்மயோகநிஷ்டனுக்கும் பாபக்ஷயத்துக்குத் திருநாமம் வேணும் ; ஜ்ஞாநயோகநிஷ்டனுக்கும் ஜ்ஞாநவைசித்யத்தைப் பண்ணிக்கொடுக்கும் ; பக்தியோகநிஷ்டனுக்கு பக்திவ்ருத்திக்கு வேணும் ; ப்ரபந்நனுக்கு தேஹயாத்ரைக்கு வேணும். "விரோதியைப் போக்கித் திருநாமஞ்சொல்லவேணும்"என்னும் விளம்பம்பொறுதவனிறே இதுக்கு அதிகாரி. " க்ருஷ்ணாநுஸ்மரணம்பரம் " க்ருஷ்ணனுக்குத் தன்னை, தநுவாகஸ்மரிப்பான்-ப்ரகாரமாகஸ்மரிப்பானென்றபடி. " பரம் " அவனில் மேற்பட்டாரொரு சேஷியுண்டாகிலிறே தனக்கு ப்ராயச்சித்தம் பண்ணவேண்டுவது.

48. (நாங்கள்) திருநாமத்தை வாயாலே சொல்லாவிடில் தரிக்கமாட்டாதநாங்கள். நெஞ்சுகாவலிடுகிறவூரிலே இது நமக்குலபித்திப்பதே! என்று ப்ரீதைகளாய், தங்களை ச்லாகிக்கிறார்களென்னவுமாம். (நம்பாவைக்கு) ப்ராபகதயாவன்றிக்கே, ப்ராப்யருசி இருந்த விடத்தி லிருக்கவொட்டாமல் செய்கிற நோன்புக்கு. (பாவைக்குச்சாற்றிநீராடினல்) நாட்டார்க்கு "நோன்பு" என்றொரு வ்யாஜத்தையிட்டு நம்முடைய விரஹதாபம்போக நாம் குளித்தால். நோன்பென்றொரு வ்யாஜத்தையிட்டு க்ருஷ்ணஸம்ச்லேஷத்தைப் பண்ணினலென்றுமாம். (பேர்பாடி நீராடினல்) ஸம்பந்தஜ்ஞாந பூர்வகமாக க்ருஷ்ணஸம்ச்லேஷம் பண்ணினல். பலமும் பலப்ரதாதாவான உலகளந்தவன்படியாகை.

(பேர்பாடி) ப்ரீதிபூர்வகமாகப்பாடுகை. "ஆர்வத்தால் பாடாதார்" என்னுமாப்போலே. (நாங்கள்) பாடி மடிகோலாதே, இதுதானே ப்ரயோஜநமாகவுடைய நாங்கள். "பாடிநெய்யுண்ணோம்" என்றவர்கள்பாட்டிறே. "இன்றுவந்தித்தனையுமமுது செய்திடப்பெறில்" என்றிருக்குமவர்களிறே.என்னையுங்கொடுத்து என்னுடைமையுங் கொடுத்து என்கிறார்கள். (நம்பாவைக்குச்சாற்றி) நாட்டார்க்கு "நோன்பு" என்று ஒரு பேரையிட்டு. (நீராடினல்) விரஹதாபம்போகக் குளித்தால். (தீங்கின்றிநாடெல்லாம்) "யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோமஹாபாகோமஹீயதே - நதத்ரஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்ப்பிக்ஷதஸ்கரா:" அவித்யாதிஸகலதுரிதங்களும்போய். இவர்கள்தாங்களும் முதல்தன்னிலே "நாராயணனே" என்று துணிந்திறே இழிந்தது. (நாடெல்லாம்) இத்திரளிலேயுண்டாய்ப்போகிற தன்றே பகவத்ஸம்பந்தம்; அசல் தாக்குமிறே. தேவப்பிள்ளைக்கு "லோகஹிதார்த்தமாகக்காண் நீபோகிறது" என்று அருளிச்செய்த வார்த்தை. ஊரும் நாடுமுலகமும் தன்னைப்

பி. 48—இது நமக்கு-க்ருஷ்ணஸம்ச்லேஷமாகிற இது. "பேர்பாடி" என்பது, திருமந்த்ரம் சொல்லி என்றுகி, ஸம்பந்த ஜ்ஞாந பூர்வகமாக, க்ருஷ்ணஸம்ச்லேஷம் பண்ணினல் என்பதைக் குறிக்கிறது.

49. (தீங்கின்றிநாடெல்லாம்) நாட்டில் வ்யாதிதுர்ப்பிக்ஷாத்யமங்களங்களெல்லாம் போய் ஸம்ருத்தமாய். தந்தாமுடையஸுக்ருதமநுபவிக்கிலிறே அவ்வளவிலே நன்மையாவது. "ராமோராஜ்யம்ப்ரசாஸதி" (55) என்கிறபடியே தந்தாமுடைய புண்யாநுகுணமாகவன்றிக்கே, பெருமாளுடைய பாக்யத்தாலே, "ப்ரஹ்ருஷ்டமுதிதோலோக:" (56) என்று ராஜ்யம் சென்றாப்போலே, இவ்வூரே யன்றிக்கே இவ்வூரோடே ஸம்பந்தித்த நாடெல்லாம் மங்களமாகை. (திங்கள் மும்மாரிபெய்து) வெள்ளக்கேடும் வறட்கேடு மின்றிக்கே ஊறெண்ணெய்விட்டாப்போலே யிருக்கை. ஒன்பதுநாள் வெயிலும் ஒருநாள் மழையுமாய். "நிகாமேநிகாமே ந:பர்ஜந்யோவர்ஷது" (57) என்று - அபேக்ஷித்தகாலத்திலே புண்டாயிருக்கை. (ஓங்கு பெருஞ்செந்நெலூடுகயலுகள) கீழ்ச் சொன்ன திருவுலகளந்தருளின ஸர்வேச்வரனோ டொத்தி

போலே யாக்கிக்கொண்டிறே யிருப்பது. தீதில்நன்னெறி காட்டி தீர்த்தகரராமின்றிரிந்திறே. "கலியுங்கெடும்" என்னும்படியிறே. (தீங்கின்றி நாடெல்லாம்) "ராமோராஜ்யம்ப்ரசாஸதி" என்கிற நாடுபோலே. "நகராணிசராஷ்ட்ராணி தநதாந்யயுதாநிச" தந்தாம் புண்யபாபாநுகுணமாகவன்றிக்கே பெருமாள் சென்றநிலையாலே நாடுவாழ்ந்தாப்போலே (திங்கள் மும்மாரிபெய்து) வறட்கேடுபோலே வெள்ளக்கேடாக வொண்ணாதே. ஊறெண்ணெய்விட்டாப்போலே அபேக்ஷிதஸமயங்களிலே வர்ஷிக்கை. ஒன்பதுநாள் வெயிலும் ஒருநாள் மழையுமாவது காணும்.

(ஓங்குபெருஞ் செந்நெல்) குனிந்து நின்று முதலிட்டு மேலே நோக்கிப்பார்த்தால் ஆகாசத்தை வெளியடைப்பது காணும். ஆகாசத்திலே வரம்பில்லையே. திருவுலகளந்தருளினவனைப்போலே. (பெருஞ்செந்நெல்) சுற்றிலே பணைக்கை.

பி. 49—தந்தாமுடைய புண்யானுகுணமாகவன்றிக்கே-சேதனகர்மோபாதிகம் அன்றிக்கே, இவர்களிடத்தே அனுக்ரஹத்தாலே, நாடெல்லாம் ஸம்ருத்தி என்கை. ஊறெண்ணெய்விட்டாற்போலே-தலையிலே எண்ணெய் ஊறஊறவிட்டாற்போலே.

ருக்கை. விடிவோறேநட்டு, நாயிறுபட்டபோது வந்துபார்த்தால் கைகவித்துப் பார்க்கவேண்டும்படி யிருக்கை. மாரீசன் பெருமாளை "வ்ருக்ஷே வ்ருக்ஷே பச்யாமி"(58) என்றாப்போலே, இவர்களுக்கும் ஸ்ரீவாமந நிமித்தமாக "வ்ருக்ஷே வ்ருக்ஷே பச்யாமி" என்றிருக்கிறபடி. (ஓங்குபெருஞ்செந்நெல்) ஒருமுதலே ஒருசெய்யைவிளாக்கொலைகொண்டு அங்ஙனொருவரம்பில்லாமையாலே ஆகாச அவகாசமுள்ளவளவும் வளர்ந்திருக்கை. (ஊடுகயல் உகள) செருக்காலேயானைக்கன்றுபோலே வளர்ந்த கயல்களானவை செந்நெல்களின் உள்ளேபுக்கு, போக இடம்பெறாமையாலே துள்ளாநிற்கும். விழுக்காடறியாமே யகப்பட்டபடி. திருவுலகளந்தருளின ஸர்வேச்வரனைக்கண்ட அநுகூலர்பட்டது படாநிற்குமாய்த்து இவை.

50. (பூங்குவளைப்போதில் பொறிவண்டுகண்படுப்ப) பூத்தகுவளையிலே என்னுதல்; காலத்திலே என்னுதல்; தர்சநீயமான குவளைப்பூவிலே என்னுதல். (பொறிவண்டுகண்படுப்ப) மதுபாநத்தாலும் அந்யோந்ய ஸம்ச்லேஷத்தாலும்

"செய்கொள்செந்நெலுயர்" என்னுமாப்போலே. (ஊடுகயலுகள) வைரத்தூண்போலே நெல்லு நிற்கையாலே நேரே ஸஞ்சரிக்கப்பெறாது, ஒருக்கடித்து உலாவுமத்தனையாய்த்து. ஜலசரஸத்த்வங்களும், நீரிலும் நிழலிலும் கிடந்து வளர்ந்த செருக்காலே களித்து மேல்நோக்கிப்பாயாநிற்குமாய்த்து; "பள்ளச்செறுவில் கயலுகள" என்னுமாப்போலே. "சலங்கொண்டு மலர்சொரியும்" இத்யாதி. (பூங்குவளைப்போதில்) அழகிய குவளைப்பூவிலே. குவளைப்பூ அலர்ந்தபோதிலே என்று காலபரமாகவுமாம். (பொறிவண்டு) மதுபாநத்தாலே இளகிப்பதித்திறே வண்டிருப்பது. (கண்படுப்ப) அலர்

பி. 50—பொறிவண்டு - அழகுடையவண்டு. "மதுபானத்தாலும்...புகரடையவடிவிலே...வண்டு" என்பது அழகின் விவரம். கண்படுப்ப - உறங்க. இவ்வுறக்கத்தின் பெருமையை, "புஷ்பத்திலே...என்னக்கடவதிறே" என்பது வர்ணிக்கிறது. பகுவாயவன் - ஆண்நண்டு. நள்ளி - பெண்நண்டு.

பிறந்த புகரடையவடிவிலே தொடைகொள்ளலாம்படியிருக்கிற வண்டுகள், தன்னில் தானென்றுமாகாரத்தைப் பாரித்துக் கொண்டு புக்கு, புஷ்பத்திலே ஸ்பர்சஸௌக்யத்தாலே நஞ்சுண்டாரைப்போலே கிடந்துறங்கி யுணர்ந்தெழுந் திருக்கும்போது, "என்னை நீயெழுப்பிற்றிலை, என்னை நீயெழுப்பிற்றிலை" என்று ஒன்றுக்கொன்று "சீறு, பாறு" என்னாநிற்கும். "பள்ளிக்கமலத்திடைப்பட்ட பகுவாயலவன் முகநோக்கி நள்ளியூடும்" என்னக்கடவதிறே. (ஊடு கயல் உகள-பூங்குவளைப்போதில் பொறிவண்டுகண்படுப்ப) குவளைப்பூவிலே, வண்டு, மதுபானம் பண்ண என்று படிந்ததசையிலே கயல் ஊடேயுகள, செங்நெல்லும் குவளையுமொக்கவசைந்து, தூங்குமெத்தையிலே யுறங்கும் ராஜபுத்ரர்களைப்போலே வாயில் மதுவோடே வண்டுகள் கண்படுப்ப என்றபடி. இது, வயலில் ஸம்ருத்தி; இனி ஊரில் ஸம்ருத்தியிருக்கும்படி சொல்லுகிறது (தேங்காதேபுக்கிருந்து) எத்தனையேனும் முன்கை யுரவியராயிருப்பார் இழியவேணுமாய்த்து பசுக்கறக்கப் புகும்போது. இதுக்கடி - பால் மாறுமையாலே யெழுந்திருக்கப்போகாது. இத்தால் - பால்போரும் பெருமையை அநுஸந்தித்தவாறே கறக்க வொருப்படுவாரில்லை. திருவடி, ஸமுத்ரம் கடக்க வொருப்பட்டாற்போலே ஒருப்பட்டுக்கொண்டு இழியவேண்டும்படியாய்த்து இருப்பது. (இருந்து) பால்மாறிலிறே எழுந்திருக்கலாவது; ஆகையாலே, ஸ்தாவரப்ரதிஷ்டைபோலே யிருந்து. (சீர்த்த முலை) விரலிட்டுச்சுற்றிப் பிடிக்க

கிற செவ்வியிலே மதுபானம்பண்ண என்றிழிந்து, படுக்கைவாய்ப்பாலே மயங்கிக்கிடந்து, "நீயெழுப்பிற்றிலை, நீயெழுப்பிற்றிலை" என்று பேடையும் தானும் விடிவோறே "சீறு, பாறு" என்னுமாய்த்து. வயலில் ஸம்ருத்திசொல்லி, ஊரில் ஸம்ருத்தி சொல்லுகிறது (தேங்காதேபுக்கு) பால் வெள்ளந்தான், கறக்கப்புக்கவர்கள் அஞ்சிப் பிற்காலிக்கும்படியிறே யிருப்பது. திருவடி ஸமுத்ரதரணத்துக்கு அஞ்சாதே இழிந்தாற்போலே இழியவேணுமாய்த்து. முத்துக்கு முக்குமவர் கடலுக்கு அஞ்சாதாற்போலே. நனைத்தில்லம் சேறுக்குமிறே. (இருந்து) ஸ்தாவரப்ரதிஷ்டையாக. (சீர்த்தமுலை)

வொண்ணாது, இரண்டு கையாலும் அணைத்துக்கறக்கவேண்டும்படி கனத்திருக்கை. (பற்றிவாங்கக் குடம்நிறைக்கும்) வாங்குகை - வலிக்கையாய், பற்றிக்கறக்கக் குடம்நிறைக்குமென்னுதல் ; முலையைப்பற்றிக் கைவாங்க, தானே நின்று பால் சொரியுமென்னுதல் ; இட்டகுடங்கள் வாங்கவாங்க நிறைக்குமென்னுதல். குடமிடாதாரிழக்கிறது பசுவின்குற்றமன்றே. இச்சையுடையார் ஈச்வரனைப்பற்றி க்ருதக்ருத்யராமாபோலே யாய்த்து இவையும்.

51. (வள்ளல்) கீழே - பால்போரும் பெருமையைச் சொல்லிற்றாகில் இனி வள்ளல்தனமாவது என்னென்னில் ; க்ருஷ்ணன்படி இவற்றுக்குமுண்டாயிருக்கை. ஆரேனும் இவன் கழுத்திலே ஓலைகட்டி "தூதுபோ" என்றால் போமாபோலே யாய்த்து இவையும். சிறுப்ரஜைகளுக்குங்கூடக் கட்டவுமடிக்கவுமாம்படி தன்னைக் கொடுத்துக்கொண்டு நிற்கை. (பெரும்பசுக்கள்) புல்லும் தண்ணீரும் தாரகமாக வளர்ந்தவையன்றிக்கே, க்ருஷ்ணஸ்பர்சமே தாரகமாக

பால் விம்மி இரண்டு கையாலும் பற்ற வேண்டும்படியிருக்கை. (பற்றிவாங்க) பற்றி வலிக்க. தொட்டுவிடக்குடங்களை நிறையாநிற்குமாய்த்து. பற்றிப்பற்றிவாங்கக் குடங்களை நிறைக்குமென்றுமாம்.

(வள்ளல்) கீழே பால் போரும்படி சொல்லிற்றாகில், இனி வள்ளல்தனமாவது-கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோ என்னலாம்படியான க்ருஷ்ணனைப்போலே, சிறுபிள்ளைகளும் கழுத்தைக்கட்டலாம்படி தன்னைக்கொடுத்துக்கொடுநிற்கை. (பெரும்பசுக்கள்) ஸ்ரீசத்ருஞ்ஜயனைப்போலேயிருக்கை. புல்லாலே வளருகிறவை யன்றே. தீங்குழலோசை அசையிட்டிறே வளருவது. [கானகம்படி இத்யாதி] அவன் கணிசியாதேநடக்க, அவர்கள்கருதி ஆடுகிறகூத்தை மறந்தார்கள்.

பி. 51—இந்தஸம்ருத்தி, புண்யபாபங்கள் அடியாக வருவதன்று. பகவத்க்ருபை அளவுபட்டிராமையால், அதனால்வரும் ஸம்பத்தும் அளவின்றி நிரவதிகமாயிருக்கும். அஷ்டாக்ஷரவித்தருடைய வைபவத்தை, இப்பாட்டு சொல்லிற்றெனலும் ஆகும்.

வளர்ந்தவை யாகையாலே, ஸ்ரீஸத்ருஞ்ஜயனைப்போலே யாய்த்து இருப்பது. (நீங்காதசெல்வம்நிறைந்து) அழிவில்லாத ஸம்பத்து நிரவதிகமாம்படி. சேதநருடைய புண்ய பாபாநு ரூபமாகப்படிவிடும் ஸர்வேச்வரனடியாக வந்த ஸம்பத்தாகி விறே அளவுபட்டிருப்பது; "பாபாநாம்வாசுபாநாம்வா" (59) என்னுமவளடியாகவந்த ஸம்பத்தாகையாலே ஊற்று டைத்தாயிருக்குமிறே இது: ஆகையாலே "நீங்காதசெல்வம்" என்கிறது. ... ... ந

52. ஸ்வாபதேச வ்யாக்யாநம் அவதாரிகை.— மூன் றாம்பாட்டு. (ஓங்கியித்யாதி) இப்பாட்டில், தங்கள் நோன் புக்கு அநுமதிதாநம்பண்ணினார்க்கு வரக்கடவ த்ருஷ்டபலத் தைச் சொல்லுகிறார்கள். (ஓங்கி) ஸம்ஸாரிசேதநோஜ்ஜீவ நார்த்தமாக பரமபதத்தில் நின்றும் திருப்பாற்கடலிலேசாய்ந் தருளி; ரக்ஷ்யாபேக்ஷாப்ரதீக்ஷனாயிருக்கிறகாலத்திலே, ஒரு வனுக்கு ஆகஸ்மிக ஸ்வகடாக்ஷத்தாலே ஸத்த்வோத்ரேகம் பிறந்து, "அஹங்காராபிபூதரான நமக்குரக்ஷகனாவான் ஆர்?" என்று ரக்ஷகாபேக்ஷைபிறந்தவாறே, அதுவே விளைநீராக அபிவ்ருத்தனாய். (உலகளந்த்) ஆபிமுக்யமுடைய ஒருசேதநனை

---

[1]நடைச்சக்ரவத்துப்பிடிக்கலாம்படியிறே நடப்பது. அவன் குழலூத இவர்கள் பாட்டுமறந்தார்கள். [சிறுவிரல்கள் தட விப்பரிமாற] இவருக்குச் சிறுவிரலிலே கண்செல்லுகிறபடி. [செங்கண் கோட] துளைதோறும் கண்ணோடுகிறபடி. [செய்ய வாய் கொப்பளிப்ப] ஸௌகுமார்யத்தாலே திருப் பவளம் கொப்பளிப்ப. [குறுவியர்ப்புருவம்கூடலிப்ப] வேர்த் துப் புருவம் வளைய. [கோவிந்தன் குழல்கொடூதினபோது] பசுக்கள்மேய்த்து அவற்றின் வயிறுநிறைந்த ஹர்ஷத்தாலே தான்குழலூதாநிற்குமாய்த்து.

(நீங்காதசெல்வம்நிறைந்து) "நகச்சிந்நாபராத்யதி" என்னுமவ ளடியாகவந்த ஸம்பத்தாகையாலே ஊற்றுமாறுத ஸம்பத்திறே. ... ... ந

---

[1]நடைச்சக்ரவத்துப்பிடித்தல் = கதிஸார்வபௌமவன் வந்தா னென்று விருதூதுகை.

மாத்ரமன்றிக்கே, "எமர்-கீழ்மேல்-எழெழுபிறப்பும்-கேசவன் றமர்" என்கிறபடியே - அவனோடே ஸம்பந்தமுடைய அனை வரையும் தன் திருவடிகளாலே யளந்து தனக்கு சேஷமாக் கிக்கொண்ட. இத்தால் - அஹங்காரக்ரஸ்தரானவர்களை, மஹாபலியபிமாநத்தில் நின்றும் பூமியைமீட்டுத் தன்திருவடி களாலே அளந்துதனக்குசேஷமாக்கிக்கொண்டாற்போலே, தனக்கு ஸேஷமாக்கிக்கொண்டமையைச் சொல்லுகிறது. (உத்தமன்) தன்னை அழியமாறியாகிலும் பிறர்காரியம் செய்யு மவனுகையாலே "உத்தமன்" என்கிறது. (பேர்பாடி) உத்த மன்பேருண்டு-அவனுடைய வாத்ஸல்யப்ரகாசகமான திரு மந்த்ரம், அத்தை ஸ்வயம்புருஷார்த்தமாகப்பாடி.

53. (நாங்கள் நம்பாவைக்குச்சாற்றி) அநந்யோபாய ரான நாங்கள், ஸ்வயம்ப்ரயோஜநமான நோன்பை உத்தே சித்துவ்யாஜமாக்கி. (நீராடினல்) பகவதநுபவத்தைப்பண்ணி ஞல். (நாடெல்லாம்) பூமியெங்கும். (தீங்கின்றி) தேஹாத் மாபிமாநாதி தோஷங்களொன்றுமின்றிக்கே. (திங்கள்மும் மாரிபெய்தித்யாதி) ஸத்வோத்தரமான காலத்திலே அநந்யார் ஹசேஷத்வ அநந்யசரணத்வ அநந்யபோக்யத்வங்களாகிற ஆகாரத்ரயஜ்ஞாநமுண்டாய் அத்தாலே அபிவ்ருத்தங்களாய் ஒருருக்கொருவரே போரும்படியான சேதநருடைய நடு விலே தத்ஸம்பந்திகளாய், தத்தேகதாரகரான ஆத்மவர்க்கங்கள் களிப்பாலே துள்ளாநிற்க. (பூங்குவளையித்யாதி) "ஸௌம்ய ரூப:" 'என்கிறபடியே ஜ்ஞாநிகளோடொக்கவளர்ந்து அத் தாலே தர்சநீயரான ஜ்ஞாநாதிகரிடங்களிலே, ஸ்வாமித்வ ஸூசகமான திருவபிஷேகமுடையனாய் பரஞ்ஜ்யோதிஸ் ஸான ஸர்வேச்வரன் லக்ஷ்மீஸநாதனாய், ஜ்ஞாநலப்தனாய்வந்து அவர்களுடைய ஹ்ருதயங்களிலே ஸுகஸ்பர்சத்தாலே கண் வளர. இது சேதநஸம்ருத்தி; இனி சைதந்யஸம்ருத்தியைச் சொல்லுகிறது. இது சிஷ்யஸம்ருத்தியைச் சொல்லுகிறதாக வுமாம்.

54. (தேங்காதேயித்யாதி) "தீரச்சரண முபாகத:" என் கிறபடியே - பிற்காலியாமல் குருகுலத்திலே ப்ரவேசித்து, "ஸம்வத்ஸரம்" இத்யாதிப்படியே-ஸுஸ்திரனாயிருந்து, தன்

லைப்பற்றினர்க்கு பரமபதநாதனோடே பரமஸாம்யாபத்தி யைப்பண்ணிக்கொடுக்குஞ்சீர்மையையுடையனாய், ப்ரஜைக்கு முலைபோலே சிஷ்யனுக்கு தாரகமான *திருவடிகளைப்பற்றி ப்ரார்த்திக்க, உபதேசபாத்ரபூதரான சிஷ்யரை பரிபூர்ண ஜ்ஞாநிகளாக்குமவர்களாய் சிஷ்யவிதேயராய் நிரந்தரபகவத் குணாநுபவத்தாலே பரிபுஷ்டரான ஆசார்யர்களுடைய அவிச்சிந்நமான ஸம்பத்து பரிபூர்ணமாய்த்து. ௩

நான்காம் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி :—55. நாலாம்பாட்டு. உபயவிபூதியுக்தனை ஸர்வேச்வரன் இங்கே க்ருஷ்ணனாய்வந்து தன்னைத் தாழவிட்டு, பெண்கள் சொல்லிற்றுச் செய்யும்படிக்கீடாகத்

ஆறாயிரப்படி :—நாலாம்பாட்டு. பெண்பிள்ளைகள், மார்கழி நீராடினால்வரும் ஸம்ருத்தியை மநோரதியாநிற்க, பர்ஜந்யனும், பகவத்ஸமாச்ரயணம்பண்ணுகிறவர்களுக்குச் சிறிது கிஞ்சித்காரம் பண்ணி நாமும் நம்முடைய ஸ்வரூபலாபம் பெறவேணும் என்று, "நான் இங்குத்தைக்குச் செய்யும்படியை நியமிக்கவேணும்" என்ன; "பெண்பிள்ளைகள் நோற்றபடியே! வர்ஷம்பெய்தபடியே! என்று எங்களை எல்லாரும் கொண்டாடும்படி வர்ஷிக்கவேணும்" என்று அவன் செய்யுமடிமைகளைக் கையோலை செய்துகொடுக்கிறார்கள்.

"த்ரவந்திதைத்யா: ப்ரணமந்திதேவதா:" என்கிறபடியே - பகவத்ஸமாச்ரயணம் பண்ணுவார்க்கு தேவதைகள்

பி. 55—க்ருஷ்ணன் கோகுலப்பெண்களுக்குக் கையாளாய் இருப்பதைக்காணும் இதரதேவதைகளுக்குச் சொல்லாமலே இப்பெண்களுக்குக் கிஞ்சித்காரம் பண்ணி, ஸ்வரூபலாபம் பெறவேண்டும் என்று இருக்கும். இதை ஒட்டி, மழைக்கடவுளாகிய பர்ஜந்யன், "நான்செய்யவேண்டியது என்ன என்று நியமிக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க, இவர்கள் கையோலைசெய்துகொடுக்கிறார்கள். (கையோலை - ஞாபகச்சீட்டு, memo)

தான் கையாளாய், அவர்களுடைய அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணிப்போருகிறபடி கண்டால், இதரதேவதைகளுக்குச் சொல்லவேண்டாவிறே. இவர்களும் அவனுமானசேர்த்தி யிலே கிஞ்சித்கரித்து அத்தாலேஸ்வரூபலாபமாயிருக்குமிறே. "த்ரவந்திதைத்யா:ப்ரணமந்திதேவதா:" (60) என்கிறபடியே பகவத்ஸமாச்ரயணம் பண்ணினார்க்கு தேவதைகள் தாங் களே வந்து [1]உபஸ்திதராகக்கடவதிறே. "ஸ்வபுருஷம்"(61) இத்யாதி. இந்தச்லோகார்த்தத்தைத் திருமழிசைப்பிரானரு ளிச் செய்தார்; "திறம்பேல்மின்" இத்யாதி. ஆக, இப்படி

வந்து குடநீர்வார்க்கக்கடவதிறே. "அவைதான், ஸ்ரீவைஷ் ணவர்களை அநுவர்த்தியாது ஒழிவதென்? என்று கேளாய்" என்று ஆழ்வான். "ஸ்வபுருஷம்" ஓலக்கத்திலே சொல்லுகை யன்றிக்கே தன் மனிசராய் தனக்குப் பரிவரானவர்களுக்கு. "அபிவீக்ஷ்ய" தன்னதுநாலேந்து சிறுமுறி மறுக்கும்படி அவர்களுக்குத் தரம்செய்து கொடுத்து வைக்கும்படி. "மெய்யே அழைக்கிறான்" என்று தோற்றும்படி [2]ஸாதரமா கப்பார்த்தான். "பாசஹஸ்தம்" அவன், முன்பு கொண்ட கோலம் குலையாதே நின்றபடி. "வததியம:கில" நீங்களிப் படியே அவர்கள் முன்பு செல்லில் என் தலையும் இவ்விருப் பும் நிலைநில்லாது. "யம:கில" ஸர்வேச்வரன் அவன் என்று தோற்றும்படி கூறுகவிட்டவன். "தஸ்யகர்ண மூலே" ராஜதார ப்ராவண்யநிஷேதமும் பிறரறியில் பொல்லாதே! "பரிஹரமதுஸூதநப்ரபந்நாந்" ஆச்ரித விரோதிகளைக்கண்டால் தன்னைப்பேணாதே மேல்விழுமவன் பக்கலிலே ந்யஸ்தபரராயிருக்கும் அவர்களிறே. நான் அவன் கையிலே மதுபட்டது படாமேகிடிகோள். "ப்ரபுரஹ மந்ய ந்ருணாம் நவைஷ்ணவாநாம்" "நீயோ ப்ரபு" என்றிருந் தோம், உன்னை யொழியவும் சிலருண்டோ என்ன; "சோறும் தண்ணீரும் தாரகமென்றிருப்பார்க்கு நான் ப்ரபு, ஸ்ரீவைஷ் ணவர்கள்தான் எனக்கு ப்ரபுக்கள்" என்கிறான். திறம்பேல்

[1]உபஸ்திதர் - சேஷபூதர்.

[2]ஸாதரமாக - ஆதரத்தோடு

பகவத்ஸமாச்ரயணம் பண்ணினாரை இதரதேவதைகள் அநுவர்த்திக்கக்கடவராகையாலே, வர்ஷதேவதையான பர்ஜந்யன், "நாம்இச்சேர்த்தியிலே கிஞ்சித்கரித்து ஸ்வரூபம்பெறவேணும்" என்று வந்து, "நானிங்குத்தைக்குச் செய்யவேண்டு மடிமையை நியமிக்கவேணும்" என்ன; செய்யக்கடவபடியை "இன்னபடியும், இன்னபடியும்" என்று கையோலைசெய்து கொடுக்கிறார்கள்.

—ர்கண்டீர். திறம்பவும்தானேகொடுத்துவைத்தான்போலே. [திருவடி தன் நாமம்மறந்தும்]வகுத்தவனுடைய திருநாமத்தை மறக்கவுமாம். "பவசரணம்" என்கிறதுவும் கழியுண்கிறது. [மறந்தும் புறந்தொழாமாந்தர்]தேவதாந்தரஸ்பர்சமின்றிக்கேயிருக்குமவர்களை. பர்த்தாவோடு பார்யைக்குப் பொருத்தமில்லையாகிலும் ருசியுண்டானவன்று கூடலாம்; பர்த்ராந்தரஸம்ச்லேஷமுண்டானால் யோக்யதையுங்கெடுமிறே. [இறைஞ்சியும் சாதுவராய்ப்போது மின்கனென்றான்] வணங்கி அநுகூலவேஷத்தோடே போருங்கோள். [நமனும் தன் தூதுவரைக் கூவிச் செவிக்கு] "ஸ்வபுருஷம்" என்றாப்போலேயும், "கர்ணமூலே" என்றாப்போலேயும். "அவன்றம ரெவ்வினையர்" இத்யாதி, "அரவணைமேல் பேராயற்காட்பட்டார் பேர்-ஆராயப்பட்டு அறியார்கண்டீர்." ஒரு பாகவதன்பேரை ஒரு அபாகவதன் தரிப்பது, அவனையும் யமன் கோஷ்டியில் பட்டோலை பார்க்கப் பெறாது. [மாறுசெய்த வாளரக்கன்] கண்டால் "ஜிதம்" என்று விழவிறேயடுப்பது. [வாளரக்கன் நாளுலப்ப] கொண்டவரமும் ஆயுஸ்ஸும்கூடமுடிய. [அன்றித்யாதி]வரபல புஜபலங்களாலே பூண்கட்டின ஊரை வரப்போர இருக்கை யன்றிக்கே, அவர்களிருந்தவிடங்களிலே சென்று முடித்து. [வென்றிகொண்ட] சக்ரவர்த்தித் திருமகனோடு ஒருபேரிலே யிருப்பானபின்பு, இனி அவர் குற்றமுண்டாகில் பார்க்குமத்தனை யென்கிறார். "வள்ளலேயுன்றமர்க்கென்றும் நமன்றமர் கள்ளர்போல்" என்னும்படியிறே தேவதைகளஞ்சி வர்த்திக்கும்படி. ஆகையாலே பர்ஜந்யனும் "நான் செய்யவேண்டு மடிமையென்?" என்று கேட்க, அவனை நியமிக்கிறார்களா யிருக்கிறது.

ஆழிமழைக்கண்ணாவொன்றுநீகைகரவேல்
ஆழியுட்புக்குமுகந்துகொடார்த்தேறி
ஊழிமுதல்வனுருவம்போல்மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப்பற்பநாபன்கையில்
ஆழிபோல்மின்னிவலம்புரிபோல்நின்றதிர்ந்து
தாழாதேசார்ங்கமுதைத்தசரமழைபோல்
வாழவுலகினிற்பெய்திடாய்நாங்களும்
மார்கழிநீராடமகிழ்ந்தேலோரெம்பாவாய். (௪)

பதவுரை :—*ஆழிமழைக்கண்ணா - மண்டலவர்ஷத்துக்கு,நிர்வாஹகனானவனே, நீ-நீ, கை உன்னுடையகொடையில்,ஒன்று-ஒன்றும், கரவேல்-ஒளிக்காதொழிய வேணும் என்று பர்ஜந்யனைப்பார்த்துச் சொல்ல ; நான் உங்களுக்குச் செய்யவேண்டுவதைச் சொல்லிக் காணீரென்ன ; ஆழியுள் - நடுக்கடலில், புக்கு - புகுந்து, முகந்து கொடு - ஜலத்தையெல்லாம் மொண்டுகொண்டு, ஆர்த்து - பெருமுழக்கமிட்டு, ஏறி-ஆகாசமெங்கும் பரம்பியும், ஊழி - காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களுக்கும், முதல்வன் - காரணபூதனானவனுடைய,உருவம்போல்-திருமேனிபோலே, மெய்-உடம்பு,கறுத்து-கறுத்தும், பாழி-இடமுடைத்தாய், அம் - அழகிதாயிருந்துள்ள, தோளுடை — திருத்தோள்களையுடையனாய், பற்பம் - கமலத்தை, நாபன்-திருநாபியிலேயுடையனான ஸர்வேச்வரனுடைய, கையில்-வலத்திருக்கையில் பொருந்திவர்த்திக்கிற, ஆழிபோல் - திருவாழியாழ்வானைப்போலே, மின்னி - ப்ரகாசித்துக்கொண்டும், கையில்-இடத்திருக்கையில் வர்த்திக்கிற, வலம்புரிபோல் பாஞ்சஜந்யாழ்வானைப்போலே, நின்று அதிர்ந்து — நிலைநின்றுசப்தித்தும், சார்ங்கம்-ஸ்ரீசார்ங்கத்தாலே, உதைத்த-தள்ளப்பட்ட, சரமழைபோல்-பாணவர்ஷம்போலே; உலகினில்-லோகத்திலுள்ளார், வாழ-வாழும்படியாகவும், நாங்களும்-க்ருஷ்ணஸம்ச்லேஷத்துக்கு நோன்புநோற்கிற நாங்களும், மகிழ்ந்து-ஸந்தோஷத்தோடே, மார்கழிநீராட-மார்கழிநீராடும்படியாகவும் தாழாதே - சடக்கென, பெய்திடாய் - மழை பெய்ய வேணுமென்கிறார்கள்.*

56. வ்யா.—(ஆழிமழைக்கண்ணா) கம்பீரஸ்வபாவத்தையுடையனாய்வர்ஷத்துக்குநிர்வாஹகனானவனே. ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப்ரஹ்மருத்ரர்தலையிலே பொகட்டு, ஸ்வரூபத்துக்குச்சேர்ந்த பாலநவிதியைத் தான் நடத்துமாபோலே, நாட்டாரைக்கட்டுவது விடுவதாகிற க்ரௌர்யவ்யாபாரத்தை யமாதிகள்தலையில் ஏறிட்டு, “நம்மோபாதி ஜகத்தைஈரக்கையாலே தடவி நோக்கலல்லன்” என்று ஈச்வரனாலே மதிக்கப்பட்டவனல்லையோ நீ. இத்தால்-நாட்டார் சிறுமைபாராதே உன்பெருமைக்கு ஈடாக வர்ஷியென்கை. “ஆழிமழை”

வ்யா.—(ஆழிமழைக்கண்ணா) “ஆழி” என்று—ஸமுத்ரமாய், அத்தால் நினைக்கிறது-காம்பீர்யத்தையும் இடமுடைமையையுமாய், ஸர்வேச்வரன் தன் கார்யஞ்செய்கைக்கு அளவுடையவனிவனென்று திருவுள்ளத்திலேதோற்றிநியமிக்கும்படி பிறந்தவனன்றோ நீ. “ஸமுத்ர இவ காம்பீர்யே” என்னக்கடவதிறே. “ஆழி” என்று - வட்டமாய், அத்தால் நினைக்கிறது—மண்டலத்தையாய், ஒரோவிடங்களிலே சுழித்துவர்ஷிக்கையும் மண்டலவர்ஷத்துக்குநிர்வாஹகனானவனென்றுமாம். (ஆழிமழைக்கண்ணா) மழைக்கு த்ருஷ்டியாய் நிர்வஹிக்குமவனாகையாலே “மழைக்கண்ணன்” என்று-அதிகரித்த கார்யத்தையிட்டுச் சொல்கிறார்களென்றுமாம். “இன்னதுபிடித்தான்” என்னுமாப்போலே. இவர்கள்தான் ஆரேனையுமழைக்கிலும் “கண்ணா” என்றாழிய அழையார்கள் க்ருஷ்ணனோட்டை வாஸனையாலே. “பீஷாஸ்மாத்வாத:பவதே.” “நெற்றிபெற்றகண்ணன்” என்று தேவதைகள் அநுவர்த்திப்பதாகச் சொல்லப்படுகிற ஸர்வேஸ்வரன் அவதரித்து, நோன்புக்குச் சொல்லிற்றுச் செய்யக்கடவனானபின்பு பர்ஜந்யன் கிஞ்சித்கரித்து ஸத்தைபெறக் கடவனிறே. ஈச்வரன் பக்கல் கிஞ்சித்கரித்தவர்களுக்கு பலஸித்திபிவர்களாலே

பி. 56—ஆழிமழைக்கண்ணா-பர்ஜந்யனே என்னாமல், தொழிலையிட்டுச் சொல்வதன் காரணம், தேவதை அப்ரஸித்தமாகையாலும், தொழிலையிட்டுச் சொல்வது ராஜகுலத்திலும், உலக வழக்கிலும் இருத்தலாலும், இவர்கள் பாலைகளாகையாலும் என்றபடி.

என்று—மண்டலவர்ஷமாக்கி, மண்டலவர்ஷத்துக்கு நிர்வாஹகனானவனே யென்னவுமாம். ஸுக்ருதம்பண்ணினாரிருந்தவிடத்தே வர்ஷித்தும், பாபம் பண்ணினாரிருந்தவிடத்தே வர்ஷியாமையும் போருவ தொன்றுண்டிறே. எங்கள் பாக்யத்தையேநினைத்துபுஜிக்கும் நாடாகையாலே நீ யங்ஙன்[1] புதைத்துப் பார்க்கவொண்ணாது, “பாபாநாம்வாசுபாநாம்வா” (59) என்கிற எங்கள் கோடியிலே யாகவேணும். நாட்டுக்கு இட்ட நினைவைக்கொண்டு [2] படுக்கைப்பற்றிலே செல்லாதே கொள். இவனை யிங்ஙனே சொல்லுவானென்னென்னில்; இப்பெண்கள் பாலைகளாகையாலே யிவன்பேர் சொல்லவறியார்கள்; ஆகையாலே இவனதிகரித்த கார்யந்தன்னையிட்டே சொல்கிறார்கள்.

57. (ஒன்று நீ கைகரவேல்] உன்னுடைய ஔதார்யத்திலொன்றும் மாறாதபடி தோற்றவேணும். “கை” என்று-

---

யானால், இங்கு கிஞ்சித்கரித்தவர்களுக்குச் சொல்லவேண்டாவிறே, “ஆழி” என்று-கடலாய், “ஸமுத்ர இவகாம்பீர்யே” என்கிறபடியே கம்பீரஸ்வபாவனாய் வர்ஷத்துக்கு நிர்வாஹகனானவனே. பிராட்டி, “ப்லவங்கம” என்னுமாப்போலே. ஈச்வரன், ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களை ப்ரஹ்ம ருத்ரர்கள் தலையிலே வைத்துத் தான் பாலநத்திலே அதிகரித்தாப்போலே, “ தஹ, பச ” என்னும் காரியத்தை யமாதிகள்தலையிலே வைத்து, ப்ரக்ருத்யா உன்னுடைய நீர்மையைக்கண்டு எல்லாரையும் குளிர நோக்கும் கார்யத்திலே அவனாலே நியமிக்கப்பட்டவனல்லையோ.

(ஒன்று நீ கைகரவேல்) அர்த்திகள், கொடுக்குமவனை “கைபெரியன்” என்று சொல்லுகையாலே, உன்கொடையில் ஒன்றும் வஞ்சியாதொழிய வேணும். புண்ணியம் பண்ணினா

---

[1]புதைத்து - சில தேசத்தில் பெய்யாமல் நீரையடக்கிக்கொண்டு.
[2]படுக்கைப்பற்று - அந்த:புரத்துக்குவிட்ட தேசம்.

பி. 57-சேதனருடைய புண்யபாபங்களுக்குத் தக்கபடி அல்பமாக வர்ஷியாதே, பாபத்தையே உபகாரமாகக்கொண்டு ரக்ஷிக்கும் எங்கள் படியைப் பார்த்து, கரவாமல் எங்கும் நிறைய வர்ஷிக்க

கொடை. கரக்கை-மாறுகை. சேதநனுடைய நன்மை தீமைகளைக் கணக்கிட்டுப் படிவைக்கும் [1]குசாண்டுள்ள ஈச்வர கோஷ்டியைப் பார்த்து விஷமமாக வர்ஷியாதே ,“ நகச்சிந் நாபராத்யதி ” (59) என்று—பாபமே [2]பச்சையாக ரக்ஷிக்கு மெங்கள்படியைப்பார்த்து எங்கு மொக்க வர்ஷிக்கவேணும்.

58. (ஆழியுட்புக்கு) ஸகரர் கல்லின சிறுகுழியிலன்றிக்கே, ஸமுத்ரத்திலே போய்ப்புகவேணும். அதிலும் வாய்கரையிலே யாகவொண்ணாது, நடுவேசென்றிழியவேணும். (முகந்துகொடு) இழிந்தால் மேற்பட்டஜலம் கொண்டுபோர

ரிருந்தவிடத்தேவர்ஷிக்கவும்,பாபம்பண்ணினாரிருந்தவிடத்தே வர்ஷியாதொழியவுமன்றோ ஈச்வரன் எங்களை நியமித்துவிட்டதென்ன ; ஈச்வரன் அதிகரித்தகார்யத்திலே அன்றோ புதைத்துவிடுவது, நல்லாரைக் கைக்கொண்டு தீயாரைக் கழித்துமிருக்கும் ராமகோஷ்டியில் பழக்கத்தைவிட்டு,“மித்ரமௌபயிகம் கர்த்தும்” “ தேநமைத்ரீபவது” “பாபாநாம்வா சுபாநாம்வா” என்று நசையற்ற ராக்ஷஸிகளுக்கும் ஹிதஞ்சொல்ல அதிகரித்த எங்கள் கோஷ்டியில் பரிமாறுமாப்போலே பரிமாறவேணும். கை கரக்கையாவது - கொடை மாறுகை.

(ஆழியுட்புக்கு) கண்டஜலாசயங்களிலும் ஒண்ணாது, ஸகரர் கல்லினகுழியிலும் ஒண்ணாது, மஹார்ணவத்திலே

வேண்டும் (தோஷபோக்யம் அல்லது பாபத்தையே உபகாரமாகக் கொள்வது எம்பெருமானுக்கும் பாகவதர்களுக்கும் உள்ள சிறந்த குணம்.)

[1]குசாண்டு—குஸ்ருஷ்டி. [2]பச்சை—உபஹாரம்.

பி. 58-ஸகரர் கல்லின சிறு குழி - ஸாகரத்தின் முற்பகுதி. கடலை மணலே சேஷிக்கும்படி - கடல் தரையில் மணல் தெரியும்படி கடல்நீர் முழுவதையும் முகந்துகொண்டு-ஆர்த்து. நாடு முழுமையும் மின்னல் வானவில் இடிகண்டும் கேட்டும் வாழும்படி, சம்ப்ரமத்தோடு வரவேண்டும். முகம் காட்டாமல் ரக்ஷிக்கும் ஈச்வரனைப்போல் வரக்கூடாது. தாய் தந்தையர் பரிபாலனத்தை விட்டு வெளியேறித் தர்மசாவடியில் பட்டினிகிடக்கும் தூர்மார்க்கப்

வொண்ணாது, கடலை மணலேசேஷிக்கும்படி க்ரஹிக்கவேணும். (ஆர்த்து) இராமடம்ஊட்டுவாரைப்போலே முகந்தோற்றாமல்நின்று ரக்ஷிக்கு மீச்வரனைப்போலே யாகவொண்ணாது, [3]அநசநத்திலேதீக்ஷித்த முதலிகளுடையத்திருவடிவரவாலே ஸத்தை பெற்று ஸம்ப்ரமித்தாற்போலே, நாடடைய உங்களுடைய த்வநிகேட்டு வாழும்படி மின்னி முழங்கி வில்லிட்டுக்கொண்டு பெரியஸம்ப்ரமத்தோடேவந்துதோற்ற வேணும். (ஏறி) ஆகாசாவகாசமிடமடையும்படி உங்கள் வடிவைக்கொண்டு [4]பாரிக்கவேணும்; விண்ணீலமேலாப் புவிரித்தாற்போல்" என்றும், "மதயானைபோலெழுந்த மாமுகில்காள்" என்றுஞ் சொல்லுகிறபடியே.

புக்கு. அதிலும் வாய்கரையிலும் ஒண்ணாது, உள்ளே புகவேணும். (முகந்துகொடு) அங்குத்தைநீரை மணற்பற்றறவே வாங்கி. "இலங்கொலிநீர்பெரும் பௌவம்மண்டியுண்ட" என்கிறபடியே - மேலெழ வொண்ணாது, அடிமண் அடியோடே தட்டப்பருகி. (ஆர்த்து) நாட்டார்விடாயும் எங்கள் விடாயும் கெடும்படி மின்னி முழங்கிவில்லிட்டுத் துளித்துக் கொடுவரவேணும். அநசநத்தில்தீக்ஷித்த முதலிகள் தளிர்க்கும்படி, திருவடி, பிராட்டியைக்கண்ட ஹர்ஷத்தாலே சப்தித்துக்கொண்டு வந்தாப்போலேயும், "ஓகமேகஸ்வந:க்ருஷ்ண:" என்று—க்ருஷ்ணன் முழங்கின வார்த்தைகேட்டு நாங்கள் தரிக்குமாப்போலேயும், நாடு தளிர்க்கும்படியாக. (ஏறி) ஈச்வரனைப்போலே முகந்தோற்றாதே நின்று கார்யஞ் செய்யவொண்ணாது, "விண்ணீல மேலாப்புவிரித்தாற்போல்" என்கிறபடியே ஆகாசாவகாசமெல்லாம் வெளியடையும்படி உங்கள் வடிவைப் பாரித்துக் காட்டவேணும். "காட்டேல்மின்

பிள்ளைகளுக்கு இரங்கி, முகங்காட்டாமல் அந்தத் தாய் தந்தையர்கள், பிறர்மூலமாக இரவில் அன்னம் தருதல் போலவும் வரக்கூடாது. திருவடி வரவாலே சம்ப்ரமித்தல்-பிராட்டியைத் திருவடி கண்டு தொழுதப்ரீதிபரகர்ஷத்தாலே ஆர்த்துக்கொண்டுவந்த வரவாலே, முதலிகள் ஸத்தைபெற்று சம்ப்ரமித்தல், மேலாப்பு—விதானம்.

3 அநசநம்-பட்டினியிருக்கை. 4 பாரிக்கை - பரப்புகை

59. (ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்து) ஜகத் காரணபூதனானவனுடைய வடிவுபோலேயிருக்க வேணும். இந்நிர்த்தேசத்துக்குக் கருத்தென்னென்னில்; நெடுநாள் தன் பக்கலிலே [1]ஸம்ஹ்ருதமாய்க்கிடந்த ஜகத்தையுண்டாக்குவதாக ஸங்கல்பித்தவாறே, பண்டுபோலன்றிக்கே கருவடைந்த பயிர்போலே நிறத்திலே வருவதொரு வேறுபாடுண்டு; அத்தை நினைக்கிறார்கள். காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களையுமுண்டாக்கினவனுடைய வடிவு உங்களுக்கு உண்டாக வேணும். (மெய்கறுத்து) அகவாயில் [2]நீர்மை உங்களாலுண்

நும்முரு" என்றும், "காணுந்தோறும தொலைவன் நான்" என்றும் - இவற்றினுடைய த்வநியும் வடிவும் பாதகமாவது [3]அநபேக்ஷதசையிலிறே. (ஏறி) "விச்ரம்யவிச்ரம்யபுந: ப்ரயாந்தி" என்னுமாப்போலே-கர்ப்பிணிகள் சுரமேறுமாப்போலே மெள்ளமெள்ள ஏறி.

(ஊழிமுதல்வ னுருவம்போல்) காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும் நிர்வாஹகனாய், ஸ்ருஷ்ட்யுந்முகனான ஸர்வேச்வரனுடைய திருமேனிபோலே. அதாவது-இவர்கள் புண்யபாபாநுகுணமாக வன்றிக்கே, தன்னுடைய கேவல க்ருபையாலே இவற்றுக்கு உபகரணங்களைக்கொடுத்து, "நாமும் இவர்களுமாய்க்கலக்கவேணும்" என்று திருவுள்ளத்திலே நினைக்கையாலே தன்பேறாக இவற்றையுண்டாக்கும்போது அவன்திருநிறம்புகர்பெற்றிருக்குமாய்த்து-ஸ்ருஷ்டியில். "யௌகபத்யம் அநுக்ரஹகார்யம்" என்றிறே ஆழ்வார்கள் ஈடுபட்டு, "முந்நீர் ஞாலம் படைத்த" என்றும்,

பி. 59-ஊழி - காலம், உபலக்ஷணத்தால் ஜகம். ஊழிமுதல்வன்-ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரன். ஜகத்தை உண்டாக்குவதாக ஸங்கல்பித்தபோதே, கருவடைந்த பயிர் நிறத்தைப்போலே வருகிற வேறுபாடு. உருவம்போல் மெய்கறுத்து - உள்ளுக்குள் நீர்மை எம்பெருமானுக்குண்டு மேகங்கட்கில்லை. மேகங்கள் வர்ஷித்த பிறகு வெளுத்துப்போகும். ஆகையால் மெய்கறுத்து என்கை.

[1]ஸம்ஹ்ருதமாய் - மங்கி. [2]நீர்மை - க்ருபை.

[3]அநபேக்ஷதசை - விருப்பமில்லாதவேளை.

டாக்கவொண்ணுதிறே. வர்ஷித்தால் அநந்தரம் வெளுத்துப் போமவையிறே இவை.

"பாமருமூவுலகம்படைத்த" என்றும் குணமாகக்கொண்டா டிற்று. (ஊழிமுதல்வன்) "ஸகலபதார்த்தங்களையுமுண்டாக்க வேணும்" என்று திருவுள்ளத்திலே நினைக்கையாலே கரு வுடைந்த பயிர்போலே திருமேனியுங் கறுத்திருக்கும் ; அப் படியே யிருக்கவேணும் உன்னுடையநிறமும். (உருவம் போல் மெய்கறுத்து) அவனகவாயில் தண்ணளி இதுக்குத் தேடவொண்ணுதே. இதினுடைய அகவாயும்நீரன்றோவென் னில்; அவன் நீர்மையைப்பார்த்தால் "இதுநெருப்பு" என்ன லாம்படியன்றோவிருப்பது. (உருவம்போல்) நாச்சியார்முழு முழிக்க ஒண்ணுதாப்போலே, அவனுடைய அகவாயில் நீர் மையை உங்களாலுண்டாக்கப்போகாதிறே. தன்நோயாசை யாலே அவ்வடிவுக்குப்போலிகண்டுதரிக்கப்பார்க்கிருளிறே. ஸர்வேச்வரனுடைய வ்யாவ்ருத்தி யறியச்செய்தேயும், அன் னலும்துன்னலும் நீரும் நெருப்புமான வித்தை "ஒக்கும்அம் மானுருவம்" என்றார்களிறே. ஆற்றாமையிருந்தபடி. உள்ளங் குழைந்துதோல்புரையே போகையன்றிக்கே, அகவாய்சிதில மாய். [நாள்நாளும்] நாள்தோறும். [தொக்கமேகப் பல் குழாங்கள்] திரண்டமேகங்களினுடைய பலதிரள்களைக் காணக்காண சோகியாநிற்பன். [தக்கவைவர்] உன்னைக் [1]கடாகவிட்டு, மார்பிலே அம்பேறகப் பார்ப்பார் விரோ தியோபோக்கலாவது ; நூற்றுவராய் அளவுபடிலோ உதவ லாவது, இத்தனைதிரளுண்டானல் உதவலாகாதோ. [ஈரைம்ப தின்மர்தாள்சாய] நூற்றுவர் [2]காலறும்படி ப்ரவேசித்த இம் மேகத்திலே ஒருமயிர்மரீநத்துக்கு வாட்டம் வரிலாகாதோ. [புக்க] பீஷ்மாதிகள் சரவர்ஷத்தாலே நூக்கமறியாதே தேரை நடத்தினபடி. [நல்தேர்தனிப்பாகா] [3]ரதியைக்காண்கிறிலர். வாராய் ! அத்தேரை இம்மேகத்திரளிலே திரியவிட்டாலா காதோ. [இதுவோ பொருத்தமே] அவர்களுக்குக்காரியஞ் செய்தபடியும் இதுவோ. ரிஷிகளுக்குக் கைக்கூலி கொடுத் தெழுதுவித்துக்கொண்ட வித்தையாகாதே.

---

[1]கடகு-ரக்ஷகம். [2]கால்-ஸந்ததி. [3]ரதி-தேருக்கு உடையவன்.

60. (பாழி அம்தோள்) "பாஹுச்சாயாமவஷ்டப்தோ யஸ்யலோகோமஹாத்மந:" (62) என்கிறபடியே-உபயவிபூதியு மொதுங்கினாலும் ஒதுங்கினரக்ஷ்யவர்க்கமளவுபட்டு, ரக்ஷகனுடைய காவல்துடிப்பே மிக்கிருக்கை. (பாழி) வலியுடையதோள் என்னுதல்; இடமுடைய தோளென்னுதல். (அம்தோள்) அழகியதோள். அங்ஙனன்றிக்கே, குழைச்சரக்கேயாகிலும் விடவொண்ணாத போக்யதைமிக்கிருக்கை. ரக்ஷகமுமாய் அதுதானே போக்யமுமாயிருக்கை. (பாழி அம்தோளுடைப் பற்பநாபன்) பிள்ளைகளைத் தொட்டிலிலே வளர்த்திப் புற்பாயிட்டுப்பூரித்து ஆயுதங்கொண்டு நோக்கியிருப்பாரைப்போலே, திருநாபீகமலத்திலே வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்குக் காரணபூதனான ப்ரஹ்மாவைப் பெற்றுவைத்துத் திருத்தோள்களாலே காத்துக்கொண்டிருக்கிறவன். (பற்பநாபன்கையிலாழிபோல்மின்னி) ஸ்ருஷ்டிக்குமுதலான ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்த திருநாபீகமலத்தையுடைய ஸர்வேச்வரன்

(பாழி) இடமுடைமை யென்னுதல்; வலியென்னுதல். "பாஹுச்சாயாமவஷ்டப்தோ யஸ்யலோகோமஹாத்மந:" ரக்ஷ்யவர்க்கமடையத்தோள் நிழலிலே யொதுங்கினாலும், ஆள்சுருங்கி நிழல்பெருத்திருக்கை. (அம்தோள்) நோக்காதே படுகுலையடிக்கிலும்விடப்போகாததோள். உழுதுபால்.ரக்ஷகமானது தானே போக்யமாயிருக்கை. சுந்தரத்தோளுடையானிறே. (பற்பநாபன்) "கொப்பூழிலெழுகமலப்பூவழகர்" என்று தான்தோற்றிருக்கும்துறை. "பற்பநாபா! ஓ!" என்று

பி. 60—பாழிஅம்தோள் - இடமுடையதோள் ரக்ஷ்யவர்க்கம் அளவுபட்டு, ரக்ஷகனுடைய காவல்துடிப்பே மிக்கிருத்தலால் இடமுடையதோள். குழைச்சரக்கு - சாரமில்லாதவஸ்து. முதலில் பிறந்த ப்ரஹ்மாவுக்கு நாபிக்கமலத்திலுள்ள கர்ணிகையே தொட்டில், கேஸரங்களேபுற்பாய்-புத்ரன்பிறந்தான் எனக்கேட்டவுடனே பிதாவுக்குவரும் ஹர்ஷம் விஞ்சியிருந்தும் அதை வெளியே காட்டான் ஆனால் அவனிடம் அகம்படியத்தொண்டு செய்பவர்கள் வெளிக்காட்டி ஆரவாரிப்பார்கள். அதைப்போலவே, ஸர்வேச்வரன் ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு அகம்படியரிலையிலுள்ள திருவாழியாழ்வான் மின்னுவது.

கையில் திருவாழியோபாதி மின்னவேணும். இந்நிர்ப்பந்தத்துக்குக் கருத்தென்னென்னில்; "புத்ரஸ்தேஜாத:" என்றுஞ் அத்தால்வந்த ஹர்ஷம் விஞ்சியிருக்கச்செய்தேயும்காம்பீர்யத்தாலே அது தோற்றுதிருப்பர்கள். அவ்வவர்க்குரிய [1]அகம்படியரானவர்கள், அந்தப்ரீதிக்குப் போக்குவிட்டு நெய்யாடல் போற்றிக்கொண்டு திரியுமாப்போலே, ப்ரதமஜனான ப்ரஹ்மா வுண்டானபின்பு ஸர்வேச்வரனுக்குப் பிறந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுக்கொண்டாடினன் திருவாழியாழ்வான்; ஆகையாலே அவனையொப்பாகச்சொல்லுகிறது.

61. (வலம்புரிபோல் நின்றதிர்ந்து) பாரதஸமரத்திஸ் ஸ்ரீபாஞ்சஜந்யத்வநிபோலே யிருக்கவேணும். "ஸகோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநிவ்யதாரயத்" (63) என்கிற படியே அநுகூலர் வாழவும் ப்ரதிகூலர் முடியவும் ஆகவேணும். (நின்றதிர்ந்து) அதுபோலே யொருக்கால் முழங்கிவிட

நம்மாழ்வாரைக்கூப்பிடப்பண்ணிற்றிறே. (பற்பநாபன்கையிலாழிபோல்மின்னி) "புத்ரஸ்தேஜாத:" என்று பிதாவானவன் அளவுடைமையாலே பேசாதிருந்தாலும் உரியவடியார்பக்கலிலேயிறே உகப்புக்காணலாவது. "அங்கைத்தலத்திடையாழிகொண்டான்" என்று-வெறும்புறத்திலே ஆலத்திவழிக்க வேண்டும்படியான அழகியகையிலே பிடித்த திருவாழி போலே மின்னி. "ஆழியோடும்" என்று வெளிச்செறிப்பிக்கைக்கும் மதிகெடுக்கைக்கும் பரிகரமதுவேயிறே.

(வலம்புரிபோல்) "சுடராழியும்பல்லாண்டு" என்று "அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டு" என்னுமவர்களிறே. "பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்" என்று செவிமடுத்துக் கிடக்குமதிறே. "உண்பதுசொல்லில்" லொண்ணுது, மாறுதே நின்று அதிரவேணும். (தாழாதே) நோன்பிலேநின்று உபக்ரமித்து உபவாஸக்ருசைகளாயிருந்த

பி. 61-ப்ரதிகூலர்முடியவும்-அதிமாத்ரப்ரதிகூலர். தேவமாத்ருகம் - வானம்பார்த்தநிலம் ; நதீமாத்ருகம் - ஆற்றுக்கால் பாய்ச்சலுள்ள நிலம்.

[1]அகம்படியர் - அந்தரங்கர்.

ஙங்கள் வடிவிருந்தபடி கண்டாயிறே ; அத்தனை காலவிளம்பத்தோடே யாகவொண்ணாது. ஆர்த்திக்கு முற்பாடனாய் ரக்ஷிக்குமீச்வரனைப்போலே யாகவேணும். தேவமாத்ருகம் போலன்றிக்கே, பகவத்ஸமாச்ரயணம் நதீமாத்ருகம்போலே [1]சாரதமென்கை. (சார்ங்கமுதைத்த சரமழைபோல்) இரை பெறாத பாம்புபோலே, முன்பு விஷயமில்லாமையாலே அடங்கியிருந்த ஸ்ரீசார்ங்கம், சக்ரவர்த்தித் திருமகன் கடைக் கணித்தவாறே நூறாயிரம் சரவ்ருஷ்டியைத் தானே பண்ணிற்று. எய்வண்ணவெஞ்சிலையிறே. உடையவன் அம்பு பெறுக்கியிடுகை. (சார்ங்கமுதைத்த) அகம்படியார் கிளர்ந்தால் "பொறுவாகவுண்பதனை" என்றுதான் சீறுபாறென்னுமவர்களிறே. (நின்றதிர்ந்து) பாரதஸமரத்தில்போலே ஒருக்கால் அதிர்ந்துவிடவொண்ணாது, "ஹ்ரதயாநிவ்யதாரயத்" என்று எதிரிகள்நெஞ்சு பிளக்கும்படி சப்திக்க ஒண்ணாது, நாங்கள் வாழும்படி நின்று முழங்கவேணும். (ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து) இவளுடைய ஸ்த்ரீத்வத்துக்கு முலைகள்போலேயிறே, அவனுடையபும்ஸ்த்வத்துக்கு திவ்யாயுதங்கள். (தாழாதே) தந்தாமை ஆச்ரயித்தார் நோவுபட ஆறியிருக்கும் தேவதாந்தரங்களைப்போலன்றிக்கே, "மித்ரபாவமேயமையும், விளம்பம்பொறேன்" என்ற சக்ரவர்த்தித் திருமகனைப்போலேயாகவேணும். தேவதாந்தரபஜநம்பண்ணினாரைப்போலன்றிக்கே, பகவத்ஸமாச்ரயணம் பண்ணினாரைப்போலே பெறவேணும். கர்மாநுகுணமாகவரும் பலத்துக்கிறே தேவமாத்ருகம்போலே விளம்பமுள்ளது, பகவத்ஸமாச்ரயணம் நதீமாத்ருகம்போலே சாரதமுமாய்த் தாழ்ப்பதுஞ்செய்யாதொழியுமிறே. (சார்ங்கமுதைத்த) இரைபெறாத பாம்புபோலே, இலக்குக் காணாமையாலே பேசாதே கிடக்கும் ஸ்ரீசார்ங்கம், பெருமாள்கடாக்ஷம் பெற்றவாறேதானே சரவ்ருஷ்டியைப் பண்ணாநிற்கும் ; அவர் கடைக்கணித்து விட்டால், பின்னை அவராலும் மீட்கப்போகாது. அகம்படி

[1]சாரதம்-நிச்சயம்; "சாரதமும் வாய்மையும் ஆண்மையும் திட்பமும் தூய்மையும் மெய்யும் மெனச்சொல்லுவர் புலவர்" என்று நிகண்டு.

அரசனாலு மடக்கப்போகாதிறே ; அதுபோலே, பெருமாள் கடைக்கணித்தபின்பு பெருமாளாலும் விலக்கவொண்ணாதா யிருக்கை. "அவஷ்டப்யமஹாத்தநு:" (64) என்னக்கடவதிறே. (சரமழை) ' சரவர்ஷம்வவர்ஷஹ" (65) என்கிறபடியே.

62. (வாழஉலகினிற் பெய்திடாய்) த்ருஷ்டாந்தமான சரவர்ஷத்தில் ராக்ஷஸஜாதியடங்க முடிந்தது, அங்ஙனொண்ணாது, அநுகூலப்ரதிகூல விபாகமன்றிக்கே லோகமாக வாழ வேணும். அழகிது, ஈச்வராஜ்ஞையாலே நான் முன்பே அதிகரித்ததொரு கார்யமன்றோ, இங்குத்தைக்குநான் கிஞ்சித்கரித்தவனும்படியென்னென்ன (நாங்களும் மார்கழிநீராட) நாங்கள், காலத்திலேபோய் மார்கழி நீராடக்கடவோம். அதுவும் முன்பே ஊராக நிச்சயித்த தொன்றன்றோ, இப்போது வந்த தன்னேற்ற மென்னென்ன (மகிழ்ந்து) நாங்க

யர் கோபித்தால் பின்னை அரசனாலும் மீட்கப்போகாதிறே. "அவஷ்டப்யமஹாத்தநு:" பெருமாளால் அமைக்கப் போகாமைபற்றிக்கொண்டு நின்றாரத்தனை. "சார்ங்கமென்னும் வில்லாண்டான்" என்னக்கடவதிறே. (சரமழைபோல்) " சரவர்ஷம்வவர்ஷஹ."

(வாழ) சரம்போலே முடிக்கவொண்ணாது, அங்கு எதிரிகளான ராக்ஷஸர்மேல் விட்டாப்போலே யன்றிக்கே, ஜகத்தடைய வாழ வேணும். ஈச்வரனாலே வர்ஷார்த்தமாக நியமிக்கப்பட்ட எனக்கு அடைத்த பணியன்றோ நடத்துகிறது, நீங்களிப்போது இரக்கிறதென் என்ன (நாங்களும் மார்கழி நீராட) என்கிறார்கள். உங்களையும் பண்டு ஊரார் நியமிக்க, அதுவும் நீங்கள் அதிகரித்த கார்யமன்றோ என்றான் (நாங்களும்மகிழ்ந்து-மார்கழிநீராட)என்கிறார்கள். நாங்களும் க்ருஷ்ணனும் சேரக்குளிக்கைஉனக்குக்கிடைப்ப தொன்றோ;நாங்கள் உன் வடிவைக்கண்டு த்வநியைக்கேட்டு எங்களுடைய

பி. 62-சரமழை-ராக்ஷஸஜாதி அடங்கமுடிந்தது ; வாழ உலகினில் - அநுகூலர் ப்ரதிகூலர் எனும் வேறுபாடில்லாமல் உலகம் முழுமையும் வாழ்வதற்காக மழை பெய்யவேண்டும் என்பது

ளும் நோன்பு நோற்றோமாய், அந்த நோன்புக்கு பலமான வர்ஷமுண்டாய்த்ததாய், க்ருஷ்ணனோட்டை ஸம்ச்லேஷத்தாலே மகிழ்ந்து நீராடக் கடவோம். (மகிழ்ந்து) ஊரார்க்கு மார்கழி நீராடுகைக்கு மேலே ப்ரீதி பூர்வகமாகக் குளிக்க வேண்டுவதொரு நிர்ப்பந்த மில்லையே. உனக்கு ப்ரியகரமாக க்ருஷ்ணனும் நாங்களும் மகிழ்ந்து குளிக்கிறோம் என்கிறார்கள். ௬

63. ஸ்வாபதேசவ்யாக்யாநம். அ.—நாலாம்பாட்டு. (ஆழியித்யாதி) இப்பாட்டில், இவர்களை, வர்ஷதேவதை, "அடியேனுக்கொரு கிஞ்சித்காரம் நியமித்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்க, இவர்கள் அவனுக்கு கைங்கர்யம் நியமித்தபடியைச் சொல்லுகிறது. வ்யா.—(ஆழி) அபரிச்சேத்யமானஜ்ஞாநவைபவத்தை யுடையையாய். (மழைக்கண்ணா) பகவத்காருண்ய வர்ஷநிர்வாஹகனானவனே யென்னுதல்; பூமிப்பரப்பிலுள்ள சேதனரடையபகவத்காருண்யத்துக்கு விஷயமாம்படி பண்ணவல்லவனே யென்னுதல்; பகவத்குணாம்ருதவர்ஷிகளான ஆசார்யர்களுக்கும் ஆசார்யபதம் நிர்வஹிக்குமவனே. (ஒன்றும்) ஏகதேசமும். (நீ) ஸ்வஸம்பந்தமே ஹேதுவாக அனைவரையும் பகவத்காருண்யத்துக்கு விஷயமாக்கவல்லநீ. வர்ஷியாவிட்டால் உடம்பு வெளுக்கும் நீ (கைகரவேல்) பகவத்குணவர்ஷத்தில் சேராரதே கொள்ளாய். (ஆழி) பகவத்குணாம்ருதஸாகரத்திலே (உள்புக்கு) உள்ளே அவகாஹித்து. (முகந்துகொடு) யாவத்குணங்களையும் புத்திஸ்தமாம்படி அகஞ்சுரிப்படுத்திக்கொண்டு. அதாவது-எப்பேர்ப்பட்ட அபராதிகளாகிலும் தாம் அபிமாநித்தவர்களில் காருண்யத்தைப் பண்ணும்படி யெம்பெருமானை விதேயமாம்படி பண்ணிக்கொள்ளுகை. (ஆர்த்து) ஸஸம்ப்ரமமாக. (ஏறி) ஆசார்ய பதத்திலேறி.

தாபத்தையாற்றி ப்ரீதைகளாய்க்கொண்டு மார்கழி நீராடுகிறோம். இவர்களை யுகப்பிக்கையிறே இவனுக்கு ஸ்வரூபம். "ப்ரஹர்ஷ இஷ்யாமி"யிலேயிறே அந்வயம். "என்னுயிர்க் கது காவலன்" என்ன வேண்டாவே க்ருஷ்ணன் கூட நீராடுகையாலே ௬

64. (ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்து) ஸ்ருஷ்ட்யுந்முகனான ஈச்வரனுடைய திருமேனியைப்போல் காருண்ய ஸ்ருஷ்ட்யுந் முகனானவுன்திருமேனியிலும் வேறுபாடுண்டாய். (பாழிஅம்தோளுடைப் பற்பநாபன்கையில் ஆழிபோல் மின்னி) பலிஷ்டமாய் ஸர்வாபாச்ரயமாய் அதிஸுந்தரமான புஜங்களையுடையனாய், ஸமஷ்டிஸ்ருஷ்டிக்குக் கடவனாய், ப்ர்ஹ்மாவுக்கு உத்பத்திஸ்தாநமான திருநாபீகமலத்தையுடையவெம்பெருமானுடைய திருக்கையிலேயிருக்கிற திருவாழியாழ்வானைப்போலே, காருண்யஸ்ருஷ்டிக்குக் கடவரான வெம்பெருமானை யோகபலத்தாலே ஸாக்ஷாத்கரிக்கையாலேவந்த மிக்கபுகரையுடையராய். (வலம்புரிபோல் நின்றதிர்ந்து) இவ்விடத்திலேயும் "பற்பநாபன்கையில்" என்று அநுஷங்கிக்கவேணும். அவன்கையில் வர்த்திக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யம்போலே இடைவிடாமல் த்வநித்து. அதாவது - ப்ரணவார்த்தத்தை அனைவருமறியும்படி திருவாய்மொழிமுகத்தாலே வெளியிட்டருளிச்செய்கை. (தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல்) அவிச்சிந்நமாக சார்ங்கம்வர்ஷித்த பாணவர்ஷம்போலே. ப்ரணவத்தில் சேஷசேஷி பாவஸம்பந்த ப்ரயுக்தமான பகவத்காருண்ய வர்ஷத்தை. (வாழ) லௌகிகரெல்லாரும் ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்து வாழும்படி. (உலகினில்) லௌகிகரிடங்களிலே. (பெய்திடாய்) பகவத்குணகதாம்ருதத்தை வர்ஷிக்கக்கடவாய்.

65. (நாங்களும் மார்கழிநீராட) பகவத்கைங்கர்யைகபோகரானநாங்களும், "நோன்பு" என்கிறவ்யாஜத்தாலே பகவத்ஸம்ச்லேஷத்தைப் பண்ணி. (மகிழ்ந்து) மகிழக்கடவோம். அதாவது-பகவதநுபவ ஸஹகாரிகள் இத்தனைபேருண்டாவதே! என்று அவர்களோடே கலந்து பகவதநுவபத்தைப்பண்ணி ஆநந்திக்கை. இப்பாட்டில், வர்ஷதேவதைக்கு அவன் அதிதரித்த கார்யத்தையே தங்களுக்கிஷ்டமாக நியமிக்கையாலே பதவத்பாகவதேஷ்டத்வேந நித்யநைமித்திகாதி தர்மங்களை யதாவாகவநுஷ்டிக்கை, ப்ரபந்நாதிகாரிகளுக்கு ஆவச்யகமென்றதாய்த்து. ௪

ஐந்தாம் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி :—66. ஐந்தாம்பாட்டு:—பெண்பிள்ளைகளிலேயொருத்தி "நாம் இப்படியே கநக்கப்பாரித்துக்கொண்டு இழியாநின்றோம், நமக்குத்தான் இதுதலைக்கட்டுகைக்கு விச்வாஸமென்? அநாதிகாலஸஞ்சிதமான கர்மங்கள் இதுக்கு விரோதத்தைப் பண்ணுதோ?, "ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநியன்றோ!" (66) என்றுப்ரச்நம் பண்ண: அவர்களிலே வேதாந்த ஜ்ஞாநமுடையாளொருத்தி, நாம் நம்முடையவிரோதிகளைப் போக்கிக்கொண்டுவந்து இதிலே யிழிகையென்று

ஆறுயிரப்படி :—ஐந்தாப்பாட்டு.—முதற்பாட்டில் "நாராயணனே" என்று – உபயவிபூதியோகத்தைச்சொல்லிற்று; அநந்தரம், "பாற்கடலிற்பையத்துயின்றபரமன்" என்று-அவதாரார்த்தமாகத் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தபடியைச் சொல்லிற்று; அநந்தரம்,இந்த்ரன்குறைதீர ஸ்ரீவாமநனாய் வந்தவதரித்து ஒருநாடாக வாசிவையாதே திருவடிகளைக்கொண்டு தீண்டினபடியைச்சொல்லிற்று; அநந்தரம், யோக்யராய் ஆசாரப்ரதாநரான வஸிஷ்டாதிகள் நியமிக்கும்படி சக்ரவர்த்தித் திருமகனாய் வந்தவதரித்து வாசிவைத்து உடம்புகொடுத்தபடி சொல்லிற்று;இப்பாட்டில்-வரையாதே எல்லார்க்கும் கட்டவுமடிக்கவுமாம்படிக்ருஷ்ணனாய் வந்தவதரித்து, ஒரு ஊருக்காகத் தன்னை முற்றூட்டாகக்கொடுத்தபடி சொல்லுகிறது. நோற்கின்ற பெண்களிலே ஒருத்தி,நாமநுபவிக்க இலையகலப்படாநின்றோம்; "ச்ரேயாம்ஸி பஹுவிக்

பி. 66-விச்வாஸமென் - நிச்சயஹேது என்ன-பெருமாள் முடிசூட விக்நம் வந்தபடி கண்டோமே. சேர்பால்-குழம்புப்பால். தன்னடையேவிட்டு ஓடிப்போம் என்பதற்கு, எம்பெருமான் தனது சங்கல்பத்தை அழியமாறி, பீஷ்மன் அர்ஜுனன் சங்கல்பங்களை முடித்து வைப்பவன் ஆகையாலே, அதுபோலவே உபகரிப்பன் எனக் கண்டுகொள்க. பெருமாள் முடிசூடத்தவிர்ந்ததும், மஹாராஜர்க்கும் (சுக்ரீவனுக்கும்) விபீஷணாழ்வானுக்கும் முடிசூட்டுகைக்காக.

ஒருபொருளில்லை; நமக்கடைத்த பகவதநுபவத்தைப்பண்ணு நின்றால், சேர்ப்பால் போகரூபமாகப் பருகுமவனுக்குத்தன் னடையே பித்தம் போமாப்போலே, இவை தன்னடையே விட்டோடிப்போம்; ஆனபின்பு, இனி அயோக்யதையைப் பார்த்து அகலவேண்டாளன்கிறாள். மாயனை மன்னுவட நாநி" என்று - பெரியவர்களுக்கும் ச்ரேயஸ்ஸுக்கு விக்ந முண்டாமென்று சொல்லிற்று. பெருமாள் திருவபிஷேகத் துக்கு சம்பராந்தகனை தசரதன் பாரிக்கிறான்; ராஜர்ஷியை ப்ரஹ்மர்ஷியாக்கினவஷிஷ்டன்,முஹூர்த்தவிதாநம் பண்ணு கிறான்; "ராமோ விக்ரஹவாந்தர்ம:" என்று—பாக்யாதிகரான பெருமாள் முடிசூடுகிறார்; " ஸஹபத்ந்யாவிசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" என்று - பெருமாள் பிராட்டியோடே கூடப் பெரியபெருமாளை ஆச்ரயிக்கிறது; "இச்சாம:" என்று நாடடங்க அபிஷேக மங்களத்தைப்ப்ரார்த்தித்து இதுக்கு மங் களாசாஸநம் பண்ணுகிறது; இப்படியிருக்க இதுக்குமன்றோ விக்நம்வந்தது; நாம்அநாதிகாலம் பண்ணினபாபங்கிடக்க இது கூடுமோ? என்றுகேட்க: நாம் அவனுடைய அநுபவத் திலே யிழியவே உத்தர பூர்வாகங்களுக்கு அச்லேஷவிநாச முண்டென்று பரிஹரிக்கிறார்கள். ஈச்வரன், தான் ஸங்கல் பித்தது குலைந்தாலும், ததீயர்ஸங்கல்பித்தது தன்னை அழிய மாறியும்தலைக்கட்டிக்கொடுக்கும்; அவர்தாமும் முடிதவிர்ந் தது, மஹாராஜர்க்கும் ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கும் முடிசூட்டு கைக்கிறே. அர்ஜுநன் "ஜயத்ரதனை அஸ்தமிக்கைக்குமுன்னே கொல்லக்கடவேன்" என்று ஸங்கல்பிக்க, "ஆயுதமெடேன்" என்றவன் ஆயுதமெடுத்தும், பொய்சொல்லியும், பகலை யிர வாக்கியும் அர்ஜுநன் ஸங்கல்பத்தையிறே தலைக்கட்டிக் கொடுத்தது. " பற்றப்புகுகிற விஷயத்தினுடைய நன்மை ஏது, பற்றப்புகுகிற நாம் எவ்வளவிலோம், பற்றுகையாவது தான் ஏது " என்று அயோக்யதாநு ஸந்தாநம் பண்ண; நோவுமிக்கதனையும் நாலைந்து குடிநீரெழக் குடிக்குமாப் போலே, நாம் திருநாமஸங்கீர்த்தநத்திலே அதிகரிக்கவே இதுக்கு விரோதிகர்மங்களடைய நசிக்கு மென்கிறார்கள். மாயனைத் தாமோதரனைச் செப்பு, குடிக்கிற குடிநீர்களிவை.

மதுரைமைந்தனைத் தூயபெருநீர் யமுனைத்துறைவனை ஆயர் குலத்தினிற்றோன்று மணிவிளக்கைத் தாயைக்குடல் விளக் கஞ்செய்த தாமோதரனைச் செப்பு, போயபிழையும் புகுதரு வான் நின்றனவும் தீயினிற்றூசாகும் என்கிறார்கள்.

மாயனைமன்னுவடமதுரைமைந்தனைத்
தூயபெருநீர்யமுனைத்துறைவனை
ஆயர்குலத்தினிற்றோன்றுமணிவிளக்கைத்
தாயைக்குடல்விளக்கஞ்செய்ததாமோதரனைத்
தூயோமாய்வந்துநாம்தூமலர்தூவித்தொழுது
வாயினாற்பாடிமனத்தினாற்சிந்திக்கப்
போயபிழையும்புகுதருவானின்றனவும்
தீயினிற்றூசாகுஞ்செப்பேலோரெம்பாவாய்.௫

பதவுரை :—மாயனை-ஆச்சர்யச்செய்கையுடையனாய், மன்னு-பகவத்ஸம்பந்தம்மாறாத, வடமதுரை—வடதிசையிலுள்ள ஸ்ரீமத் த்வாரகைக்கு, மைந்தனை-ராஜாவானவனாய், தூய - பரிசுத்தமாய், பெரு-ஆழம்மிக்கிருக்கிற, நீர்—ஜலத்தையுடைய, யமுனைத்துறை வனை-யமுநாநதிக்கரையில் வர்த்திக்குமவனாய், ஆயர்குலத்தினில்—இடைக்குலத்திலே, தோன்றும் - விளங்காநின்றுள்ள, மணி விளக்கை-மங்களதீபமானவனாய், தாயை — யசோதைப்பிராட்டியு டைய, குடல் - வயிற்றை, விளக்கஞ்செய்த - ப்ரகாசிக்கப்பண்ணி, தாமோதரனை-கண்ணிக்குறுங்கயிற்றாற்கட்டுண்டவனை, நாம்-சேஷ பூதரானநாம், தூயோமாய்-பரிசுத்தராய்க்கொண்டு, வந்து - வந்து கிட்டி, தூ-தூய்தான, மலர் புஷ்பங்களை, தூவி - அந்தக்ரமமாகப் பணிமாறி, தொழுது—அஞ்சலிசெய்து. வாயினால்பாடி - வாயார ஸ்தோத்ரம்பண்ணி. மநத்தினால் - மநஸ்ஸாலே. சிந்திக்க - த்யாநம் பண்ண, அத்தாலே, போயபிழையும் - "அவன்சேஷி, நாம்சேஷ பூதர்" என்கிற ஜ்ஞாநம்பிறப்பதற்கு முன்புண்டானபாபங்களும், புகுதருவான் நின்றனவும் - பின்புதன்னையறியாமல் வருகிறபாபங் களும், தீயினில் - நெருப்பிலிட்ட, தூசாகும் - பஞ்சுபோலே உரு மாய்ந்துபோம், செப்பு - அவனுடையதிருநாமங்களை அநுஸந்தி

67. வ்யா.—(மாயனை) பரமபதத்திலே அயர்வறுமமரர்களதிபதியாய்க்கொண்டு தன் ஐச்வர்யவ்யாவ்ருத்தி தோற்றவிருக்குமிருப்பை நினைத்து, அது தான் வாசாமகோசரமாயிருக்கையாலே "மாயன்" என்கிறது. க்ருஷ்ணாவதாரத்தில் நீர்மை தங்களுக்கு நிலமல்லாமையாலே பரமபதத்திலே யநுபவிக்கக்கோலி, அதுதானும் நிலமல்லாமையாலே "எத்திறம்" என்கிறார்கள். (மாயனை) ஒருருக்குத் தன்னைக்கொடுத்த நீர்மையிறே யிது; ஒரு நாட்டுக்காகத் தன்னைக்கொடுத்துக்கொண்டிருக்கிற நீர்மையாகையாலே ஏற்றமுண்டே அங்குத்தைக்கு. அன்றிக்கே, "ஜாதோஸி தேவதேவேச சங்கசக்ரகதாதர" (67) என்கிறபடியே நித்யஸூரிகளுக்கும் நேர்நின்று பார்க்கவொண்ணாத நிரங்குசைச்வர்யத்தை யுடையவன்கிடீர் அவதரித்தானென்று அவதாரஸௌலப்யத்தையநுஸந்தித்து, அந்த ஆச்சர்யத்தைச் சொல்லுவதற்கு முன்னே

வ்யா.—(மாயனை) ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய், நிரதிசயாநந்தபரிபூர்ணனாய், உபயவிபூதியுக்தனாய், ஸ்ரிய:பதியாய், ஏகார்ணவம்போலே நித்ய விபூதியிலிருக்கு மிருப்பைச் சொல்லுகிறது. "யதோவாசோநிவர்த்தந்தே" "யஸ்யாமதம்தஸ்யமதம்" "அவிஜ்ஞாதம்விஜாநதாம்" என்றும், "பண்கடந்ததேசம்" என்றும்-வேதங்கள் மநஸ்ஸோடேவாக்குக்கு நிலமன்றென்று மீண்ட பரத்வம், இவளுக்குப் பேசலாம்படிகைவந்தபடி. "வைகுந்தனென்பதோர் தோணிபெறாதுழல்கின்றேன்" என்று-இவ்விடத்திலும் அவ்விடம் தனக்குநிலமாயிருக்கிறதென்னு மிடத்தைத் தானேயருளிச்செய்தாளிறே. தோணியென்றது - தன்னுடைய அபிநிவேசத்துக்கு ஒரு

பி. 67-மாயன் - ஆச்சர்யபூதன் (க்ரித்ரிமன் அன்று). ஒருருக்குத் தன்னைக் கொடுத்த நீர்மை - பரமபதத்திலுள்ள நீர்மை. ஒரு நாட்டுக்காகத் தன்னைக் கொடுத்துக்கொண்டிருக்கிற நீர்மை, பஞ்சலக்ஷம் குடிகள் அடங்கிய கோகுலநாடு. ஆழ்வார்களோடே - திருவாழியாழ்வான் பாஞ்சஜந்யாழ்வான் ஆகிய இருவரோடே (க்ருஷ்ணன் பிறந்தபோதே சதுர்புஜத்தோடு சங்குசக்ரங்களைத் தாங்கினான், வஸுதேவர் கம்ஸனுக்குப் பயந்து வேண்டிக்கொள்ள அவற்றைமறைத்து இரண்டுகைகளையுடைய சிறுகுழந்தையானான்)

ஆழங்கால்பட்டு, "எத்திறம்!" என்கிறார்களாகவுமாம். [ஜா தோஸி] தேவகிவயிற்றில் பன்னிரண்டுமாஸம் குடியிருந்து பிறந்த பிள்ளைத்தனத்தில் குறைவறப்பிறந்தவனுக்கும் இல்லை செய்யவொண்ணாதபடி ஜ்ருதலித்துக் கொடுக்கலாயிருக்கை. "தேவதேவேச" இப்படியிருக்கிறவனாரென்னில்; ஒருகாலத்திலும் கர்மஸ்பர்சமில்லாத நித்யஸூரி பரிஷந்நிர்வாஹகனை அயர்வறுமமரர்களதிபதி யென்கை. அதறிந்தபடி யென்னென்னில் "சங்கசக்ரகதாதர" "தமஸ:பரமோதாதா சங்கசக்ரகதாதர:" (68) என்று பரமபதநிலயமுமாய் ஸூரிநிர்வாஹகமுமான வஸ்துவுக்கு அஸாதாரணசிஹ்நமான ஆழ்வார்களோடே யவதரிக்கையாலே.

தோணிஸ்தாநீயனாய் ஸ்ரீவைகுண்டநாதனிருந்தபடி. ஜ்ஞாநம் விசதமானால் அவ்விடமணித்தாய் இவ்விடம் தூரமாயிருக்குமே. "உன்பேரருளாலிச்கரையேறி" என்றாரிறே தம்பனாரும். அவனபிமாநத்திலே கிடக்கும்பேரே அங்குள்ளார்; மனையடைவே "ஈச்வரோஹம்" என்றிருக்குமவர்களிறே யிங்குள்ளார். (மாயனை) க்ருஷ்ணாவதாரத்திலே அநுபவித்து, "எத்திறம்!" என்ற நம்மாழ்வாரைப்போலே, அங்குத்தை குணத்தை அஸந்தித்து, "எத்திறம்" என்கிறாள். இங்கு ஒருராகவுடம்பு கொடுத்தமையைச் சொல்லிநியா, ஒருநாட்டுக்காக வுடம்புகொடுத்தமையைச் சொல்லுகிறாள். இங்குள்ளார்க்குத் தன்னையமைத்துக் கொடுக்குமாபோலே காணும், அங்குள்ளார்க்குத் தன்னையமைத்துக்கொடுக்கும்படி. அவனுடைய ஸ்வரூபவைலக்ஷண்யத்தைப்பார்த்தால் இங்குள்ளாரோடு அங்குள்ளாரோடு வாசியில்லையிறே. இவ்வெளிமைக்கும் அடியான விடமிறே இவ்விடம். ஒருத்தி தாம்பாலே பந்தித்தபடியைச் சொல்லிநியா, "ஸதாபச்யந்தி" என்று ஒருநாடாக த்ருஷ்டிகளாலே பந்திக்கும்படியைச்சொல்லுகிறது. (மாயனை) அப்படிபெரியஸர்வேச்வரன், க்ருஷ்ணனாய் வந்தவதரித்து இடையர்க்கும் பசுக்களுக்கும் தன்னையணையலாம்படி நியமித்து, நவநீதசௌர்ய நகரக்ஷாபாதிகளாலுண்டான ஆச்சர்யத்தை நினைத்து "எத்திறம்" என்கிறதாகவுமாம். "சூட்டுநன்மாலைகள்" இத்யாதி.

68. (மன்னுவடமதுரை) பகவத்ஸம்பந்தம்மாறுததேசம். முன்பு ஸித்தாச்ரமமாய் ஸ்ரீவாமநன் நெடுங்காலம் தபஸ்ஸு பண்ணி, சத்ருக்நாழ்வான் வன்னியமறுத்துப் படைவீடு செய்து, ஸர்வேச்வரன் எப்போதும் இப்படியவதரித்துப் போருவதொருதேசம். (வடமதுரை) "மதுராநாமநகரீபுண்யா பாபஹரீசுபா யஸ்யாம்ஜாதோ ஜகந்நாதஸ் ஸாக்ஷாத் விஷ்ணுஸ் ஸநாதந:" (69) மதுராநாம "நலமந்தமில்லதோர்நாடு" என்னுமாபோலே ; பரமபதம்போலே போக்யதையால்ப்ரஸித்தமானவூர். நகரீ — பரமபதம்கலவிருக்கை யென்னும்படி பிறந்துவிரும்பினபடைவீடு. புண்யா — அவனைத்தருகைக்கு உபாயமாகை. பாபஹரீ — விரோதிநிரஸநத்துக்கும்தானேயா

(மன்னுவடமதுரைமைந்தனை) "ஸதைகரூபரூபாய" என்கிறபடியே-அங்கு ஏகரூபனாய் நின்று உடம்பு கொடுத்தபடியைச்சொல்லிற்று; இங்கு ப்ரவாஹரூபேண உடம்புகொடுக்கும்படி சொல்லுகிறது. (மன்னுவடமதுரை) ஆனைபடும் ஆகரம்போலே அவதாரம்மாறுதவூர். ஸித்தாச்ரமத்திலே ஸ்ரீவாமநனாய் தபஸ்ஸுபண்ணிவர்த்தித்தும், ஸ்ரீசத்ருக்நாழ்வான் வன்னியமறுத்துத் தனக்குப் படைவீடாகப்பெற்று நெடுநாளிருந்து ராஜ்யம்பண்ணியும், க்ருஷ்ணனாய்வந்தவதரித்தும், இப்படி பகவத்ஸம்பந்தம் மாறுததேசம். (வடமதுரை) "மல்லை மூதூர்வடமதுரை" என்று-நம்மாழ்வாரீடுபட்டதேசமிறே. அப்படியேயிறே மஹர்ஷிகள் ஈடுபட்டது. "மதுரா நாம" பரமபதத்திலுங்காட்டில் இவ்வூர் ப்ரஸித்தம்போலே. கலங்காப்பெருநகரமாகையாலே கலங்காதிருக்கிறது அங்கு. கலங்கும்தேசத்திலே கலங்காதிருக்கிறதிறே யிங்கு. "நகரீ" விட்டுப்போந்தவிடமோ, பிறந்து படைத்து விரும்பின

பி. 68-மன்னு-பகவத்ஸம்பந்தம் மாறுது என்றும்மன்னியிருக்கும். (ஸ்ரீவாமனன் தபஸ்பண்ணின இடம், சத்ருக்நாழ்வான் படைவீடு செய்திருந்த இடம், இப்படி அவதாரங்களில் பகவத்ஸம்பந்தம் பிரசித்தமான இடம்) " வடமதுரை " முதல் " மெய்பாடு வரையில் 69-ம் பிரமாணத்தின் கருத்து விவரிக்கப்படுகிறது. மைந்தனை என்பதற்கு நாலர்த்தம் (1) மிடுக்கனை (2) பிள்ளையை (3) இளமைமிக்கயுவாவை (4) ராஜனை.

கை. சுபா—ப்ராப்யமும்தானேயாகை. யஸ்யாம்ஜாத: இத்தனைக்கும் அடி திருவவதரித்தருளுகை. ஜகந்நாத: தன் ப்ரஜைகள்பட்ட ஆபத்தை நீக்குகைக்கு அவர்களை யிழக்கமாட்டாமல் பிறந்தபடி. ஸாக்ஷாத் — "அங்குவைத்திங்குப்பிறந்த" என்னுமாப்போலே: அஜஹத்ஸ்வபாவனாய்க்கொண்டு. விஷ்ணு: வ்யாபகவஸ்து வ்யாப்யைகதேசத்திலே அந்தர்ப்பவித்தபடி. ஸநாதந-நித்யனானவன். ஆச்ரிதஸஜாதீயனாய்ப் பிறந்த மெய்ப்பாடு (மைந்தனை) மிடுக்கனை: "தந்தைகாலிற் பெருவிலங்குதாளவிழ நள்ளிருட்கண் வந்தவெந்தை" என்று - மாதாபிதாக்கள் காலில்விலங்கு கழலவந்து திருவவதரித்தபடி. பிள்ளையென்றுமாம்; வந்து திருவவதரித்து எனக்கு உபகரித்தபின்பு இள

விடமோ படைவீடாவது. "புண்யா" அபிமதலாபத்தையுண்டாக்கவற்றாயிருக்கை. அவனைப்பெறுகைக்கு உபாயமும் தானே. "பாபஹரீ" அப்பேற்றுக்கு ப்ரதிபந்தக நிரஸநமும் பண்ணவற்றாயிருக்கை. "சுபா" ஒன்றைப்போக்கவும் ஒன்றைத்தரவும் வேண்டாதே, பரமபதம்போலே ப்ராப்யமும் தானேயாயிருக்கும். "யஸ்யாம்ஜாதோஜகந்நாத:" யாதொன்றிலே ஜகந்நாதனானவன் ஜாதனானான். ஸம்ஸாரிகளுடைய குறை தீர்க்கைக்காக, நியந்தாவானவன்நியாம்யகோடியிலே பிறந்தான். "ஸாக்ஷாத்" "ஆதியஞ்சோதியுருவையங்குவைத்திங்குப்பிறந்த" என்றும், "ப்ரக்ருதிம்ஸ்வாமதிஷ்டாய" என்னும்படியே. "மாயை" என்று-ஜ்ஞாநமாய், தன்னுடைய இச்சையாலே அவதரித்தானென்கிறது. "விஷ்ணு:" வ்யாபகவஸ்து, வ்யாப்யைகதேசத்திலே வந்துபிறந்தானென்கை. எங்குமுளனானவன் ஓரிடத்திலே தோன்றினபடி. "ஸநாதந:" என்று முளனானவன் ஒருநாளிலே தோன்றினபடி. (மைந்தனை) "தந்தைகாலிற்பெருவிலங்குதாள் அவிழ" என்று-பிறந்தபோதே ஸ்ரீவஸுதேவர் காலில் விலங்கு தானேவிடும்படியான மிடுக்கைச்சொல்லுகிறது. பருவம் நிரம்புவதற்கு முன்னே கம்ஸனைக்கொன்ற மிடுக்கைச்சொல்லிற்றாகவுமாம். "மைந்தன்" என்று - பிள்ளையாகவுமாம்; ராஜாவாகவுமாம். "வடமதுரையார்மன்னன்" என்றாளிறே.

கிப்பதித்தபடியாதல்; ராஜாவென்றுமாம். தன்னழகைக் காட்டி இருந்ததே குடியாகத்தன்வசமாக்கினபடி.

69. (தூயபெருநீர்யமுனைத்துறைவனை)விரஜைபோலே போந்த விடத்துக்கு ஓராறுண்டானபடி. (தூய) "வஸுதே வோவஹந் க்ருஷ்ணஂஜாநுமாத்ரோ தகோயயௌ" (70) என்று-ஸ்ரீவஸுதேவர் எழுந்தருளுவித்துக்கொண்டு போகிற போது பரங்காக வற்றிக்கொடுத்தபடி. க்ருஷ்ணனும் பெண் களும் மாறிமாறிக் கொப்பளிக்கையாலே வந்த தூய்மையாக

(தூயபெருநீர்யமுனை) விட்டவார்த்தை மறக்கும்படி யான ஆறு. பரமபதத்தில் நின்றும் வந்தவதரிக்கைக்கு இவ் வூருண்டானாப்போலே, பரமபதத்துக்கு விரஜைபோலே இவ் வூருக்கிவ்வாறு. அடியறிவார் கூடப்போந்து கருத்தறிந்து காரியம் நடத்துமாப்போலே; - திருவடி திருவநந்தாழ்வான் போலே கருத்தறிந்து அவ்விருளிலே க்ருஷ்ணனை யெழுந் தருளுவித்துக் கொண்டுபோக, முழங்கால்மட்டாக வற்றிக் கொடுத்த சுத்தியைச் சொல்லுகிறது. "யமுநாஞ்சாதி கம் பீராம் நாநாவர்த்தசஷாகுலாம்-வஸுதேவோவஹந் க்ருஷ் ணம் ஜாநுமாத்ரோதகோயயௌ." பிராட்டி சரணம்புகவும் ராவணபயத்தாலே அஞ்சியிருந்தகோதாவரிபோலன்றிக்கே கம்ஸன் மாளிகைநிழல்கீழே வற்றிக்கொடுத்தபடி. தூய்மை யாகிறது—பகவத்ஸ்பர்சமிறே. "வல்லவீவதநோச்சிஷ்டபவித் ராதரவித்ரும:" என்னுமாப்போலே-க்ருஷ்ணனும் பெண்களு மாக ஜலக்கிரீடை பண்ணி ஒருவர்க்கொருவர் கொப்பளித் ததாலே வந்த சுத்தியாகவுமாம். (தூய) "ப்ரஸாதம்நிம்நகா யாதா" என்று நீர்த்தெளிவைச் சொல்லிற்றாகவுமாம். (பெரு

பி. 69-தூய - (1) வஸுதேவர் க்ருஷ்ணனை யெடுத்துக் கொண்டு கோகுலம் போகிறபோது பாங்காகவற்றிக்கொடுத்தமை யால் வந்த தூய்மை (2) க்ருஷ்ணன் உதடுகளுக்குப் பவித்ரதையை உண்டாக்கும் இடைப்பெண்களுடைய அதரஸ்பர்சத்தால் இவர்கள் மாறிமாறிக் கொப்பளிக்கையால் வந்ததூய்மை (3) ஆற்றுநீரில் தெளிவால் வந்த தூய்மை. யமுனைத்துறை-குரவைக்கூத்தாடுதற் குப் பெண்கள் விரும்பியதுறை.

வுமாம். "ப்ரஸாதம் நிம்நகாயாதா" (71) என்று-நீரில் தெளிவைச் சொல்லிற்றாகவுமாம். (பெருநீர்) "யமுநாஞ்சாதிகம்பீரம் நாநாவர்த்தசஷாகுலாம்" (72) என்று-அத்யகாதமான ஆறு பாங்காக வற்றிக்கொடுத்தது. மநோஹரமாகையாலும் பாவநமாகையாலும் ச்லாக்யதையைச் சொல்லிற்றாகவுமாம். (யமுனைத்துறைவனை) திருக்குரவை ஸ்தாநமாகையாலே பெண்கள் படுந்துறையையுடையவனை.

70. (ஆயர்குலத்தினிற்றோன்றும் அணிவிளக்கை) பரமபதத்திற் காட்டில் குணங்கள் இடைச்சேரியிலே அத்யுஜ்ஜ்வலமானபடி. அந்தகாரத்தில் தீபம்போலே. (தோன்றும்)

நீர்) க்ருஷ்ணனும் பெண்களும் ஜலக்ரீடை பண்ணுகைக்குப் போரும்படி ஸம்ருத்தமான ஜலம். பெண்களுடைய விரஹதாபங்கெடக் குளிக்கப்போரும்நீர்என்னுமாம். அன்றியே, நீரினுடைய ச்லாக்யதையைச் சொல்லிற்றாகவுமாம். (யமுனைத்துறைவனை) கவிபாடுவார்க்கு ஊரும் பேரும் ஆறும் வேண்டக்கடவதிறே. (யமுனைத்துறைவனை) "முத்துப்படும் துறை" என்னுமாப்போலே, "சங்கணித்துறைவன்" என்னுமாப்போலே, க்ருஷ்ணனுக்குப் பெண்கள்படும் துறை. நற்சரக்குப் படுவது நீரிலேயாகாதே. "அமுதில்வரும்பெண்ணமுது" என்னுமாப்போலே. (துறைவன்) "கம்ஸபயத்துக்கு அஞ்சி ஒளிக்கவந்து சேர்ந்தாரைச் சொல்லுமாப்போலே சொன்னபடி பாரீர்" என்று பட்டர்.

(ஆயர்குலத்தினில் தோன்றும்) பிறவாதபரமபதத்தோபாதிஸ்ரீமதுரையில்பிறப்பும். முலைப்பால்குடித்து அழுதவிடமிறேபிறந்தவிடமாவது. (தோன்றும்) "ஆவிர்ப்பூதம்மஹாத்

பி. 70-அணிவிளக்கு - பரமபதத்தைவிட இடைச்சேரியில் குணங்கள் அத்யுஜ்ஜ்வலமாயிருக்கை, அந்தகாரத்தில் தீபம்போலே தயை, க்ருபை, நீர்மை முதலியன பிரகாசிக்கை. இவளோடு அவனுக்கு-தேவகியோடு க்ருஷ்ணனுக்கு சூரியன் உதிக்கும் கிழக்குத் திசைக்கும் சூரியனுக்கும் எவ்வளவுசம்பந்தமுண்டோ, அவ்வளவே தேவகிக்கும் க்ருஷ்ணனுக்கும் உண்டு. (73-ம் பிரமாணத்தை விளக்கும் கருத்து)

“அச்யுதபாநுநா! தேவகீபூர்வ ஸந்த்யாயா மாவிர்ப்பூதம்”(73) என்றுகொண்டு கர்ப்பத்தில் தொற்றில்லாமை. கீழ்திக்குக்கு ஆதித்யனோடுள்ள ஸம்பந்தம் இவளோடு அவனுக்குள்ளது. ஸ்ரீமதுரையிலே யவதரித்திருக்கச்செய்தே திருவவதார ப்ரகாசம் திருவாய்ப்பாடியிலே சென்றது என்றுமாம். (மணி விளக்கை) திருவாய்ப்பாடிக்கு மங்களதீபமென்றுமாம்.

71. (தாயைக் குடல்விளக்கஞ்செய்த தாமோதரனை) வயிற்றில் தழும்பாலே யசோதைப் பிராட்டியை விளங்சப் பண்ணினவனை. (தாயைக் குடல் விளக்கஞ்செய்த) “கௌ

மநா” கிழக்கே உதிக்கிற ஆதித்யனுக்கு ஸ்பர்சமுண்டாகில் இவள் வயிற்றில் ஸ்பர்சமுண்டாவதென்றான் ரிஷி. பிறந்தது குணமாகைக்காக “பிறந்தவாறு” என்று ஈடுபட்டார் ஆழ்வார். (அணிவிளக்கை) ஸ்ரீவைகுண்டத்திலும் ஸ்ரீமதுரையிலும் அநுஜ்ஜ்வலனைப்போலேயிருப்பது. “ஆயர்பாடிக் கணிவிளக்கு” என்கிறபடியே இவர்களுக்குக் கண்காட்டியாயிருக்கை. அந்தகாரத்தில் தீபம்போலேதாழ்ந்தார் பக்கலிலேயிறே குணம்ப்ரகாசிப்பது. பிறப்பாயொளிவருமுழுநலமிறே. “மணிவிளக்கு” என்றபோது, இங்கே புகுந்தபின்பு பரமபதத்தில் அழுக்கற்றபடி.

என்றிருக்கும் கம்ஸனுடைய மிடுக்கு அழிய. (சென்று செருச்செய்யும்) எதிரிகள் வந்தால் பொரவிருக்கையன்றிக்கே இருந்தவிடங்களிலே சென்றுபொருகை. "அபியாதாப்ரஹர்த்தாச" என்ற—சக்ரவர்த்தித் திருமகனைப்போலே இவர்கள் வீரம். எதிரிகள்வந்து ஊரை அடைமதிகள் படுத்த வெல்லுகைகுற்றமாறபோலே, நாங்கள் வரப்புறப்படாதே யிருக்கை உனக்குக்குற்றமன்றோ. ராஜாக்கள்எதிரிகளைத் தோற்பிக்கும்படி வ்யாபரித்தார்களே யாகிலும், அந்த:புரத்தில் வந்தால் எளியராயன்றோ விருப்பது. (குற்றமொன்றில்லாத) எடுத்துவரப்பார்த்திருக்கும் குறையில்லை, எதிரிகள் கையிலாயுதத்தைப் பொகடக்கொன்றார்க ளென்னும் குறையில்லை; அழியச்செய்யா நின்றார்களென்று க்ருஷ்ணனுக்கு முறைப்பட்டால் "செய்தாரேல் நன்று செய்தார்" என்னும்படி பிறந்தவர்கள். (குற்றமொன்றில்லாதகோவலர்) "அபிசேத்ஸு துராசாரோ பஜதேமாம நந்யபாக்| ஸாதுரேவ ஸமந்தவ்யஸ்ஸம்யக்வ்ய வஸிதோஹிஸ:" என்றிறே யவன்படி. "நிர்த்தோஷம் வித்திதம்ஜந்தும்ப்ரபாவாத்பரமாத்மந:"

“உத்தரம் த்ரமாஸாத்ய” (91) என்கிறபடியே எங்களுக்கு ப்ராப்யமான முற்றத்திலேபுகுந்து. இவர்களுக்கு ப்ராப்யமானபடியென்னென்னில்; “முற்றம்புகுந்து முறுவல்செய்து நின்றீர்” என்றும், “முற்றத்தூடுபுகுந்து நின்முகங்காட்டி” என்றும் - சேஷியானவனுக்கும் ப்ராப்யமான முற்றமாகையாலே சேஷபூதர்களான எங்களுக்குச் சொல்லவேணுமோ. புகுந்து கொள்ளப்புகுகிற கார்யமென்னென்ன (முகில் வண்ணன் பேர் பாட) நீ யுகக்கும் அவனழகிலும் ஔதார்யத்திலும் ஈடுபட்டு அவன் திருநாமத்தைப் பாடச்செய்தேயும். (சிற்றாதே பேசாதே) “முகில்வண்ணன்” என்றவாறே, அவ்வடிவை நினைத்துப்பேசாதேகிடந்தாள். (சிற்றாதே) சிற்றுதல்-சிதறுதல். உணர்ந்தமைக்கடையாளமான சேஷ்டையைப் பண்ணாதே. இவள் சேஷ்டிதமும் வார்த்தையும் தங்கள் கண்ணுக்கும் செவிக்கும் போக்யமாகையாலே இன்னாதாகிறார்கள். (செல்வப்பெண்டாட்டி நீ) உன்னோடு கூடுமது எங்களுக்கெல்லாம் ஐச்வர்யமுமான நீ. க்ருஷ்ணகுணாநுஸந்தாநத்தாலே புஷ்கலையான நீ என்னவுமாம்.

யும், “ஸர்வாநர்த்திநோத்ருஷ்ட்வா” “எனக்கேதன்னைத் தந்த” என்று ஔதார்யத்தையும் சொல்லி நீ பாட, நாங்களும் உன்பக்கமே நின்று அத்தைப் பெறுகைக்காக, நீயுகக்கும் அவன் வடிவழகிலும் ஔதார்யத்திலும் ஈடுபட்டுத் திருநாமத்தைப் பாடச்செய்தேயும்.

(சிற்றாதே பேசாதே) அவ்வடிவை நினைத்து அங்கங்களைப் பரிஸ்பந்திப்புதல், வார்த்தைபேசுதல் செய்யாதே கிடக்க, இவள்சேஷ்டிதமும் வார்த்தையும் கண்ணுக்கும் செவிக்கும் போக்யமாகையாலே கண்ணையுஞ் செவியையும் சேரப் பட்டினிகொள்ள வேணுமோ என்று இன்னாதாகிறார்கள். (செல்வப்பெண்டாட்டிநீ) உன்னை நீ பிரிந்தறியாயே. உன்னோடே கூடுவதே எங்களுக்கு எல்லா ஐச்வர்யமான நீ. உன்னுடைய உத்தேச்யம் நீ கூடுபூரித்து வைத்தால், எங்களுக்கு உத்தேச்யம்பெறவேண்டாவோ. இங்கே கூடுபூரித்துக்கிடக்கிறதோ வென்ன; (எற்றுக்குறங்கும் பொருள்) உள்ளு கூடுபூரித்ததில்லையாகில் எங்கள்

இங்கே கூடுபூரித்துக்கிடந்ததோ என்ன; இல்லையாகில் (எற்றுக்கு உறங்கும்பொருள்) எங்கள்பாடே புறப்படாதே உறங்குகைக்கு ஒரு ப்ரயோஜநமுண்டோ. "அடியார்கள் குழாங்களை-உடன் கூடுவதென்றுகொலோ" என்று திரளோடே அநுபவிக்கும் அநுபவத்தைவிட்டு, கைவல்யம் போலே கிடக்கிற கார்யமென் என்னவுமாம். (எற்றுக்கு உறங்கும் பொருள்) உன்னுடைய உத்தேச்யத்தைப்பாராதே, எங்களுடைய ஆற்றாமையைப் பாராதே, க்ருஷ்ணனுடைய நிரதிசயபோக்யதையைப் பாராதே, எதுக்காகக் கிடக்கிறாய். ௧௧

110. ஸ்வாபதேசவ்யாக்யாநம். பதினோராம்பாட்டு. (கற்று இத்யாதி.) இப்பாட்டில், ஈச்வரனை உபாயோபேய

ஆர்த்தத்வநிகேட்டால் கண்ணுறங்குமோ. எங்கள்பாடே புறப்படாதே யுறங்குகிறதுக்கொரு ப்ரயோஜநமுண்டோ. அடியார்கள் குழாங்களை—உடன் கூடுவதென்றுகொலோ" என்றிருக்குப்படி அழகிதாயிருந்தது, அவனைத்தனியநுபவிக்கை கைவல்ய மோக்ஷத்தோடொக்கு மத்தனை. "தொண்டீரெல்லீரும் வாரீர்" என்றிருக்க வேண்டாவோ. (எற்றுக்குறங்கும்பொருள்) உன்னுடைய உத்தேச்யத்தைப்பாராதே எங்களுடைய ஆற்றாமையைப் பாராதே, க்ருஷ்ணனுடைய நிரதிசய போக்யதையைப் பாராதே, எதுக்காகக்கிடக்கிறாய். (எற்றுக்குறங்கும் பொருள்) அவனை யுகப்பிக்கப் பார்த்தாயாகில் அவனுடையாரையு முகப்பிக்க வேணுங்காண். ஸ்வப்ரயோஜநமான கைங்கர்யத்தைக் காட்டில் ஒரு வாசிகண்டிலோமே உனக்கு. உன்னையுமவனையும் பொருந்தவிட நாங்கள்வேணும்; அவனைப்பிரிந்தவன்று, வ்ருத்தகீர்த்தநம பண்ணி தரிப்பிக்கைக்கு நாங்கள்வேணும்; நீயுமவனுமாக அநுபவியாநின்றால் [1]எடுத்துக்கைநீட்ட நாங்கள் வேணும். ஆனபின்பு எங்களையொழிய உனக்கு உறங்கவிரகுண்டோ. ௧௧

[1] எடுத்துக் கைநீட்டுகை - பரிசர்யைபண்ணுகை.

மென்று அத்யவஸித்திருப்பார்க்கு மிகவும் ஆதரணீய விஷயமான அதிகாரியை யெழுப்புகிறார்கள். வ்யா.—(கற்றுக் கறவை) ஸஸந்தாநரான சிஷ்யர். (கணங்கள்பல) அவர்களுடைய பலவான ஸமூகங்களைக் கறந்து அவர்களுடைய அபிநிவேசா நுகுணமாக ஜ்ஞாநப்ரதாநம்பண்ணி. (செற்றார்திறலழிய) செற்றாருண்டு — உபாயாந்தரபரரும், உபேயாந்தரபரரும்; அவர்களுடைய திறலுண்டு — ஸ்வார்த்தபரதை, அழிய — நசிக்கும்படி. (சென்றுசெருச்செய்யும்) தாங்களே விஜயயாத்ரையைப்பண்ணி அவர்களோடேவர்த்திக்கிற. (குற்றமொன்றில்லாத) பூர்வோத்தராகங்களிலொன்றுமில்லாத. (கோவலர்தம்) "அவனே உபாயோபேயம்" என்று அத்யவஸித்திருக்குமவர்களுக்கு. (பொற்கொடியே) ஸ்ப்ருஹணீயமான பொற்கொடிபோன்ற திருமேனியையுடையவளே. ஜ்ஞாநவைசித்யத்தையுடையவளே என்றுமாம். (புற்றரவல்குல்) கீழ், பொற்கொடியென்று-பக்தியைச் சொல்லுகையாலே, அல்குலென்று-ஸ்வவிஷயத்திலே படிந்த பரமபக்தியைச் சொல்லுகிறது. (புனமயிலே) அளகமென்று-ஸ்வாபதேசத்தில் வ்யாமோஹத்தைச் சொல்லுகையாலே, வ்யாமோஹந்தான் இதரவிஷய வைராக்யபூர்வகமாய் ஸ்வவிஷய விரஹாஸஹிஷ்ணுவான ப்ரேமரூப ஜ்ஞாநமாகையாலே, "புனமயிலே" என்று-பரமபக்தியையுடையவளே யென்கிறது. (போதராய்) நீபுறப்பட்டு வரவேணும்.

111. நாம்புறப்பட்டு வருகைக்கு நம்முடையவர்களெல்லாரும் வந்தார்களோவென்ன (சுற்றத்துத்தோழிமாரெல்லாரும்வந்து) உனக்கு பகவதநந்யார்ஹசேஷபூதரான பாகவதரெல்லாரும்வந்து. (நின்முற்றம்புகுந்து) பரமப்ராப்யமான உன்னுடைய திருமுற்றத்திலே புகுந்து. (முகில்வண்ணன்பேர்பாட)பரமோதாரனும் ச்ரமஹரமானவடிவையுடையவனுடைய திருநாமத்தை நீபுறப்பட்டு வருவதி என்று பாட. (சிற்றாதே பேசாதே) பரக்க வொருவ்யாபாரத்தையும் பண்ணாதே, வார்த்தையுஞ்சொல்லாதே. (செல்வப்பெண்டாட்டி) பகவத்குணங்களை யொருமடைசெய்து புஜிக்கை

யாகிற ஸம்பத்தையுடைய நிருபாதிகபாரதந்த்ரியமுடைய வளே. (நீ) இஸ்ஸம்பத்தென்னும்மாறுமல் செல்லுகிற நீ. (உறங்கும்பொருள் எற்றுக்கு) உறங்குகிறதுக்குப்ரயோஜந மேது. எங்களை அகற்றுகையே ப்ரயோஜநமோ, இன்னம் ஸம்ஸாரிகளை சேதநராக்குகையே ப்ரயோஜநமோ, சொல்லா யென்கிறார்கள். இப்பாட்டில், ஜாத்யுசிதமான தர்மத்தை ஸாதநபுத்யாவன்றிக்கே கைங்கர்யபுத்யா அநுஷ்டித்தால் குற்றமில்லை யென்கிறது - கற்றுக்கறவைக் கணங்கள் பல கறந்து குற்றமொன்றில்லாத வென்கையாலே... ... கக

பன்னிரண்டாம் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி:—112. பன்னிரண்டாம் பாட்டு. க்ருஷ்ணனைப்பிரியாதே இளையபெருமாளைப்போலே யிருப்பா னொருவன் தங்கையாகையாலே ச்லாக்யையா யிருப்பா ளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

கனைத்திளங்கற்றெருமைகன்று றுக்கிரங்கி
நினைத்துமுலைவழியேநின் றுபால்சோர
நனைத்தில்லஞ்சேறுக்கும்நற்செல்வன் தங்காய்
பனித்தலைவீழநின்வாசற்கடைபற்றிச்

ஆறுயிரப்படி:—பன்னிரண்டாம்பாட்டு. பெருமாளைப் பின்தொடர்ந்து நோக்கிக்கொண்டு திரியும் இளையபெருமா ளைப்போலே, க்ருஷ்ணனையல்ல தறியாதே பின்தொடர்ந்து க்ருஷ்ணவிஷயத்திலே பேரப் பரிவனு யிருப்பானொருவ னுடைய தங்கையாகையாலே ச்லாக்யையா யிருப்பா ளொருத்தியை யெழுப்புகிறார்கள். ஸ்வதர்மத்தை யநுஷ்டிப் பார்களுடைய பெண்பிள்ளையை யெழுப்பிற்று-கீழ்; இதில், ஸ்வதர்மத்தைக் காற்கடைக்கொண்டவனுடைய தங்கையை எழுப்புகிறது. அவர்களுடைய அநுஷ்டாநமும் இவனுடைய அநுஷ்டாநமும் உபாயமன்று ; யாதொன்று உபேயத்தைத் தரவற்று, அதிறே உபாயம். விட்டசொன்னவையும் பற்றச் சொன்னவையும் அன்றிறே உபாயம் ; விடுவித்துப் பற்று வித்தவனிறே உபாயம்.

சினத்தினால்தென்னிலங்கைக்கோமானைச்செற்ற
மனத்துக்கினியானைப்பாடவும்நீவாய்திறவாய்
இனித்தானெழுந்திராயீதென்னபேருறக்கம்
அனைத்தில்லத்தாருமறிந்தேலோரெம்பாவாய்.

பதவுரை:—க்ருஷ்ணனைப்பிரியாதே யிருப்பானொருவனுடைய தங்கையாய்ப் பெருமையையுடையளா யிருப்பாளொருத்தியை நோக்கி, இளம்-இளையவான, கன்று-கன்றுகளையுடைய, எருமை-எருமைகளானவை, பால்கறப்பா ரில்லாமையாலே, கனைத்து-கதறிக்கொண்டு, கன்றுக்கு - தன்கன்றின் விஷயத்திலே, இரங்கி - இரக்கமுற்று, நினைத்து - கன்று ஊட்டுவதாக நினைக்கையாலே, முலைவழியே-முலைவழியாக, நின்று - இடைவிடாமல், பால்சோர-பால்பெருக, அத்தாலே, இல்லம் - அகத்தையெல்லாம், நனைத்து - ஈரமாக்கி, சேறுக்கும்—சேறுகப்பண்ணும், நற்செல்வன் - பகவதநுபவமாகிற நல்ல ஸம்பத்தையுடையவனுடைய, தங்காய்-ஸஹோதரியானவளே, பனி - பனியானது, தலை - எங்கள் தலையிலே, வீழ - விழும்படியாக, நின்-உன்னுடைய, வாசல் - வாசற்காலின், கடைதண்டியத்தை, பற்றி-பிடித்துக்கொண்டு ; சினத்தினால்-"பிராட்டியைப் பிரித்தான்" என்கிற கோபத்தாலே, தென்-அழகுபட்டிருக்கிற, இலங்கை-லங்கையிலுள்ள ராக்ஷஸவர்க்கத்துக்கு, கோமானை-அரசனான ராவணனை, செற்ற—கொன்று, ஆச்ரிதனான விபீஷணனுக்கு அரசளிக்கையாலே, மனத்துக்கு-மநஸ்ஸுக்கு, இனியானை-இனியனாயிருக்கும் சக்கரவர்த்தித்திருமகனை, பாடவும் - பாடாநிற்கச்செய்தேயும், நீ—, வாய்திறவாய் வாய்திறந்து பேசுகின்றிலை ; இனித்தான்-எங்களாற்றாமை யறிவித்தபின்பும், எழுந்திராய்-எழுந்திருக்கின்றிலை; ஈதென்ன பேருறக்கம்-இதென்ன பெருந்தூக்கம், நாங்கள் திரண்டுவந்து நிற்கின்றமையை, அனைத்தில்லத்தாரும் - ஊரெல்லாரும், அறிந்து-அறிந்தார்கள் எழுந்திரா யென்கிறார்கள்.

113. வ்யா.—(கனைத்து) கறப்பாரில்லாமையாலே முலைகடுத்துக் கதறுகை. (இளங்கற்றெருமை) இளங்கன்

வ்யா.—(கனைத்து) உதாரர் கொடுக்கப்பெறாவிட்டால் படுமாபோலே, ஆச்ரிதர்கார்யம் செய்யப் பெறாவிட்டால்

பி. 113-பாடாற்றமாட்டாமை - க்லேசம் பொறுக்கமாட்டாமை. நினைத்து முலைவழியே நின்று பால்சோர-கன்று ஊட்டுவதாக நினைத்துப் பாவநாப்ரகர்ஷத்தாலே பால் சொரிய, குணத்

ளுகையாலே பாடாற்றமாட்டாமை.(கன்றுக்கு இரங்கி) தன் முலைக்கடுப்புக்கிடக்க, "கன்று என்படுகிறதோ!" என்றிரங்கி. எம்பெருமான் ஆச்ரிதவிஷயத்திலிருக்கும்படிக்கு நிதர்சநமிறே. இத்தால் சொல்லிற்றாய்த்து-அவன் எருமைகள் கறவாவிட்டால் அவை படும்பாட்டை நாங்கள் உன்னாலே படாநின்றோமென்கை. (நினைத்துமுலைவழியே)கன்றை நினைத்து பாவநாப்ரகர்ஷத்தாலே முலையிலே வாய்வைத்ததாகக்கொண்டு பால்சொரியாநிற்கும். (முலைவழியே) கைவழி தவிர. (நின்று பால்சோர) நினைவுமாறுமையாலே,திருமலையில் திருவருவிகள்போலே, பால்மாறுதேசொரிகை. இவன்

"ரிணம்ப்ரவ்ருத்தம்" என்னுமாபோலே ஈச்வரன், ப்ராப்த காலத்தில் கறப்பாரில்லாமையாலேமுலைகடுத்து, இவ்வாசலிலே கன்றுகாலியாய், நாம்பட்டதோ! என்றுகுமுறி கறக்க வேண்டும்போதிலே இவற்றைக்கறவாதே காற்கடைக் கொள்ளுவானென்னென்னில்; இளையபெருமாளுக்கு அக்நிகார்யத்தில் அந்வயமுண்டாமன்று இவனுக்கு இவற்றினுடைய ரக்ஷணத்தில அந்வயமுள்ளது. இளையபெருமாளுக்குப் பெருமாளைப் பிரியமாட்டாமையாலே. இவன் க்ருஷ்ணனைப் பிரிய மாட்டாமையாலே. இப்படி பகவத் விஷயத்தில் ப்ரேமத்தாலே பிரிய அவஸரமில்லாமை. ஸ்வதர்மத்தை அநுஷ்டியாதொழிகை-விடுகையாவது; அல்லது, ஆலஸ்யத்தாலே விடுமது-விடுகையன்று. "தொழிலெனக்குத் தொல்லைமால்தன்னாமமேத்தப்பொழுதெனக்கு மற்றதுவேபோதும்" என்னும்படியே. (இளங்கற்றெருமை) இளங்கன்றான எருமையென்னுதல்; இளங்கன்றையுடைய எருமையென்னுதல். இரண்டாலும் பாடாற்றமாட்டாமை சொன்னபடி. "கறவாமடநாகு தன்கன் றுள்ளினாற்போல்" என்னக்கடவதிறே. (கன்றுக்கிரங்கி) தன்முலைக்கடுப்புக்கிடக்க, கன்று என்படுகிறதோ! என்றிரங்கி. எம்பெருமான் ஆச்ரிதவிஷயத்தில் "ஏழை யேதலன் கீழ்மகனென்னாதிரங்கி" என்று-

---

திக்கு-ப்ராவண்யரூபகுணத்துக்கு, தமையனில் தன்னேற்றம், புருஷனிற் காட்டில் ஸ்த்ரீக்குப்ராவண்யம்பள்ளமடையாகையாலே.

எருமை கறவாதொழிவானென்னென்னில்; இளையபெருமாள் க்ஷத்ரியதர்மமான அக்நிகார்யத்துக்கு உறுப்பாயன்றிறே இவனெருமைகள் விட்டுக்கறப்பது. அதுவென்னென்னில்; "நதேவலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ரணே" (114) என்னுமாபோலே. க்ருஷ்ணனைப்பிரியக்ஷமனல்லாமையாலே, "பரித்யக்தா மயாலங்கா" (23) என்னும்படியாலே ப்ராப்யவிரோதிகளில்நசையற்றபடியாகவுமாம். (நனைத்தில்லம்சேறுக்கும்) பாலின் மிகுதியாலே அகம்வெள்ளமிடும், அத்தாலே துகையுண்டு சேறாகும். இத்தால்-சேறாகையாலே புகுரவொண்கிறதில்லையென்கை. (நற்செல்வன்) தோற்றி

அவன் படும்பாட்டுக்கு நிதர்சநமாயிருக்கிறது. அவன் எருமைகள் கறவாவிட்டால் அவை படும்பாட்டை, நாங்கள் உன்வாசலிலேவந்து நின்று புகுரப்பெறாமையாலே படாநின்றோம். (நினைத்து) "மநஸாசிந்தயத்தரிம்" என்று நினைத்த அநந்தரம், "த்வராயைநம:" என்னும்படி திருவுள்ளமங்கே ப்ரவணமானாற்போலே. (நினைத்து முலைவழியே) கன்றை யகலக் கட்டிவைப்பார்கள், அத்தைநினைத்து, பாவநாப்ரகர்ஷத்தாலே கன்று முலையிலே வாய்வைத்ததாகக்கொண்டு, கைவழியுமன்றிக்கே கன்றின் வாய்வழியுமன்றிக்கே யிருக்க, முலைவழியே பால் சொரியாநிற்கும். (நின்று பால்சோர) மேகங்களுக்குக் கடலிலே புக்கு முகந்துகொடு வந்து வர்ஷிக்கவேணும், அவ்வருத்தமிவற்றுக்கில்லை, நினைவு ஊற்றாகச் சுரக்கிற பாலாகையாலே. நினைவுமாறாமையாலே, திருமலையில் திருவருவிகள்போலே பால்மாறாதே செல்லும். (பால்சோர) பகவத்விஷயம் கேளாதே யிருக்க, தன்செல்லாமையாலே சொல்லுவாரைப் போலே, அர்ஜுநன் கேளாதே யிருக்க, "பூய ஏவ மஹாபாஹோச்ருணு மே பரமம் வச:" என்றவன் தன்னைப்போலே. (நனைத்து இல்லம்சேறுக்கும்) பால்வெள்ளமிடுகையாலும், எருமைகள் துகைக்கையாலும் சேறாய்க்கிடக்கும். (இல்லம்சேறுக்கும்) எத்தனையேனு மேறிப்பாயாத மேடும் பால்வெள்ளத்தாலே சேறானபடி. கடலை அகழ்செய்துகொண்டுகிடந்தால், ஓடமேறிப்புகுதல், சேற்றுக்கு அளற்றுப்பொடியிட்டுப் புகுதல் செய்ய

மாயும் ஸம்பத்தன்றிக்கே நிலைநின்ற ஸம்பத்து. அதாகிறது-க்ருஷ்ணன் திருவடிகளில் நிரந்தரஸேவை. "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" (22) என்கிறபடியே-கைங்கர்ய லக்ஷ்மியிறே இவ்வாத்மாவுக்கு நிலைநின்ற ஸம்பத்து. "லக்ஷ்மி ஸம்பந்ந:" என்றது, "ஊரும் நாடு முலகமுந் தன்னைப் போல்" என்கிறபடியே - தன் வைஷ்ணவஸ்ரீயாலே ஜகத்துக்கடைய வைஷ்ணவத்வமுண்டாம்படியிருக்கை. (தங்காய்) குணஹாநிக்கு"ராவணஸ்யாநுஜோப்ராதா"(115)என்னுமாபோலே குணத்துக்குத் தமையனில் தன்னேற்றமுடைய ளென்கை.

வேண்டும்படியிருக்கை. (நல்செல்வன்) கர்மத்தாலேயாதல், தேவதாந்தரபஜநத்தாலே யாதல் வரும் ஐச்வர்யம் [1]அந்தவத்தாயிருக்கும்; பெருமாளைப்பிரியாத இளையபெருமாளுடைய ஐச்வர்யம்போலே, க்ருஷ்ணனைப் பிரிய க்ஷமனன்றிக்கே அவனை நோக்குகிற ஐச்வர்யமிறே நிரந்தரஸேவைபோலே நிலைநின்ற ஐச்வர்யம். "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" கைங்கர்யஸம்பத்திறே இவ்வாத்மாவுக்கு நிலைநின்ற ஸம்பத்து. "நதேவலோகாக்ரமணம்" என்னும்படியே ப்ராப்யவிரோதிகளில் நசையற்றபடியாலே, தோற்றிமாயும் ஸம்பத்தன்றியிலே யிருக்கை. "லக்ஷ்மிஸம்பந்ந:" "ஊரும் நாடுமுலகமுந் தன்னைப்போல்" என்று ஆழ்வாருடைய கைங்கர்யஸ்ரீ விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற எறிப்பாய்ந்தாற்போலே. இவனுடைய கைங்கர்ய ஸ்ரீயும் நாட்டுக்கெல்லாம் குறையற்றிருக்கை. (தங்காய்) உங்களுக்கு ரக்ஷ்யவர்க்கத்தை நோக்காமை ஜந்மஸித்தமிறே.(நற்செல்வன்றங்காய்) "ராவணஸ்யாநுஜோப்ராதா" என்று - தமையனுடைய தண்மை சொல்லவேண்டாத ஏற்றமுண்டிறேயுனக்கு. ஸ்ரீவிபீஷணாழ்வானிலும் அவன் மகளான த்ரிஜடை பிராட்டிக்கடிமைசெய்தாற்போலே, க்ருஷ்ணனை நோக்கின தமையனிற் காட்டிலும் எங்களை நோக்கவேண்டாவோ. க்ருஷ்ணன்ரக்ஷ்யமானபோதே நாங்களும் அந்தர்ப்பூதைகளன்றோ.

---

1 அந்தவத்து-அழிவையுடையது.

114. (பனித்தலைவீழநின்வாசல்கடைபற்றி)மேல்வர்ஷம் வெள்ளமிட, கீழ் பால்வெள்ளமிட, நடுவு மால்வெள்ளமிட, நின்ற நிலையாகையாலே,தெப்பம் பற்றுவாரைப்போலேநின் வாசற்கடையில்தண்டியத்தைப்பற்றிக்கிடக்கிற இந்ததர்ம ஹாநி அறிகிலை. இப்படிசொன்னவிடத்திலும் இவர்கள் படு மலமாப்புக் காண்போமென்றுபேசாதேகிடக்க; (சினத்தி னால்) பெண்களைத் தீராமாற்றாக நெஞ்சாரல் பண்ணும் க்ருஷ்ணனையொழிய, பெண்பிறந்தார்க்குத் தஞ்சமான சக்ர வர்த்தித் திருமகனைச்சொல்லுவோம் இவள் எழுந்திருக்கைக் காக என்று ராமவ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார்கள் (சினத்

(பனித்தலைவீழ) ஆழிமழைக்கண்ணனிலே வர்ஷிக்க நியமிக்கையாலே, மேல் வர்ஷமாக, கீழ்பால் வெள்ளமிட நின்று அலைகையாலே,தெப்பம்பற்றுவாரைப்போலேதண்டி யத்தைப்பற்றிக்கொண்டு நின்றோம். ப்ராப்ய பூமியில்ஐச்வர் யம் இங்கே கைபுகுரச்செய்தே அவ்வருகே போகத் தேடு கிறது எங்களுடைய அபிநிவேசாதிசயமிறே. ஈச்வரன் அபி நிவேசமறிந்து பிள்ளை விள்ளாமைவிரும்பியுள்கலந்தார்க் குத் தன்னைக் கொடுக்குமாபோலே, இவர்க ளபிநிவேசப் அற்புமளவும் பேசாதேகிடக்க, அவள் நினைவறியாதே தங் கள் செல்லாமையாலே சொல்லுகிறார்கள். (சினத்தினால்) பெண்களுக்காகில் சேர்க்கைபல்லிபோலே க்ருஷ்ணவ்ருத் தாந்தஞ் சொல்லுகைபணியிறே. "அதவாகிம்ததாலாபை:" என்று - பெண்களைத் தீராமாற்றமாக நெஞ்சாரல்படும்படி பண்ணுமத்தை நினைத்துக்கிடக்கிறாள். "உண்ணாதுறங்காது" "அநித்ரஸ்ஸததம்ராம:" என்று - பெண்களைப் பிரிந்தால் ஊணுமுறக்கமுமின்றிக்கே, பெண்பிறந்தார்க்குத் தஞ்சமான சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லுவோம் இவளெழுந்திருக் கைக்காக என்று ராமவ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார்கள்.

பி. 114-தீராமாற்றாக-ப்ரதிக்ரியையாகிய மாற்றாலே தீராத படி, படிகுலையடிக்கும்-ஆசையுண்டாக்கி ஸம்ச்லேஷியாமல் பாதிக் கும், ஒடியெறிந்து-வழியில் மரத்தைத் தள்ளித் தடைசெய்து, கண்ணநீர்பாபுமவனை-சக்ரவர்த்தித் திருமகனை.

னால்) தண்ணீர்போலே யிருக்கிற சக்ரவர்த்தித் திருமகனுக்கும் சினமுண்டோவென்னில்; ஆச்ரிதசத்ருக்கள் இவர்க்குச் சத்ருக்களிறே. "ததோராமோ மஹாதேஜா ராவணேந க்ருதவ்ரணம்| த்ருஷ்ட்வாப்லவகசார்த்தூலம் கோபஸ்ய வசமேயிவாந்."(116) மஹாராஜர்க்குச் சீற்றம்பிறந்தபோது வாலியை யெய்தார், அவரழுதபோதுகூட அழுதாரிறே. "த்விஷதந்நம் நபோக்தவ்யம்" (117) என்றிறேயிருப்பது.- (தென்னிலங்கைக்கோமானை) "யத்யதர்மோநபலவாந்ஸ்யா

விரோதிகளைப்போக்கி நமக்கு உபகரித்தானாயிருக்கும் க்ருஷ்ணனைப்போலன்றிக்கே, ஆச்ரிதவிரோதிகளைப்போக்குமது தன்சினம்தீர்ந்தானாக நினைத்திருக்கை. தண்ணீர்போலே யிருக்கிற சக்ரவர்த்தித் திருமகனுக்கும் சினமுண்டோவென்னில்; தன் திருமேனியிலே அம்புபட்டபோது ஆறியிருந்தான், திருவடிமேலே அம்புபட்டபோது சீறினானிறே. "ததோராமோமஹாதேஜா:" திருவடிமேலே அம்புபட்டவநந்தரம், நீரிலே நெருப்பு எழுந்தாற்போலே, பெருமாள் அநபிபவநீயரானார். "ராவணேநக்ருதவ்ரணம் த்ருஷ்ட்வா" தான்பருவம் நிரம்பாத காலத்திலே பண்ணிக்கொண்டதன்றிக்கே தரமல்லாத ராவணனாலே நோவுபடக் கண்டவாறே. "ப்லவகசார்த்தூலம்" திருவடி, தன்மேலே அம்புபடப்பட, வர்ஷங்காணப் பணைக்கும் பதார்த்தங்கள்போலே, மேனாணித்துக் கொடுத்தான். "கோபஸ்யவசமேயிவாந்" திருவடி தரமல்லாத ராவணன்கையிலே புண்பட்டவாறே; "க்ரோதமாஹாரயத்" என்றிருக்கக்கடவ தாமும் கோபம் இட்ட வழக்கானார். ஆச்ரிதகார்யமென்றும் தங்கார்யமென்றும் இரண்டன்று. மஹாராஜர் சீற்றம்பிறந்து "வாலியைக் கொல்லவேணும்" என்றபோது எய்தார்; அவனுக்கு ஸௌப்ராத்ரம் பின்னாட்டிக் கண்ணநீர்பாய்ந்தவாறேதாமுங்கூட அழுதார், (தென்னிலங்கை) பையல்செய்த அநீதியை நினைத்து "பறைச்சேரி, பறைச்சேரி" என்பாரைப்போல அத்திக்கு மஸஹ்யமானபடி. (தென்னிலங்கைக் கோமானை) "யத்யதர்மோநபலவாந்" என்றும், "அஹோவீர்யம்" என்றும் திருவடி மதித்த ஐச்வர்யமிறே. ஓரம்பாலே தலையைத்

தயம் ராக்ஷஸேச்வர:| ஸ்யாதயம்ஸுரலோகஸ்யஸசக்ரஸ்ய ரக்ஷிதா" (118) என்று திருவடி மதித்த ஐச்வர்யத்தை யுடையவனை. (செற்ற) ஓரம்பாலே தலையைத் தள்ளி விடாதே படையைக்கொன்று, தேரை அழித்து, ஆயுதங்களை முறித்து, " தான் போலும்" இத்யாதி, கோன்போலு மென் றெழுந்து கிளர்ந்துவந்த மாநத்தையழித்து, நெஞ்சாரல் படுத்திக் கொன்றபடி. (மநத்துக்கினியானை) "வேம்பேயாக வளர்த்தாள்" என்னும்படியே – பெண்களைப் படுகுலையடிக் கும் க்ருஷ்ணனைப்போலன்றிக்கே, ஏகதார வ்ரதனுயிருக்கை. பெண்களை [1]ஒடியெறிந்து துடிக்க விட்டுவைத்துபின் இரக் கமுமின்றிக்கே யிருக்கும் க்ருஷ்ணனையொழிய. " ஸஞ்ஜாத பாஷ்ப: பரவீரஹந்தா" (119) என்று-சத்ருக்களுக்கும்

தள்ளிவிடாதே, படையைக்கொன்று, புத்ரபௌத்ராதிகளைத் தலைசாய்த்து, ஆயுதங்களை முறித்து, "அரக்கர்தங்கள் கோன் போலும்" என்கிற அபிமாநத்தை யழித்து, பட்ட எளிவர வெல்லாம் அறிவிப்பாரில்லாதபடி தரம் கெடுத்து, நெஞ்சா ரல் படுத்திக் கொன்றபடி. " யோவஜ்ரபாதாசநிஸந்நிபா தாந்நசுக்ஷுபேநாபிசசாலராஜா| ஸராமபாணாபிஹதோ(ப்)ப்ருசார்த்தச் சசாலசாபஞ்சமுமோசவீர:|| மாதங்க இவஸிம் ஹேநகருடே நேவபந்நக:| அபிபூதோபவத்ராஜாராகவேண மஹாத்மநா|| கச்சாநுஜாநா மிரணார்த்திதஸ்த்வம் ப்ரவிச்ய ராத்ரிஞ்சரராஜலங்காம்| ஆச்வாஸ்யநிர்யாஹிரதீஸதந்வீ ததா பலம்த்ரக்ஷ்யஸிமேரதஸ்த:||". (மநத்துக்கினியானை) அர்த்தி கள் ஒருத்தன்பக்கல் பெறுவிட்டால் "சொல்லாய் சீமானே" என்னுமாபோலே, பெண்களை ஒடியெறிந்து துடிக்கவிட்டு வைத்து, பின் இரக்கமின்றிக்கே துடிப்புக்கண்டு; இத்தனை கண்ணநீரும்விழவிடாதே படுகுலையடிக்கும்நிம்பனான க்ருஷ் ணனைப்போலன்றிக்கே, நிபூர்ணமபிவத்ஸலனாய் சத்ருக்களுக் குங்கூடக் கண்ணநீரை விழவிடுமவனையன்றோ பாடுகிறது. "கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்" என்று-நம்மை நலி

---

[1]ஒடியெறிகை - காற்கட்டுகை, அப்பால் போகவொட் டாதே பண்ணுகை.

கண்ணநீர்பாயுமவரை யென்றுமாம். (பாடவும்நீவாய்திற வாய்) "கண்ணன்நாமமே குழறிக்கொன்றீர்" என்று நம்பிநிநவியும் க்ருஷ்ணனுடைய பேரைக் காற்கடைக் கொண்டு, "இத உபரிம்ருத ஸஞ்ஜீவனம் ராமவ்ருத்தாந்தம்" (120) என்னும்படியே க்ருஷ்ணவிரஹத்தாலே கமர்பிளந்த நெஞ்சு பதஞ்செய்யும்படியான சக்ரவர்த்தித்திருமகனைப் பாடச்செய்தேயும். (வாய்திறவாய்) நீ வாய் திறக்கிறிலை. ப்ரீதிக்குப் போக்குவிடவேண்டாவோ.

115. (இனித்தானெழுந்திராய்) எங்களாற்றாமை யறிவித்த பின்பும் உறங்கக்கடவதோ, எழுந்திராய். (ஈதென்ன பேருறக்கம்) "பகவதஸ்த்வராயைநம:" (121) என்று கொண்டு பிறரார்த்திக்கு த்வரித்து உணருமவளோடே பழகி

யும் க்ருஷ்ணனுடையபேரைக் காற்கடைக்கொண்டு, "இத உபரிம்ருதஸஞ்ஜீவநம்ராமவ்ருத்தாந்தம்" என்னும்படியே க்ருஷ்ணவிரஹத்தாலே கமர்பிளந்தநெஞ்சு பதஞ்செய்யும் படிக்காக சக்ரவர்த்தித்திருமகனைப்பாடச்செய்தேயும்போன உயிர் மீளும்படியானவனைப்பாடவாய் திறக்கின்றிலை. "வேம்பேயாக வளர்த்தாள்" என்று-பெற்றதாயையும் குற்றஞ்சொல்லும்படியிறே இவன்படி. "கௌஸல்யாலோகபர்த்தாரம்" என்று-பெற்றவளையும் கொண்டாடும்படியிறே அவன் படி. (பாடவும் நீவாய்திறவாய்) பிறர் அர்த்தத்துக்காக நீ விசேஷஜ்ஞையாவதே! எங்களுக்காகவன்றிக்கே உன்ஹர்ஷத்துக்குப் போக்குவிடவேண்டாவோ.

(இனித்தானெழுந்திராய்) எங்கள் ஆர்த்திக்கு உணராவிட்டால் உன்பேற்றுக்கு உணரவேண்டாவோ. எங்களாற்றாமையை யறிந்தபின்பும் எழுந்திராதொழிவதே! (ஈதென்ன பேருறக்கம்) வைதிகமுமன்றிக்கே லௌகிகமுமன்றிக்கே யிருப்பதொரு உறக்கமுண்டாவதே! பரார்த்தமாக உலகெல்லாம் நன்கொடுங்க உறங்குமீச்வரனுறக்கமுமன்றிக்கே, தாபார்த்தராய் தமோகுணபிஷ்டராய்க்லேசம்போகவுறங்கும் ஸம்ஸாரிகள்படியுமன்றிக்கே இரண்டிலும் வ்யாவ்ருத்தமாய், இதொரு பத்தொன்பதாம் பாஷையா யிருந்ததீ! பிறர் ஆர்த்

வைத்து இங்ஙனேயுறங்குவதே! என்கிறார்கள். ஆபந்நர்க்காக உணருமவன்படியுமன்றிக்கே காலமுணர்த்த உணரும் ஸம்ஸாரிகள்படியுமன்றிக்கே யிருப்பதே! உன்னுறக்கம். (அனைத்தில்லத்தாருமறிந்து) பெண்களெல்லாரும் வந்து உன்வாசலிலே யழைக்கிறமை ஊராக அறியவேணுமென்றிருந்தாயாகில், எல்லாருமறிந்தது, இனி எழுந்திராய்; பகவத்விஷயம் ரஹஸ்யமாக அநுபவிக்குமித்தனை, புறம்பு இதுக்கு ஆளுண்டோவென்று கிடக்கிறாயாகில் அதெங்கும் ப்ரஸித்தமாய்த் தென்றுமாம். எம்பெருமானார் திருவவதரித்தாப் போலே காணும் இப்பெண்பிள்ளையும் ... ... கஉ

116. ஸ்வாபதேசவ்யாக்யாநம். பன்னிரண்டாம் பாட்டு. (கனைத்தித்யாதி) இப்பாட்டில், பாகவதாபிமாந நிஷ்டரை யெழுப்புகிறார்கள். வ்யா.—(கனைத்து) ஸ்வாசார்யன், தனக்கும் ஸ்வஸந்தாநத்துக்கும் பகவத்குணாநுபவம் பண்ணுவிக்க வில்லையென்று வ்யஸநப்பட்டு: (இளங்கற்றெருமை) பாலஸந்தாநமுடைய சிஷ்யர். (கன்றுக்கிரங்கி) ஸ்வஸந்தாநத்திலே தயைபண்ணி. (நினைத்து) ஸ்வாசார்யன்றன்னையதிஷ்டித்துக்கொண்டு ஸ்வஸந்தாநத்துக்கு பகவத்குணாநுபவம் பண்ணுவித்தருளுகிறானென்றுநினைத்து. (முலைவழியே நின்று பால்சோர) பாவநாப்ரகர்ஷத்தாலே ஸ்வாசார்யாபி

திக்கு த்வரித்து உணருமவனோடே பழகிவைத்தும் இங்ஙனேயுறங்குவதே! (அனைத்தில்லத்தாரும்) பரஸம்ருத்யைகப்ரயோஜநையாகையாலே பாலைகளா யிருப்பாருமுணர்ந்துவரவேணும்என்றிருக்கிறாயாகில், அதெல்லாஞ்செய்தற்றது, நாங்கள் உன்வாசலிலே வந்தெழுப்பவும் நீசிறிதுபோது உணராதொழியவும், இத்தால் வந்த மதிப்பு எல்லாருமறியவேணுமென்றிருந்தாயாகில் அதெல்லாருமறிந்தது. (இனித்தானெழுந்திராய்) பகவத்விஷயம் ரஹஸ்யமாக அநுபவிக்குமித்தனை, புறம்பிதுக் காளுண்டோவென்று கிடக்கிறாயாகில் பெண்களையும் க்ருஷ்ணனையும் சேரவொட்டாத ஊரடைய ப்ரஸித்தமாய்த் தென்றுமாம். எம்பெருமானவதரித்தாற் போலே காணும் இப்பெண்பிள்ளையும் .... கஉ

மாகமடியாக பகவத்குணங்கள் சுரக்க. (நனைத்தில்லம் சேறாக்கும்) ச்ரோதாக்களுடைய ஹ்ருதயத்தை ஸாம்ஸாரிக தாபமெல்லா மாறும்படி குளிரப்பண்ணி, குணாநுபவத்தாலே களிக்கும்படி பண்ணுகிற. (நற்செல்வன்) ச்லாக்யமான ஸம்பத்தையுடைய பாகவதனுடைய (தங்காய்) ஸோதரியானவளே.

117. (பனித்தலைவீழ) பனியானது தலைமேலேசொரிய. அதாவது-மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகளாலே வரும் பகவத்குணாநுபவம். (நின்வாசல் கடைபற்றி) கீழ் ஆசார்யோபதேசமடியாகவரும்பகவத் குணாநுபவப்ரவாஹமென்ன; மேலே மயர்வற மதிநலமருளப் பெற்ற வாழ்வார்களுடைய அருளிச்செயல்களால் வரும் குணாநுபவ ப்ரவாஹமென்ன, நடுவே பாகவதகுணாநுபவ ப்ரவாஹமென்ன, இப்படிப்ரவாஹத்ரயத்திலே அகப்பட்டு அலைகிற நாம், உனக்கு ப்ரதிபாதகமான நமஸ்ஸிலே த்வாரவர்த்தியானநகாரமாகிற அவலம்பத்தைப்பற்றி. கீழ்ச் சொன்ன குணாநுபவங்களில் போக்த்ருத்வபுத்தி வாராதபடி தடுக்கிற நகாரத்தைப்பற்றியென்றபடி. (சினத்தினால் தென்னிலங்கைக்கோமானைச் செற்றமநத்துக் கினியானை) கோபத்தினாலே, யமவச்யதா மூலமான ஸம்ஸாரத்துக்கு நிர்வாஹகமான அஹங்காரத்தை நசிப்பித்து, அதனாலே மநத்துக் கினியனானசக்ரவர்த்தித்திருமகனை. (பாடவும் நீவாய்திறவாய் இனித்தானெழுந்திராய்) எங்களாற்றாமைகாண வேணுமென்றிருந்தாயாகில் கண்டபின்பும் உறங்குமித்தனையோ, எழுந்திராய். (ஈதென்ன பேருறக்கம்) காலமுணர்த்த வுணரும் ஸம்ஸாரிகள் நித்ரைபோலு மன்றிக்கே, ஆச்ரிதர்களார்த்தி யுணர்த்த வுணரும் ஈச்வரனுடையஉறக்கமும்போலன்றிக்கே, உபயவிலக்ஷணமான இம்மஹாநித்ரை யேது. ஸம்ஸாரிகள் நித்ரை, தமோபிபூதியாலுண்டானதாகையாலே ஸத்த்வோத்தரமானகாலத்திலே தீரும்படியாயிருக்கும்; ஈச்வரனுடைய நித்ரை, ஜகத்ரக்ஷண சிந்தாரூபமாகையாலே பரரார்த்திகாணத்தீரும்; இவளுடைய நித்ரை, சரமபர்வ நிஷ்டருடைய ஆற்றாமை காணத் தீரும்; ஆகையாலே

அதுக்கதிகாரிகள் கிடையாமையாலே பேருறக்கமாயிருக்கும்- (அனைத்தில்லத்தாரு மறிந்து) நாங்கள்உன்னையெழுப்புகிறது எல்லாருமறியவேணுமென்றிருந்தாயாகில் அதெல்லாருமறிந்தார்கள்; எழுந்திராயென்கிறார்கள். பகவத்விஷயம் ரஹஸ்ய மென்றிருந்தா யாகில் அதுஎங்கும் ப்ரஸித்தமாய்த்து, எழுந்திரா யென்கிறார்கள்.

118. கீழ்ப்பாட்டில் "கற்றுக்கறவைக் கணங்கள் பல கறந்து" என்று ஸ்வவர்ணோசித தர்மாநுஷ்டாநத்தைச் சொல்லி, இப்பாட்டில் சொல்லாமையாலே அநுஜ்ஞா கைங்கர்ய நிஷ்டனுக்கு ஆஜ்ஞாகைங்கர்யஹாநி ஸ்வரூப விரோதமன்றென்கிறது. இவன் எருமை கறவாமைக்கு இளைய பெருமாளை த்ருஷ்டாந்தமாக வருளிச்செய்து, உபாயாந்தர த்யாகத்துக்கு ப்ரமாணமாக "நதேவலோகாக்ரமணம்" என்கிற ச்லோகத்தை உதாஹரித்தது ஐச்வர்யகைவல்யபகவல்லாபங்களிலபேக்ஷை யில்லாதவர்க்கு தத்ஸாதநாநுஷ்டாநத்திலபேக்ஷை பிறவாதிறே யென்னு மபிப்ராயத்தாலே. கஉ

பதின்மூன்றும் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி :—119. பதின்மூன்றும்பாட்டு.—நம்கண் உண்டாகில் தானே வருகிறானென்று கிடக்கிற ளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

ஆறுயிரப்படி :— பதின்மூன்றும் பாட்டு. (புள்ளின்) தன் கண்ணழகை நினைத்து, இக்கண்ணழகுடைய நானிருந்தவிடத்தே எல்லாரும் வருமத்தனையன்றோ, நானோபோவேனென்பாளொருத்தியை யெழுப்புகிறார்கள். "மநத்துக்கினியானைப்பாடவும்" என்று-இவர்கள் சொன்ன பாசுரத்தை அசல் மாளிகையிலே கேட்டுக் கிடப்பாளொருபெண்பிள்ளை, நம்மபராதந்திர ' இவர்களுக்கு வார்த்தை சொல்லுவோமென்று, "பெண்காள், இங்கு ராமவ்ருத்தாந்தம் சொன்ன

பி. 119—நம்கண்உண்டாகில்-நம் கண்ணழகு உண்டாகில் (போதரிக்கண்ணியின் கண்ணழகு.)

புள்ளின்வாய்கீண்டானைப்பொல்லாவரக்கனைக்
கிள்ளிக்களைந்தானைக்கீர்த்திமைபாடிப்போய்ப்
பிள்ளைகளெல்லாரும்பாவைக்களம்புக்கார்
வெள்ளியெழுந்துவியாழமுறங்கிற்றுப்
புள்ளுஞ்சிலம்பினகாண்போதரிக்கண்ணினாய்
குள்ளக்குளிரக்குடைந்துநீராடாதே
பள்ளிக்கிடத்தியோபாவாய்நீநன்னாளால்
கள்ளந்தவிர்ந்துகலந்தேலோரெம்பாவாய். (௧௩)

பதவுரை:—நம் கண்ணழகுகண்டால்தானே வருகிறாளென்று கிடக்கிறாளொருத்தியை யெழுப்பக்கோலி, புள்ளின் - பகாஸுரனுடைய, வாய்-வாயை, கீண்டானை இருபிளவாகக் கிழித்துப் போகட்டவனாய், பொல்லா-பிராட்டியைச் சிறையிலிட்ட கொடியனான, அரக்கனை-ராவணனுடைய பத்துத்தலைகளையும், கிள்ளி-த்ருணம்போலே கிள்ளியெறிந்து போகட்டு, களைந்தானை—பொல்லாத ராக்ஷஸரைப் பக்கவேரோடே போக்கின சக்ரவர்த்தித் திருமகனுடைய, கீர்த்திமை-வீரசரிதத்தை, பிள்ளைகளெல்லாரும்-எல்லாப்பெண்களும், பாடி-ப்ரீதிக்குப் போக்குவிட்டுப பாடிக் கொண்டு, போய்-அதுவே பாதேயமாகச்சென்று, பாவைக்களம் க்ருஷ்ணனும் தாங்களும் கூடுகைக்குக் குறித்தவிடத்தில், புக்கார்-புகுந்தார்கள் எழுந்திராயென்ன; அவர்கள் போகைக்குப் போது விடிந்ததோ வென்ன; வெள்ளி - சுக்ரன், எழுந்து - உச்சிப் பட்டு, வியாழம்-ப்ரஹஸ்பதியும். உறங்கிற்று—அஸ்தமித்தது; அன்றியும், புள்ளும்—பக்ஷிகளும், இரைதேடுகைக்காக,சிலம்பின-கூவிச் செல்லாநின்றன, போது-தாமரை மலரிலே, அரி-வண்டுகள் படிந்தாற்போலிருக்கிற, கண்ணினாய்-கண்களையுடையளாய், பாவாய்-மென்மைத் தன்மையளான, நீ—,நன்னாள்-க்ருஷ்ணனும் நாமும் ஜலக்ரீடைபண்ணி அவன்மடியிலேசாயலாங்காலமான இந்த நல்ல நாளிலே, குள்ளக்குளிர-வவ்வலிடும்படி, குடைந்து-அவகாஹித்து, நீராடாதே-நீராடாமல், பள்ளிக்கிடத்தியோ-க்ருஷ்ணஸ்பர்சமுள்ளதொரு படுக்கையை மோந்துகொண்டு கிடக்கிறாயோ; கள்ளம்

றுண்டோ" என்ன; ராமவ்ருத்தாந்தமுஞ் சொன்னோம்; க்ருஷ்ணவ்ருத்தாந்தமுஞ் சொன்னோம்; ஸ்ரீராமாயணமும், பாரதமும், ஸ்ரீபாஞ்சராத்ரமுமகப்படச்சொன்னோமென்கிறார்கள்.

தவிர்ந்து-க்ருஷ்ண குணசேஷ்டிதங்களைத் தனியே நினைத்துக் கிடக்கையாகிற கபடத்தைவிட்டு, கலந்து-எங்களோடே கலந்து அநுபவிக்கப் பாரா யென்கிறார்கள்.

120. வ்யா.— (புள்ளின்வாய் கீண்டானை) "பள்ளத்தில் மேயும்" இத்யாதி. பகாஸுரனைப் பிளந்தபடி. (பொல்லா அரக்கனை) தாயையும் தமப்பனையும், உடலையும் உயிரையும் பிரித்தாற்போலே பிரித்த நிர்க்ருணன். "சுரிகுழல் கனிவாய்" இத்யாதி; "முன்பொலா இராவணன்" என்னுமித்தனை போக்கி அவன் தண்ணிமைக்கு ஒரு பாசுரமில்லையிறே. அத்தாலேயிறே பிராட்டியும் "த்வந்நீசசசவத்ஸ்ம்ருத:"(122)என்றது. "விபீஷணஸ்துதர்மாத்மா"(123)என்று-நல்ல அரக்கனும்

வ்யா.—(புள்ளின்வாய் கீண்டானை) "பள்ளத்தில் மேயும் பறவையுருக்கொண்டு கள்ளவசுரன்," "கள்ளச்சகடம்" என்னுமாபோலே, மேய்கிற கொக்கிலே அஸுரன் ஆவேசித்து நலியப்புகுந்தான். "பொதுக்கோ"என்று-கீண்டபடக்கைச் சொல்லுகிறது. (புள்ளின்வாய்கீண்டானை) இது இவர்களுக்கு ராவணவதம் பண்ணினபடி. இத்தலைக்கு அநுமதியிறே வேண்டுவது, விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கை அவன் பணியிறே. இவனுடைய அநுமதியும் அவனுடைய ரக்ஷகத்துவமும் ஸ்வரூபத்திலே புகுமத்தனை. கர்மஜ்ஞாநங்களை ஸஹகாரியாகக்கொண்டு பக்திஉபாயமென்றிருக்குமவர்களன்றே; தன்னுடைய அஜ்ஞாநாசக்திகளையும் அவனுடைய ஜ்ஞாநசக்த்யாதிகளையும் ஸஹகாரியாகக் கொண்டு அவனே உபாயமென்றிருக்குமவர்களிறே. கீழிற்பாட்டிலும் இப்பாட்டிலும் ராமவ்ருத்தாந்தத்தைச் சொன்னால் "ஒருக்கால் சொன்னதேயே சொல்லாநின்றார்களே யென்று நினைக்கக்கூடும்" என்று, தங்கள் பாழியான க்ருஷ்

பி. 120-புள்ளின்வாய்கீண்டது - பகாசுரவதம், பொல்லா அரக்கன்—ராவணன் (நல்ல அரக்கன் விபீஷணாழ்வான்) நெஞ்சு உளுக்கும்படி-மனதில் சைதில்யம் பிறக்கும்படி. கழகமேறும் சங்கேதஸ்தலம்-மழைக்காக இந்த்ராணியையும், கலவிக்காக ரதியையும் நோற்பதற்குப் பெண்கள்கூடும் பாவைக்களம்.

உண்டென்கை. (கிள்ளிக்களைந்தானை) திருவிளையாடுசூழலிலே நோய்புக்கவிடங்களைக் கிள்ளிப்போகடுமாபோலே தோஷாம்சத்தை வாங்கிப் போகட்டபடி. (கீர்த்திமை) "சத்ரோ:ப்ரக்யாதவீர்யஸ்ய" (124) என்று-எதிரிகளுக்கும் நெஞ்சுளுக்கும்படியான வீர சரிதத்தை "ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" (124) என்று - உகவாதார்க்கும் விடவொண்ணாத வீரம், உகந்த பெண்களுக்குச் சொல்ல வேணுமோ. ராவணன் பெருமாள் வீரத்துக்கிலக்கானான்; தங்கை அழகிலே கண் கலங்கினாள், தம்பி சீலத்துக் கிலக்கானான். (பாடிப்போய்) இவர்களுக்கு

ணவ்ருத்தாந்தத்தையும் கூட்டிச்சொல்லுகிறார்கள். தங்களுக்குப் பள்ளமடையான க்ருஷ்ணவ்ருத்தாந்தம் சொல்லிற்றாகில், பின்னை ராமவ்ருத்தாந்த மென்னென்னில்; தங்களோடொருகோவையான பிராட்டி பிரிவு பொறுக்கமாட்டாதவருடைய வ்ருத்தாந்தமென்று சொல்லுகிறார்கள். (பொல்லாவரக்கனை) உயிரையு முடலையும் பிரித்தாற்போலே, தாரையும் தமப்பனையுமோரிடத்தில்சேர விருக்கவொட்டாதே பிரித்த நைர்க்ருண்யத்தாலே வந்த தன்மையைநினைத்து "பொல்லா" என்கிறது. "முன்பொலாவிராவணன்" என்னுமத்தனை போகஷ், அவன தண்மைகருப பாசுரமில்லையிறே.திருவினைப பிரித்த கொடுமையிறே. "துர்வ்ருத்த:" என்னுமித்தனையிறே. இத்தண்மையை, பிராட்டியும், "த்வந்நீச" என்றாளிறே. (பொல்லாவரக்கனை) "விபீஷணஸ்துதர்மாத்மா" என்று-நல்லவரக்கனு மொருத்தனுண்டிறே. (பொல்லாவரக்கனை) "ஜகத்ஸசைலம் பரிவர்த்தயாம்யஹம்" என்று நிலைமாறி, தண்ணியபையல்க ளளவிலே பர்யவஸித்தபடி. (அரக்கனை) மாயாம்ருகத்தைக் காட்டுவார், மாயாசிரஸ்ஸைக் காட்டுகைக்கு ஸஹகரிப்பார், க்ரித்ரிமத்தாலே பிரித்தவிடம் அழகியதாய்ச் செய்ததென்பாராய், ராவணனில் தண்ணியாரில்லையிறே இஜ்ஜாதிக்குள். (கிள்ளிக்களைந்தானை) வீரபத்நியாகையாலே "கல்லெடுத்து" என்னுமாபோலே, "கிள்ளி" என்கிறார்கள். திருவிளையாடு சூழலில் நோவுபட்டவிடங்களைக் கிள்ளிப் போகடுமாபோலே, தோஷாம்சத்தை வாங்கிப் போகட்டபடி. (கீர்த்திமைபாடி) "சத்ரோ:ப்ரக்யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீ

பாதேய மிருக்கிறபடி. "பாதேயம் புண்டரீகாக்ஷநாமஸங்கீர்த்தநாம்ருதம்" (38) என்று-வழிக்கு தாரகம் திருநாமமிறே. "தன்தாள்பாடி" என்னக்கடவதிறே. (பிள்ளைகளித்யாதி) நாம் சென்றெழுப்பவேண்டும் பாலைகளும் உனக்குமுன்னே யுணர்ந்து புறப்பட்டார்கள். (பாவைக்களம்புக்கார்) க்ருஷ்ணனும் தாங்களும் கழகமிடும் ஸங்கேதஸ்தலம்புக்கார்கள்.

121. அவர்கள் போகைக்குப் போதுவிடிந்ததோவென்ன; (வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று) வெள்ளி

யஸ்ய விக்ரமை:" என்று-எதிரிகளும்மேலெழுத்திடும்படியான வீர்யமிறே. உகவாதார்க்கும் விடவொண்ணாத வீரம், உகந்த பெண்களுக்குச் சொல்லவேணுமோ. எதிரம்புகோத்த ஸம்ஸாரிகள் "நமோநாராயணாய" என்று-தங்களுடைய தோல்விக்கும் அவனுடைய ரக்ஷகத்வத்துக்கும் மேலெழுத்திட்டுக் கொடுத்தாற்போலே. ராவணன் பெருமாள் வீரத்துக் கிலக்கானான், தங்கை அழகிலே கலங்கினாள், தம்பி சீலத்துக்கிலக்கானான்; விரஹதுர்ப்பலைகளானவர்கள் போனபடி யென்னென்னில் (பாடிப்போய்) பாட்டேதாரகமாகப் போனார்கள். கால்நடைதருகைக்கு தாரகம் திருநாமமிறே "பாதேயம்புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்" ஸாக்ஷாத்பாதேயம் திருநாமஸங்கீர்த்தநம். "தன்தாள்பாடி" என்னக்கடவதிறே. (பாடிப்போய்) "பகவதோபலேந" என்கிறபடியே. (பிள்ளைகளெல்லாரும்) நாம் சென்று எழுப்பிக்கொண்டு போகவேண்டும்படி பாலைகளான பெண்களெல்லாருமுணர்ந்து புறப்பட்டு, க்ருஷ்ணன், பெண்களை மெய்க்காட்டுக்கொள்ளும் ஸங்கேதஸ்தலத்தேறப்போனார்கள். "பாவைக்களம்" என்று-இந்த்ராணியை, ரதியை நோற்கைக்கு பெண்கள் திரளுமிடம். திரளுமிடத்தை, "நெற்களம், போர்க்களம்" என்னுமாபோலே.

பாலைகளாகையாலே அவர்கள் காலமறியாமே போகக் கூடும், அறிந்தநாம் அகாலத்திலே போகவொண்ணாதிறே, சுக்ரன் உதித்தானாகில் பாருங்கோளென்ன; வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று) சுக்ரபகவானும் மத்யகதனா

உச்சிப்பட்டது, வியாழம் அஸ்தமித்தது. உங்களுக்கு நக்ஷத்ர மெல்லாம் வெள்ளியும் வியாழமுமாயிறே இருப்பதென்ன; அதுவேயன்று (புள்ளும்சிலம்பினகாண்) புள்ளுக்களுணர்ந்த மாத்ரமேயன்றிக்கே இரைதேடிச் சிலம்பிப்போயிற்றின.

122. (போதரிக் கண்ணினாய்) புஷ்பம்போலேயும் மான் போலேயுமிருந்துள்ள கண். அரியென்று-மான். அன்றிக்கே, பூவிலே வண்டு இருந்தாற்போலே யென்றுமாம். "அரி" என்று-வண்டு; அன்றியே, போதை ஹரிக்கிற கண்ணென்று மாம். பூவோடே சீறுபாறென்னும் கண் என்னவுமாம். (குள்ளக்குளிர) ஆதித்யனுதித்து நீர்கொதிப்பதற்கு முன்னே.

னன், ப்ருஹஸ்பதியும் அஸ்தமித்தான். நீங்களு மபிநிவிஷ்டைகளாகையாலே நக்ஷத்ரஸாத்ருச்யத்தைக்கொண்டு, நக்ஷத்ர மெல்லாம் சுக்ரப்ருஹஸ்பதிகளாயிறே தோற்றுவது. "நின்ற குன்றத்தினைநோக்கி நெடுமால்" என்னு மவர்களன்றோ, ஆகையால் அது விடிவுக்குடலன்று, வேறடையாள முண்டாகில் சொல்லுங்கோளென்ன; நாங்க ளித்தனைபேர் திரண்டு வந்த தடையாளமன்றோ வென்கிறார்கள்; பிரிந்தார், திரளி லன்றோதிரட்சியாவது, "ஈட்டங்கண்டிடக் கூடுமேல்" என்றும், "ஒருகாலும் பிரிகிலேன்" என்றும் திரியுமவர்களன்றோ நீங்கள், உங்கள் திரட்சி விடிவுக்குடலன்று, வேறுண்டாகில் சொல்லுங்கோளென்ன (புள்ளுஞ் சிலம்பினகாண்) கீழே யும் "புள்ளுஞ்சிலம்பின" என்றது; அங்கு-"கூட்டில் நின் றும் சிலம்பினபடி சொல்லிற்று; இங்கு-கூட வழியே போமிடமெல்லாம் போய் ஆஹாரார்த்தமாகச் சிதறினபடி சொல்லுகிறது.

திர்யக்குக்களினுடைய வ்ருத்தாந்தங்கொண்டோ காலநியதிபண்ணுவதென்று அவள்பேசாதேகிடந்தாள்; நாங்கள் சொன்னவார்த்தைகளுக்கெல்லாம் விபரீதஞ்சொல்லுகிறது உன்கண்ணழகை நினைத்திறே (போதரிக்கண்ணினாய்) உபாஸ்யமிருந்தவிடத்திலே உபாஸகன் வருமித்தனையன்றோ. "அவிதேக்ஷணை" புண்டரீகாக்ஷனிருந்தவிடத்தில்போகக்கடவளோ என்கிறார்கள். "நெடுங்கணிளமான்," "அனைத்துலகுமுடைய

(குடைந்து நீராடாதே) "ஸரயூமவகாஹதே" (40) என்னும் படியே க்ருஷ்ணவிரஹமாற நீராடப் போகாதே.. நமக்குச் செல்லுகிற க்ருஷ்ணவிரஹ தாபம் சமிக்கைக்கும் இனி யொருக்கால் க்ருஷ்ணவிச்லேஷம் பிறவாமைக்காகவும், க்ருஷ்ணகுணங்களிலே அவகாஹித்து அநுபவிக்கப்பெறுதே. (போதரிக் கண்ணினாய்) உன் கண்ணாலே க்ருஷ்ணனைத் தோற்பித்து, அவன் கண்ணாலே குமிழிநீருண்ணப் பாராதே. நெடுங்கணிளமான் இவள்; அனைத்துலகு முடைய அரவிந்த லோசநன் அவன். இருவர் கண்ணுக்கும் இலக்கானவர் களிறே இவர்கள். உன்னுடைய ஸௌந்தர்யம் எங்கள் பேற் றுக்கு உடலென்றிருந்தோம், அங்ஙனன்றிக்கே இழவுக்கு உடலாகா நின்றதோ! (பள்ளிக்கிடத்தியோ) க்ருஷ்ணஸ்பர்ச

வரவிந்தலோசநன்" என்று-அவனுடைய விபூதியுமிவள்கண் ணில் பரப்பிலே ஒருமூலைக்கும போராதென்றதிறே. (போது அரிக்கண்ணி) பூவும் மானும் போன்ற கண்; பூவில் படிந்த வண்டு போன்ற கண்ணென்னவுமாம்; பூவோடே சீறுபாறு என்ற கண்ணென்னவுமாய்; உலாவுகின்ற மான்போலே யிருக்கிற கண்ணென்னவுமாய். "அரி"என்று-மானென்னவு மாம்; வண்டென்னவுமாம்; சத்ருவென்னவுமாம். (குள் ளக் குளிர) ஆதித்ய கிரணம்பட்டு கொதிப்பதுக்கு முன்னே ஆழமுழுகினாலும் விரஹதாபம் அங்கும் புகுந்து சுடுமென்னு மிடமறியார்களே. (குடைந்து நீராடாதே) " ஸரயூமவகாஹதே " என்னுமாபோலே, க்ருஷ்ணவிரஹதாபமாற நீராடப்போராதே. நமக்குச் செல்லுகிற க்ருஷ்ணவிரஹதாபம் சமிக்கைக்கும் இனி யொருக்காலும் க்ருஷ்ணவிச்லேஷம் பிறவாமைக்காகவும், க்ருஷ்ணகுணங்களை அவகாஹித்து அநுபவிக்கப் போராதே. உன்கண்ணாலே க்ருஷ்ணனைத் தோற்பித்து அவன் கண்ணாலே குமிழிநீருண்ணப் போராதே. இருவர்கண்ணுக்கு மிலக்கான வர்களிறே நாங்கள். உன்னுடைய ஸௌந்தர்யம் எங்கள் பேற்றுக்குடல் என்றிருந்தோம், அங்ஙனன்றே. (பள்ளிக் கிடத்தியோ) நாழுமவனுமாய் அவன்முழுக்கூட்ட அவ னோடே ஜலக்ரீடைபண்ணி அவன் மடியிலே சாயக்கடவ

மூடையதொரு படுக்கையை மோந்து கொடு கிடக்கிருயோ. விளைந்து கிடக்க உதிர்நெல்பெறுக்குகிருயோ.

123. (பாவாய்நீ) தனிக்கிடைகிடக்கவல்லளல்லையே நீ. (நன்னாளால்) க்ருஷ்ணன்கிடாய் பெண்கள் கிடாய் என்கிற நாட்டாரும் இசைந்து அவனும் நாமுமாய் ஜலக்ரீடை பண்ணி அவன்மடியிலேசாயலாம் காலத்தை பெற்றுவைத்து, படுக்கையை மோந்துகொடு கிடப்பதே! (நன்னாளால்) மேல் வருகிறநாள் ராவணுதிகளைப்போலே பிரிக்கிறநாளிறே. (கள்ளம் தவிர்ந்து) கள்ளமாவது-தனியே க்ருஷ்ணகுண சேஷ்டிதங்களை நினைத்துக்கிடக்கை. அத்தைத் தவிர்ந்துஎங்களோடே கலந்து. எங்களுக்கு உன்னைக்காட்டாதே மறைக்கையாகிற

அத்தைவிட்டு, அவனொருக்கால் கிடந்த படுக்கையென்று அத்தை மோந்துகொண்டு கிடக்கிருயோ. "தவாங்கேஷுபாவிசம்" பார்த்த பார்த்த விடமெங்கும் விளைந்துகிடவாநிற்க உஞ்சவ்ருத்திபண்ணி ஜீவிப்பாரைப்போலே.

(பாவாய்நீ) க்ருஷ்ணனுடைய கண்ணுக் கிலக்காம்படியான நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடைய நீ தனிக்கிடைகிடக்கவல்லையோ. (நன்னாளால்) "காலம்பரிணமி" என்று மிடமறிகிலையோ. அநந்தரம் "வயோஸ்யா ஹ்யதிவர்த்ததே" என்று சோகிக்கும்படி யன்றே இருப்பது. காலக்ருத பரிணமமில்லாத தேசத்திலுள்ளவர்களு மாறியிராநின்றார்களோ. அன்றிக்கே, (நன்னாளால்) இனிச் சற்றுப்போது கழிந்தால் எங்களைத்தான் உன்வாசலிலே நிற்கவொட்டுவர்களோ. "க்ருஷ்ணன்கிடாய், பெண்கள்கிடாய்" என்கிற நாட்டாரிசைந்து, க்ருஷ்ணன் முகத்திலே விழிக்கப் புகுகிற நாளன்றே, ஆறியிருக்கிறதென். (கள்ளம்தவிர்ந்து) கள்ளமாவது-தனியே க்ருஷ்ணகுணசேஷ்டிதங்களை நினைத்துக் கிடக்கை; அத்தைத் தவிர்ந்து, எங்களோடேகலந்து.(கள்ளம் தவிர்ந்து) அவனோடே கலந்து வுடம்புகாண உகக்குமவர்களன்றே நாங்கள், எங்களுக்கு மறைக்கிறதென், அந்த ஆத்மாபஹாரத்தைத் தவிர்ந்து எங்களோடே கலக்கப்பாராய் "சோரேணாத்மாபஹாரிணா" என்று - சேஷத்வத்தை அப

"ஆத்மாபஹாரத்தைத்" (125) தவிர்ந்து எங்களோடே கலவென்றுமாம். சேஷத்வத்தை அபஹரித்தால் சேஷியைக்ஷமை கொள்ளலாம்; சேஷித்வத்தை யபஹரித்தால் பொறுத்தோமென்பாரில்லை; குற்றம் நின்றே போமித்தனை. கலந்து-குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ என்றந்வயம். ௧௩

124. ஸ்வாபதேசவ்யாக்யாநம்.பதின்மூன்றும்பாட்டு. (புள்ளித்யாதி) இப்பாட்டில் - நமக்கு ஸ்வரூபஜ்ஞாநமுண்டாகில் அவன்தானே வருகிறனென்று நிர்ப்பரராயிருக்குமவரை யெழுப்புகிறார்கள். வ்யா.—(புள்ளின்வாய் கீண்டானை)ஸ்வாச்ரிதருக்குஸ்வாநுபவ விரோதியானகாமாதிதோஷ நிவர்த்தகனாய். (பொல்லாவரக்கனைக் கிள்ளிக்களைந்தானை) பொல்லாத அப்ராப்தவிஷயபூதமான அஹங்காரத்தை. அஹங்காரத்துக்கு நன்மைதீமைகளாவன;- "அஹம், மம" என்றால், ஈச்வரனும் ஈச்வரவிபூதியும் ஸ்வாமிமாந விஷயமாகத்தோன்றுகை - அஹங்காரத்துக்கு நன்மையாவது; தேஹமும் ஆத்மாவும் ஸ்வதந்த்ரமாகத் தோன்றுகை-தீமையாவது. அநுகூலமான அஹங்காரத்துக்கு அழல்தட்டாதபடி நிரஸித்தவனுடைய. (கீர்த்திமை பாடிப்போய்) கல்யாணகுணங்களை ப்ரீதிக்குப்போக்கு விடாகப்பாடி, அதுவே தாரகமாகப் போய். (பிள்ளைகளெல்லாரும்) நாம் சென்றெழுப்ப வேண்டிய அபிநவபாகவதரும். (பாவைக்களம் புக்கார்) அநந்யார்ஹரான ஸ்ரீவைஷ்ணவர்கள் நிரூபகமான

ஹரித்தால் சேஷியை க்ஷமைகொள்ள, இக்குற்றம் அவன் பொறுக்கத்தீரும்; சேஷித்வத்தை அபஹரித்தால் சேஷியுடைய குற்றம் பொறுத்தோமென்பாரில்லை. குற்றம் நின்றநுபவித்தே போமித்தனை; ஆனபின்பு, எங்களுடைய குற்றம்போலன்றுகாண் அவனோடே கலந்த உடம்பைக் காட்டாத உன்னுடைய குற்றம்.

கள்ளந்தவிர்ந்து கலந்து - குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே-பாவாய்நீ நன்னாளால் - பள்ளிக்கிடத்தியோ என்றந்வயம். ௧௩

ஸங்கேத ஸ்தலத்தை ப்ரவேசித்தார்கள். அதாவது-காலக்ஷேப கூடம். (வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று) பரிசுத்தமான ஜ்ஞானம் அபிவ்ருத்தமாய், அஜ்ஞானம் தலைமடிந்தது. (புள்ளுஞ் சிலம்பினகாண்) மற்றுமுள்ள பாகவதரும் த்வரித்துக் கொண்டு போந்தார்கள். (போதரிக் கண்ணினாய்) ஸ்வச்சமாய் ச்லாக்யமாய் ஸாரக்ராஹியான ஜ்ஞானத்தையுடையவரே. (குள்ளக்குளிர) அவனைப்பிரிந்திருந்த வ்யஸநமெல்லாம் நிச்சேஷமாய்ப் போம்படி. (குடைந்து) காலக்ஷேபகூடத்திலே ப்ரவேசித்து. (நீராடாதே) பகவதநுபவத்தைப்பண்ணாதே. (பள்ளிக் கிடத்தியோ) தனித்துக் குணாநுபவம் பண்ணுகிறாயோ. (பாவாய்நீ) தனித்து குணாநுபவம் பண்ணவல்லையோ. (நன்னாளால்) ஸத்வோத்தரமான காலம் நேர்பட்டபடியென்தான்! (கள்ளம்தவிர்ந்து) உன்னை யெங்களுக்குக் காட்டாமலிருக்கிற களவைவிட்டு. (கலந்து) எங்களோடே ஒருநீராகக்கலந்து, எங்கள்ஸத்தையை யுண்டாக்காய். க௫

பதினான்காம் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி :-125. பதினாலாம்பாட்டு. இவையெல்லாவற்றுக்கும் தானே கடவளாய், எல்லாரையுந் தானே யெழுப்பக்கடவதாகச் சொல்லிவைத்து, அதுசெய்யாதே உறங்கிறாளொருத்தியையெழுப்புகிறார்கள்.

உங்கள்புழைக்கடைத்தோட்டத்துவாவியுள்
செங்கழுநீர்வாய்நெகிழ்ந்தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற்பொடிக்கூறைவெண்பற்றவத்தவர்
தங்கள் திருக்கோயில்சங்கிடுவான்போகின்றார்

ஆறாயிரப்படி :—பதினாலாம்பாட்டு. (உங்கள்) இத்திரளுக்கெல்லாம் நிர்வாஹகையாய் எல்லார்க்கும் முன்னே யுணர்ந்து எல்லாரையுமெழுப்பக்கடவேனென்று சொல்லி வைத்து, அத்தைமறந்து சுருக்கமொழிய உணர்ந்து கிடக்கிறாளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

எங்களைமுன்னமெழுப்புவான்வாய்பேசும்
நங்காயெழுந்திராய்நாணாதாய்நாவுடையாய்
சங்கொடுசக்கரமேந்துந்தடக்கையன்
பங்கயக்கண்ணனைப்பாடேலோரெம்பாவாய்.

பதவுரை:—(நீராடுகைக்கு எல்லாரையும் தானே எழுப்புவதாகச் சொல்லிவைத்து உறங்குகிறாளொருத்தியை, நோக்கித் துயிலுணர்ந்துவந்தவர்கள்) உங்கள் - உங்களுடைய, புழைக்கடைத் தோட்டத்து - புழைக்கடைத்தோட்டத்திலிருக்கிற, வாவியுள் - தடாகத்திலுள்ள, செங்கழுநீர் - செங்கழுநீர் மலர்களானவை, வாய்நெகிழ்ந்து - விகஸித்து, ஆம்பல் - கருநெய்தல் மலர்களானவை, வாய்கூம்பின - முகுளிதமாய்த்து, எழுந்திராயென்ன; அவை உங்களால் அலர்வதும் மொட்டிப்பதுமாக வாய்த்து, வேறடையாள முண்டாகில் சொல்லுங்கோளென்ன; செங்கல் பொடி - காவிப்பொடியில் தோய்த்த, கூறை-வஸ்த்ரங்களையும், வெண்பல் - வெளுத்தபற்களையுமுடையராய், தவத்தவர் - தபோவேஷதாரிகளான ஸந்ந்யாஸிகளானவர்கள், தங்கள் - தங்களுடைய, திருக்கோயில் - திருக்கோயிலில், சங்கிடுவான் - திருவாராதநம் செய்கைக்காக, போகின்றார் - போகிறார்களென்ன; அவர்கள் அநுஷ்டாநம் விடிவுக்கு உடலன்று என்ன; எங்களை - நீராட விருக்கிறவெங்களை, முன்னம்-முன்னமேவந்து, எழுப்புவான்-எழுப்புவதாக, வாய்பேசும்-வாயாற்சொல்லிச் செய்யாதொழிந்த, நங்காய்-பூர்ணையானவளே, நாணாதாய் - சொன்னதைச் செய்யாதொழிந்தோம் என்னும் லஜ்ஜையில்லாதவளே, எழுந்திராய் - எங்கள்குறை தீர்க்கவெழுந்திருக்க வேணும் என்ன; என்னைப் பழித்துக்கொண்டாகிலும் இங்கு வருகிறதென்னென்ன; நாவுடையாய் - உன்னுடைய மதுரபாஷணம் கேட்கவந்தோமென்ன; நான் உங்களுக்குச் செய்யவேண்டுவதென்னென்ன; சங்கொடு-ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், சக்கரம்-திருவாழியாழ்வானையும், ஏந்தும்-தரித்தவனாய், தடம்-முழங்கால் அளவும் நீண்டிருக்கிற, கையன் - திருக்கைகளை யுடையனாய், பங்கயம் - தாமரை மலர்போன்ற, கண்ணனை - திருக்கண்களை யுடையவனானவனை, பாட - பாடவேணுமென்கிறார்கள்.

125. வ்யா—(உங்கள் புழைக்கடை) செங்கழுநீர் மலர்ந்து ஆம்பல் மொட்டிக்கும்படி போதுவிடிந்தது, உறங்

வ்யா.—நாங்கள் வந்து உன் வாசலிலே நிற்க எழுந்திராதொழிவதே! என்ன; விடிவுக்கு அடையாளமென்? எழுந்

குவதே! இன்னமும் என்ன;நீங்கள் வயலிலே போனிகளோவென்ன; புழைக்கடைத்தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்மொட்டித்தனவென்ன; அது பின்னை நீங்கள் வலிய அலர்த்தினிகோளென்ன; (உங்கள் புழைக்கடைத் தோட்டத்துவாவியுள்) எங்களுக்குப்புகுரவெண்ணாதே, அஸூர்யம்பச்யமான உங்கள் புழைக்கடைத் தோட்டத்துவாவியுள் செங்கழுநீர்வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய்மொட்டித்தன. வெயில்பட்டன்றிக்கேகாலபாகத்தாலேயென்கை. இவளெழுந்திராத இன்னாப்பாலே"உங்கள்புழைக்கடை"என்றுவேறிட்டுச்சொல்லுகிறார்கள். அலரப்புக்கவளவிலே கழியவலர்ந்ததென்றுசொல்லுகிறிகோள், வேறடையாளமுண்டோவென்ன;(செங்கற்பொடிக்கூறை)அளற்றுப் பொடியிலே புடைவையைப்புரட்டி ப்ரஹ்மசர்யந்தோற்றப் பல்லைவிளக்கி தண்டபரிஹாரார்த்தமாகத் தபோவேஷத்தையுடையரான சிவத்விஜருங்கூட தங்கள் தேவதைகளை ஆராதிக்குங்காலமாய்த்து. "திருக்கோயில்" என்றது அவர்கள்

திருக்கும்போது விடியவேணுமேஎன்ன; (செங்கழுநீர்வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்) செங்கழுநீரலர்ந்து ஆம்பல்மொட்டிக்குமது அடையாளமன்றோவென்ன; நீங்கள் இவ்வாசலிலேவந்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே உங்கள் கண்கள் அலர்ந்து, நான்வார்த்தை சொல்லவிட்டவாறே நீங்கள் வெறுத்து லஜ்ஜித்து வாய்மூடினதும், செங்கழுநீரலர்ந்ததாகவும் ஆம்பல் மொட்டித்ததாகவும் தோற்றுகிறதென்ன; அது ஊரிலதிறே, வாவியில் செங்கழுநீர்காணென்ன; வயலெல்லாமுலாவி அலருவன அலர்த்தி, மொட்டிப்பனமொட்டுவிக்கையன்றோ உங்களுக்கு இராவெல்லாம் பணியென்ன; (தோட்டத்துவாவியில்) தடமணி வயல்களிலும், அல்லிக்கமலமுகம்காட்டுங் கழனிகளிலும் முள்ளவை யல்ல, தோட்டத்திலவைகாணென்ன; அவ்விடங்களிலும் நீங்களுலாவினிகோளாமத்தனை யென்ன; புழக்கடைத் தோட்டங்காணென்ன; அத்தனையிடம் போகவேண்டாதே அணித்தானவத்தனையன்றோ வென்ன; (உங்கள் புழக்கடைத்தோட்டம்) என்கிறார்கள். அஸூர்யம் பச்யமான உன்னுடைய தோட்

சொல்லும் பாசுரத்தாலே. "சங்கு" என்று-ஆராதநோபக ரணத்துக்கு உபலக்ஷணம். குச்சியிடவென்றுமாம். இத் தால்-அசுத்தருங்கூட வெழுந்திருக்கும் காலமாய்த்தென்கை. ஸந்யாஸிகள் ஸந்த்யாவந்தநம்பண்ணித் தங்களுடைய அகங் களிலே திருவாராதநம்பண்ணும் காலமாய்த் தென்றுமாம்.

127. தம:ப்ரசுராநுஷ்டாநம் ப்ரமாணமோவென்ன ; "தர்மஜ்ஞஸமய: ப்ராமணம் வேதாச்ச" (126) அன்றோ வென்ன; தர்மஜ்ஞையான வுன்னுடைய ஸமயமும் ப்ராமண மன்றிறே யென்கிறார்கள் (எங்களை முன்னம் எழுப்புவான்

டத்திலே வெய்யில்படவன்றிக்கே காலபாகத்தாலே அலர்ந் தவையும் மொட்டித்தவையு மடையாளமன்றோ, சோலைச் செறிவாலே உச்சிப்பட்டாலும் ஆதித்ய ரஸ்மிகாணவொண் ணாத உன்னுடைய புழைக்கடையி லவையன்றோ. தாங்கள், புறம்பே, உள்ளுப் புகுரப்பெறாதே நிற்கிறவர்கள், இவள் புழைக்கடையில் அலர்ந்தவை யறிந்தபடி யென்னென்னில்; புறம்புள்ளவை யலர்வன மொட்டிப்பனவானபடியைக் கண்டு அநுமித்துச் சொல்லுகிறார்கள். இவளெழுந் திராதவின்றுப்பாலே உங்கள் புழைக்கடை என்று வேறுகூறிட்டுச் சொல்லுகிறார்கள். "த்வய க்ஷரஸ்துப வேந்ம்ருத்ய:" என்றும், "நீர் நுமது" என்றும், "யானே யென்றனதே" என்றும் - அஹங்காரமமகாரம் த்யா ஜ்யமாக உணர்ந்தவர்கள், "உங்கள், எங்கள்" என்கை விருத்தமன்றோ வென்னில்; தேஹாத்மாபி மாநத்தால் வரும் அஹங்காரம் த்யாஜ்யமாவது, பகவத்ஸம்பந்தத்தால் வருமது உத்தேச்யமென்னுமிடத்தை "அச்யுதாஹம்தவாஸ்மி" என் றும் "அபிமாநதுங்கன்" என்றும் "என்னுடைய பந்துங்கழ லும்" என்றும் சொல்லிற்றிறே. பதார்த்தங்களாகின்றன- காலக்ருத பரிணமியாயன்றோ இருப்பதென்ன; ஸந்த்யாஸம யத்தில்படியாயன்றே மத்யராத்ரியில்படியிருப்பது.

அலர உபக்ரமித்தமாத்ரத்தைக்கொண்டு கழியவலர்ந்த தாகவும், மொட்டிக்கத்தொடங்கினபோதே மொட்டித்ததாக வும், உங்கள் த்வரையாலே ப்ரதமதசையிலே இப்படியே தோற்றுகிறது, இது ப்ராதர்லக்ஷணமன்று, வேறடையாள

வாய் பேசும்) எல்லாரையும் நானே யெழுப்புகிறே னென்று சொன்னது உன்பக்கல்கண்டிலோமீ! என்கிறார்கள். (வாய் பேசும்) உக்திமாத்ரமேயாய் அநுஷ்டாநமின்றிக்கேயிருக்கை. க்ருஷ்ணனோடே பழகின வுனக்குப் பொய் சொல்லுகை முண்டாகில் சொல்லுங்கோளென்ன; (செங்கல்பொடிக் கூறை) தம:ப்ரசுரருங்கூட உணருங்காலமாய்த்து, இது விடிவுக்கு உடலன்றோவென்கிறார்கள். (செங்கல்பொடிக்கூறை) அளற்றுப் பொடியிலே புடவையைப் புரட்டி, இராவெல்லாம் வெற்றிலைதின்றுகிடந்து ப்ரஹ்மசர்யமும் விரக்தியுந்தோற்றப் பல்லை விளக்கி "ஐயைய! பெரியவர்கள்! கோமுற்றவர்! தண்டங்கொள்வார்!" என்று தபோவேஷத்தையுடையரான சிவத்விஜருங்கூட பயப்பட்டுணர்ந்து தங்கள் தேவதைகளை ஆராதிக்குங் காலமாய்த்து. "திருக்கோயில்" என்றது-அவர்கள் சொல்லும்படி. "சங்கு" என்று - பரிகரத்துக்கு உபலக்ஷணம். சங்கிடுவானென்றது-குச்சியிடுவானென்றுமாம். "தாமஸப்ரக்ருதிகளைச் சொல்லுகிறது" என்று எம்பார். "தம:ப்ரசுரர் உணர்ந்தார்கள் என்று சொல்லியோ எழுப்புவது என்று அவள் நினைத்திருக்கும் என்று, தத்த்வநிஷ்டரான ஸந்ந்யாஸிகளைச் சொல்லுகிறது" என்று திருமலைநம்பி. "யதஹரேவவிரஜேத், ததஹரேவப்ரவ்ரஜேத்" "பரமாத்மநியோரக்தோ விரக்தோபரமாத்மநி" என்று பகவத்விஷயத்தில் ஸக்தராய், இதரவிஷயங்களில் விரக்தராய், காஷாயவஸ்த்ரங்களை தரித்து போக்யத்ரவ்யங்களில் விரக்தராய் ஸாத்த்விகராயிருக்கும் ஸந்ந்யாஸிகள் ஸந்த்யாவந்தநங்களைப் பண்ணி அகங்களிலே திருவாராதநம் பண்ணுங் காலமாய்த்தென்ன.

"ஸததம் கீர்த்தயந்தோமாம்" "நமஸ்யந்தச்சமாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே" என்றும் அநவரதம் ஸ்நேஹத்தோடே, உபாஸிப்பர்களென்றும் சொல்லப்படுகிறவர்கள் விடிவோறே ஒருக்கால் ஸமாராதநம்பண்ணி அல்லாதபோது பேசாதேயிருப்பார்களோ, இது விடிவுக்கடையாளமன்றே, இதுதான் ப்ரமாணமுமன்றேயென்ன; அதுக்கு உத்தரமாகச் சொல்லுகிறதுமேல். (எங்களைமுன்னமெழுப்புவான்) "தர்மஜ்ஞஸமய:ப்ரமாணம் வேதாச்ச" "யத்யதாசரதிச்

வம்போ. (நங்காய்) பூர்ணையிறே. எனக்கு உங்களையொழியச் செல்லாதென்று சொல்லும்படியும், உன்னைரபேக்ஷ்யமுமெல்லாங் கண்டோமிறே. சொல்லும் செயலும் சேராதார்க்கு ஒரு பூர்த்தியும் வேணுமோ. (எழுந்திராய்) எங்கள் குறைதீர்க்க வெழுந்திராய்.

128. (நாணாதாய்) சொல்லிவைத்துச் சொன்னபடிசெய்யப்பெற்றிலோமென்னும் லஜ்ஜையுமின்றிக்கே யிருந்ததீ! ஶ்

ரேஷ்ட:" என்றும், "மேலையார் செய்வனகள்" என்னுமது ப்ரமாணமாக நீசொன்னாயே, ஸாத்விகாக்ரேஸரையா யிருக்கிற நீயெங்களை யெழுப்புவதாகச் சொல்லிவைத்து அத்தை மறந்துகிடந்து உறங்குகிறாயன்றோ. தர்மஜ்ஞையான வுன்னுடைய ஸமயமும் ப்ரமாணமன்றே யென்கிறார்கள் (எங்களைமுன்னமெழுப்புவான்) எல்லாரையும் நானே யெழுப்புகிறேனென்று சொன்னது உன்பக்கல் கண்டிலோமே. (வாய்பேசும்) ஹ்ருதயத்திலில்லாதது வாயாலேபேசலாமோ தான். உக்திமாத்ரமேயாய் அநுஷ்டாநமின்றிக்கேயிருக்கை. நினைவும் சொல்லும் விபரீதமாயிருக்கும். க்ருஷ்ணனோடே பழகிச் சேர்த்தியாயிருக்கிற வுனக்குப் பொய் சொல்லுகை வம்போ. (நங்காய்) உன்னுடைய லாபத்துக்கு நாங்கள் வேண்டாதபடியா யிருந்ததிறே. எங்களையொழிய நீ நிரபேக்ஷையா யிருந்தாயிறே. "எனக்கு உங்களையொழியச்செல்லாது" என்றிருந்ததெல்லாம் கண்டோமிறே. சொல்லுஞ் செயலும் சேராதார்க்கு ஒரு பூர்த்தியும் வேணுமோ. இரண்டுஞ்சேர்ந்த விடத்திலே யன்றோ பூர்த்தியுள்ளது- அதில்லாதவிடத்தில் ஆதித்யர்கள்பக்கல் ஔபசாரிகமாகச் சொல்லும் பகவச்சப்தம்போலேயன்றோ. "ஒருகாலும்பிரிகிலேன்" என்றதுக்குப் பொருளிதுவோ. (எழுந்திராய்) எங்கள்குறைதீர்க்க வெழுந்திராய்.

(நாணாதாய்) நீதானெழுந்திருக்க வேணுமோ, நாம் பிற்பாடரானோமென்று கிடந்தவிடத்தேகிடந்து சொன்னபடி

பி. 128—நாணாதாய்-லஜ்ஜையில்லாதவளே (லஜ்ஜை=சுணை. பூசணிக்காயின் சுரசுரப்புக்கும் சுணையென்று பெயருள்ளபடியால்,

யிருந்தவூரில் பூசினியுங்காயாதோவென்கை. (நாவுடையாய்) என்னைக்ஷேபித்துக்கொண்டாகிலும் வருகிறதென்னென்ன; "நாரிக்வேதவிநீதஸ்யநாயஜுர்வேததாரிண:"(127) என்றும், "நூநம்வ்யாகரணம்க்ருத்ஸ்நம்" (128) என்றும், "ஸம்ஸ்க்ரவேமதுரம் வாக்யம்" (35) என்றும் உன்பேச்சிலினிமை கேட்க, இவளெல்லாம்படுத்தினுலும்விடவொண்ணுதநாவீறுடைமை. உங்களுக்குச்செய்யவேண்டுவதென்னென்ன; (சங்கித்யாதி) திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுமேந்தி அந்தஸ்பர்சத்தாலே வளர்ந்த திருக்கைகளை யுடையனுய், ஆழ்வார்களிலே வந்தலையெறிகிற கண்களை யுடையவனே. " இளவாய்ச்சியர்

செய்யப் பெற்றிலோமென்று லஜ்ஜிக்கத்தான் பெற்றதோ. நீயிருந்தவூரில் பூசினியுங் காயாதோ. " ஹ்ரீரேஷாஹிமமாதுலா" என்னுமவனுடையன்றே உனக்குவாஸனை. எங்களை லஜ்ஜிக்கத்தான் பெற்றோமோ. நாட்டாரளவோ வுனக்கு நாக்கு. (நாவுடையாய்) என்னை க்ஷேபித்துக்கொண்டாகிலும் வருகிறதென்னென்ன "நாரிக்வேதவிநீதஸ்ய நாயஜுர் வேததாரிண:" என்றும் " நூநம்வ்யாகரணம் க்ருத்ஸ்நம் " "ஸம்ஸ்க்ரவேமதுரம் வாக்யம்" என்றும்-நீயெல்லாம் படுத்தினுலும் உன்பேச்சிலினிமை கேட்கும்படி நாவீறுடையவளன்றே. நான் உங்களுக்குச் செய்யவேண்டுவதென்னென்ன; (சங்கொடு சக்கரமேந்தும்) க்ருஷ்ணன் திருநாமங்களைப்பாட. திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுமேந்தி அந்தஸ்பர்சத்தாலேவந்த வளர்த்தியையுடைய திருக்கைகளையுடையனுய், ஆழ்வார்களிலேவந்து அலையெறிகிறகண்களையுமுடையனை க்ருஷ்ணனை. "கூராராழி வெண்சங்கேந்தி." "ஆழியொடும் பொன்னூர் சார்ங்கமுடையவடிகளை" ஆசைப்படப்பண்ணுமதுவுமறிவுகெடப்பண்ணுமதுவும்திவ்யாயுதங்களோட்டைச்சேர்த்தியேயிறே. (பங்கயக்கண்ணனை) முற்படப் பெண்களுக்குத் தன்னையெழுதிக்கொடுத்து எழுத்து "வாங்கப்பண்ணும்கண்கள்" "தூதுசெய்கண்கள்" "விடவே

சுணையில்லாதவளாகிய நீ இருக்கிற ஊரிலே, பூசனி காய்க்காதோ என்று ஏளனம் செய்கிறார்கள்.)

கண்ணினுள் விடவேசெய்து விழிக்கும்பிரான்" என்று இவர்களைத் தோற்பித்துக் கொள்ளும்கண்ணிறே. "ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை யின்னாரென் றறியேன்" என்று-அநுபவிப்பாரைப் பிச்சேற்றக்கடவ திருவாழியையும், திருமேனிக்குப் பரபாகமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், முற்படத்தன்னை யெழுதிக்கொடுத்துப், பின்னை எழுதிக்கொள்ளுகிற திருக்கண்களையுமுடையவனே. (பாட) உன் ப்ரீதிக்குப்போக்குவிட்டு எங்களையும் உஜ்ஜீவிப்பிக்க. க்ருஷ்ணன்கையில் இப்போது ஆழ்வார்களுண்டோ வென்னில்; எப்போதுமுண்டு; அது பெண்களுக்குத்தோற்றும்; அல்லாதார்க்குத் தோற்ருது. "உபஸம்ஹர" (67) என்றதும் உகவாதார்க்குக் கூசியிறே. இவர்களுக்குத்தோற்றத் தட்டில்லையே. .... கச

129. ஸ்வாபதேசவ்யாக்யாநம். பதினைாம் பாட்டு. (உங்களித்யாதி) இப்பாட்டில் - பாகவதஸமுதாயத்துக்கெல்லாம் தாமே கடவராய் இவர்களுக்கெல்லாம் பகவத்ஸம்பந்தகடகர் தாமேயாம்படி ஜ்ஞாநபக்தி வைராக்யங்களாலே

செய்து விழிக்கும்" "கண்களுக்கு அற்றுத்தீர்ந்தும்" ஜிதந்தே" "விண்ணோர்பரவுந்தலைமகன்" என்று-உபயவிபூதியையுந்தோற்பிக்குங் கண்ணழகுடையவனே. சந்த்ராதித்யர்கள் சேரவுதித்தாற்போலேயிருக்கிறஇரண்டுதிவ்யாயுதங்களையும் கண்டு, "ஆங்குமலருங்குவியும்" என்கிற திருநாபீகமலம்போலே, திருக்கண்களும் அலருவதுமொட்டிப்பதாகா நிற்கும். க்ருஷ்ணன் கையில் ஆழ்வார்களுண்டோவென்னில், எப்போதுமுண்டு; அதுபெண்களுக்குத் தோற்றும்; ஆண்களுக்குத் தோற்ருது. "உபஸம்ஹர" என்றது உகவாதார்க்குக் கூசியிறே. "நெய்த்தலைநேமியுஞ் சங்கும் நிலாவிய" என்று - யசோதைப்பிராட்டி தாலாட்டுகையாலே இவர்களுக்குத் தோற்றத் தட்டில்லையே. (பாட) உன் ப்ரீதிக்குப் போக்குவிட்டுப்பாடி, ஒரு நீர்ச்சாவிபோலே கிடக்கிற சித்திரர் உஜ்ஜீவிக்கும்படி வர்ஷியாய். (பங்கயக்கண்ணனைப் பாட) "உத்காயதீநாமரவிந்தலோசநம்" ... ... கச

பூர்ணரான பாகவதரை யெழுப்புகிறார்கள். வ்யா.—(உங்கள் புழைக்கடையித்யாதி) ஆகாரத்ரய விசிஷ்டரான வுங்களு டைய விஹாரஸ்தாநமான திருமந்த்ரத்தினுடைய மத்யேவர்த் திக்கிற நமஸ்ஸிலே பாரதந்த்ரியம் ப்ரகாசமாய் ஸ்வாதந்த்ரி யம் தலைமடிந்ததுகாண். (செங்கல்பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்தங்கள்திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்) ராகப்ரயுக்தமான சேஷத்வஜ்ஞாநமுடையமந்தஸ்மிதமுடைய ரான ப்ரபந்நாதிகாரிகள் தங்கள் தங்களெம்பெருமான் ஸந்நிதியிலே திருவாராதநம் பண்ணுகைக்குப் போந்தார்கள். (எங்களை முன்னமெழுப்புவான் வாய்பேசும் நங்கா யெழுந் திராய்) எங்களையெல்லாம் நாங்கள் அபேக்ஷிப்பதற்கு முன் னேஜ்ஞாநிகளாக்கும்படி ஸ்ரீஸூக்திகளை யருளிச்செய்யும் பூர்த்தியை யுடையவரே யெழுந்திராய். (நாணாதாய்) சொல் லும் செயலு மொத்திராதார்க்கு நாணமுமின்றிக்கே யொழி வதே. இப்படியென்னை க்ஷேபித்துக்கொண்டாகிலும் என் பக்கல் ஸாபேக்ஷராய் வருவதேதென்ன; (நா உடையாய்) வாங்மாதுர்யமுடையவரே. நீர் அஹ்ருதயமாகச்சொல்லி லும் பேச்சினினிமையைப் பார்த்தால் ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனை யீச்வரனுக்கு மிதுஸஹ்ருதயம் அவச்யம் கர்த்தவ்யம் என் னும்படியாயிருக்கை. ஜ்ஞாநமுண்டானால் செய்வதென் னென்ன; (சங்கொடியாதி) “ ஏதத்ஸாமகாயந்நாஸ்தே ” என்கிறபடியே திருவாய்மொழிபாடுகையே ப்ரயோஜநம், எழுந்திராயென்கிறார்கள். கச

பதினைந்தாம் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி:—130. பதினைந்தாம்பாட்டு. எல்லாரு டைய திரட்சியுங் காணவேண்டியிருப்பா ளொருத்தியை யெழுப்புகிறார்கள்.

ஆறாயிரப்படி:—பதினைந்தாம்பாட்டு. (எல்லே) பெண்க ளெல்லா ருடையவும் திரள் காணவேண்டியிருப்பாளொருத் தியை யெழுப்புகிறார்கள். கீழ்ப்பத்துப் பட்டாலும்சொன்ன உக்திப்ரத்யுக்தியை முக்தகண்டமாகச்சொல்லுகிறது- இப்

எல்லேயிளங்கிளியேயின்னமுறங்குதியோ
சில்லென்றழையேன்மின் நங்கைமீர்போதருகின்றேன்
வல்லையுன்கட்டுரைகள்பண்டேயுன்வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதானாயிடுக
ஒல்லைநீபோதாயுனக்கென்னவேறுடையை
எல்லாரும்போந்தாரோபோந்தார்போந்தெண்ணிக்கொள்
வல்லானைகொன்றானைமாற்றாரைமாற்றழிக்க
வல்லானைமாயனைப்பாடேலோரெம்பாவாய்.

பதவுரை:—எல்லாருடைய திருஷ்டியையும் காணவேண்டியிருப்பாளொருத்தியை. இளங்கிளியே-இளமைதங்கிய கிளிபோன்ற சொல்லையுடையவளே, எல்லே-உன்பேச்சில் இனிமை இருந்தபடி என்னே, இன்னம்-நாங்கள் உணர்ந்துவந்த பின்பும், உறங்குதியோ-தூங்குகிறாயோ வென்ன; நங்கைமீர்-பூர்ணைகளானவர்களே, சில் என்று-சிலுகுசிலுகென்று, அழையேன்மின்-அழையாதே யுங்கள், போதருகின்றேன்-புறப்பட்டுவருகிறேனென்ன; வல்லை-பேசுவதில் ஸமர்த்தையான, உன்-உன்னுடைய, கட்டுரைகள்-உறுதிமொழியையும், உன்—உன்னுடைய, வாய்-பேசும்வல்லமையையும், பண்டே-முன்னமே, அறிதும்-அறிவோமென்ன; நீங்களே—, வல்லீர்கள்-பேசுந்திறமுடையவர்கள், நானேதான்-நானன்றோ, ஆயிடுக-ஆகக்கடவேனென்று சொல்லிவிட்டு, உங்களுக்குச் செய்யவேண்டுவதென்னென்ன; நீ—, ஒல்லைபோதாய்-எங்கள் திரளிலே சடக்கென வந்து நிற்கவேணும், உனக்கு—, வேறு-வேறே, என்ன-என்னப்ரயோஜநத்தை, உடையை-உடைத்தாயிருக்கிறாய் என்று கேட்க; எல்லாரும்-உணரவறியாத சிறுப்பெண்களும். போந்

பாட்டில். அந்விதாபிதாநம் பண்ணியிறே கிடக்கிறது. திருப்பாவையாகிறது இப்பாட்டிறே. பகவத்விஷயத்திலிருக்கும்படி யெல்லாம் சிற்றஞ்சிறுகாலையிலே சொல்லுகிறது; பாகவதவிஷயத்திலிருக்கும்படியெல்லாம் இப்பாட்டிலே சொல்லுகிறது. "பங்கயக் கண்ணனைப்பாட" என்று-அசலகத்தில் பெண்பிள்ளையையெழுப்புகிற பாசுரத்தைக் கேட்டு, இவர்கள் பாசுரத்தைத் தன் மிடற்றிலேயிட்டு நுடங்கிப்பாடுகிறபடியைக்கேட்டு, த்வநிவழியேசென்று பேச்சினினிமையாலே, "எல்லே! இளங்கிளியே" என்கிறார்கள்.

தாரோ-உணர்ந்துவந்தார்களோ வென்ன, போந்தார்-வந்திருக்கிறார்கள், போந்து-புறப்பட்டுவந்து, எண்ணிக்கொள்-எண்ணிக்கொள்ளாயென்ன; நாமெல்லாருங் கூடினால் செய்வதென்னென்ன; வல்-வலிமையையுடைத்தான, ஆனை-குவலயாபீடத்தை, கொன்றானை-கொன்றவனாய், மாற்றாரை-சத்ருக்களான கம்ஸாதிகளுடைய, மாற்று-"நம்மை வெல்லவல்லாரில்லை" என்கிற மதிப்பை, அழிக்கவல்லானை-அழிக்கைக்கு ஸமர்த்தனாய், மாயனை-பெண்கள் மாயையில் அகப்படுமவனை. பாட-பாடுகைக்காக, என்கிறார்கள்.

131. வ்யா.—(எல்லே இளங்கிளியே) "சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையன் பங்கயக்கண்ணானைப்பாட" என்று அசலகத்துப்பெண்பிள்ளையையெழுப்புகிறபாசுரத்தைக்கேட்டு, இவள் அந்தப்பாசுரத்தைத்தன்மிடற்றிலேயிட்டுப் பாட, எழுப்புகிறவர்கள், அந்தத்வநிவழியே கேட்டுச்சென்று இவள்பேச்சி னினிமையாலே (எல்லே! இளங்கிளி

வ்யா.—(எல்லே இளங்கிளியே) பாழிலே யிட்டுப்பாடி, அது பண்பட்டு இனிதானவாறே தம்தாம்மிடற்றிலே மாற்றுவாரைப்போலே, தங்கள் பேச்சுக்கு இவள்பேச்சு. (எல்லே இளங்கிளியே) திருவான மிடறும் பாட்டுமிருந்தபடி யென்றான்! பேச்சிலினிமையிருந்தபடி. எழுப்புகைசாலதர்மஹாநியாயிருந்ததீ. பேச்சிலினிமையாலே, "எல்லே" என்று ஆச்சர்யப்படுகிறார்கள். (எல்லே) ஸம்போதனையாகவுமாம். (இளங்கிளியே) என்று-கிளியை வ்யாவர்த்திக்கிறது. பசுமைக்கும் பேச்சுக்கும் கிளியொப்பாமித்தனை, பருவத்துக்கு ஒப்பாகமாட்டாது; ஒக்கிலும், பிராட்டிமார் பருவத்துக்கு ஒப்பாமித்தனை. இவர்கள் கிளி; தான் இளங்கிளி. "மென்கிளிபோல் மிகமிழற்றும்", "அணிமழலைக்கிளிமொழியாள் என்னக்கடவதிறே. "நாணாதாய் நாவுடையாய்" என்று-கீழ்ப்பாட்டிலே அவளையுட்பட வெறுத்தவர்கள், அவளிலும் பிற்பாடையாய் ஸாபராதையாய்க்கிடக்கிற

பி. 131-திருவாய்மொழிபாடுகை திருவரங்கம் பெரியகோயிலில் திருப்புன்னையின் கீழே.

யே!) என்கிறார்கள். (இளங்கிளியே) கிளியை வ்யாவர்த்திக்கிறது. கிளி இவள்பேச்சுக்கொப்பாமித்தனை, பருவத்துக்கொப்பன்றென்கை. (எல்லே!) என்னே ; "எல்லே" என்று பேச்சி னினிமையாலே ஆச்சர்யப் படுகிறார்கள். (இன்னம் உறங்குதியோ) இவர்களழைக்கிறது தன் அநுஸந்தாநத்துக்கு விக்நமாகையாலே பேசாதேகிடக்க(இன்ன முறங்குதியோ) என்கிறார்கள். க்ருஷ்ண விரஹத்தாலே தளர்ந்து உறக்கமின்றிக்கே உன்கடாக்ஷமேபற்றாசாக நாங்கள் நின்றபின்பும் உறங்குமத்தனையோ. க்ருஷ்ணாநுபவத்துக்கு ஏகாந்தமான காலம் ஸித்தித்திருக்க உறங்கக்கடவையோ என்றுமாம். உத்தேச்யம் கைபுகுந்தாலும் உறங்கக்கடவா ருண்டோவென்ன; (சில்லென் றழையேன்மின்) தன்னநுஸந்தாநத்துக்கு இவர்களழைக்கிறது விக்நமாகையாலே, சிலுகிடாதேகொள்ளுங்கோளென்கிறாள். இவர்கள்

நம்மை ச்லாகிக்கக் கூடாது. "மாசுடையுடம்பொடுதலையுலறிவாய்ப்புறம் வெளுத்து" என்னும்படியே-தங்களுடம்பு விவர்ணமாய் வாயும் வெளுத்திருக்க, க்ருஷ்ணஸம்ச்லேஷத்தாலே உடம்பு பசுகுபசுகென்று வாயுஞ்சிவந்து நாம் குறியழியாதிருந்தோமென்று நம்மை நிந்திக்கிறார்கள்; இவ்வளவில் இவர்களுக்குவாய்திறக்கில்வெறுப்பாமென்றுபேசாதே கிடக்க; (இன்னம் உறங்குதியோ) என்கிறார்கள். நாங்கள் வருவதுக்கு முன்பு உறக்கத்தைப் பொறுத்தோமாகிலும்நாங்கள்வந்தால் உறங்கக்கடவதோ. (இன்னம் உறங்குதியோ) க்ருஷ்ணவிரஹத்தாலும் உன்கடாக்ஷம் படாமையாலும் துவண்ட எங்களார்த்தத்வநி கேட்டும் கண்ணுறங்குவதே யுனக்கு! (இன்னம் உறங்குதியோ) உத்தேச்யம் கைபுகுந்தால் உறங்குவாருண்டோ. க்ருஷ்ணாநுபவத்துக்கு ஏகாந்தம் பெற்றாலும் உறங்கக்கடவதோ.

தான அநுபவிக்கிற பங்கயக்கண்ணனுடைய அநுஸந்தாநத்துக்கு "இளங்கிளியே" என்பது, "இன்னமுறங்குதியோ" என்பது, இவர்கள் சொல்லுகிறவை விக்நமாகையாலே,சிலுகிடாதேகொள்ளுங்கோ ளென்கிறாள்;(சில்லென்

வார்த்தை அஸஹ்யமோ வென்னில்; திருவாய்மொழி பாடா நின்றால் செல்வரெழுந்தருளுகையும் அஸஹ்யமாமாபோலே. (நங்கைமீர் போதருகின்றேன்) நாங்களும் எங்கள் சொல் லும் பொறுதபடி யுன்பூர்த்தி யிருந்தபடி யென்னென்ன; சிவிட்கென்னக்கூசி (நங்கைமீர்போதருகின்றேன்) நீங்கள் வாய்திறவாதிருக்கவல்லிகோளாகில் நான் புறப்படுகிறே னென்ன;

132. (வல்லை உன்கட்டுரைகள் பண்டே உன் வாய றிதும்) "நங்கைமீர்" என்று—உறவற்ற சொல்லாலே வெட் டிமை யெல்லாஞ் சொல்லவல்லையென்னுமிடம் நாங்களின் றுகவறிகிறோமோ, சொல்லிற்றைச்சொல்லி யெங்கள் தலை யிலே குற்றமாம்படி வார்த்தைசொல்லவல்லையென்னுமிடம் பண்டே யறியோமோ வென்றுமாம். (வல்லீர்கள் நீங்களே) "இன்னம் உறங்குதியோ" என்றும், " வல்லை யுன்கட்டுரை

றழையேன்மின்) திருவாய்மொழி பாடாநின்றால் செல்வ ரெழுந்தருளுகையும் அஸஹ்யமாமாபோலே, பிராட்டிமாரும் ஸர்வேச்வரனும்கூட எழுந்தருளி யிருந்தால் ஒட்டுவட்டுங் காளாஞ்சியோபாதி பிரியாதேயிருக்கக்கடவ. ஸ்ரீநாரதபக வானையும், ச்வேதத்வீபத்திலே யெழுந்தருளுகிறபோது உன் வன்மை யவர்கள் பொறுதேயிருக்கக்கூடுமென்று "நான்வரு மளவுமிங்கேயிரு" என்று அருளிச்செய்து எழுந்தருளினிறே. தன்னுலல்லது செல்லாதவெங்களைச் சிவிட்கென்பதே! என்று இன்றதாய், நாங்களும் எங்கள்தர்சநமும் எங்கள் பேச்சும் அஸஹ்யமாம்படி உன்னுடைய பூர்த்தியிருந்தபடியென் னென்ன; (நங்கைமீர் போதருகின்றேன்) என்ப்ரக்ருதி யறி யாதே " இளங்கிளியே " என்று என்னை பாதிக்கிற நீங்க ளன்றோ பூர்ணைகள், வாய்திறவா திருக்கவல்லிகோளாகில் நான் புறப்படுகிறே னென்ன;

(வல்லையுன் கட்டுரைகள்) எங்கள் தலையிலே குற்றஞ் சொல்லலாவதெல்லாஞ்சொல்லி, உன்தலையில் குற்றமில்லை யென்னும்படி உபபாதிக்கவல்லையிறே. (பண்டேயுன்வாய்

பி. 132—வெட்டிமை-நிஷ்டூரம்.

கள்" என்றும்வெட்டிமை உங்களதன்றோ வென்ன; உன் வாசலிலே வந்தெழுப்ப, "சில்லென்றழையேன்மின்" என்றது உன்னதன்றோவெட்டிமையென்ன ; அதுஎன்குற்றமன்று, அதுவும் உங்கள் குற்றமே. நம்முடைய வார்த்தை கேட்கவுகக்குமிவள், நம்வார்த்தை அஸஹ்யமாம்படியிறே க்ருஷ்ணகுணங்களிலே அவகாஹித்தது என்று உகக்க வேண்டி யிருக்க, அதிலே தோஷத்தை யேறிட்டவுங்களதன்றோகுற்றம் ; அதுகிடக்க, "பரஸ்பரநீசபாவை:" (129) என்றன்றோ ஸ்வரூபமிருப்பது, ஆகையாலே (நானேதான் ஆயிடுக) இல்லாதகுற்றத்தையுஞ் சிலர் "உண்டு" என்றால் இல்லை செய்யாதே யிசைகையிறே வைஷ்ணவத்வ லக்ஷணம். "மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத்" (130) என்று பிறர் குற்றத்தையும் தன்னுடைய பாபபலமென்றானிறே ஸ்ரீபரதாழ்வான்.

அறிதும்) "நங்கைமீர்" என்று உறவற்றசொல்லாலே வெட்டிமை சொல்லவல்லையென்னுமிடம் நாங்களின்றாக வறிகிறோமோ, பண்டேயறியோமோ. குணதோஷங்களென்று ஒன்றுண்டோ. நீ சொல்லிற்றுவார்த்தையாமித்தனையன்றோ.

உன்வாசலிலே நாங்கள்எத்தனைகாலமுண்டு துவளுகிறதென்ன ; (வல்லீர்கள் நீங்களே) உங்கள் வாசலிலே நான் வந்து துவளப்பேசாதே கிடந்து வெட்டிமை சொல்லிப் படுத்தவல்லிகோள் நீங்களன்றோ. உங்கள் வாசலிலே வந்தெழுப்ப நான் எத்தனை பண்ணைக்கேட்டேனென்ன; அது ஸாத்யம், இது ஸித்தம் ; ப்ரத்யக்ஷம்கிடக்க அநுமானத்தைக் கொள்ளவோவென்ன; பதகம் மூட்டினவாறே. (நானேதான் ஆயிடுக) "பரஸ்பரநீசபாவை:" என்றன்றோ ஸ்வரூபமிருப்பது. இல்லாதகுற்றத்தைச் சிலர் "உண்டு" என்றால் இல்லை செய்யாதே இசைகையிறே வைஷ்ணவ லக்ஷணம். "மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத்" என்று-பிறர் குற்றத்தையும் தன்குற்றமாக இசைந்தாரிறே ஸ்ரீபரதாழ்வான். ஸ்வகுணபதாநத்துக்காக கௌரவ்யரை அதிநிர்ப்பந்தம் பண்ணலாகாதென்றும் வேதார்த்தம் ப்ரகாசிக்கிறது.

133. உங்களுக்குச் செய்யவேண்டுவ தென்னென்ன (ஒல்லை நீ போதாய்) எங்களுக்கு ஒருக்ஷணமும் உன்னை யொழியச் செல்லாமையாலே எங்கள்திரளிலே சடக்கெனப் புகுந்துகொடு நில்லாய். "சாதுகோட்டியுட் கொள்ளப் படுவாரே" என்று-அவளுக்கும் இத்திரளேயிறே ப்ராப்யம். (உனக்கென்ன வேறுடையை)பஞ்சலக்ஷங்குடியில் பெண் களுக்குள்ளதொழிய தனியே ஸ்வயம்பாகம்பண்ணுவா ரைப்போலே உனக்கு வேறேசிலவுண்டோ. வைஷ்ணவ

இப்படி தோஷதுஷ்டையான நான்உங்களுக்குச் செய் யவேண்டுவதென்னென்ன; (ஒல்லை நீபோதாய்) உன் குற் றத்துக்கு இசைந்தபின்பு சடக்கெனப் புறப்பட்டு இத்திர ளிலே புகுந்து பொறுப்பித்துக்கொள்ளாயோ. (ஒல்லை) "ஒல்லைக்கூடுமினோ" என்றாரிறே. "சாதுகோட்டியுட்கொள் ளப்படுவார்" என்று - ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியிலே புகு ருகை ஏற்றமென்று அருளிச்செய்தாரிறே.(ஒல்லைநீபோதாய்) உன்னை அரைக்ஷணம்காணாதொழியில் எங்களுக்கு ப்ராண ஹாநி; புறப்படாதொழியில் உனக்கு அநர்த்தமாய்த் தலைக் கட்டும். ஆகில் புறப்படாநின்றேனென்ன; துடித்துக் கொண்டு புறப்பட்டுநின்று தாங்கள் பட்டது படாமை யாலே சிவிட்கென்று (உனக்கு என்னவேறுடையை) என் கிறார்கள்.இவளொருஸத்துவிளம்பித்துப் புறப்படுங்காட்டில் அஞ்சுலக்ஷம் குடியில்பெண்களுக் கொழிய உனக்கென்ன ஒரு ஸ்வயம்பாகம் வேணுமோ; உன் ஸ்வயம்பாகம் தவிர்ந் திலையோ பெருப் பானை கண்ட பின்பும். வைஷ்ணவ விஷ யத்தை பஹிஷ்கரித்துப்பற்றும் பகவத்விஷயத்தோடு தேவ தாந்தரத்தோடு வாசியில்லை.

இளையபெருமாள், ஸ்ரீபரதாழ்வானுடைய வதத்திலே உத்யோகித்து, வில்லிலே நாணேறிடுவது, அம்பைத் திரிப்ப தாகிறபடியைக் கண்டு, பெருமாளுக்கு அஸஹ்யமாய், "அவனுக்கு ராஜ்யத்தில் ச்ரத்தையில்லை, உனக்கு அபேக்ஷை யுண்டாகில் வாங்கித்தருகிறோம்" என்று அருளிச் செய்த போது இளையபெருமாள் தரைப்பட்டாற்போலே, இவளும்

விஷயத்தை பஹிஷ்கரித்துப் பற்றும் பகவத்விஷயத்தோடு தேவதாந்தரத்தோடு வாசியில்லை; "நீயொருவர்க்கும் விரோதி யல்லை, நீ புக்குத்திருவடி தொழு" என்ற ஆழ்வான் வார்த்தையை நினைப்பது. (எல்லாரும் போந்தாரோ) எனக்கு உங்களை யொழிய ஸுகமுண்டோ, உணரவறியாத சிறுபெண்களுமுணர்ந்தால் புறப்படவிருந்தேன், எல்லாரும் போந்தாரோவென்ன; (போந்தார்) க்ருஷ்ண விரஹத்தாலே துவண்ட பெண்களடைய வுன்னைக் காண்கைக்கு உன் வாசலிலே வந்து கிடந்தார்களென்ன; ஆகில் உள்ளே புகுரவிடுங்கோளென்ன; (போந் தெண்ணிக்கொள்) புறப்பட்டு மெய்க்காட்டுக் கொள். மெய்க்காட்டுக் கொள்ளுகைக்குப்ரயோஜநம் தனித்தனியே பார்க்கையும், அநுபவிக்கையும்.

"உனக்கென்ன வேறுடையை" என்றது-பொறுக்கமாட்டாமே. (எல்லாரும் போந்தாரோ)உங்களையொழிய எனக்கு ஒரு ஸுகமுண்டோ. நம்மிலே சிலர் உறங்கிக்கிடக்கப் போகவொண்ணுதென்னு மின்னுப்பாலே சொன்னேனித் தனையன்றோ. உணரவறியாத சிறுபெண்களும் உணர்ந்தால் புறப்படுவதாகவிருந்தேன், எல்லாருமுணர்ந்து புறப்பட்டார்களோ வென்ன; (எல்லாரும் போந்தார்) க்ருஷ்ணவிரஹத்தாலே துவண்ட பெண்களடைய உன்னைக் காண்கைக்கு உன்வாசலிலே வந்து கிடக்கிறது. நான் எழுந்திருக்கைக்காக ஒன்றைச் சொல்லுகிறிகோளத்தனையன்றோ, வந்தார்களாகில் உள்ளே புகுரவிடுங்கோளென்ன; (போந்தெண்ணிக்கொள்) வந்தமை நிச்சிதம், புறப்பட்டு மெய்க்காட்டுக்கொள். மெய்க்காட்டுக்கொள்ளுகைக்கு ப்ரயோஜநமாக இவர்கள் நினைக்கிறது-தனியே பார்க்கையும், பேர்சொல்லுகையும, தொட்டு எண்ணுகையும், ஸ்பர்சஸுகமநுபவிக்கையும், பெண்களுக்கு ஸங்க்யையில்லாமையாலே யெண்ணிமுடிக்குந்தனையும் இவனைப்பிரியாதே அநுபவிக்கையும்.

நாமெல்லாருங்கூடிச் செய்யப்பார்த்த தென்னென்ன; க்ருஷ்ணனுடைய விஜயங்களை நீ பாட நாங்கள் கேட்க வேணுமென்கிருர்கள். (வல்லானைகொன்றனை) குவலயா

134. நாமெல்லாரும் கூடினால் செய்வதென்னென்ன; (வல் ஆனைகொன்றானை) குவலயாபீடத்தைக் கொன்று நம் ஜீவநமான தன்னை நோக்கித்தந்தவனை. (மாற்றாரைமாற்றழிக்க வல்லானை) எதிரிட்ட கம்ஸாதிகளை அநாயாஸேந நசிப்பித்து

பீடத்தைக்கொன்று நம்ஜீவநமான தன்னை நோக்கித்தந்தவனை. பெருமிடுக்குண்டாம்படி மதப்படுத்திநின்ற குவலயாபீடத்தைக் கொன்று. "ஸக்ய:பச்யத" என்று காவிமலர் நெடுங்கண்ணார் கைதொழவீதிவந்து நம்மோட்டைப்பெண்களை வாழ்வித்தவனை. "கவளயானைக் கொம்பொசித்த கண்ணன்" என்றிறே பெண்கள் வாய்வெருவுவது. "கவளமால் யானை கொன்ற கண்ணன்" என்று-ஆண்களை யெழுதிமுடிக்கப் பண்ணினது, பெண்களையெழுத்துவாங்குவிக்கச் சொல்லவேணுமோ. "வெஞ்சினவேழ மருப்பொசித்த வேந்தர்கோலேந்திழையார் மநத்தை, தஞ்சுடையாளர்கொள்" என்னக் கடவதிறே. "வாரணத்தை மருப்பொசித்தபிரானென்மாதவனே" "பாரணங்காளான் வாரணந் தொலைத்தகாரணன்." "பின்னை மணாளனைக் கருந்தாள்களிறொன்றொசித்தான்" என்று ப்ரதாநமஹிஷிகள் மூவரும் இவ்வபதாநத்துக்கிறே தோற்றுக்கிடப்பது. ஸ்ரீகஜேந்த்ராழ்வானை ரக்ஷித்ததிலுங்காட்டில் இத்தை குணமாக, "ஓரானைகாத்தோரானை கொன்று" என்று அருளிச்செய்தாரிறே. (மாற்றாரைமாற்றழிக்கவல்லானை) சக்ரவர்த்தித் திருமகனைப்போலே, "கச்ச" என்றுவிடாதே, குவலயாபீடத்தின் கொம்பைப்பிடுங்கி, மல்ல ரங்கத்திலே புக்கு சாணூரமுஷ்டிகர் தொடக்கமான மல்லரைக்கொன்று உயர்ந்தமஞ்சத்திலேயிருந்த கஞ்சனை மயிரைப் பிடித்திழுத்து, பூதலத்திலேபுரட்டித் திருவடிகளாலே யுதைத்து, மதிப்பறுத்து, குஞ்சிபிடித்தடித்து தன்னை யுபகரித்து, "நஸமம் யுத்தமித்யாஹு:" என்றஞ்சின பெண்களை வாழ்வித்தவனை. "வார்கடாவருவியில்" செய்தவற்றை

பி. 134-வல் ஆனைகொன்றானை-(1) வலிய குவலயாபீடம் என்னும் யானையைக்கொன்றானை (2) நமது ஸ்த்ரீத்வாபிமானத்தைப் போக்கினவனை. இந்த அபிமானம் யானைக்குள்ள வலிவுடையது.

"நஸமம்யுத்தமித்யாஹு:" (131) என்று அஞ்சின பெண்களை வாழ்வித்தவனை. (மாயனை) தன்கையில் அவர்கள்படு மத்தைத் தான்பெண்கள் கையிலேபடுமவனை. (வல்லானை கொன்றானை) குவலயாபீடத்தைக்கொன்றாற்போலே நம்முடைய ஸ்த்ரீத்வாபிமாநத்தைப் போக்கினவனை. (மாற்றாரை மாற்றழிக்கவல்லானை) சாணூரமுஷ்டிகாதிகளை நிரஸித்தாற்

யெல்லாம் நினைத்துச்சொல்லுகிறார்கள். (மாயனை) தன்கையிலே எதிரிகள் படுவதெல்லாம் நம்கையில் தான்பட்டு நமக்குத்தோற்று, அத்தோல்வியாலே நம்மைவென்றிருக்குமவனை. (வல்லானைகொன்றானை) குவலயாபீடத்தை யழித்தாற்போலே நம்முடைய ஸ்த்ரீத்வாபிமாநத்தைப்போக்கி, மல்லரை நிரஸித்தாற்போலே தன்தோளோடணைய வொட்டாத இடையருடைய ஸங்கல்பத்தைப்போக்கி, எதிரிகள் தனக்குத்தோற்றாற்போலே, நமக்குத்தான் தோற்றிருக்கிற ஆச்சர்யபூதனை. (பாட) நம்முடைய தோல்வியும் அவனுடைய வெற்றியும்தோற்றப் பாட. "ஏத்துகின்றோம் நாத்தழும்ப" என்று தோற்றவர்கள் பாடுமாபோலே, "வாயினால்பாடி" என்று-அவதாரக்ரமம் பாடினபடி சொல்லிற்று; "கேசவனைப் பாட" என்றும், "பாடிப்பறைகொண்டு" என்றும், "கீர்த்திமைபாடி" என்றும்-விரோதி நிவர்த்தகத்வம்பாடினபடி சொல்லிற்று; "முகில் வண்ணன்பேர்பாட" என்று-வடிவழகுக்குத்தோற்றுப்பாடினபடி; "சங்கொடு சக்கரமேந்தும்" என்று-திவ்யாயுதங்களுக்கும் அவயவசோபைக்கும் தோற்றுப்பாடினபடி; இங்கு, வெறுங்கையோடே நின்று வென்றபடிக்கும், தங்களுக்குத் தோற்றபடியையும் பாடுகிறார்கள்.

"எல்லே யிளங்கிளியே" என்று-பகவத் விஷயத்திலே ருசியுடையார் பேச்சும் உத்தேச்ய மென்கிறது; "இன்னமுறங்குதியோ" என்று - பாகவதஸஹவாஸம்ஸித்தித்தால் புறம்பு அந்யபரதைபண்ணுமிடம் தப்பென்கிறது; "சில்லென்றழையேன்மின்" என்றதால்-ருசியுடையார்க்கு எல்லாஞ் சொன்னாலும் பொறுக்க வேணுமென்னுமிடம் சொல்

போலே, நம்மைத் தன்னோடு சேரவொட்டாத இடைய ருடைய ஸங்கல்பத்தைப் போக்கினவனை. (மாயனை) எதிரி களைத் தான்தோற்பிக்குமாபோலே நங்கையிலேதோற்ற ஆச்சர்யபூதனை.(பாட)பாடுகைக்கு. நமக்கு அவன்தோற்குத் தோல்விக்குத் தோற்றுப்பாட. ... . கரு

135. ஸ்வாபதேசவ்யாக்யாநம். பதினைந்தாம்பாட்டு (எல்லேயித்யாதி) இப்பாட்டில்-பாகவத கோஷ்டியைக்காண ஆசைப்பட்டிருப்பாரொருவரை யெழுப்புகிறார்கள். வ்யா.— (எல்லே) அசலகத்துப்பிள்ளையை யெழுப்புகிறவர்கள், "சங் கொடு சக்கரம" இத்யாதியைப்பாட, அப்பாசுரத்தைத் தன்

னுகிறது; "நங்கைமீர் போதருகின்றேன்" என்கிறதால்-சாபலத்தாலே சிலபிறந்தாலும் பகவத்விஷயத்தில் அவகா ஹித்தவர்களை சாபலத்தால் பிறந்தவற்றை நினையாதே, கௌரவ்யதை தோற்றச் சொல்லவேணுமென்கிறது;"வல்லை யுன்கட்டுரைகள்" என்றதால்-"சில்லென்றழையேன்மின்" என்றது இவர்களுக்கு உத்தேசமானவோபாதி உன்வெட் டிமை யறிந்தோமென்றதும் அவளுக்கு உத்தேச்யமாகக் கடவதென்கிறது; "வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயி டுக" என்கிற வித்தால்-பரதோஷத்தையும் ஸ்வதோஷமாக் கிக் கொள்ளவும், கௌரவ்யரை அதிநிர்ப்பந்தம் பண்ணக் கடவதல்லவென்னுமிடத்தையும் சொல்லுகிறது. "ஒல்லைநீ போதாய்" என்கிற வித்தால் பாகவத ஸம்ச்லேஷம் ஸத்தா வித்தியென்கிறது; "உனக்கென்னவேறுடையை" என்கிற வித்தால்-"யதாதேதத்ரவர்த்தேரந்" என்கிற வேதாந்த ப்ரக்ரி யையாலே ச்ரேஷ்டர் வர்த்தித்தபடிவர்த்தியாதொழிகை தப் பென்கிறது; "எல்லாரும் போந்தாரோ" என்கிறவித்தால்-ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் உத்தேச்யரென்கிறது;"போந் தெண்ணிக்கொள்" என்கிறவித்தால்-ஒருவர் குறைந்தாலும் பகவதநுபவத்துக்குக் குறையென்றது; வல்லானைகொன் றானை" என்று தொடங்கி-திரண்டபாகவதர்களுக்கு உஜ்ஜீவ நம் "உண்ணுஞ்சோறு" என்கிறபடியே பகவத்விஷயாநு பவ மென்கிறது. ... ... கரு

மிடற்றிலே வைத்துப்பாடுகையாலே, அதுதானும் இவர்களுக்கு அத்யந்தம் ஆகர்ஷகமாயிருக்கையாலே, அவரைக் கொண்டாடுவதற்கு முன்பு "எல்லே!" என்று-ஆச்சர்யப்படுகிறார்கள். (இளங்கிளியே) கிளி பேச்சுக்கொப்பாமத்தனையல்லது பருவத்துக் கொப்பாமோ. இவ்விடத்தில்,பருவமென்பது-அபிநிவேசத்தை. அவற்றுக்கு அபிநிவேச பூர்வகமாக வார்த்தைசொல்லவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லையிறே. (இன்னம் உறங்குதியோ) நாங்களனைவரும் வந்த பின்பும் உறங்கக்கடவையோ. (சில்லென்றழையேன்மின்) இப்படி அவர்களழைக்கை ஸ்வாநுபவ விரோதியாகையாலே, "சில்லென் றழையேன்மின்" என்கிறார். (நங்கைமீர்போதருகின்றேன்) நாங்களும் நம்பேச்சும் போராதபடி உன்பூர்த்தி யென்னென்ன; நம்பாசுரத்தை மிடற்றிலே வைத்துப் பாடுகிற இவ்வநுபவத்துக்கு விரோதம் பண்ணலாகாதே யென்று எழுப்பாதே யிருக்க வேண்டியிருக்க, அதுபொறுதே யெழுப்புகிற நீங்களன்றோ பூர்ணைகள், நீங்கள் வெறுமனேயிருந்திகோளாகில் நான் புறப்பட்டு வருகிறேனென்ன; (வல்லை யுன்கட்டுரைகள்) நீர்கட்டுவார்த்தை சொல்ல ஸமர்த்தர். (பண்டேயுன்வாயறிதும்) இவ்வர்த்தம் முன்பே யுன் பாசுரங்களாலேயறிவோம். (வல்லீர்கள் நீங்களே) உங்கள் பாசுரத்தை யநுபவிக்கிற என்னுடைய அநுபவத்துக்கு விரோதத்தைப் பண்ணி, அதுக்குமேலே யென்மேலே பழியாம்படி வார்த்தை சொல்லவல்ல நீங்களன்றோ ஸமர்த்தர்களென்ன; (நானேதான் ஆயிடுக) பாகவதசேஷத்வம் ஸ்வரூபமானால் அவர்களிடும் பழியும் தம்மாலேறிட்டுக் கொள்ளுகை ஸ்வரூபமன்றோ, ஆகையாலே நானே அபராதையாயிடுக. (ஒல்லைநீ போதாய்) இப்படிபழியைத் தம்மேலே யேறிட்டுக்கொண்ட விவரை, சடக்கென இக்கோஷ்டியிலே ப்ரவேசியாய் என்கிறார்கள். (உனக்கென்ன வேறுடையை) உனக்கென்று ப்ருதக்கான பகவத்குணாநுபவமென். நாம் புறப்படுகைக்கு எல்லாரும் போந்தாரோவென்ன ; (போந்தார் போந்தெண்ணிக்கொள்) எல்லாரும் போந்தார்கள், நீயுமிக்கோஷ்டியிலே ப்ரவேசித்து மெய்க்காட்டுக்கொள். புறப்

பட்டுச் செய்யவேண்டிய தென்னென்ன ; (வல்லானை இத்யாதி) ஸ்வயத்நத்தால் கடக்க வரிதாய் ப்ராயச்சித்த விநாச்யமு மின்றிக்கேயிருக்கிற அஹங்கார நிவர்த்தகனாய் மற்றுமுள்ள காமக்ரோதாதிகளுக்கும் நிவாரகனாய் ஆச்ரிதபரதந்த்ரனைப்பாட, ஒல்லைநீ போதாய் இத்யந்வய:. ... ... கரு

பதினாறும் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி:—136. பதினாறும்பாட்டு. கீழில் பத்துப் பாட்டாலும் - முற்பட வுணர்ந்தவர்கள் உறங்குகிறவர்களை

ஆறாயிரப்படி:—பதினாறும்பாட்டு. பஞ்சலக்ஷம் குடியில் பெண்களையும் தனித்தனியே யெழுப்பினபடிக்கு உபலக்ஷ

பி. 136—திருப்பாவையில் ஒன்று முதல் 5 பாட்டுக்களில் பகவதனுபவ உபகரணங்கள் அருளிச்செய்யப்பட்டன. பிறகு 6 முதல் 15-ம் பாட்டுவரையிலுள்ள "எழுப்புகிற" பாட்டுக்களின் ஸாரம் கீழ்வருமாறு :—6-ம் பாட்டில் (=எழுப்புகிற முதற்பாட்டில்) பகவத் ஏகபோகரான ஸ்ரீவைஷ்ணவர்கள் அநந்யப்ரயோஜனராய், இவ்விஷயத்தில் தேசிகரன்றிக்கே இருப்பாரை, அவர்கள் பக்கல் பரிவாலே தேசிகர் ஆக்குகை, தங்களுக்குக்ருத்யம் என்றிருக்கை ஸ்ரீவைஷ்ணவத்வலக்ஷணம் என்று, அவர்களுடைய ஸ்வபாவத்தைச் சொல்லுகிறது. 7-ம் பாட்டில் (=எழுப்புகிற 2-ம் பாட்டில்) பகவத்விஷயத்தில் ஜ்ஞாதமான அர்த்தம் ஒருவனுக்கு விஸ்ம்ருதமானால், தங்கள் பரிவாலே, "போதயந்த:பரஸ்பரம்" என்கிறபடியே அறிவிக்கை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது. 8-ம் பாட்டில், பகவதனுபவத்தில், ப்ரத்யாஸந்நராய் இருப்பாரைக்குறித்து, ஸாபேக்ஷராயிருக்கையும், அவர்களை முன்னிட்டு ஈச்வரனைப்பற்றுகையும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது. 9-ம் பாட்டில், "தத்தஸ்யஸத்ருசம்பவேத்" என்று பூர்வார்த்த நிஷ்டராயிருப்பாரை, பகவத் ப்ரேமாதிசயத்தாலே ததீயபோகராயிருப்பார் போகார்த்தமாக ப்ரேரிக்கை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது. 10-ம் பாட்டில், "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" என்றும், "அஹம்ஸசமமப்ரிய:" என்றும் அவன் பக்ஷபதித்திருப்பார்பக்கல் நித்யஸாபேக்ஷராயிருக்கை ஸ்வரூபம் என்கிறது. 11-ம் பாட்டில், பகவத்ஸம்பந்தம் விச்சேதியாதே

யெழுப்ப, எல்லாரும் கூடிவந்து ஸ்ரீநந்தகோபர்திருமாளிகை யிலே சென்று கோயில்காப்பானையும் திருவாசல் காப்பானை யும் எழுப்புகிறார்கள். "செய்யாதன செய்யோம்" என்று பண்ணின ப்ரதிஜ்ஞையை அநுஷ்டாநபர்யந்த மாக்க

ணம் - இப்பத்துப் பெண்களையும் எழுப்பினது. முற்பட வுணர்ந்த பெண்கள் உறங்குகிறவர்களையும் எழுப்பி, எல்லா ரையும் கூட்டிப் பெருங்கூட்டமாகத் திரண்டு ஸ்ரீநந்தகோபர் திருமாளிகைவாசலிலே சென்று, கோயில்காப்பானையும் திரு வாசல்காக்கும் முதலிகளையும், திருவாசல் திருக்காப்பு நீக்க வேணுமென்று இரக்கிறார்கள். "செய்யாதன செய்யோம்" என்று பண்ணின ப்ரதிஜ்ஞையை அநுஷ்டாந பர்யந்தமாக்க வேணுமிறே. உகந்தருளின நிலங்களில் உள்ளேப்புகும்போது க்ஷேத்ராதிபதிகளையும் த்வாராத்யக்ஷர்களையும் அநுமதி கொண்டு புகவேணுமென்று ஸ்ரீபகவச்சாஸ்த்ரங்களில் சொல் லுகிற வர்த்தம் இவர்கள் ஆயர் சிறுமியராயறிந்திலர்களே

போந்த ஆசார்யஸந்தானப்ரஸூதர் நமக்குபூஜ்யர், அவர்களடி யாக பகவத்ஸமாச்ரயணம் பண்ணுகையும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது. 12-ம் பாட்டில், பகவத்விச்லேஷம் அஸ ஹ்யமாம்படி அவகாஹித்தவர்கள், நமக்கு உத்தேச்யராமளவன் றிக்கே, தத்ஸம்பந்தி ஸம்பந்திகளும் உத்தேச்யர் என்றிருக்கை ஸ்வரூபம் என்கிறது. 13-ம் பாட்டில், பகவதனுபவ பரிகரமான ஞானவைராக்ய பக்திகளால் பூர்ணராயிருப்பார் திறத்து, ததர்த்த மாக ஸ்ரீவைஷ்ணவர் ஸாபேக்ஷராயிருக்கை ஸ்வரூபம் என்கிறது. 14-ம் பாட்டில், பகவத்விஷயத்தில் மூட்டுகையாலே, அதிகரித்த நிர்வாஹகர்முன்னாக, பகவதனுபவம்செய்கை ஸ்வரூபம் என்கிறது. 15-ம் பாட்டில், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸமூஹம் அபிமதமாயிருக்கு மவர்களைக் கண்டால், அந்த ஸமூஹமாக அவர்களை உகத்தல் ஸ்வ ரூபம் என்கிறது (6000படி ஸ்வாபதேசஸாரம்) "நோன்புக்கு வந்து எழுப்புங்கோள்" என்று சொல்லி நப்பின்னைமாளிகையுட் சென்ற க்ருஷ்ணனை, நேரில் எழுப்பாமல், "கோயில்காப்பானே வாயில்காப்பானே" என்பது ததீயரைமுன்னிட்டு பற்றுகையாகிற முன்னோர்முறையை வற்புறுத்துகிறது ("செய்யாதனசெய்யோம்" என்பவர்கள்முறை) "பெரியாழ்வார் திருமகளிறே இவள்" என்பது, ஆண்டாளே கோபிமார்பாவனையில் செய்வதைப்பற்ற.

வேணுமே. ததீயரை முன்னிட்டுப் பற்றுதவன்று முறை தப்பின சூர்ப்பணகை பட்டதுபடுமத்தனை. "வல்லபரிசுவரு விப்பரேலதுகாண்டும்" என்னும் பெரியாழ்வார்திருமகளிறே யிவள்.

யாகிலும் உள்ளேபுகுரவிடவேணுமென்கிற ஆசையோடே யிருக்கையாலே, ஜ்ஞாநாதிகருடைய அநுஷ்டாநமும் கோல் விழுச்சுகாட்டாலே பலிக்கிறது. "ஜநபதஸரிதந்தரீப" "ஸ்மே ராநநாகூஷிகமலே:" "த்வதீயகம்பீரமநோநுஸாரிண:" என்கிற படியே-ஸ்ரீவைஷ்ணவர்க ளாசாரத்தை வைதிகவிதிகள் பின் செல்லுமத்தனையிறே. ராகத்தாலே ஸ்வயமேவ ப்ரவ்ருத்தரா மிடத்தில் ராகத்துக்கு விதி முற்படமாட்டாது. ராகந் தனக்கும் விதிப்படியாகாதே; "அருளினன்" என்கிற பகவத் ப்ரஸாத மடியாய்த்திறே. இனி ஓரடியிடவேண்டிலும் ருசிகார்யமாகையாலே ருச்யுத்பாதகனை அவன்றனே அடியாமித்தனையிறே. இதுதான் இதர விஷயத்தில் ருசி யன்றே; வகுத்தவிஷயத்தில் ருசியிறே. காம்யகர்மாதிகாரிகளுக்கும் த்யாஜ்யமாயிறே இருப்பது. "தச்ச்ரேஷ்டம் ஜந்ம" என்கிறது ஜந்மமாய், "ஸாவித்யாயா" என்கிறது வித்யயாய், "யந்நபந்தாய" என்கிறது கர்மமாய் வரும் வழியே யறியும்போது சாஸ்த்ரஸங்கத்தை வரியடைவேகற்று அர்த்த நிர்ணயத்துக்கும் அநுஷ்டாநத்துக்கும் நெடுங்காலஞ் செல்லும்; அத்தை அப்யஸித்தவர்கள், அதினுடைய தாத்பர்யத்தைக் கேட்ட வநந்தரம் அநுஷ்டிக்கலாயிருக்கும். குளிகை கைப்பட்டால் இரும்பு பொன்னுமாபோலே, பலிப்பதுஞ் செய்யும். நஞ்சீயர், பிள்ளைக்கு, "ரஸவாதம் கைப்பட்டவ னிருந்தவிடமெல்லாம் பொன்னுமாபோலே, ப்ரமேயம் கைப்பட்டவனுக்குச் சொல்லிற்றெல்லாம் வார்த்தையாம்" என்றார். "முமுக்ஷுர்வைசரணமஹம்ப்ரபத்யே" என்கிற ச்ருதியினுடைய உபப்ரும்ஹணமான அபயப்ரதாநத்தில், "நிவேதயதமாம்" என்கிற ச்லோகத்திலே அவனைப்பெறுமிடத்தில் ததீயர் முன்னாகப்பெறவேணுமென்று சொன்னவர்த்தத்தை இப்பாட்டாலே சொல்லுகிறது.

நாயகனாய்நின்றநந்தகோபனுடைய
    கோயில்காப்பானே! கொடித்தோன்றுந்தோரண
வாசல்காப்பானே! மணிக்கதவந்தாள்திறவாய்
    ஆயர்சிறுமியரோமுக்கறைபறை
மாயன்மணிவண்ணன்நென்னலேவாய்நேர்ந்தான்
    தூயோமாய்வந்தோம்துயிலெழப்பாடுவான்
வாயால்முன்னமுன்னம்மாற்றாதேயம்மாநீ
    நேசநிலைக்கதவம்நீக்கேலோரெம்பாவாய்.

பதவுரை :—முற்பட வுணர்ந்தவர்கள் உறங்குமவர்களை யெழுப்ப எல்லாருந் திரண்டுசென்று, நாயகனாய்நின்ற-எங்களுக்கு ஸ்வாமியாயிருக்கிற, நந்தகோபனுடைய - ஸ்ரீநந்தகோபருடைய, கோயில் - திருமாளிகையை, காப்பானே - காக்குமவனே, உள்ளே புகுரவிடவேணுமென்ன ; அவன் கண்ணாலே போங்கோளென்று கைகாட்டி நிற்க, அங்கு நின்றும் இரண்டாம் வாசலருகே சென்று, கொடி - துகில்கொடிகள், தோன்றும் - விளங்காநிற்கும தாய், தோரணம்-தோரணங்கள் கட்டியிருப்பதான, வாசல் - திரு வாசலை, காப்பானே-காக்குமவனே, மணி-அழகிய, கதவம் - கதவி னுடைய, தாள்-தாழ்ப்பாளை, திறவாய்-திறந்து உள்ளே புகுரவிட வேணுமென்ன ; பூதனையைப்போலே நீங்கள் வஞ்சகைகளாயிருப் பீர்கள், உங்களைப்புகுரவிட அச்சமாயிராநின்றதென்ன ; ஆயர் - இடக்கையும் வலக்கையும் அறியாத இடையர் வயிற்றிற் பிறந்தவர் களாய், சிறுமியரோமுக்கு-சிறுப்பெண்களானஎங்களுக்கு, மாயன்- ஆச்சரியச்செய்கைகளை யுடையனாய், மணி - நீலரத்நம் போன்ற, வண்ணன்-திருநிறத்தையுடைய ஸர்வேச்வரன், அறை - சப்தியா நின்றுள்ள, பறை - பறை தருகிறோமென்று, நென்னலே - நென் னேற்றே, வாய்நேர்ந்தான் - திருவாய் மலர்ந்தருளினானென்ன ; அவன் சொன்னானே யாகிலும் நீங்கள் ப்ரயோஜநாந்தர பரைக ளன்றோவென்ன; தூயோமாய்-அநந்யப்ரயோஜநராய், துயில்-தூக் கத்தைவிட்டு, எழ - அவன் எழுந்திருக்கும்படி, பாடுவான் - திருப பள்ளியெழுச்சி பாடுகைக்கு வந்தோம்-வந்திருக்கிறோம்; அம்மா - ஸ்வாமீ, முன்னம் முன்னம் - முதல் முதலிலே, வாயால் - உன் வாயாலே. மாற்றாதே - மறுக்காதொழியவேணும் ; அன்றியும், நேசம்-சேர்ந்திருக்கிற, கதவம்-கதவையும், நிலை - நிலையையும், நீ - நீயே, நீக்கு-திறக்கவேணுமென்கிறார்கள்.

137. வ்யா.—(நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய கோயில்காப்பானே) ஸ்ரீநந்தகோபர்திருமாளிகைக்குக் காவலாய் எங்களுக்கு நாயகனானவனே. "நாயகன்" என்று—ஸ்ரீநந்தகோபரைச் சொல்லவுமாம். இவர்களால் பெறுமவனன்றோ நாயகனாவான், இவனை "நாயகன்" என்கிறதென்னென்ன; "பாபிஷ்ட: க்ஷத்ர பந்துச்சபுண்டரீகச்ச புண்யக்ருத் ஆசார்யவத்தயாமுக்தௌ தஸ்மாதாசார்யவாந் பவேத்" (132) என்று - பலஸித்தி ஆசார்யனாலே யாகை

வ்யா.—(நாயகனாய்நின்ற) "நாயகனாய்" என்கிற நாயகத்வம், திருவாசல்காக்கும் முதலிகளுக்கு விசேஷணமாகவுமாம்; ஸ்ரீநந்தகோபர்க்கு விசேஷணமாகவுமாம்; உத்தேச்யமாக பாவிக்கிற க்ருஷ்ணன்பக்கல் சொல்லாதொழியுமத்தனை வேண்டுவது. கடகரைசேஷியென்று இருக்குமவர்களிறே யிவர்கள். ஆளவந்தார், எம்பெருமானை ஸ்தோத்ரம்பண்ணவென்றுபுக்கு, ஆசார்யஸ்தோத்ரத்திலே இழிந்தார்; அதுக்கடி, ஒருவன் ஒரு ரத்நத்தைக்கொடுத்தால் அதின்விலையறியவறியக்கொடுத்தவன்பக்கலிலே விருப்பம்பிறக்குமாபோலே; சாஸ்த்ரங்களெங்கும் அப்யஸித்துப்பார்க்குமிடத்து, உபாயமாகத் தோற்றுகிற கர்மஜ்ஞாநபக்திகள், பேற்றுக்கு ஸாதநமாகமாட்டாது, பகவத்ஸம்பந்திகளை முன்னிட்டுக்கொண்டு அவனையே உபாயமாகப் பற்றுமது பேற்றுக்குடலென்று ஸ்வப்ரபந்தத்திலே முதலிலும் முடிவிலும் பரமாசார்யரான பெரியமுதலியாரைப் பற்றினார். "த்வத்பாதமூலம்சரணம்

பி. 137—க்ருஷ்ணனை "நாயகன்" என்னாது, வாயில்காப்பானையோ, நந்தகோபரையோ நாயகன் என்பது, 132-ம் பிரமாணத்தின் கருத்தையொட்டி. பலஸித்தி ஆசார்யனால் என்னுமாபோலே, பரதானசேஷியைவிட, த்வாரசேஷிக்குப் பெருமை அதிகம் எனும் காரணத்தாலே (த்வாரசேஷியின் பெருமை, உத்யோகநிமித்தம் பெரிய அதிகாரிகளைப் பார்க்கச் செல்வோர்க்கு நன்றாகத் தெரியும் இன்றைய உலக வழக்கு.) ஸ்வாபதேசத்திலே, த்வாரசேஷிகள் ததீயர். எம்பெருமானைப்போலே, க்ருஷ்ணனும் பரதந்த்ரன் ஆசையாலே, தங்களை சேஷிகளாக்க இசைவாரோடே பரிமாறுவதற்கே இங்கு வந்து அவதரித்தான்.

யாலே, உபகாரகனை “ நாயகன் ” என்கிருர்கள். ப்ரதாந சேஷியிற் காட்டில் த்வாரசேஷிகளே யெங்களுக்கு சேஷிகளென்கிருர்கள். (நந்தகோபனுடைய கோயில்) தாங்களாச்ரயிக்கிறவன் பரதந்த்ரன், தங்களை சேஷிகளாகவைக்க விசைவாரோடே பரிமாறவிறே இவன் இங்கு வந்தவதரித்தது. “ அடியார் நிலாகின்ற வைகுந்தமோ ” என்று-பரமபதத்திலும் தான் பரதந்த்ரனாய் அவர்களிட்ட வழக்காயிறே யிருப்பது. (கோயில் காப்பானே) சிறுப்பெண்களாகையாலே, அவன் தொழிலையிட்டுச் சொல்லுகிருர்கள். “ இன்னது பிடிப்பான் ” என்னுமாபோலே. அவனும் உகக்கும்படி

ப்ரபத்யே” என்று தாம்பண்ணின ப்ரபத்தியையும் கீழிலவற்ருேடே காற்கடைக்கொண்டு, “நாதமுநிம்விலோக்ய” என்று பெரியமுதலியாரை முன்னிட்டார். ப்ரபத்திபண்ணுகிறவன் இவனுகில், பேறு அவனுலேயாகில், இவர்களை முன்னிடுகிறதென்னென்னில்; ஸாபராதனை இவன் ப்ரபத்திபண்ணுகிருன் என்று இவனுடைய பூர்வாவஸ்தையை நினைத்து ஈச்வரன் சிவிட்கென்னவும் கூடும், அதுசெய்யாதபடி, மறுக்கவொண்ணுத மனிச்சரையிட்டுப் பொறுப்பிக்கவும் வேணும். இவனுக்குப் பிறக்கும் அத்யவஸாயமும் போட்கனுகையாலே மெய்யான வ்யவஸாயமுடையாரை முன்னிட்டாலல்லது கார்யகரமாகாதென்று முன்னிடுகிறது. “பாபிஷ்ட: க்ஷத்ரபந்துச்சபுண்டரீகச்சபுண்யக்ருத் ஆசார்யவத்தயாமுக்தௌ தஸ்மாதாசார்யவாந்பவேத் ” “ வேருக வேத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம் ” “ தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்” “அடிகளடியேநினையுமடியவர்கள்தம்மடியான்” “ஆர் தொழுவார் பாதமவை தொழுவதன்றே” என்றும் இவையிறே ஆழ்வார்கள் படி. “உன்னடியார்க் காட்படுத்தாய்,” “ அடியார்க்கென்னை யாட்படுத்த,” ஈச்வரனுடையக்ருஷிக்கும்பலம் இவர்களோடே ஸம்பந்திக்கையிறே. “செல்வனைப் போல” “எத்தவல்லாரடியோம்” என்று பெரியாழ்வாரிருக்கையிறே, “ தங்கள் தேவரை வல்ல பரிசுவருவிப்பரேல் ” என்று ஆண்டாளிருந்தது. பட்டர், நஞ்சீயரை, “ பெரிய

யாலே சொல்லுகிறார்களாகவுமாம். இத்தால்-சேஷவ்ருத்தி ப்ரயுக்தமானபேரே ஆத்மாவுக்குப்பேரென்னுமிடந் தோற்று கிறது. "யதோசிதம் சேஷஇதீரிதேஜநை:" (133) என்னக் கடவதிறே.

138. (கொடித்தோன்றும் தோரணவாசல் காப்பானே) அவன் கண்ணாலே "போங்கோள்" என்று சொல்ல, திரு வாசல் காக்கிறவனை வந்தெழுப்புகிறார்கள். "கோயில் காப்

பெருமாள் தஞ்சமென்றிருக்குமவரைத் தஞ்சமென்றிரும்" என்றருளிச்செய்தார். (நாயகனாய் நின்ற நந்தகோபன்) "நாயகன் முழுவேழுலகுக்குமாய்" என்றும், "தொல்லை வானவர்தம் நாயகன்" என்றும் - ஸகல லோகங்களுக்கும் ஸகல தேவதைகளுக்கும் நாயகனை ஸர்வேச்வரன் நம்முடை நாயகனென்று யசோதைப்பிராட்டி யுட்படச்சொல்லும்படி ஆயர்நாயகனாய் நிற்க, "உந்தமடிகள் முனிவர்" என்று ப்ரஸித்தமாம்படி ஸ்வாமிகளாய்நியமிக்கிறார் ஸ்ரீநந்தகோபராகையாலே, உபயவிபூதி நாயகனை க்ருஷ்ணனுக்கும் நாயகராகையாலே, ஸ்ரீநந்தகோபரை "நாயகனாய் நின்ற நந்தகோபன்" என்கிறார்கள்.

(நந்தகோபனுடைய கோயில்) க்ருஷ்ணனுகப்பது பாரதந்த்ரியமாகையாலே, ஸ்ரீவைகுண்டத்திலிழவுதீர ஸ்ரீநந்தகோபற்குப் பிள்ளையாய், "நந்தகோபன்மகன்" என்று அவரையிட்டுத் தன்னைச் சொல்லும்படி தான் பரதந்த்ரனாய் க்ருதார்த்தனான விடமாகையாலே, அவர் அபிமாநத்திலே இவன் ஒதுங்கினான் என்னுமிடந் தோற்ற க்ருஷ்ணனுடைய கோயிலென்னாதே "நந்தகோபனுடையகோயில்" என்கிறது. "யுவராஜமமந்யத" என்று - சக்ரவர்த்தி யாசைப்பட்டுப் பெறாதே

பி. 138—கொடித்தோன்றும் தோரணம்-ஆர்த்தரக்ஷணத்துக்கென்றே கொடிகட்டுகையும் தோரணம்நடுகையும், பெண்கள் தடுமாற்றமின்றி, அவன் முகம் தரப்பெறுகைக்கே. புகுவாரைத் தன் அழகாலே கால்கட்டும் கதவின் தாள்போலே, புகுந்தவரைத் தன் அழகாலே புறப்படாதபடி கால்கட்டுவன் க்ருஷ்ணன்.

பான்" என்று - அங்குத்தைக்கு நிர்வாஹகனாய், அவன்றன்னையே கொடித்தோன்றும் தோரணவாசல் காப்பானென்னவுமாம். க்ஷேத்ராதிபதிதன்னை, "கோயில்காப்பான்" என்று, வேறே திருவாசல் காப்பானைச் சொல்லிற்றாகவுமாம். ஆர் விக்நம்பண்ணுகிறார்களோ வென்றுபயப்பட்டு எல்லார்கால்களிலும் விழுகிறார்கள். (கொடித்தோன்றுந் தோரணவாசல் காப்பானே) ஆர்த்தரக்ஷணத்துக்குக் கொடிகட்டித் தோரண

போனத்தை, "நந்தகோபனிளவரசு" என்கையாலே-ஸ்ரீநந்தகோபர் பெற்றார். "வாசுதேவன் மதுரைமன்னன்" என்கையாலே-இப்பேறு ஸ்ரீவஸுதேவர்க்குமில்லை. "நந்தன் பெற்றனன்; வாசுதேவன் பெற்றிலன்" என்று ராஜகுலங்களிலே ப்ரஸித்தமிறே. பரமபதந்தன்னிலும் வானிளவரசிறே. அதுவும் வானவர்நாடாய், கடவர்கள் முடியுடைவானவராய், அவர்கள்தான் மூதுவராய், இவன் அவர்கள் மடியிலே கிடப்பது, சிறகிலே ஒதுங்குவது, பிரம்புக்கு அஞ்சிச்சொன்னதுக்கெல்லாம் அப்படியப்படி யென்னு மிளவரசாயிறே வளருவது. "தத்ரகாஷாயிணோவ்ருத்தாந்" "மேலாப்பின் கீழ்வருவான்," "அநந்தபோகபர்யங்கே நிஷண்ணம்" என்றுஞ்சொல்லக்கடவதிறே. பக்வனைபின்பு ஸ்ரீஸத்யபாமைப் பிராட்டிபக்கலிலே ராஜ்யநூரை வைத்து தௌத்யஸாரத்யங்களிலேயிறே யதிகரித்தது. (நந்தகோபனுடைய கோயில்) "ராஜதாநீபிதுர்மம."

(கோயில்காப்பானே) தங்களுடைய மௌக்த்யத்தாலும் அவன் உகக்குமதாகையாலும் அவன் தொழிலையிட்டுச் சொல்லுகிறார்கள். (கோயில்காப்பானே) இத்தால் - சேஷவ்ருத்தி ப்ரயுக்தமான பேரே ஆத்மாவுக்கு நிலைநின்ற பேரென்னுமிடந் தோற்றுகிறது. "யதோசிதம்சேஷஇதீரிதேஜநை:" "ஏகாந்தீவ்யபதேஷ்டவ்ய:" என்றுஞ் சொல்லக்கடவதிறே. (கோயில்காப்பானே) தான் காக்குமியல்வினனாகையாலே பொழிலேழுங் காவல்பூண்டு ஸகல லோகரக்ஷணம்பண்ணுகிற எங்கள் நிதியைச்செப்பேடே நோக்குகிறவனன்றோ. ஸ்ரீநந்தகோபர் தாழ்த்தார், கம்ஸன் வெட்டியன்,

ழும் நட்டுவைத்தாற்போலே, பெண்கள் தடுமாற்றந்தீர முகப்தருகைக்கன்றோ உன்னை யிங்கு வைத்தது. (மணிக்கதவம் தாள்திறவாய்) "பொன்னியலும்மாடக்கவாடம் கடந்து புக்கு" என்னுமாபோலே புகுவாரைத் தன்னழகாலே காத்

"காப்பாருமில்லை" என்று நாங்கள் வயிறெரிந்திருக்க, எங்கள் வயிறெரிதல், தீர்க்கிறவனன்றோ நீ. (கோயில்காப்பானே) "ஏஷ ஸுப்தேஷு ஜாகர்த்தி" என்று-ஸம்ஸாரிகள் பக்கலுணர்த்தி பெறுதற்கு முன்பு தானுணர்ந்திருக்கும்; இவர்களநுமதி பெற்ற பின்பு, "நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச" என்று - தன்னுடைய ரக்ஷகத்வத்தை இவர்கள் தலையிலே வைத்துத் தான் உறங்காநிற்கும். "மஹேந்த்ரகல்பம் பரிபாலயம்ஸ்ததா" என்னக்கடவதிறே. (காப்பானே) "இவையனைத்தும் புறஞ்சூழ்காப்ப" என்று பலர்நோக்குமிடத்தில் ஆறிலொன்று கொள்ளாதே, எல்லாருடைய காவலை நீயொருவனும் கொள்ளுகிறவனே. (கோயில்காப்பானே) உன்னைக் காவலாக வைத்தது, உகவாதார் புகுராமைக்கும் உகப்பாரைப் புகுரவிடுகைக்கு மன்றோ. ஆனபின்பு, அவனை ஆசைப்பட்ட வெங்களுடைய ஆர்த்தியும் ஆராயவேண்டாவோ.

அவன் கண்ணாலே "போங்கோள்" என்று சொல்ல, திருவாசல் காக்கும முதலியை யெழுப்புகிறார்கள். (கொடித்தோன்றும்) இரண்டும் ஒருவனையே சொல்லிற்றாகவுமாம். "கோயில்காப்பானே" என்று க்ஷேத்ராதிபதியைச்சொல்லி, "வாசல்காப்பானே" என்று-திருவாசல்காக்கும்முதலியைச் சொல்லிற்றாகவுமாம். ஆராலே விக்நம்வருகிறதோ என்று பயப்பட்டு எல்லார்காலிலும் விழுகிறார்கள். "ஸர்வாந்தேவாந்நமஸ்யந்தி" என்று தேவதாந்தரங்களின் காலிலே விழுமவர்கள், பரிவர்காலிலே விழச்சொல்லவேணுமோ.

(கொடித்தோன்றும்) அல்லாத மாளிகைகளெல்லாம் தன்மாளிகையோடொத்திருக்கையாலே, பெண்கள் மத்யராத்ரியிலே வந்தால் தடுமாறவொண்ணாது, அவற்றிற்காட்டில் நம் மாளிகைக்கு வாசிதெரியவேணும் என்று கொடியுங்

சட்டும் கதவினுடைய தாள்திறவாய்.' திருவாசலுக்குள் புகு வாரைக் காற்கட்டும் இது; அவன் புக்காரைப் புறப்படாத படி காற்கட்டும் தன்னழகாலே. "தாள்திறவாய்" என்ற

தோரணமும் நட்டுவைத்தார். பெருமாளைக் காணப்பெருதே ஆர்த்தனை ஸ்ரீபரதாழ்வான், ராமாச்ரமஸூசகமான தூம வல்கலங்களைக்கண்டு தரித்தாற்போலே, கொடியையும் தோர ணத்தையும் கண்டு இவர்கள் தரிக்கைக்காகவாய்த்து நட்டு வைத்தது. தண்ணீர்ப்பந்தல்கள் தடாகங்கள் சமைத்தவர் கள், த்ருஷார்த்தருக்கு தூரத்திலே தோற்றவேணுமென்று கொடியும் தோரணமும் நட்டுத் தண்ணீர்ப்பந்தலையும் கடை யையும் கட்டுமாபோலே யன்றோ அடையாளங்களும் பண்ணி யெங்களுக்காக வன்றோ வுன்னை யிங்குவைத்தது. வாசத்தடமிறேயுள்ளுக்கிடக்கிறது. "க்ரீஷ்மே சீதமிவஹ்ர தம்" என்கிற தண்ணீருக்கு கொடியணிநெடுமதிளும் வாச லில் வானவரும் வைக்குமாபோலேயும், தயரதன் பெற்ற மரதக மணித்தடத்துக்கு "பதாகாபி ரலங்க்ருதாம்" "தத்ர காஷாயிணோவ்ருத்தாந்" என்று கொடியுங்காவலும் கடை கட்டினாற்போலேயும். (வாசல்காப்பானே) கொடியுந் தோர ணமும் அசேதநமாகையாலே யழைக்கமாட்டாது, உள்ளுக் கொண்டு புகாது, நீ சேதநனைவாசி நாங்கள் பெறவேண் டாவோ. "அர்ஜுநன் ஸுபத்ரையைக்கொண்டு போகக் கடவனென்று வாசல்காக்கும் முதலிகளை யநுமதிபண்ணி யிருங்கோள்" என்று அருளிச்செய்து வைத்தாற்போலே, இவனுக்கும் பெண்கள் புகுரக்கடவார்களென்று க்ருஷ் ணன் சொல்லிவைக்கும்; அத்தாலே யிவன் நம்மையுள்ளும் புக அநுமதிபண்ணு மென்றிருக்கிறார்கள்.

(மணிக்கதவம்) "மாமான்மகளேமணிக்கதவம்" என்று- பெண்கள் மாளிகையெல்லாம் மணிக்கதவமாம்படி ஸாதர்ம் யம் கொடுக்கிற க்ருஷ்ணன் மாளிகைவாசல், மணிக்கதவ மாகச் சொல்லவேணுமோ. (மணிக்கதவம்) பூவியல்பொழி லுந் தடமுமவன் கோயிலுங்கண்டு புறவாயில் போக்யதை வாசலில்வரவொட்டாது. கார்யவசத்தாலே வருந்தி வாச

வாறே, அவன், பயமுள்ள தேசத்திலே மத்யராத்ரத்திலே வந்து திறக்கவழைக்கிற நீங்களாரென்ன ; “ பயாநாமப ஹாரி ” (134) யிருந்தவிடத்தில் பயமென்னென்ன ; காலம் த்ரேதா யுகமாய், தமப்பனுர் சம்பராந்தகனுமாய், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகளாய், மந்த்ரிகள் வஸிஷ்டாதிக ளாய், ஊரும் திருவயோத்யையாய் பயமற்றிருக்கிறதோ ; காலம் கலிக்குத்தோள்தீண்டியான த்வாபராந்தம், தமப்ப னுர் ஸாது ஸ்ரீநந்தகோபர், இவர்கள் சிறுபிள்ளைகள், அதுக்கு

விலே வந்தவர்களை “ ஸததந்த:புரத்வாரம் ” என்று-வாசல், தன்னழகாலே உள்ளுப்புகுவாரைக் காற்கட்டும் ; அவன், புக்காரைப் புறப்படாதபடி நுழையுஞ் சிந்தையராக்கிக் கால்கட்டும் தன்போக்யதையாலே. உள்ளுப்புகும்போது ஒருவண்ணஞ் சென்று புகவேணும் ; உள்ளுப்புக்கால் “மற் ெறுன்றினைக்காணுவே” என்னப்பண்ணும். (மணிக்கதவந் தாள்திறவாய்) “பொன்னியலுமாடக்கவாடங்கடந்துபுக்கு” என்னுமாபோலே, கதவில் போக்யதையிலே நெஞ்சுங் கண் ணும் பிணிப்புண்ணுமல், திறந்து உள்ளேவிடுகிறிலேயே. “ தாள்திறவாய் ” என்றவாறே, மத்யராத்ரத்திலே வந்து திறக்க வழைக்கிறவர்கள்தானுர் பயம் மிக்க தேசத்திலே யென்ன ; பயாநாமபஹாரியிருந்த தேசத்திலே பயமென் னென்ன ; த்ரேதாயுகமாகையாலே காலமும் நல்லடிக்கால மாய், தமப்பனுர் சம்பராந்தகனுமாய், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகளாய், அவர்கள்தான், வழியேபோய் வழியே வருமவர்களுமாய், ஊரும் திருவயோத்யையாய், அஞ்சாதே பாலிலேயுண்டு பணியிலே கிடக்கிறதோ.

காலம் கலிக்குத் தோள்தீண்டியான த்வாபராந்தமாய், தமப்பனுர் ஸாது ஸ்ரீநந்தகோபராவது, இவர்கள், சிறு பிள்ளைகளாவது, அதிலே தீம்பராவது, ஊர் இடைச்சேரியா வது, அதுதான் கம்ஸன் படைவீட்டுக்கு அடுத்தணித்தாய் அவனுக்கு இறையிறுக்கு மூராவது, கம்ஸன்தான் சத்ருவா வது, எழும்பூண்டெல்லாம் அஸுரமயமாவது, ஆனபின்பு பயம்கெட்டோ இருக்கிறது ; பயப்பட வேண்டுமிடத்தில் மத்யராத்ரத்திலே கதவுதிறக்கச் சொல்லுகிருரார்? என்றுன் ;

பேலே தீம்பர்கள், ஊர் இடைச்சேரி, கம்ஸன் சத்ரு, எழும் பூண்டுகளெல்லாம் அஸுரப்பூண்டுகள், பயங்கெட்டிருக்க வாமோவென்ன ; பெண்களுக்கு பயப்படவேணுமோ வென்ன ; சூர்ப்பணகைபெண்ணன்றேவென்ன ; அவள் ராக்ஷஸி, நாங்கள் ஆயர் சிறுமியர், இவனுக்கு என்வருகிறதோ! என்று வயிறுபிடிக்கு மிடையர்க்குப் பிறந்தவர்களன்றேவென்ன; பூதனைக்குப்பின்பு இடைச்சிகளுக்கன்றே பயப்படவேண்டுகிறதென்ன; (சிறுமியரோமுக்கு) க்ரித்ரிமமறியாத சிறுபெண்களென்ன ; வார்த்தையிலே யறியலாம், வந்தகார்யத்தைச் சொல்லுங்கோளென்ன ; (அறைபறை) நோன்புக்குப் பறைவேண்டி வந்தோமென்ன; அதுவாகில் திருப்பள்ளி யுணர்ந்தால் விண்ணப்பம் செய்

எங்களுக்கஞ்சவேணுமோ, நாங்கள் பெண்பிள்ளைகளல்லவோ வென்ன, சூர்ப்பணகை ஸ்த்ரீயன்றே, "அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய்" என்று-பிற்பாடரும் கூட அஞ்சும்படியாக அவள் நலிந்தது, ஒருமாளிகையும் வாசல் காப்பாரு மில்லாமையன்றே வென்ன; அவள் ராக்ஷஸி, நாங்களிடைப்பெண்களென்ன; பூதனை இடைச்சியன்றே, இடைச்சிகளுக் கன்றே மிகவு மஞ்சவேண்டுவ தென்றான்; (ஆயர்சிறுமியரோம்) இவனுக்கு என்வருகிறதோ! என்று வயிறுபிடிக்கும் இடையர்க்குப் பிறந்த க்ரித்ரிம மறியாத கந்நிகைகளன்றே, எட்டுமிரண்டு மறியாத எங்கள் பருவத்தைப் பாராய், பூதனையைப்போலே தனித்துவந்தோமல்லோம், அஞ்சுலக்ஷம் குடியில் பெண்களெல்லாரும் கூடியன்றே வந்தது என்று (ஆயர் சிறுமியரோம்) என்கிறார்கள்.

பாலைகள் என்ன வொண்ணுமோ, கன்றுயன்றே வந்து நலியப் பார்த்தது, பருவங்கொண்டு விச்வஸிக்கவொண்ணாது, உங்கள்வார்த்தையிலே யறியலாம், வந்த கார்யம் சொல்லுங்கோ ளென்றான்; (அறைபறை) நோன்புக்குப் பறைவேண்டிவந்தோமென்று தங்கள் மௌக்த்யந்தோற்றச் சொல்லுகிறார்கள். பறைவேண்டி வந்தோமென்றவாறே, அதுவாகில் திருப்பள்ளி யுணர்ந்தவாறே விண்ணப்பஞ் செய்து தருகிறேப், நில்லுங்கோளென்றான்; (நென்ன

கிறேம், அவ்வளவும் நில்லுங்கோளென்ன; (மாயன் இத்யாதி) நீ இன்றறிவிக்க வேண்டாதபடி நென்னேற்றே சொல்லிப்போந்தான். (மாயன்) பெண்கள்கோஷ்டியில் தாழநின்று பரிமாறினபடி.

139. (மணிவண்ணன்) தாழநில்லாவிடிலும் விடவொண்ணாத வடிவழகு; பூவலர்ந்தாற்போலே வார்த்தை சொல்லுகிறபோதை ஓஷ்ட ஸ்புரணமென்னவுமாம். "வாக்மீ

லேவாய் நேர்ந்தான்) நீ இன்றறிவிக்க வேண்டாதபடி நென்னேற்றே தருவதாக வருளிச்செய்தான். (மாயன்) பெண்கள் கோஷ்டியில் தாழநின்று கையைக் காலைப்பிடித்துப் பரிமாறினபடி. (மாயன்) எங்களுக்கு இஷ்டவினியோகார்ஹனானவன். (மணிவண்ணன்) தாழநில்லாதே அபவ்யனாய் காதுகனானாலும் விடவொண்ணாத வடிவழகை யுடையவன். (மணிவண்ணன்) இவர்களைக் கிடந்தவிடத்தில் கிடக்கவொட்டாதே யிப்படி படுத்துகிற வடிவழகு. (நென்னலே) நிவாரகரின்றிக்கே கிட்டி அநுமதிகொள்ளப்பெற்ற நென்னேற்றுமொருநாளே! இன்று உன்னை அநுமதிகொள்ளுகைக்கு உன்கால் பிடிக்க வேண்டுகிற வின்றுபோலேயோ அவன் காலைக்கையைப் பிடிக்க விருக்கும் நென்னேற்றை நாள். (வாய்நேர்ந்தான்) எங்களுக்கு ஸர்வஸ்வதானம் பண்ணினான். (நென்னலேவாய்நேர்ந்தான்) திருமுளையினன்று நென்னேற்றை கையார்சக்கரமும் ஒருநாளே யென்னுமா போலே.

(மணிவண்ணன் - வாய்நேர்ந்தான்) பூவலரும்போதை நெகிழ்ச்சியாலே பிறக்கும் செவ்விபோலே, வார்த்தை யருளிச்செய்கிறபோது பண்ணின ஸ்மிதமும் நின்ற நிலையும் வடிவுமிருந்தபடிகாண். "வாக்மீ ஸ்ரீமாந்" "சோதிவாய்

பி. 139. மணிவண்ணன் - பத்மராகத்தின் (மணி) வர்ணம் போன்ற, சிவப்பான உதடுகளையுடையவன் (வண்ணன்), ஸ்புரணம் - ப்ரகாசம். சொன்னான் என்னாமல் வாய் நேர்ந்தான் என்கையால், கௌரவம் தோற்ற ஓலக்கத்திலே சொன்னதாகத்தாத்பர்யம். ஒருத்திக்குச் சொன்னவார்த்தை-த்ரௌபதிக்குச் சொன்னது.

ஸ்ரீமாந்". (135) (நென்னலே) உன்காலைப் பிடிக்கவேண்டு
கிற வின்று போலேயோ, அவன் காலைப்பிடிக்கவிருந்த
நென்னேற்றும் ஒரு நாளே! என்கிறார்கள். (வாய்நேர்ந்
தான்) ஓலக்கத்திலே ஒருவார்த்தை சொன்னானாகில் மெய்
யாக வேணுமோவென்ன; "க்ருஷ்ணேநமே மோகம்வசோ
பவேத்" (136) என்று ஒருத்திக்குச் சொன்னவார்த்தை

திறந்து." (நேர்ந்தான்) ஓலக்கத்திலே யொருவார்த்தை
யருளிச்செய்தானாகில் அத்தை மெய்யென்றிருக்கவோ,
அந்தரங்கமாகச் சொல்லவேண்டாவோ வென்றான். சொல்
லாதொழிந்தவன் செய்யலாவதில்லை, இத்தனைசொன்ன
பின்பு அவன்வார்த்தையில் பழுதுண்டோ. "ராமோத்விர்நாபி
பாஷதே" என்றும், "அந்ருதம்நோக்தபூர்வம்மே" என்றும்,
" நமேமோகம்வசோபவேத் " என்றுமன்றோ அவன்
வார்த்தையிருப்பது. செய்ய நினைத்திலனாகில் சொல்லான்,
சொன்னானாகில் தப்பாது.

அவன்உங்கள்கார்யஞ் செய்கிறோமென்றாலும் எங்களை
யிங்கு வைத்ததுக்கு ப்ரயோஜநம் வேண்டாவோ, பத்தெட்
டுத் திருமுசம் மறுக்கப்பெற்றுடையோமன்றோ நாங்கள்,
எங்கள்பணிக்குஅவனோகடவான்,ஆராயவிருக்கிறவெனக்கு
உங்களுடைய அகவாய் அறியவேண்டாவோ, உங்கள்
நினைவுதெரியாதே ஆராய்ந்தன்றி விடேனென்றான்; (தூயோ
மாய்வந்தோம்) நாங்களாராயவேண்டும்படி வந்தவர்களல்
லோம், உனக்கங்ஙன் பயப்படவேண்டும்படி பாவதோஷ
மில்லை, எங்கள் தலையிலேயும் ஒன்று கிடக்கவந்தோமுமல்
லோம், அவனுடைய ரக்ஷையும் அவனுடைய ப்ரயோஜந
மும் ஒழிய ஸ்வயத்நமாதல், ஸ்வப்ரயோஜநமாதல் பற்றவந்
தோமுமல்லோம், உபாயாந்தரங்களைக் கொண்டு பெறுவார்
களுமல்லோம், ப்ரயோஜநாந்தரங்கொண்டு அகல்வாருமல்
லோம். (தூயோமாய்வந்தோம்) தூய்மையாவது-தான்சில
வற்றை யேறிட்டுக்கொள்ளாதே நம்முடைய ரக்ஷை அவ
னாலேயென்றிருக்கை. ராவண பவநத்தை விட்டுப்போந்த
வன் வழியிலே முழுகிவந்தா னென்றில்லையே; தூசியேறின
படைநடுவே நின்றிறே பரமரஹஸ்யங் கேட்டது. (தூயோ

அவள் விஷயத்தில் பழுதாய்த்த தாகிலன்றோ இவ்வார்த்தை யும பழுதாவதென்ன ; சொன்னோனேயாகிலும் நீங்கள் ப்ரயோஜநாந்தரபரைகளன்றோ வென்ன ; (தூயோமாய் வந்தோம்) "பறை" என்று-ஒரு வ்யாஜம், அநந்ய ப்ரயோஜ நைகள் நாங்கள். அதாவது-அவனுக்கு மங்களா சாஸநம் பண்ணுமதொழியத் தங்களுக் கொன் றின்றியிலே யிருக்கை (வந்தோம்) அவன்செய்வதை நாங்கள்செய்தோமென்கை.

மாய் வந்தோம்) திருவடி, திருவாழிமோதிரமுந் தன்வடிவுங் காட்டாதே மிடற்றோசையைக் காட்டி விச்வஸிப்பித்தாற் போலே, இவர்களும் தங்கள் ஆர்த்தத்வநியைக் காட்டுகிறார் கள். "ஹநூமாந்விலலாபஹ" "ப்ரணுதச்சமஹாநேஷ:ஸ்வ ரேணமஹதாமஹாந்" என்று ஆர்த்தநாதம்கேட்டவாறே, "ஆநயைநம்" என்னவும், "அஸ்மாபிஸ்துல்யோபவது" என் னவும் பண்ணிற்றிறே. (வந்தோம்) எங்கள் வரவிலே தெரி யாதோ பாவசுத்தி, இங்குவர்த்திக்கிறவுனக்கு அடைவுதெரி யாமை யில்லையே. அவன் செய்யக்கடவதை நாங்கள் செய் தோம், எங்களோத்த ஆர்த்தியுடையா ரிருந்தவிடத்திலே யவன்சென்று காரியஞ்செய்ய வேண்டியிருக்க, நாங்க ளல்லவோ வந்துகொடு நின்றோம்.

உங்கள் தூய்மை நாடறியும்படி நீங்கள் அநந்யப்ரயோ ஜநைகளென்கைக்கு அடையாளஞ் சொல்லுங்கோள், உங்க ளாற்றாமை வந்தபோதே பறையினளவல்ல வென்றான்;(துயி லெழுபாடுவான்) என்கிறார்கள். அவனுணர்ந்தருளும்போதை யழகுக்கும் மங்களாசாஸநம் பண்ணவன்றோ நாங்கள் வந் தது. ப்ரயோஜநாந்தர பரரிறே ஓலக்கத்தில்புகுவார், அநந்ய ப்ரயோஜநரிறே கண்வளர்ந்தருளுகிற விடத்தில் புகுரப் பெறுவார். (துயிலெழுபாடுவான்) "ஸமயாபோதிதச் ஸ்ரீமாந்" என்று பிராட்டி யுறங்குகிறபடி கண்டு உகந்தாள், இவர்கள் உணருமபடிகாண ஆசைப்படுகிறார்கள். "உறக லுறகல்" என்று உணர்ந்திருப்பாரையும் உணர்த்தி அசிர்க் கும பெரியாழ்வார்பெண்பிள்ளைகள்; உன்னையும் அசிர்ப் போம்சிலர். "மதியாநின்றேநீ துயில்மேவி மகிழ்ந்ததுதான்"

140. நீங்கள் அநந்ய ப்ரயோஜநைக ளென்கைக்கு அடையாளமென்னென்ன; (துயிலெழுபாடுவான்) திருப் பள்ளியெழுச்சி பாட வந்தோம். "ஸமயாபோதிதச் ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:" (137) என்று-பிராட்டியுறங்குகிற படியைக் கண்டு உகந்தாள்; இவர்கள் இவனுணருமபடியைக் காணவாசைப்படுகிறார்கள். அங்ஙனேயாகில் திறக்

என்றும், "அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" என்றும் எழுப்புமவர்களோட்டை வாஸனையாலே இப்போது பள்ளி யுணர்த்த வந்தோம்.

இவர்கள் பாவசுத்தியை யறிந்து குணக்ரஹணம் பண்ணிவைத்தே, இவர்கள் பேச்சுக் கேட்கைக்காக இன்னமும் ஒருநிலை நின்றுபுகுரவிடவேணுமென்று நினைக்குமே, அத்தையிவர்கள் பாவஜ்ஞைக ளாகையாலே அறிந்தார்கள்; (வாயால் முன்ன முன்னமமாற்றாதே) நெஞ்சாலே சில நினைத்தாயாகிலும் வாயாலே நெருப்பைச் சொரிந்தாற் போலே நிஷேதியா தொழியவேணும். இவர்களுக்கு இவன் வாயிறே வாணாள். "வாசாதர்மமவாப்நுஹி" என்று ஒரு வாய்ச்சொல்லாலே தண்ணீர்ப் பந்தல் வைக்கலாயிருக்க, என்றிய இழக்கிறாய். "மாற்றாதே" என்று நிஷேதிக்கிறது என்னப்ராப்தி கொண்டென்ன; சேஷபூதராயிருப்பாரை மூட்டத் தொடரலாமோ, பிரானேயென்கிறார்கள். (அம்மா) ப்ரதாந சேஷிகளை நாங்களறிந்தோமோ, த்வாரசேஷிக ளன்றோ எங்களுக்குக் கடவர்கள், அவன் வாய் நேர்ந்தாலும் கார்யம் தலைக்கட்டித்தருவாய் நீயன்றோ. "வச்யதாம" என்றவர்களே, "அஸ்மாபிஸ்துல்யோ பவது" என்ன வேண்டிற்றிறே. "தாநஹம்த்விஷத:" என்றவன் "ததாமி" என்றாலும், நீங்கள் வேண்டாத விடத்தில், "நக்ஷமாமி" என்னுமே. (அம்மா) "தாரா:பித்ருக்ருதா இதி" என்று நீபுக விட்டா லன்றோ எங்களை யுகப்பது.

இவர்களார்த்தித்வத்தையும் தனக்கேற பாவசுத்தியையும் கண்டவாறே நான் நிஷேதிக்கிறேனல்லேன், தள்ளிக்

கிறேன், நில்லுங்கோளென்ன; (வாயால் முன்னமுன்னம் மாற்றாதே) எங்களை முற்பட நிஷேதியாதொழியவேணும். நெஞ்சால் நினைத்தாயாகிலும் வாயாலே நிஷேதியாதொழிய வேணும். உன் கையது கிடாயிவர்களுக்கு; அவன் கையதிறேவாணாள். "வத்யதாம்"(138) என்றவர்தாமே, "அப்மாபிஸ்துல்யோபவது" (139) என்றபின்பிறே அவன் ஸத்தை பெற்றது. (அம்மா) பச்சையிடுகிறார்கள். உள்ளிருக்கிறவனோ நாதன், நீ யல்லையோவென்ன ; தாளையுருவிக் கதவைத்தள்ளிக்கொடு புகுருங்கோள்என்ன; (நீ நேசநிலைக் கதவம் நீக்கு) அது உன்னிலும் பரிவுடைத்தான கதவு, எங்களால் தள்ளப்போகாது, நீயே திறக்கவேணுமென்கிறார்கள். சேதநாசேதந விபாகமின்றியே, இவ்வூரிலுள்ளதெல்லாம் அநுகூலமாயிருக்கிறபடி. கம்ஸன்படைவீட்டில் எல்லாம் ப்ரதிகூலமாயிருக்குமாபோலே. (நேசநிலைக்கதவம்) செறிந்திருக்கிற கதவையும் நிலையையும். (நீக்கு) நீயேவந்து திறக்க வேணும். ௧௬

கொண்டு புகுருங்கோளென்றான்; (நீ நேசநிலைக் கதவம் நீக்கு) அது உன்னிலும் பரிவுடைய கதவு, எங்களால் தள்ளப்போகாது, நீயே திறக்கவேணும். இவன் விலக்குகிறது ஸ்நேஹத்தாலேயானால், தள்ளப்போகாதேயிருக்கிறது ஸ்நேஹத்தாலேயென்றிருக்கிறார்கள். திறந்துகொள்வார் முகத்திலே யறையும்போலே. கம்ஸன் பரிகரமடைய ப்ரதிகூலமாயிருக்குமாபோலே, திருவாய்ப்பாடியில் சேதநாசேதநவிபாகமின்றியிலே யெல்லா மநுகூலமாயாய்த்திருப்பது. "அகாலபலிநோவ்ருக்ஷா:" அபிவ்ருக்ஷா:பரிம்லாநா:" என்று—அந்வயவ்யதிரேகங்களில் ஹர்ஷசோக முண்டானால் ஸ்நேஹமுண்டாகத் தட்டில்லை. சகடத்திலே அஸுரன்கிடந்தவோபாதி, அநுகூலரும் சேதநஸமாதியிலே அங்குத்தைக்கு உறுப்பாவரே. "படியாய்க்கிடந்துன்பவளவாய் காண்பேன்" என்னும்படியாய்க் கிடக்கிறாரோபாதிநிலையும் கதவுமாய் நிற்பாரையும் கிடக்குமிறே (நேசநிலைக்கதவம்) நிலையும் கதவும்பொருந்தின பொருத்தமாகவுமாம். ஆனபின்பு நீயே திறந்து புகுரவிட வேணுமென்கிறார்கள். ௧௬

141. ஸ்வாபதேச வ்யாக்யாநம். பதினாரும்பாட்டு. (நாயகனாயித்யாதி) இப்பாட்டில்-முன்பு உணர்த்தினவர்களு முணர்ந்தவர்களும் எல்லாருங்கூடி பகவதநுபவத்துக்கு தேசிகனாக ஆசார்யன் திருமாளிகையிலே புக்கு, அங்கு கோயில் காப்பானையும் திருவாசல்காப்பானையு மெழுப்புகிறார்கள். ஆசார்ய ஸம்பந்த கடகரை முன்னிட்டு ஆசார்யனைத் தொழுகையும் பெரியோர் செயலிறே, வ்யா.—(நாயகனாய் நின்ற) தன்னுடைய சேஷித்வம் ஸித்திக்கைக்காக தனக்குப் புறம்பாயிருப்பானொரு சேஷியைத்தேடிப்போக வேண்டியிருக்கையன்றிக்கே, தானே சேஷித்வ காஷ்டையிலே நிற்கிற. (நந்தகோபனுடைய பகவதநுபவஜநிதாநந்த நிர்ப்பரனாய் ஸம்ப்ரதாயரக்ஷகனான ஆசார்யனுடைய. (கோயில்காப்பானே) கோயிலுண்டு-அவனுக்கு ப்ரதிபாதகத்வேந இருப்பிடமான திருமந்த்ரம்; அத்தை அநதிகாரிகள் செவிப்படுத்தாதபடி ரக்ஷிக்குமவனே. (கொடித்தோன்றுந் தோரணவாசல் காப்பானே) இவனுடைய ரக்ஷகத்வம் விளங்காநின்றுள்ள அசார நமச்சப்தார்த்தங்களைக் காக்குமவனே.(மணிக்கதவம் தாள்திறவாய்) ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாகையாலே ச்லாக்யமாயிருந்துள்ள ஆத்ம ஸ்வரூபாநுபவத்தையும், அத்தால்வரும் ஸ்வஸ்வாதந்த்ரியப்ரதிபத்தியையும்தவிர்த்தருளாய்.பயமுள்ள தேசத்திலே அர்த்தராத்ரத்திலே வந்தெழுப்புகிறவர்கள் ஆரென்ன; (ஆயர் சிறுமியரோமுக்கு) "எம்பெருமானே உபாயோபேயம்" என்று அத்யவஸித்திருக்கும் ஜ்ஞாந ஜந்மாக்கள் திருவம்சத்திலே பிறந்த பகவதநந்யார்ஹ சேஷபூதரான பாலர்களான நமக்கு. நீங்கள்வந்தகார்யமேதென்ன; (அறைபறை) த்வநிக்கிறவாத்யம்வேண்டிவந்தோமென்ன;-புருஷார்த்தம்வேண்டிவந்தோமென்ன; ஆகில்திருப்பள்ளி யுணர்ந்தவநந்தரம் விண்ணப்பஞ்செய்து தருவிக்கிறேனென்ன; (மாயன்மணிவண்ணன்நென்னலே வாய்நேர்ந்தான்) ஆச்ரிதபரதந்த்ரனாய் ஸுலபனாய் ச்ரமஹரமான வடிவையுடைய வெம்பெருமான் நென்னேற்றே பறைதருகிறேனென்று மந:பூர்வகமாகச்சொல்லிவைத்தான். ஆகிலும் நீங்கள் ப்ரயோஜநாந்தர பரரன்றேவென்ன; (தூயோமாய்

வந்தோம்) பறையென்றது-வ்யாஜமாத்ரம், நாங்கள் அநந்ய ப்ரயோஜநராய் வந்தோம். அநந்ய ப்ரயோஜநருக்குக் கர்த்தவ்யமேதென்ன; (துயிலெழபாடுவான்) திருப்பள்ளியெழுச்சி பாட வந்தோம். ஆகில் நில்லுங்கோள், திறக்கிறேனென்ன; (வாயால் முன்னமுன்னம் மாற்றாதேயம்மா) வாக்காலே முந்துறமுன்ன நெஞ்சை நிஷேதியாதேகொள். உள்ளிருக்கிறவனே ஸ்வாமி, நீ யெங்களுக்கு ஸ்வாமியன்றோ; ஆகில் கதவைத் தள்ளிக்கொண்டு புகுருங்கோளென்ன; (நீ நேச நிலைக்கதவம் நீக்கு) நீ வாவெனிலும், ஸ்நேஹ யுக்தமான நிலையையுடைத்தான கதவைத் திறந்துவிடாய். நீ யெம்பெருமானிடத்தில் ப்ரேமாதிசயத்தாலே அநதிகாரிகளுக்கு அவனை யுள்ளபடி காட்டாதாற்போலே, ஆத்மஸ்வரூபம், ஸ்வவைலக்ஷண்யத்தாலே, அதிகாரிகளுக்கும் பகவத் விஷயத்தை மறைக்கக் கடவதாயிறேயிருப்பது... ௧௬

பதினேழாம் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி:-142. பதினேழாம்பாட்டு. இவர்களைத் திருக்காப்பு நீக்கி உள்ளேபுகுரவிட, ஸ்ரீநந்தகோபர்தொடக்க

ஆறாயிரப்படி:—பதினேழாம்பாட்டு. "நேசநிலைக் கதவம் நீக்கு" என்றார்கள் திருவாசல் காப்பானை; அவன் கருந்தாழை யுருவி உள்ளே புகவிட்டான். ஒருவரை யொருவர் சென்றெழுப்புகிறபோது அங்குத் தனித்தனியே பட்டதை யிங்கெல்லாரும் திரளப்படுகிறார்கள். இமையோர்கள் குழாம் தொழுவதுஞ் சூழ்வதும்செய்தொல்லைமாலைப்பெற்றநுபவிக்கிற திரளிறே உள்ளுத்திரள்; பெறுகைக்குப் படுகிற திரள் பெற்றநுபவிக்கிற ஸ்ரீநந்தகோபர் தொடக்கமானாரை யெழுப்புகிறார்கள், அவர்கள் முன்னாக க்ருஷ்ணனைப்பெற வேண்டுகையாலே. அதாவது-வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிகையிறே; "காலை நன்ஞாநத் துறைபடிந்தாடி" என்னுமாபோலே. நன்ஞாநமாகிறது-ப்ராப்யப்ராபகங்க ளிரண்டுமவனென்கை; "விஜ்ஞாநம்யதிதம்ப்ராப்தம்" என்னுமாபோலே. துறையாகிறது-

மானாரை யெழுப்புகிறார்கள். முற்பட க்ருஷ்ணனைப் பெண்கள் களவுகாண்கிறார்களோ வென்று நினைத்துக் காவலாகப் புறக்கட்டிலே கிடக்கிற ஸ்ரீநந்தகோபரை யெழுப்புகிறார்கள்; அநிருத்தாழ்வானை யகப்படக் களவுகாணக் கடவ பெண்கள், அவனழகுக்கு வாய்த்தலையாய் "ஸாக்ஷாந்மந் மதமந்மத:" (140) என்கிற க்ருஷ்ணனைக் களவுகாணச் சொல்லவேணுமோ.

அம்பரமேதண்ணீரேசோறேயறஞ்செய்யும்
  எம்பெருமாந்நந்தகோபாலாவெழுந்திராய்
கொம்பனார்க்கெல்லாங்கொழுந்தேகுலவிளக்கே
  எம்பெருமாட்டியசோதாயறிவுறாய்
அம்பரமூடறுத்தோங்கியுலகளந்த
  உம்பர்கோமானேயுறங்காதெழுந்திராய்
செம்பொற்கழலடிச்செல்வாபலதேவா
  உம்பியும் நீயுமுறங்கேலோரெம்பாவாய்.

"முறைதப்பாமே குருபரம் பரைவழியே பற்றுகை." த்வய நிஷ்டர்க்கு குருபரம்பரையே ப்ரதாநமாகக்கடவது. துறை தப்பாத ஸ்ரீவிபீஷணாழ்வானைப்போலே. "வேதம் வல்லார்கள்" என்றவிடத்திலே குருபரம்பரையை நினைத்து கீழ்ப்பத்துப்பாட்டாலும் அநுஷ்டித்தார்கள். "விண்ணோர் பெருமானில்" விண்ணோராகிறவர்கள் த்வாரபாலகர் தொடக்கமாக திவ்யமஹிஷிகள் ஈறாக உள்ளவர்களிறே. திருவாசல் காப்பானை அநுமதிகொண்டு உள்ளே புகுந்தவளவிலே, முதல்கட்டிலே பிள்ளைக்குக் காவலாகக்கிடந்தார் ஸ்ரீநந்கோபர்; க்ருஷ்ணனைப் பெண்கள் களவுகாண்பர்களென்று நோக்கிக்கிடப்பரே; அநிருத்தனை யகப்படக் களவுகாண்கிற பெண்கள் இவனுடைய ஸம்பந்தங்கொண்டு அவனழகுக்கும் வாய்த்தலையான இவனைப்பெற்றால் விடார்களே. "ஸாக்ஷாந்மந்மத மந்மத:" என்கிற க்ருஷ்ணனைப்பெற்றால் விடார்களென்று நோக்கிக்கொண்டு கிடக்கிறவரைச் சென்று பற்றினார்கள். உள்ளுக்கிடக்கிறது வைத்தமாநிதியுமாய்த் தாம் எடுத்த பேராளனுமாய், நிதியெடுத்தவருமானால் நோக்காதிராரிறே.

பதவுரை:—திருக்காப்பு நீக்கி இவர்களை உள்ளே புகுரவிட, முதற்கட்டிலே சென்று, அம்பரம்-வஸ்த்ரங்களும், தண்ணீர்-குளிர்ந்த தீர்த்தமும், சோறு-அடிசிலுமாகிய இவற்றை, அறம்-தர்மபுத்தியாலே, செய்யும்-தானம்பண்ணுமவராய், எம்பெருமான் எங்களுக்கு ஸ்வாமியான, நந்தகோபாலா-ஸ்ரீநந்தகோபரே, எழுந்திராய்-எழுந்திருக்கவேணுமென்ன; அவர் அநுமதி பண்ணினமை தோற்றக்கிடக்க. இரண்டாங்கட்டிலேசென்று, கொம்பு அனார்க்கெல்லாம் - வஞ்சிக்கொம்பை யொத்த ஸ்த்ரீகளுக்கெல்லாம், கொழுந்தே - முதன்மையானவளாய், குலம் - இக்குலத்துக்கு, விளக்கே—மங்களதீபம் போன்றவளாய், எம் பெருமாட்டி-எங்களுக்குஸ்வாமினியான, யசோதா - யசோதைப்பிராட்டியே, அறிவுறாய்-எழுந்திருக்க வேணுமென்ன; அவளும் ஸம்மதித்தமை தோற்றக்கிடக்க; அம்பரம்—ஆகாசத்தையெல்லாம், ஊடறுத்து-இடைவெளியாக்கிக்கொண்டு, ஓங்கி-பரமபதத்தளவும் செல்ல வளர்ந்து, உலகு-ஸகலலோகங்களையும், அளந்த-அளந்தருளுகையாலே, உம்பர் தேவர்களுக்கு, கோமானே-அரசனானவனே, உறங்காது-கண் வளர்ந்தருளாமல், எழுந்திராய்-எழுந்திருக்கவேணுமென்ன; அவன் எழுந்திராதே கிடக்க; முந்துற நம்பி மூத்தபிரானை யெழுப்பாதே முறைதப்பாகச் செய்தோமென்று; செம்-சிவந்த, பொன்-பொன்னாற்செய்த, கழல்—வீரக்கழலையுடைய, அடி- திருவடிகள் விளங்கப் பிறந்த, செல்வா—ஸ்ரீமானான, பலதேவா-பலபத்ரனே, உம்பியும்—உனக்குத் தம்பியான க்ருஷ்ணனும், நீயும்-அவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தவனான நீயும், உறங்கேல்-உறங்காதிருக்கவேணு மென்கிறார்கள்,

143. வ்யா.—(அம்பரமே இத்யாதி) புடைவையோடு தண்ணீரோடு சோறோடு வாசியறவேண்டுவார்க்குவேண்

வ்யா.—(அம்பரமே) எங்கள் அபிமதம் பெருமைக்கு உப்தன் வாசலிலேயோ நாங்கள் துவண்டுகூப்பிடுகிறது.

பி. 143—அம்பரமே தண்ணீரேசோறே-நிறைய எளிதில் தரக்கூடிய தண்ணீரோடு அம்பரமும் சோறும் வாசியறச்சொல்கிறபடியால், தண்ணீரைபபோலவே நிறைய சோறும் புடவையும்தருகை தாத்பர்யம்-புடவை என்பது ஆண்கள் அணிகிறவஸ்த்ரமும், பெண்கள் அணிகிற சேலைமுதலியனவும். எம்பெருமான் நந்தகோபாலா-எங்களுக்குத் தாரகபோஷக போக்யங்களாகிற க்ருஷ்ணனைப்

டுவதெல்லாம் புஷ்கலமாகக்கொடுக்கை. ஏவகாரத்தாலே-இதுவோ இவன் கற்றதென்னும்படி கொடுக்கை. (அறஞ்செய்யும்) பலாபிஸந்தி ரஹிதமாக ஆந்ருசம்ஸ்யத்தாலே கொடுக்கை. இத்தால் - நாட்டுக்கு தாரகாதிகளைக் கொடுக்கிற நீ, எங்கள் தாரகத்தையும் தாராயென்கை. (எம்பெருமானித்யாதி) எங்களுக்கு தாரகபோஷக போக்யங்க

அர்த்திகள் கொண்டல்லது தரியாதாற்போலே, கொடுத்தல்லது தரியாத உம்முடைய வாசலிலே நாங்கள் வந்தது, எங்கள் குறைதீர்க்கைக் காகவோ; உம்முடைய குறை தீர்க்கைக்கு நாங்கள் வந்து நிற்க, நீர்உறங்குகிறதென். தன்பக்கல் கார்யங் கொள்ளுமவர்களை, "உதாரா:" என்று க்ருஷ்ணன் சொல்லுகிறது உம்முடையவயிற்றில் பிறப்பாலேயன்றோ பெற்றாலுமங்ஙனேயோ வென்று, பெறவிட்டாலும் தரிக்கவா மவையோ நீர் கொடுப்பது, அர்த்தித்தவர்களுக்கு ரூபஸாதகமான வஸ்த்ரம், தாரகமான தண்ணீர், போஷகமான சோறு, வேண்டுவார்க்கு வேண்டுவதெல்லாம் கொடுக்கிறவரன்றோ நீர். வேண்டுவார்க்கு வேண்டுவதெல்லாம் கொடுக்கிற உமக்கு, நாங்கள்வேண்டிற்றெல்லாம் தரவேண்டாவோ. "அம்பரமே" என்கிற அவதாரணத்தாலே ஓரொன்றேயோ இவர் கொடுக்கத்தக்கது என்னும்படியிருக்கையும், அதுதான் புஷ்கலமாகக் கொடுக்கையும்.

(அறஞ்செய்யும்) யசஸ்ஸுக்குக் கொடுக்கையன்றிக்கே, பலாபிஸந்திரஹிதமாகக் கொடுக்கையும், "கர்த்தவ்யம்" என்கிற ப்ரதிபத்தியோடே தன்பேறாக ஆந்ருசம்ஸ்யத்தாலே கொடுக்கையும். (செய்யும்) "மஹாதாதபஸாராம" என்று சக்ரவர்த்தியைப்போலே அவதாரத்துக்கு அத்ருஷ்டயத்நம் பண்ணவேண்டாவிறே எடுத்தபேராளனுகையாலே. இனி பண்ணுகிறது, பிள்ளையினுடைய மங்களார்த்தமாகவும் விஜயார்த்தமாகவு மாமத்தனையிறே. பெறினுமாய் இழக்கனு

பெற்றுத்தருகிற ஸ்வாமித்வம் உடைமையாலே நந்தகோபாலர் "எம்பெருமான்" ஆயினர். பிராட்டிமுன்னுக - அடுத்தபாட்டில் சொல்லுகிற நப்பின்னைப் பிராட்டிமுன்னுக.

ளெல்லாமான க்ருஷ்ணனைப் பெற்றுத் தந்த ஸ்வாமீ, எழுந்திராய். “ஏகைகபலலாபாய ஸர்வலாபாயகேசவ:” (48) உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாப் பேறுந்தானேயானவனிறே க்ருஷ்ணன். (எம்பெருமான்) நாட்டில், பெண்களுக்கு தாநங் கொடுப்பாரில்லை தாநங் கொள்ளுகைக்கு அதிகாரிகளல்லாமையாலே. “வாஸுதேவஸ்ஸர்வம்” (39) என்றிருக்கிற எங்களுக்கு க்ருஷ்ணனைத் தரப்புகுகிறநீ விசேஷித்து எங்களுக்கு நாயகனன்றோ. உணர்ந்து, அவன் அநுமதி பண்ணினபடி தோற்றக்கிடக்க; (செம்பஞரீத்யாதி) பிராட்டி முன்பாக அவனையெழுப்புடா

மானவையோ இப்படி கொடுக்கலாவது, எங்கள் தாரகாதிகளைத் தரலாகாதோ. பலகூடி தாரகமானவையோ தரலாவது, எல்லா மொன்றேயான வஸ்துவைத் தரலாகாதோ. “ஏகைகபலலாபாய ஸர்வலாபாயகேசவ:” என்று-“எல்லாம் கண்ணன்” என்றிருக்குமவர்கள் நாங்கள். (எம்பெருமான்) எங்களுக்கு க்ருஷ்ணனைப்பெற்றுத் தந்தஸ்வாமியானவனே. (எம்பெருமான்) நாட்டில் பெண்களுக்கு தாநம்கொடுப்பாரில்லை கொள்ளுகைக்கு அதிகாரிகளல்லாமையாலே. “வாஸுதேவஸ்ஸர்வம” என்றிருக்கிற எங்களுக்கு க்ருஷ்ணனையுபகரிக்கையாலே விசேஷித்து எங்களையெழுதிக்கொண்டவனே. (நந்தகோபாலா) “நந்தகோபன் குமரன்” என்று - உம்முடைய ஆந்ருசம்ஸ்யத்தைக்கொண்டு உம்முடைய பிள்ளையென்றன்றோ நாங்களாசைப்பட்டது. பெற்றுத்தந்த நீர் குறையுந்தாரீரோ நாங்களநுபவிக்கும்படி. “தாரா:பித்ருக்ருதா இதி” என்னப்பண்ணீர் க்ருஷ்ணனையும்; பெருமாள் பிராட்டியை யுகப்பது-ஆபிஜாத்யத்தாலும் அழகாலும் குணத்தாலுமல்ல, ஐயர் விவாஹம் பண்ணுவித்தவளென்று. (எழுந்திராய்) உதாரர்க்கும் உறங்கவிரகுண்டோ. “உதாரா:” என்றது இவர்ஸம்பந்தம் கொண்டுகாணும் மகனுக்கும். “குணைர்த்தசரதோபம:” என்னக்கடவதிறே சக்ரவர்த்தித் திருமகனையும். ஸர்வேச்வரத்வகுணங்களும் பிறந்துபடைத்த குணங்களுமெல்லாம்கூடத் தும்புகூட்டினால்சக்ரவர்த்தியோடொப்பன் என்னப்போருமத்தனை. (அம்பரமே இத்யாதி)

போலே இவள்முன்னாக ஸ்ரீநந்தகோபரை யெழுப்பா விட்டதென்னென்னில்; பிள்ளைமேல் ஸங்கத்தாலே அணித்தாக உள்கட்டிலே கிடக்கையாலே பிற்பட அவளையெழுப்புகிறார்கள். (கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே) "நாரீணு வேண்டுவார்க்கு வேண்டுவது கொடுக்கிறவராகையாலும் அறஞ்செய்கிறவராகையாலும் எங்களுக்கு ஸ்வாமிகளாகையாலும் நீர்தாம் கோபாலராகையாலும் ஜீவலோகரக்ஷணம் தர்மரக்ஷணம் ஸ்வஜநரக்ஷணம் ஸ்வதர்மரக்ஷணம்பண்ணாதே யுறங்கக் கடவீரோ. (அம்பரமே) இவர்மகன் தாரஸ்தனானாலும் பேர் சொல்லப் புடைவைவழங்குகிறதும், இனிது மறித்து நீரூட்டுகிறதும், வேண்டடிசிலுண்ணும்போது களிலே சோறுவாங்கி யிடுகிறதும் இவர்வயிற்றில் பிறப்பாலேயிறே. ஹிதபுத்தியேயிறே பிதாவின்பக்கலுள்ளது.

உள்ளே புகுருங்கோளென்றதே, உணர்ந்து அநுமதி பண்ணினமைதோற்றக் கிடந்தார்; அவரநுமதியைப்பெற்று நடுவில்கட்டிலேபுக்கு யசோதைப்பிராட்டியை யெழுப்புகிறார்கள் (கொம்பனார்க்கெல்லாம்) பிராட்டியை யெழுப்பி அவன் முன்னாக அவன்பக்கலிலே கார்யங்கொள்ளுமா போலே, யசோதைப்பிராட்டியை யெழுப்பிப்பின்னை ஸ்ரீநந்த கோபரை யெழுப்ப ப்ராப்தமாயிருக்க, முற்பட அவரை யெழுப்பிப் பின்னை இவளை யெழுப்புவானென்னென்னில்; பிள்ளைபக்கலுண்டான ஸ்நேஹத்தாலே, என் புகுருகிறதோ என்னும் பயத்தாலே, "கூர்வேல் கொடுந்தொழிலன்" என்னும்படி யுருவிப்பிடித்த வேலுந்தானுமாய்ப் புறக்கட்டிலே கிடப்பர் ஸ்ரீநந்தகோபர்; இவள், பிள்ளைபக்கல் வாத்ஸல்யத்தாலும் பர்த்ருஸங்கத்தாலும் உள்கட்டிலே நடுவேயாய்த்துக் கிடப்பது. இவர்கள் இடைப்பெண்களாகையாலே கண்டதுக்கு மேற்பட அடைவறிந்து எழுப்புமவர்களல்லரே; ஆகையாலே, பிற்பட எழுப்புகிறது. ஸ்ரீநந்தகோபருடைய படுக்கைத்தலையும் விடாள், பிள்ளையுடைய தொட்டில் கால்கடையும் விடாள்; அவரைத் தன்முலையாலே யணைக்கைக்காகவும் இவர்களுக்கு முலைப்பால்கொடுத்து வளர்க்கைக்காகவும் நடுவில் கட்டிலேகிடக்கும்; பிராட்டி ஸர்வேச்

முத்தமாவது:" (92) என்று-பெண்பிறந்தார்க்கெல்லாம் தலையாகப் பிறந்தவளே. (கொம்பனார்) கொம்பு-வஞ்சிக்கொம்பு. அனார் - அத்தை அனையவர்கள் - அத்தை ஒத்தவர்கள்.

144. (குலவிளக்கே) இக்குலத்துக்கு மங்களதீபமானவளே. பெண்பிறந்தார்க்கெல்லாம் த்ருஷ்டியான விளக்கே யென்னவுமாம். (கொழுந்தே) பெண்களுக்கு ஒரு குறை

வரனையும் விபூதியையும் கைவிடாதே யிருக்குமாபோலே. இநிறே விபூதித்வயத்துக்கும் நிருக்தித்வயத்துக்கும் விஷயம். "த்ரயாணாம் பரதாதீநாம் ப்ராத்ரூணாம்தேவதாசயா ராமஸ்ய சமந:காந்தா ப்ராணேப்யோபிகரீயஸீ" "உன்திரு" "நங்கள் திரு" "திவ்யமஹிஷீம்அகிலஜகந்மாதரம்" "யஸ்யா:கடாக்ஷ லக்ஷணாம்" " ஜநநபவநப்ரீத்யா ". (கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே) இரண்டுக்கும்கடவவன் உணர்ந்தால், ஒன்றுக்குக்கடவ நீயுறங்கக்கடவையோ. வஞ்சிக் கொப்பு போலே யிருந்துள்ள ஸ்த்ரீகளுக்கெல்லாம் தலையானவளே. (கொழுந்தே) பெண்களுக்கு ஒருகுறைவரில் உன்முகமன்றோ வாடுவது. " நாரீணாமுத்தமா " என்கிற பதம்பெறும்போது அவள்படி உனக்குண்டாகவேண்டாவோ. தன்னைநலிகிற ராக்ஷஸிகளுக்கு " பவேயம்சரணம்ஹிவ: " என்று அவள் சொன்னாற்போலே, ஆர்த்தைகளாய்வந்த வெங்களையும் அஞ்சாதே என்னவேண்டாவோ.

(குலவிளக்கதே) எங்களுக்கும் உன்னுடைய குலத்துக்கும் மங்களதீபையாய்க்கொண்டு ப்ரகாசகையானவளே. விளக்கு அந்யநிரபேக்ஷமாக பதார்த்ததர்சநத்துக்கும் தன்னுடைய தர்சநத்துக்கும் ஹேதுவாயாபோலே. (கொழுந்தே குலவிளக்கே) ஆயர்கொழுந்தையும் ஆயர்பாடிக்கணிவிளக்கையும் நீகொழுந்தும் விளக்குமானால் அநுபவிக்கத்தரவேண்

பி. 144—கொழுந்தே - கொழுந்து வாடுவதுபோலவே, எங்களுக்கு ஒரு குறைவந்தால், உனது முகமன்றோ வாடும். பெருமாட்டி-க்ருஷ்ணனைப் பெற்றுத்தருகையால் ஸ்வாமிநி. ஸம்வாதத்தாலே - ஸம்மதித்தபடியாலே, விம்மவளர்ந்து - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே திருமேனி பருத்துப்பெருத்தல்.

வரில் உன்முகமன்றோ வாடுவது? (எம்பெருமாட்டி) க்ருஷ்ணனைப் பெற்றுத்தந்து எங்களுக்கு ஸ்வாமிநியானவளே. (யசோதாய்) ஸ்ரீநந்தகோபரைப் போலன்றியே ஸஜாதீயையாகையாலே நோயறியுமவளே. ஹிதகாமரான ஸ்ரீநந்தகோபரெழுந்திருக்கச் செய்தேயும் ப்ரியகாமையாயிருக்கிற நீ கிடக்கக்கடவையோ. (அறிவுறாய்) நீயறிந்தால் எங்களுக்கு

டாவோ. (எம்பெருமாட்டி) எங்களுக்கு க்ருஷ்ணனைப் பிள்ளையாகப்பெற்று உபகரித்து எங்களுக்கு ஸ்வாமிநியானவளே. (எம்பெருமாட்டி) "நாதயோர்வித்யதேபரம்." அந்த மிதுநத்தில் சொல்லுகிறதெல்லா மிங்கே சொல்லுகிறார்கள். "கண்ணனெம்பெருமான்" என்று-க்ருஷ்ணனைச் சொல்லும் பாசுரம், "எம்பெருமான் நந்தகோபாலா" என்று-ஸ்ரீநந்தகோபரைச் சொல்லக்கடவதாகையால், 'எம்பெருமாட்டி' என்பது இவளையிறே. நாரீணாமுத்தமைகளகப்பட உன் கை பார்த்திருக்கும்படியன்றோ உன்வேண்டப்பாடு. க்ருஷ்ணன் லீளாநாயகனாய் கோபீஜநவல்லபனா யிருக்குமளவன்றிக்கே, "மண்மகள்கேள்வன் மலர்மங்கைநாயகன்" என்று இடைச்சேரியாகச் சொல்லும்படி ஸ்ரீபூமீவல்லபனாகையாலே, ப்ரதாந மஹிஷிகளும் கும்பிடும்படியன்றோ உன்னுடைய ஏற்றமிருப்பது. (யசோதாய்) ஸஜாதீயையாகையாலே வ்யதிரேகத்தில் தங்கள் நோவறியு மென்கிறார்கள். (யசோதாய்) க்ருஷ்ணனும் பெண்களுமான சேர்த்திக்கு உகக்குமவளென்றிருக்கிறார்கள் இவளை. ஹிதகாமரான ஸ்ரீநந்தகோபரைப் போலன்றிறே ப்ரியகாமையான நீ. "அஞ்சவுரப்பாளசோதை" என்கிறவிது பற்றாசாகவன்றோ நாங்கள் வந்தது. இவள், பிள்ளையுடைய அருமையாலே, ஊரித்தனையும் திரிந்து அழிவுசெய்து மூலையடியே திரிந்தாலும் ஏதேனு மொருபடி செய்து இவன் ஸுகமே யிருக்கவமையுமென்று ஒருநாளொழியாமே தீம்புக்குப் பெருநிலைநிற்கும்; ஊரடைய முறைப்பட்டவாறே ஸ்மிதம் பண்ணிக்கொண்டு "செய்தாயோ" என்றும், இங்குத்தை யளவறிந்தோமென்று துணிகைக்குடலாய்விடும்; இது பற்றாசாகவன்றோ வந்தது. (அறிவுறாய்) இவளறியவமையும், பின்னை தங்களுக்கொரு குறை

ஒருகுறையுண்டோ என்கை. அவள் ஸம்வாதத்தாலே உள்ளே புக்கு க்ருஷ்ணனையெழுப்புகிறார்கள் (அம்பரமூடறுத்தோங்கி) ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்காக ஆகாசாவகாசத்தை யெல்லாம் அடங்க ஒரு ப்ரதேச நியதியில்லாதபடி ஊடறுத்து விம்மவளர்ந்து. இத்தால்-நிருபாதிக ரக்ஷகனாகையாலே ரக்ஷகத்வமே விளைநீராக வளர்ந்தபடி. (உலகளந்த) உறங்குகிற ப்ரஜையைத் தழுவிக்கொண்டு கிடக்கும் தாயைப்போலே, இருந்ததேகுடியாக எல்லார்தலையிலும் ஊறெண்ணெய் வார்த்தாற்போலே திருவடிகளைக் குளிர வைத்தபடி. (உம்பர் கோமானே) அச்செயலாலே தேவர்களை யெழுதிக்கொண்டபடி. நித்யஸூரிகளை யென்னவுமாம். அதாவது-நமக்கு சிரோபூஷணமான திருவடிகளை யிட்டுக் காடுமோடையு மளப்பதே! இதொரு வாத்ஸல்யமே! என்று வாத்ஸல்யத்துக்குத் தோற்கை.

யில்லையென்றிருக்கிறார்கள். ஸ்ரீநந்தகோபரை "எழுந்திராய்" என்றும், இவளை "அறிவுறாய்" என்றும் சொல்லுகையாலே, இவள் நெஞ்சிலே யுணர்த்தியுண்டானால் நமக்கு அவனைப் பெறலாவதென்று குவாலாக உணர்த்துகிறார்கள்.

அவளுடைய ஸம்வாதங்கொண்டு உள்ளேபுக்கு க்ருஷ்ணனை எழுப்புகிறார்கள் (அம்பரமூடறுத்து) மாதாபிதாக்களுக்கு நான் பரதந்த்ரனன்றோ வென்று உனக்குக் கண்ணழிவுசொல்லவொண்ணாதபடி அக்குறைதீர்ந்து அவளநுமதி கொண்டு வந்துபுகுந்தோம், நீ இனி உறங்குகிறதென்னென்கிறார்கள் (அம்பரமூடறுத்து; திருக்கையிலே நீர்விழுந்தவாறே ஆகாசாவகாசமடைய விம்மவளர்ந்து, வரையாதே எல்லார் தலைகளிலும் திருவடிகளைவைத்து பூமியையளந்துகொண்டு, தேவஜாதிக்குக் குடியிருப்பைக்கொடுத்து, இந்த்ராதிகளை யெழுதிக்கொண்டவனே. "இருவிசும்பினூடுபோய்" இத்யாதி. (அம்பரமூடறுத்து) இத்தால்-நிருபாதிக ரக்ஷகனாகையாலே ரக்ஷகத்வமே விளைநீராக வளர்ந்தபடி. (உலகளந்த) உறங்குகிற ப்ரஜையைத் தழுவிக்கொண்டு கிடக்கும் தாயைப்போலே, இருந்ததே குடியாக எல்லார்தலையிலும் திருவடி

145. (உறங்காதெழுந்திராய்) ஆண்களுமாய் ப்ரயோஜநாந்தரபரராக வேணுமோ முகங் கொடுக்கைக்கு, அநந்ய ப்ரயோஜநைகளுமாய் அபலைகளுமானாலாகாதோ. எங்களுக்கு முகங்காட்டும்போது சிறுப்பது பருப்பதாக வேணுமோ, இருந்தபடியே காட்டவமையாதோ. உன்வாசி

களை வைத்தபடி. (உப்பர்கோயானே) இச்செயலாலே தேவஜாதியை யெழுதிக்கொண்டவனே.

(உறங்காதெழுந்திராய்) ரக்ஷகராயிருப்பார்க்கு உறங்க விரகுண்டோ. ஆண்களுமாய் ப்ரயோஜநாந்தர பரரானவர்களுக்கோ கார்யஞ்செய்யலாவது, அபலைகளுமாய் அநந்ய ப்ரயோஜநைகளுமானவர்கள் கார்யஞ் செய்யலாகாதோ. உடம்பாரையு முகவாதாரையும் வரையாதே தீண்டுகிற நீ, ஆசைப்பட்ட எங்களைத் தீண்டலாகாதோ. நீயே அர்த்தியாய் கார்யஞ்செய்யக்கடவ வுனக்கு, நாங்களர்த்திக்கை குற்றமோ. நீ, நிபுணரான இந்த்ராதிகளுக்கேயோ கார்யஞ் செய்யலாவது, அநிபுணரான எங்கள் கார்யஞ் செய்யலாகாதோ. உறங்குவாரையுந் தழுவக்கடவ வுனக்கு உணர்ந்து வந்தாரைத் தழுவலாகாதோ. அவிசேஷஜ்ஞருமான விபூதிக்காக வுன்னைக் கொடுத்தால், வாசியறிவார்க்கு உன்னைக் கொடுக்கலாகாதோ. கழுஞ்சுமண்ணை ஆசைப்படாதே யுன்னையாசைப்பட்டது இழவுக்குடலாய்த் தாகாதே. (உம்பர்கோமானே) நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டு நிற்கிற இருப்பாகவுமாம். நமக்கு சிரோபூஷணமான திருவடிகளை யிட்டோ காடுமேடையுமளப்பது. இதொரு வாத்ஸல்யமே! என்று அவர்களும் தோற்றும்படியிருக்கை. (உறங்காதெழுந்திராய்) "ஸதா பச்யந்தி" என்று இமைகொட்டில் மூச்சடங்கும்படியானவர்களைப் படவடித்து, எங்களை உசந்து, எங்களுக்கு முகங்காட்டாதே யுறங்கி, எங்களையும் படவடியாதே எழுந்திராய். (உறங்கா

பி. 145—எங்களை உறக்கம் எழுப்பவந்தநீ - ஸம்ஸாரமாகிற உறக்கத்திலிருந்து எங்களை எழுப்பவந்த நீ.

யறியாதே அந்நியபரமான நாட்டுக்குச் ஸுலபமான திரு வடிகளை, உன்வாசியறியுமெங்களுக்குக் காட்டலாகாதோ. (உறங்காதெழுந்திராய்) எங்களுறக்க மெழுப்பவந்த நீ, உறங் கக்கடவையோ. "அநித்ரஸ்ஸததம் ராம:" (141) என்று கேட்

தெழுந்திராய்) இங்கு இருக்கவும் அளக்கவும் வேண்டா, அவ்வடிவைய நுபவிப்பிக்கவமையும். உலகளந்த திளைப்பாலே யுறங்குகிறுயென்கிற எங்கள் வயிற்றெரிச்சலைத் தீர்க்கவமை யும். "நடந்த கால்கள் நொந்தவோ," "இப்படித்தான்நீண்டு தாவியவசைவோ," "அன்றிவ்வுலகமளந்த அசைவேகொல்" "தாளாலுலகமளந்த அசைவேகொல்" என்றிறே இவர்கள் வயிறெரிவது.

(உறங்காதெழுந்திராய்) "எல்லிப்பகலென்னு தெப்போ தும்" என்கிறபடியே இராவுறக்கமின்றி, பகலுறக்கமின் றிக்கே, பாண்டவர்கள் கார்யஞ்செய்து திரிந்து, அது தலைக் கட்டினபின்பும், "ரிணம்ப்ரவ்ருத்தம்" என்று புண்பட்ட பின்பும் தானுறங்காதவனன்றே. "அநித்ரஸ்ஸததம்ராம:" என்று கேட்டிருந்தபடி அழகிதாயிருந்தது. "கோவிந்தா" என்ற சொல்லோடே, அவன்முன்னே நிற்கப்பெற்றிலோம், அவதார ப்ரயோஜநம் பெற்றிலோமென்றிருந்தபடிகளெல் லாம் அறிந்தோமிறே. (உம்பர்கோமானே யுறங்காதெழுந் திராய்) உபயவிபூதியோகத்தால்வந்த செருக்கடைய ப்ராண யிநிகளோடேயோ காட்டுவது. இப்படியிவர்கள் சொல்லச் செய்தேயும் அண்ணனை யெழுப்பி நம்மையெழுப்பிற்றிலர் கள், முறைதப்பினர்கள், எழுந்திருக்கில் நாமும் கூட்டா வுதோமென்று பேசாதேகிடந்தான்.

"ஆக்யாதி ஹ்ருதயம்ஹ்ருதா" என்றும், "ப்ரேக்ஷிதஜ் ஞாஸ்து கோஸலா:" என்றும நினைவும் பார்வையும் அறியு மவர்களாகையாலே க்ரமம்தப்பினோமாகாதே என்று நம்பி மூத்தபிரானை யெழுப்புகிறார்கள் (செம்பொற்கழலடிச்செல் வா) க்ருஷ்ணன் பின்னே பிறக்க, முன்னே பொற்கால் பொலிய இட்டுப்பிறந்த ஸ்ரீமானே. இளையபெருமாள் பின் பிறந்து பெற்ற ஸம்பத்து முன்பிறந்து பெற்றவனன்றோ நீ.

டிருந்தபடி அழகிதாயிருந்தது. இப்படி சொல்லவு மெழுந்திராமையாலே, முந்துற நம்பிமூத்தபிரானை யெழுப்பாதே முறை கேடாகச் செய்தோமென்று அவனை யெழுப்புகிறார்கள் (செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா) பிள்ளை பிறக்கைக்குப் பொற்கால் பொலியப்பிறந்த சீமானே. (உம்பியும் நீயு முறங்கேல்) உனக்கு பவ்யனான தம்பியும், "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்று அவரைப்போலேமுன் பிறந்து கைங்கர்ய ஸ்ரீயைப் படைத்தால், அவரைப்போலே உறங்காதிருக்கவும் வேண்டாவோ. பெருமாளும் பிராட்டியும் கண்வளரும்போது புறம்பே மதிளாய் நின்று நோக்குமத்தனையிறே அவர், க்ருஷ்ணனையும் பெண்ணையும் சேரவிடுமேற்ற முடையவனன்றோ நீ. "ஸந்தேசைஸ்ஸாம மதுரை: ப்ரேம கர்ப்பை ரகர்விதை:|ராமேணாச்வா ஸிதாகோப்யோ ஹரிணாஹ்ருதசேதஸ:" என்கிறபடியேஎங்களையும் அவனையும் பொருந்தவிடுகிறவுனக்கு உறங்கவிரகுண்டோ. (பலதேவா) "பலதேவர்" என்று திருநாமம். "பலிகதாமதி." (உம்பியும்நீயுமுறங்கேல்) உனக்கு பவ்யனான தம்பியும் அவனுக்குபவ்யனானநீயும் உறங்காதொழியவேணும். அவனும் பிறப்பாலே பாரதந்த்ரியம்கொண்டாட, நீ உன் ஸ்ரூபத்தாலே பாரதந்த்ரியம் கொண்டாட, நாங்களிழந்தேபோமித்தனையோ. திருவநந்தாழ்வானுக்கு பாரதந்த்ரியம் ஸ்வரூபமிறே. "சென்றால் குடையாம்."

(உம்பியும் நீயும்) உன்னுடைய ஸ்பர்சத்தாலே யுறங்குகிறவனும், அவனுடைய ஸ்பர்சத்தாலேயுறங்குகிறநீயும். அவன் பாரதந்த்ரியத்தாலேகட்டிக்கொண்டுகிடக்கும்; இவன் ஆற்றாமையாலே கட்டிக்கொண்டு கிடக்கும். "புல்குமணையாம்" என்று நாய்ச்சிமாரைப் பிரிந்தால் ஆற்றலாயிறேயிருப்பது. பிராட்டியைப் பிரிந்து நெடுநாளிருந்தார், இளையபெருமாளைப் பிரிந்தபின்பு அமுதுசெய்திலர். "லக்ஷ்மணோநகதாம் கதிம்" என்று என்தம்பிபோனவழியே நானும் போமித்தனை யென்றெழுந் தருளினார். (உம்பியும் நீயும் உறங்கேல்) படுக்கையிலேசாய்ந்தார் உறங்குமத்தனைபோக்கிபடுக்கைக்கு உறக்கமுண்டோ. அவன் படுக்கையான நீயுணர்ந்து, எங்

அவனுக்கு பவ்யனை நீயும் உறங்கா தொழியவேணும். "ஸந்தேசைஸ்ஸாமமதுரை: ப்ரேமகர்ப்பை ரகர்விதை:| ராமேணாச்வாஸிதாகோப்யோ ஹரிணாஹ்ருதசேதஸ:||" (142)என்று-எங்களையும் அவனையும் பொருந்தவிடுமவனல்லையோ நீ. ௧௭

146. ஸ்வாபதேசவ்யாக்யாநம். பதினேழாம்பாட்டு. (அம்பரமித்யாதி) இப்பாட்டில், கீழ்ப்பாட்டிலெழுப்பின கோயில்காப்பானநுமதியால் திருவாசல்காப்பான் உள்ளே புகுரவிட முந்துறஆசார்யனை யெழுப்பி, நம்பிமூத்த பிரான் முன்னாக ஈச்வரனை யெழுப்புகிறார்கள். வ்யா.—(அம்பரமித்யாதி) ஆத்மஸ்வரூபமான ஈச்வரமுக விகாஸத்தையும் தத்வர்த்தகமான போக்த்ருத்வ புத்தி நிவ்ருத்தியையும் தத்தேதுவான கைங்கர்யத்தையும் ஓரொன்றேயோ இவன் கொடுப்பது என்னும்படி தன்னுடைய ஆந்ருசம்ஸ்யத்தாலே ஸ்வயம் புருஷார்த்தமாகக் கொடாநின்றுள்ள, நமக்கு வகுத்தசேஷியாய் ஆநந்தநிர்ப்பரராய் ஆச்ரித ரக்ஷகனான ஆசார்யனே நீயுணரவேணும். (கொம்பித்யாதி) நதீப்ரவாஹங்களுக்கு வளைந்து பிழைக்கும் நீர்வஞ்சிக்கொம்புபோலே, ஸம்ஸாரிகளுடைய அபிமாநத்துக்கு அநுரூபகமாகத் தங்களை

கள் படுக்கையு முணர்த்தி எங்களுக்குத் தாராய். "பாம்பணைப் பள்ளிகொண்ட மாயனார்." (உம்பியும் நீயுமுறங்கேல்) இப்போது கிடந்துறங்க நாங்களார்த்தைகளாய் வந்தெழுப்பினபோது எழுந்திராதே நாங்கள் பட்டதெல்லாம் நீ யெங்கள் வாசலிலே படவிறே புகுகிறாய்.

செம்பொற் கழலடியித்யாதி) நாங்கள் உன்னைக் காற்கட்டுகிறபோதே எழுந்திராதே, பின்னை தனித்தனியே காற்கட்டவிறே நீதான் புகுகிறாய். இழவில், "நடலைகளையெல்லாம் நாகணைக்கேசென்றுரைத்தி" என்பார்கள்; ஊடினபோது, "தீமுகத்து நாகணை" என்பார்கள்; உகந்தபோது, "நாகணைமிசை நம்பிரான்" என்பார்கள். ஸ்ரீகுஹப்பெருமாள், மஹாராஜர், திருவடி, விபீஷணாழ்வான், எல்லார்க்கும் இளைய பெருமாளிறே புருஷகாரம். ஆனபின்பு அவனையும் எழுப்பி நீயு மெழுந்திராய் என்கிறார்கள். ௧௭

யமைத்துவைக்கும் பகவந்மந்த்ரங்களுக்கெல்லாம் ச்ரேஷ்டமாய் ப்ரபந்ந குலத்துக்கும் ப்ரகாசகமாய் எங்களுக்கு நிருபாதிகஸ்வாமிநியாய்த் தன்னை யநுஸந்திப்பார்க்கு ஆபிஜாத்யாதி ஸகலாதிசயப்ரதமான திருமந்த்ரமே அறிவுறாய். திருமந்த்ர மறிவுறுகையாவது—ஸ்வார்த்தப்ரகாசகமாகை. (அம்பரமூடறுத்தோங்கி) கிரிச்வரவாதம்பண்ணுமவர்களுக்கு அவகாசமறும்படி அபிவ்ருத்தனாய் இவ்விபூதியைத்தன் திருவடிகளின் கீழே சேர்த்துக்கொண்ட நித்யஸூரி நிர்வாஹகனானவனே, ஸம்ஸாரிகளுறக்கம் தீர்க்கவவதரித்தநீ உறங்காதொழியவேணும். இப்படி யெழுப்பின விடத்திலும் எழுந்திராமையாலே, அவனை யெழுப்புகைக்காக நம்பிமூத்தபிரானை யெழுப்புகிறார்கள். (செம்பொற்கழலடி) சிவந்துஸ்ப்ருஹணீயமாய் ஸ்வர்ணத்தாலே செய்யப்பட்டவீரக்கழலையுடைய ஸ்வசேஷத்வத்திலே பகவச்சேஷத்வம் அந்தர்க்கதமாம்படியிருக்கையாலே, திருவடிகள் சிவந்தும்பூண்டனவென்றுமாம். (செல்வா பலதேவா) இப்படி ஸம்பந்நனான பலதேவனே. (உம்பியுந்நீயுமுறங்கேல்) உனக்குபவ்யனான க்ருஷ்ணனும அவனுக்குபவ்யனான நீயும் உறங்காதொழியவேணும். ... கள

பதினெட்டாம் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி:—147. பதினெட்டாம்பாட்டு. இப்படி யெழுப்பின விடத்திலு மெழுந்திராமையாலே தங்களுக்கு

ஆறாயிரப்படி :—பதினெட்டாம்பாட்டு. (உந்துமதகளிற்றன்) கீழ்-நந்தகோபர்தொடக்கமானாரை யெழுப்பிநின்றது. இந்நேர்த்தியெல்லாம் பட்டால் ப்ரயோஜநமென், பேற்றுக்கடியானவள் தன்னைப் பற்றவேண்டாவோ. இவ்விட்டுநீட்டுதலால் ப்ரயோஜநமுண்டோ, "உறங்காதெழுந்திராய்" என்றவிடத்திலும் எழுந்திராதொழிந்தது, திருவாசல் காக்கும் முத

பி. 147-இப்படி எழுப்பின இடத்திலும்-திருவாசல்காக்கும் முதலிகள் தொடக்கமாக, நம்பி மூத்தபிரான் பலதேவன் அளவும் புருஷகாரமாகப்பற்றி எழுப்பின இடத்திலும்.

புருஷகாரபூதையான நப்பின்னைப்பிராட்டியையெழுப்புகிறார்கள். அவள் புருஷகாரமாக அவனைப் பற்றுவதே பலவ்யாப்தமாவது. இதுதான் காக விபீஷணாதிகள் பக்கலிலே காணலாம். அவளை அநாதரித்து இவனைப் பற்றின சூர்ப்பணகை

விகள் ஸ்ரீநந்தகோபருள்ளிட்டார் தொடக்கமானவர்களை யெழுப்பினாலும், பலவ்யாப்தியாவது நப்பின்னையை முன்னிட்டாலன்றோவென்று, க்ருஷ்ண னிருந்தானாகக்கொண்டு, பேற்றுக்கடியானவள்தன்னையே பற்றுவோமென்று நப்பின்னைப் பிராட்டி தன்னை யெழுப்புகிறார்கள்.

எம்பெருமானைப் பற்றுகைக்குப் பிராட்டி புருஷகாரமாக வேணும்; இவள் திருவடிகளைப் பற்றுவார்க்கு அவன் றன்னுடைய நிர்ஹேதுக க்ருபையேயமையும். "நமோஸ்துராமாய ஸலக்ஷ்மணாய தேவ்யை ச தஸ்யை ஜநகாத்மஜாயை" என்று-ஸ்ரீஜநகராஜனுக்குநீயே புன்னைக் காட்டினாற்போலே அடியேனுக்கும் நீயேவந்துஉன்னைக்காட்டியருளவேணும் என்கிறாள். நெருப்பையாற்றுகைக்குநீர்வேணும், நீரையாற்றுகைக்கு நீர்தானேயமையும். "பலதேவா" என்று கீழ் இவர்களெழுப்பின க்ருஷ்ணனுடைய தமையனார்தாம், தம்பியாய்ப் பிறந்தவவஸ்தையிலே,"ஸீதாமுவாசாதியசா: ராகவஞ்ச மஹாவ்ரதம்" என்று—பிராட்டி முன்னிலையாகசரணம்புக்கு பெருமாள் போகவொண்ணாது,நீநில் என்ற ஸங்கல்பத்தையு மழித்து அவரைப்பெற்றுப்போனானிறே.

காகம் அபராதத்தினுடைய எல்லையிலேநின்றுவ
பிராட்டி ஸந்நிதியுண்டாகையாலே ப்ரபந்நர் ெ
றைப் பெற்றது. "வதார்ஹமபிகாகுத்ஸ்த:" ப
கெட்டு, அராஜராய், நாலுமுதலிகளும் ச
பிராட்டி, தன்திருவாபரணத்தைத் திருவுத்ச
விழவிட, அதுமுன்னாகவிறே பெருமாளை,
மஹாராஜர்க்கு முன்னேவந்து கண்டிச
னில்; அப்போது, வீரத்துக்கும் அழச
பணகையோபாதி அடிமைபுக்கான்
நனைநோக்கி யருளிச்செய்தஹித
வாக்கதனைக்கல்லார்" என்றுஇ

உத
ன்
மாவ
க்கும்
முன்னி
கையாலே

அநர்த்தப்பட்டாளிறே. பெருமாளை யொழியப் பிராட்டியைப்பற்றின ராவணனும் அநர்த்தப்பட்டான்; இருவரையும்பற்றினுனிறே விபீஷணுழ்வானைப்போலே வாழலாவது. அபிநிவேச ப்ரேரிதைகளாகையாலே முந்துறவேக்ருஷ்ணன்

உண்டானுற்போலே, பிராட்டி, ராவணனைக்குறித்து அருளிச்செய்த ஹிதத்தை, சிம்சுபாவ்ருக்ஷத்திலே மறைந்திருந்து கேட்டு "ஸீதாமாச்ரித்யதேஜஸ்வீ" என்று அதிகாரி சுத்தியுண்டாய் தன்ஸ்வரூபமும்பெற்று முறையறிந்து அடிமைபுக்கு, "தாஸோஹம்" என்றவாயாலே, "தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய" என்பதுஞ் செய்து தன் ஸ்வரூபம் பெற்று, "ஏஷஸர்வஸ்வபூதஸ்து" என்று-ஸ்வரூபாநுரூபமான பலம்பெற்றதும் பிராட்டியை ஆச்ரயித்தபின்பிறே.

புருஷகார பூதையான பிராட்டியைப் பேரவைத்துப் புகுர்ந்த சூர்ப்பணகை துறையறியாமல், அநர்த்தப்பட்டாள். "தன்னை நயந்தாளை" என்கிறது குற்றமுண்டாயன்றே, கொல்லையாக்கியாகையாலேயிறே அநர்த்தப்பட்டது. பிராட்டி தன்னை முறைதப்பப்பற்றின ராவணன் முடிந்துபோனான்; இருவரையுஞ்சேரப்பற்றின விபீஷணன் அல்லல்தீர்ந்து வாழ்ந்துபோனான். "மாசுதிரிதுபெற்று நம்முடையவாழ்வு வாய்க்கின்றவா!" என்றாரிறே ஆழ்வார். தன்னுடைய கர்மஜ்ஞாநாத்யுபாயங்களாலே எம்பெருமானைப் பெறவிருக்குமது இளிப்பு; அவற்றைவிட்டு எம்பெருமானுடைய க்ருபையாலே பெறுகை சுதிர்; அந்த க்ருபைக் கடியான பிராட்டியை முன்னிட்டுக்கொண்டு பெறுகை மாசுதிர். "எனக்கே யருள்கள்செய்ய விதிசூழ்ந்ததால்" என்றார். அதுக்கடியாக "மாதவனென்றென்று" என்றார். உபாயத்தில் வந்தால் உக்திமாத்ரமமைந்தது; பலத்திலேவந்தவாறே ஸம்பந்தி ஸம்பந்திகளளவும்செல்ல வாழ்ந்துபோய்த்த தென்கிறார். "திருக்கண்டேன்" என்று தொடங்கி, "தேனமரும்பூமேல்திரு - சார்வு நமக்கென்றும்" என்றருளிச்செய்தார். இவையடியாக விழுந்த எம்பெருமானாரும் கத்யத்திலே முதலிலே தமக்கு த்வயநிஷ்டை யுண்டாகவேணுமென்று பிராட்டியை சரணம்புக்கார்; இவர்களும் அப்படியே யொருபாட்

பக்கலிலே மேல் விழுந்தார்களிவர்கள். அங்கு கார்யம் பலி யாமையாலே வழியேபோக வேணுமென்று புருஷகாரத்தி லிழிந்தார்கள். ஆச்ரயணவேளையிலேயிறே க்ரமம்பார்ப்பது, போகவேளையிலே க்ரமம் பார்க்கப்போகாதே.

உந்துமதகளிற்றனோடாததோள்வலியன்
நந்தகோபாலன்மருமகளே நப்பின்னாய்
கந்தங்கமழுங்குழலீகடைதிறவாய்
வந்தெங்குங்கோழியழைத்தனகாண்மாதவிப்

டாலே நப்பின்னைப்பிராட்டியை சரணம்புக்கு, அநந்தரம் அந்த:புரபரிகரமாய் நின்று பயங்கெட்டு, ஒருபாட்டாலே உபாயஸித்திக் குடலாக அவனைப்பற்றி, ஒருபாட்டாலே உபேயஸித்திக்குடலாக அவனையு மவளையும்பற்றி, ஆகமூன்று பாட்டாலே-நப்பின்னைப் பிராட்டியை யெழுப்பி, அவள்வழி யாக வெம்பெருமானை யெழுப்புகிறார்கள்.

அபிநிவேச ப்ரேரிதைக ளாகையாலே, சலக்கத்தாலே க்ருஷ்ணன்பக்கலிலே மேல் விழுந்தார்கள் ; ஆச்ரயணதசை யும் போகதசையும் பேதிக்கவொட்டாதபடி உபக்ரம தசை யிலே கலக்குமிறே விஷயஸ்வபாவம். பிராட்டிமுன்னாக சர ணம் புகவன்றோ ப்ரமாணங்கள் சொல்லிற்று,இங்கு நப்பின் னைப் பிராட்டியையன்றோ சரணம்புகுகிற தென்னில்;பெரிய பிராட்டியார்க்கு அல்லாத நாய்ச்சிமார் ஸ்ரக்சந்தநாதிகளோ பாதி உபகரண கோடிகளாகையாலும், இவர்களை அவயவ கோடியிலே அவள் நினைத்திருக்கையாலும், பிராட்டிக்குத் திருவடிகளோபாதியாக நினைத்திருக்கையாலே இவளைப் பற்றுகிறார்கள். பரதசையில் நாய்ச்சிமார்மூவரையும் முன்னி டக்கடவது;"கூந்தல்மலர்மங்கை" இத்யாதி. வ்யூஹாவஸ்தை யில் நாய்ச்சிமாரிருவரை முன்னிடக்கடவது;"சந்தணிமென் முலை மலராள்தரணிமங்கை" என்னக்கடவதிறே. ராமாவ தாரத்தில் பெரிய பிராட்டியா ரொருவரையுமாயிருக்கும் ; ஸ்ரீவராஹப்ராதுர்ப்பாவத்தில் ஸ்ரீபூமிப்பிராட்டியை முன்னி டும்; க்ருஷ்ணாவதாரத்துக்குப்ரதாநமஹிஷி யிவளாகையாலே நப்பின்னைப்பிராட்டியை முன்னிடுகிறார்கள்.

பந்தல்மேல்பல்கால்குயிலினங்கள்கூவினகாண்
பந்தார்விரலியுன்மைத்துனன்பேர்பாடச்
செந்தாமரைக்கையால்சீரார்வளையொலிப்ப
வந்துதிறவாய்மகிழ்ந்தேலோரெம்பாவாய்.

பதவுரை :—(ஸ்ரீநந்தகோபர் முதலானோரை யெழுப்பியும் எழுந்துவந்து கதவைத்திறவாமையாலே துயிலெழுப்புபவர்),மதம்-மதஜலம், உந்து-பெருகாநின்றுள்ள, களிற்றன்-யானைபோன்ற வலிமையையுடையராய், ஓடாத-பகைவர்படையைக் கண்டு பின்வாங்காத, தோள்வலியன்-புஜபலத்தையுடையரான, நந்தகோபாலன்-ஸ்ரீநந்தகோபருடைய, மருமகளே-மணாட்டுப்பெண்ணாய், கந்தம்கமழும்-பரிமளம் வீசாநின்றுள்ள, குழலீ-கூந்தலையுடையளான, நப்பின்னாய்—நப்பின்னைப் பிராட்டியே, கடைதிறவாய்-கதவைத் திறவா யென்ன; நான் எழுந்திருந்து வருகைக்குப் போது விடிந்ததோவென்ன; கோழி-கோழிகளானவை, எங்கும்—நாற்புறத்திலும், வந்து-வந்து சூழ்ந்துகொண்டு, அழைத்தன-கூவாநின்றன; அன்றியும், மாதவி-குருக்கத்திக்கொடிகளாகிய-பந்தல்மேல்-பந்தல்மேல் தூங்குகிற குயில்கள்-குயில்களானவை. இனம்-கூட்டம்கூட்டமாக, பல்கால்-இடைவிடாமல், கூவின-கூவாநின்றன என்று சொல்லி, பந்து-பந்தானது, ஆர்-பொருந்தியிருந்துள்ள, விரலி-விரல்களையுடையவளே, மைத்துனன் - நீயுமவனுமமைத்துனமையாடும்போது, உன்-உன்பக்ஷத்திலேயிருந்து, பேர்-அவனுடைய பேர்களை, பாட-வசைபாடும்படிக்கிடாக, சீர் ஆர்-அழகு மிக்கிருந்துள்ள, வளை-சூடகம் தோள்வளை முதலிய வளைகள், ஒலிப்ப-சப்திக்கும்படி,வந்து-நடந்துவந்து, செந்தாமரை - செந்தாமரைமலர் போன்ற, கையால்-கையாலே, மகிழ்ந்து-ஸந்தோஷத்தை யுடையளாய்க்கொண்டு, திறவாய்- திறக்கவேணுமென்கிறார்கள்.

148. வ்யா.—(உந்துமதகளிற்றன்) மதத்தை உந்தாநின்றுள்ள களிறு. மத்தகஜம்போலே யிருக்கும் பலத்தையுடையவன். ஆனைகளோடே பொரும்படியான மிடுக்கை,

---

வ்யா.—(உந்துமதகளிற்றன்) க்ருஷ்ணனை “நந்தகோபன் குமரன்” என்று ஆதரிக்குமாபோலே, இவர்களைப்பற்றுவார்க்கும் இவனுக்குப்பது சொல்லவேண்டுகையாலே ஸ்ரீநந்தகோபரை ப்ரஸங்கித்து அவரை ச்லாகிக்கை இவனுக்கு

யுடையவனென்கை. (ஓடாததோள் வலியன்)' யுத்தேசாப்யபலாயநம்" (143) என்கிறபடியே ப்ரதிபக்ஷத்தைக் கண்டால் பிற்காலியாத தோள்வலியை யுடையவன். நாட்டில் நடையாடாத தோள்வலியன் என்னவுமாம். இப்போதுஇவருடைய மிடுக்குச் சொல்லிற்று, தங்களுக்கு தநமான இம்மிதுநத்துக்குக்காவலுண்டென்ற தங்கள் பயநிவ்ருத்திக்காக. "அங்கோராய்க்குலம்" என்று-கம்ஸன்படைவீடான ஸ்ரீமதுரை

உகப்பென்று அவர்மிடுக்கைச்சொல்லுகிறார்கள். (உந்துமதகளிற்றன்) நாங்கள் வந்தெழுப்பும்படி வாரணம் பையநின்றூர்வதுபோல் மகன்செருக்கித்திரிகிறது, இவர்வயிற்றில் பிறப்பிறே. (உந்துமதகளிற்றன்) மத்தகஜத்தின் மிடுக்குப்போலே ப்ராபல்யம் கனக்கஉண்டாகையாலே, களிற்றைத் தள்ளாநின்றுள்ள மிடுக்கையுடையவரென்றுமாம். ஆனைகளோடே பொருது அவற்றை நூக்கும்படியான மிடுக்கையுடையவரென்கை. க்ருஷ்ணன் ஆனைகொன்றது ஸர்வசக்தித்வத்தாலன்றிறே, இவர்மகனுகையாலேயிறே. (உந்துமதகளிற்றன்) மத்தகஜங்களையுடையவரென்றுமாம். ஆனையுண்டோ இவர்க்கென்னில்: ஸ்ரீவஸுதேவருமதாமும் ஒருமிடறுயிருக்கையாலே அங்குள்ளது இங்கேயாய், இங்குள்ளது இங்கேயாய் ஒன்றாய்ப்போருகையாலேயும், தத்தபுத்ரனுக்கு இரண்டிலும்ப்ராப்தியுண்டாகையாலும், ஆனையுண்டாகத் தட்டில்லை. "வாரணமாயிரஞ்சூழ" என்று-திருவாய்ப்பாடியில் ஆனைகளும் பசுக்களும் கலந்து திரியுமத்தனையிறே.

(ஓடாததோள்வலியன்) "யுத்தேசாப்ய பலாயநம்"என்கிறபடியே எதிரிகளைக்கண்டால் ப்ரதிபக்ஷமிறே யென்று பிற்காலியாத தோள்வலியையுடையவன். கம்ஸன்மாளிகைக் கீழே பிள்ளைவளர்க்கவல்ல வலியிறே. குடியுடன்படக் கடமை கொண்டிருந்தானுகி லிருக்கிறான், மிகைத்தானுகில் உழக்கோல் கொண்டு தகர்க்கிறோமென்றிருப்பர். அவனும் அதறிந்திறே புகுந்து அபிபவித்தல், விட்டுக் காட்டுங்கோளென்னுதல் செய்யாதே, தான் முடியுந்தனையும் களவிலே நலியப்பார்த்தது. "அங்கோராய்க்குலம்" என்று அஞ்சினுன்

ரையை நினைத்து அஞ்சினார்க்கு அஞ்சவேண்டாதவூரிறே.
(தோள்வலியன்) "நபிபேதிகுதச்சந"(98) என்று-நம்முடைய
அநீதிகளை நினைத்தால் எம்பெருமான் தோள்வலியை நினைத்
துப் பயம் கெடுமாபோலே, க்ருஷ்ணனுடைய தீம்புகளை
நினைத்தால் இவருடைய தோள்வலியை நினைத்து பயம்கெட
லாயிருக்கை. கம்ஸன் மாளிகை நிழலிற் கீழே க்ருஷ்ணனுக்

புகலிடமானவூரிறே. கம்ஸன் படைவீடென்று அஞ்சினா
ரச்சங்கெடுவது இவ்விடைச்சேரியை நினைத்திறே. (தோள்
வலியன்) நித்யஸம்ஸாரியானவன் தன்னுடைய அநீதிகளை
நினைத்து அஞ்சினால் "நபிபேதிகுதச்சந" "அதஸோபயங்க
தோபவதி" என்று எம்பெருமானுடைய குணங்களை யநுஸந்
தித்து புத்திபூர்வகமான பாபத்துக்கு பயங்கெட்டு மார்பிலே
கைவைத்துறங்குமாபோலே, க்ருஷ்ணன் தீம்பை அநுஸந்
தித்து அஞ்சின பெண்களுக்கு இவர் தோள்மிடுக்கை
நினைத்து அச்சங்கெட்டிருக்கலாயிருக்கை; "பாஹுச்ராமஸ்ய
ஸம்ச்ரிதா" என்று பிராட்டி பெருமாள்தோளை அண்டை
கொண்டு அச்சங்கெட்டிருக்குமாபோலே. (தோள்வலியன்)
எம்பெருமானுக்கு என்புகுருகிறதோ என்று அஸ்தாநேபய
சங்கை பண்ணி மங்களாசாஸநம் பண்ணுமவர்களாகை
யாலே, க்ருஷ்ணனைப்போலே பின்னை நெடும்பணைத்தோளை
விரும்புதல்; அல்லாதபெண்களைப்போலே பின்னைதன்காதலன்
றன் பெருந்தோள் நலம்பேணுதல் செய்யாதே, தங்கள் தந
மான அம்மிதுநத்துக்குக் காவலுண்டென்று இவருடைய
தோள்மிடுக்கை அநுஸந்திக்கிறார்கள் தங்கள் பயநிவ்ருத்திக்
காக. (ஓடாததோள்வலியன்) க்ருஷ்ணன், தோளில் சாந்
தழியாமல் மல்லரைத் தகர்க்கவல்லனாய்த்து-புஜபலமுடைய
இவர் வயிற்றில் பிறப்பிறே. (ஓடாத) நாட்டில் நடை
யாடாத தோள்வலியை யுடையவ னென்னவுமாம்.

(நந்தகோபாலன்) ஐச்வர்யத்தாலும் புஜபலத்தாலுமுண்
டான மேன்மைக்குத் தமக்கவ்வருகில்லாதாபோலே, "நந்த
கோபாலாவெழுந்திராய்"என்று பெண்களோடொக்க எழுப்
பலாம்படி தாழ்ந்தாருடைய ரக்ஷணத்திலே அதிகரித்துத்

கொரு தீங்கு வாராதபடி வளர்க்கவல்ல மிடுக்கையுடைய வரிறே. (நந்தகோபாலன்மருமகளே) "ஸ்ரீகும்பர்மகளே" என்னாதே மாமனாரைச் சொல்லிற்று "ஸ்நுஷாதசரதஸ்யாஹம்சத்ருஸைந்யப்ரதாபிந:" (144) என்னுமாபோலே, அதிலும் இவளுக்கிதுப்ரியமாகையாலே. (நப்பின்னாய்) திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணன் பிறந்ததுக்குப்பின்பு ஸ்ரீநந்தகோபருக்கு மருமகளல்லாதாருண்டோ, நமக்கென் என்று பேசாதே கிடக்க; (நப்பின்னாய்) என்கிறார்கள்.

தம்மையமைத்த நீர்மையைச் சொல்லுகிறது. (மருமகளே) "ஸ்ரீகும்பர்மகளே" என்றால் அறியாள், ஸ்ரீநந்தகோபர் ஸம்பந்தமேயாய்த்து அறிந்திருப்பது. ஸ்ரீநந்தகோபர் மாமனாய் க்ருஷ்ணனுக்கு மச்சினியாய் முறையாலே பால்யத்திலே யிங்கே வளருகையாலும், இங்கே வாழ்க்கைப்பட்டபடியாலும், இவர் மருமகளென்று தன்னை நினைத்திருக்கையாலும், இவள் உகக்குமதாகையாலும், இவள் விரும்பியிருப்பது இவருடைய ஸம்பந்தம். (மருமகளே) முக்தனுக்கு ஸம்ஸாரம்போலே, இவளுக்குப் பிறந்தகம். புருஷகாரமாவார்க்கு க்ருபைவேணுமிறே. மனிச்சர் நோவறிந்து கார்யஞ்செய்யுமிடத்தில் "அறஞ்செய்யும் நந்தகோபாலனுக்கு மருமகள்" என்னலாயிருக்கும். "ஸ்நுஷாதசரதஸ்யாஹம் சத்ருஸைந்யப்ரதாபிந:" என்று எங்கள்மாமனார் இருந்தாராகில் நானிவர்கள் நடுவே இவ்விருப்பிருக்கவும் இவ்வார்த்தை சொல்லவும் வையாரிறே யென்றாள் பிராட்டி. திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணன் பிறந்ததுக்குப் பின்பு கம்புக்கற்றையும் ஒழிந்தார், இந்த ப்ராப்தி யில்லாதாருண்டோ. பஞ்சலக்ஷம் குடியில் பெண்களெல்லார்க்கும் ஸாதாரணமன்றோ, நமக்கு விசேஷணமென்னென்று பேசாதேகிடந்தாள் ; (நப்பின்னாய்) என்கிறார்கள். தங்களுடைய க்லேசம் தீர்க்கைக்கும் தங்களுடைய ஆர்த்தி யிவளுடைய நெஞ்சிலே படுத்துகைக்காகவும் "நப்பின்னாய்" என்று பேரைச்சொல்லுகிறார்கள். தாங்களார்த்தைகளாய் நம் வாசலிலேவர நம்முடைய நீர்மையாலுள்ளது தாங்கள் பெறுதபடியாலே "ஹேக்ருஷ்ண" என்று அர்ஜுநன் க்ருஷ்ணனை அஸத்கரித்து வார்த்தை சொல்லுமா

149. (கந்தம் கமழும் குழலீ) பரிமளந்தான் நிறம் பெறுவது இவள் திருக்குழலிலே சேர்ந்தவன்று என்கிறது. வாசஞ்செய் பூங்குழலாளிறே. "ஸர்வகந்த:" (145) என்கிறவனுக்கும் நாற்றம் கொடுக்கும்படி பரிமளம்மிக்க திருக்குழல். (கடைதிறவாய்) க்ருஷ்ணனுடைய பரிமளமும் உன்னுடைய பரிமளமுமாகத் தேங்கி நிற்கிற வெள்ளத்தை, கதவைத் திறந்து புறப்படவிட்டு எங்கள் விடாயைத் தீராயென்

போலே, "நப்பின்னாய்" என்று சிவட்கென்கிறார்கள். இங்கு வெறும் க்ருஷ்ணனேயாய் நாமில்லையென்னுமிடந் தோற்ற வேணுமென்று பேசாதேகிடந்தாள்.

(கந்தம் கமழும் குழலீ) என்கிறார்கள். நீ இல்லையாகில் உள்ளு இப்படியாமோ. ஸமுதாயபரிமளமும் வ்யாவ்ருத்த பரிமளமும் நாங்களறியோமோ. "ஸர்வகந்த:" என்கிற வஸ்துவுக்கும் வாசஞ்செய்பூங்குழலா ளாகையாலே நாற்றங்கொடுக்கும் குழலையுடையவளன்றோ. (கந்தங்கமழும்) நீ ப்ரதிவசநம பண்ணிற்றிலையாகிலும் உன்குழலில் பரிமளம் ப்ரதி வசநம் பண்ணுநின்றதுகாண். (கமழுங்குழலீ) பரிமளந்தான் நிறம்பெறுவது இவள் குழலிலே சேர்ந்த பின்பு; "வாசப்பூங்குழல் பின்னைதோள்கள் மணந்ததும்" என்னக்கடவதிறே. (கடைதிறவாய்) "மலரிட்டு நாமுடியோம்" என்கிற ப்ரதிஜ்ஞைக்கு விபரீதமாகப் பூமுடித்தோம் என்று நினைக்கிறார்களாகக்கொண்டு பேசாதேகிடக்க; நாங்களும் எங்கள் சென்னிப் பூவைச்சூடும்படி வாசலைத் திறவாயென்கிறார்கள். அப்பரிமளத்தைத் தலைநீர்ப்பாட்டிலே அநுபவித்து, அப்பரிமளத்தினுடைய வெள்ளத்திலே அழுந்திக்கிடந்து, அவனைத்தனியே யநுபவிக்கவமையுமோ, வாசலைத் திறந்து எங்களையும் கூட்டிக்கொண்டு அநுபவிக்கப்பாராய். (கடைதிறவாய்) கிண்ணகத்தை யணைசெய்து கொடு கிடப்

பி. 149—முக்தன், தனது பந்துக்கள் மத்தியில் தான் விடுத்த சரீரத்தைப்பற்றி நினைக்காததுபோல என்பது 146-ம பிரமாணத்தின் தாத்பர்யம் - குயிலும் உன்னை நினையாதே உறங்கும் என்பதற்கு உவமையாயிற்று.

கிறார்கள். கிண்ணகத்தை யணைசெய்தாற்போலே, அடைத்துக்கொண்டு கிடவாதே வெட்டிவிடாய். மத்யராத்ரியிலே யெழுப்புகிறதென்னென்ன; போதுவிடிந்தது என்ன; விடிந்ததுக கடையாள மென்னென்ன; (கோழியழைத்தனகாண்) கோழி கூவாநின்றதென்ன ; ஒரு கோழி கூவினவாறே

பாரைப்போலே அடைத்துக்கொடு கிடவாதே, க்ருஷ்ணனுடையவும உன்னுடையவும் தேங்கி நிற்கிற பரிமளத்தைக் கடை வெட்டிவிட்டு, எல்லாரும் வாழும்படி புறப்படவிடாய். பெருவெள்ளத்தை யணைசெய்வாருண்டோ. எங்களார்த்தி தீராயாகில் பெருவெள்ளத்திலும் போக்குவிட வேண்டாவோ. உன்னுடைய போக்யதையிலே அவனழுந்திக்கிடக்கும்; அவனை அநுபவிக்கைக்கு நாங்கள் வேண்டாவோ, அநுபவிப்பார்தான், அவயவங்களோடும் ஸ்ரக்சந்தநாதிகளோடுமன்றோ அநுபவிப்பது. "உன்றன்திருவுள்ளமிடர் கெடுந்தோறும்" என்னக்கடவதிறே.

மத்யராத்ரத்திலே யெழுப்புகிறதென், கதவு திறக்கும் போது விடிய வேண்டாவோ வென்ன ; போது விடிந்தது காணென்ன ; விடிந்தமைக் கடையாள மென்னென்ன ; விடிந்தமைக் கடையாளமன்றோ கோழி கூவுகிற தென்ன ; ஒரு கோழி கூவிற்றாகில் விடிந்ததாக வேணுமோ வென்ன ; திரள் கூவாநின்ற தென்ன ; ஒன்றினுடைய சப்தத்தைக் கேட்டுப் பலவுமுணர்ந்ததென்ன; (எங்கும்) ஸர்வதோதிக்கமாகக் கோழி கூவாநின்றதுகாண் என்ன ; உணர்ந்தவை யெல்லாங்கூட எங்குமொக்கக் கூப்பிட்டுப் பின்னையும் உறங்குமாகையாலே இப்போதே கூப்பிட்டு அடங்குமென்ன ; (வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்) என்கிறார்கள். வாசலைப்பற்றித் திறவென்பாரைப்போலேயன்றோ அழைக்கின்றன. (கோழியழைத்தனகாண்) "கோழிகூவென்னுமால்" என்று உனக்குவயிறெரிகைக்குடலல்லாமையாலே தெரியாகே. எங்களைப்போலே கோழியழைப்பதன் முன்னம் குளிக்கவும் வேண்டாவே. உனக்கு எங்கும் சாமக்கோழி கூவக்கடவதாயன்றோ விருப்பது, அவையிப்போதே

விடிந்ததாமோ வென்ன ; (வந்தெங்கும் கோழி யழைத்தன காண்) தொடைதட்டி எழுப்புவாரைப்போலே ஸர்வதோ திக்கமாகக் கோழி கூவாநின்றது. உணர்ந்தவையெல்லாம் கூப்பிடும், பின்னை யுறங்குமது சாமக்கோழியென்ன; (மாத விப்பந்தல்மேலித்யாதி) ஸ்பர்சஸுகத்தாலே, "நோபஜநம்ஸ் மரந்" (146) என்னும்படியான படுக்கையிலேயுறங்குகிறவை யுணரும்போது விடியவேண்டாவோவென்ன ; ஒரு குயில் ஒருக்கால் கூவுங்காட்டில் விடிந்ததோவென்ன ; (பல்காற் குயிலினங்கள் கூவினகாண்) உன்னுடைய நோக்கும் ஸ்பர்ச முமே தாரகமான குயில், விடிந்தும் உன்னைக்காணப் பெறு மையாலே கூவா நின்றது. ஒரு குயில் கூவினது ப்ரமாண மோவென்ன ; உன்னைக்காணப்பெறுமையாலே நாக்கு ஒட்

கிளர்ந்தடங்கும், இது அடையாள மாகமாட்டாது, வேற டையாளமுண்டாகில் சொல்லுங்கோளென்ன.

(மாதவிப் பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்) குயில்கூவினது அடையாளமன்றோவென்ன ; ஒரு குயில் கூவுங்காட்டில் விடிந்ததாகவேணுமோவென்ன; குயி லினங்கள் கூவிற்றென்ன ; ஒரு திரளாக ஒருக்கால் கூவும் போது விடிவுக்குடலோவென்ன; திரள் திரளாகப் பலகால் கூவுமது உடலன்றோவென்ன ; உறக்கத்தாலே அநந்தலிலே பலகால் வாய் வெருவிற் றித்தனை சாணுங்கோ ளென்ன ; (மாதவிப் பந்தல்மேல்) இப்பூம்படுக்கையினின்று மிவை யுணரும்போது விடிந்ததாக வேண்டாவோ. "நோபஜநம் ஸ்மரந்" என்று முக்தன் ஸம்ஸாரயாத்ரையை மறக்குமா போலே, படுக்கைவாய்ப்பாலே கிடந்துறங்குகிறவவையும் உணரும்போது விடிந்ததாக வேண்டாவோ. (பல்கால்) உன் நோக்கும் உன்பேச்சுமே தாரகமாக இருக்கக்கடவளிவை, உன்னைக்காணாதே கதறி நாக்கு ஒட்டக்காண் புகுகிறது. "தயிர்ப்பழம்சோற்றொடு." (இனங்கள்) மேலே யொருதிரள் கூவாநின்றது, கீழே யொருதிரள் கூவா நின்றது, இவை யொன்றுங்கேளாதே உறங்குகிறாய் நீயேயிறே. "கண்படை கொள்ளுமிளங்குயிலே" என்று உறங்குகிற குயில்களை

டினமைதோற்ற (இனங்கள் கூவினகாண்) இனமினமாகக் குயில்கள் கூவினகாண்.

150. (பந்தார்விரலி) பந்தும்கையும் பொருந்தியிருக்கிறபடி. நாங்கள் சைதந்யத்தை விட்டு அசேதநமாகப் பெற்றோமோ. அதென்னென்னில்; உன்கைக்குள்ளே கிடக்க

யும் எழுப்பிக் கூவச்சொல்லுமவர்களாகையாலே, கூவாதபோது நீங்கள் இங்குத்து நின்றுந்துரத்திவிடுவிகோமென்று ஊரிலிருக்கிறத்தைக்கூலியாகக்கொண்டு கூப்பிடுகிறதித்தனை, விடிந்ததன்று என்று பேசாதே கிடந்தாள் ;

(பந்தார் விரலி) நாங்கள் சொன்னவற்றுக்கெல்லாம் ஓரோரஉத்தரஞ்சொல்லி உள்ளேகிடக்கிறது உன்குறை வறுகையிறே. (பந்தார்விரலி) நாங்கள் சொன்னதெல்லாம உன்

பி. 150பந்தார்விரலி-க்ருஷ்ணனோடே பந்தாடி, அவனைத் தோற்கடித்து, அவனை ஒருகையாலும்பந்தைஒருகையாலும்அணைத்துக்கொண்டுஉறங்கும்நப்பின்னை போகோபகரணமானநாராயணன் ஒருகையில், லீலோபகரணமான பந்து (நாலவர்க்கத்துள் ஒரு பொருள்) மற்றொருகையில் (நாராயணன் விபூதிமான். பந்து லீலா விபூதியில் ஒரு பகுதி)-உபய ஸம்பந்தத்தால் வந்த பருஷகாரம் ஸ்பஷ்டம். செந்தாமரைக்கை—அவன் ஆசைப்படுகிற கை. ஈச்வர ஸ்வாதந்த்ரியத்துக்கு நீங்கள் அஞ்சவேண்டாம் என்கிற கை. சீரார் வளை-கழலாதிருப்பதே வளையலுக்குச் சீர்மை. எங்கள் வளையல்கள் க்ருஷ்ணவிச்லேஷத்தால் கழலும் வளையல்களாம். இந்தபாட்டு' எம்பெருமானார் விசேஷித்து உகந்தபாட்டு. இதைப்பற்றிய வரலாறு கீழ்வருமாறு:—மாதுகரத்துப் பெரிய நம்பி திருமாளிகைக்குத் திருப்பாவை அநுஸந்தாநத்தோடே எம்பெருமானார் எழுந்தருளினார்-அப்போது திருமாளிகையின்வாசற்கதவு தாளிடப்பட்டு இருந்தது. திருப்பாவை அநுஸந்தாநத்தைக் கேட்டவுடன், அத்துழாய் எனும் செல்விஉந்து கதவைத் தனது கைவளையல்கள் ஒலிப்பத் திறந்த அளவிலே, "இப்பாட்டாகப் பிராட்டிஎன்று த்யானித்து மோஹித்தார்" என்ற அதனைக்கேட்ட நம்பி "உந்துமத களிறுகாதே" என்றருளிச்செய்தார். (இத்யாதி வரலாறுகளைஒட்டி, எம்பெருமானாருக்குத் திருப்பாவை ஜீயர் எனும் திருநாமமும் உண்டு.)

லாமே; இப்போது பந்தின் ப்ரஸங்கமென்னென்றால்; க்ருஷ்ணனோடே பந்தடித்து அவனைத்தோற்பித்து அவனையொருகையாலும் பந்தையொருகையாலும் அணைத்துக்கொண்டு கிடக்கை. அவன் இவளுக்கு போகோபகரணம்; பந்து லீலோபகரணம். ஒருகையில் நாரமாய்த்து; ஒருகையில் நாராயணனாய்த்து. ஒருகையிலே விபூதியாய்த்து; ஒருகையிலே

நெஞ்சில் படாதொழிகிறது உன் செருக்கிறே. க்ருஷ்ணனையொருகையாலும் பந்தையொருகையாலும் காணும் அணைத்துக்கொண்டு கிடக்கிறது. லீலோபகரணங்களை உறங்கும்போதும் கைவிடாதபடியாய்த்து மௌக்த்யமிருக்கிறபடி. இவளுக்குபோகோபகரணம் க்ருஷ்ணன்; பந்துலீலோபகரணம். அவன், செண்டையொருகையாலும் இவளையொருகையாலும் அணைத்துக்கொண்டு கிடக்குமாபோலே, அவனுக்கு லீலாயஷ்டிபோலே இவளுக்குப் பந்து. ஒருகையிலே விபூதி, விபூதிமான் ஒருகையிலே; நாரம் ஒருகையிலே, அயநம் ஒருகையிலே; சேஷி ஒருகையிலே, சேஷம் ஒருகையிலே; போக்யம் ஒருகையிலே, போகஸ்தாநம் ஒருகையிலே. (பந்தார்விரலி) நாங்களும் அசேதநமானோமாகில் பந்தோபாதி யெங்களையும் பேணி உன்கைக்குள்ளே கிடக்கலாய்த்தே. நீயுமவனுங்கூடவிருந்த சேர்த்தியிலே நாங்கள் கிட்டி எங்கள்கையிலிருக்க வேண்டாவோ பந்து. எங்கள் கையிலும் பண்ணி பந்து பிடிக்க வேண்டாவோ வுனக்கு. உனக்கு, சேர்த்தியாலே பந்துகையிலே பொருந்திற்று; எங்களுக்குத் தழும்புங்கூட மறைந்துபோயிற்று. "ஜ்யாகிணகர்க்கசை" என்று அவனுக்கு வில்பிடித்த தழும்புபோலே, இவளுக்குப் பந்துபிடித்த தழும்பு. செருக்காலே யுங்களைநினைத்திலேனாகச் சொல்லாநின்றிகோள், நீங்கள்தான் வந்தகார்யம் எது, என்செய்ய நினைக்கிறதென்ன; (உன்மைத்துனன் பேர்பாட) நீயுமவனும் மைத்துனமை கொண்டாடி ஒருவர்க்கொருவர் உத்தரஞ்சொல்லி ஒத்துநில்லாமே, உன்பக்ஷத்திலே நின்று உனக்காக அவனை ஒத்தனைசொல்ல, நீ ஒன்றுக்கு ஒன்பது சொல்லும்போது நாங்கள் அவனுடைய தோல்வியும் உன்னுடைய வெற்றியுந்தோற்ற அவனுக்கு வேண்டுவனவெல்லாஞ்

விபூதிமானாய்த்து. இத்தால்-"அஸ்யேசாநாஜகதோ விஷ்ணு பத்நீ" (147) என்கிறபடியே உபயஸம்பந்தத்தால் வந்த புருஷகாரபாவந்தோற்றுகிறது. நீங்கள் வந்ததென்னென்ன; (உன்மைத்துனன்பேர்பாட)நீயுமவனும் மைத்துனமையாடி ஒருவர்க்கொருவர் ஒன்றுக்கு ஒன்பதுசொல்லி இட்டீடு கொள்ளும்போது, உன்பக்ஷத்திலே நாங்கள்நின்று அவன் தோல்விக்கு வசைபாட. அவனுக்குள்ள தெல்லாஞ் சொல்லிக்கொடுக்கைக்கும், இருவரும் ஒன்றாய்ச் செல்லுமன்று செல்லவும்.பிரிந்தால்தாய்பக்ஷத்திலேயிறே ப்ரஜைகள்நிற்பது.

சொல்லி உபகரிக்கவந்தோம். இருவரும் ஒன்றாய்ச் செல்லுமன்றும் பிரிந்தவன்றும் தாய் கூற்றிலேயிறே ப்ரஜைகள் நிற்பது. "அஸ்மிந்மயாஸார்த்தம்" என்று பெருமாள் தோல்வியைப் பிராட்டி இளையபெருமாளுக்கு அருளிச்செய்ய, அவர் பிராட்டி பக்ஷத்திலே நின்றாற்போலே (உன்மைத்துனன்) த்வயத்தில் ப்ரதமபதத்திற்படியே சொல்லுகிறார்கள். (பேர்பாட) நாமம் பலவுமுடை நாரணனம்பியிறே. "இன்னாளடியான், இன்னாளடியான்" என்று படைத்தபேருக்கு ஒரு அவதியில்லை. [நாரணன்நம்பி] நீர் ஊர்ப்பொதுவாம்படி ஸர்வாதிகரன்றோ. [நம்பி] உனக்கு நாங்கள் வேணுமோ, எங்களையொழியவே பூர்ணரன்றோ வென்று இப்படி அவனுக்குள்ளன சொல்லிக்கொடுக்க, ஆகில் க்ருஷ்ணா திறஎன்றாள்; உன்னுடையார்க்கு நானோ திறப்பேனென்றான்; நீங்கள்வருவுதி கோளென்று யந்த்ரத்தாலே திறக்கலாம்படி பண்ணி வைத்தேன், திறந்துகொண்டு புகுருங்கோளென்றாள்;

எங்களாலே பெற விருக்குமவர்களோ நாங்கள், உன்னாலேபெறவிருக்குமவர்களன்றோ, உன்கைபார்த்திருக்கிறவர்களன்றோ என்கிறார்கள் (செந்தாமரைக்கையால்) "மாசுச:" என்னும் கைபார்த்திருப்பார்களோ நாங்கள், "பவேயம் சரணம்ஹிவ:" என்னும் கைபார்த்திருக்கிறவர்களன்றோ நாங்கள். நீங்கள் பண்ணினபாபத்துக்கு அஞ்சவேண்டாவென்கிறது பெருமாளுடைய "அஞ்சேல்" என்ற திருக்கை,ஈச்வரஸ்வாதந்த்ரியத்துக்கு அஞ்சவேண்டாவென்

அவள் இங்ஙனேயாகில் திறந்துகொண்டுபுகுருங்கோளென்ன; (செந்தாமரைக்கையால்) நீதானேவந்து திறக்கவேணும். செந்தாமரைக்கை-அவனுமாசைப்படும்கை. “பவேயம்சரணம்ஹிவ:”(148)என்றுஈச்வரஸ்வாதந்த்ரியத்துக்கு நீங்கள் அஞ்சவேண்டாவென்னும் கை. அவள் அப்படியே செய்கிறேனென்று முன்கையில்வளையைச்சடுக்கித் திறக்கப்புக்காள்;(சீரார்வளை யொலிப்ப) வளைக்குச்சீர்மையாவது-சழலாதிருக்கை. சங்குதங்கு முன்கைநங்கையிறே. நாங்களுமந்தத்வநிகேட்டுவாழும்படி. தங்கள்கைகள், “இருகையில் சங்கிவை

கிறது பெரியபிராட்டியார் வைத்தஞ்சலென்றகை. அவனுமாசைப்படுங்கையிறே. “தன்கைமே லென்கைவைத்து” என்று அணிமிகுதாமரைக்கைக்குமேலே யிருக்கும் கை. (செந்தாமரைக்கையால்)பந்துபிடித்துச் சிவந்தகை. இவர்கள் உருவியிருக்க வளையோசை செவிப்பட வொண்ணாதென்று வளையை யேறச்சடுக்கித் திறக்கப்புக்காள்; (சீரார்வளை யொலிப்ப) மேகம்முழங்கி வர்ஷிக்குமாபோலே. (சீரார்வளை) கவியார் சோற்றை வர்ணிக்குமாபோலே, வளையைக்கொண்டாடுகிறார்கள். வளைக்குச் சீர்மையாவது-கையில் நின்றும் கழலாதொழிகை. விச்லேஷவ்யஸநம அநுபவியாத வளை. “சங்குதங்குமுன்கை” “ஒண்டொடியாள் திருமகள்” என்னக்கடவதிறே. இருகையில் சங்கிவைநில்லாவிறே. “கழல் வளையே யாக்கினர்” என்று வெறுக்கிறவர்களே யிவர்கள். “சூடகமே தோள்வளையே” என்று இவர்கள் ப்ரார்த்தித்தபடியே அவர்கள் பூட்டினாலிறே இவர்களுக்குவளையுள்ளது. (ஒலிப்ப) க்ருஷ்ணனும் ஓசையிலே உணர்ந்து, நாங்களும் இத்த்வநிகேட்டு வாழும்படியாகவேணும்.

க்ருஷ்ண ஸம்ச்லேஷத்துக்கு விரோதமாக வொண்ணாதென்று கிடந்தவிடத்தே கிடந்து திறக்கப்புக்காள்; (வந்து திறவாய்) எங்களுக்காக நாலடிவந்தாய் என்னும் தரம் நாங்கள் பெறும்படி வந்து திறக்கவேணும். நாலடிபோய் வந்தாகிலும் திறக்கவேணும். அவனும் நாங்களும் உன் நடையழகு கண்டு வாழும்படி வரவேணும். (மகிழ்ந்து) பெண்கள்

நில்லா" என்றிறே யிருப்பது. "கூடகமே தோள்வளையே" என்று—அவர்களிருவரும் கூடிப் பூட்டினவிறே இவர்களுக்குள்ளது. இப்பாட்டு, எம்பெருமானார் விசேஷித்து உகந்த பாட்டு. (வந்து திறவாய்) யந்த்ரத்தாலே திறக்கவொண்ணாது, உன்னுடைய நடையழகு காணும்படி வந்து திற. (மகிழ்ந்து) அர்த்திகள் வாசலிலே நிற்க வேறநுபவமுண்டோ வென்று தர்மத்துக்குத் திறக்கையன்றிக்கே, பேறும் உன்னதாகவேணும். (மகிழ்ந்து) க்ருஷ்ணஸம்ச்லேஷத்தாலே வந்த ஹர்ஷப்ரகர்ஷம் முகத்திலே தோற்றும்படி. என்னவுமாம்... கஅ

151. ஸ்வாபதேச வ்யாக்யாநம். பதினெட்டாம்பாட்டு. (உந்தித்யாதி) இப்பாட்டில், ஆசார்யன் முன்னாக நம்பிமூத்த பிரானை முன்னிட்டெழுப்பினவிடத்திலும் எழுந்திராமையாலே அவனை யெழுப்புகைக்காக புருஷகாரபூதையான நப்பின்னைப் பிராட்டியை யெழுப்புகிறார்கள். வ்யா.—(உந்து மதகளிற்றன்) உந்மஸ்தகமான அஹங்காரத்தை வெல்லும்

ஆர்த்தர்களாய் வந்தார்களென்று சாஸ்த்ரார்த்தம் கொண்டாடவொண்ணாது, உகந்துவந்துதிறக்கவேணும். (மகிழ்ந்து) "மார்சழிநீராட" என்று நாங்கள் நோற்றநோன்புக்கு உன்னுடைய மகிழ்ச்சி காண்கையன்றோ. யதோபாஸநம் பலமாக வேண்டாவோ.

(மகிழ்ந்து) தர்மத்துக்குத் திறக்கவொண்ணாது, பேறு உன்னதாகவேணும். அவன்பக்கலிலும் காட்டில் அவனுடையார்பக்கல் நீ இருக்கு மிருப்பு உன்னுடைய முகவிகாஸங்களிலே தோற்றும்படியாகவேணும். (வந்துதிறவாய்) கண்ணுக்கு இரையிடவேணும். (வளையொலிப்ப) செவியின்பட்டினி தீர்க்கவேணும். (பேர்பாட) நாக்குப்பட்டினி ஒழியவேணும். (செந்தாமரைக்கையால்) ஸ்பர்சேந்த்ரியம் வயிறு நிறையவேணும். (கந்தம்கமழும்குழலீ) க்ராணேந்த்ரியத்துக்கு இரையிடவேணும். (மகிழ்ந்து) இப்படி ஸர்வேந்த்ரியங்களுக்கும் விடாய் தீர்ந்தால் மாநஸமான உகப்பு உன்னதாக வேணும். எம்பெருமானார் விசேஷித்து உகந்திருக்கும்பாட்டு இப்பாட்டு. ... . கஅ

பலத்தையுடையவனாய். (ஓடாததோள்வலியன்) ஜகத்விலக்ஷணமான ஜ்ஞாநபலத்தையுடையவனாய். “ ஞானக்கை ” என்னக்கடவதிறே. அஹங்காரத்துக்குப்பிறகாலியாதஜ்ஞாந பலத்தை யுடையவனென்றுமாம். (நந்தகோபாலன்) ஆநந்த நிர்ப்பரனாய் ஆச்ரிதரக்ஷகனான ஆசார்யனுடைய.(மருமகளே) ஆசார்யனுக்கு எம்பெருமான் புத்ரவத்விதேயனானால், பிராட்டி மருமகளாகக்குறையில்லையிறே. (நப்பின்னாய்) திருநாமம். (கந்தங்கமழுங்குழலீ) “ஸர்வகந்த:” என்னுமவனுக்கும் வாஸநையைக்கொடாநிற்கிற பகவத்விஷயவ்யாமோஹத்தையுடையவரே. இத்தால்—ஸ்வவ்யாமோஹத்தாலே ஈச்வரனைவசீகரித்து, ஆச்ரிதரக்ஷணத்திலே மூட்டி, அவனையெல்லாருங் கொண்டாடும்படி பண்ணுகிறாளென்னுமிடம் தோற்றுகிறது. (கடைதிறவாய்) அவனுடைய பரிமளமும் உன்னுடைய பரிமளமும்காட்டிவெறித்த நிலாவாகாமே நாங்களநுபவிக்கும்படி, தத்விரோதியான எங்களுடைய அஜ்ஞாநத்தை நீக்காய். அஜ்ஞாநம் போகைக்கு ஸத்த்வோத்தர காலமாயிற்றோ வென்ன; ஆயிற்றென்ன; அதுக்கடையாளமென்னென்ன; (வந்தெங்கும் கோழி யழைத்தனகாண்) ஸத்த்வோத்தரமான காலமானவாறே ஸர்வதோதிக்கமாக பாகவதரெழுந்திருந்து பகவத்கைங்கர்யார்த்தமாகவொருத்தரையொருத்தரெழுப்பாநின்றார்கள் என்ன; அவர்களை யுறங்கவொட்டாமைக்கு நீங்களுண்டே யென்ன; (மாதவிப் பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்) வேதாந்தங்களிலே வேதாந்தார்த்தங்களை யநுபவியாநிற்கும் நாதயாமுநர்போலும் பரமபாகவத ஸமூஹங்கள் ஸத்த்வம் தலையெடுத்த பின்பும் உன்னைக்காணாமையாலே நாக்குஒட்டினமை தோற்றப் பலகால் கூவாநின்றனகாண்.

152. இப்படியெழுப்பின விடத்திலும் எழுந்திராமையாலே ஜாலகரந்தரத்தாலே பார்த்து (பந்தார்விரலி) என்கிறார்கள். ஸத்த்வம் தலை யெடுக்குந்தனையும் சேதநரைக் கொண்டு லீலாரஸம் அநுபவித்து, ஸத்த்வம் தலை யெடுத்தவாறே ஒருகையாலே லீலோபகரண பூதரான சேதநவர்க்கத்தையும் ஒருகையாலே இத்தைக்கொண்டு தன்னை லீலா

ரஸமநுபவிப்பித்த ஈச்வரனையுமணைத்துக்கொண்டு கிடப்பதே! இதென்ன ஐச்வர்யம்! என்கிறார்கள். இப்போதெழுந்திருந்து செய்யவேண்டுவதென்னென்ன; (உன்மைத்துனன் பேர்பாட) நீயுமவனும் பந்தடிக்கையில் உனக்கவன்தோற்ற தோல்விக்கு அவன் திருநாமங்களைப்பாட. ஆகில் கதவைத் தள்ளி உள்ளே புகுங்கோளென்ன; அதுகூடாது (செந்தாமரைக்கையால்) ஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸௌகந்த்யங்களாலே தாமரை போன்ற திருக்கையாலே. இவ்விடத்தில் கையாவது - ஜ்ஞாநம்; "ஞாநக்கைதா" என்றாரிறே ஆழ்வார். ஜ்ஞாநத்துக்கு ஸௌந்தர்ய ஸௌகுமார்யஸௌகந்த்யங்களாவன;—இதரவிஷயநிவ்ருத்தி-ஸௌந்தர்யம; ஸ்வ போக்த்ருத்வநிவ்ருத்தி-ஸௌகுமார்யம்; நிரதிசயப்ரேமாத்மகத்வம்-ஸௌகந்த்யம்; இப்படியிருந்துள்ள ஜ்ஞாநத்தாலே. (சீரார்வளையொலிப்ப) நிரந்தரபகவத்ஸம்பந்தத்தாலே பூர்ணங்களாய் பகவத்ஸம்பந்தஸூசகங்களான ரஹஸ்யத்ரயார்த்தங்கள் ப்ரகாசிக்க. (வந்துதிறவாய்) நம்முடைய ப்ரயத்நத்தை அபேக்ஷியாமல் நீயேவந்து ஸ்வரூபோபாய புருஷார்த்த விரோதி விஷயமான தத்தஜ்ஞாநத்தைப் போக்காய். (மகிழ்ந்து) புருஷார்த்தம் உன்னதாகவேணும். கஅ

பத்தொன்பதாம் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி:—153. பத்தொன்பதாம்பட்டு. இவள் திறக்கப்புக நம்முடையாருக்கு இவள் திறக்கமுற்பட்டாளாக வொண்ணாதென்று இவளைத் திறக்கவொட்டாதே கட்

ஆறாயிரப்படி:—பத்தொன்பதாம்பாட்டு. நப்பின்னைப் பிராட்டியையெழுப்பி, "சீரார்வளையொலிப்ப வந்துதிறவாய் என்றவாறே எழுந்திருந்து கதவைத்திறக்கப்புக்காள்; நம்மை யாச்ரயித்தவர்களை இவள்தன்னுடையாரென்று இருக்குமோபாதி, இவளைப்பற்றினார் நமமுடையாராயன்றோ விருப்பது, நம்முடையார்க்கு இவள்முற்பட்டாளாக வொண்ணாது, இவளைத் திறவென்றார்க்கு நாம் முற்பாடராய்க் கார்யஞ்

டிக்கொடு கிடக்கிற க்ருஷ்ணனை யெழுப்பி, அங்கு மறுமாற்றங்கொள்ளர்மையாலே மீளவும் அவனையுணர்த்துகைக்காக அவனை யெழுப்புகிறார்கள். இத்தால்-ஆச்ரிதர்க்கு மாறிமாறிப் பரிகைக்கு "என்னடியார் அதுசெய்யார்" என்னுமவனும், "நகச்சிந்நாபராத்யதி" (59) என்னுமவளும் இருவரும் முண்டென்கை.

செய்தோமென்னும் தரப்பெறவேணுமென்று, இவளைத் திறக்கவொட்டாதேபின்னிட்டு வந்து மல்கட்டாகக் கட்டிக்கொண்டுபோய் படுக்கையிலே விழவிட்டு, இவளுடைய ஸ்பர்சத்தாலே தானும் மயங்கி இவர்கள் வந்தகாரியத்தையும் மறந்துகிடக்க; அவனை யெழுப்பின வளவிலே அவனெழுந்திருந்து இவர்களுக்கு ப்ரதிவசநம்பண்ணுகபடி அவனுக்கு முற்பாடுகொடாதே கட்டிக்கொண்டு கிடந்து உறங்குகிறவள் தன்னையே திரியட்டும் எழுப்புகிறார்கள் மீளவும அவனை யுணர்த்துகைக்காக. இத்தால்-ஆச்ரிதர்க்கு மாறிமாறி ஒருவர்க்கொருவர் பரிந்து நோக்குகையாலே நமக்குத் தஞ்சமாயிருப்பதொரு மிதுநமுண்டென்கிறது. இப்படிக் கொத்த மிதுநத்தைத்தனியே பற்றுகிறவர்கள் ராவணசூர்ப்பணகைகளோடொப்பார்கள்; பெருமாளைப்பற்றி, திருவடி பிராட்டி திருவடிகளிலே செல்ல, அவனைக் கடாக்ஷித்து, இளையபெருமாளறியாத காகவ்ருத்தாந்தத்தை யருளிச் செய்தாள்; பிராட்டியைப் பற்றி வந்த ஸ்ரீவிபீஷணாழ்வானை "விபீஷணற்கு வேறாகநல்லானை" என்னும்படி விசேஷஸ்நேஹம் பண்ணியருளினார் பெருமாள். "நகச்சிந்நாபராத்யதி" என்னுமவளையும், "என்னடியா ரதுசெய்யார்" என்னுமவனையுங் காணும் நாம் தஞ்சமாகப் பற்றியிருக்கிறது. "நின்திருவருளும் பங்யத்தாள் திருவருளுங்கொண்டு நின்கோயில்சீய்த்து" என்றாரிறே. "ஆள்கின்றாழியான் ஆரால்குறைவுடையம-வாள்கெண்டையொண்கண்" "கூரம்பன்" என்று பகவத்ப்ரபந்நர், அம்பின் புகரையும் கூர்மையையும் நினைத்திருப்பர்கள்; த்வயநிஷ்டர் இவள் கண்ணின் கூர்மையையும் புகரையும் தஞ்சமாக நினைத்திருப்பர்கள்.

குத்துவிளக்கெரியக்கோட்டுக்காற்கட்டின்மேல்
மெத்தென்றபஞ்சசயநத்தின்மேலேறிக்
கொத்தலர்பூங்குழல்நப்பின்னைகொங்கைமேல்
வைத்துக்கிடந்தமலர்மார்பாவாய்திறவாய்
மைத்தடங்கண்ணிநீயுன்மணாளனை
எத்தனைபோதுந்துயிலெழவொட்டாய்காண்
எத்தனையேலும்பிரிவாற்றகில்லாயால்
தத்துவமன்றுதகவேலோரெம்பாவாய்.

பதவுரை:—குத்து விளக்கு - நிலை விளக்குகள், எரிய - நாற்புறமும் எரியா நிற்க, கோடு - யானைத் தந்தத்தால் செய்த, கால் - கால்களையுடைய, கட்டில்மேல் - கட்டிலிலே, மெத்தென்ற-மென்மைத்தன்மையதாய், பஞ்ச - அழகு முதலிய அஞ்சு குணங்களையுடைத்தான, சயநத்தின்மேல் - திருப்பள்ளியிலே ஏறி - ஏறியிருந்து, கொத்து - கொத்துக்கொத்தாக, அலர் - அலராநின்றுள்ள பூ - மலர்களணிந்த, குழல் - திருக்குழலையுடையளான, நப்பின்னை-நப்பின்னைப் பிராட்டியுடைய, கொங்கை - ஸ்தநங்களை, மேல் - தன்மேலே, வைத்து - வைத்துக்கொண்டு, கிடந்த - கண்வளர்ந்தருளுகிறவனாய், மலர் - அகன்றிருக்கிற. மார்பா - திருமார்பையுடையவனே, வாய்திறவாய் - வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்லிக்காணாயென்ன; அவன் வாயைத்திறந்து பேசப்புக்கவாறே இவள் பேசாதே யென்று காட்டிய கண் சமிஜ்ஞையைப் பார்த்து, மை - அஞ்ஜநாலங்க்ருதமாய், தடம் - அகன்றிருக்கிற, கண்ணினாய் - கண்களையுடையளாய், பிரிவு - அவனைப்பிரிந்து, எத்தனையேலும் - க்ஷணகாலமாகிலும், ஆற்றகில்லாய் - ஸஹியாதவளான நப்பின்னைப்பிராட்டியே, நீ—, உன் - உன்னுடைய, மணாளனை - மணவாளப்பிள்ளையான க்ருஷ்ணனை, எத்தனைபோதும் - ஒரு க்ஷண காலமும், துயில் - தூக்கத்தைவிட்டு, எழவொட்டாய் - எழுந்திருக்க ஒட்டுகிறதில்லை; இப்படிசெய்வது, தத்துவமன்று - உன் ஸ்வரூபத்துக்கும் சேராது; தகவன்று - உன் ஸ்வபாவத்துக்கும் சேராது என்கிறார்கள்.

154. வ்யா.—(குத்துவிளக்கெரிய) ஆர்த்திகள் வாச லிலே நிற்க ஓரநுபவமுண்டோ வென்கிருர்கள். எங்களைப் போலே ஊராரிசைவும் வேண்டாதே, "கீழ்வானம் வெள்

வ்யா.—(குத்துவிளக்கெரிய) நம்மைப்போலே ஊரார் இசைவும் வேண்டாதே, விடிகிறது என்கிற பயமுமின் றிக்கே, இருள் தேடவும் வேண்டாதே, பகலையிரவாக்கவும் வேண்டாதே, விளக்கிலே க்ருஷ்ணன் முகத்தைப்பார்த்துப் படுக்கைபடுத்துக்கொண்டு கிடக்கப்பெறுவதே இவளொ ருத்தி!, இதென்ன ஐச்வர்யமென்கிருர்கள். "காணிலொட் டார்" என்னும்படி தங்களுக்கு ஊராரிசைவும் தேட்டமாய், கீழ்வானம் வெள்ளென்றது என்கிற பயமும் நடந்து "நள் ளிருட்கண்" என்று-இருளும் தேட்டமாய், இராபகலாம் படி விச்லேஷத்தோடே க்ருஷ்ணன் முகத்தில் விழிக்கவும் பெருதே தறைக்கிடை கிடப்பதாயிறே நாங்கள் படுகிற பாடு. சோரர்க்கு விளக்கும் நிலவும்பகையிறே. இவளுக்கு ப்ரஸித்தமான முறையுண்டாகையாலே விளக்கிலே படுக்கை படுக்கத் தட்டில்லையே. க்ருஷ்ணனைப் பற்றினவர்கள் அவ னோடு ஸாதர்ம்யம் பெறுமோபாதி, "தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய" என்று உன்னுடைய மாளிகையோடு ஸாதர்ம்யம் பெற்று, எங்களுடைய மாளிகைகளிலே உன் னைப் பற்றின நாங்களும் உன்னோடு ஸாதர்ம்யம் பெற்று, க்ருஷ்ணனும் நாங்களும் எங்களகங்களும் இப்படி விளக்கும் படுக்கையுமாகுலன்ரே உன்னுடைய அநுபவத்துக்கு ப்ர யோஜநமுள்ளதும் இதுவுனக்குப்பொறுப்பதும். இராவுணு தார்க்கு உண்டார் அடியாரன்ரே (குத்துவிளக்கு) வேண்

வி. 154. பகலை இரவாக்கிக்கொள்வது,விளக்கிலே க்ருஷ்ணன் முகத்தைப்பார்த்து அனுபவித்தற்காக-நிலைவிளக்கு உண்டாவதே-உண்டாகவேணுமோ - கோட்டுக்கால்-யானையின்கோடு, குவலயா பீடம் எனும் யானையை க்ருஷ்ணன் நிரஸனம் பண்ணின பிறகு அதன் தந்தத்தால் செய்த கால்கள் (கட்டில்கால்கள்) வீரன்-பத் தினுக்கு ஏற்றகட்டில் அஞ்சு உருவிட்டு - ஐந்துநிறமுள்ளவற்றால் செய்த (படுக்கை).

ளென்றது" என்கிற பயமுமின்றிக்கே, "நள்ளிருட்கணென்னையுய்த்திடுமின்" என்று இருட்டுத்தேடவும் வேண்டாதே, பகலையிரவாக்கிக்கொண்டு விளக்கிலே க்ருஷ்ணன் முகத்தைப் பார்த்துக்கொண்டு படுக்கையிலே கிடக்கப்பெறுவதே! இதென்ன ஐச்வர்யம்! என்கிறார்கள். "அதிவராமச்சுசுபே" (149) என்று இவள் அவனுக்கும் ப்ரகாசகமான விளக்காயிருக்க ஓர் நிலைவிளக்குண்டாவதே!, (கோட்டுக்கால் கட்டில்மேல்)

டினவிடத்திலே பேர்த்துவைக்கலாம் விளக்கு. நீயுமவனுமாய்க் கண்வளரும்போது வேண்டுமிடங்களிலே யெடுத்து வைத்து அடிமை செய்கைக்கு நாங்களும் வேண்டாவோ; "ரமமாணாவநேத்ரய:" என்னும்படியே. (எரிய) புறம்பே ஒரு கொடிவிளக்குப் புகரழிந்துகிடக்க ஒருநிலைவிளக்கு உள்ளேநின்று ப்ரகாசியாநின்றது. (எரிய) அப்ரகாசமுமாய் அந்யாதீநப்ரகாசமுமாயிருப்பதொரு விளக்குண்டாம்படி ஸ்வயம் ப்ரகாசமுமாய் பரப்ரகாசமுமாய் நின்றெரிகிற தொரு விளக்கு. தன்னையுங் காட்டாதே தன்னைக்கொண்டு காணக்கடவ அவனையுங் காட்டாதே யிருப்பதேயிவள்! "பாஸ்கரேணப்ரபாயதா" ப்ரபைதன்னையுங்காட்டி ஆதித்யனையுங்காட்டவற்றிறே. [ஆயர்பாடிக்கணிவிளக்கு]ப்ரகாசிக்கைக்கு இட்டநிலைவிளக்கிறே இவைதான். ஒன்று ஸ்வயம் ப்ரகாசமுமாய் பரப்ரகாசமுமாயிருக்கும்; ஒன்று அப்ரகாசமுமாய் அந்யாதீநப்ரகாசமுமாயிருக்கும். தன்னைத்தான் காட்டாமையாலே அப்ரகாசமென்கிறது; க்ருஷ்ணன் பாரதந்த்ரியத்தாலே அந்யாதீநப்ரகாச மென்கிறது; இவள் தன்னைக் காட்டுகையாலே ஸ்வயம்ப்ரகாசமென்கிறது. ஸ்வாச்ரயத்தை விளக்குகையாலே பரப்ரகாசமென்கிறது; அவனுக்கு விளக்கானவளிறே யிவள்தான். "அதிவராமச்சுசுபே" என்கிறவவனுக்கு ப்ரகாசகையாய் ஔஜ்ஜ்வல்யாவஹையாயிறே இவளிருப்பது. "திகழ்கின்றதிருமார்வில் திருமங்கைதன்னோடும்."

(கோட்டுக்கால் கட்டில்மேல்) இருள்தேட்டமன்றிக்கே ப்ரகாசம்பொறுத்த நிலை விளக்கெரிகிறதுக்கு மேலே, எங்

குவலயாபீடத்தின் கொம்பைப் பறித்துக் கொண்டுவந்து செய்த கட்டிலிறே. வீரபத்நியாகையாலே இவளுக்கு இதி லல்லது கண்ணுறங்காது. எங்களைப்போலே ஸ்ரீப்ருந்தாவநந் தேடிப் போகவேண்டாதே உள்ளகத்துச்குள்ளே கூச்ச

களைப்போலே ஸ்ரீப்ருந்தாவநமும் மணற்குன்றுந்தேடிப்போக வேண்டாதே உள்ளகத்துக்குள்ளே படுக்கை படுத்துக் கூச்சமறக் கிடக்கப்பெறுவதே! இதென்ன பாக்யபலந்தா னென்கிறார்கள். (கோட்டுக்கால்) ஆனைகளை உயிர்ப்பிடியே பிடித்து அவற்றின் கொம்புகளைப் பறித்து அவற்றை ஆதார மாகக் கடைந்து மடுத்துச்செய்த கட்டில். வீரபத்நியாகை யாலே இப்படி சமைந்த கட்டிலிலொழியமற்றையவற்றில் கண்ணுறங்குவதாகாதே. "கஜம்வா வீக்ஷ்ய ஸிம்ஹம்வா வ்யாக்ரம்வாபிவராநந! நாஹாரயதிஸந்த்ராஸம்." பிராட் டிக்கு காட்டிலே ஆனையுள்ளிட்டன கண்டால் அபூர்வதர்ச நத்தாலே வந்த முகவிகாஸம் போக்கி, ஸ்த்ரீத்வ ப்ரயுக்த மான அச்சம் குடிபோய்த்து. அதுக்கடி யென்னென்னில் [பாஹூராமஸ்யஸம் ஸ்ரீதா] தனக்கென்னத் தோள்படைக் கையாலே, உயிரோடே பிடித்துக்கொம்பை வாங்கவல்ல வீரருடைய பத்நிக்கு அஞ்சவேண்டாவே. வீரபத்நிக்கு நாயகனோடேயணையும்போது கையில் நாண் தழும்பால்வந்த சரசரப்புக் கண்டதில்லையாகில் தங்களோட்டைப் பெண் களை அணைத்தாற்போலே யிருக்கும். "பர்த்தாரம்பரிஷஸ் வஜே" என்று பிராட்டி பெருமாளுடைய வீரக்கோலங் கண்ட பின்பிறே ஆண் என்று அணைந்தது; மற்றைப்போது "ஸ்த்ரியம்புருஷவிக்ரஹம்" என்றிறே யிருப்பாள். ஜ்யாகிண கர்க்கசமான தோள்களாலே யணைக்கவேணும்; [மாதங்க இவஸிம்ஹேந] ராவணனாகிற ஆனையை உயிர்ப்பிடிபிடித்த ஸிம்ஹமிறே பெருமாள். "உபதாயபுஜம்தஸ்ய லோகநாதஸ்ய" என்னும்படியான தோள்களாய்த்து. "லோகநாதஸ்ய" என்கிறது, "பதிம்விச்வஸ்ய" என்கிறபடியே அவனுக்கும் தங்களுக்குமுண்டான முறையையுணர்ந்திருப்பார்க்கு பயப் பட வேண்டாவென்றபடி. "ஆநந்தம்ப்ரஹ்மணோவித்வாந்" வீரபத்நிகள்படி ப்ரபந்நர்படிபோலே. தந்தாமுக்கென்ன

மறக்கிடக்கப்பெறுவதே! இதென்ன பாக்யம். (கட்டில்) மாணிக்கத்தாலே செய்யிலும் "கட்டில்" என்று ஜாதிப் பேச்சு. (மெத்தென்ற) நாங்கள் ஆர்த்தைகளாய் வந்து கிடக்க, படுக்கையின் உள்மானம் புறமானங்கொண்டாடிக்

மிடுக்கற்றவர்களுக்கு அவனுடைய பலமேபலமாக வேண்டாவோ. ஆநுகூல்யத்தில் தாரதம்யங்கொண்டு த்யாகஸ்வீகாரம் பண்ணுவது அவன் அபரிபூர்ணனாகிலிறே, பரிபூர்ணனானவனுக்கு இவன் விலக்காமையிறே வேண்டுவது. இவன் பண்ணின ப்ராதிகூல்யத்துக்கு அபுத்திபூர்வகமான ப்ரபத்தி ப்ராயச்சித்தமாய்போது சரண்யன்நீர்மையே பலிக்கிற வித்தனையிறே ; பலத்தோடே ஸந்திப்பிக்குமதிறே உபாயமாகிறது. ஸர்வஸ்வதானம் பண்ணின வெறுவியனுக்கு நன்மையுண்டாம்போது வேறேயொருவன் அநுக்ரஹத்தாலே பலமாக வேண்டாவோ, இரண்டுக்ரியையாலு மன்றிக்கேயிருந்ததிறே பலம், அத்தாலேயிறே "ஆர்த்தோவாயதிவாத்ருப்த:" என்கிறது. அங்ஙனேயாகில் ப்ரபத்திதானென்னென்னில் ; சைதந்யகார்யம் வேண்டுகையாலே. இவனுடையஸத்தை உபாயமாமன்றிறே ஸ்வீகாரமும் உபாயத்தில் புகுவது. "ரக்ஷிதவ்ய:க்ருதாத்மநா" அவன் க்ருதாத்மாவாகையாலே யிவன்பக்கல் பெற்றது கொண்டு தன்நீர்மையாலே ரக்ஷித்து விடுமித்தனை. (கோட்டுக்கால்கட்டில்) குவலயாபீடத்தின் கொம்பைப் பறித்துக்கொண்டு போந்து சமைத்த கட்டில். "ஸக்ய:பச்யத" என்று பார்த்துக்கொண்டு நின்ற பெண்களெல்லாம் கிடக்க, கோடுகள் கொண்டு கட்டில் சமைப்பது ஒக்கப்பட்டங்கட்டின ப்ரதாந மஹிஷியானவிவளுக்கிறே; கோட்டிடையாடிற்றும் இவளுக்கு; கொடுத்தது மிவளுக்கு. "வேழமுமேழ்விடையும்." (கோட்டுக்கால்) "பின்னைதன் கேள்வன்தாள்கண்டுகொண்டு" என்று மேல் கிடக்கிற மிதுநத்தின்காலிலும், அம்மிதுநத்தைச் சுமக்கிற காலிலே தலையை மடுக்கிறார்கள். க்ருஷ்ணன் படுக்கையின் காலைப்பற்றினவர்களிறே—பர்யங்கவித்யையிற் சொல்லுகிற படுக்கையிற்காலிட்டேறுவார். ஆஸநத்தின் காலைக்கட்டின ஸர்ப்பம் ஆஸநத்தின் ஆகத்திலே ஏறினாற்போலே. (கட்டில்)

கொண்டு படுக்கைபொருந்துவதே! கண்ணுறங்குவதே! (பஞ்சசயநத்தின்மேலேறி) பஞ்சவிதமான படுக்கையின் மேலேறி. அதாவது-அழகு, குளிர்த்தி, மார்த்தவம், பரிமளம்,

---

பெருவிலையனை பொன்னாலும் ரத்நத்தாலும் சமைத்தாலும், இடையரானகையாலே "கட்டில்" என்று ஜாதிப்பேச்சு. (கட்டில்மேல்) ப்ரஹ்மாதிகள் வரவிட்ட சிறுத்தொட்டில்களாகிலிறே கிழிய உதைத்துப் போகடுவது, படுக்கைப்பற்றில் படுக்கையாகையாலே ஆதரத்தோடே பேணிக்கொண்டு போரும்.

கலசாதபடி ப்ரஹ்மருத்ரர்கள், "நாராயணன்" என்றும் மனிச்சுக்கு இசையுமிடமாகையாலும், "கானமருங்கல்லதர் போய்" என்னும்படி துஷ்டஸத்வ பூயிஷ்டமான வெங்கா னத்தூடே சஸ்த்ராஸ்த்ரங்கள்பட வ்யாபரித்தவிடமாகை யாலும், ராமாவதாரத்தில் செய்த செயலுக்கு வயிறெரி கிறுர்கள்.

(சென்று) "இசையவோர் மூவடிவேண்டிச்சென்று" என்று ஒருசெல்லுகையுண்டிறே; அவ்விடமழகாலே நெஞ்சு உருக்கலாமிறே ; அழகுக்கு இலக்காகாத நிமனத்தரக்கரை அம்புக்கிலக்காக்கின பராபிபவநஸாமர்த்யத்துக்குப்பரிகிறுர் கள். (சென்றங்கு) அங்கேசென்று. நின்றவிடத்திலேநின்று பூவலர்ந்தாற்போலே இரண்டடியாக இடமாட்டாது, கொடியகாட்டிலே பரற்பாய மெல்லடிக்கள் குருதிசோர நடப்பதே! என்று வயிறு பிடிக்கிறுர்கள். "எவ்வாறுநடந் தனை எம்மிராமா ! ஓ!" என்று சக்ரவர்த்தியுள்பட நின்று கூப்பிட்டான்.

(சென்றங்கு) புலிகிடந்ததூற்றிலே சென்று தட்டி எழுப்பிக் கொல்லுவாரைப்போலே, லங்கைக்கு அரணாக வைத்த கரதூஷண கபந்தவிராதாதிகள், ஜலதுர்க்கமாக வைத்த கடல் காடுகள் மலைகள் தொடக்கமானவை யெல் லாம் நடவாநிற்கச் செய்தே மணல் கொட்டகம்போலே கால்கீழே யழித்துக்கொண்டு நடந்தபடியை நினைத்து

ற்க்கே, “ கானகம்படியுலாவியுலாவி ” என்னுமாபோலே, கொடிய காட்டிலே அந்தத் திருவடிகளைக் கொண்டு கிடப்பதே! என்கை. “ எவ்வாறு நடந்தனை ” என்று வயிறு பிடிக்கை யிவர்களுக்குக் குடிப்பிறப்பு. (தென்னிலங்கை) அழகியதான கோட்டையையும் அரணையுமுடைத்தாய்க் குளவிக்கூடுகொண்டாற்போலே ஹிம்ஸகர்சேர்ந்ததேசம். (செற்றாய்) ஆச்ரிதவிரோதிகள் தனக்கு சத்ருக்களென்கை. (திறல் போற்றி) மதிளுக்கு மதிளிடுமாபோலே மிடுக்குக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள்.

(அங்கு-சென்று) என்கிறார்கள். (தென்னிலங்கைசெற்றாய்) எல்லாவற்றிலும் ஊரரண் விஞ்சினபடியாலே “ இலங்கை செற்றவனே” என்கிறது.

(திறல்) அரண்களொன்றும் வேண்டாதபடி எத்தனையேனும் தரமுடைய தேவஜாதி, தந்தாமுடைய வருத்தங்களாலே ஸாதித்த அஸ்த்ரங்களையெல்லாம் ஒருமிடறாக நின்று ஒருக்காலே ஓரிலக்காக விட்டால் அவர்களுக்குத் தப்பவொண்ணாதென்றுவிட, நாலடி பிற்காலித்துவிடாதேநெஞ்சு கலங்காதே நிலையும் பேராதே மஹிஷிகளும் தானுங்கூட ஜலக்ரீடை பண்ணும்போது அவர்கள் பூவையிட்டுத் தன்மேலே யெறிந்தால் பிறக்கும் விகாரம் பிறவாதபடி யிருக்குமவன், நான்கடவேனென்று நோக்குமவனாராய், அழகிதான அரணை யுடைத்தாய் குளவிக்கூடுகொண்டாற்போலே ஹிம்ஸகருடையத திரண்ட நிலமாயிருந்த லங்கையை, அரண்சிதற அடைமதிள்படுத்தி, சதுரங்கபலத்தையும் துவளவென்று, சேனைத் தொகையைச்சாடி, ப்ராத்ருபுத்ராதிகளைத் தலையழித்து, தான்சிலரை யாச்ரயித்துக் கதிர்பெறுக்கிக் கூடினவையல்லாத அம்புகளைக்கொண்டு, இடியேறுண்டிடச் சுற்றும் வேமாபேலே, பையலைப்பக்கவேரறுத்து, நெஞ்சழிந்து நிலைதளரும்படி பண்ணி, ஸத்தையழிந்துபட்டுவிழும் போதும் வில்பிடித்தபிடி நெகிழாதே விழக்கடவ அவனை, எதிரி வீரமறியாதே கோழையாய்ப்பட்டானென்று தரக்கேடாகாதே “வீரன்” என்று விருதுபிடிக்கும்படி வில்லைப்

179. "மல்லாண்டதிண்டோள் மணிவண்ணா" என்னு மவர்களாகையாலே குடிப்பிறப்பாலே வந்தது. "இலங்கை பாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டுகூறுதும்"

போகடுவித்துஸ்த்ரீப்ராயனாக்கிக்கொன்று, வென்றிகொண்ட பராபிபவந ஸாமர்த்யத்தை யெல்லாம் நினைத்து "திறல்" என்கிறார்கள். (திறல்போற்றி) "தீமனத்தரக்கர்திறலழித்த வனே" என்று - இம்மிடுக்குத் தங்கள் து:கநிவ்ருத்திக்கு உடலன்றிக்கே அரணுக்கு அரணிடுவாரைப்போலே திறலுக்குப் பரிகிறார்கள். "இலங்கை பாழாளாகப்படைபொருதானுக்கு" என்று - பரியுமநுஜந்மஸித்தமிறே. உலகளந்த பொன்னடிக்குக் காப்பிட்டவோபாதி காடுறைந்த பொன்னடிக்குக் காப்பிடத் தேடுகிறவர்களுக்கு அஞ்சாமைக்குத் திறலைக்காட்டினான்; அத்திறல் தனக்குஅஞ்சத்தொடங்கினார்கள்; தோளிலழகுக்குக் காப்பிடப்புக, மல்லடர்த்த திண்மையைக்காட்ட, அது தனக்கு வயிறெரிந்தாற்போலே. (திறல் போற்றி) "கல்லாதவரிலங்கைகட்டழித்த" "தேவனே தேவனாவான்" என்று மண்டோதரியுள்ளிட்டாரைப்போலேதத்வ நிர்ணயம் பண்ணுதல் "தன்னிலங்கை வைத்தான்" "என்றன் தனிச்சரண்," "கூரம்பனல்லால்," "மற்றிலேன் தஞ்சமாகவே" என்று-ரக்ஷகத்வபுத்திநடத்தல், தென்னிலங்கையீடழித்ததேவர்க்கு என்னையும் உளள் என்மின்கள் என்று-போக்யதாபுத்திநடையாடி இழவுசொல்லிவிடுதல் செய்யாதே தங்களை ரக்ஷகராக நினைத்துப் பரிகிறார்கள். சக்ரவர்த்தித்திருமகன் தசரதனிலும் விஞ்சும்படி பால்யாவஸ்தையிலே ஆயுதச்ரமம்பண்ணி விச்வாமித்ராதிகளோடே சச்ஸ்த்ராஸ்த்ர மந்த்ரங்கள் சிக்ஷித்துச் சமையவளர்ந்தபின்பு செய்த செயலிறே லங்கையை யழித்தசெயல்;

பி. 179. தமையன் ஒருக்ஷணம் தப்பில் – ஸ்ரீபலதேவன், க்ருஷ்ணன் உடனில்லாதபோது. பாம்பின் வாயிலேவிழும் தீம்பன்-காளியன் மடுவிலே விழுந்து காளியனை யழித்த க்ருஷ்ணன். சத்ருவையிட்டு சத்ருவையெறிதல்—வத்ஸாஸுரனாகிய கன்றுக்குட்டியை கபித்தாஸுரனாகிய விளாங்கனிமேல் எறிந்து இருவரையும் கொன்ற செயல்.

என்னு மவர்களிறே. (பொன்றவித்யாதி) ராவணனைப் போலே விரோதி என்று இருக்கவொண்ணாத அபாயம். (பொன்ற) மாரீசனைப்போலே குற்றுயிராக்கி மேல் அநர்த்தம் விளைக்கவையாதே, முடிக்கப்பெற்றபடி. (புகழ்போற்றி) தாயுங்கூட வுதவாததசையிலே அநாயாஸேந திருவடிகளாலே சகடாஸுரனையழித்தபுகழ். (போற்றி) ராமாவ

" பிறந்த வெழுதிங்களில் " என்கிறபடியே - பிறந்து மறுபத்துக்கழிந்தவளவிலே எதிரிகளுண்டென்று அறிகைக்குடலான ஜ்ஞாநமுமன்றிக்கே, ஆயுதம் பிடிக்கவு மறியாத தொட்டில் பருவத்தில் செய்த செயலிறே சகடபங்கம். ராவணன் நேரே சத்ருவாய்த் தோற்றினானிறே ; அப்படியன்றிக்கே ப்ரச்சந்ந சத்ருவாகையாலே "கள்ளச்சகடம்" என்றத்தை அறிந்து முறப்பட்டபடிக்கு வயிறெரிந்து பரிகிறார்கள் (பொன்றச்சகட முதைத்தாய்) சகடம், பொன்றமுடிய. சூர்பணகையையும் மாரீசனையும்போலே குற்றுயிரோடே விட்டபின்பு அநர்த்தம்விளையும்படி இளிம்புபடாதே, தோற்றரவிலே சகடாஸுரனை முடித்துவிட்டபடி. (உதைத்தாய்) முலைவரவு தாழ்த்துத் தொட்டிலை யுதைத்த திருவடிகளுக்கு இலக்காய்முடியும்படி பண்ணின அநாயாஸம். (உதைத்தாய்) பெருமாள்கைக்கு வில்பிடித்ததழும்புபோலே க்ருஷ்ணன் திருவடிகளுக்குச் சாடுதைத்த தழும்பு ; " தழும்பிருந்த."

(புகழ்) பெற்ற தாயுங்கூட உதவாத ஸமயத்திலே, பெரும்படையாண்டுசெய்த செயல்களைக்காற்கூறுக்கிவிட்டபடி ; " திருக்காலாண்ட பெருமானே " என்கிறபடியே. (புகழ்போற்றி) "நின்சிறுச் சேவகமும்" என்று-காரையூரிருக்கன்னிப் போருக்குக் காப்பிடவேணுமிறே. " அருளின் பெருநகையால் " என்று ஆண்பிள்ளையென்று ஆசைப்படுவார்; "என்னைநிறைகொண்டான்" என்று-அடக்கங்கெட்டு மடலெடுக்கத் தேடுவார் ; " உறக்கில் நிமிர்த்தீர் " என்று-ஊடுதலாய்ப்போனார்கள் பெண்கள்; இவர்கள் செயலுக்கு வயிறெரிந்துபரிகிறார்கள்.

தாரத்திற்காட்டில் மங்களாசாஸநம் பண்ணவேண்டி யிருக்கை. ராமாவதாரத்துக்கு, பிதா சம்பராந்தகன் ; ஊர் திருவயோத்யை; புரோஹிதர்மந்த்ரவாதிகளான வஸிஷ்டாதிகள்; பிள்ளைகள் ஆண்டிறல்மீளிமொய்ம்பிலரக்கன் குலத்தைத்தடிந்தவர்கள்; "இச்சாம:" (180) என்னும்படி தாங்கள் குணவான்கள்: இங்கு, மாதா பிதாக்கள் ஸாது இடையர்; ஊர் இடைச்சேரி; கம்ஸாதிகள் எதிரிகள்; ஸ்ரீப்ருந்தாவநத்தில் முளைத்தெழும் பூண்டுகளடைய ராக்ஷஸர்கள் ; தமை

பசலைத்தனத்தில்செய்த செயல் என்று விடலாம் அது; பருவம் நிரம்பிச்செய்தசெயலோதான் கணக்குவழக்குப் பட்டிருக்கிறதென்று அதுக்குவயிறெரிகிறார்கள், (கன்று குணிலாவெறிந்தாய்) சகடாஸுர நிரஸநம் பண்ணினவயிறெரிதல் அல்லகிடாய், கன்றாய் நின்றஅஸுரனைக்கொன்ற தீம்பு பூமியெல்லாம் ப்ரகாசிக்கும்படி செய்தாயென்று வயிறெரியும்செயலிறே. [வழக்கன்றுகண்டாய் வலிசகடஞ் செற்றாய்-குழக்கன்றுதீவிளவின் காய்க்கெறிந்த தீமைதிருமாலே பார்விளங்கச் செய்தாய்பழி] மார்பிலிருக்கிறவர்களோடு மண்ணில்கிடக்கிறவர்களோடு வாசியற "பழிகேடன்" என்று சொல்லும்படியிறே. செய்ததீம்பும், சகடாஸுரபங்கம்பண்ணிச்செய்த தீம்பு. [திரிகாற்சகடம் சினமழித்துக் கன்றால் விளங்காயெறிந்தான்] ஓரஸுரன்விளாவாய்நிற்க ஓரஸுரன் கன்றாய் நிற்க, சத்ருவையிட்டு சத்ருவை யெறிந்தால் ஸங்கேதித்து இருவருமொக்க மேல் விழுந்தார்களாகில் என்படக்கடவோம் என்று வயிறு பிடிக்கிறார்கள். "என்றுமென்பிள்ளைக்குத்தீமைகள் செய்வார்கள் அங்ஙனமாவர்கள்" என்று தாயாருட்பட வயிறுபிடிக்குமதிறே. (குணில்) எறிகருவி. (குணிலா வெறிந்தாய்) எதிரிகளையிட்டு எதிரிகளை முடித்தபடி.

(கழல்போற்றி) விளாவை யிலக்காகக்குறித்துக்கன்றை எறிகருவியாகக்கொண்டு எறிவதாகஇச்சித்து நடந்தபோதைக் குஞ்சித்த திருவடிகளில் வீரக்கழலுக்கும் அகவாயில் சிவப்பையுங்கண்டு காப்பிடுகிறார்கள். (கழல்போற்றி) "கன்

யன் ஒருக்ஷணம் தப்பில் பாம்பின் வாயிலேவிழும்தீய்பன்; பூதநாதிகளாலே பிறந்த அபாயங்களுக்கு ஓரவதியில்லை; ஆன பின்பு, இனி மங்களாசாஸந மொழியக் காவலில்லை. (கன்று இத்யாதி) சத்ருவையிட்டு சத்ருவை யெறிந்தால் ஸங்கேதித்துவந்து இருவருமொக்க மேல்விழுந்தார்களாகில் என்செய்யக்கடவோம்! என்று வயிறுபிடிக்கிறார்கள். குஞ்சித்த திருவடிகளுக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள். (கன்றுகுணிலா) கன்றை எறிதடியாக. குணில்-எறிதடி.

றால் வீழ்த்தவனே" என்று பக்திபண்ணுதல், "காயுதிர்த்தார் தாள்பணிந்தோம்" என்று—விரோதி நிவர்த்தகமாகப் பற்றுதல், "கனைகழல்காண்பதற்கு" என்று-யமவச்யதைக்கு நிவர்த்தக மென்றிருத்தல்செய்யாதே மங்களாசாஸநம பண்ணுகிறார்கள். (அடிபோற்றி, கழல்போற்றி) நீட்டின திருவடிகளுக்கும் குஞ்சித்த திருவடிகளுக்கும் சூழ்ந்திருந்து பரிவாரைப்போலே பரிகிறார்கள். விரோதி நிரஸநம் பண்ணித் தன்னை நோக்குகைக்கு அடைவுகெட்டிருந்தால் அநுகூலர் விரோதிகளாக ஆச்ரிதரக்ஷணம் பண்ணுமதோ சால அடைவுண்டாயிருக்கிறது என்று அதுக்குப்பரிகிறார்கள்

(குன்று குடையாவெடுத்தாய்) விரோதிகளுக்குக் கன்றெடுத்த மாத்ரம்போலேகாணும் கன்று நோக்குகைக்கு குன்றெடுத்தது. "கன்றுகொண்டு விளங்கனியெறிந்து ஆனிரைக்கழிவென்று மாமழை நின்றுகாத்துகந்தான்" என்னக்கடவதிறே. கீழெல்லாம் இந்த்ரனுக்கு சத்ருவானவர்கள் நலிந்த நலிவு பரிஹரித்தபடிக்கு வயிறெரிந்தார்கள்; இப்போது அவன்றான் நலிந்த நலிவு பரிஹரித்தபடிக்கு வயிறெரிகிறார்கள். அஸுரர்களோடு தேவர்களோடு வாசியில்லையிறே பகவச்சேஷமான வஸ்துவைத் தங்களதாக நினைத்திருக்கைக்கு. ஸர்வயஜ்ஞபோக்தாவாகத் தன்னையருளிச்செய்தானே. தனக்கிட்ட சோற்றையமுதுசெய்தால் ஸ்வதந்த்ரபுத்திபண்ணி பண்டு புஜித்தவிடமுள்பட ஆத்மாபஹாரத்தோடொவ்வாநிற்க, ததீயபுத்தி பண்ணாதே ஸ்வதந்த்ரபுத்திபண்ணி நலியத்தேட மலையைக்குடையாக

(குன்று இத்யாதி) இதுக்கு முன்பு இந்த்ரனுக்காகச் செய்த செயல். இப்போது அவன்தான் பகையானபடி. மலையைக் குடையாக எடுத்துப் பசுக்களுக்கும் இடையர்க்கும் வந்த ஆபத்தைப் போக்கினபடி. அநுகூலன் ப்ரதிகூலித்தால் செய்யலாவதில்லையிறே. (குணம்போற்றி) பசிக்ராஹத்தாலே கையோயுந்தனையும்வர்ஷிக்க மலையெடுத்துக்கொண்டு நின்ற ஆந்ருசம்ஸ்யகுணத்திற்கு மங்களாசாஸநம்பண்ணுகிறார்கள்.

வெடுத்து பசுக்களுக்கு மிடையருக்கும் வந்த ஆபத்தைப் பரிஹரித்தபடி.

(குணம்) அநுகூலனானவனுக்கு ப்ராமாதிகமாகப் புகுந்ததன்றே, அநந்தரத்திலேவந்து கோவிந்தாபிஷேகம் பண்ணவன்றே புகுகிறான், பெரும்பசியாலே வந்த கோபத்தாலே வர்ஷித்தானாகில் கைநொந்தவாறே விடுகிறான், பெரும்பசியாலே யிவனை நலிந்தால் நாமே யுண்பதுகொண்டார் உயிர்கொண்டு தலையை யறுக்கவோ, அவன் கைசலிக்குந்தனையும் கடகிட்டுக்காப்போமென்று அவனைத் தலையழியாதே மலையை யெடுத்து ரக்ஷித்தது ஆந்ருசம்ஸ்யத்தாலே. அந்த குணத்துக்குப் போற்றி. "பாயும் பனிமறுத்தபண்பாளா." "சீர்கற்பன்வைகல்" என்று அறிவுடையார் நாள்தோறும் கற்பதொருகுணமிறே. (குணம்போற்றி) கொடியேறு செந்தாமரைக் கைவிரல்கள் கோலமழிந்ததோவாடிற்றோ வென்று பார்த்துப்பரியத்தேட, அவ்வளவு போகவொட்டிற்றில்லை மலையெடுத்தகுணந்தான். (குணம் போற்றி) "என்றனக்கோர் துணையாளனாகாயே" என்று. நொய்யதொருமலையைப் போகடுவித்து, கனவிது இரண்டு மலையைக்கையிலே கொடாதேமலையையெடுத்தக்ஷமாகுணத்துக்குக்காப்பிடுகிறார்கள்.

வர்ஷம் விட்டவாறே மலையைப்போகட்டு வேலைப் பிடிக்குமித்தனையிறே. க்ருஷ்ணன் பசுக்களின்பின்னே திரியாநின்றால் ஸிம்ஹம் வந்தாலும்வேலாலே குத்தியெடுத்துப் போக்குமித்தனையிறே. அதுக்கெடுத்த வேலுக்குப் பரி

180. (வென்று பகைகெடுக்குமித்யாதி) இவன்பக்கல் பரிவாலே. இவன் மிடுக்கைக்கண்டு கண்ணெச்சிற் படுவர் என்று பயப்பட்டு, அத்தைவிட்டு, இவ்வேலன்றோ இவ்வ்யாபாரமெல்லாம்பண்ணிற்று என்கிறார்கள். "மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன்" என்றிறே யிவர்கள்படி. சக்ரவர்த்தி விற்பிடிக்கப் பெருமாளும் விற்பிடித்தாற்போலே,

---

கிறார்கள். எல்லாகுணங்களையும் ஒருவ்யக்தியிலே சொன்னால் "கண்ணேறும்" என்று வேலிலே அசலிட்டுச் சொல்லுகிறார்கள் வெற்றியை. (வென்று பகைகெடுக்கும்) சத்ருக்களை வென்று ஓட்டக்கடவதா யிருக்கும். (நின்கையில்வேல்) சக்ரவர்த்தியும் விற்பிடித்து பரிகரமும் வில்பிடித்து பிள்ளைகளும் வில்பிடித்தாற்போலே, ஸ்ரீநந்தகோபரும் இடையரும் பிள்ளைகளும் வேல்பிடித்தாய்த்துத் திரிவது. "கூர்வேல் கொடுந்தொழிலன்" "வேலைப்பிடித் தென்னைமார்கள்." (நின்கையில்வேல்) வெறும்புறத்திலே ஆலத்திவழிக்க வேண்டி யிருக்க அவ்வழகுக்குமேலே வேலைப்பிடித்தவழகு. (கையில்வேல்) எதிரிகள்மேலே படவேண்டா, பிடித்தபிடியிலே உகவாதாரை முடிக்கும். (நின்கையில்வேல் தன்னையுணராதே அஸத்யப்ரதிஜ்ஞனுயச் சீறினபோது காணும ஜந்மாந்தரம் மேலிட்டுத் திருவாழியையெடுப்பது. (வேல் போற்றி) ஈச்வரனைக்காணிலிறே "ஆழியும்பல்லாண்டு" என்பது: பெருமானைக்காணிலிறே "சார்ங்கமென்னும் வில்லாண்டான் தன்னை-பல்லாண்டு" என்பது. (நின்கையில் வேல்போற்றி) வெற்புடைய நெடுங்கடலுள் தனிவேலுய்த்த வேள்முதலாக வென்றவன் கையில்வேலிறே; ஆகையாலே

பி. 180-கண்ணெச்சில் - அழுக்காறுள்ளத்தோடு காண்பதால் வரக்கூடியதோஷம், க்ருஷ்ணன் மிடுக்கை வேலின்மேல் ஏற்றிச் சொல்வது இந்ததோஷம் வாராமைக்காக, யாம்வந்தோம் — யாம் என்பதற்கு நான்கு தாத்பர்யம் (1) பந்துக்களாலே நிலவறைகளிலே நலிவுபட்டயாம் (2) வயதான இடைச்சிகளை உறங்கவிட்டு, வந்தயாம் (3) பிரிந்ததுக்கம் தீருகைக்கு உன்கைபார்த்திருக்கிற யாம் (4) க்ருஷ்ணனைப் புண்படுத்தும்படியான வருகையையுடையயாம்,

"கூர்வேல்கொடுந்தொழிலன்" என்னுமவர் மகனாகையாலே வேலே ஆயுதம். (வென்று பகைகெடுக்கும்) ஆச்ரித விரோதிகளான ப்ரதிபக்ஷத்தை யறச்செய்து மாய்க்கை.(நின்கையில் வேல்போற்றி) வெறும்புறத்திலே ஆலத்திவழிக்க வேண்டியிருக்க, அதுக்குமேலே வேலைப்பிடிப்பதே! என்று வேல் பிடித்த கைக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள். "வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு" என்று-ஆயுதங்களுக்கு மங்களாசநம்பண்ணினாரிறே தமப்பனார். "கதேஜலே ஸேது பந்தம், தமப்பனாருக்கும் மகனாருக்கும் பணி" என்று ஜீயரருளிச்செய்வர். (என்றென்று) இது

பரிகிறார்கள். (என்றென்று) ப்ரயோஜநம் பெறுமளவுஞ் சொல்லி பின்னை அது மாறுகிறதன்றே, ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநம் வேணுமோ என்று இதுதானே பலமாக விருக்குமவர்களிறே.

(என்றென்று)பல்லாண்டென்றால்பின்னையும் பல்லாண்டென்னுமித்தனையிறே;போற்றியென்று ப்ரேமமடியாகவந்த கலக்கத்துக்குத்தெளிவுண்டாகிலிறே இச்சொல்லுமாறுவது; அங்குப்போனால்சூழ்ந்திருந்திறே. "வெம்மா பிளந்தான்றன்னைப்போற்றி" என்னக்கடவதிறே. "அடிபோற்றி, திறல் போற்றி, புகழ்போற்றி, கழல்போற்றி, குணம்போற்றி, வேல்போற்றி" என்று இவர்கள் நாக்குக்கு இடும் ஷட்ரஸமிருக்கிறபடி. (உன்சேவகம்) வீர குணத்துக்குப்போலே காணும் இவர்கள் தோற்பது. பந்துநிரோதத்தாலே தளர்ந்த அபலைகளுக்கு அவனுடைய விஜயமிறே பலஹேது. (என்றென்றுன் சேவகம்) "உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழியாமலெல்லாம்" என்னும்படியே. (உன்சேவகமே யேத்தி) வேறொருவருடைய சேவகம் கலந்தேத்தோம், திருவிக்கிரமனையும் பெருமாளையும் கலந்தன்றோ ஏத்திற்று. அது அவதாராந்தரத்தின் செயலென்றிருக்கிறார்கள். இவன் பால்யத்தில் செய்ததோபாதி பூர்வாவஸ்தையுமென்றிருப்பார்கள். "சிலையொன்றிறுத்தாய் திருவிக்கிரமா திருவாயர்பாடிப் பிரானே" "வருகவருகவருகவிங்கே வாமநம்பீவருக

தானே ப்ரயோஜநமென்கை. "தேஹிமேததாமிதே" (181) என்னுமவர்களன்றே. ஸம்ஸாரிகள் புறம்புங்கொள்ளுவர்கள், இவன் பக்கலிலும் கொள்ளுவர்கள்; இவர்கள் புறம்பும் கொள்ளார்கள், இவன்பக்கலிலும் கொள்ளார்கள். "ஒன்று நூறாயிரமாகக்கொடுத்துப்பின்னுமாளுஞ்செய்வன்" என்று-அவனுக்கும் தான் கொடுத்து, "ஆந்தனையுங்காட்டி"

லிங்கே-காகுத்தநம்பீ வருகவிங்கே" என்று தாயாருட்பட க்ருஷ்ணனை யழைப்பது இப்படியேயிறே. இவனுக்கு நான் ஸ்ரீ வாமநன்பிறந்தநாளாக்கினாள்; எட்டுமாஸம் வயிற்றிலே யிருந்த விவனை "பன்னிருதிங்கள் வயிற்றில்கொண்ட" என்றாள். என்மகன் பால்யத்தை மஹாபலி பக்கலில்சென்று கேட்டுக்கொள்ளென்றாள்; "சார்ங்கபாணி தளர்நட நடைவானோ" என்றாள்; "மாணிக்குறளனே தாலேலோ வையமளந்தானே" என்று தாலாட்டினாள்; இவர்கள் "ஓங்கியுலகளந்த" என்கிறார்கள்; "சார்ங்கமுதைத்த" என்கிறார்கள்; அநந்தரம் "ஆயர்குலத்தினில் தோன்றும்" என்றார்கள்; "போற்றப்பறைதரும் புண்ணியன்" என்றார்கள்; எழுப்புகிறபோது "உலகளந்த வும்பர்கோமானே" என்றார்கள்; அவன்றான் பிறந்தபோதே மூன்றுபிறவியுண்டே உங்களுக்கு, பிறக்கிறதென்றான்! வில்பிடித்தாரில் சக்ரவர்த்திபிள்ளை நாமென்றான்; ஆகையாலே அவதாராந்தரம் என்றிருப்பாரொருவருமில்லை. (எத்திப் பறைகொள்வான்) எங்கள்பலம் முன்னாக நாட்டார் பலம் பெறுவதாக பலம் எத்துகை; பின்பு அபிமதம் ஊரார் ஸம்ருத்தி; உத்தேச்யபலமும் ஆநுஷங்கிகபலமும்.

(இன்று) இசைவுபிறந்த வின்று. நென்னேற்றுவந்தோமோ, நாளைக்கு இங்கே நிற்கவொட்டுவர்களோ. (யாம்) பெருமிடுக்கரான வ்ருத்தைகளெல்லாங் கிடந்துறங்க, குளிர்பொறாத பாலைகளான நாங்கள். (வந்தோம்) நீவர ப்ராப்தமாயிருக்க விரஹதௌர்பல்யத்தாலே ஆற்றாமை யிழுக்க வந்தோம். (யாம்வந்தோம்) நாங்களும் எங்களை யறியாமற் செய்தோம், நீயும் உன்னை யறியாமற் செய்வதுண்டாய்த்

ன்று-புறம்புந்தானே கொடுக்குமென்கை. (உன்சேவகமே யேத்திப்பறைகொள்வான்) உன்னுடைய வீரசரிதமே யேத்தி உன்னையநுபவிக்கைக்காக. "உன்னுடைய விக்கிரமமொன்றொழியாமலெல்லா மென்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி எழுதிக்கொண்டேன்" என்னுமவர்களிறே. (இன்று) இசைவுபிறந்த இன்றென்னுதல்; நீயுறங்கநாங்களுறங்காத இன்று என்னுதல். நென்னேற்று வந்தோயோ, ஊராகவிசைந்த இன்று என்றுமாம். (யாம்) பந்துக்களாலே நெடுங்காலம் நலிவுபட்ட நாங்கள். (வந்தோம்) வ்ருத்தைகள் உறங்க, நாங்கள் ஆற்றாமையாலே வந்தோம்; எங்களிழவுகளெல்லாமுன்னாலேதீரும். (யாம்வந்தோம்) எங்கள் வரவு

இறே. (இரங்கு) எல்லாவ்யஸநங்கள் பட்டாலும் கீழ் ப்ரவர்த்தித்ததெல்லாம் பேற்றுக்குடலன்று, அவனிரக்கமே கார்யகரமாவது. அவனுக்கென் வருகிறதோ! என்றுஇரங்கி மங்களாசாஸநம் பண்ணுகை யிவர்களுக்கு ஸ்வரூபம்; இத்தலைக்கு இரங்குகை அவனுக்கு ஸ்வரூபம்.

(வந்தோம் இரங்கு) இரங்காமைக்கு வேண்டுவதுசெய்தோமேயாகிலும் இரங்கவேணும். இத்தலையில் பரபக்தியும் பேற்றுக்குடலன்று, அவனுடைய இரக்கமே அவ்யவஹிதோபாயம் என்றிருக்கிறார்கள். (அன்றிவ்வுலகமளந்தாய்-இன்று யாம்வந்தோம்) நீயெங்களைத்தேடி எல்லாவுலகம் தடவந்தாயன்று; இன்று உன்னைத்தேடிநாங்கள் வந்தோம். (யாம் வந்தோம்) வையந்தாய மலரடிக்கீழ் முந்திவந்து நீநிற்க நாங்கள் பெற்றோம்; அளந்தாய், தென்னிலங்கை செற்றாய். சகடமுதைத்தாய். (யாம்வந்தோம்) "மண்ணளந்த கண்பெரிய செவ்வாயென்காரேறுவாரானால்" "காகுத்தன்வாரானால்" "கண்ணனும்வாரானால்" என்றிருந்த வுன்னுடைய ப்ரதாநமஹிஷிகளில் எங்களுக்குண்டான வாசிபாராய். (அன்றிவ்வுலககமளந்தாய், இரங்கு) உவந்த வுள்ளத்தனாய் ங்களோடணைந்திலையாகிலும் ஸத்தாப்ரயுக்தமான க்ருபையையாகிலும் பண்ணு. (அளந்தாய்-இரங்கு) "நீரேற்றளந்த நெடியபிரானருளாவிடுமே" என்றன்றோ நாங்களிருப்பது.

உனக்குப் புண்ணாயிருக்க நாங்கள் ஆற்றாமையாலே வந்தோம். (இரங்கு) எல்லாம்பட்டாலும் அவனிரங்கிலல்லது கார்யகரமாகாமை. அத்தலைக்கு இரங்குகை ஸ்வரூபம்; அவனுக்கென்வருகிறதோ! என்று இரங்குகை இத்தலைக்குஸ்வரூபம். தாங்கள் பண்ணின மங்களாசாஸநம் ஸாதநமன்று என்றிருக்கிறார்கள். உ௪

181. ஸ்வாபதேச வ்யாக்யாநம். இருபத்துநாலாம் பாட்டு. (அன்றித்யாதி) இப்பாட்டில் இவர்கள் ப்ரார்த்தித்த படியே திருப்பள்ளியறையில் நின்றும் திவ்யாஸ்தாநமண்டபத்துக்கு எழுந்தருள, அந்நடையழகிலே ஈடுபட்டு. வந்த கார்யத்தைமறந்து மங்களாசாஸநம் பண்ணுகிறார்கள். வ்யா.—(அன்றித்யாதி) ப்ரக்ருதி ஸம்பந்த நிபந்தநமான அஹங்காரம் ஜகத்தை ஆக்ரமித்த அன்று, அஹங்கார க்ரஸ்தமான இந்தலோகத்தை அஹங்காரத்தினின்றும் மீட்டுத் தன் திருவடிகளாலே அளந்து தனக்காக்கிக்கொண்டவனே! உன்திருவடிகளுக்கு மங்களாசாஸநம். (சென்றங்கித்யாதி) இந்தலோகத்தை அஹங்காரத்தினின்றும் மீட்டவளவன்றிக்கே, அந்த அஹங்காரத்துக்குப் பிறப்பிடமான இடத்தே சென்று தர்சநீயமான ப்ரக்ருதிஸம்பந்தநிர்வாஹகமான அஹங்காரத்தை அழித்தவனே! உன்னுடைய பராபிபவந ஸாமர்த்யத்துக்குப் பல்லாண்டு. (கன்றுகுணிலித்யாதி) லோபத்தை எறிதடியாக வெறிந்து நசிப்பித்தவனே! உன்னுடைய குஞ்சிதமான திருவடிகளுக்குப் பல்லாண்டு. இவ்வளவில் ப்ரதிகூலர்விஷயத்தில் செய்யும் அம்சத்தைச் சொல்

(தென்னிலங்கை செற்றாய்-இரங்கு) சிறிதுதாழ்க்கில் "இரக்கமெழீர்" என்று உன்னை வசைபாடுவர்கள்கிடாய் என்று தாய்கள் சொல்லுமளவேயோ, "இரக்கமேலொன்றுமிலாதாய்" என்று நாங்கள்தான் சொல்லோமோ. (சகடமுதைத்தாய்—இரங்கு) உருளுஞ்சகடமுதைத்தபெருமானாருளின் பெருநசையாலன்றே நாங்கள்வந்தது. (குன்றுகுடையாவெடுத்தாய்-இரங்கு) குன்று குடையாக ஆகாத்த கோவலனார் ஒன்றுமிரங்கார் என்றுமே இரங்கு. உ௪

விற்று; இனி அநுகூலர் ப்ரதி கூலித்தால் செய்யும் அம்சத்தைச் சொல்லுகிறது (குன்றித்யாதி) இந்த்ரன் சிலாவர்ஷம் வர்ஷித்தபோது பர்வதத்தைக் குடையாகக்கொண்டு கோகோபரக்ஷணம் பண்ணினாற்போலே, அஜ்ஞாநகார்யமான அஹங்காரம் இவ்வதிகாரிக்கு விஷயப்ராவண்யத்தையுண்டாக்குவதற்கு ப்ரதிக்ரியையாக வைதிகமாய் கைங்கர்யரூபமான விஷயப்ராவண்யத்தை யுண்டாக்கி ஸ்வப்ரபந்நஜந ரக்ஷகனும் படியைச் சொல்லுகிறது. ஆக இப்படி ஆச்ரித ரக்ஷக ஞானவனே! உன்னுடைய சீலகுணத்துக்குப் பல்லாண்டு. (வென்றுபகை கெடுக்குமித்யாதி) அஹங்காரத்தை ஜயித்து தத்விஷய வைமுக்யத்தை மாற்றும் நின் திருக்கையில் திருவாழியாழ்வானுக்குப் பல்லாண்டு. (என்றென்றித்யாதி) இப்படி பல்லாண்டு பாடுகையே யாத்ரையாய், உன்னுடையவீரசரிதத்தையேத்தி புருஷார்த்தத்தை லபிக்கைக்காக ஸத்வம் தலையெடுத்தவின்று உன்கைபார்த்திருக்கும் நாங்கள் வந்தோம், நீ க்ருபை செய்தருளவேணும். "ஏத்திப் பறைகொள்வான்" என்கிறவிடத்தில் ஏத்துகைக்கு அநந்தரம் புருஷார்த்தலாபமாகையாலும், ஏத்தாதபோது புருஷார்த்தமில்லாமையாலும் ஏத்துகையே புருஷார்த்த மென்கிறது. "இரங்கு" என்று—க்ருபையே ஸாதந மென்கையாலே, "வந்தோம்" என்று-ருசி கார்யத்தைச் சொல்லுகிறது. .... உச

இருபத்தைந்தாம் பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி:—182. இருபத்தைந்தாம்பாட்டு, உங்களுக்கு வேண்டுவதென்னென்ன ; ஏதேனும் ப்ரதிபந்தக

ஆறாயிரப்படி:—இருபத்தைந்தாம்பாட்டு. பெண்காள்! உங்களுக்குப் பிறப்பாலே நம்விஜயத்துக்கு மங்களாசாஸநம் பண்ணுகை ஸ்வரூபமிறே, இக்குளிரிலே உங்களைப்பேணாதே க்லேசித்துவந்திகோளே, உங்கள் நெஞ்சிலோடுகிறது வெறும்பறையேயோ, வேறேதேனு முண்டோவென்ன ; உன்னுடைய குணகீர்த்தநம் பண்ணிக்கொண்டு வருகையாலே ஒரு க்லேசங்களும் படாதே ஸுகமேவந்தோம்

நூண்டேயாகிலும், நீயேபோக்கி, எங்கள் து:கமெல்லாம் கெட விஷயீகரிக்கவேணு மென்கிறார்கள்.

ஒருத்திமகனாய்ப்பிறந்தோரிரவில்
  ஒருத்திமகனாயொளித்துவளரத்
தரிக்கிலானாகித்தான்தீங்குநினைந்த
  கருத்தைப்பிழைப்பித்துக்கஞ்சன்வயிற்றில்
நெருப்பென்னநின்றநெடுமாலேயுன்னை
  அருத்தித்துவந்தோம்பறைதருதியாகில்
திருத்தக்கசெல்வமுஞ்சேவகமும்யாம்பாடி
  வருத்தமுந்தீர்ந்துமகிழ்ந்தேலோரெம்பாவாய்.

பதவுரை—ஒருத்தி-ஒப்பற்ற தேவகிப்பிராட்டிக்கு, மகனாய்ப் பிறந்து - பிள்ளையாய் திருவவதரித்து, ஓரிரவில்-அந்த இரவிலே தானே, "எல்லாம் தெய்வநங்கையசோதை பெற்றாள்" என்கிற படியே கண்ணனுடைய பாலசேஷ்டிதங்களையெல்லாம் அநுபவிக் கையாலே, ஒருத்தி-அத்விதீயையான யசோதைப்பிராட்டிக்கு, மக னாய்-திருமகனாக, கம்ஸனுடைய விஷத்ருஷ்டியில் அகப்படாமல், ஒளித்து-ஒளித்துக்கொண்டு, வளர-வளராநிற்கச் செய்தே, தன்னை யறியாமே இவன் வளர்ந்தருளுகிறபடியைக் கேட்டு, தான் - பின் னால் படப்புகுகிறது அறியாத தான், தரிக்கிலானாகி - ஸஹியாதவ னாய்க் கொண்டு, எவ்வகையாலாவது இவனைக் கொல்லக்கடவோம் என்று, தீங்கு நினைந்த - தீதாகநினைத்திருந்த, கஞ்சன் - கம்ஸனு டைய, கருத்தை-எண்ணத்தை, பிழைப்பித்து - வ்யர்த்தமாம்படி பண்ணி, வயிற்றில்-அவன் வயிற்றிலே, நெருப்பென்ன—நெருப்புப் போலே அழலும்படியாக, நின்ற-நின்றவனாய், நெடுமாலே - ஆச்ரி

"பறை" என்று ஒரு வ்யாஜத்தையிட்டு நாங்கள் உன்னை யிறே அர்த்தித்துவந்ததென்கிறார்கள். பறைகொள்ளவந் தோம் இரங்கு என்று நம்மை வடிம்பிடா நின்றீகோள், நீங் கள் சொன்னபோதாகச் செய்யப்போமோ, ப்ரதிபந்தகங் கள் உண்டாயிருக்குமேயென்ன; ப்ரதிபந்தகங்களைப்போக்கி அரியது செய்த உனக்கு எளியது செய்யத் தட்டுண்டோ, எங்களோடு ஸஜாதீயரிலே சிலர் நோன்பு நோற்றுப்பெற் றது எங்கள் நோன்பு பலித்தபடியன்றோ வென்கிறார்கள்.

தர்பக்கல் பெரும்பித்தனுன, உன்னை - உன்னிடத்திலே, அருத்தித்து-புருஷார்த்தத்தை இரந்து, வந்தோம்-வந்து ஆச்ரயித்தோம்; பறைதருதியாகில்-எங்களுக்கு உத்தேசயம் செய்வாயாகில், திருத்தக்க-பிராட்டி ஆசைப்படத்தக்க, செல்வமும்-ஸம்பத்தையும்,சேவகமும்-அச்சைதக்ஷாத்தூட்ட வல்ல வீர்யத்தையும், யாம் - உன்பேர் சொல்லப்பெறாத நாங்கள், பாடி - உகப்போடேபாடி, வருத்தமும் தீர்ந்து-உன்னைப்பிரிந்தபடும் வ்யஸநமும் நீங்கி, மகிழ்ந்து - மகிழ்வோமாகவேணு மென்கிறார்கள்.

183. வ்யா.—(ஒருத்தி)"அந்த:ப்ரவிஷ்டச்சாஸ்தாஜநாநாம்ஸர்வாத்மா" (182) என்கிறபடியே ஸர்வலோகங்களுக்கும் நியாமகனானவனையுங்கூட நியமிக்குமவளாகையாலே

வ்யா.—(ஒருத்திமகனாய்) ஒருவன் ஸாதநாநுஷ்டாநம் பண்ணி மாணிக்கம்போலே நாலுபிள்ளைகளைப்பெற்றாற்போலே, நால்வருங்கூட தபஸ்ஸுபண்ணி ஒருவனைப்பெறாநிற்கச்செய்தே, பேறு ஒருத்தியதாகையாலே "ஒருத்தி"என்கிறார்கள். காரணவாக்யங்கள் " ஊழிமுதல்வன் ஒருவனே" என்கிற வஸ்துவை, வயிற்றிலே அடக்கப்பெற்றாள் ஒருத்தியிறே. (ஒருத்திமகனாய்) ஸர்வலோகங்களுக்கும் ஸர்வபூதங்களுக்கும் முந்தைத்தாய்தந்தையா யிருப்பா னொருவனைத் தனக்குப் பிள்ளையாகப் பெறுகைக்கு நோன்பு நோற்க, ஜகத்துக்கு சேஷியுமாய் ஸர்வ வ்யாபகனுமாய் நித்யனுமாயிருக்கிற மகனொருவர்க்கல்லாத மாமேனிமாயன், சிலரபேக்ஷித்ததுக்காக மகனானென்னு மளவன்றிக்கே,"தேவகீபுத்ரன்" என்றே தன்னை நினைக்கும்படி அவ்வருகு தனக்கொரு ஏற்றமுண்டென்றறியாதபடி பிள்ளையானான்.

பி. 183—ஒருத்திமகனாய்ப்பிறந்து-ஒப்பற்றதேவகிப் பிராட்டியின் வயிற்றிற் பிறந்து, அவள் நியமிக்கும் அளவாக, க்ருஷ்ணன் நான்கு கைகளில் இரண்டையும், அவற்றில் பிடித்திருந்த சங்கு சக்கரங்களாகிய ஆழ்வார்களையும் மறைத்தபடியாலே ஒப்பற்றவள் "பிறந்து"—வசுதேவர், தேவகி, நந்தகோபர், யசோதை ஆகிய நால்வரும் தபசுசெய்து பெறுகையாலேபிறந்து-க்ருஷ்ணன் பிறப்பு க்ருபையால் ஏற்பட்டது. நம்முடைய பிறப்புக்கள் கர்மத்தால் ஏற்படுவன.

நாட்டில் தனக்கு ஒப்பற்றிருக்குமவள், (ஒருத்திமகனாய்) "பூதாநாம் யோவ்யய:பிதா" (183) என்று-ஸர்வலோகங்களுக்கும் பிதாவானவன் ஒருத்திமகனாவதே! சக்ரவர்த்தி தபஸ்ஸுபண்ணி மாணிக்கம்போலே நாலுபிள்ளைகளைப் பெற்றாற்போலே நால்வருங்கூடி தபஸ்ஸுபண்ணி ஒருமகனைப்பெற்றபடி: (மகனாய்ப்பிறந்து) பிறந்தபோது சொல்லிற்றுச் செய்கை. சக்ரவர்த்தித்திருமகன் பக்வனானபின்பு பித்ருவசந பரிபாலநம்பண்ணினான்; இவன் பிறந்தபோது, "உபஸம்ஹர ஸர்வாத்மந்" (67) என்றுசொல்ல ஆழ்வார்களையும் தோள்களையும் மறைத்தானிறே. (பிறந்து) கர்மவச்யன் படுவதெல்லாம் க்ருபாவச்யனாய்க்கொண்டு பட்டபடி. (பிறந்து) ஆவிர்ப்பவித்தாலாகாதோ; பத்துமாஸம் வயிற்றிலே யிருப்பார்களாகில் பன்னிரண்டுமாஸம் வயிற்றிலே யிருந்து பிறக்கவேணுமோ. பன்னிருதிங்கள் வயிற்றிற் கொண்டவிறே. "தேவகீபூர்வ ஸந்த்யாயாமாவிர்ப்பூதம் மஹாத்மநா" (75) என்று. பிறந்தானென்கை அவத்யமென்று

(பிறந்து) சிலர் "மகனாகவேணும்" என்றாசைப்பட்டால் தூணிலே தோற்றினாற்போலே யாதல், ஆனைக்குதவினாற்போலே யாதல், வந்து உதவ வமைந்திருக்க, ஈச்வரனே வந்து பிறக்கவேணுமென்று நோற்றபடியாலே பூர்வவ்ருத்தாநுஸந்தாநமின்றியே கர்ப்பவாஸம் பண்ணிப் பிறந்து உம்முடைய வயிற்றினின்றும் நாம்பிறந்தோமே யென்றுசோபநஞ் சொல்லிக்கொண்டு பிறந்தான். (பிறந்து) கர்மவச்யர் படுவதெல்லாம் க்ருபாபரதந்த்ரனாய்ப் படுவதே! என்று, நிமதாம் அக்ரேஸரர், "பிறந்தவாறும்!" என்று-ஆழங்கால்படும்படியாய்த்துப் பிறந்தது. ஆவிர்ப்பவித்தா னென்கிறது கர்ப்பத்தில் தோஷஸ்பர்சமில்லை யென்கைக்காக. நித்யஸூரிகள் ஸேவிக்க விருக்கிறவன் ஸம்ஸாரத்திலேபிறந்த இக்குணம் இழக்கவொண்ணாதென்று ரிஷிகளைப்போலே ஆவிர்ப்பவித்தானென்று அவத்யஞ்சொல்லாதே நிறம்பெறும்படி பிறந்தானென்பர்கள் ஆழ்வார்கள். (மகனாய்ப்பிறந்து) மகனாகையாவது - மாதாபித்ருபரதந்த்ரனாகையிறே. பெருமாள் பக்வரானபின்புமாதாபித்ரு வசநபரிபாலநம் பண்ணினார்;

பரிஹரித்தான் ரிஷி; அதுதான் அவத்யமென்று பிறந்தான் என்கிறார்கள். நம்முடைய கர்மம் நம்மோடே யவனை ஸஜாதீயனாக்கும்; அவனுடைய க்ருபை நம்மையவனோடே ஸஜாதீயராக்கும். "பரமம் ஸாம்யமுபைதி" (184) என்னக் கடவதிறே. அவன்பிறவி நமக்கென்றுகோல, நம்பிறவி அவன் மாதா பிதாக்கள் காலில் விலங்குபட்டதுபடும்; நம்பிறவி நம்மையும் அவனையும் அகற்றுகைக்குடலாயிருக்கும்; அவன்பிறவி இருவருமணுகுகைக்கு உடலாயிருக்கும்.

184. (ஓரிரவில்) அவ்விரவிலே யசோதைப் பிராட்டிக்குப் பிள்ளையாகவேண்டுகையாலே திருவாய்ப்பாடியிலேபுக்கு; நாய்க்குடலுக்கு நறுநெய் தொங்காதாற் போலே, கம்ஸாதிகள் தன்மை ஸூதிகாக்ருஹத்திலே ஓரிராத்தங்க வொட்டிற்றில்லையென்கை. (ஓரிரவு) அவ்விரவையொக்கும் இரவு முன்புமில்லை பின்பு

இவன், பிறந்தபோதே, "ஆழ்வார்களையும் திருத்தோள்களையும் மறைக்கவேணும்" என்ன, உபஸம்ஹரித்தான்.

(ஓரிரவில்) பிறந்தவிடத்தில் ஓரிரவும்வஸிக்கப்பெற்றதில்லையிறே ஸம்ஸாரிகள் கீழ். நாய்க்குடலுச்கு நறுநெய் தொங்காதாற்போலே, ஸம்ஸாரிகள் தண்மை கர்ப்பக்ருஹத்தில் ஓரிராத்தங்கவொட்டிற்றில்லை ஸம்ஸாரிகள் பிறந்தால் பெறுவதும் பெறப்பெற்றதில்லை. நால்வர் இருவரறிந்து சோபநஞ்சொல்லித் தூரியங்கொட்டி கண்கண்டு நெய்யாடல் பொத்தப்பெற்றதில்லை. ஸர்வேச்வரனிங்கேவந்தால் நம்முடைய கர்மம் நம்மோடவனுக்கு ஸாம்யத்தைக்கொடுக்கும், நாம் அங்கே சென்றால் அவனுடைய

பி.: 184-ஸூதிகாக்ருஹம்-ப்ரஸவ அறை (ஈனில்) ஓரிரவில்-க்ருஷ்ணன் ஓரிடத்திற்பிறந்து, பிறந்த சில நிமிஷங்களுக்குள் வேறோரிடத்திற்கு எழுந்தருளுவிக்கப் பெற்ற ஒப்பற்ற இரவு. "ஒருத்திமகனாய் ஒளித்து"-தேவகி, யசோதை ஆகிய இருவர் தபஸையும் நிறைவேற்றித் தேவகிபிராட்டிக்கு அவதார ரஸத்தையும், யசோதைப்பிராட்டிக்கு லீலாரஸத்தையும் அநுபவிக்கஅருளியபடி,

மில்லை. (ஓரிரவு) காலக்ருதபரிணாமமில்லாத தேசத்தில் வந்து காலாதீநமான தேசத்திலே பிறப்பதே! அவர்கள் தங்களோபாதியும் பெற்றிலனென்கை. (ஒருத்திமகனாய்) ஒருத்தி இவனை "மகனாகப்பெறவேணும்" என்று ஆச்ரயிக்க, அவளுக்கு அவதார ரஸத்தைக்கொடுத்து, இவளுக்கு லீலா ரஸத்தை யநுபவிப்பித்தபடி. ஓரவதாரத்திலே யாதவஸஜாதியனுமாய் கோபஜாதீயனுமானபடி. "அம்சாவதாரோப்ரஹ்

க்ருபை அவனோடு பரமஸாம்யத்தைத் தரும். "இணையனு மெப்பொருட்கும்" "தம்மையே யொக்க வருள்செய்வர்." நம்பிறவி அவனையகற்றும், அவன் பிறவி அணுகுகைக்கு உடலாம். அவன் பிறவி நமக்கென்றுகோல, நம்பிறவி அவனைப் பெற்றவர்கள் காலில்விலங்கு பட்டதுபடும். (ஓரிரவில்) காலக்ருதபரிணாமமில்லாத தேசத்தில் வந்து காலாதீநமான தேசத்திலேபிறந்துஓரிரவிற்பட்டபாடு என்தான்! [ஸிங்கிருள் வாய்பூண்டு] அவ்விரவோடொத்த இரவு முன்புமில்லை, பின்புமில்லை. (ஒருத்திமகனாய்) அங்கேபிறந்து இங்கேவளர்ந்தானாயிருக்கையன்றிக்கே, இங்கேபிறந்தானாயிருக்கிறபடி. (ஓரிரவில் ஒருத்திமகனாய்) அவ்விரவிலே யசோதைப்பிராட்டிக்குப் பிள்ளையாக வேண்டுகையாலே, ஒருத்திக்கு அவதார ரஸத்தைக்கொடுத்து, ஒருத்திக்கு லீலாரஸத்தை யநுபவிப்பித்தான். (ஒருத்திமகனாய்) அவ்விடத்தில் முலைக்சுவடறியாமல் போந்தபடியாலே, அழுது முலைப்பால் குடித்தவிடமிறே பிறந்தவிடமாவது. திருப்ரதிஷ்டை பண்ணினவர்களிலுங் காட்டில் ஜீர்ணோத்தாரணம் பண்ணினவர்களிறே முக்யர். யாதவத்வத்தையும் கோபத்வத்தையும் ஏககாலத்திலே யாக்கினான். யதுகுலோத்பவனென்ற ரிஷிதானே, கோபாலன்-யாதவகுலத்தை எடுக்கக்கடவன் என்றானிறே. "அவனுக்கு முலைசுரவாநின்றதாகில் இவன் அழுது முலையுண்ணாநின்றானாகில் உமக்கு சேதமென்?" என்று பட்டர். யசோதைப்பிராட்டியாக பூதனை பாவித்து, இவனுண்ணும்போது முலைவிரியும்படியான தசையையுடையளாய், பிள்ளையாகக் கொண்டெடுத்து முலைகொடுக்க, அதுபெருவிடில் வயிராருதபடியாய் இவனும் முலையுண்ண, இவனை "பிள்ளை" என்று

பர்ஷேயோயம்யதுகுலோத்பவ:" (185) என்ற ரிஷிதானே, "கோபாலோயாதவம் வம்சம் மக்நமப்யுத்தரிஷ்யதி" (186) என்றானிறே. (மகனாய்) பிறப்பில் புரையில்லாதாப்போலே இவள் மகனான விடத்திலும் புரையற்றிருக்கை. (ஒளித்து வளர) கம்ஸனுடைய விஷத்ருஷ்டிபடாமே வளர்ந்தபடி.

அவள் விச்வஸிக்க வொண்ணாதே துணுக்குத் துணுக்கென்னும்படி இவளாகபாவித்து அவள்பக்கல் பரிமாறுமவன் இவள்பக்கல் பிள்ளைத்தனத்தில் தப்ப நில்லானே. "மகனைக் கொண்டெடுத்தாள்" இத்யாதி. (ஒருத்திமகனாய்) அவள் இங்கேறநியமித்துப்போகவிட்டமாத்ரம்; இவள் "காடேறப்போ" என்னலாம்படி யிருக்கை. "கன்றின்பின் எற்றுக்கென் பிள்ளையைப் போக்கினேன்." அசேஷஜகத்துக்கும் சாஸிதாவானவஸ்து இவள் கட்டவுமடிக்கவுமாம்படி நியமிக்கலாய்த்திறே.

(மகனாய்) அங்குப் பிள்ளையாகப்பெற்றவளுக்காய்த்து இழவுள்ளது. [நந்தன் பெற்றனன்] யசோதைப்பிராட்டி கைப்பிடித்த பாக்யாதிகர் பெற்றார்; என்னைக் கைப்பிடித்த முஹூர்த்தத்தாலே ஸ்ரீவஸுதேவர் இழந்தார். [மருவுநின் திருநெற்றி] திருப்பவளத்திலே முலையைக்கொடுக்கப் புக்கவாறே திருநெற்றியில் சாத்தின சுட்டியிலசைவையும் முறுவலையுங்கண்டு தகப்பனாரைக் கொண்டானென்று அகவாய் பணைக்கும்; அந்தப்ரீதியாலே தனக்கும் வாசிதெரிக்கவொண்ணாத விரலை வாயிலே யிட்டுக்கொண்டு ஒருவார்த்தை சொல்லும்போது பெரியதேற்றத்தோடே தொடங்கின மழலைச் சொல்லும் பாக்யஹீனையான நானிழந்தேன்; பாக்யவதியான அவள் பெற்றுப் பூர்ணையானாள். (ஒருத்திமகனாய்) கம்ஸன் முடிந்து பழை நாள் பட்டிருக்கச்செய்தேயும், இந்நாள் என்னாதே மறைத்துப் போருகிறார்கள் பொல்லாங்கு விளையுமென்னும் அச்சத்தாலே. "பத்தாநாள்" என்னுமா போலே. (ஒருத்தி) "என்னநோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்" "ஞாலத்தில் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர் நானே மற்றாருமில்லை."

நாட்டார் செய்வன செய்யப்பெறாதே கள்ளர்பட்டது படு வதே! திருவவதரித்திருக்கச்செய்தே அந்தர்யாமிபட்டது படுவதே! உள்ளே யிருக்கச்செய்தேயும் இவனில்லை என்று எழுத்திடுமவன் முகங்காண ஸம்மதிக்குமோ வென்கை. அந் தர்யாமியாய் மறைய நிற்கிறது, பிச்சேறின ப்ரஜை தாய் முன்னே நிற்கில் தாயைக்கொல்லும்; அவள்பேரநிற்கில் தன்னை முடித்துக்கொள்ளும்; அதுக்காக முகந்தோற்றாதே நின்று இரண்டு தலையையும் நோக்கும் மாதாவைப்போலே, இசைந்து அம்மே! என்றால் ஏன் என்கைக்குக்கிட்ட விருக் கிறபடி யென்றுமாம். பேர்சொல்லாதே "ஒருத்தி" என்றது "அத்தத்தின்பத்தாநாள்" என்றவர் மகளாகையாலே பயத் தாலே யொளிக்கிறாள், அபிசரிக்கிலும் அதுவோ இதுவோ என்று ஸங்கேஹிக்கைக்காக.

(ஒளித்துவளர) பிறந்தவிடத்திலே தோன்றப்பெறாவிட் டால் போந்தவிடத்திலே வெளியிலே வளரப்பெற்றதோ. விஷத்ருஷ்டிகளான பூதநாதிகள் கண்படவொண்ணாதென்று நாட்டார் செய்வன செய்யப்பெறாதே, நிலவறைகளிலே யிறே வளர்ந்தது. "வானிடைத்தெய்வங்கள்காண"என்று- அநுகூலர்கண்ணுட்பட படவொட்டாதவள் ப்ரதிகூலர்கண் படவொட்டுவளோ. "கன்றின்பின்போகேல்" என்று புறப்படவொட்டாள். (ஒளித்துவளர) உகப்பார் ஸதாதர் சநம்பண்ணி அநுபவிக்கக்கடவ வஸ்து, கண்ணுக்குத்தோற் றாதபடி மறைக்கவேண்டும்படி கள்ளர்பட்டது படுவதே! அவதரித்திருக்கச்செய்தே அந்தர்யாமிபட்டது பட்டான். (ஒளித்துவளர) உள்ளேயிருக்கச்செய்தேயும் "இவனில்லை" என்று எழுதி எழுத்திடுமவன், முகங்காட்டஸம்மதிக்குமோ. பிச்சேறின ப்ரஜைமுன்னேதாய் நிற்கிலும் கொல்லும்; இவள்பேரநிற்கில் தன்னைமுடித்துக்கொள்ளும்; அப்படியே அவதரிக்கில் எதிரிடுவார்கள். பரமபதத்திலிருக்கில் அஸத் கல்பராவர்கள், அந்தர்யாமியாய் முகந்தோற்றாதே நின்று இரண்டுதலையையும் நோக்கித் தெளிவுபிறந்து, "அம்மே!" என்றால் "ஏன்" என்கைக்கு பதிக்கிடைகிடக்கிறபடி.

185. (தரிக்கிலானாகி) க்ருஷ்ணன் வளராநின்றான் என்று கேட்டபின்பு அவன் தரிக்கமாட்டிற்றிலன். ஈச்வரஸத்தையையும் பொறாத ஆச்ரயமிறே. (தான்தீங்குநினைந்த) பயத்தாலேபரிந்து மங்களாசாஸநம் பண்ணும் விஷயத்திலே தீங்குநினைத்தது துஷ்ப்ரக்ருதியாகையாலே. (தான்) உத்தரக்ஷணத்திலே படப்புகுகிறபாடறியாத தான். (தீங்குநினைந்த) தங்கள் வாயாலே சொல்லமாட்டாமையாலே "தீங்கு" என்கிறார்கள். அதாவது - பூதனையுள்ளிட்டாரை

(ஒளித்துவளரத்தரிக்கிலானாகி) நாரதாதிகள் சென்று உன்னுடைய சத்ரு திருவாய்ப்பாடியிலே வளராநின்றானென்று சொல்லக்கேட்டமாத்ரத்திலே "நங்கண்வட்டத்திலில்லையாகில் அவன் என்செய்யிலென்" என்றிராதே சதுரங்கபலோபேதனாய் ஐச்வர்யத்துக்குஹாநியின்றிக்கேயிருந்தோமாகில் வந்தவன்று பொருகிறோமென்று ஆறியிராதே தரிக்கமாட்டிற்றிலன். அஸஹ்யாபசாரமாவது-பகவத்பாகவத விஷயமாக அவர்கள்ஸத்தையும் பொறாதொழிகையிறே. கம்ஸவதத்தளவும் அநுஸந்தித்தவர்களாகையாலே மேலே படப்புகுகிற பாட்டை யநுஸந்தித்து க்ஷுத்ரனை பையல் தானே.

ஸிம்ஹத்தோடே நரி எதிரிடுமாபோலே எதிரிட்டவன் சிறுமையைச் சொல்லுகிறார்கள் (தீங்கு) பரியவேண்டும விஷயத்திலே பொல்லாங்கை நினைப்பதே! என்ன துஷ்ப்ரக்ருதிதான்! இன்னதென்று தன்வாயால் சொல்லமாட்டாமையாலே "தீங்கு" என்கிறார்கள். அதாவது - பூதனையுள்

பி. 185. தரிக்கிலான் - க்ருஷ்ணன் ஒளித்துத்திரு ஆய்ப்பாடியில் வளருவதைத் தரிக்கிலான், க்ருஷ்ணன் தனது (கம்ஸனது) ஹ்ருதயத்தில் அந்தர்யாமியாயிருக்கிறான் என்பதையும்தரிக்கிலான். உத்தரக்ஷணத்தில் - வெகுசீக்கிரத்தில் (விரைவுபற்றி, க்ஷணம் என்கிறது). கருத்தைப் பிழைப்பித்து - மனதைப் பிழையாக்கிக் கொண்டு. அவன் நினைவை அவனோடே போம்படிபண்ணி-அவன் க்ருஷ்ணனை நலிய எண்ணிய எண்ணத்தை அவனே நலியும்படி செய்து.

வரக்காட்டியும் வில்விழவுக்கு என்று அழைத்தும் நலியத் தேடினபடி. (கருத்தைப் பிழைப்பித்து) பூதனை முதலானோர் நலிவுகளைப் பண்ணப்புக அத்தைத் தப்பித் தன்னை நமக்குத் தந்தபடி. அவன் நினைவை அவன் றன்னோடே போம்படி பண்ணியென்றுமாம். (கஞ்சனித்யாதி) கம்ஸன் அநாதி காலம் ஸஞ்சிதமான பாபமித்தனையும் கண்டகாட்சியிலே அநுபவித்தாம்படி நின்றவன். ஆச்ரிதர்வயிற்றில்நெருப்பை

ட்டாரை வரக்காட்டியும் "வில்விழவுக்கு" என்றழைத்தும் நலியத்தேடினவை யெல்லாவற்றையும் நினைத்து. (நினைந்த) திருக்கு மநஸ்ஸஹகாரமுண்டாவதே! "சிந்தையினுமிகழ்ந்த" என்கிறபடியே உக்திமாத்ரமானவளவில் நலியாதே நெஞ்சில் பொல்லாங்கு சோதித்தாலாய்த்துக் கைவிடுவது. கைக்கொள்ளுமிடத்தில் கழுத்துக்குமே லமையும்; கைவிடுமிடத்தில் அகவாயிலுமுண்டென்றறிந்தாலல்லதுவிடான். (தீங்கு நினைந்த) தீயபுந்திக்கஞ்சனிறே. (கருத்தை) அம்மானாய், கண்ணநீர் விழவிட்டிருக்க, நினைத்த அபிப்ராயத்தை. (பிழைப்பித்து) அவன் நினைவை அவன்றன்னோடே போம்படி பண்ணி.

(கஞ்சன்வயிற்றில் நெருப்பென்னநின்ற) "க்ருஷ்ணன்" என்றால் வயிறெரிதலோடேயிருக்கக்கடவ பெண்களுடைய பயத்தையெல்லாம் அவன்வயிற்றிலேயாக்கினபடி. (கஞ்சன் வயிற்றில்) கம்ஸனுடைய தப்புக்களை நினைத்து, "என்செய்ய வென்னைவயிறு மறுக்கினாய்" "வாழகில்லேன் வாசுதேவா" "ஊடுறவென்னுடையாவிவேமால்" என்கிற-ஆச்ரிதருடைய பயாதிகளையெல்லாம் கம்ஸன் வயிற்றில் கொளுத்தினான். (கஞ்சன்வயிற்றில்) தேவகியார் வயிற்றில் பிள்ளை, கம்ஸன் வயிற்றில் நெருப்பு. (நெருப்பென்ன) [கஞ்சன் நாள்கவர் கருமுகிலெந்தாய்] தேவகியார்வயிற்றில் நீரைச்சொரிகிறவன்காணும், கம்ஸன்வயிற்றில் நெருப்பைச்சொரிகிறான். (நெருப்பென்னநின்ற) கஞ்சனைக்காய்ந்த காளமேகத்திருவுருவன். (நெருப்பென்னநின்ற) கம்ஸன் அநாதிகாலம் ஸஞ்சிதமான பாபமித்தனையும் கண்ட காட்சியிலே அநுப

கப் ஸன்வயிற்றில் கொளுத்தினவனென்கை. அதாவது - பயாக்நி கொளுத்துகை. (நெடுமாலே) இதெல்லாம் பட வேண்டிற்று ஆச்ரிதர்பக்கல் வ்யாமோஹத்தாலேயென்கை. அப்போது ஸ்ரீவஸுதேவர்பக்கலிலும் ஸ்ரீதேவகியார்பக்கலிலும் திருவுள்ளம் மண்டினபடியென்றுமாம்.

186. (உன்னையருத்தித்துவந்தோம்) அர்த்தித்வத்தில் நிரபேக்ஷனை வுன்னை ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும் இரப்பாளித்தறும்படி நின்றநிலை. (நெடுமாலே) இதெல்லாம் பட வேண்டிற்று ஆச்ரிதர்பக்கல் வ்யாமோஹத்தாலே. (நெடுமாலே) அப்போது ஸ்ரீவஸுதேவர்பக்கலிலும் ஸ்ரீதேவகியார்பக்கலிலும் திருவுள்ளம்மண்டி, "ஒன்றுங் கண்டிடப் பெற்றிலேன் - காணுமாறினி யுண்டெனிலருளே" என்று - அவள்பட்ட இழவுகளெல்லாந்தீர முலைப்பால் திருமேனியிலே பாய அவளுக்கு நின்று பாலசேஷ்டிதங்களைக்காட்டின வ்யாமோஹத்தை அவள் தான்காண்பதற்கு முன்னே மஞ்சங்களில் பெண்கள் கண்டு வாழும்படி பண்ணின வ்யாமோஹாதிசயத்தைத் "நெடுமாலே" என்கிறது. "கஞ்சனையஞ்சமுன்கால் விசைத்தகாளையராவர் - அச்சோவொருவரழகியவா" என்றிறே பெண்கள் பார்த்துக்கொடு நின்றது.

நாம் அவ்விடத்திலப்படி செய்த செய்த தீமையுண்டு, உங்களுக்குச் செய்ய வேண்டுவ தென்னென்ன (உன்னையருத்தித்து) எங்களுக்குப் பிறந்து காட்டவும் வேண்டா, வளர்ந்து காட்டவும் வேண்டா, கொன்று காட்டவும் வேண்டா, உன்னைக்காட்டவமையும். (உன்னை யருத்தித்து) உன் பக்கலிலேயொன்று வேண்டி வந்தோமல்லோம், உன்னை வேண்டி வந்தோம். (உன்னையருத்தித்து) "என்னையாக்கிக்

பி. 186. திருத்தக்கசெல்வம் - (1) திருவாலே தக்க செல்வம் = ஸ்ரிய: பதித்வத்தால் வந்தஸம்பத்து (2) திருவுக்குத்தக்க செல்வம் = பிராட்டி ஆசைப்படும் ஸம்பத்து. காத்து ஊட்டவல்ல, ரக்ஷித்து அநுபவிப்பிக்கவல்ல. "வருத்தமும்" என்பதிலுள்ள "உம்"—பிரிவு கொடுக்கிற வருத்தம் அநுபவித்தே அறிய வேண்டும், சொல்லும் தரமல்ல என்றபடி.

ளாகப் இவ்வளவும் வந்தது ஆர் அபேக்ஷித்து. (நெடுமாலே புன்னையருத்தித்து வந்தோம்) பண்டே வ்யாமுக்தனானவுன்னை அர்த்திக்கையாலே பிச்சின் மேலே பிச்சேற்ற வந்தோம். அர்த்தித்வத்தினளவு எங்கள் வடிவைப் பார்க்கவமையும். (பறைதருதியாகில்) எங்களுக்கு உத்தேச்யம் செய்குதியாகில். "ஆகில்" என்றது - நம்முடைய அர்த்தித்வாதிகள் அப்ரயோ

கொண்டெனக்கே தன்னைத்தந்த" என்று அர்த்தித்வ நிரபேக்ஷமாக அர்த்திகளையு முண்டாக்கி உன்னையுங் கொடுப்புதிபிறே, உன்னுடைய ஔதார்யமெல்லாம் அஸத்கல்பமாக்கி ஸ்ரீ வைகுண்டத்தில் நின்றும் இரப்பாளாய் வந்தது ஆர் அபேக்ஷித்து. (நெடுமாலே யுன்னை யருத்தித்து) பண்டே வ்யாமுக்தனானவுன்னை அர்த்திக்கையாலே பெரும்பிச்சின் மேலே பிச்சேற்ற வந்தோம். (வந்தோம்) எங்கள் மிகைச்செயல் கண்டாயே. உன் வ்யாமோஹமெல்லாம் அத்வேஷமென்னும்படிக்கீடாய் நாங்கள் வந்தது. (வந்தோம்) "எதிர்சூழல் புக்கு," "ஆள்பார்த்துழிதந்து," "ஆயர்குலத்தினில்," வந்து தோன்றின உன் வ்யாமோஹமெல்லாம் காலடியிட்டு அஸத்கல்பமாக்கினோம்.

"பறைகொள்வான் இன்று யாம் வந்தோம்" என்று சொல்லுவது, "உன்னை யருத்தித்து வந்தோம்" என்பதாய் வ்யாஹதமாக வார்த்தை சொன்னிகோளேயென்ன; (பறை தருதியாகில்) எங்களுக்கு உத்தேச்யம் செய்ய நினைவாகில். (உன்னை யருத்தித்து வந்தோம்) பறைக்குப் பொருள் மேலே சொல்லவிறே யிருக்கிறது. (தருதியாகில்) அவர்கள் அர்த்தித்வம் அப்ரயோஜகம், அவன் நினைவாலே பலமென்கைக்காக "ஆகில்" என்கிறது. இவன் எல்லாஞ்செய்தாலும் அவன் "அல்லேன்" என்றவாறு ஸ்வதந்த்ரனை வளைப்பிடவொண்ணாதே. இவர்களர்த்தித்வம் அவன் ஸ்வாதந்த்ரியத்தைப் போக்கமாட்டாதே. ஆகையாலே "தருதியாகில்" என்கிறார்கள். எத்தனையேனும் மேலானவர்களை எத்தனையேனுந் தாழ்ந்தவர்கள் "திருவுள்ளமாகில் செய்தருளவேணும்" என்றிறே சொல்லுவது.

ஜகம்; அவன் நினைவாலே பலமென்கை. உன்னழகாலே பிழைப்பியாதே செய்தருளப் பார்த்தாயாகில் என்னவுமாம். (திருத்தக்கசெல்வமும்) "யஸ்யஸாஜநகாத்மஜா - அப்ரமேயம் ஹிதத்தேஜ:" (187) என்று—ஸ்ரீய: பதித்வத்தால் வந்த ஸம்பத்தையும். பிராட்டியாசைப்படும் ஸம்பத் தென்னவுமாம். (சேவகமும்) அத்தைக்காத்து ஊட்டவல்ல வீர்யம். (யாம் பாடி) உன்பேர் சொல்லப்பெறாத நாங்கள் உகப்போடே

ஆகிறது, நினைவுசுருக்கமொழிய அறிந்தோம், வந்தபடி தான் என், வருகிறபோது க்லேசித்திகோளே என்ன; ஒரு க்லேசமுமின்றியிலே உகப்போடே வந்தோம். பிரிந்திருக்கிற நீங்கள் உகப்போடே வந்தபடி யென்னென்ன; (திருத்தக்க) ஸ்ரீய: பதித்வத்தால் வந்த ஸம்பத்தையும். பிராட்டியை எனக்கு என்னும் பெருமையுண்டாம்போது அவளாசைப்பட்டு மேல்விழும்படி அதுக்கீடான ஸம்பத்துண்டாக வேணுமிறே. (திருத்தக்க செல்வமும்) "செல்வச்சிறுமியான" இவர்களுக்கு செல்வு தக்காப்போலே, "போதமர் செல்வக்கொழுந்தான" பெரியபிராட்டியாருக்குத் தகுதியாயிருக்கும் செல்வத்தினால் வளர்பிள்ளையுடைய செல்வு. (சேவகமும்) அவ்வைச்வர்யத்தைக் காத்தூட்டவல்ல ஆண்பிள்ளைத் தனமும். பிராட்டியுடைய விரோதிகளையும் பெண்களுடைய விரோதிகளையும் போக்கி உபயவிபூத்யைச்வர்யத்தையும் காத்தூட்டவல்ல வீர்யம். "என்றென்றுன் சேவகமே யேத்தி" என்கிற விடத்தில் இரண்டு முண்டிறே. (செல்வமும் சேவகமும்) "ஆற்றப்படைத்தான்மகனே" என்றதுவும், "கப்பந்தவிர்க்கும் கலியே" என்றதுவும்.

(யாம்பாடி) உன்பேர் சொல்லப்பெறாத நாங்கள் உன் பேர் சொல்லவொட்டாதார் முன்னே உகப்போடேபாடி. "புள்ளின்வாய்கீண்டானை" என்று - ஊரெல்லாம் பாடிக் கொண்டு திரிகிறார்களிறே. (வருத்தமும் தீர்ந்து) உன்னைப் பிரிந்து நெடுநாள்பட்ட க்லேசமெல்லாம் தீர்ந்து. கேவலரைப்போலே துக்கநிவ்ருத்திமாத்ரமேயன்றே இவர்களுக்கு ப்ரயோஜநம், பாடுகிறபோது ப்ரீதிக்குப் போக்குவீடாகை

அந்தைச்சொல்லி. (வருத்தமும்தீர்ந்து) உன்னைப்பிரிந்துபடும் துக்கமும் தீர்ந்து. பிரிந்தார்படும்பாடறிய உன்னை நீ பிரிந்தறியாயே (மகிழ்ந்து) கைவல்யம்போலே துக்கநிவ்ருத்தி மாத்ரமேயன்று, ப்ரீதிக்குப் போக்குவிடும்படியாகவேணும்.

187. ஸ்வாபதேச வ்யாக்யானம். இருபத்தைந்தாம் பாட்டு. (ஒருத்திமகனாயித்யாதி) இப்பாட்டில், கீழ்ப்பாட்டில் "எத்திப்பறை கொள்வான் இன்று யாம் வந்தோம் இரங்கு" என்று இவர்கள் அபேக்ஷிக்கையாலே உங்களுக்குச் செய்யவேண்டுவதென்னென்ன; நெடுமாலே! நீ புருஷார்த்தத்தைக் கொடுத்தாயாகில் நாமும் உன்னையும் உன் குணங்களையும் ப்ரீதிக்குப் போக்கு வீடாகப்பாடி, பட்ட வ்யஸநமெல்லாம் தீர்ந்து மகிழக்கடவோமென்கிறார்கள். வ்யா.— (ஒருத்தியித்யாதி) அஷ்டாக்ஷரீ ப்ரதிபாத்யனாய் குணவிக்ரஹ விபூதிவிசிஷ்டனாய் அவதரித்து. (ஓரிரவித்யாதி) லௌகிகரறியாத அத்விதீய காலத்திலே வாஸுதேவ த்வாதசாக்ஷரீ ப்ரதிபாத்யனாய். (ஒளித்துவளர) குணவிக்ரஹ விபூதிகளாலே ஸங்குசித்து ஸ்வரூபமாத்ரேண வளராநிற்க. (தரிக்கிலானாகி

யாலே அநுபவகாலத்திலாநந்தம்போலே அநுஸந்தாநஸமயத்தில் ஹர்ஷம் கனக்கவுடையோமாய். (வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து) "நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தேன்," "உகந்தேயுன்னை யுள்ளுமென்னுள்ளம்" என்கிறபடியே - அநுஸந்தாநகாலத்தில் அநுபவகாலம் போலேயிறேயிருப்பது. [தூயவமுதைப் பருகிப்பருகி] க்ருஷ்ணாநுஸந்தானம் தித்திக்குமிறே. "வருத்தம்" தீருகைக்குச் சேவகம்பாடினார்கள்; "மகிழ்ச்சி பிறக்கைக்குச்" செல்வம் பாடினார்கள். சௌர்யவீர்யாதிகள் க்லேசநிவர்த்திக்குடல்; ஐச்வர்யம் ஆநந்தஹேது. (பாடி வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்து) "இசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன் வெய்ய நோய்கள் முழுதும் வியன்ஞாலத்துவீய," "வீவிலின்பம் மிகவெல்லை நிகழ்ந்தனம்." விரோதி நிவ்ருத்தியு மாய்த்து; அபிமதஸித்தியுமுண்டாய்த்து. பாடி வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்து, தருதியாகில், உன்னையருத்தித்து வந்தோம். .... உ

ஸ்வரூபமாத்ரேண ஈச்வரஸத்தையையும் பொறுதவனாய். (தானித்யாதி) அநவரதம் மங்களாசாஸநம் பண்ணக்கடவ விஷயத்திலே அவனால் ஒரு உபத்ரவமுண்டாய்ப் பொல்லா மையை நினைக்கையன்றிக்கே தானே த்வேஷத்தை நினைந்த அபிப்ராயத்தை வ்யர்த்தமாக்கின அஹங்காரத்தினுடைய வயிற்றிலே நெருப்பைக் கொளுத்தினாற்போல ஜ்வலித்து அவ னருகே நின்ற ஸ்வசேஷ பூதசேதந விஷய வ்யாமோஹாதி சயத்தை யுடையவனே. (உன்னை அருத்தித்து வந்தோம்) உன்னை அபேக்ஷித்து வந்தோம். (பறைதருதியாகில்) நீ புருஷார்த்தத்தைக் கொடுப்புதியாகில். (திருத்தக்க செல்வ மும் சேவகமும்) பெரிய பிராட்டியாருக்குத் தகுதியான ஸ்வரூபரூப குணவிக்ரஹ விபூதி விசிஷ்டனாயிருக்கிற செல் வத்தையும வீரசரிதத்தையும். (யாம்பாடி) அதுவே தாரக மான நாம் பாடி. (வருத்தமித்யாதி) உன்னைப் பிரிந்துபட்ட வ்யஸநமெல்லாம் நிச்சேஷமாகத் தீர்ந்து ஆநந்திக்கக்கட வோம். .... உரு

இருபத்தாறும்பாட்டின் அவதாரிகை

மூவாயிரப்படி:—188. இருபத்தாறும் பாட்டு. உங்க ளுக்கு அபேக்ஷித மென்னென்ன; நோன்புக்கு வேண்டும் உபகரணங்களையும் அபேக்ஷிக்கிறார்கள். க்ருஷ்ணஸம்ச்லே

ஆறுயிரப்படி:—இருபத்தாறும பாட்டு. பெண்காள் "உன்னை யருத்தித்து வந்தோம் பறைதருதியாகில்" என்று சொன்னீர்கள், நம்முடைய ஸம்ச்லேஷ ரஸோத்ஸாஹ முடையவர்கள் வேறொன்றை அபேக்ஷிக்கக்கூடாமையாலே அதென சொன்னீர்களென்று அதிலே ஒரு ஸம்சயம் வர்த் தியாநின்றது, அதாகிறது எது, அதுக்கு மூலம எது, அதுக்கு வேண்டுவன எவை, அவற்றுக்கு ஸங்க்யை எத்தனை, அவற்றைச் சொல்லுங்கோ ளென்ன; உன் முகத்தை வெளி யிலே கண்டு உன்திருநாமங்களை வாயாலே சொல்லுகைக்கு ஹேதுவாயிருப்பதொருநோன்பை இடையர் ப்ரஸ்தாபிக்கை யாலே, உன்னோட்டைக் கலவிக்கு அது அவிருத்தமா யிருக்

க்ஷ: ஸோத்ஸாஹரான இவர்கள் இவற்றை அபேக்ஷிக்கைக்கடி யென்னென்னில்; அந்த ஸம்ச்லேஷத்துக்கு ஏகாந்தமான நோன்பை ப்ரஸ்தாவிக்கையாலும், க்ருஷ்ணன் முகத்தை வெளியிலே காண்கைக்கு ஹேதுவாகையாலும், அவனுடைய திருநாமங்களை வாயாரச் சொல்லுகைக்கு ஹேதுவாகையாலும் இடையர்பக்கல் உபகார ஸ்ம்ருதியாலும் நோன்புக்கு அங்கங்களை வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்
 மேலையார் செய்வனகள் வேண்டுவனகேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
 பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே
 சாலப்பெரும் பறையே பல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கே கொடியே விதானமே
 ஆலினிலையா யருளேலோ ரெம்பாவாய்.

பதவுரை.—மாலே - ஆச்ரித விஷயத்தில் வ்யாமோஹத்தை யுடையனே, மணிவண்ணா - நீலரத்நம்போன்ற வடிவையுடையனே; ஆலினிலையாய் - எங்களபேக்ஷிதத்தைத் தலைக்கட்டவல்ல சக்தியையுடையவனே: ப்ரளயத்தில் ஆலினிலையிற் பள்ளிகொள்

கிறபடியைக் கண்டு, இடையர்பக்கல் உபகாரஸ்ம்ருதியாலே அந்நோன்பிலேயிழிந்தோம்; அதுக்கு முன்புள்ளார் செய்து போருவதொன்றுண்டு, அதுதனக்கு வேண்டும் உபகரணங்களான அங்கங்களுமிவை, அவற்றையுந் தந்தருளவேணு மென்று வேண்டிக்கொள்ளுகிறார்கள். தாங்கள் இதுக்கு முன்பெல்லாம் அவனை ஆசைப்பட்டார்களாகச் சொல்லிக் கொண்டு போந்தார்கள்; இப்போது அவனைக் கண்டவாறே தங்களுடைய வ்யாமோஹம் குளப்படியாய், அத்வேஷ கோடியிலே யென்னலாயிருந்தது; அவனுடைய வ்யாமோஹம் கடல்போலே எட்டப்போகாதே பிச்சுவடிவு கொண்டாற்போலே யிருந்தது, இதுகொண்டித்தனை நாளும் நாங்கள் வருந்தனையும் பாடாற்றினபடிதா னெங்ஙனே! என்று "மாலே" என்கிறார்கள்.

பவனே, மார்கழி நீராடுவான்-மார்கழி நீராட்டத்துக்கு உபகரணங்கள் வேண்டிவந்தோமென்ன; மார்கழி நீராட்டாவதென் என்ன; இது ப்ரஸித்தமன்றோ, மேலையார்-பெரியோர்கள், செய்வனகள்-அநுஷ்டிக்கப் பட்டவைகள் என்ன; ஆகில் உங்களுக்கு வேண்டுவன வெவையென்ன, வேண்டுவன - வேண்டியவைகளை, கேட்டியேல் - கேட்பாயாகில், ஞாலமெல்லாம் - பூமியெல்லாம், நடுங்க - நடுங்கும்படிக்கிடாக, முரல்வன - சப்தத்தை யுடையனவாய், பாலன்ன - பால்போன்ற, வண்ணம் - நிறத்தை யுடையனவாய், உன் - உன்னுடைய, பாஞ்ச சன்னியமே போல்வன - ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யொத்தனவான, சங்கங்கள் - சங்கங்களும், போய் - பெரிய, பாடுடையன - இடமுடையனவான, சாலப்பெரும் - மிகவும் பெரிதாயிருந்துள்ள, பறை - வாத்தியங்களும், பல்லாண்டு இசைப்பார் - பல்லாண்டு பாடுவார்களும், கோலவிளக்கு - மங்கள தீபங்களும், கொடி - த்வஜங்களும், விதானம் - மேற்கட்டிகளும், அருள் - க்ருபை செய்தருள வேணுமென்கிறார்கள்.

189. வ்யா.— (மாலே) முன்பு "நாராயணனே" நமக்கே பறைதருவான்" என்று அபரிச்சேத்யமான மேன்மையையும் நினைத்திருந்தார்கள்; இப்போது-இத்தத்வத்துக்கு வாத்ஸல்யமே ஸ்வரூபமென்று நிலையிட்டார்கள். "சரணு

வ்யா.—(மாலே) நாங்கள் தெளிந்து நோன்பு நோற்கவாகிலும் வல்லோமாறேனும், நோற்கவும் க்ஷமனன்றிக்கே நாங்கள் வந்தெழுப்பு மளவும் எழுந்திருக்கவும மாட்டாத வ்யாமோஹ மிருந்தபடியென்! (மாலே) "நாராயணன்" "பையத்துயின்றபரமன்" "தேவாதிதேவன்" என்று-முன்பு அபரிச்சேத்யமான மேன்மை யுனக்குள்ளதென்றிருந்தோம்; இப்போது, மேன்மை இடுசிவப்பு, வாத்ஸல்யமே உனக்கு ப்ரக்ருதியென்று நிலையிட்டோங்காண் உன்னைக் கண்ட

பி. 189. மஹாபாரதத்துக்கு உள்ளீடான (பாரதத்தின் உபநிஷத்து நிலையிலுள்ள ஸ்ரீபகவத்கீதையில் சரமச்லோகத்திலுள்ள "மாம்" என்ற பதத்தின் தாத்பர்யமான) வ்யாமோஹகுணத்தை "மாலே" என்கிற விளிச்சொல்லாலே நிலையிட்டார்கள். மாலுடையவனே என்னுமல் "மாலே" என்பது பெரும்பித்தனே என்றபடி.

சதவத்ஸல:" (20) என்று-ஸ்ரீராமாயணத்துக்கு உள்ளீடான ப்ரதாநகுணத்தைப் பிராட்டி நிலையிட்டாள்; மஹாபாரதத் துக்கு உள்ளீடான வ்யாமோஹ குணத்தை "மாலே" என் கிற ஸம்போதநத்தாலே இவர்கள் நிலையிட்டார்கள். இவர் கள் பேச்சுக்கேட்ட பின்பு பண்டையிலும் பெரும்பித்தனான படி. (மணிவண்ணா) அபரிச்சேத்யனா யிருக்கச்செய்தேயும் முன்தானையிலே முடிந்தாளலாம்படி யிருக்கை. கீழ்ச் சொன்ன வ்யாமோஹம் வடிவிலே நிழலிடுகை. இந்நீர்மை யன்றிக்கே காதகனானாலும் விடவொண்ணாத வடிவழகு.

வாறே. பெருமாளுக்கு ப்ரதாநமான குணத்தை "சரணாகத வத்ஸலர்" என்று ஸ்ரீராமாயணத்துக்குள்ளீடாக நிலையிட் டாள் பிராட்டி; அப்படியே க்ருஷ்ணனுக்கு ப்ரதாநகுண மாய் மஹாபாரதத்துக்குள்ளீடான ஆச்ரிதவ்யாமோஹத்தை "மாலே" என்கிற ஸம்புத்தியாலே வெளியிடுகிறார்கள் இடைப் பெண்கள். ராவணன் பின்னே பிறந்த நம்மை ரகுகுலத் திலே பிறந்தார் கைக்கொள்ளுவர்களோ! என்றிருந்தான் விபீஷணன்; ராவணன் பின்னே பிறந்தவனை ராவணனை பாசைப்படுகிற நமக்கு ஸித்திக்கப் புகுகிறதோ என்றிருந் தார் பெருமாள்; இதிறே இரண்டுதலைக்கும் வாசி. இத்தலை ஒருமாஸம் ஜீவியேனென்னில், ஒருக்ஷணம் ஜீவியேனென் றிறே அத்தலை. "வாரிக்கொண் டுன்னை விழுங்குவன் காணில்" என்கிற வளவேயிறே இவர்களது. "என்னில் முன்னம் பாரித்துப் புருகின்னிறே" அவனது; "எனைத்தோர் பலநாள ழைத்தேனிறே" இவர்களது: "என்றன்கருத்தையுற வீற் றிருந்தானிறே" அவனது; "அதனில் பெரிய என்னவா விறே" இவர்களது; "அவாவறச் சூழ்ந்தாயே"யிறே அவ னது; "நாராயணனை நமக்குக் கிடைக்குமோ" என்று பெண் கள் நினைவு; யதுகுலத்திற் பிறந்தார்க்குக் கிடைக்கப் புகு கிறதோ என்று அவன் நினைவு; ஒருத்திமகனானதை விட்டு ஒருத்திமகனாய்த்து இவர்களுக்கிறே: ஒளித்துவளர்ந்தது கம்ஸனுக்கன்றே; பெண்களைப் பிரியாமைக்கிறே. "நெஞ்சு துக்கஞ்செய்யப்போந்தாய்" "நாமறிய ஆய்ப்பாடிவளர்ந்த" (மாலே) இவர்கள்பக்கல் பிச்சிறே ஒருபிறவியிலே யிருபிறவி

பெண்கள் பிச்சுக்கு நிதாநமான வடிவென்னவுமாம். "மாலாய்ப்பிறந்தநம்பியைமாலேசெய்யும்மணாளனை" என்னக் கடவதிறே. நீங்கள் வந்ததென்னென்ன; வந்தகாரியத்தைச் சொல்லுகிறார்கள் (மார்கழிநீராடுவான்) மார்கழிநீராடுகைக்கு உபகரணங்கள் வேண்டி வந்தோம். ஆஸ்திக்யாதிரேகத்தாலே அங்கிகைப்பட்டிருக்கச்செய்தேயும் அங்கத்தை விடாதொழிகிறார்கள். மார்கழிநீராட்டமாவதென்னென்ன; இது ப்ரஸித்தமன்றோ வென்ன; "ஸ்வர்க்ககாமோயஜேத" (188) என்னுமாபோலவும், "நித்யாஸிதவ்ய:" (189) என்

யாய்த்து. [மாலாய்ப்பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை] பிச்சாய்ப்பிறந்து பெண்களையும் பிச்சேற்றித் தன்னோடொரு கோவையாக்கும். "மன்றில்குரவை பிணைந்தமால் என்னை மால்செய்தான்." தெளிவுடையார் பெண்களைச் சந்தியிலே வைப்பார்களோ.

நம்முடைய வ்யாமோஹம் நீங்களறிந்தபடியென்னென்ன; அகவாயில் வ்யாமோஹம் வடிவிலே நிழலிட்டுக் காட்டுகையாலே தெரிந்ததென்கிறார்கள் (மணிவண்ணா) பெண்கள் பிச்சுக்கு நிதாநமிருக்கிறபடி. (மணிவண்ணா) தாமரையிலிருக்கிறவள் அத்தைவிட்டு வருகிறது இவ்வடிவைக்கண்டிறே. "பனிமலராள் வந்திருக்கும்மார்வன் நீலமேனி மணிவண்ணன்." (மணிவண்ணா) வ்யாமோஹனன்றிக்கே காதுசனாலும் விடவொண்ணாதவடிவழகு. (மாலே மணிவண்ணா) இப்படிவடிவுபடைத்தாரும் பிறாத்தையாசைப்படுவார்களோ. பிச்சர்கையில் மாணிக்கமாய் உன்னுடையபுவுன்னதாமோ. அன்றிக்கே, "மால்" என்று - பெரியோனென்றபடியாய், "சூட்டுநன்மாலைகள்" எடுத்து ஸூரிகள் ஸேவிக்கவிருக்குமீச்வரத்வஞ்சொல்லுகிறது. "மணிவண்ணா" என்று - "வெண்ணெய் தொடு வுண்ணப்" போந்து அபரிச்சேத்யனாயிருக்கச்செய்தே, முன்றானையிலே முடிந்து பெண்களுக்கு அடக்கியாளலாம்படி யிருக்கிற ஸௌலப்யத்தைச் சொல்லுகிறதாகவுமாம். "மணிவண்ணா" என்று-மணியினுடைய ஸ்வபாவத்தைச் சொல்லுகிறது. "அதாவது-உண்டு"

னுமாபோலவும் ப்ரஸித்தமாயிருந்ததோவென்ன (பேலையார் செய்வனகள்) அவைபோலும் மல்லகாண் இது; ப்ரஸித்த தாங்காண் இது. ச்ருதிஸ்ம்ருதிகளிலும், "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாச்ச" (126) என்றும், "யத்யதாசரதிச் ரேஷ்ட:" என்றும்-சிஷ்டாசாரமேயிறே ப்ரஸித்த ப்ரமாணம்.

என்ன உயிர்நிற்கையும், உடையவன்காலிலே ஸர்வரும் விழும்படியிருக்கையும், இழந்தார் பிழையாதொழிகையும், கைப்பட்டார்க்குப் பூணலாயிருக்கையும் பூணாதார்க்கு அழித்து உண்ணலாயிருக்கையும், கிழிச்சீரையிலே யடக்கலா யிருக்கையும், பிறர்க்கேயாயிருக்கையும், அளவுபடாமலுயக் ரிக்கையும், "கொடுத்தோம்" என்று நினைத்திராதொழிகையும், வேறொன்றில் கண்வைக்கவொட்டாதொழிகையும் தொடக்க மான ஸ்வபாவங்கள். "என்றுமெனக்கினியானை யென்மணி வண்ணனை" என்று - நம்மை ஆச்சி பலகாலுஞ் சொல்லும் தாய்க்கு மணிவண்ணானித்தனையன்றே, "மணிமாமை" குறைவில்லாதே "அழகியாரிவ்வுலகமூன்றுக்கும்" என்கிற வுங்களுக்கேற வுடம்பு படைக்கப்போமோ.

இத்தனை மிகை நம்மைச் சொல்லுகிறதென், போந்த கார்யத்தைச் சொல்லுங்கோளென்ன (மார்கழிநீராடுவான்) "மகிழ்ந்து-மார்கழிநீராட" என்று ஊராக ஸங்கல்பித்த கார் யம் தலைக்கட்டுகைக்காக. ஸாத்யம் கைப்பட்டிருக்கச் செய்தே, ஆந்ருசம்ஸ்யத்தாலும், ஆஸ்திக்யாதிசயத்தாலும் க்ருத்யாம்சம்விடார்களிறே; மார்கழிநீராடுகைக்கு உபகர ணங்கள் வேண்டிவந்தோம்.

இவர்கள் சொல்லுமது கேட்கைக்காக, இத்தை ஆக்ஷேபித்து இது எங்கேயுள்ள தொன்றுதான்? என்றான்; இது இங்ஙனே அப்ரஸித்தமாயிருந்ததோ என்றார்கள்; காம் நாதிகாரிகளுடைய ஜ்யோதிஷ்டோமாதி விதிபோலே ப்ர ஸித்தமோவென்ன; அநந்யப்ரயோஜநைகளான வெங்கள் முன்னே ப்ரயோஜநாந்தர பரருடைய விரோதியைக் காட்டி னாயே என்று இவர்கள் சொல்ல; முமுக்ஷுக்களுடைய த்யாக விரோதிபோலே ப்ரஸித்தமா யிருந்ததோ என்று

190. ஆகில் வேண்டுவது சொல்லுங்கோளென்ன ; (வேண்டுவனகேட்டியேல்) கேட்புதியாகில் என்கிறது அந்ய பரதையாலே. அந்யபரதை யென்னென்னில்; பஞ்சலக்ஷங் குடியிற் பெண்களும் முன்னே நிற்கையாலே இவர்கள் முலை யிலும் இடையிலும கண்ணிலும் முகத்திலும் துவண்டு ஆனைக்

அவன் சொல்ல; நாஸ்திகரைப்போலே நீசொல்லுகிறதென், ஆளறிந்து வார்த்தை சொல்லாய், "நாராயணனே நமக்கே பறைதருவா" னென்பாருடைய அநுஷ்டாநம் ச்ருதிஸ்ம்ருதி களில் சொல்லுகிறவைபோலல்லகாண், ப்ரபலப்ரமாண ஸித்தங்காணென்கிறார்கள் (மேலையார் செய்வனகள்) விதி ப்ரவ்ருத்தமானால் பல வ்யாப்தமாந்தனையும் ஸம்சயத்துக்கு விஷயமுண்டு, அநுஷ்டித்து பலஸித்தி யுண்டானதுக்கு ஸம் சயமில்லையே, விச்வாமித்ரன் சொன்னான் கண்டு சொன்னான் என்றாப்போலேயோ, கபோதமநுஷ்டித்தது என்றார்கள். (மேலையார் செய்வனகள்) நிர்த்தோஷப்ரமாண சாஸ்த்ரந்தா னும், வ்யாஸன் சொன்னான், மநு சொன்னான், ப்ரஹ்மவாதி கள் சொல்லுவர்கள், யாதொருபடி அவர்கள் அவ்விடத் திலே வர்த்தித்தார்கள் அப்படி வர்த்தியென்று, ஜ்ஞாநவாந் களுடைய வசநத்தையு மநுஷ்டாநத்தையுமன்றோ ப்ரமாண மாகச் சொல்லுகிறது, வேதங்களுக்கு முன்னேயன்றோ தர்மஜ்ஞருடைய ப்ராமாண்யம் சொல்லப்படுகிறது. (மேலை யார் செய்வனகள்) "யாதொன்றை யாதொன்றை ச்ரேஷ்ட டர்கள் ஆசரித்தார்கள், யாதொரு அளவு செய்தார்கள் அவ் வளவு லோகமநுவர்த்திக்கும் என்று சிஷ்டாசாரமே ஸ்திரப்ர மாணம்" என்று தேர்த்தட்டிலே நின்று சொன்ன நீ, எங்களைக் கண்டவாறே மறந்தாயோ ; சாஸ்த்ரம் விதித்ததே யாகிலும்

பி. 190. ஆனைக்குப்பு-சதுரங்கம் என்கிற ஆட்டம் (Chess) இவர்கள் முலையிலும் இடையிலும் கண்ணிலும் துவண்டு - ஸ்வாப தேசத்தில் :—முலைபோகோபகரணம் = பக்தி ; இடைகார்ச்யத் தாலே விஷயாந்தரஸ்பர்சராஹித்யத்தாலே = வைராக்யம் ; கண் - காண்கைக்கு ஹேதுவாகையாலே ஜ்ஞாநம். ஆக ஞானபக்தி வைராக்யங்களையும் கண்டு துவண்டு என்றபடி. இவைகளே பக வத்விஷய அதிகாரிக்கு அழகு.

குப்பு ஆடுவாரைப்போலே யிருக்கையாலேதட்டியெழுப் புகிறார்கள். இத்தால்-ஸ்வாபதேசத்தில், ஜ்ஞாநபக்தி வைராக்யத்தைச் சொல்லுகிறது. இவையிறே அதிகாரிக்கு அழகாகிறது. காண்கைக்கு ஹேதுவாகையாலே "கண்" என்று-ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது; போகோபகரணமாகையாலே "முலை" என்று - பக்தியைச் சொல்லுகிறது; கார்யத்தாலே "இடை" என்று - வைராக்யத்தைச் சொல்லு

அது எங்ஙனே என்னில்; - "பிள்ளாய் எழுந்திராய்" என்கையாலே பகவத்விஷயத்திலே அபிநவமாக மூட்டும் "அஸ்மத்குருப்யோநம:" என்னும்படி சொல்லுகிறது. அநந் தரம் "நாயகப்பெண்பிள்ளாய்" என்கையாலே ஸ்வாசார்ய னுக்கும் கௌரவ்யனுகையாலே. "அஸ்மத்பரமகுருப்யோ நம:" என்கிறபடியைச்சொல்லுகிறது. "கோதுகலமுடைய பாவாய்" என்று ஸர்வராலும் கொண்டாடும்படி யிருக்கை யாலே "அஸ்மத்ஸர்வகுருப்யோநம:" என்கிற அர்த்தத்தைச்

சொல்லுகிறது. "மாமான்மகளே" என்கையாலே ஒளி புதுவை நகர்வாழும் பேர்கள் தாயான ஆண்டாளுக்கு அண்ணரான "ஸ்ரீமதே ராமாநுஜாயநம:" என்னும் அர்த்தம் சொல்லுகிறது. இதுவும் ஆழ்வான் அளவும் அநுஸந்தேயம். "நோற்றுச் சுவர்க்கம்புகுகின்ற அம்மனாய்" என்கையாலே, ஸித்தோபாயத்தாலே ப்ராப்ய வைலக்ஷண்யஜ்ஞானத்தையுடையராய், அத்தாலே உடையவர்க்கும் கௌரவ்யராயிருக்கும் "ஸ்ரீபராங்குசதாஸாயநம:" என்னுமர்த்தம் சொல்லுகிறது.

"கோவலர்தம்பொற்கொடி" என்கையாலே, க்ருஷ்ண பக்தியுக்தரான நாதவம்சயுக்தராயிருக்கிற "ஸ்ரீமத்யாமுநமுநயேநம:" என்னும் அர்த்தம் சொல்லுகிறது. "நற்செல்வன் தங்காய்" என்கையாலே, திருக்குமரநாத்தியார் பருவம் நிரம்பினபின்பு சேற்றில் படியாய்க்கிடந்து அநுசரணம் பண்ணியும், "மனத்துக்கினியானைப்பாடவும்" என்கையாலும் "ஸ்ரீராமமிச்ராய நம:" என்னும் அர்த்தம் சொல்லுகிறது. "போதரிக் கண்ணினாய்", "பங்கயக்கண்ணானைப்பாட" என்கையாலே, "ஸ்ரீபுண்டரீகாக்ஷாயநம:" என்னும் அர்த்தம் சொல்லுகிறது. "நாவுடையாய்" என்கையாலே தமிழ்மறையை இயலிசையாக்கின நாவீறுடைமையாலே "ஸ்ரீமந்நாதமுநயேநம:" என்னுமர்த்தம்சொல்லுகிறது. "எல்லே இளங்கிளியே" என்கையாலே, "சுகமுகாதம்ருதத்ரவஸம்யுதம்" என்னும்படி திருவருட்கமுகு ஒண் பழத்ததான ஆழ்வார் திருப்பவளத்தில், "தின்கீர்த்திக்கனியென்னும் கவிகள்-மொழிபட்டோடும் கவியமுதமாய்"த் திருவாய்மொழி ப்ரவஹிக்க, அத்தாலே 'அணிமழலைக்கிளி மொழியாளை' அநுகரிக்கையாலே, "ஸ்ரீமதே சடகோபாயநம:" என்னும் அர்த்தம் சொல்லுகிறது.

"நாயகனாய்" என்று தொடங்கி மேலஞ்சுபாட்டாலே, "ஸ்ரீமத்விஷ்வக்ஸேனாயநம:", "ஸ்ரீயைநம:". "ஸ்ரீதராயநம:" என்னும் அர்த்தங்களையும் அச்சேர்த்தியிலே இவரும் புருஷகார பூர்வகமாக ஆச்ரயிக்கச்செய்தேபெருமை எற்றங்களைச் சொல்லுகிறது.

"எட்டெழுத்தின் இணைப்பொருளும் இரண்டுதனில் பொருளும் இயல்வலித்தேர் அருச்சுனர்க்கு இறைவர் தம்மைத் தொட்டுரைத்த முறைபடறுதிப் பொருளையெல்லாம் தோன்றும்வகை" இத்யாதிப்படியே, இப்ரபந்தம் ரஹஸ்யார்த்தத்தை ப்ரதிபாதிக்கக்கடவதாயிருக்கும்; அதில் த்வய யோஜனையும் மேலே யோஜிக்கப்பட்டது.

அநந்தரம் பாட்டுக்கள் எல்லாவற்றாலும் ப்ரதிபாதிக்கிற படியே விசேஷகடாக்ஷலக்ஷ்யமாம்படியை அபேக்ஷிக்கிற படியையும், 'வீற்றிருந்தேழுலகத்திற்படியே திவ்யஸிம்ஹாஸனத்திலே பேரோலக்கமாக இருக்கும்படியையும், "போற்றி" என்று சேர்த்திக்கு மங்களாசாஸனம் பண்ணும் படியையும், தங்களார்த்தித்வத்தையும், கைங்கர்யோபகரணங்களை அர்த்திக்கும்படியையும், எல்லாரும் ஒருவனோடே கூடியிருந்து குளிரும்படியையும், பலத்துக்கநுகுணமாக ஸாதனங்கள் தங்கள் கையதன்றிக்கே அவன் கையதாயிருக்கும் படியையும், கைங்கர்யவேஷத்தையும், மாதர்களை எழுப்பும் படியையும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஸ்ரீய:பதிகடாக்ஷத்தாலே அந்தக் கைங்கர்யத்தைப் பெற்றுவாழும்படியையும, சொல்லித்தலைக்கட்டுகிறது.

ஆகையாலே, குருபரம்பரா விவரணபூர்வகமாக த்வய விவரணமான இப்ரபந்தமே ப்ரபந்நனுக்கு அநுவரதாநுஸந்தேயமென்றதாயிற்று. "ஜ்ஞாதவ்யம் குருபரம்பரையும் த்வயமும்" என்னக்கடவதிறே. இதிகுருபரம்பராவிவரணம்.

த்வயத்துக்குஸங்க்ரஹமான திருமந்த்ரயோஜனை காட்டப்படுகிறது - இப்ரபந்தத்தாலே. "நமோநாராயணாவென்பாரே" என்றிறே இவர்தாம் அருளிச்செய்தது. இப்ரபந்தத்தில் "ஊழிமுதல்வன்" "பற்பநாபன்" என்று சேஷத்வ ப்ரதிஸம்பந்தியான சேஷித்வத்தையும், "உனக்கே" என்கையாலே, உகாரத்தில் அநந்யார்ஹசேஷத்வத்தையும் "நாம்" என்றும் "யாம்" என்றும்-மகாரவாச்யனாய் ப்ரக்ருதே: பரனாய் பகவச்சேஷபூதனாயிருக்கிற ஆத்மாவின் ஸ்வரூபத்தையும் சொல்லுகையாலே, ப்ரணவார்த்தம் ஸங்க்ரஹீதமாயிற்று-"தூயோமாய்வந்துநாம்", "தூயோமாய்வந்தோம்",

"அபிமானபங்கமாய்", "மற்றைநங்காமங்கள் மாற்று",என்கையாலே நமஸ்ஸிலர்த்தமும், "கதிர்மதியம்போல்முகத்தான் நாராயணன்", என்றும், "நாராயணன்மூர்த்தி" என்றும் "ஓங்கியுலகளந்த உத்தன்பேர்" என்றும் சொல்லுகையாலே நாராயண சப்தார்த்தமும், "உலகை ஈரடியால்நடந்த நம்பி நாமம் சொல்லில் நமோநாராயணமே" என்னக்கடவதிறே. "உறவேல் நமக்கிங்கு ஒழிக்கஒழியாது" என்கையாலே அதில் ஸர்வவித பந்துத்வமும், "எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமேயாவோம் உனக்கேநாமாட்செய்வோம்" என்கையாலே சதுர்த்யர்த்தமும் ஸங்க்ரஹீதமாயிற்று. இதி திருமந்த்ரவிவரணம்.

"கறவைகள்பின்சென்று" இத்யாதிகளாலும், "செய்யாதனசெய்யோம்", "உன்னை அருத்தித்துவந்தோம்", "சிற்றம் சிறுகாலேவந்துன்னைச்சேவித்து" என்றும், "நாராயணன்" என்றும், "புண்ணியம் நாமுடையோம்" என்றும், "மாயனை மன்னுவடமதுரைமைந்தனை" என்று தொடங்கி "தீயினில் தூசாகும்" என்றும்,"எங்கள்மேல் சாபமிழிந்து" என்றும், "வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து" என்றும் சொல்லுகையாலே சரமச்லோகார்த்தம்ஸங்க்ரஹீதமாயிற்று. "ஐந்து தீயோடு நின்று தவம்செய்யவேண்டாதிருமார்பனைச்சிந்தையுள்வைத்துமென்றீர்", "ஐந்துநெருப்பிடையேநிற்கவும் நீர் வேண்டா" "நகரமருள்புரிந்தித்யாதி-பெயரினையேபுந்தியால் சிந்தியாது ஓதி உருவெண்ணும் அந்தியால் ஆம்பயன் அங்கு என்" என்றும் சொல்லக்கடவதிறே.

திருப்பாவையால் "நாராயணன்" என்றும், "பாற்கடலுள் பையத்துயின்றபரமன்" என்றும், "ஓங்கியுலகளந்த உத்தமன்" என்றும, "ஏஷநாராயண ஸ்ரீமான் க்ஷீரார்ணவநிகேதந:| நாகபர்யங்கமுத் ஸ்ருஜ்யஹ்யாகதோமதுராம்புரீம்", என்கிறபடியே ஸ்ரீக்ருஷ்ணவதாரத்துக்கு அடியான அடிப்பாட்டை அடைவேசொல்லி, ஏவம்விதனானவன் "மாயனை மன்னு" இத்யாதிப்படியே க்ருஷ்ணனாய்வந்தவதரித்து, ஒருத்திமகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்திமகனாய் ஒளித்து வளருகிறவிடத்தே, "பேய்முலைநஞ்சுண்டு","கள்ளச்சகடம்

சலக்கழியக்காலோச்சி'', என்று பூதனா சகடநிரா கரணம் சொல்லி, அதுக்குமேலே “ தாமோதரன் ” என்று வெண்ணெய் களவு காண்கையாலே கட்டவுமடிக்கவும் எளியனாயிருந்தபடிசொல்லி, மதுரையிலே மல்லரை மாட்டி, வல்லானை கொன்றபடியைச் சொல்லி, அநந்தரம், தானிங்கு நினைந்த கருத்தைப் பிழைப்பித்துக்கஞ்சன் வயிற்றில் நெருப்பாய், அவனைப் போக்கினவளவும் அருளிச்செய்தாரிறே. இதிசா மச்லோக விவரணம்.

(மார்கழித்திங்களித்யாதி) இதில் அத்யந்தபக்தியுக்தரானவர்கள் பகவத்விரகபரிதாபஹரமாக ஸஹகாரிகளுடன் பகவத்விஷய அவகாஹனம்பண்ண ஒருப்பட்டு, ஸ்வாபேக்ஷிதங்களை அத்தலையாலேபெற்று வாழும்படியையும் சொல்லுகிறது. தந்தாம்ப்ரீதிவிஷயங்களைப் பிரிந்தார்களுக்கெல்லாம் இப்படியிறேப்ரேமஸ்வபாவமிருப்பது.

ஸ்ரீய:பதியாய் ஸ்ரீவைகுண்ட நிகேதநனாய், ஸர்வஸ்மாத்பரனாய் இருந்துள்ள ஸர்வேச்வரன், ஆச்ரிதரக்ஷணார்த்தமாக ஸ்வவிபூதியிலே, சக்ரவர்த்தித்திருமகனாய் வந்தவதரித்துப் போந்து, பிராட்டியைப் பிரிந்து, மெல்லியல்தோள்தோய்ந்து அநந்தரம் இப்படி அதிவிலக்ஷணையாய் அத்யந்தாபிமதையான தத்விஷயத்தை லோகரக்ஷணார்த்தமாக விச்லேஷித்து, “உண்ணாது உறங்காது ஒலிகடலை ஊடறுத்து” என்னும்படி பரிதப்தனாய், “ அந்தவிரஹதாபம் மாற்றலாமோ ” என்கிற அலமாப்பாலே அர்ணவத்திலே அவகாஹிக்க நினைப்பதானாப் போலேயும், அவனைப் பின்தொடர்ந்துபோந்த பரிவரான தம்பி பரதனும் தயரதன் பெற்ற மரகதமணித்தடத்தைப் பிரிந்து, “கூடோக் நிரிவபாதபம்” என்னும்படி பரிதபித்து ஸரயு ஆற்றிலே அவகாஹித்து, ஸரஸ்ஸு முதலானவற்றிலே அவகாஹிக்கவும் ஒருப்பட்டிருந்தாப்போலவும், பின்னையும் மாமாயன் மாதவன்வைகுந்தன், வானிளவரசு வைகுந்தக்குட்டன் வாஸுதேவன்,-மதுரைமன்னன், நந்தகோபனிளவரசு, கோவலர்குட்டன், சூட்டுநன்மாலை தொடக்கமான அங்குத்தை போகத்தை அநாதரித்து, அடலாயர்தம் கொம்பினுக்காக இங்கே போந்தாப்போலே.

ஆண்டாளும் அந்த வைகுந்தவான்போகம் தன்னை இகழ்ந்து இங்கேற வேயர் தங்கள்குலத்திலே விஷ்ணுசித்தன் வியன்கோதையாய் வந்தவதரித்து, ஆயர்சிறுமியர் படியை அடைந்து, ஆயர்குலத்தினில் தோற்றினவனை மனதுக்கு இனியதாகப்பாடிக் கூடியிருந்தபடியைச் செய்யவெண்ணப் போந்தவளாய், அப்பால் முதலாய் நின்ற அளப்பரிய ஆரமுது தொடக்கமான விஷயங்களைப் பிரிந்த தளர்த்தியாலே இனவேல் நெடுங்கண்கள் இமைபொருந்தாதே, அவனில் எண்மடங்கான காமத்தீயுள் புகுந்து கதுவ, அந்தவிரஹதாபமாகிற பெரு நெருப்பை ஆற்றுகைக்கு ஆசரம் பெருத்து, பெரும்புறக்கடல் இப்புறத்திலே திருப்பாற்கடலாய்ப் பொங்கி எங்கும் பரந்து, வெள்ளக்கால்களாய் பரந்து சுழித்துப் பெருநீராக மதுர ஆறாய்ப்பெருகுகிற அம்ருதத்திலே குள்ளக்குளிரக்குடைந்து நீராட ஒருப்பட்டு பெருக்காற்றிலே இழிவார்துறை தப்பாமே துறைஅறிந்தவரோடேகூட இறங்க நினைக்குமாபோலே, இறங்க நினைக்கிறதாயிருக்கிறது இங்கும்.

அது எங்ஙனே என்னில்?-ஸ்ரீய:பதியாய்,ஸ்ரீவைகுண்டநிகேதநனுய், நித்யமுக்தாநுபாவ்யனுய், ஸர்வஸ்மாத்பரனுயிருந்துள்ள ஸர்வேச்வரன், "நாராயணனே" என்று அவன் பெரும்புறக்கடலா யிருக்கிறபடியும், அநந்தரம் "பாற்கடலுள் பையத்துயின்றபரமன்" என்று பாற்கடல்போலேயான வ்யூஹத்தையும், "ஓங்கி உலகு அளந்த உத்தமன்" என்று அதுகால்களாய்ப் புறப்பட்டுப்பரந்து "பற்பநாபன்" என்று சுழித்து, "தூயபெருநீர்யமுனைத்துறைவன்" என்று பெருக்காறுபோலேயான விபவத்தையும், "நாற்றத்துழாய் முடிநாராயணன்" என்று உள்ளே ஊற்றுஜலம்போலே அந்தர்யாமியா யிருக்கும்படியையும், "புள்ளரையன் கோயில்" என்று நித்யமானநீர்மையாலே "அதிலேதேங்கிய மடுக்கள்" என்னலாம்படி ருசிஜநகவிபவலாவண்யத்தோடே எப்போதும் ஆச்ரயிக்கலாம்படி யிருக்கிற அர்ச்சாவதாரத்தையும், அத்யபிநிவேசத்துடன் இங்கே காண இப்பிறப்பே அநுபவிக்கக்கோலி.

அவை அப்போதே அநுபவிக்கப் பெறுமையாலே, "வைகுந்தனென்பதோர் தோணிபெறுது உழல்கின்றே னெ"ன்றும், "பொங்கியபாற்கடல் பள்ளிகொள்வானைப் புணர்வதோராசையினுல் என் கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து ஆவியை ஆகுலம்செய்யும்" என்றும், "விண்ணுறநீண்டு அடிதாவியமைந்தனை வேற்கண்மடந்தை விரும்பி" என்றும், "பாஞ்சசன்னியத்தைப் பற்பநாபனேடு வாய்ந்த பெருஞ்சுற்றமாக்கிய" என்றும், "கொம்மைமுலைகள் இடர்தீரக்கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப்பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யும் தவந்தானென்?" என்றும், "ஆவலன்புடையார் தம்மனத்தன்றிமேவலன்" என்றும், "உலங்குண்ட விளங்கனிபோல் உள்மெலியப்புகுந்து என்னைநலங்கொண்டநாரணன்" என்றும், "பெண்கொடியை வதைசெய்தான்" என்றும், "காமத்தீயுள்புகுந்துகதுவ" என்றும், "தீமுகத்து நாகணைமேல் சேருந திருவரங்கர் ஆமுகத்தை நோக்காரால்" என்றும் சொல்லுகிறபடியே, பரத்வாதிபஞ்சாவஸ்தாவஸ்திதனுய் பஹுகுணனுய் தேசகால விப்ரகர்ஷாத்யுபாதியாலே ஆச்ரயிப்பார்க்கு அஸந்நிஹிதத்வாதிகளாலும் ஆலோகாலாபாத்யநாநுபாவிகத்வத்தாலும் எம்பெருமான் அரியனுகிறபடியை தர்சித்து.

முற்காலத்திலே ஸ்ரீகோபிமார் "கோபீபரிவ்ருதோராத்ரிம்" என்று பூர்வபக்ஷத்தில் பூர்வராத்ரியிலே, அவ்வாய்ச்சியர் சிந்தையுள் குழகனை க்ருஷ்ணனேடே கழகமாகக்கூடியிருந்து, ஒருகார்யப்பாட்டிலே, பிரிந்துபோந்து அவனை விட்டு அகன்று உயிராற்றகில்லாதாப்போலே, பழனையாற்றிலே "மார்கழிநீராட" என்று ஒரு வ்யாஜத்தாலே க்ருஷ்ணனுபவ குதூஹலத்தையுடையராய், அபரராத்திரியிலே உணர்ந்து, முற்பட்டார் பிற்பட்டாரை எழுப்பி, எல்லாரும் திரண்டு நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாகக் க்ருஷ்ணனை எழுப்பி, ஸ்வலாபங்களை அர்த்தித்துப்பெற்று அநுபவித்தாப்போலவும்.

சீர்மல்குமாய்ப்பாடிக்கு ஸத்ருசமான ஸ்ரீவில்லிபுத்தூரிலும், ஸ்ரீவைஷ்ணவஸந்தான ப்ரஸூதையான ஆழ்வார் திரு

மகளாரான ஆண்டாள் க்ருஷ்ணாநுகாரிகளான அவர்களை அநுகரித்து, "வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்கிறபடியே, "வேதப் பயன்கொள்ளவல்ல விஷ்ணுசித்தன் ஸம்பந்தத்தாலே வேத மனைத்துக்கும் வித்தான அர்த்தத்தைக்கொண்டு, பகவத் ருசி யுடையாரைக்கொண்டு, பத்துப் பெண்களைப் எழுப்புகிற முகேந, ப்ரபந்நஜனகூடஸ்தரான பதின்மரை முன்னிட்டு, வேதப்பொருளாய் "யமுனைத்துறைவன்" என்று பேர் பெற்ற எம்பெருமான் திருவடிகளைப்பற்றுமளவும் சொல்லு கிறார்கள். "'புள்ளும்' தொடங்கி 'எல்லே' அளவும் தச மாந்தமாயே" என்றாரிறே தேசிகரும். இவர்கள் க்ருஷ்ணாநு பவத்துக்கு தேசிகராகையாலும், பத்துப் பெண்களை எழுப்பு கிறது, நாய்ச்சியாருக்குத் தேசிகராகையாலும், பிராட்டிமா ரோடே ஸாம்யகுணஷட்கத்தை யுடையராகையாலும், இவ் வநுபவத்துக்கு இவர்களைக் கூட்டிக்கொள்ளுகிறது.

இன்னமும், பகவத்விஷயத்தில் முற்பட்டார் பிற்பட் டாரையும் கூட்டிக்கொண்டு போகவேண்டும் பரஸம் ருத்தியாலும் இவர்களை எழுப்புகிறார்கள். "புஷ்பராத்ரிஸ்து தத்ரைவகங்காகூலேஸராகவ: பரத:கால்யமுத்தாய சத்ருக்ந மிதமப்ரவீத்|சத்ருக்நோத்திஷ்டகிம்சேஷே நிஷாதாதிபதிமகு ஹம்சீக்ரமாநயபத்ரந்தேதாரயிஷ்யதிவாஹிநீம்|ஜாகர்மிநாஹம் ஸ்வபிமிதமேவார்யம்விசிந்தயந்" என்னக்கடவதிறே. இங் கும் அப்படியேயாயிற்று ப்ரத்யக்ஷாநுபவத்தாலல்லது தரி யாதார், குணாநுபவத்தாலே தரித்திருப்பாரைத்வரித்தெழுப்பு கிறபடி.

இதில் முதற்பாட்டில் "பிள்ளாய் எழுந்திராய்" என்று "பிள்ளைப்பெண்" என்கிறது-பொய்கையாழ்வாரை. அதெங் ஙனே என்னில்; - "அரவம் அடல்வேழம்" இத்யாதியாலே க்ருஷ்ணாநுபவத்துக்குத் தேசிகராகையாலும், இவள் சூடிக் கொடுத்தவடிவுக்கு, "வையந்தகளி" இத்யாதி - "சூடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை" என்றும், "மாலுங்கருங்கடலே என்நோற்றாய்" இத்யாதியாலே அவனுடைய அங்கஸங்கத்தை ஆதரித்துப் பேசியும்,

"மணமருவமால் விடையேழ்செற்று" என்று, நப்பின்னைப் பிராட்டியைப் பெறுகைக்கு எருதுகளின் மேலே வ்யாபரித்த படியைப் பேசுகையாலும், இதிலே "பேய் முலை நஞ்சுண்டு" என்றதை - "பேய்முலை நஞ்சூணாக உண்டான்" என்றும், "கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி" என்று கன்னிப்போரான சிறுச் சேவகத்தை "ஓரடியும் சாடுதைத்த" என்றும், "வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்தினை" என்றத்தை - "வெள்ளத்தினுள்ளானும்" இத்யாதியாலே பேசியும், "ஒன்றுமதனை யுணரேன் நான்" என்றும், முந்துறமுன்னம் பகவத் விஷயத்திலே இழிந்தவராகையாலும், "பிள்ளைப்பெண்" என்கிறது-பொய்கையாழ் வாரை என்கை. பிள்ளை-மௌக்த்யம்.

இரண்டாம்பாட்டில் "பேய்ப்பெண்" என்கிறது - பேயாழ்வாரை. அதெங்ஙனே யென்னில்; "திருக்கண்டேன்" இத்யாதியாலே நாயகனுடைய வைபவத்தை தர்சிப்பிக்கையாலும், மற்றும் ஸ்த்ரீத்வாபத்தியாலே "வெற்பென்று வேங்கடம்" என்று தொடங்கி - "நீண்டதோள் மால் கடந்த நீள்கடல் நீராடுவான் பூண்டநாள் எல்லாம் புகும்" என்கையாலும், "கோவலனாய் ஆநிரைகள் மேய்த்துக்குழலூதி" என்று க்ருஷ்ண சேஷ்டிதங்களைப் பேசுகையாலும், "பின்னைக்காய் ஏற்றுயிரை அட்டான்" என்று நப்பின்னைப் பிராட்டிக்காக அவன் எருதுகளின்மேலே வ்யாபரித்தபடியைப் பேசுகையாலும், "பேய்ப்பெண்ணே" என்கிறது - பேயாழ்வாரை என்றபடி.

மூன்றும்பாட்டில், "கோதுகலமுடையபாவாய்" என்கிறது - பூதத்தாழ்வாரை. அதெங்ஙனே என்னில் ; - ஸ்த்ரீத்வாபத்திக்கு உடலாக அன்பேதகளி இத்யாதியாலே பக்தியைப் பேசி, "பெருந்தமிழனல்லேன் பெரிது" என்ற அநந்தரம், "பெருகுமதவேழம்" என்று அவனுடைய அதிமாநுஷ சேஷ்டிதத்தையும், ஜாத்யுசிததர்மத்தையும் பேசியும் "ஏறின்பெருத்தெருத்தம் கோடொசியப் பெண்ணசையின் பின்போய் எருத்திறுத்த நல்லாயர் ஏறு" என்று நப்பின்னைப் பிராட்டியைப் பெறுகைக்கு எருதுகளின் மேலே

அவன் வ்யாபரித்த வ்யாபாரத்தைப் பேசியும், இதில் "தேவாதி தேவனெனப் படுவான் முன்னொருநாள் மாவாய் பிளந்தமகன்" என்றும், "மாலேநெடியோனே கண்ணனே விண்ணவர்க்கு மேலாவியன்துழாய்க் கண்ணியனே மேலா விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே என்தன் அளவன்றால் யானுடைய அன்பு," என்று அருளிச் செய்கையாலும், "கோதுகலமுடையபாவாய்" என்றது பூதத்தாழ்வாரை என்றபடி. "மாதவன் பூதம்" என்கிறது, கோதுகலமிறே; ஆகையாலும், "மாதவன்பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு" என்றவரிறே. ஆக மூவரும் ஜ்ஞாநதர்சநப்ராப்த்ய வஸ்த்தைகளோடேகூடி யாயிற்றிருப்பது.

நாலாம்பாட்டில், இவர்களுக்கு அநந்தரத்திலவரான திருமழிசை யாழ்வாரை - "மாமான் மகள்" என்கிறது. அதெங்ஙனே என்னில்; - "தாத்ராதுலிதாலகுர்மஹீ" என்றும், "உலகுதன்னை வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே வைத்தெடுத்த பக்கம்வலிது." என்னும்படி மஹீஸாரக்ஷேத்ரமான திருமழிசையிலே, "பார்க்கவோதீர்க்க ஸத்ரேண வாஸுதேவம் ஸநாதநம் அபிபூஜ்ய யதாந்யாயம்" என்கிறபடியே ஸ்ரீஜகந்நாதனை உத்தேசித்துயஜித்துக்கொண் டிருக்கிற காலத்திலே, பார்க்கவனுடைய பத்நி கர்ப்பிணீயாய்த், திருமழிசைப்பிரானைத் திருவயிறு வாய்த்ததாலே, "பார்க்கவீலோகஜநநீ" என்னும்படியான பிராட்டியோடே உடன்பிறந்த பார்க்கவபுத்ரர் ஆகையாலும், "காட்டில் வேங்கடம்" இத்யாதி "கூடுமாகில் நீ கூடிடுகூடல்" என்கிறபடியே, "அழைப்பன் திருவேங்கடத்தானைக்காண இழைப்பன் திருக்கூடல்கூட" என்று ஸ்த்ரீத்வபாவனையாய்ப் பேசுகையாலும், "தூமணிமாடத்துச் சுற்றும் விளக்கெரிய" என்கிற ஜ்ஞாநதீபப்ரகாசத்தை - "என் மதிக்கு விண்ணெல்லாம் உண்டோவிலை," "ஜ்ஞாநமாகி நாயிருகி" என்று பேசுகையாலும், "ஆயன்துவரைக் கோனாய் நின்றமாயன்" என்றும், "அடிச்சகடம்சாடி யித்யாதி - வடிப்ப வளவாய்ப் பின்னை தோளிக்காய் வல்லேற்றெருத்திறுத்து" என்றும், "ஆயனுகியாயர் மங்கைவேயர்

தோள்விரும்பினாய் " என்றும், " பின்னைகேள்வ ! நின் னுெடும் பூட்டிவைத்த வென்னை நின்னுள் நீக்கல் " என்றும், க்ருஷ்ணசேஷ்டிதங்களையும் நப்பின்னைப்பிராட்டி புருஷகார வைபவத்தையும் சொல்லி, இதிலே " மாமாயன் மாதவன் வைகுந்தன் " என்றதை " மாதவனை " என்றும், " வைகுந் தச் செல்வனார்" என்றும் பேசுகையாலும், "மாமான்மகள" என்கிறது - திருமழிசைப்பிரானை என்றபடி.

பார்க்கவனும் பார்க்கவியும், ப்ருகுவுக்குக் க்யாதியி னிடத்திலே ஸஹோதரராக ஸம்பவிக்கையாலும், லோகமாதா வுடன் பிறந்தவன் லோகத்துக்கெல்லாம் மாமனாகத்தட்டில்லை யிறே. அந்த பார்க்கவ புத்ரனாகையாலே இவரை " மாமான் மகள் " என்னக்குறையில்லை. அன்றிக்கே, யசோதைப் பிராட்டிக்குப் பின்பிறந்த ஸ்ரீகும்பர் குமாரத்தியான நப் பின்னைப் பிராட்டிகரத்தையுடையார் ஒருவராகையாலே " மாமான் மகள் " என்று சொல்லுகிறதாகவுமாம்.

அஞ்சாம்பாட்டில், " அம்மனாய் " என்கிறது - குல சேகரப்பெருமாளை. அது எங்ஙனே என்னில் ? - குலசேகர னாகையாலும், எல்லையிலடிமைத் திறத்தினில் என்று மேவு மனத்தனாகையாலும், அல்லிமலர் திருமங்கை கேள்வன் தன்னை நயந்து இளஆய்ச்சிமார்கள் எல்லிப்பொழுதினில் ஏமத்தூடி எள்கியுரைத்த வுரையதனை ஸ்த்ரீத்வபாவநயா பேசுகையாலும், "ஏறு அடர்த்ததும," " ஆனேறேழ்வென் றான் அடிமைத் திறமல்லால் " என்று நப்பின்னைப் பிராட்டி விஷயமாக வ்யாபரித்த வ்யாபாரத்தில் தோற்று " அடிமை யல்லது " என்கையாலும், " ஆலைநீள் கருமபன்னவன் " என்று தொடங்கி, " மல்லைமாநகர்க்கிறையவன் தன்னை வான் செலுத்தி " என்னுமளவும் க்ருஷ்ண சேஷ்டிதங்களைப் பேசி அநுபவிக்கையாலும், இதிலே " நாற்றத்துழாய்முடி நாராயணன் " என்றதை - " வண்டுகிண்டு நறுந்துழாய் மாலையுற்றவரைப் பெருந்திருமார்வனை " என்றும், அந் நாரணனை - " நலந்திகழ் நாரணன் " என்றும் பேசுகையா லும், இவர்க்கு அசலுணர்த்தி அநுபவம்போலே ரங்க யாத்ரையில் அநுபவம் நடந்து செல்லுகையாலே ப்ரபந்த

குலசேகரரான குலசேகரப்பெருமாளை "நோற்றுச்சுவர்க்கம் புகுகின்றவம்மனாய்" என்கிறதென்கை.

ஆறாம்பாட்டில், "கோவலர்தம் பொற்கொடியே" என்கிறது - பெரியாழ்வாரை. எங்ஙனேயென்னில்? - சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான இவளைப்போலே கோவலப்பட்டம் கவிக்கும்படி கோப ஜந்மத்தை ஆஸ்தானம் பண்ணினவராகையாலும், "கன்னியரோடெங்கள் நம்பிக்கரிய பிரான்விளையாட்டை" என்னும்படி "கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்" என்று தொடங்கி, "பண்டு அவன்செய்த கிரீடையெல்லாம்" என்னும்படி க்ருஷ்ணகுண சேஷ்டிதங்களைப் பேசியநுபவிக்கையாலும், "நப்பின்னை தன்திறமா நல்விடையேழவியநல்லதிறலுடைய நாதனுமானவனே" என்றும், "ஐயபுழுதி," "நல்லதோர் தாமரை" இவைகளில் திருத்தாயார் பேச்சாகப் பேசுகையாலும், "தழைகளும்" இத்யாதியளவாய் கன்னிமார்கள் காமுற்றமாற்றத்தைப் பேசுகையாலும், இதிலே "முகில்வண்ணன்" என்றத்தை - "விட்டுசித்தன்மனத்தே கோயில் கொண்ட கோவலனைக் கொழுங்குளிர்முகில் வண்ணனை" என்கையாலும், "கோவலர்தம் பொற்கொடியே" என்கிறது பெரியாழ்வாரை என்கை.

ஏழாம்பாட்டில், "நற்செல்வன் தங்காய்" என்கிறது தொண்டரடிப் பொடியாழ்வாரை. அது எங்ஙனே என்னில்? - ஸ்த்ரீத்வத்துக்கநுகுணமாக, "தம்பால் ஆதரம் பெருகவைத்த அழகன்" என்றும், "உடலெனக்கு உருகுமாலோ" என்றும், "கண்ணனைக் கண்ட கண்கள் பனியரும்புதிருமாலோ" என்றும் தம்முடைய பக்தியைப் பேசுகையாலும், கற்றினம்மேய்த்தகழலிணைக்கீழ் உற்றதிருமாலை பாடுகையாலும் "மழைக்கன்றுவரை முன்னேந்தும் மைந்தனே" என்று குன்றுகுடையாக எடுத்தபடியைப் பேசுகையாலும், "கவளமால்யானைகொன்றகண்ணனை" என்கையாலும், ஸ்ரீமாலாகாரரைப்போலே செண்பகமல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி எண்பகர் பூவுங்கொணர்ந்துசாற்ற, அத்தால் வந்த கைங்கர்ய ஸ்ரீயையுடைய பெரியாழ்வார்க்குப் பிற்பாடராய், அவர் கைங்கர்ய ஸ்ரீயை அநுவிதாநம் பண்ணுகை

யாலே, "அவர்க்கு அநுஜர்" என்னும்படியாய், திருப்பள்ளி யுணர்த்துகிறவதிலும் வந்தால் "விஷ்ணுசித்ததுளஸீப்ருத்யர்" என்று ஸஹபடிதராகையாலும்,"நற்செல்வன் தங்காய்" என்கிறது ஸ்ரீதொண்டரடிப் பொடியாழ்வாரை என்கை. இவரும், இதிலே "சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச்செற்ற மனத்துக்கினியானை" என்றத்தை - "இலங்கையர்குலத்தை வாட்டிய வரிசிலைவானவர் ஏறே" என்றும், "செருவிலே அரக்கர்கோனைச்செற்ற நம்சேவகனார்" என்று மருளிச் செய்தாரிறே.

எட்டாம்பாட்டிலே, "போதரிக்கண்ணினாய்" என்கிறது - திருப்பாணாழ்வாரை. அது எங்ஙனே என்னில் ? - தொண்டரடிப்பொடியாரோபாதி, "அடியார்க்கு என்னை ஆட்படுத்தவிமலன்" என்றும், "என் கண்ணினுள்ளன" என்றும், "கொண்டல் வண்ணனைக்கோவலனாய்" என்று தொடங்கி, "என் அமுதனைக்கண்ட கண்கள்" என்கையாலே - "போதரிக்கண்ணினாய்" என்கிறது - திருப்பாணாழ்வாரை. "மெய்ம்மையை மிகவுணர்ந்து" என்றுததீய சேஷத்வபர்யந்தமான ஜ்ஞாநமிறேஜ்ஞாநமாவது. ததீயர்க்கு உகப்பாகப்பண்ணும் பகவதநுபவமிறே இவரது. ஸ்த்ரீத்வ பாவனையாலுண்டானபக்தி, பத்தும் பத்தாக அடிதொடங்கி முடியளவுமாய் மேலாயிருக்கும். இப்பாட்டிலே "பொல்லா அரக்கனைக்கிள்ளிக் களைந்தானை" என்றத்தை, இவரும், "சதிரமாமதிள்சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்து உதிர ஓட்டியோர் வெங்கணையுய்த்தவன்" என்றாரிறே.

ஒன்பதாம்பாட்டில் ; "எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும் நங்காய்" என்கிறது - நம்மாழ்வாரை. அது எங்ஙனே என்னில் ; - "திருமாலுக்குரிய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்" என்னும்படியான சேஷத்வ பூர்த்தியையுடையராய், "அவனடியார் நணிமாக்கலவி இன்பமே நாளும் வாய்க்க நங்கட்கே" என்னும்படி பாகவத ஸம்ருத்தியைக் காண்கையிலே அபிவ்ருத்த மனோரதத்தை யுடையராய், அந்யாபதேசத்திலும், "அடிச்சியோம்" என்கையாலும், "பின்னைகொல்" என்கிற ஒப்பனையாலும்,

" சூட்டுநன்மாலைகள் " என்று தொடங்கி, " அடலாயர்தம் கொம்பினுக்கே " என்று நப்பின்னைப்பிராட்டிக்காக அவன் விடையடர்த்த வ்யாபாரத்தைப் பேசியும், " பின்னைநெடும் பணைத்தோள் மகிழ்பீடுடைமுன்னையமரர் முழுமுதலானே"- " என்னைநெகிழ்க்கிலும் என்னுடை நன்னெஞ்சந்தன்னை அகல்விக்கத்தானும் கில்லான் " என்றும், " வேயின்மலி புரைதோளிபின்னைக்குமணாளனை" இத்யாதியாலும், "வாள் கெண்டைஒண்கண் மடப்பின்னைதன் கேள்வன் தாள்கண்டு கொண்டென் தலைமேல் புனைந்தேன் ஆள்கின்றான் ஆழி யான் ஆரால் குறைவுடையம் " என்றும், "ஏருது ஏழ்தழீ" " சடையினார் " இத்யாதியாலும் பலபடியாக அவள் புருஷ காரவைபவத்தை ஆதரித்து, மற்றும் " எத்திறம் " என்று பிறந்தவாற்றிலே க்ருஷ்ணசேஷ்டிதங்களிலே ஈடுபட்டு, குரவை ஆய்ச்சியரிலே நண்ணிவணங்கி அநுபவித்தும், "எல் லாம் கண்ணன் " என்றும், " நீராடப்போதுவீர் " என் றத்தை " கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர் " என்கையாலும், மந்தாதிகாரிகளை, " என் நெஞ்சால் நோக் கிக்காணீர் " என்று உணர்த்தியும், ஸ்தோத்ரிகளை உயிராகத் தேடி " இசைமின் " என்று போதிக்கையாலும், " நீராட " என்றத்தை " காலைநன்ஞானத்துறைபடிந்தாடி " "அப்பன் திருவருள் மூழ்கினள் " என்கையாலும், இதில் " நாணா தாய் " என்றத்தை " நாணும் நிறைவும் எனக்கிங்கில்லை " என்றும், " நாவுடையாய் " என்றத்தை "என்நா" என்றும், " வலக்கையாழி இடக்கைச் சங்கம் இவையுடைமால் வண் ணனை மலக்குநாவுடையேன் " என்றும், " நாவியலால் இசைமாலைகள் " என்றும் செயல்லுகையாலே, " எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும் நங்காய் " என்கிறது - நம்மாழ்வாரை. இப்பாட்டில் " சங்கொடுசக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக்கண்ணனைப்பாட " என்றதை, " பங் கயக்கண்ணனையே " " பங்கயக் கண்ணனென்கோ " என் றும் " வீவில்சீரன் மலர்க்கண்ணன் விண்ணோர் பெருமான் தன்னை வீவில்காலம் இசைமாலைகளேத்தி " என்றும்பேசி னரிறே

பத்தாம்பாட்டில் "எல்லே இளங்கிளியே" என்கிறது - திருமங்கையாழ்வாரை. அது எங்ஙனே என்னில்? "அடிக ளடியே நினையும் அடியவர்கள் தம்மடியான்" என்று சேஷத்வத்தின் எல்லைநிலத்திலே நிற்கையாலும், ஸ்த்ரீத்வத் துக்கநுகுணமாக "பேராளன் பேரோதும்பெண்ணை" என் றும், "கடிமாமலர்ப்பாவையொப்பாள்" என்றும் லக்ஷ்மீ ஸாம்யத்தையுடையராயிருக்கும் இருப்பைப் பேசுகையாலும், "பேராளன் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரிகி லேனே" என்றும், "வண்சேறை யெம்பெருமான் அடி யார்தம்மைக் கண்டேனுக்கு இதுகாணீர் என்னெஞ்சும் கண் ணிணையும் களிக்குமாறே" என்றும் ததீயாநுபவதத்பரராய் தத்ப்ரீதிஹேதுவாக "ஆயர்பூங்கொடிக்கு இனவிடை பொருதவன்" என்றும், "பின்னைபெறும் தன்கோலம் பெற் றார்" என்றும், "பின்னை மணாளர்தம்திறத்தும்" என்றும், "அன்றாயர்குலமகளுக்கரையன்தன்னை" என்றும், நப்பின் னைப் பிராட்டிபுருஷகாரத்தை அடியே தொடங்கி முடிய நடத்தியும், "நீராடப்போதுவீர்" என்றத்தை "பொற்று மரைக்கயம் நீராடப்போனாள்" என்றும், "சந்தமலர்க் குழல்," "பூங்கோதை," "எங்கானும்," "மானமுடைத்து" இத்யாதிகளிலே க்ருஷ்ணகுணசேஷ்டிதங்களை மண்டியநு பவித்து, "பண்டிவன் ஆயன்நங்காய்" என்று தொடங்கி "அவன்பின்கெண்டை ஒண்கண் மிளிரக்கிளிபோல் மிழற்றி நடந்து" என்றும், "மென்கிளிபோல் மிகமிழற்றும்" என் கையாலும், "இளங்கிளியே" என்கிறது - திருமங்கையாழ் வாரை. "வல்லையுன் கட்டுரைகள் பண்டே உன்வாய் அறி தும்" என்னுமதுண்டு இவருக்கும். இப்பாட்டிலே "வல் லானை கொன்றானை" என்கிறவித்தை "ஆவரிவை செய்தறி வார்" இத்யாதியாலும், "கரிமுனிந்தகைத்தலமும்" என் றும் அருளிச்செய்தார்.

இப்படியாயிற்று இப்பத்துப்பாட்டுக்கும் குணஸாம்யத் தாலும், கௌரவ்யதையாலும் பத்துப்பெண்களை எழுப்புகிற முகத்தாலே, ஆழ்வார்கள் பதின்மரையும் கூட்டிக்கொண்டு

ஆழ்வார் திருமகளார் அநுஸந்திக்கிறதாக அறுதியிட்டார்கள். இப்படி பக்தராய் முக்தராயிருப்பார் ஆழ்வார்கள்.

அநந்தரம் நித்யகைங்கர்ய நிரதரான நித்யரையும், நித்யாநபாயிநியான பிராட்டியையும் உணர்த்தி இவர்களை முன்னிட்டு நித்யமுக்தாநுபாவ்யனான எம்பெருமானைப் பற்றும்படி சொல்கிறது - 'நாயகன்' தொடங்கி அஞ்சுபாட்டாலே. "ஜநபதஸரிதந்தரீப புஷ்யத்புரபரிபாலந நித்யஜாகரூகாந் ப்ரஹரண பரவார வாஹநாட்யாந் குமுதமுகாந் கணநாயகாந்நமாமி." "ஸ்மேராநநாக்ஷீகமலைர்நமத: புநாநாந்தம்ஷ்ட்ராகதா ப்ருகுடிபிர்த்விஷதோ துநாநாந் சண்ட ப்ரசண்ட முகத: ப்ரணமாமி ரங்கத்வாரரவளீஷு சதந்ருஷ்வதிகாரபாஜ:," "ஸோநாங்யமங்யவிமுகாஸ்தமசிச்ரயாம," "சைங்யதுரீணப்ராண ஸஹாயாம் ஸூத்ரவதீ மாசிச்ரயமம்பாம்," "நம: ஸ்ரீரங்கநாயக்யையத் ப்ருவிப்ரமபேதத: ஈசேசிதவ்யவைஷம்ய நிம்நோந்நதமிதம்ஜகத்," "ஸ்ரீஸ்தநாபரணம் தேஜச் ஸ்ரீரங்கேசயமாச்ரயே சிந்தாமணிமிவோத்பாந்தமுத்ஸங்கேநந்த போகிந:" என்னும்படி வைகுந்தத்தமரரான கோயில்கொள் தெய்வங்களையும், வானவர்களையும் தேவியர்களையும் அயர்வறு மமரர்களதிபதியை ஆயிரமுகத்தினாலே காப்பாருடைதயாவதாரமானவரையும் அவர்களை அதிசங்கைபண்ணி நெருங்க அணைத்துக்கொண்டு கிடக்குமவர்களையுமெழுப்பி, அவர்களுடனே எம்பெருமான் திருவடிகளிலே சென்றுகிட்டி அபேக்ஷிதங்களை அர்த்திக்கும்படி சொல்கிறது. "ஸ்ரீயைநம:," "ஸ்ரீதராயநம:" என்றிறே க்ரமமிருப்பது.

"உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும்" என்றதிலே முமுக்ஷுக்களாய் முக்தரோடு ஸாம்யம்பெற்ற நாதமுநிகள் யாமுநயோகி யதிவராதிகளும் ஸூசிதர், இது குருபரம்பரையினடைவு.

இவ்விடத்துத் திருப்பாவை ஆறுயிரப்படியிலே, அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் நிர்வஹித்தபடி; "பெறுகைக்குப்புறப்படுகிறதிரளைப் பெற்றநுபவிக்கிற ஸ்ரீநந்தகோபர் தொடக்கமானாரை எழுப்புகிறார்கள்; அவர்கள் முன்

னுகக் க்ருஷ்ணனைப் பெறவேண்டுகையாலே; அதாவது, வேதம்வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப் பாதம் பணிகையிறே. 'நன்ஞானத்துறைபடிந்தாடி' என்னுமாபோலே; நன்ஞானமாகிறது, ப்ராப்யப்ராபகங்களிரண்டும் அவனே என்றிருக்கை. 'விஜ்ஞானம் யதிதம்ப்ராப்தம்' என்னுமாபோலே; துறையாவது, முறை தப்பாதே குருபரம்பரைவழியே பற்றுகை; த்வயநிஷ்டர்க்கு குருபரம்பரையே ப்ரதானமாகக் கடவது. துறைதப்பாதார் ஸ்ரீவிஷ்ணுசித்தரைப்போலே. 'வேதம் வல்லார்கள்' என்றவிடத்து, குருபரம்பரையை நினைத்துக் கீழ்ப்பத்துப் பாட்டாலும் அநுஷ்டித்தார்கள். விண்ணோர் பெருமானில், 'விண்ணோர்' என்கிறது, த்வாரபாலர்கள் தொடக்கமான திவ்யமஹிஷிகளாயுள்ளவர்கள் என்றபடி."

இந்த யோஜனைகளெல்லாம், "விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்லபரிசுவருவிப்பரேல் அது காண்டுமே" என்று சொல்லுகிற ஆசார்யாபிமாநநிஷ்டையான ஆழ்வார் திருமகளார் படிக்குச் சேருமிறே. "பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர்" என்கிறவிடத்து குணஸாம்யத்தாலே யோஜித்தபடியாகக்கடவது இங்கு.

இனி, த்வய யோஜனையில் அர்த்த விஷயமாக மெய்ப்பொருளையிறே விசதமாக்கிற்று. (இரண்டு அர்த்தத்தையும் "புலன் ஐந்துமேயும்" என்று உபதேசிக்கக்கேட்டவர்கள் அநுஷ்டானமாக, திருப்பாவையிலும், 'தாயே தந்தை'யிலும், ஸ்தோத்ரகத்யங்களிலும்) த்வயத்தின் அடைவுகாணும்படி எங்ஙனே என்னில்? முதல்பாட்டில் "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்ற ப்ராப்யப்ராபகங்களிரண்டையும், கறவைகள் பின்சென்றிலும், சிற்றஞ்சிறு காலையிலும் க்ரமத்திலே வெளியிடுகிறது. நடுவடையவுண்டானவை இரண்டர்த்தத்துக்கும் உபபாதகங்களாயிருக்குமாகையாலே த்வயத்தின் அடைவுக்ரமமாகக் காணலாமென்றபடி.

"நாராயணனே நமக்கே பறைதருவான்" என்று திருமந்த்ரத்தில் பதத்ரயத்திலும் ப்ரதிபாதிக்கிற ஸ்வரூப,

உபாய, புருஷார்த்தங்கள் மூன்றும், ஒவ்வொன்றே பத்துப் பாட்டாய்ப் பரவும்படியே, திருப்பாவை முப்பது பாட்டாகப் பாடியருளிற்று. திருமந்த்ரத்தில் ஸ்வரூபாநுரூபமாக நிஷ்கர்ஷித்த ப்ராப்யப்ராபகங்களையிறே த்வயத்திலே விசதமாக அநுஸந்திக்கிறது. அந்தக்ரமத்திலேயாயிற்று இங்கும் அநுஸந்திக்கிறது.

இனிமேல் குருபரம்பராபூர்வகமாக த்வயத்தின் அடைவு சொல்லுகிறது. "நப்பின்னை நங்காய், திருவே" என்கையாலே, ஸ்ரீ சப்தார்த்தமும், "உன்மணாளனை" என்கையாலே; "ச்ரிங் - ஸேவாயாம்" என்கிறதாத்வர்த்தமும், "நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்தமலர்மார்பா" என்றும், "நீ உன்மணாளனை எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண், எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்" என்கையாலே வாத்ஸல்யாதி குணப்ரகாசகமான நாராயணபதத்தில் அர்த்தமும், "பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடி" என்றும், "ஓங்கி உலகளந்த," "அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த," "அன்றிவ்வுலகம் அளந்தாய்" என்றும், லோகவிக்ராந்தசரணங்களாய், நாராயணன் த்ரிவிக்கிரமன் அடியான உலகளந்த மெல்லடியை "உன்பொற்றாமரையடி" என்று, சரணசப்தார்த்தத்தையும், "கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்," "ஊழிமுதல்வன் உருவம்போல்," "முகில்வண்ணன்," "சங்கொடுசக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக்கண்ணன்" என்று, அதில் விக்ரஹயோகத்தையும், "முத்துததிரைக்கடல்சேர்ப்பன்" என்னும்படி ஸம்ஸாரிதிரிந்தவிடத்திலே வந்துகிடக்கிற "பாற்கடலுள்பையத்துயின்றபரமன்" என்கையாலே ஸ்வாமித்வமும், "ஓங்கியுலகளந்த உத்தமன்" என்கையாலே எல்லார் தலையிலும் திருவடிகளைவைத்த ஸௌலப்யமும், "மாயனை" என்று தொடங்கி - தாமோதரனளவும், கட்டுவு மடிக்கவுமாம்படியான ஸௌசீல்யமும, "குறைவொன்றுமில்லாதகோவிந்தா" என்று கல்யாணகுணவிசிஷ்டவஸ்துவின் உபாயபூர்த்தியையும், "அறிவொன்றுமில்லாத ஆய்க்குலம்" "அறியாதபிள்ளை

களோம்" என்கையாலே அதிகாரிஸ்வரூபமான ஆகிஞ்சந்ய மும், "தூயோமாய்வந்து நாம்தூய்மலர்கள் தூவித்தொழுது வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்கப்போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்றும், "வந்து தலைப்பெய்தோம்" என்றும், "உன்னை அருத்தித்துவந்தோம்" என்றும், அநிஷ்டநிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் தப்பாத உபாயமாகஸ்வீகரிக்கும் உபாயவரணத்தையும், "ஆவாவென்று ஆராய்ந்தருள்" "அங்கணிரண்டுங்கொண்டெங்கள் மேல் நோக்குதியேல்" "இறைவா! நீ தாராய் பறை" என்று அவனுடைய பரகதஸ்வீகாரத்தின் ஏற்றத்தையும்.

"குத்துவிளக்கு எரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்" இத்யாதியிலே பர்யங்கவித்யையிற்படியே இருவருமாய் எழுந்தருளியிருக்கிற சேர்த்தியான வேஷத்தை "நாற்றத் துழாய்முடி நாராயணன்" என்கையாலும், "தேவாதி தேவனை" என்கையாலும், "உம்பர்கோமானே" என்கையாலும், "இறைவாநீ" என்கையாலும், உத்தரவாக்ய நாராயண பதத்தில் ப்ரதிபாதிக்கிற சேஷித்வமும், "தட்டொளியும் தந்து உன்மணாளனை" என்கையாலும், "இப்போதே எம்மை நீராட்டு" என்கையாலும் பூவளரும் திருமகளாலருள் பெற்று வரும்படியும், "போற்றி யாமவந்தோம் புகழ்ந்து" என்றும், "பள்ளிக்கட்டிற்கீழே" என்றும், "சீரியசிங்காசனத்திருந்து" என்றும், "அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி" என்றும், "வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து" என்றும், "மாலே! ஆலினிலையாய் அருள்" என்றும், "கூடியிருந்து குளிர்ந்து" என்றும், "நீதாராய் பறை" என்றும், "சிற்றம் சிறுகாலே வந்துன்னைச்சேவித்து" என்றுதொடங்கி "உனக்கே நாம் ஆட்செய்வோம், மற்றை நம் காமங்கள் மாற்று" என்கையாலே உத்தரசதுர்த்தியில் கைங்கர்ய உபகரண ஸஹிதமான பலாநுபவ கைங்கர்ய பரம்பரைகளையும், கைங்கர்ய ப்ரார்த்தனையும், அவற்றில் களையறுப்பையும், "செல்வத்திருமாலால் எங்கும் திருவருள்பெற்று" என்கையாலே "த்வயத்திலே பெரியபிராட்டியாராலேபேறு" என்னுமதுசொல்லித் தலைக்கட்டிற்று.

" மாதவன் " என்று த்வயமாக்கினாப்போலே, " மாதவனே" என்றும், "மாதவனை" என்றுமிறே இங்கு இரட்டித்திருப்பது. "செல்வத்திருமாலால்" என்றும், "பட்டர்பிரான் கோதைசொன்ன " என்கையாலே ' இவ்வர்த்தம் ஆசார்யருசிபரிக்ருஹீதம்' என்னும் இடம் சொல்லிற்று.

இப்படி குருபரம்பராபூர்வகமான த்வயத்தில் பேருக ப்ரதிபாதிக்கிறதாயிறே திருப்பாவைதா னிருப்பது. ஆகவிறே இதுக்குவர்த்தகரான உடையவரும் இத்தை நாள்தோறும் ஆதரித்துக்கொண்டுபோந்தருளிற்று. ஆகையால் இது ஆண்டாளடியாரான அனைவர்க்கும் நித்யாநுஸந்தேயமாக நடந்துபோருகிறது.

"கோபஸ்த்ரீகுலமதிகோதயோபதிஷ்டம் க்ருஷ்ணைக்யம் ப்ரணவமிவாதிகாரிஜப்யம் தத்ரிம்சத்பரிமிதபத்யமார்க்கசீர்ஷ ப்ராப்தோத்ஸவஸமயோசிதம் ப்ரஸித்தம்."

" எட்டெழுத்தின் இணைப்பொருளும் இரண்டதனிற் பொருளும் இயல்வலித்தேர் அர்ச்சுனனுக் கிறைவர்தம்மைத், தொட்டுரைத்த மறையறுதிப் பொருளை எல்லாம் தோன்றும்வகைப் புகழ்வரை துடர்வளைந்துபாட, மட்டவிழும் பொழில் புடைசூழ்முடும்பை வேந்தன் மணாளன் தணவாதமாயன் மாதர், கட்டுரையே புதுவையர்கோன் கோதைசொன்ன கவிபாடல் பொருள் தெரியக்காட்டினனே."

திருப்பாவை முப்பது பாட்டுக்கும் முதற்பாட்டு ஸங்க்ரஹமா யிருக்கும் ; எங்ஙனே என்னில் ;—ஸ்ரீபாஷ்யம் ஒன்பதினாயிர க்ரந்தத்துக்கும் முதல் ச்லோகம் ஸங்க்ரஹமானாப்போலேயும், ஸ்ரீராமாயணம் இருபத்து நாலாயிரம் க்ரந்தத்துக்கும் முதல் ஸர்க்கம் ஸங்க்ரஹமானாப்போலேயும், ஸ்ரீமஹாபாரதம் நூருபிரத்து இருபத்தையாயிரம் க்ரந்தத்துக்கு முதலத்யாயம் ஸங்க்ரஹமானாப்போலேயும், திருவாய்மொழிக்கு முதல்திருவாய்மொழி ஸங்க்ரஹமானாப்போலேயும், முதல்திருவாய்மொழிக்கு முதல்பாட்டு ஸங்க்ரஹமானாப்போலேயும், மந்த்ரசேஷத்துக்கு ப்ரணவம்

ஸங்க்ரஹமானுப்போலேயும், முப்பதுபாட்டுக்கும் முதற் பாட்டு ஸங்க்ரஹமாயிருக்கும்.

ஸங்க்ரஹமானபடி எங்ஙனேயென்னில்; "மார்கழித்திங்கள் மதிநிறைந்தநன்னாளால்" என்கிறவிடத்தாலே முதலிட்டு அஞ்சுபாட்டுக்கும் ஸங்க்ரஹம் சொல்லிற்று. "நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்" என்கிறவிடத்தாலே பத்துப் பெண்பிள்ளைகளை எழுப்புகிறவிடத்துக்கு ஸங்க்ரஹம் சொல்லிற்று. "கூர்வேல்கொடுந்தொழிலன்" என்கிறவிடத்தாலே "கோயில்காப்பானே" என்கிறவிடத்துக்கு ஸங்க்ரஹமாகச் சொல்லுகிறது. "நந்தகோபன்" என்கிறவிடத்தாலே "நாயகனாய்நின்ற நந்தகோபன்" என்றும், "ஓடாததோள் வலியன் நந்தகோபாலன்" என்றும் சொல்லுகிறவிடங்களுக்கு ஸங்க்ரஹம். "குமரன்" என்றத்தாலே "மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள் ஆற்றப்படைத்தான் மகனே" என்கிறவிடத்துக்கு ஸங்க்ரஹம். "கார்மேனி" என்கிறவிடத்தாலே "முகில்வண்ணன்" என்றும், "பூவைப் பூவண்ணா" என்றும், "மாயன் மணிவண்ணன்" என்றும், "மாலே மணிவண்ணா" என்கிறவிடங்களுக்கு ஸங்க்ரஹம். "செங்கண்" என்கிறவிடத்தாலே "கிங்கிணிவாய்ச் செய்ததாமரைப் பூப்போலே செங்கண் சிறிச்சிறிதே எம்மேல்விழியாவோ - அங்கண் இரண்டும் கொண்டு" என்றும், "பங்கயக்கண்ணன்" என்றும், "செங்கண் திருமுகம்" என்றும் சொல்லுகிறவிடங்களுக்கு ஸங்க்ரஹம்.

"கதிர்மதியம்போல் முகத்தான்" என்கிறவிடத்தாலே "திங்களும் ஆதித்தியனும் சேர்ந்தாப்போல்" என்றும், "உலகினில் தோற்றமாய் நின்றசுடரே" என்றும், இத்யாதிகளுக்கு ஸங்க்ரஹம். "நாராயணன்" என்கிறவிடத்தாலே "நாராயணன்மூர்த்திகேசவன்" என்றும், "நாற்றத்துழாய் முடிநாராயணன்" என்றும், "ஓங்கியுலகளந்த உத்தமன்" என்றும், "மாமாயன்மாதவன் வைகுந்தன்" என்றும், "முகில் வண்ணன்பேர்பாட" என்றும், "சிறுபேரழைத்தனவும் சீறி

யருளாதே" என்றும், "வங்கக்கடல்கடைந்தமாதவன்" என்றும் சொல்லுகிறவிடங்களுக்கு ஸங்க்ரஹம்.

"நமக்கேபறைதருவான்" என்கிறவிடத்தாலே-"பாடிப் பறைகொண்டு" என்றும், "நம்மால்போற்றப்பறைதரும்" என்றும், "இற்றைப்பறைகொள்வான்" என்றும், "அறை பறை" என்றும், "சாலப்பெரும்பறை" என்றும், "அருத்தித்து வந்தோம் பறைதருதியாகில்" என்றும், "இறைவா நீ தாராய் பறை" என்றும், "அங்கு அப்பறைகொண்ட ஆற்றை" என்றும் சொல்லுகிற இடங்களுக்கு ஸங்க்ரஹம். "பாரோர் புகழ" என்கிறவிடத்தாலே-"நாடுபுகழும்" என்றும், "எங்கும் திருஅருள்பெற்று இன்புறுவர்" என்றும் சொல்லுகிற இடங்களுக்கு ஸங்க்ரஹம்.

"ஏலோரெம்பாவாய்" என்கிற இடத்தாலே முப்பதுபாட்டிலே ஏலோரெம்பாவாய்க்கு ஸங்க்ரஹம்.

இப்பாட்டில்,காலத்தைக்கொண்டாடாநின்றுகொண்டு ப்ரபந்ததாத்பர்யமான ப்ராப்யப்ராபகங்களைச் சொல்லுகிறது. அதிகாரி ஸ்வாபதேசம். இனி இந்த ஸ்வாபதேசத்தில் இப்ரபந்தத்துக்கு அடியில் அஞ்சுபாட்டாலும் - ப்ரபந்நநிஷ்டாக்ரமங்களையும், ப்ரபத்தி வாசகமான திருநாமவைபவத்தையும் பேசுகிறது. அதில் முதல்பாட்டில், ப்ரபந்நாதிகாரிக்கு "ஸஏஷதேச:கால:" என்கிறபடியே தேசகாலம் எல்லாம் அவனுடைய கடாக்ஷத்தாலே ப்ராப்யம் என்னுமத்தையும், கர்மாந்தரபரித்யாகத்தையும், பகவத்விஷயத்தில் ருசிவிச்வாஸங்களுடைய ப்ராதாந்யத்தையும், "ப்ராப்யப்ராபகங்கள் இரண்டும் ஸர்வஸ்வாமியான நாராயணனே" என்றத்தையும், ஏவகாரத்தால்தேவதாந்தரராஹித்யத்தையும், ப்ரயோஜநாந்தரராஹித்யத்தையும், அநந்யப்ரயோஜனத்தையும், "த்ரிபாத்விபூதிநாயகனான ஸர்வேச்வரனே தங்களுக்கு அபேக்ஷிதஸம்விதானம் பண்ணுவன்" என்று நிர்ப்பரத்வாநுஸந்தானத்தையும், ஸர்வஜனஸௌஹ்ருத்வத்தையும், இப்படி நிஷ்டாக்ரமங்களையும், ப்ரபத்திவாசகமான திருநாமத்தையும் சொல்லுகையால் அதிகாரிஸ்வரூபம் சொல்லிற்றாயிற்று.

"நாராயணனே நமக்கேபறைதருவான்" என்கையாலே திருமந்த்ரத்தில் பதத்ரயத்திலும் ப்ரதிபாதிக்கிற ஸ்வரூபோபாய புருஷார்த்தங்கள் மூன்றும் சொல்லுகிறது. ஆகையாலே இப்பாட்டு திருமந்த்ரத்துக்கு ஸங்க்ரஹம் என்று சொல்லிற்றாயிற்று. இப்பாட்டில் பரத்வம்ஸூசிப்பிக்கிறது.

இரண்டாம்பாட்டில், நோன்புக்குப் பெண்கள் தாங்கள்செய்யக்கடவக்ருத்யத்தை நியமிக்கிற முகத்தாலே, இவ்விஷயத்தில் இழிவாருடைய விரக்தியையும் ஸம்பாவிதஸ்வபாவத்தையும் சொல்லுகிறது என்றொரு ஸ்வாபதேசம்.

இப்பாட்டில், இந்தப்ரபந்நாதிகாரிக்கு ஸம்பாவிதமான நிஷ்டாக்ரமங்களையும், ப்ரபத்திவாசகமான திருநாமவைபத்தையும் சொல்லுகிறது. எங்ஙனே என்னில்;-ஸ்ரீவைகுண்டநிகேதனனாயிருக்கிற ஸர்வேச்வரன், "தேயேசதம்இத்யநுக்ரமாத்" என்று "யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்யமநஸாஸஹ" என்கிறபடியே, ஆச்ரிதர்கள்வந்து ஒருவிண்ணப்பம் செய்வதற்கு அங்கு அவஸரமில்லாமையாலே, ஒருபயணமெடுத்து, க்ஷீரஸாகரத்தில் திருவனந்தாழ்வான் மேலே ஜகத்ரக்ஷணசிந்தையாலே சாய்ந்தருளி,"ஆச்ரிதர்க்கு ஆராலே யாருக்கு என்ன தீங்குவருகிறதோ" என்று அந்தவுரைக்குச் செவிகொடுத்துக் கண்வளருகிறதாக நினைத்திருக்கையும், ஸகலசேதநோஜ்ஜீவனமான த்வயத்தைப் பெரியபிராட்டியாருக்கு உபதேசம்பண்ணுகிற க்ஷீராப்தி நாதனுடைய திருவடிகளை வாயாலே ஸங்கீர்த்தனம் ஸதாபண்ணுகையும், ஆகையால் ப்ரபந்நனுக்கு த்வயாநுஸந்தானம் ஸதா பண்ணவேணுமென்று தாத்பர்யம். அந்த ரஸாநுபவம் பண்ணுகிறவரைக்கும், இதரவிஷயங்களில் "தவாம்ருதஸ்யந்திநிபாதபங்கஜே நிவேசிதாத்மாக தமந்யதிச்சதி" என்கிறபடியே போக்யமான மது சர்க்கரக்ஷீரததிக்ருதாதிகளிலும் நைரபேக்ஷ்யத்தையும், "த்ரிவிக்ரமத்வச்சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி" என்கிறபடியே அவன் திருவடிகளை ஸர்வாலங்காரமாகப்பற்றுகையும், அதொழிய ஸ்ரக்சந்தன வஸ்த்ராத்யாபரணங்களை நிஷேதித்தமையும், அவனுக்குச் சேஷமாயிருக்கிற ஸகலவஸ்துவிஷயங்களில் ஜாதிபேதத்

தாலே அபோக்யமாயிருக்கச்செய்தேயும், பரமபோக்யத்வத்தாலே ஸ்வீகரிக்கையும், யதாசக்தி பாகவதர்க்கு ஹித்யததீயாராதனம் பண்ணி பகவதநுபவம் பண்ணுவித்து "ஒன்றும் செய்யப்பெற்றிலோம்" என்றிருக்கையும், இப்படி அதிகாரி நிஷ்டாக்ரமம்சொல்லுகிறது. இரண்டாம்பாட்டில் வ்யூஹம் சொல்லுகிறது.

மூன்றும்பாட்டில்;-நோன்பிலே இழியவே தத்பலமான ஸம்ருத்திகளுடைய உண்டாமென்கிறார்கள். இத்தால் பகவத்ஸமாச்ரயணபலமான கைங்கர்யமொழிய, வேறே "ஆயுராசாஸ்தே" என்கிறபடியே ஐஹிகபலங்களும் ஆநுஷங்கிக ஸித்தமாய்க்கொண்டு ஸித்திக்கும் என்கிறது.

நாலாம்பாட்டில்;-வர்ஷதேவதையைக்குறித்து வர்ஷிக்கும்படியை நியமிக்கிறார்கள். இத்தால் அநந்யப்ரயோஜனராய் பகவத் ஸமாச்ரயணம்பண்ணுமவர்க்கு, இந்த்ராதி தேவதைகளும் கிடாம்யராவர்கள் என்று இவ்வதிகாரியினுடைய உத்கர்ஷம் சொல்லுகிறது. "ஸர்வேஸ்மைதேவா பலிமாவஹந்தி" என்னக்கடவதிறே.

அஞ்சாம்பாட்டில்;-"ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநி" என்கிறபடியே நோன்புக்கு விக்நங்கள் ஸம்பவியாதோவென்னில்; மனோவாக்காயங்களாலே க்ருஷ்ணனையே அநுஸந்திக்க அவைபோம் என்கிறார்கள். இத்தால், பகவத்குணாநுபவம் பண்ணுமவனுக்கு "உத்தரபூர்வாகயோரச்லேஷவிநாசௌ" என்கிறபடியே பகவதநுபவ மாஹாத்ம்யத்தாலே ஸகலதுரிதங்களும் போமென்கிறது.

ஆக, இவ்வைந்துபாட்டாலும், "நாராயணனே" என்றும், "பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்" என்றும் "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்றும், "மாயனை மன்னுவடமதுரைமைந்தனை" என்றும் சொல்லுகையாலே, க்ருஷ்ணனுடைய அடிப்பாடு சொல்லிற்றாயிற்று. இதுக்குமேல் பத்துப் பாட்டும் முற்பட்டவர்கள் பிற்பட்டவர்களை எழுப்பிச் செல்லுகிறது. இத்தால்,பகவத்விஷயம் அபரிச்சிந்நமாய் தனி

அநுபவிக்க ஒண்ணாமையாலே, பெருக்காற்றிலே இழிவார் துணைகொண்டு இழியுமாபோலேயும், "ஏகஸ்வாதுநபுஞ்ஜீத" என்று தனி அநுபவிக்கமாட்டாத சாபலத்தாலும், பகவதநுபவம் பண்ணுவார்க்கு "தொண்டீர் எல்லீரும் வாரீர்" என்கிறபடியே துணைதேட்டமாயிருக்கும் என்னும் இவ்வர்த்தத்தைச் சொல்லுகிறது.

இதில் முதற்பாட்டில் ;-க்ருஷ்ணாநுபவத்தில் புதியளாயிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள். இத்தால், பகவதேகபோக்யரான ஸ்ரீவைஷ்ணவர்கள் அநந்யப்ரயோஜனராய் இவ்விஷயத்தில் தேசிகரன்றிக்கேயிருப்பாரை அவர்கள் பக்கல் பரிவாலே தேசிகராக்குகை தங்களுக்கு க்ருத்யம் என்றிருக்கை - ஸ்ரீவைஷ்ணவத்வம் என்கிற ஸ்வபாவத்தைச் சொல்லிற்று.

இரண்டாம் பாட்டில் ;-க்ருஷ்ணாநுபவத்தை தேசிகையாய், இவ்வநுபவத்தை ஸ்மரித்துக் கிடக்கிறாளொருத்தியை எழுப்புகிறார்கள். இத்தால், பகவத்விஷயத்தில் ஜ்ஞாதமானவர்த்தம் ஒருவனுக்கு விஸ்ம்ருதமானால், தங்கள் பரிவாலே "போதயந்த:பரஸ்பரம்" என்கிறபடியே அறிவிக்கை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது.

மூன்றாம் பாட்டில் ; - க்ருஷ்ணனாலே கொண்டாடப்படும் ஏற்றமுடையவளை எழுப்புகிறார்கள். இத்தால், பகவதநுபவத்தில் ப்ரத்யாஸந்நராயிருப்பாரிடத்தில் ஸாபேக்ஷராயிருக்கையும், அவர்களை முன்னிட்டு ஈச்வரனைக்கிட்டுகையும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபமென்கிறது.

நாலாம்பாட்டில்;-"க்ருஷ்ணன்வந்தபோதுவருகிறான்" என்று நிர்ப்பரையாய்க்கொண்டு கிடக்குமவளை எழுப்புகிறார்கள். இத்தால், "தத்தஸ்யஸத்ருஸம்பவேத்" என்று பூர்வார்த்தநிஷ்டராயிருப்பாரை, பகவத்ப்ரேமாதிசயத்தாலே ததேகபோகராயிருக்குமவர்கள் போகார்த்தமாகப்ரேரிக்கை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம என்கிறவர்த்தம் சொல்லுகிறது.

அஞ்சாம் பாட்டில்;-பெண்களெல்லாம் "க்ருஷ்ணன்" என்றால் படும்பாட்டை அவன் தான் "தண்ணீர், தண்ணீர்" என்னும்படியாய் இருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள். இத்தால், "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" "அஹம்ஸசமமப்ரிய:" என்றும், அவன்பக்ஷத்திலிருப்பார்திறத்திலே ஸ்ரீவைஷ்ணவர்கள் நித்யஸாபேக்ஷராயிருக்கைஸ்வரூபமென்னும் இவ்வர்த்தம் சொல்லுகிறது.

ஆறாம் பாட்டில்;-அபிஜாதையாயிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள். இத்தால், பகவத்ஸம்பந்தம்விச்சேதியாதே போந்த ஆசார்யஸந்தானப்ரஸூதர் நமக்கு உத்தேச்யர் என்றும், அவர்களடியாக பகவத்ஸமாச்ரயணம் பண்ணுகையும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வபாவம் என்கிறது.

ஏழாம்பாட்டில்;-இளையபெருமாளைப்போலே க்ருஷ்ணனைப் பிரியாதேயிருப்பானொருத்தன் தங்கையை எழுப்புகிறார்கள். இத்தால், பகவத்விச்லேஷம் அஸஹ்யமாம்படி அவகாஹித்தவர் தாங்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உத்தேச்யராமளவின்றிக்கே, தத்ஸம்பந்த ஸம்பந்திகளும் உத்தேச்யரென்றிருக்கை ஸ்வரூபமென்கிறது.

எட்டாம் பாட்டில் ;-" நம் கண்ணழகு உண்டாகில் தானே வருகிறான்" என்று அவயவசோபையை மதித்துக் கிடக்கிறாளொருத்தியை எழுப்புகிறார்கள். இத்தால், பகவதநுபவபரிகரமான ஜ்ஞாநவைராக்ய பக்திகளால் பூர்ணராயிருக்குமவர் திறத்திலும், ததர்த்தமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸாபேக்ஷராயிருக்கை ஸ்வரூபமென்கிறது.

ஒன்பதாம் பாட்டில்;-"எல்லார்க்கும் தானே நிர்வாஹகையாய், எல்லாரையும் தானே எழுப்பக்கடவளாகச் சொல்லி விஸ்மரித்துக்கிடக்கிறாளொருத்தியை எழுப்புகிறார்கள். இத்தால், பகவத்விஷயத்தில் மூட்டுகையாலே அதிகரித்த நிர்வாஹகர் முன்னாக பகவதநுபவம் பண்ணுகை ஸ்வரூபமென்கிறது.

பத்தாம் பாட்டில் ;-எல்லாருடைய திரட்சியும் காணவேண்டியிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள். இத்தால்,

ஸ்ரீவைஷ்ண ஸமாஜ தர்சனம் அபிமதமாயிருக்குமவர்களைக் கண்டால், அந்தஸமூஹமாக அவர்களை உகக்கை ஸ்வரூபமென்கிறது.

ஆக, இப்பதினைந்து பாட்டாலும், எழுப்பப்பட்டவர்களெல்லாரும் கூடவந்து, மேல் பதினாறும் பாட்டில் ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையிலே சென்று கோயில் காப்பானையும் திருவாசற்காப்பானையும் எழுப்புகிறார்கள்.

பதினேழாம் பாட்டில் ;-இவர்கள், திருக்காப்பு நீக்கி உள்ளேபுகவிட, ஸ்ரீநந்தகோபர் தொடக்கமான உள்ளுள்ளாரையடைய எழுப்புகிறார்கள். இவ்விரண்டு பாட்டிலும், பகவத்விஷயத்தைக் கிட்டுவார் தத்ப்ரத்யாஸந்நரைப் புருஷகாரமாகக்கொண்டு புகுருகைஸ்வரூபமென்கிறது.

பதினெட்டாம்பாட்டில்;-இப்படி எழுப்பினவிடத்திலும் எழுந்திராமையாலே, தங்களுக்குப் புருஷகாரமாக நப்பின்னையை எழுப்புகிறார்கள். இத்தால் பகவத்விஷயீகாரம் பிராட்டி புருஷகாரஸாபேக்ஷமென்கிறது.

பத்தொன்பதாம்பாட்டில்;-இவள் திறக்கப்புக, "நம்முடையார்க்கு இவள் முற்பட்டாளாகவொண்ணாது" என்று இவளைத் திறக்கவொட்டாதே கட்டிக்கொண்டுகிடக்கிற க்ருஷ்ணனை எழுப்பி, மறுமாற்றம் கொள்ளாமையாலே மீளவும் அவனையுணர்த்துகைக்காக அவளையெழுப்புகிறார்கள். இத்தால், பிராட்டியைப் புருஷகாரமாக வரித்தால் அவனும் இவளும் இசலி இசலிப்பரியும் பரிவைச் சொல்லுகிறது.

இருபதாம்பாட்டில்;-"அவனுக்கும் எங்களுக்கும் அடியானநீ எங்களைநீராட்டுவீ" என்று க்ருஷ்ணனையும் நப்பின்னைப் பிராட்டியையும்கூட எழுப்புகிறார்கள். இத்தால், அடிமைசெய்யுமிடத்தில் இருவரும் சேர்ந்த . சேர்த்தியிலே அடிமைசெய்வதே முறை என்கிறது.

இருபத்தோராம்பாட்டில், நப்பின்னைப்பிராட்டியும், "நானும உங்களிலே ஒருத்தியன்றோ ? நாமெல்லாருங்கூட க்ருஷ்ணனை அர்த்திக்கவாருங்கோள்" என்ன ; அவன் குணங்களிலே தோற்றார்தோற்றபடி சொல்லி எழுப்புகிறார்

கள். இத்தால், ப்ரபுத்தனாய் தங்கள் காரியம் செய்கைக்கு, "ஏத்தவேழுலகம்கொண்ட" என்கிறபடியே, ஆச்ரிதரான வர்களுக்கு நிர்மமராய்க்கொண்டு அவன் குணகீர்த்தனம் பண்ணுகை கர்த்தவ்யம் என்கிறது.

இருபத்திரண்டாம்பாட்டில்;-கீழ்ப்பாட்டிலே தங்கள் அபிமான சூந்யதையைச்சொல்லி, இப்பாட்டில் அநந்யார்ஹசேஷத்வம் சொல்லுகிறது. இத்தால், அவனுடைய விசேஷகடாக்ஷத்துக்குத் தங்கள் அநந்யார்ஹசேஷத்வம் அநுஸந்தேயமென்கிறது.

இருபத்துமூன்றாம்பாட்டில்;-"உபஸ்தேயைருபஸ்தித:" என்று "ஸ்ரீதண்டகாரண்யத்தில் ரிஷிகளுடைய துக்க நிவ்ருத்திக்கு நாம் முற்பாடராகப்பெற்றிலோம்" என்றுவெறுத் தாப்போலே; இவர்கள் "நோவுபடப்பார்த்திருந்தோமா காதே" என்று இன்னாதாய், அவர்களை அழைத்து "செய்ய வேண்டுவதென்?" என்ன; இங்ஙனே சொல்ல ஒண்ணாது; பேரோலக்கமாக இருந்துகேட்டருளவேணும்" என்கிறார் கள். இத்தால், "கர்மபரதந்த்ரராயிருந்துள்ள ப்ரயோஜனாந் தரபரரைக் காட்டிலும், அநந்யப்ரயோஜனராய் ஸாதநாந்தர நிஷ்டராயிருக்குமவர்களிற்காட்டிலும், ஸித்தஸாதனம்பண் ணினார்க்கு தந்தாம் கையில் கைம்முதல் இல்லாமையாலே ஈச்வரனேப்ரபுத்தனாய்க்கொண்டு அபேக்ஷிதஸம்விதானம் பண்ணவேணும்" என்று இவ்வதிகாரத்தில் வ்யாவ்ருத்தி சொல்லுகிறது.

இருபத்துநாலாம்பாட்டில்;-"அப்படியேசெய்கிறோம்" என்று ப்ரதிஜ்ஞைபண்ணினபடியைக்கண்டு, தாங்கள்வந்த காரியத்தை மறந்து, தற்காலீநமான அழகிலே ஈடுபட்டு மங்களாசாசனம்பண்ணுகிறார்கள். இத்தால், அர்த்திகளாய்ச் சென்றால் தந்தாமுடையபுருஷார்த்தத்தை விஸ்மரித்து மங் களாசாசனம்பண்ணவேண்டும்படியான விஷயவைலக்ஷண் யம் சொல்லுகிறது.

இருபத்தஞ்சாம்பாட்டில்;-ஏதேனும் இப்ரவ்ருத்திக் கொருப்ரதிபந்தகமுண்டேயாகிலும், நீயேபோக்கி எங்கள்

துக்கமெல்லாம்கெட விஷயீகரிக்கவேணும் என்கிருர்கள். இத்தால், ஸ்வரூபலாபம் அத்தலைக்கே கூருனவோபாதி, துக்கநிவ்ருத்தியும் அத்தலைக்கே பரம் என்னும் இவ்வர்த்தம் சொல்லுகிறது.

இருபத்தாரும்பாட்டில்;-"மற்றபேக்ஷிதமென்?" என்ன, நோன்புக்கு வேண்டும் உபகரணங்களைத்தர வேணுமென்கிருர்கள். இத்தால், துக்கநிவ்ருத்தியோபாதி, போகோபகரண ஸித்தியும் அவனுலே என்கிறது.

இருபத்தேழாம்பாட்டில்;-நோற்ருல்பெறக்கடவபேறு சொல்லுகிறது.இத்தால்,"ப்ரஹ்மாலங்காரேணுலங்குர்வந்தி" என்று அலங்காராதிகளும் பகவத்ப்ரஸாதாயத்த மென்கிறது.

இருபத்தெட்டாம்பாட்டில்;- "நாட்டாரிசைகைக்காக 'நோன்பு' என்று ஒரு வ்யாஜத்தையிட்டுப்புகுந்தோமித்தனை. எங்களுக்கு உத்தேச்யம் அதுவன்று, உன்திருவடிகளில் கைங்கர்யம்" என்று தங்களுக்கு உத்தேச்யமான புருஷார்த்த ஸித்திக்கு தங்களாகிஞ்சந்யத்தையும் ப்ராப்தியையும் முன்னிட்டு, "அவனே உபாயமாகவேணும்" என்று அபேக்ஷித்து க்ஷாமணம் பண்ணிக்கொண்டு ப்ராப்யப்ரார்த்தனம் பண்ணித்தலைக்கட்டுகிறது. இதுக்குக்கீழடங்க ஓரதிகாரிக்கு ஸம்பவிக்கும் ஸ்வபாவங்களைச் சொல்லிற்ருயிற்று. இப்பாட்டில் அதிகாரிஸ்வரூபமான உபாய ஸ்வீகாரத்தை ஸப்ரகாரமாகச் சொல்லுகிறது.

இருபத்தொன்பதாம்பாட்டில்;-"தங்களுக்கு உத்தேச்யமானது கைங்கர்யம்" என்று ப்ரபந்ததாத்பர்யம் சொல்லி முடிக்கிருர்கள். இத்தால், ஸ்வீக்ருதோபாயத்துக்கு பலமான புருஷார்த்தஸ்வரூபம் சொல்லுகிறது.

முப்பதாம்பாட்டில்;-இப்ரபந்தம் கற்ருர், நாய்ச்சியாராலும் ஈச்வரனுலும் ஸர்வகாலமுண்டான விசேஷகடாக்ஷத்தைப் பெற்று நித்யஸூரிகளாகப்பெறுவர். இத்தால், "உக்தமான அநுஷ்டான மில்லாதார்க்கும் அவர்களுடைய பாசு

ரமே அவர்கள் பெற்ற பேற்றைத்தரும்" என்று இப்பாசுரத்தின் ஏற்றத்தைச் சொல்லித் தலைக்கட்டுகிறது.

ஆக திருப்பாவையால் சொல்லிற்றாயிற்றுவேதார்த்தம். அதாவது; அவதாரமே ஸர்வஸமாச்ரயணீயமென்றும், அவதீர்ணனானவனுடைய வடிவழகே ருசிஜநகமென்றும், ருசியுடையார் ப்ராப்யத்வரையாலே அவனை மேல்விழுந்தபேக்ஷிக்கை ப்ராப்தம் என்றும், இவ்விஷயத்தில் இழிவார்க்கு ருசியுடையாரடங்கஉத்தேச்யரென்றும், ப்ராப்யமாகிறது-அநுபவஜநிதப்ரீதிகாரிதமாய் யாவதாத்மபாவியானகைங்கர்யம் என்றும், தத்ஸதனமும் அவன் திருவருளே என்றும் சொல்லிற்றாயிற்று.

வானமாமலைஜீயர் அருளிச்செய்த திருப்பாவை ஸ்வாபதேசம் முற்றிற்று. ஜீயர் திருவடிகளே சரணம்*

*குறிப்பு :—இந்த ஸ்வாபதேச ஆசிரியர் வானமாமலைத் திருமடத்தை ஸ்தாபித்த முதல் ஜீயராவார். இவர் பெரிய ஜீயருடைய சிஷ்யர், பூர்வாச்ரமத்தில் அழகியவரதர், அவதாரஸ்தலம் வானமாமலை, திருநக்ஷத்ரம் புரட்டாசி புனர்பூசம், திருவாராதனம் பெரிய ஜீயர் ஸாதித்த் அரங்கநகரப்பன். இவருடைய திருநாமங்கள் ராமாநுஜஜீயர், வானமாமலை ஜீயர், தோதாத்ரியோகி முதலியன. இவர் பெரிய ஜீயர் நியமித்த அஷ்டதிக் கஜங்களில் ஒருவர். இவருடைய சிஷ்யர்கள் ஆத்தான் ராமாநுஜன் முதலானவர் - இவர்தனியன் :—

" ஸௌம்யஜாமாத்ருயோகீந்த்ரபாதரேகாமயம்ஸதா
ததாயத்தாத்மஸத்தாதிம்ராமாநுஜமுநிம்பஜே "

நாலாயிரதிவ்யப்ரபந்த மேற்கோளகராதி

(மேலுள்ள இருவ்யாக்யாநங்களிலும் மேற்கோள்களாக எடுத்
தாளப்பெற்ற நாலாயிரதிவ்யப்ரபந்தப் பாசுரப் பகுதிகளின் அட்ட
வணை - எண்கள் எனது பதிப்பிலுள்ள பாசுர எண்கள்)

அகலகில்லேன் இறையும் 3335, அங்குவைத்திங்குப்பிறந்த
2945, அங்கேநின்று 3224, அங்கோர்ஆய்க்குலம் 1955, 3264, அங்
கைத்தலத்திடை 620, அசுரர்களுந்தானுமாய் 2673,47, அசோதை
முன் சொன்ன திருப்பாதகேசத்தை 43, அஞ்சவுரப்பாளசோதை
532, அஞ்சுடரவெய்யோன் 3158, அஞ்சுவன்வெஞ்சொல்நங்காய்
1210, அடங்கவஞ்சிறைகோலி 1695, அடிகள் அடியே நினையும்
அடியவர்கள்தம்அடியான் 1107, அடிச்சியோம் தலைமிசை 3694,
அடிமை செய்வாரையும் செறும 3342, அடியார்குழாங்களை உடன்
கூடுவதென்றுகொலோ 2816, அடியார்கள்தம்ஈட்டம்கண்டிடக்கூடு
மேல் 658, அடியார்க்கென்னையாட்படுத்தவிமலன் 927, அடியார்
நிலாகின்றவைகுந்தமோ 2552, அடியேனுக்கின்பாவாய்பொன்பா
வைகேள்வா 2440, அணி இழைஆய்ச்சியர் 3655, அணிகுருகூர்ச்
சடகோபன் சொன்ன 3369, அணிமழலைக்கிளிமொழியாள் 3633,
அணிமிகுதாமரைக்கை 3693, அண்ணல் செய்தலைக்கடல் 1449,
அணியாய்ச்சியர்சிந்தையுள்குழகனார் 543, அதனில்பெரிய 3775,
அதனுள்கண்ணுதல் 1449, அதுக்கிடந்துமுன்கிடந்த 779, அத்தத்
தின்பத்தாநாள் 28, அந்தமில்பேரின்பத்தடியரோடு 3765, அபிமான
துங்கன் 11, அப்பன்அறிந்திலன் 104, அப்பன்திருவருள்மூழ்கின
3539, அப்பாஞ்சசன்னிய மும்பல்லாண்டே 2, அமரர்க்கமுதீந்த
ஆயர்கொழுந்தை 2749, அமுதம்கொண்டபெருமான்திருமார்வன்
1540, அமுதில்வரும் பெண்ணமுது 1449, அம்பன்னகண்ணாள்
சோதை 1523, அயர்வறுமமரர்களதிபதி 2675, அரக்கர்தங்கள்
கோன்போலும் 1283, அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே 917,
அரவணைமேற்பேராயற்காட்பட்டார்பேர் 2136, அரவத்தமளியி
னோடும் அழகியபாற்கடலோடும் அரவிந்தப்பாவையும் தானும்அகம்
படிவந்துபுகுந்து 452, அரவின்அணை அம்மானே 3183, அரவூறு
சுலாய்மலைதேய்க்குமொலி 3371, அருளாதொழியுமே 2300, அருளி
னன் 2675, அருளின் பெருநசையால் 2792, அருள்கண்டீர்இவ்

வுலகினில்மிக்கதே 944, அரையில்பீதகவண்ண ஆடைகொண்டு 627, அலைகடல் கடைந்து...பெண்ணமுதுண்ட எம்பெருமானே 1449, அல்லிக்கமலமுகம் 1597, அல்லிற்றான்வந்தபின்னை 1913, அவருயிர் செகுத்தஎம்மண்ணல் 953, அவரேயினியாவாரே 3124, அவன்தாளிணைக்கீழ்புகுங்காதலன் 2992, அவன்பெயரெட்டெழுத்தும் 829, அவன்றமரெவ்வினையர் 2136, அவாவறச் சூழ்ந்தாயே 3775, அவ்வவ்விடம்புக்கு 238, அழகியார் இவ்வுலமூன்றுக்கும் 3243, அழகுகண்டு என்மகள்அயர்க்கின்றதே 260, அழித்தாயுன் திருவடியால் 3246, அழுகையும்அஞ்சிநோக்கும்அந்நோக்கும் 715, அறிவழிந்தனர்ஆய்ப்பாடிஆயரே 16, அனைத்துலகுமாய அரவிந்தலோசனன் 3302, அன்புற்றுநோக்கி அடித்தும்பிடித்தும்அனைவர்க்கும்காட்டிற்றிலையே 146, அன்றிமற்றோருபாயமென் 3544, அன்றிவ்வுலகமளந்த அசைவேகொல் 2315, அன்றுகருமாணியாய் 2242, அன்னையும்அத்தனும் 1214, ஆங்குமலரும்குவியும் 2348, ஆசற்றார்மாசற்றார் 893, ஆடிஅமுதுசெய் 246, ஆடுமதுகண்டு 2673.13, ஆடைஉடையும் 3539, ஆட்கொள்ளத்தோன்றிய 85, ஆணைவிட்டிட் 532, ஆண்டிறல்மீளி 3400, ஆண்மின்கள்வானகம் 3760, ஆமையானகேசவா 771, ஆயர்குலத்தினில்வந்து 96, ஆயர்கொழுந்துமருந்தாம் 2742, ஆயர்பாடிக்கணிவிளக்கு 132, 636, ஆயர்பாடிகவர்ந்துண்ணும்காரேறு 630, ஆயனாகி ஆயர்மங்கைவேயதோள் விரும்பினாய் 792, ஆர்தொழுவார்பாதம்அவைதொழுவதன்றே 2224, ஆர்வத்தால்பாடாதார் 2015, ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலால்அறிகின்றிலேன் 3768, ஆழியும் பல்லாண்டு 2, ஆழியொடும் பொன்னார்சார்ங்க முடைய அடிகளை இன்னார் என்றறியேன் 1950, ஆழ்கடலைக்கடைந்ததுப்பனே 3077, ஆர்ஙன்றான் ஆழியான் ஆராலகுறைவுடையம்...வாள்கெண்டை ஒண்கண் 3702, ஆள்பார்த்துழிதந்த 2441, ஆற்றிலிருந்து 213, ஆறுபர்தாயவனே 2976, இங்குமங்கும் 3435, இங்ஙனேபோந்தருளி 496, இசைமாலைகள் எத்திமேவப்பெற்றேன் வெய்யநோய்கள்முழுதும்வியன்ஞாலத்துவீய 3052, இசையவோர் மூவடிவேண்டிச்சென்ற 2568, இட்டமானபசுக்கள் 637, இணைவனாம்எப்பொருட்கும் 2864, இதுவோபொருத்தம் 3499, இப்படிதான்நீண்டுதாவிய அசைவோ 3473, இமையோர்கள்குழாம்தொழுவதும் 2574, இமையோர்தங்குலமுதல் 3344, இமையோர்தமக்கும்...செவ்வே...வெண்ணையூண்என்னும் ஈனச்சொல் 2575, இம்மைப்பிறவிசெய்யாதேஇனிப்போய்ச் செய்யும் தவந்தான் என் 635, இரக்கமெழீர் 2820, இரக்கமேல்ஒன்று

கோள்" என்று திருப்பவளச் செவ்வாய் திறந்து கட்டளையிட, அவர்களும் அவ்வாறே சென்று ஆழ்வாரிடம் விண்ணப்பிக்க, ஆழ்வாரும் வடபெருங்கோயிலுடையானிடம் விடைபெற்று, அழகிய மணவாளனையல்லதறியாத பாதிவ்ரத்யமுடைய ஆண்டாளை மணிப்பல்லக்கில் எழுந்தருளிவித்துப் பிறர் கண்படாமல் தட்டுப்பாயிட்டு மூடிக்கொண்டு திருவரங்கத் திருப்பதியேறச்சென்று அழகிய மணவாளன் திருமண்டபத்தே தட்டுப்பாயை வாங்க, சூடிக்கொடுத்த நாய்ச்சியாரும், அனைவரும் காணும்படி உதறியுடுத்த பட்டுச்சேலையும், சுற்றிய செங்கழுநீர்மாலையும திருநுதற்கஸ்தூரித்திருநாமமும், காதளவு ஓடிக் கயல்போல் மிளிரும் கடைக்கண் விழியும் உடையராய்க் கொங்கை குலுங்கச் சிலம்பார்க்கச் சீரார்வளை யொலிப்ப, அன்னமென்னடை கொண்டு அழகிய மணவாளன் திருமுன்பே சென்று, உள்ளே புகுந்து கண்களாரக் கண்டு கேசவநம்பியைக் கால்பிடிப்பாள் என்னும் பேறுபெற்று, நாகபர்யங்கத்தை மிதித்தேறித் தீமுகத்து நாகணைமேற்சேரும் திருஅரங்கச் செல்வனாரைச் சேர்ந்து திருவடி வருடும்படி அநதர்ப்பவித்தருள, இதைக் கண்ட ஆழ்வாரும் ஸ்ரீவல்லபன் முதலானோரும் விஸ்மயப்பட, அழகிய மணவாளன் ஆழ்வாருக்கு அருள்பாடிட்டருளி "க்ஷீரஸமுத்ர ராஜனைப்போலே நீரும நமக்கு மாமனாராய் விட்டீர்" என்று மிகவும் உவந்தருளித் தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டத்துடனே ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதித்து "வில்லிபுத்தூருறைவான்றன் பொன்னடி பூண்டுகொண்டு வாழும்" என்று விடைகொடுத்தருள, ஆழ்வாரும் ஸ்ரீவில்லிபுத்தூரேறச்சென்று பூர்வம்போலே வடபெருங்கோயிலுடையான் கைங்கர்யநிரதராய் வாழ்ந்தருளினார்.

பெரியவாச்சான்பிள்ளை வைபவம்

இப்பெரியார் சோழவளநாட்டில், திருவெள்ளியங்குடி என்கிற திவ்யதேசத்திற்கு ஒரு கல் தொலைவில் உள்ள, சேங்கநல்லூர் எனும் ஸ்தலத்தில் கலி 4329 சர்வஜித்து ௵ ஆவணி ௴ ரோஹிணீ நக்ஷத்திரத்தில் (க்ருஷ்ண பகவான் திருவவதரித்த அத்தத்தின் பத்தாநாளில்) அவதரித்தார். இயற்பெயர் ஸ்ரீகிருஷ்ணபாதர், அபயப்ரதராஜர் என்பன. தமபபனார் யாமுநதேசிகர், தாயார் நாய்ச்சியாரம்மாள். நஞ்சீயரிடத்திலும் நம்பிள்ளையிடத்திலும் சகல

சாஸ்த்ரங்களையும் திருவாய்மொழி வ்யாக்யாநங்களையும் க்ரமமாகக் கேட்டு அநுஸந்தித்தவர். தர்சனப்ரவர்த்தகராய் நம்பிள்ளையின் நியமனப்படியே நாலாயிரதிவ்யப்ரபந்தமுழுமைக்கும் வ்யாக்யானம் செய்தவர். ஸ்ரீராமாயணத்தில் இவருக்கு அளவுக்கடங்காத ஈடுபாடு, இவர் காட்டுகிற ப்ரமாணங்களுள் ஸ்ரீராமாயண ச்லோகங்களே மிகுதியானவை. பட்டர் செய்தருளின அஷ்டச்லோகி, ஸஹஸ்ர நாமபாஷ்யம் நம்பிள்ளையின் ஈடு முப்பத்தாறாயிரப்படி முதலியவற்றின் துணைகொண்டு இவருடைய வ்யாக்யாநங்கள் மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருக்கும். ஆழ்வார்கள் அருளிச்செயல்கள் அனைத்திற்கும் வ்யாக்யானம் கண்டவர் இவர் ஒருவரே. இக்காரணம்பற்றி இவர் "வ்யாக்யானசக்ரவர்த்தி" என்று புகழ்பெறுவர். இவர் பூர்வசிகையந்தணகுலத்தினர் (பிள்ளை என்று இக்காலத்து வழங்கும் குலத்தினரல்லர்) திரு ஆராதனம் க்ருஷ்ணவிக்ரஹம். இருப்பிடம் கோயில் (ஸ்ரீரங்கம்) இவர் அருளிய நூல்கள் :—திருவாய்மொழிக்கு 24000படி வ்யாக்யாநம், திருப்பாவைக்கு 3000படி வ்யாக்யாநம், ஏனைய எல்லா ஆழ்வார்கள் அருளிச்செயல்களுக்கும் வ்யாக்யாநம், த்ரிமதஸித்தாந்த ஸாரஸங்க்ரஹம், பாசுரப்படி ராமாயணம, கலியன் அருளப்பாடு, பரந்தரஹஸ்யம் விவரணம், மாணிக்க மாலை, நவரத்னமாலை, ஸகலப்ரமாண தாத்பர்யம், உபகாரரத்னம், கத்யதரய வ்யாக்யாநம், ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்ந வ்யாக்யானம், தனிச்லோகி வ்யாக்யாநம், பரந்தபடி, அபயப்ரதாந வ்யாக்யாநம், சரமரஹஸ்யம், அநுஸந்தாநரஹஸ்யம், நிகமனப்படி முதலியன. இவர் 95 திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இவருடைய சிஷ்யர் (திருமருமகனாரும் தத்தபுத்ரருமான) நைனாராச்சான்பிள்ளை, பரகாலதாஸர், பின்பழகிய பெருமாள்ஜீயர், ஸ்ரீரங்காசார்யர் முதலானவர்கள். நிகமாந்த மஹாதேசிகன தாம் கண்ட ஒரு கனவின் பயனாக, இவரால் திருத்தியாளப்பட்டுத் திருப்பர்ணமுழ்வார விக்ரஹத்தைத் திருவாராதனமூர்த்தமாகப் பெற்றார் எனறவரலாறும் சில நூல்களுள் கூறப்பட்டுள்ளன. இவருடையதனியன் :—

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாயநமோயாமுநஸூநவே
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம்ஸுலப: ஸ்ரீதரஸ்ஸதா

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வைபவம்.

ஸ்ரீ

ஆழ்வார் திருவவதார மென்னலாமபடியான யுடைய நம்பிள்ளை ஒருநாள் நித்யகாலக்ஷேபாதிகளை நிறைவேற்றி மத்யாஹ்நத்தில் தனியாக எழுந்தருளியிருக்க, தம் திருவடிகளி லாச்ரயித்திருக்கும் வடக்குத் திருவீதிப் பிள்ளைக்குத் திருத்தாயா ரான அம்மியென்பவள், திருவடிகளில் தெண்டன் ஸமர்ப்பித்து நிற்க, நம் பிள்ளையு மவளைக் கடாக்ஷித்து, "உம்முடைய க்ருஹ யோகக்ஷேமங்களென்" என்று கேட்டருள, அம்மியு மதைக்கேட்டு, "யானென்னென்று விண்ணப்பம்செய்வேன், யான் பெற்றபிள்ளை யொரு பேயாயிருக்கிறதே" யென்ன, நம்பிள்ளையுமதென் ? என்று கேட்டருள, "தேவரீர் அப்பிள்ளைக்கொரு பெண்ணை விவாஹம் செய்வித்ததே அந்தப் பெண் பெரியவளானாள். ஆகையால் அப் பிள்ளையை இப்பெண்பிள்ளையோடு ஸஹசயந கல்யாணம் செய்து இசைவிக்க, உட்புகுந்தவுடனே பிள்ளை, உடம்பெல்லாம் புழுக்க நீர் சொரிய விம்மி விம்மி முறையிட்டழுதுநிற்க, இதேது பிள்ளாய் ! என்று கேட்டேன், அம்மா ! இதொரு ஆடுகிற பாம்பா யிருந்தது பயப்பட்டேன், இன்னுமப்படியே யிருக்கிறதென்ன, இதுவுமொரு புதுமையோ என்று பெண்ணை அப்பாலே போகவிட்டேன், பிறகு சிலநாள் கழித்த பின்பும் சேரவிட்டேன். பின்னுமப்படியே யாச்சு தென்று வ்யாகுலப்பட, நம் பிள்ளையும சிரித்தருளி அதனாலுமக் கென்னை ? அம்மியு மிதைக்கேட்டு, போரநொந்து இபபடி யருளிச்செய்யலாமோ? பெண் வாழவேண்டாவோ? குலமழியலாமோ வென்று திருவடிகளில் விழுந்து சோகிக்க, நம் பிள்ளையும் உகந்து "அம்மி ! எழுந்திரும் நீர் சோகிக்கவேண்டா ! மனாட்டிப்பெண் ருதுஸ்நாநம் செய்து போகிறபோது இவ்வழி யழைதது வாரும்" என்றருளிச்செய்துவிட, அவளுமப்படியேசெய்ய, திருவோலகத்தி லெழுந்தருளியிருக்கும் நம் பிள்ளையு மப்போது அப்பெண்ணைக் கிட்டவழைத்தருளி தமக்கிஷ்டதெய்வமான பெரியபெருமாள் திரு நாமம் சாற்றவேணுமென்று தமதுள்ளே நினைப்பிட்டு அவள் வயிற் றைத் தமது திருக்கைகளால் ஸ்பர்சித்து ஸத்புத்ரனைப் பெற்றிடுவா யென்று அநுக்ரஹம் செய்துவிட்டு, அன்றையதினம் வடகுத் திரு வீதிப்பிள்ளையை யழைத்தருளி, உம்முடைய பயமும் தீர்ந்தது,

விஹிதவைராக்யத்திற்கொரு குறைவும் வாராது, ஆகையால், லோகமரியாதைக்கு, நாம் சொன்னதற்காக இன்றிராத்ரி கூடியிருமென்ன, அப்படியே கூடியிருந்தவளவில் (ஸ்ரீரங்கநாய்ச்சியார் எனும் பெயருடைய) ஆய்ச்சியும் கர்ப்பம் தரித்து, கலியுகம் 4327 க்ரோதன ௵ ஐப்பசியில் திருவோணத்தில் பிள்ளை திருவவதரிக்க, அவருக்கு பிள்ளை லோகாசார்யர் என்று தம்முடைய ஆசார்யரான பிள்ளையினுடைய திருநாமத்தைச் சாத்தி வளர்த்தனர். பிள்ளை லோகாசார்யர் முதலாண்டுநிறைவில் பெரியபெருமாள் ஸந்நிதியில் தமப்பனாரும் நம்பிள்ளையும் ஸேவித்துநிற்க, நம்பெருமாள் போர உகந்தருளி, அர்ச்சகமுகேந நம்பிள்ளையைக் கூவியருளி, "உம்மைப் போலே ஒருபிள்ளையைக் கொடுத்தீரே, இனி நம்மைப்போலே யொருபிள்ளை கொடும்" என்று நியமிக்க, "நாயந்தே! நாயந்தே" என்று ஓம் அறைய, அப்படியே வடமகுலத்தில் முடும்பைக்குடியில் யஜுஸ்சாகை ஆபஸ்தம்பஸூத்ரம் ஸ்ரீவத்ஸகோத்ரஜராய் திருவரங்கம் பெரியகோயிலைக் குடியிருப்பாக உடையரான வடக்குத் திருவீதிப்பிள்ளைக்குப் பத்நியான ஸ்ரீரங்கநாய்ச்சியாரிடத்தில் கலி 4329௵ மார்கழிமாதம் அவிட்ட நக்ஷத்திரத்தில் இரண்டாவது குமாரர் திருவவதரித்தருளினார். அவருக்கு நம்பிள்ளை எழுந்தருளி, தமது திருவுள்ளப்படி அழகியமணவாளப்பெருமாள்நாயனார் என்று பெரியபெருமாளுடைய திருநாமத்தைச் சாத்தியருளினார். இப்படிப்பட்ட பெருமையையுடையவருடைய திருவருளினாலே அவதரித்து திவ்யாவதார விசேஷமாயிருந்துள்ள அழகிய மணவாளப் பெருமாள்நாயனார் அதிமேதாவியாய், தன் பிதாவான வடக்குத் திருவீதிப்பிள்ளையிடத்தில் பஞ்சஸம்ஸ்காரங்களும் நித்யாநுஸந்தானங்களையும் பெற்று, பரமாசார்யரான நம்பிள்ளையிடத்தில் ஸ்ரீபாஷ்யம், ச்ருதப்ரகாசிகை, ரஹஸ்யங்கள், ரஹஸ்யவ்யாக்யானங்கள் முதலான ஸகலார்த்தங்களையுமறிந்து, திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களைத், தமது திருத்தமையனாரான பிள்ளை லோகாசாரியர் ப்ரஸாதித்தருளப்பெற்று, ஸ்ரீரங்கராஜனைத் திருவாராதனமாயடைந்து, "ஆசார்யஹ்ருதயம்," திருப்பாவைக்கு "ஆறாயிரப்படி வ்யாக்யானம்," திருவந்தாதி, அமலனாதிபிரான், மாணிக்கமாலை, கண்ணிநுண்சிறுத்தாம்பு ஆகியவற்றிற்கு வ்யாக்யானம் அருளிச்செய்து, அருளிச்செயல் ரஹஸ்யம் முதலான க்ரந்தங்களையுமிட்டருளி, லோகத்தை வாழ்வித்து அதிவிரக்தராய், நைஷ்டிகப் பிரம்ஹசரியத்துடன் உத்தமாச்ரமஸ்வீகாரம் செய்தருளி, சிலகாலமெழுந்தருளியிருந்து அப்படியே திருத்தமையனாருக்கு முன்னமே

திருநாட்டுக்கெழுந்தருளினர். இவர் திருவடிகளிலாச்ரயித்தவர் கிடாம்பி, திருமலைநாயனார், கூரகுலோத்தமதாஸர்.

இவர் தனியன் கீழ்வருமாறு :—

" த்ராவிடாம்நாய ஹ்ருதயம்குருபர்வக்ரமாகதம்
ரம்யஜாமத்ருதேவேநதர்சிதம்க்ருஷ்ணஸூநுநா "

—

சுத்தஸத்வம் தொட்டாசார்யர்

திருப்பாவைக்கு ஸ்வாபதேசவ்யாக்யானம் அருளியவர். இவரைப்பற்றி அதிக விவரம் தெரியவில்லை. சுத்தஸத்வம் அண்ணன் என்ற பெயருடையார் ஒருவர் வாநமாமலைத் திருமடத்து முதல் ஜீயர்ஸ்வாமிகளால் திருவாய்மொழியின் ஈடு ப்ரஸாதிக்கப்பெற்றவர் என்ற குறிப்பு ஒரு குருபரம்பரைப் பதிப்பில் வெளிவந்தது. அதை ஒட்டி, இதே ஜீயர்ஸ்வாமிகள் தாம் அருளிய திருப்பாவை ஸ்வாபதேசத்தைப் பெருக்கி சுத்தஸத்வம் தொட்டாசார்ய ஸ்வாமிகள் விஸ்தாரமாகத் தமது ஸ்வாபதேசவ்யாக்யாநத்தை அருளிச்செய்தார் என்று ஊஹிக்கலாம். இவருடைய காலம் வாநமாமலைத் திருமடத்தின் ஸ்தாபித காலமாக இருத்தல்கூடும்.

—

ஆறுயிரப்படி வடமொழி மேற்கோளகராதி

மூவாயிரப்படியிலுள்ள பற்பல மேற்கோள்கள் 6000படியிலுமுள்ளன எனினும், அவை தாத்பர்யங்களோடு வேறோரகராதியில் இப்பதிப்பிலுள்ளமையால், இங்கு இடம்பெற்றில. கீழ்வருவனவற்றில் ஒவ்வொரு குறிப்பிலும் முதலுள்ள எண், இப்பதிப்பின் பக்க எண். பின்னுள்ளது மேற்கோள் குறிப்பெண். மேற்கோள் குறிப்பெண் தரப்படாதவை இதுவரையில் வெளிவந்துள்ள எப்பதிப்பிலும் எண் குறிக்கப்படாதவை. மேற்கோள் சுருக்கங்களின் விளக்கம் கீழ்வருமாறு :—

இதிஹாஸ—இதிஹாஸஸமுச்சயம், கத்.த்ர—கத்யத்ரயம், கீ—பகவத்கீதை, க்ரு.கர்—க்ருஷ்ணகர்ணாம்ருதம், சர.கத்—சரணாகதிகத்யம், சாத்.தச—சாத்வதசம்ஹிதா, சா.உ—சாந்தோக்ய உபநிஷத், ஸ்ரீகுணரத்ந—ஸ்ரீகுணரத்நகோசம், சு. ஸ்த—ஸுந்தரபாஹுஸ்தவம், சு.பா (ஷை ஷை) ஜித—ஜிதந்தேஸ்தோத்ரம், தை.ஆ—தைத்தரீய ஆரண்யகம், தை.நா—தைத்தரீயநாராயணீயம், தை.ஸீ—தைத்தரீயசீக்ஷாவல்லி, பார—பாரதம், (உத்யோ—உத்யோகபர்வம், சபா—சபாபர்வம், சாந்தி—சாந்திபர்வம், த்ரோண—த்ரோணபர்வம், ராஜசூய—ராஜசூயபர்வம்,) ப்ருஹ—ப்ருஹதாரண்யகம், யஜுர்காட—யஜுர்வேதம்காடகம், ர.ஸ்த—ரங்க ராஜஸ்தவம், ரா.அ—ராமாயணம் அயோத்யாகாண்டம் ரா ஆ—ஷை ஆரண்யகாண்டம், ரா.உ—ஷை உத்தரகாண்டம், ரா.கி—ஷை கிஷ்கிந்தாகாண்டம், ரா.சு—ஷை சுந்தரகாண்டம், ரா.பா—ஷை பாலகாண்டம், ரா.யு—ஷை யுத்தகாண்டம், வராஹ—வராஹபுராணம், வி.தர்—ஸ்ரீவிஷ்ணுதர்மம், வி.பு—ஸ்ரீவிஷ்ணுபுராணம், வை.ஸ்த—வைகுண்டஸ்தவம், ஸ்தோ.ர—ஸ்தோத்ரரத்நம், ஸ்வேதா—ஸ்வேதாச்வதர உபநிஷத்.

அகாலபலி 223, ரா.யு 12.7.18, அகிலஜகந் 269, சர.கத் 1, அகிலஹேய 288, சர.கத்; அசரண்யசரண் 269, சர.கத் 1, அதவாகிம் 172, வி.பு 5.24, அதஸோபடங்க 244, தைஆ 72, அத்யாபயந்தி 425, அநச்நந் 398, ஸ்வேதா 4.6, அநந்தபோக 214, அநந்யா 265, ராசு 21.16 அநாதிர்பகவாந் 8, விபு 1.2.29, அந்தந்தம 420, அந்ருதம் 220. ராமாயணம்; அபராம்பவதோ 43, கீ 4.4, அபரிமித288, அபிசேத்ஸு 161, கீ 9.30 அபிவ்ருக்ஷா 223, ராஅ59.8, அமர்யாத 288. ஸ்தோ.ர. 62, அயோத்யா 37, ராஅ 40.9, அரதிர் 301, கீ 13 11, அவிஜ்ஞாதம் 89,290, அஸௌர்யமிவ 13, அஸ்துதே 411, அஸ்மிந்மயா 251, ராமாயணம்; அஹம்ப்ரஹ்மாஸ்மி 262, ப்ருஹ 3.4.10, அஹம்மோக்ஷயிஷ்யாமி 411, கீ 18.66, அஹோபாக்யம் 400, அஹோவீர்யம் 173, ராசு 49.17, ஆக்யாதிஹ்ருதயம் 235, ஆநயைநம் 220, ராயு 18.34, ஆவிர்ப்பூதம்பஹாதமநா 420, விபு 5.3.2, இதஞ்ச 287, விபு 1.9.1, ஈச்வரஸ்ஸர்வ 298 கீ 18.61, ஈச்வரீம் 269, தைநா 1.30, ஈச்வரோஹம் 298, கீ 16.14, ஈஷநந்நம்ய 279, உதாரா: 228, கீ 7.18, உதிஷ்டா 104, ராபா 2.3.2 உபதாயபுஜம் 260, ராசு 21.16, ஊர்தவம மாஸாந் 26, ராக 38.67, ஏகதாபவதி 59, சா 7.26.2, ஏகாம்தாணி 38, ராயு 5.10, ஏதத்வ்ரதம் 103, ராயு 18.33, ஏஷஸர்வஸ்வ 240 ராயு 1.13, ஏஷஸுப்தேஷு 215, கடவ 2.5.8, ஓகமேக 77, கச்ச 203, ராயு 59.144.

கச்சாநுஜாநா 174, ராயு 59.144, கச்சிந்த 301, கச்ஸ்ரீச்ஸ்ரீய 280, ஸ்தோ.ர 12, கஜம் வாவீக்ஷ்யா 260, ராஅ 60.20, கலசம்பூர்ண 392, ராபா 2.24, காந்தஸ்மிதா 279, ராசு 63.12, கால:கலய 263, கீ 10.30, காலம்பரிணமி 185, காலேசம்ஸதி 322, ஸ்ரீகுணரத்ந 19, கிமத்ர 292, ராயு 18 36, கிமிவஹி 156, சாகுந்தலம் ; குணதுங்க 411, ரஸ்த. உத்தர 104, குணநாம 288, குணநாமா 288, ராகி 15.20, குணோர்த்தசர 229, ரா.அ 1.9, குரவ:ஸிங்க 110, விபு 5.18.22, கைகயீபுத்ரம் 46, கௌஸல்யாலோக 175, ராசு 38.56, கௌஸல்யாஸுபர 44, ராபா 23.2 க்ரீஷ்மசீத 216, பார.சாந்தி 177.50, க்ருதக்ருத்யா 148, இதிஹாஸ 6.40, க்ருதவத்ய 20, க்ருபாயாபர்ய 134, ராசு 38.35, க்ருஷ்ணவஹி 133, பார-ஸபா 38.23, க்ருஷ்ணநாம 132, க்ருஷ்ணபலா: 275, பார.த்ரோண 183.24, க்ருஷ்ணேந 62, விபு 2.6.39, க்ரோதமாஹார 173, ராஆ ; சத்ரோஸ்ஸகாசாத் 160, 277 ராயு 17.39, சந்த்ரமாமநஸோ 305, புருஷஸூக்தம்; சரணம்கத: 269, ராயு 17.32, சிரஸாயா 133, ராயு 124.70, சிரயமேகூல 303, ஸ்தோ.ர. 24, சேதேசீதே 47, ராஆ 16.28, ச்ரத்தயா 280, யஜுகாடா 3.3 3. ஸ்ரீயச்ஸ்ரீய, 280, வை.ஸ்த 27, ச்ரூயதாம் 425, ராபா 1.6, ஜகத்ஸசைலம் 181, 279, ஜநஜவந 231, ஸ்ரீகுண 56, ஜந்மகர்ம 10ǐ, கீ 4.9, ஜிதந்தே 194, ஜித 1.1 ஜ்பாகிண 250, ஸ்தோ.ர 33, ஜ்யோதிஷ்டோமே 55, தசவேச்யா 300, தச்ரேஷ்டம் 209, ஆபஸ்தம்ப 1.1.1, தச்சித்த 110, விபு 5.13.21, ததஹம் 412, ததாகாஷா 214, ராஆ 16.3, தநம்மதீய 424, ஸ்தோ.ர 30, தம்த்ருஷ்ட்வா 125, ராஆ 30.39, தம்விநா 46, தர்மசாரிணம் 47, தவாஙகேஸமபா 185, ராசு 38 14, தாநஹம் 222, கீ 16.19, தாஸோஹம் 240, ராசு 42.34, திவ்யமஹிஷீம் 231, சரணாகதிகத்யம்; துர்வ்ருத்த: 181, ராயு 17.12, தூதோராமஸ்ய 240, ராசு 36.2, தேஜோவிசேஷே 394, தேபாதயோ 435, தேவதேவ 270, சர.கத் 1, தேவ்யேவம்ஸ 303, ராசு 35.52, த்ரயாணும் 2ǎ1, ராஆ 10.22, த்வத்பாத 211, ஸ்தோ.ர 22, த்விதாபஜ் 269, ராயு 36.11, த்வ்யக்ஷர 120, பார.ஸ்ய 13.4, நகராம்ஸ 64, ராபா 1.93, நகாமகலுஷம் 435, 1 ஜித 13, நசபுநராவர்த்ததே 15, சாந்தோக் 8.15.1, நசஸாமர்த்ய 388, விபு 5.7.70, நதாஸ்மவச 290, ஜித 1.17, நத்யஜேயம் 102, 291, ராயு 18.3, நமஇத்யே 287, பார.ஸா ; நமஸ்யந்த 191, நமேமோகம் 220, பார.உத்; நமேஸ்நாநம் 46, ராயு 124.7, நமோஸ்து 239, ராசு 13.59, நராம:பரதா 19, நக்ஷமாமி 154, வாராஹ ; நாகபர்யங்க 263, ஹரிவம்ஸம் (விஷ்ணு) 55.62, நாதமு

திம் 212, ஸ்தோ-ர 65, நாநயோர் 232, விபு 1.8.35, நாராயண 390, நாஸ்திக:புரா 293, ஸாத்வதசம் 16.26, நித்யஸிங்கர 265, ஸ்தோ-ர; நித்யாஞ்ஜலி 37, பார-ஸாங் 337.40, நித்யைவேஷா 287, விபு 1.8.17, நிர்த்தோஷம் 161, ஸாத்வதசம் 16.24, நிஸ்ருஷ்டாத்மா 215, நிஸ்வநம்சக்ர 119, ராகி 30.10, நிஸ்ஸம்சய 455, நீளாகு லேந427, சுந்தர-ஸ்த 107, நோபேக்ஷணம் 411.

பகவதோபலேந 182, பகவத்கதம் 297, ராயு 19.5, பதா காபி 216, ராமாயணம் ; பத்ரம்புஷ்பம் 98, கீ 9.26, பாதம் 47, பாதஸ்ய 47, ராஅ 96.24, பாந்தப 44, பலேகதாமநி 236, ஸ்தோர 39, பவிபுமாந் 456, விபு 3.7.24, பவத்விஷப 58, ராஆ 1.20, பஹவோதர் 159, ராபா 1 7, பஹவோநரு 159, ராஅ 2.26, பஹூ நாம் 159, கீ 7.19, பக்ஷிஷ்ரேணி 107, ராஅ 45.31, பாலாஅபிக் ரீடா 107, ராஅ 6.16, பாஸ்கரேண 259, ராயு 121.19, பாஹூ ராமஸ்ய 244, 260, ராமாயணம் ; பிலேபதோ 60, பிஷாஸ்மாத் 74, தைஆ 8, புத்திநாசாத் 36, கீ 2.63, புருஷர்ப: 318, ராசு 21 20, பூயஏவமஹா 170, 287, கீ 10.1, ப்ரக்ருதி 92, கீ 4.6, ப்ரஜ்ஞத 220, ராயு 18.14, ப்ரதிபுத்தா 49, பார - ஸாங் - மோ 342.36, ப்ரஸாதபர 138, விபு 5.19.20, ப்ரஹர்ஷஇஷ்யாமி 84, ஸ்தோ.ர. 46, ப்ரஹ்ருஷ் 287, ராபா 1.6, ப்ராஜ்ஞே 156, ப்ருஹ 6.3.35, ப்ராதாபர்த்த 433, ராஅ 58.31, ப்ரீதிரோத 18, ப்ரு ஷ்டதஸ்து 392, ராஆ 11.1, ப்ருஹ்மவிதைவ 447, ப்ரேஷ்யஸ்ய 411, ப்ரேக்ஷிதஜ்ஞா 235, ப்லவங்கம் 75, மத்தமாதங்க 318, மத் வ்ருத்தம் 386, ஸ்தோ.ர. 65, மநஸா 170, வி.த 69.47, மயாபோ தித 44, ராசு 38.24, மஹதாத 228, ராஆ 66.3, மஹேந்த்ர 215, மாதங்க 174, 260, ராயு 60.2,3, மாமேகம் 403, கீ 18.66, மித்ர மௌபயிகம் 76, 269, ராசு 21.19, முமுக்ஷூர்வை 209, ஸ்வே 6.18, மேகச்யாமம் 26, 163, ராஅ 83 8 யதஹரே 191, (பார்ஹ ஸ்பத்யஸ்ம்ருதௌ) யதாதேதத்ர 205, தை.ஸீ 11.4, யதாரத்நாநி 288, வாமனபுராண 94.40, யதிவா 152, ராயு 18.35, யதோவா இமாநி 133, தை.ப்ரு 1.1, யதோவாசோ 89, தை.ஆ. 6, யத்யத் விபூதி 300, கீ 10.41, யத்யாசரதி 191, கீ 3.21, யஸ்யா:கடாக்ஷ ணம் 280, வை.ஸ்த 27; யஸ்யாகடாக்ஷலக்ஷணம் 231, யஸ்யாதமா சரீரம் 46, சுபா 7, யஸ்யாமி 262, யஜுர் 2.3.7, யாவத:குரு 299, தேஜந்து ; யுவராஜமமந்யத 213, ராஅ 1.4.2, யோமாமேவ 147, கீ 15.19, யோவஜ்ர 174, ராயு 59.140, ரஞ்ஜநீயஸ்ய 38, ராயு 106.6, ரமமாணுவ 259, ராபா 1.31, ரக்ஷதுத்வா 114, விபு 5.5.14

ரக்ஷிதாஜீவ 276, ராபா 1.13, ராமசார்த்தூலம் 318, ராமோத்விர் 220, ராஅ 18.30, ராமோராமோ 107, ராயு 131.97, ராவணோ 386, ராயு 17.10, ராஜதாநீ 214, ராஜாதிராஜ 301, ராஜ்யந்நாம 300, லக்ஷ்மணே 236, ராஉத் 107.3, வக்தாச்ரோதா 39, வசஸாம் வாச்ய 290, வதார்ஹமபி 239, ராசு 38 34, வத்ஸமத்ய 158, வயோஸ்யா 185, ராயு 5 5, வர்ஷாயு 288, பார.கர்ண 83.65, வஸ்த்ராண் 46, வாசாதர்ம 222, ராசு 39.10, விக்ரீது 121, க்ரு. கர்ணு; விச்ரம் 78, விஜ்ஞாநம்யதீதம் 225, வ்யஸநேஷு 58, ராஅ 2 41, ஸவஷப் 43, பார.ராஜ; ஸகலமநுஜ 291, விபு 5.3.2, ஸசித்யம் 52, ஸந்தந்த:புர 138, ராஅ 16.1 ஸததம்கீர்த்த 191, கீ 9.14, ஸதாபச்யநதி 90, 234, ஸோம 18.2.4, ஸந்தமேந 283, 456, தைஆ 6.1, ஸங்கர்சயந் 287, ஸ்தோ.ர. 4, ஸந்த்பஜ்ப 388, கத்யத்ரய; ஸமஸ்த 288, ஸ்தோ.ர 18, ஸமுத்ர 74, ராபா 1.17, ஸம்பவாமி 291, கீ 3.8, ஸர்வதர்மாந் 416, கீ 18.66, ஸர்வபூதாத்ம 50, விபு 1.19.37, ஸர்வயஜ்ஞா 147, பாரத; ஸர்வாநசேஷத: 336, 409, சரணாகதிகத்ய; ஸர்வாந்தேவாந் 215, ஸர்வேவேதாயத்பதமா 290, கடோபநிஷத் 1.2.15, ஸர்வேவேதாயத்ரைகம் 290, யஜுர் ஆரண் 3 10.2, ஸஸத்ய 38, ராப 1.23, ஸஸர்வவித் 148, கீ 15.20, ஸஸர்வாநர்த் 164, ராஅ 16.27, ஸாவித்யா 209, விபு 1.19 4, ஸிம்ஹவிக்ரா 318, ராசு 25.16, ஸீதாமாச்ரித்ய 240, ராசு 16.2, ஸீதாமுவாசா 239, ராஅ 31.2, ஸுகஸுப்த:44, ஸுப்ரபாதா 12, விபு 5.13.14, ஸோப்யகச்சத் 423, ராபா 57, ஸ்த்ரீயம்புருஷ 260, ராஅ 30.3, ஸ்நேஹோமே 38, ரா.உத் 40.15, ஸ்மராமி 274, வராஹபுராண; ஸ்ரஜிநிகளிதம் 451, (திருப்பாவைதனியன்) ஸ்வஜநஸ்ய 276, ஸ்வரேண 220, ராயு 17.11, ஹநுமாந்விலலாபஹ 220, ராசு; ஹேக்ருஷ்ணஹேபாதவ 140, கீ 11.41, ஹேக்ருஷ்ண 245, கீ 11.41, ஹ்ரீரேஷா 193, ராஆ 10.9, ஹ்ருதயா 82, கீ 1.19, க்ஷிப்ரம்பவதி 395, கீ 9.31.

மேற்கோள் விளக்கவுரை

(ப்ரமாணத் திரட்டு)

இதில் மூவாயிரப்படி வியாக்யானத்தில், ஒன்று முதல் 215 வரையில் எண்கள் தரப்பட்டுள்ள ப்ரமாணங்கட்குக் கூடியவரையில் தெளிவான எளிய நடையில் உரை எழுதப்பட்டுள்ளது. வியாக்யானத்தில் முழு சுலோகம் காட்டப்படாது, சில சொற்களே காட்டப் பட்டிருக்கும். அந்த சொற்கள் வருகிற முழு சுலோகங்கட்கும் இங்கு உரையுள்ளது. இவ்வுரை பிரதிபதவியாக்யானமல்ல. மூன்று, ஆறு முதலிய எண்களையுடைய பதினேழுபிரமாணங்கள் எந்த நூல்களிலுள்ளன எனும் விவரம், இதுவரையில் வெளியிடப்பட்ட எந்த பதிப்புக்களிலும் காணப்படவில்லை. இவற்றை ஆராய்ந்து தெரிவித்தும், இவ்வுரையை இதைவிட எளிய தெள்ளிய நடையில் எவ்வாறெழுதலாம் என்பதையறிவித்தும் பிரபலபண்டிதர்கள் கைங்கர்யம் செய்தால் அது லோகோபகாரமாயிருக்கும். ஒலி வேறுபாடுடைய இடங்களில் மட்டும் க்ரந்த எழுத்துக்களும் மற்றெல்லா இடங்களிலும் தமிழ் எழுத்தும் உபயோகிக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பிரமாண நூற்பெயர் முன்னும், ஸ்ரீ என்பதைச் சேர்த்துக்கொள்க. சம்பிரதாயத்தையொட்டி ராமன், லக்ஷ்மணன், பரதன், ஸத்ருக்னன், ஸீதை, குஹன், ஸுக்ரீவன், ஹநுமான், விபீஷணன், கஜேந்த்ரன், எனும் திருநாமங்களைச் சக்ரவர்த்தித்திருமகன் (அல்லது பெருமாள்) இளையபெருமாள், பரதாழ்வான், ஸத்ருக்நாழ்வான், பிராட்டி, குஹப்பெருமாள், மஹாராஜர், திருவடி, விபீஷணாழ்வான், கஜேந்த்ராழ்வான் என்று ஓதுக — இவ்வாறே பிறவற்றிற்கும் கொள்க — இங்குள்ள 215 பிரமாணங்களில், ஸ்ரீராமாயணத்திலுள்ளவை 93, ஸ்ரீவிஷ்ணு புராணத்துள்ளவை 22, உபநிஷத்துக்களிலுள்ளவை 19, ஸ்ரீபகவத்கீதையிலுள்ளவை 15, ஸ்ரீமஹாபாரதத்திலுள்ளவை 13, ஏனைய பத்துக்கும் குறைந்த எண்ணிக்கையுடையவையாகும்.

1. அநாதிமாயயாஸுப்தோயதாஜீவப்ரபுத்யதே
அஜமநித்ரமஸ்வப்நமத்வைதம்புத்யதேததா.

(மாண்டூக்யோபநிஷத் 2.21.) அநாதிமாயையினால் உறங்கும் ஜீவாத்மா, எப்போது ஜ்ஞானவான் ஆகின்றானோ, அப்போது,

பிறப்பு உறக்கம் சொப்பனம் இல்லாதவனாகத் தன்னை அத்வைத நிலையில் அறிகிறான்.

2. பால்யாத்ப்ரப்ருதிஸுஸ்நிக்தோலக்ஷ்மணோலக்ஷ்மிவர்த்தந:
ராமஸ்யலோகராமஸ்யப்ராதுர்ஜ்யேஷ்டஸ்யநித்யஶ:

(ஸ்ரீராமாயணம் பாலகாண்டம் 18.27) லக்ஷ்மிவர்த்தனை லக்ஷ்மணன், லோகத்தை லோகத்தை ஆநந்திப்பிக்கிற பெரியதமையனான ராமபிரானுக்குத் தொட்டில் பருவம் தொடங்கி, எப்போதும் பரம ஸ்நேஹிதனாயிருந்தான்.

3. விவாஹகாலே ரதிஸம்ப்ரயோகே ப்ராணாத்யயே ஸர்வதநாப
ஹாரே| விப்ரஸ்யசார்த்தே ஹ்யந்ருதம்வதேந்த்பஞ்சாந்ருதாந்
யாஹுரபாதகாநி||

கல்யாணகாலத்திலும், ஆணும் பெண்ணுமாக்கூடி மகிழும் காலத்திலும், தன் உயிருக்கே ஆபத்து நேரும்காலத்திலும், சகல சொத்தும் பறிமுதலாகும் காலத்திலும், ஒரு பாகவதன் க்ஷேமத்தின் பொருட்டும், பொய்யைச் சொல்லுகிறார்களன்றோ? கீழ்ச் சொல்லப்பட்ட பாபங்கள் ஐந்தையும் பாபமல்ல என்று பெரியோர் சொன்னார்கள்.

4. பதிஸம்யோகஸுலபம்வயோத்ருஷ்ட்வாசமேபிதா
சிந்தார்ணவகத:பாரம்நாஸஸாதாப்லவோயதா

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 118.34) அநஸூயையைப் பார்த்து பிராட்டி அருளிச்சொன்னது:—எனதுபிதா (ஜநகமஹாராஜன்) நாயகனோடு சேர்த்தற்குத் தக்க எனது யௌவனத்தைப் பார்த்து, வ்யஸனமாகிற சமுத்ரத்தையடைந்து, புணையற்றவன் போல் கரையேறவில்லை.

5. துஷ்டகாளியதிஷ்டாத்ரக்ருஷ்ணோஹமிதிசாபரா
பாஹுமாஸ்போட்யக்ருஷ்ணஸ்யலீலயாஸர்வமாததே

(விஷ்ணுபுராணம் 5.13.27) க்ருஷ்ணலீலைகளைக் கோபிகைகள் அநுகரித்துத் தமக்குள் சொல்லியது:—"துஷ்டகாளியனே! இவ்விடத்தில் இரு, நான் க்ருஷ்ணன்" என்று, வேறொரு கோபஸ்த்ரீயும்

கைகளைத் தட்டிக்கொண்டு, க்ருஷ்ணலீலையால் ஒரு பாம்பை எடுத்தாள்.

6. ஶாஸநாச்சாஸ்த்ரம்—

(செய்யவேண்டுவன விலக்கவேண்டுவன இவை இவையென்று) விதிப்பதால் சாஸ்த்ரம் எனப்படுகின்றது.

7. யாவதாவர்த்ததே சக்ரம் யாவதீ ச வஸுந்தரா
தாவத்த்வமிஹ ஸர்வஸ்ய ஸ்வாமித்வமநுவர்தய

(ராமாயணம் யுத்தகாண்டம் 131-11-பரதன் ராமபிரானிடம் சொன்னது) துருவசக்ரம் எவ்வளவுகாலம் சுழலுமோ, பூமியும் எவ்வளவு பரப்புள்ளதோ, அவ்வளவு காலமும் தேசமும், தாங்கள் இங்கு சர்வத்திற்கும் ஸ்வாமித்வத்தை அநுவர்த்திக்கவேண்டும்.

8. வாஸுதேவதருச்சாயா நாதிஶீதா நவர்மதா
நரகாங்காரஶமநீ ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே

அதிககுளிரும் அதிக உஷ்ணமும் இல்லாமல் நரகங்களாகிற பெரு நெருப்பை அழிக்கவல்லதாம் சிறப்புடைய வாஸுதேவனென்ற மரநிழல் ஏன் அடையப்படுகிறது?

9. மாஸாநாம் மார்கஶீர்ஷோऽஹம் ருதூநாம் குஸுமாகர:
த்யூதம் சலயதாமஸ்மி தேஜஸ் தேஜஸ்விநாமஹம்

(பகவத்கீதை 10-35-கண்ணன் அர்ஜுநனுக்குச் சொன்னது)—மாஸங்களுக்குள் மார்கழியாயும், ருதுக்களுள் வஸந்தமாகவும், ஆட்டங்களுள் சொக்கட்டான் விளையாட்டாகவும், தேஜோவான்களுள் பரமதேஜோரூபனாகவும் நானுகிறேன்.

10, 11. சைத்ர: ஶ்ரீமாநயம் மாஸ: புண்ய: புஷ்பிதகாநந:
யௌவராஜ்யாய ராமஸ்ய ஸர்வமேவோபகல்ப்யதாம்

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 3.4 தசரதசக்ரவர்த்தி வஸிஷ்டர் முதலியவரிடம் சொன்னது) இந்த சித்திரைமாதமானது மங்களம் நிரம்பியதாயும் பரிசுத்தமாயும் மலர்ந்த புஷ்பங்கள் (வனங்களில்) நிரம்பியதாயுமிருப்பதால் ஸ்ரீராமனுடைய யுவராஜ பட்டாபிஷேகத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுக.

12. அத்புதமிதம்வாக்யம்தவராமமஹாக்ஷரம்
பாவநஸ்ஸர்வலோகாநாம்த்வமேவரகுநந்தந

(ராமாயணம் உத்தரகாண்டம் 82.9 அகஸ்தியர் ராமனிடம் சொன்னது) ராமா! தேவரீருடைய இவ்வாக்கியம் மிக அற்புதமாயும், சுப பதங்கள் நிரம்பியதாயும் உள்ளது. ரகுவின் குலத்திற் பிறந்தவரே! தேவரீரே சர்வலோகங்கட்கும் சுத்திகரமான ஸ்வரூபத்தை யுடையீர்.

13. சந்த்ரகாந்தாநநம்ராமமதீவப்ரியதர்சநம்
ரூபௌதார்யகுணை:பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 3.28) இஷ்டமான தோற்றமும் சந்திரனைக்காட்டிலும் அழகிய முகமும், அழகும் அதனை வழங்கும் வள்ளன்மையும், சௌசீலயமாகிற குணமும் ஆகியவற்றால் புருஷர் களுடைய கண்களையும் சித்தங்களையும் அபஹரிக்குமவரான ராம பிரானைத் (தசரதசக்ரவர்த்திகண்டார்)

14. ஆபூர்யமாணேபக்ஷேபுண்யேநக்ஷத்ரே

சந்திரகலைகள் நிறைந்த சுக்லபக்ஷத்தில் புண்யநக்ஷத்திரத்தில் (மங் களகாரியம் செய்தற்குரியது)

15. த்வதாச்ரிதாநாம்ஜகதுத்பவஸ்திதிப்ரணாசஸம்ஸாரவிமோசநாதய:|
பவந்திலீலாவிதயச்சவைதிகாஸ்த்வதீயகம்பீர
மநோऽநுஸாரிண:||

(ஸ்தோத்ரரத்நம் 30) தேவரீரை ஆச்ரயித்தவர்கட்கு ஜகத் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரம் ஸம்ஸார விமோசனமான மோக்ஷம் ஆகிய இவை லீலைகளாகின்றன. வைதிகநியமங்களும் தேவரீ ரிடத்தில் ப்ரீதிகொண்ட பாகவதர்களுடைய கம்பீரமான மனதை அனுசரித்தேயுள்ளன.

16. தாநஹம்த்விஷத:க்ரூராந்ஸம்ஸாரேஷுநராதமாந்
க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநாஸுரீஷ்வேவயோநிஷு

கீதை 19.19 (க்ருஷ்ணன் அர்ச்சுனனுக்குச் சொன்னது) அஹங் காரமுதலியவற்றையுடையராய், சத்ருக்களாய், கடுந்தொழில் செய்

பவர்களாய், பாபிஷ்டராய்உள்ளகிருஷ்ட மனுஷ்யர்களே அசுர ஸம்பந்தப் பிறவிகளிலே நான் எப்போதும் தள்ளுகிறேன்.

17. தேஷாம்ஸததயுக்தாநாம்பஜதாம்ப்ரீதிபூர்வகம்

ததாமிபுத்தியோகம்தம்யேநமாமுபயாந்திதே

(கீதை 10-10 க்ருஷ்ணன் அர்ச்சுனனுக்குச் சொன்னது) எந்த ஞானயோகத்தால் முன்கூறப்பட்ட ஞானிகள் என்னைச் சரணாக அடைகிறார்களோ, அத்தகைய ஞானயோகத்தை, எப்பொழுதும் என்னையடைய இச்சித்து ப்ரீதிபூர்வகமாக, என்னையடையும் அவர்கட்குக் கூட்டுவிக்கிறேன்.

18. அத்யமேஸபலம்ஜந்மஸுப்ரபாதாசமேநிசா

யதுந்நித்ராப்ஜபத்ராக்ஷம்விஷ்ணோர்த்ருக்ஷ்யாம்யஹம்முகம்

(விஷ்ணுபுராணம் 5 17.3) மலர்ந்த தாமரையிதழ்போன்ற கண்களையுடைய விஷ்ணுரூபியான க்ருஷ்ணனுடைய திருமுகமண்டலத்தை ஸேவிப்பதால், இப்போது என் ஜந்மமானது நல்லபலனுள்ளதாயிற்று, இரவும் நல்லவிடிவாயிற்று (என்று அக்ரூரர் க்ருஷ்ணனைப் பார்க்கும்போது எண்ணியது.)

19. ஏஷப்ரஹ்மப்ரவிஷ்டோஸ்மிக்ரீஷ்மேசீதமிவஹ்ரதம்

சாம்யாமிபரிநிர்வாமிஸுகமாமேதிகேவலம்

(மஹாபாரதம் சாந்திபர்வம் மோக்ஷதர்மம் 4.50) வெயிற்காலத்தில் குளிர்ந்தநீர்நிலையைப்போல், பரப்ரஹ்மத்தை நான்அடைந்தவனாகிறேன், சாந்தனாகின்றேன், தாபம் ஆறினவனாகிறேன், துக்கம் கலவாத சுகம் என்னைச்சேர்கின்றது.

20. விதிதஸ்ஸஹிதர்மஜ்ஞஸ்சரணாகதவத்ஸல:

தேநமைத்ரீபவதுதேயதிஜீவிதுமிச்சஸி

(ராமாயணம் சுந்தரகாண்டம் 21.20)—பிராட்டி ராவணனுக்குச் சொன்னது. அவர் (ஸ்ரீராமபிரான்) தர்மத்தையறிந்தவரென்றும், சரணடைந்தாரிடம் அதிக வாத்ஸல்யமுடையரென்றும் ப்ரஸித்தமானவர் அன்றோ? நீ பிழைக்க விரும்புகிறாயெனில் அவருடைய நட்பு உனக்கு உண்டாகக்கடவது.

21. வஸதிஹ்ருதிஸநாதநேசதஸ்மிந்பவதிபுமாந்ஜகதோऽஸ்ய

ஸௌம்யரூப: | க்ஷிதிரஸமதிரம்யமாத்மநோந்த:கதயதிசாரு

தயைவஸாலபோத: ||

விஷ்ணுபுராணம் 3.7.24—யமன் தனது தூதற்குச்சொன்னது. இளையமரமானது தனதழகாலே தன்னுள்ளிருக்கும் அழகியபூமி ஸாரத்தைக்காட்டுவதுபோல, பக்தன் அநாதியான பகவான் தனது ஹ்ருதயத்தில் வாஸம்செய்வதால் இந்த உலகுக்கு சுகுமாரமான ரூபத்தையுடையனாகிறான்.

22. ஸர்வப்ரியகரஸ்தஸ்யராமஸ்யாபிஶரீரத:

லக்ஷ்மணோலக்ஷ்மிஸம்பந்நோபஹி:ப்ராண இவாபர:

(ராமாயணம் பாலகாண்டம் 18.28)—லக்ஷ்மிஸம்பந்நனை லக்ஷ்மணன், ஸ்ரீராமபிரானுக்கு சரீரம்முதலியன காரணங்களினால் ஸர்வ ப்ரியகரராயும், வெளியே உலாவும் ஒரு பிராணன்போலும் இருக்கிறார்,

23. பரித்யக்தாமயாலங்காமித்ராணிசதநாநிச

பவத்கதம்மேராஜ்யஞ்சஜீவிதஞ்சஸுகாநிச

(ராமாயணம் யுத்தகாண்டம் 19.5) அபயப்ரதானம் பெற்றபின் விபீஷணன் சொன்னது) லங்கையும் நண்பர்களும் தனங்களும் என்னால் விடப்பட்டன. எனது ராஜ்யமும் ப்ராணனும் எல்லா சுகங்களும் தேவரீருடைய கைங்கர்யத்துக்கே வருவன.

24. அப்ரவீச்சததாவாக்யம்ஜாதக்ரோதோவிபீஷண:

அந்தரிக்ஷகதஶ்ஶ்ரீமாந்ப்ராதரம்ராக்ஷஸாதிபம்

(ராமாயணம் யுத்தகாண்டம் 16.17) விபீஷணன் ராவணனிடம் சொன்னது. ஸ்ரீமாந் ஆகிய விபீஷணன் ஆகாசத்தில் நின்று, (ராவணன் தன்னிடம்க்ரூரமாகப்பேசிய) அப்போது அதிககோபத்தோடு, சகோதரனும் ராக்ஷஸமன்னனுமான ராவணனைப் பார்த்து சில வாக்யங்கள் சொல்லவும் செய்தான்.

25. பரமாபதமாபந்நோமநஸாऽசிந்தயத்தரிம்

ஸதுநாகவரஶ்ஶ்ரீமாந்நாராயணபராயண:

(விஷ்ணுதர்மம் 69.47 கஜேந்த்ரமோக்ஷ ப்ரகரணம்) நாராயண பராயணனும் ஸ்ரீமானும் ஆன அந்த கஜேந்த்ரனே மிக்க உபத்ரவத்தை அடைந்தவனாய் ஸர்வேச்வரனைத் தன்மனத்தால் தியானித்தான்.

26. துல்யஶீலவயோவ்ருத்தாம்துல்யாபிஜநலக்ஷணாம்

ராகவோऽர்ஹதிவைதேஹீம்தஞ்சேயமஸிதேக்ஷணா

(ராமாயணம் சுந்தரகாண்டம் 16.5. பிராட்டியைப்பார்த்து திருவடி நினைத்தது) (ஸ்ரீராமபிரானுக்கு) ஒத்த சுபாவத்தையும் வயதையும் செயலையும் குலத்தையும் ராஜலக்ஷணத்தையும் உடையவளான வைதேஹிக்கு ராகவன் தகுந்தவர், கறுத்த கண்களையுடைய இந்த பிராட்டியும் அவருக்கு தகுந்தவள்.

27. நஹிம்ஸ்யாத்ஸர்வாபூதாநி

எந்த ஜந்துவையும் ஹிம்ஸிக்கக்கூடாது.

28. அக்நீஷோமீயம்பஶுமாலபேத

(யஜுர்வேதம் 3ம் அஷ்டகம் 5ம் ப்ரச்னம்) அக்நீஷோமமாகிற யாக ஸம்பந்தமாக நான்கு கால் உடைய ஜந்துவைக் கொல்லவேண்டும்.

29. மந்நிமித்தம்க்ருதம்பாபமபிபுண்யாயகல்பதே

என்நிமித்தமாகச் செய்யப்படுகிற பாவமும் புண்யமேயாகின்றது.

30. தத்ரகோவிந்தமாஸீநம்ப்ரஸந்நாதித்யவர்சஸம்

உபாஸாஞ்சக்ரிரேஸர்வேகுரவோராஜபிஸ்ஸஹ

(மஹாபாரதம் - உத்யோகபர்வம் 90.11) அந்த ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளிய (உதயசூரியகாந்தியையுடைய) கோவிந்தனை குருவம்சத்து அரசர்கள் அனைவரும் வெளிநாட்டரசர்களோடு பூஜித்தார்கள்.

31. ஆர்தாவிஷண்ணாஶ்ஶிதிலாஶ்சபீதா:கோரேஷுசவ்யா
திஷுவர்தமாநா:|ஸங்கீர்த்யநாராயணஶப்தமாத்ரம்விமுக்த
து:கா:ஸுகிநோபவந்தி||

(விஷ்ணுஸஹஸ்ரநாமம்) தீனர்களும் துக்கவான்களும் நெஞ்சுசிதில மானவர்களும் பயந்தவர்களும் பயங்கரமான வியாதிகளால் துன்பப் படுவோரும், நாராயண எனும் சொல்லையே ஸங்கீர்த்தனம்செய்து, துக்கத்தை விடுத்து சுகிகளாகின்றார்கள்.

32. ஏஷநாராயணஶ்ஶ்ரீமாந்க்ஷீரார்ணவநிகேதந:
நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்யஹ்யாகதோமதுராம்புரீம்

(பாரதம் - ஹரிவம்சம் 113.62) லக்ஷ்மியுடன் கூடினவராய் திருப் பாற்கடலை வாசஸ்தானமாகக் கொண்டவராய் இந்த நாராயணன் (ஆகிற க்ருஷ்ணன்) ஆதிசேஷனாகிற கட்டிலைவிட்டு மதுராபுரிக்கு எழுந்தருளினானன்றோ ?

33. நாராயணபரம்ப்ரஹ்மதத்த்வம்நாராயண:பர:
நாராயணபரோஜ்யோதிராத்மாநாராயண:பர:

(தைத்தரீயோபநிஷத் - நாராயணீயம் 11ம் அநுவாகம்) நாராய ணனே பரப்ரஹ்மம், நாராயணனே பரதத்வம், நாராயணனே பரஞ் சோதி, நாராயணனே பரமாத்மா.

34. ஸ்நேஹோமேபரமோராஜந்த்வயிநித்யம்ப்ரதிஷ்டித:
பக்திஶ்சநியதாவீரபாவோநாந்யத்ரகச்சதி

(உத்தரராமாயணம் 40.15 ராமபிரானிடம் திருவடி சொன்னது) அரசே ! தேவரீர் விஷயத்தில் எனக்குப் பரமப்ரேமம் நித்யமாகநிலைத் துள்ளது; வீரரே! பக்தியும் எப்போதுமுள்ளது, மனோவ்ருத்தியும் வேறொரிடத்திற்போகிறதில்லை.

35. ஏவம்பஹுவிதாம்சிந்தாம்சிந்தயித்வாமஹாகபி:
ஸம்ஶ்ரவேமதுரம்வாக்யம்வைதேஹ்யாவ்யாஜஹாரஹ

(ராமாயணம் - சுந்தரகாண்டம் 31.1) வாநரச்ரேஷ்டரான திரு வடி, கீழே சொன்னபடியே பலவிதமான ஆலோசனையைச்செய்து

கேட்டமாத்திரத்தில் (சமீபத்தில்) மதுரமானதொரு வாக்யத்தைப் பிராட்டியை நோக்கிச் சொன்னார்.

36. புருஷார்த்தோயமேவைகோ யத்கதாஶ்ரவணம்ஹரே:

ஹரிகதையைக் கேட்கிறதாகிய யாதொன்றுண்டோ, இதுவே புருஷார்த்தம் (மோக்ஷத்திற்குவழி.)

37. மச்சித்தா மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம்
கதயந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச

(பகவத்கீதை 10.9) அர்ச்சுனற்குக் கண்ணன் அருளியது. என்னிடம் ஆஸக்தமான மனமுடையாரும் எனக்கு ஸ்வாதீனமாக உயிருடையவர்களும், தாங்களனுபவிக்கும் எனது குணங்களை ஒருவருக்கொருவர் தெரிவிக்கிறவர்களும், நாள்தோறும் எனது வரலாறுகளைத் துதிக்கிறவர்களும் ஆகியவர்கள் சொல்வதனாலும்கேட்பதனாலும் ஆநந்திக்கிறார்கள்.

38. ஶ்ராந்தாநாம் தூரமத்வாநம் த்ருஷ்ணாமூர்ச்சிதசேதஸாம்
பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்

(காருடபுராணம்) நெடுந்தூரமான வழியில்நடந்து பசியினால் மூர்ச்சிதமான மனதுடையவர்கட்கு புண்டரீகாக்ஷனுடைய நாமஸங்கீர்த்தனமாகிற அம்ருதம் கட்டுச்சோறு (போன்ற தாரகமாகின்றது.)

39. பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்மாம் ப்ரபத்யதே
வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:

(கீதை 7.19) அர்ச்சுனனுக்கு க்ருஷ்ணன் சொன்னது. அநேகமான புண்ணியப் பிறவிகளின் இறுதியில் ஞானம்பிறந்தவன் வாசுதேவனே சர்வமுமாம் என்று என்னைப் பற்றுகின்றான், அத்தகைய மஹாத்மா கிடைப்பது துர்லபம்.

40. அத்யந்தஸுகஸம்வ்ருத்தஸ் ஸுகுமாரஸ் ஸுகோசித:
கதந்த்வபரராத்ரேஷு ஸரயூமவகாஹதே

(ராமாயணம் ஆரண்யகாண்டம் 16.30) ராமபிரானைப் பார்த்து லக்ஷ்மணன்கேட்டது. அத்யந்தசுகஸம்வ்ருத்தி பெற்றவரும் சுகுமார

ரும் சுகத்துக்கு உசிதமானவருமாகிய பரதன் இரவின் பிற்பகுதியிலே, ஸரயூநதியில் எப்படி ஸ்நானம் செய்கிறார் ?

41. அத்ரோபவிஶ்யஸாதேநகாபிபுஷ்பைரலங்க்ருதா
அந்யஜந்மநிஸர்வாத்மாவிஷ்ணுரப்யர்சிதோயயா

(விஷ்ணுபுராணம் 5.13.35) கோபிகைகள் தம்முள் சொல்லிக் கொண்டது. முற்பிறவியில் எவளால் ஸர்வாந்தர்யாமியான விஷ்ணு பூஜிக்கப்பெற்றாரோ அவள் அந்த க்ருஷ்ணனால் இங்கு உட்கார்ந்து புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்றாள்.

42. போக்தாரம்யஜ்ஞதபஸாம்ஸர்வலோகமஹேஶ்வரம்
ஸுஹ்ருதம்ஸர்வபூதாநாம்ஜ்ஞாத்வாமாம்ஶாந்திம்ருச்சதி

(கீதை 5.29) அர்ச்சுனற்குக் கண்ணன் அருளியது. யஜ்ஞதப: பலங்களை அநுபவிப்பவனும், ஸர்வலோகமஹேச்வரனும் எல்லா உயிர்கட்கும் ஸுஹ்ருத்துமானவனுமாகிய என்னை உபாஸித்து சாந்தி அடைகிறான்.

43. ஸர்வலோகஶரண்யாயராகவாயமஹாத்மநே
நிவேதயதமாம்க்ஷிப்ரம்விபீஷணமுபஸ்திதம்

(ராமாயணம் யுத்தகாண்டம் 17.14 சுக்ரீவன் முதலியோரிடம் விபீஷணன் சொன்னது) சர்வலோக சரண்யனும் மஹாத்மாவுமாகிய ராகவனிடத்தில் விபீஷணன் வந்தானென்று சீக்கிரமாக அடியேனை அறிமுகப்படுத்துங்கள்.

44. அக்ருத்ரிமத்வச்சரணாரவிந்தப்ரேமப்ரகர்ஷாவதிமாத்மவந்தம்
பிதாமஹம்நாதமுநிம்விலோக்யப்ரஸீதமத்வ்ருத்தமசிந்தயித்வா

(ஸ்தோத்ரரத்நம் 65) அரவிந்தம்போன்ற தேவரீர் திருவடிகளில் நிருபாதிகமான ப்ரேமப்ரகர்ஷத்துக்கு எல்லையும் ஆத்ம விவேகியும் எனது பிதாமஹரும் (பாட்டனாரும்) ஆன ஸ்ரீமந்நாதமுனிகளைப் பார்த்து, அடியேனுடைய தவறுகளைச் சிந்திக்காமல் அநுக்ரஹம் செய்யவேண்டும்.

45. அஸந்நேவ ஸ பவதி அஸத் ப்ரஹ்மேதி வேத சேத்

அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோ விதுரிதி

(தைத்தரீயம் - ஆநந்தவல்லி 6.1) ப்ரஹ்மத்தை உள்ளபடி அறிகிறான் என்பது இல்லையானால் அவன் அஸத்தாகவே ஆகிறான். ப்ரஹ்மத்தை அறிகிறான் என்பது உண்டானால், அப்படியறிவதால் இவனை ஸத்தென்று சொல்லுகிறார்கள்.

46. ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ரமிதமுத்தமம்

ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்துமவ்யயம்

(கீதை 9 2 - அர்ச்சுனனுக்குக் கண்ணன் அருளியது) (பக்திரூப உபாஸனையாகிற) இதுராஜவித்தை, மறைத்தற்குரியவற்றுள் மேலாயது, உத்தமமானது, (என்னையடைதற்கு விரோதியான) பாவங்களைப் போக்குவது, ப்ரத்யக்ஷவிஷயமுடையது, மோக்ஷஹேதுவாயது, மிக்க பரீதியினால் செயயத்தக்கது, நாசமற்றது.

47. ஆஶாஸ்தேZயம்யஜமானோZஸௌ ஆயுராஶாஸ்தே

ஸுப்ரஜாஸ்த்வமாஶாஸ்தே

(யஜுர்வேதம்) இந்தயாகத்தின் யஜமானன் பிரார்த்திக்கிறான் (எவைகளையெனில்) தனக்கு ஆயுளைப்பிரார்த்திக்கிறான், நல்லபிள்ளைகளைப் பெறுதற்குப் பிரார்த்திக்கிறான.

48. பிதா மாதா ஸுதா ப்ராதா தாரா மித்ராதயோபி வா

ஏகைகபலலாபாய ஸர்வலாபாய கேஶவ꞉

(அஹிர்புத்ந்யஸம்ஹிதை) தந்தை தாய் மகன் ஸகோதரன் மனைவி நண்பன் ஆகிய இவர் முதலானோரும் ஒவ்வொரு பலனையே தருகிறார்கள். கேசவன் (ஒருவனே) எல்லா பலனையும் தருகிறான.

49. மாதா பிதா ப்ராதா நிவாஸ꞉ ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண꞉

(ஸுபாலோபநிஷத் 6ம் கண்டம்) தாய் தந்தை சகோதரன் இருப்பிடம் ரக்ஷகம் நண்பன் கதி (ப்ராப்யம்) எனும் எல்லாம் நாராயணனே.

50. இதம்துதேகுஹ்யதமம்ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே
ஜ்ஞாநம்விஜ்ஞாநஸஹிதம்யஜ்ஜ்ஞாத்வாமோக்ஷ்யஸேऽஶுபாத்

(கீதை 9.1 - அர்ச்சுனற்குக் கண்ணன் சொன்னது) எந்த உபாஸனத்தை அநுஷ்டான பரியந்தமாக அறிந்து, (என்னையடைதற்கு விரோதியான) அசுபத்திலிருந்துவிடப்பெறுகிறாயோ, மிக மறைத்தற்குரியதும் விஞ்ஞானத்தோடுள்ளதுமான இந்தஞானத்தை அசூயையற்ற உனக்கு (நான்) நன்றாகச் சொல்லுவேன்.

51. யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோமஹாபாகோமஹீயதே
நதத்ரஸஞ்சரிஷ்யந்திவ்யாதிதுர்பிக்ஷதஸ்கரா:

(நாரதீயம் 1.20) எந்த நாட்டில் அஷ்டாக்ஷர ஸம்ஸித்தியுடைய மஹாபாகவதன் பூஜிக்கப்பெறுகிறானோ, அங்கு கொடியநோய் பஞ்சம் களவு முதலியன சஞ்சரிப்பதில்லை.

52. விசக்ரமேப்ருதிவீமேஷஏதாம்

(புருஷஸூக்தம்) இந்தப் பூமியை இவர் (நாராயணன்) தம் திருவடியால் அளந்தார்.

53. நதேரூபம்நசாகாரோநாயுதாநிநசாஸ்பதம்
ததாபிபுருஷாகாரோபக்தாநாம்த்வம்ப்ரகாஶஸே

(ஜிதந்தேஸ்தோத்ரம் 5) தேவரீருடையரூபம் தேவரீருக்கன்று (ஆச்ரிதர்க்காகவே) தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹமும் ஆயுதங்களும் பரமபதமும் தேவரீருக்கன்று; எனினும் பக்தர்களுக்காகவே திவ்யபுருஷாகாரத்தோடு பிரகாசிக்கிறீர்.

54. அப்யஹம்ஜீவிதம்ஜஹ்யாம்த்வாம்வாஸீதேஸலக்ஷ்மணாம்| நது
ப்ரதிஜ்ஞாம்ஸம்ஶ்ருத்யப்ராஹ்மணேப்யோவிஶேஷத:

(ராமாயணம் ஆரண்யகாண்டம் 10.19) சீதைக்கு இராமபிரான் சொன்னது. சீதையே! நான் ரக்ஷித்தற்குரிய பிராணனையாகிலும், லக்ஷ்மணனையாகிலும், உன்னையாகிலும்விடுவேன்; ஒருவனுக்காகச் செய்த ப்ரதிஜ்ஞையை நழுவவிடமாட்டேன், ப்ராஹ்மஞானிகள்

விஷயத்தில் செய்யப்பட்ட ப்ரதிஜ்ஞையை விசேஷமாகக் கைவிடவேமாட்டேன்.

55. ராமோராமோராம இதிப்ரஜாநாமபவந்கதா:
ராமபூதம்ஜகதபூத் ராமேராஜ்யம்ப்ரசாஸதி

(ராமாயணம் யுத்தகாண்டம் 131.97) ராமபிரான் ராஜ்யத்தை ரக்ஷிக்கும் அளவில், ஜனங்களிடத்தில் ராமன் ராமன் ராமனென்று ஸ்தோத்ரங்கள் உண்டாயின, உலகம் ராமஸ்வரூபமாகவே ஆயிற்று.

56. ப்ரஹ்ருஷ்டமுதிதோலோகஸ்துஷ்ட:புஷ்டஸ்ஸுதார்மிக:
நிராமயோஹ்யரோகச்ச துர்பிக்ஷபயவர்ஜித:

(ராமாயணம் பாலகாண்டம் 1.90) உலகத்தினர் மயிர்சிலிர்க்குமவராயும் ஸந்தோஷம் உடையராயும் பிரீதியுடையராயும் தர்மவான்களாயும் உடம்பிலும் மனத்திலும் ரோகமில்லாதவராயும் பஞ்சத்தினால் விளையும் பயமற்றவராயும் இருந்தனர்.

57. நிகாமேநிகாமே ந: பர்ஜந்யோவர்ஷது

(யஜுர்வேதம்) பிரார்த்திக்கிறபோதெல்லாம் பர்ஜந்யன் நமக்கு மழை பெய்விக்கிறான்.

58. வ்ருக்ஷேவ்ருக்ஷேசபச்யாமிசீரக்ருஷ்ணாஜிநாம்பரம்
க்ருஹீததநுஷம்ராமம்பாசஹஸ்தமிவாந்தகம்

(ராமாயணம் ஆரண்யகாண்டம் 39.15) ராவணனிடம் மாரீசன் சொன்னது. மரவுரியும் மான்தோலும் ஆடையாகக்கொண்டு வில்லைக் (கையில்) தரித்த ஸ்ரீராமனை பாசத்தைக் கையிலுடைய யமனைப்போல ஒவ்வொரு மரத்திலும் பார்க்கிறேன்.

59. பாபாநாம்வாசுபாநாம்வாவதார்ஹாணாம்ப்லவங்கம
கார்யம்கருணமார்யேணநகச்சிந்நாபராத்யதி

(ராமாயணம் யுத்தகாண்டம்116.44 திருவடியைநோக்கிப்பிராட்டி சொன்னது) வாநரச்ரேஷ்டனே! (உன் எண்ணப்படி) பாபமுடையராயும் (என் எண்ணப்படி) புண்ணியமுடையராயும் உள்ள, கொல்

லத்தக்கவரான ராக்ஷஸிகள் விஷயத்தில் ஆர்யனான புருஷனால் கருணை செய்யத்தக்கது, ஏனெனில் அபராதம் செய்யாதவர் ஒருவருமில்லை.

60. உத்வந்தி தைத்யா: ப்ரணமந்தி தேவதா: நஶ்யந்தி ரக்ஷாம்
ஸ்யபயாந்தி சாரய:| யத்கீர்த்தநாத் ஸோऽத்புதரூபகேஶவ: மமாஸ்து
மாங்கல்யவிவ்ருத்தயே ஹரி:

(விஷ்ணுதர்மம் மாங்கல்யஸ்தவம்) எவனைஸ்தோத்ரம் செய்தால், அசுரர்கள் ஓடிப்போகிறார்களோ தேவதைகள் மிகவும் வணங்குகிறார்களோ ராக்ஷஸர்கள் நசிக்கிறார்களோ சத்ருக்களும் ஓடுகிறார்களோ, அந்த ஹரியானவர் அற்புதரூபமான அவதாரத்தால் அடியேனுடைய மங்களத்தை விருத்தி செய்யட்டும்.

61. ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாஶஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ண
மூலே| பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ரு
ணாம் ந வைஷ்ணவாநாம்

(விஷ்ணுபுராணம் 3 7.14 யமன் தனது கிங்கரனிடம் சொல்லியது) கையில் பாசத்தையுடைய தனது கிங்கரனைப் பார்த்து யமன் "மதுசூதனனைப் பற்றியவர்களை விட்டுவிடு, இதர நரர்களுக்கே நான் யஜமானன், வைஷ்ணவர்களுக்கு யஜமானன் அல்லன்" என்று அவனுடைய காதின்கீழே (ரஹஸ்யமாகச்) சொன்னான்.

62. பாஹுச்சாயாமவஷ்டப்யோ யஸ்ய லோகோ மஹாத்மந:
அபக்ருஷ்யாஶ்ரமபதாந் ம்ருகரூபேண ராகவம்
ஶூந்யே யேநாபநீதாஸி தஸ்ய த்ரக்ஷ்யஸி யத்பலம்

(ராமாயணம் சுந்தரகாண்டம் 34.31. பிராட்டியைப்பார்த்து திருவடி சொன்னது) லோகத்தார் எந்த மஹாத்மாவான (ராமபிரானுடைய) கைநிழலை ஆச்ரயித்தனரோ, அந்த ராகவனை (மாரீசனாகிய) மானைக்காட்டி, ஆச்ரமத்திலிருந்து வெகுதூரம் இழுத்து எவனால் தேவரீர் தனிமையில் அபஹரிக்கப்பட்டீரோ அந்த ராவணனுடைய (அவ்வபஹரணத்திற்குப் பலமான) மரணத்தைப் பார்க்கப்போகிறீர்.

63. ஸகோஷோதார்தராஷ்ட்ராணாம்ஹ்ருதயாநிவ்யதாரயத்
நபஶ்சப்ருதிவீம்சைவதுமுலோவ்யநுநாதயந்

(கீதை 1.19) த்ருதராஷ்ட்ரனை நோக்கி ஸஞ்ஜயன்கூறியது) அந்த சங்கத்வநியானது, ஆகாசத்தையும் பூமியையும் வியாகுலமாக ஒலித்துக்கொண்டு உமது குமாரர்கள் ஹ்ருதயங்களைப் பிளந்தது.

64. ஆலிகந்தமிவாகாஶமவஷ்டப்யமஹத்தநு:
பத்மபத்ரவிஶாலாக்ஷம்தீர்கபாஹுமரிந்தமம்

(ராமாயணம் யுத்தகாண்டம் 100.11) பெரியவில்லைப் பிடித்து (ஆகாயத்தைக் கீறுவதுபோல்) (நிற்பவரும்) தாமரை இதழ் போன்ற விசாலமான கண்களையும் நீண்ட கைகளையும் யுடையவரும், சத்ருக்களை சம்ஹரிப்பவருமான ராமபிரானை (ராவணன் கண்டான்)

65. ததோராமோமஹாதேஜாதநுராதாயவீர்யவாந்
ப்ரவிஶ்யராக்ஷஸம்ஸைந்யம்ஶரவர்ஷம்வவர்ஷஹ

(ராமாயணம் யுத்தகாண்டம் 94.18) வானரசேனைகள் தன்னைச் சரணடைந்தபின்பு, மஹாதேஜோவானும் வீர்யவானுமாகிய ராமபிரான் வில்லை எடுத்துக்கொண்டு ராக்ஷஸசேனையில் பிரவேசித்து சரமாரி பெய்தார்.

66. ஶ்ரேயாம்ஸிபஹுவிக்நாநிபவந்திமஹதாமபி
அஶ்ரேயஸிப்ரவ்ருத்தாநாம்க்வாபியாந்திவிநாயகா:

பெரியோர்களுக்கும்கூட நற்காரியங்கள் பலதடைகளையுடையனவாகின்றன; கெட்டகாரியம் செய்யும்போது தடைகள் எங்கு போகின்றனவோ ?

67. ஜாதோऽஸிதேவதேவேஶஶங்கசக்ரகதாதர
திவ்யம்ரூபமிதம்தேவப்ரஸாதேநோபஸம்ஹர

(விஷ்ணுபுராணம் 5.3.10 ஸ்ரீக்ருஷ்ணனைப்பார்த்து வசுதேவர் சொன்னது) தேவதேவேசனே! (க்ருஷ்ணனாக)அவதரித்தீர்,ஶங்

மியே, சங்குசக்கரம் கதைகளை தரித்துக்கொண்டுள்ள இந்த திவ்விய ரூபத்தை (என்னிடத்து அனுக்ரஹத்தால்) மறைத்துக்கொள்ளும்.

68. தமஸ꞉ பரமோ தா⁴தா ஶங்க²சக்ரக³தா³த⁴ர꞉

ஶ்ரீவத்ஸவக்ஷா நித்யஶ்ரீரஜய்ய꞉ ஶாஶ்வதோ த்⁴ருவ꞉

(ராமாயணம் யுத்தகாண்டம் 114.15 மந்தோதரி சொன்னது) இந்த ப்ரக்ருதிமண்டலத்திற்கு அப்பாற்பட்ட ஸ்ரீவைகுண்டத்திலிருப்பவரும், சங்கு சக்கரம் கதைகளைத் தரித்தவரும், போஷகரும், சிவந்த மறுவை வலதுமார்பில் உடையவரும், நித்தியலக்ஷ்மியோடு கூடினவரும், எவராலும் ஜயிக்கப்படாதவரும், சாஸ்வதமானவரும், விகாரமில்லாதவருமான (க்ஷீராப்திநாதனே ராம ஸ்வரூபியாக அவதரித்தார்)

69. மது²ரா நாம நக³ரீ புண்யா பாபஹரீ ஶுபா⁴

யஸ்யாம் ஜாதோ ஜக³ந்நாத²ஸ்ஸாக்ஷாத்³விஷ்ணுஸ்ஸனாதன꞉

ஜகந்நாதனும் என்றுமிருப்பவனும் ஆகிய ஸாக்ஷாத் விஷ்ணு எந்த நகரத்தில் (க்ருஷ்ணனாகத்) திருஅவதாரம் செய்தனரோ, அப்பேர்ப்பட்ட புண்யகரமாயும் பாபத்தைப் போக்குவதாயும் சுபமாயும் உள்ள மதுரையென்று சிறப்புடைய நகரம் இது

70, 72. யமுனாஞ்சாதிக³ம்பீ⁴ராம் நாநாவர்தஸமாகுலாம்

வஸுதே³வோ வஹன் க்ருஷ்ணம் ஜானுமாத்ரோத³கோ யயௌ

(விஷ்ணுபுராணம் 5.3.18 இந்த சுலோகத்தில் முதல்வரி 72ம் பிரமாணமும் 2ம் வரி 70ம் பிரமாணமும் ஆகும்) ஸ்ரீக்ருஷ்ணனை எடுத்துக்கொண்டு வசுதேவர் முழங்காலளவு நீரே உடையவராய், அதிக கம்பீரமாகவும், பல சுழல்களாலும் மீன்களாலும் கலங்கியும் இருக்கிற (ஆழமான) யமுனாநதியைத் தாண்டினார்.

71. ஸந்தோஷமதி⁴கம் சக்ரு꞉ ப்ரஶாந்தாஶ்சண்ட³மாருதா꞉

ப்ரஸாத³ம் நிம்நகா³ யாதா ஜாயமானே ஜனார்த³னே

(விஷ்ணுபுராணம் 5.3.4) ஜநார்த்தநன் (க்ருஷ்ணன்) அவதரித்த போது பெரியோர்கள் அதிக ஸந்தோஷத்தையும், சண்டமாருதங்கள் சாந்தியையும், நதிகள் தெளிவையும் அடைந்தன.

73. ததோऽகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா
தேவகீபூர்வஸந்த்யாயாமாவிர்பூதம் மஹாத்மநா

(விஷ்ணுபுராணம் 5.3.2) (தேவகிப்பிராட்டி கர்ப்பஞ்சரித்த) பின்பு அகிலஜகத்தாகிற பத்மத்தை அலர்த்த, தேவகியாகிற கிழக்கு திக்கிலிருந்து மஹாத்மா (ஆகிற க்ருஷ்ணனெனும்) சூரியன் உதித்தான்.

74. கௌஸல்யா ஶுஶுபே தேந புத்ரேணாமிததேஜஸா
யதா வரேண தேவாநாமதிதிர் வஜ்ரபாணிநா

(ராமாயணம் பாலகாண்டம் 18.11, அயோத்யாகாண்டம் 1.8) தேவர்கட்குள் சிறந்த வஜ்ரபாணியாகிய இந்திரனால் (தேவர்கள் மாதாவாகிய) அதிதிப்ரகாசித்தமைபோல, அதிகதேஜஸ் உடைய அந்த பிள்ளையான (ராமபிரானால்) கௌஸல்யாதேவி ப்ரகாசித்தாள்.

75. மமசாப்யந்தராத்மாயம் ஶுத்தம் வேத்தி விபீஷணம்
அநுமாநாச்ச பாவாச்ச ஸர்வத: ஸுபரீக்ஷித:

(ராமாயணம் யுத்தகாண்டம் 18.38 சுக்ரீவன் ராமபிரானிடம் சொன்னது) எனது மனதும் இந்த விபீஷணனை ஶுத்தியுடையவனென்று அறிகிறது. அனுமானங்களாலும் பாவங்களாலும் நன்றாகப் பரீக்ஷிக்கப்பட்டார்.

76. ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷா ஹி மமாதுலா
யதீத்ருஶைரஹம் விப்ரைருபஸ்தேயைருபஸ்தித:

(ராமாயணம் ஆரண்யகாண்டம் 10.9-ரிஷிகளிடம் ராமபிரான் சொன்னது) நானேவந்து அடையத்தக்க மஹாத்மாக்களான உங்களால் (நான்) அடையப்பெற்றமையால், எனக்குப் போதேற்படுகிற லஜ்ஜை மிக அதிகமாயுள்ளது, நீங்கள் என் அபராதத்தைப் பொறுக்கவேண்டும்.

77. அர்சிதாஶ்சைவ ஹ்ருஷ்டாஶ்ச பவதா ஸர்வதா வயம்
பத்ப்யாமபிகமாச்சைவ ஸ்நேஹஸந்தர்ஶநேந ச

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 50.40 குஹனிடம் ராமபிரான் சொன்னது) காலால் நடந்து எங்கள் முன்னே வருவதாலும், எங்க

னிடத்தில் நட்பு வெளிப்பட இருப்பதாலும், நாங்கள் உம்மாலே எல்லாவழியாலும் அர்ச்சிக்கப்பட்டவர்களாயும் சந்துஷ்டியுடையராயும் ஆனோம்.

78. த்வதங்க்ரிமுத்திஶ்ய கதாபி கேநசித் யதா ததா வாபி ஸ
க்ருத்க்ருதோஞ்ஜலி:| ததைவ முஷ்ணாத்யஶுபாந்யஶேஷத
ஶுபாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே

(ஸ்தோத்ரரத்நம்) தேவரீர் திருவடிகளை உத்தேசித்து எப்போதேனும் எந்தப்ரகாரத்தாலேனும் ஒருதரம் ஒருவனால் செய்யப்படுகிற அஞ்ஜலியானது அப்பொழுதே பாபங்களை வேரோடே போக்குகிறது, புண்ணியங்களை விருத்தி செய்கிறது, ஒருகாலும் (அந்த அஞ்சலி) வீணாகிறதில்லை.

79. கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்
ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்பதி

(பாரதம் உத்யோகபர்வம் 37,39 - ஸஞ்சயனிடத்தில் க்ருஷ்ணன் சொல்லியது) தூரத்தில் வசிக்கிற என்னைக் குறித்து கோவிந்தா என்று த்ரௌபதி அழுதது (வட்டிக்கு வட்டியாக) விருத்தியடைந்த கடன்போல என் ஹ்ருதயத்தைவிட்டு நீங்கவில்லை.

80. உவாச ச மஹாப்ராஜ்ஞஸ்ஸ்வரேண மஹதா மஹாந்
ஸுக்ரீவம் தாம்ஶ்ச ஸம்ப்ரேக்ஷ்ய ஸர்வாந் வாநரயூதபாந்

(ராமாயணம் யுத்தகாண்டம் 17.9) மஹாஞானமுடைய மஹாத்மாவான விபீஷணர் சுக்ரீவனையும் மற்றவானரத்தலைவர்களையும் நன்றாகப் பார்த்து பெரிய ஸ்வரத்தில் வார்த்தை சொன்னார்.

81. தஸ்மாத்யத் புருஷோ மநஸாபிகச்சதி| தத்வாசா வததி| யத்வாசா
வததி| தத்கர்மணா கரோதி||

(தைத்தரீயோபநிஷத்) ஆகையால் புருஷன் எதை மனதினால் அறிகிறானோ அதை வாக்கால் சொல்லுகிறான, எதை மனதால் தியானிக்கிறானோ அதை காயத்தினால் செய்கிறான்.

82. தத்யதேஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத
ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே

(சாந்தோக்யோபநிஷத் 5.24.3) ஆகையால், நெருப்பில் இடப்பட்ட த்ருணத்தின் பஞ்சு எப்படி கொளுத்தப்படுகின்றதோ, அப்படியே இந்த உபாஸகனுடைய ஸமஸ்தமான புண்யபாபங்களும் கொளுத்தப்படுகின்றன.

83. ஏகஸ்ஸ்வாது ந புஞ்ஜீத

ருசியுள்ள பண்டத்தை ஒருவனுகவே புஜிக்கக்கூடாது.

84. கதே புரோஹிதே ராம: ஸ்நாதோ நியதமாநஸ:
ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 6.1) (வசிஷ்டராகிய) புரோஹிதர் போனபின்பு, ராமபிரான் காயசுத்தியும் மனோநியதியும் உடையவராய் விசாலமான கண்களையுடைய பத்நியோடுகூட நாராயணனை (ஸ்ரீரங்கநாதனை ஸேவிக்க) அடைந்தார்.

85. நூநம் ஸ காலோ ம்ருகரூபதாரீ மாமல்பபாக்யாம் லுலுபே ததா
நீம் | யத்ரார்யபுத்ரம் விஸஸர்ஜ மூடா ராமாநுஜம் லக்ஷ்மண
பூர்வஜஞ்ச

(ராமாயணம் சுந்தரகாண்டம் 28.10 பிராட்டியின் வார்த்தை) எப்போது அறிவில்லாத நான் ராமாநுஜனுகிய லக்ஷ்மணனையும், லக்ஷ்மணபூர்வஜனுகிய ராமபிரானையும் விட்டேனே, அப்போதே மான் வேஷம்தரித்து, பிரசித்தமான யமன் அல்பபாக்யமுடைய என்னை வஞ்சித்தான், இது நிச்சயம்.

86. ததஸ்தம் சிக்ஷிபுஸ்ஸர்வே பாலம் தைதேயகிங்கரா:
பபாத ஸோப்யத: க்ஷிப்தோ ஹ்ருதயேநோத்வஹந் ஹரிம்

(விஷ்ணு புராணம் 1.19.12) (ஹிரண்யகசிபு உத்தரவளித்த) பிறகு அசுரகிங்கரர்கள் யாவரும், பாலனுன அந்த ப்ரஹ்லாதனைக் கீழே தள்ளினர்கள். அவன் அப்படி தள்ளப்பட்டவனுகி, ஹ்ருதயத்தில் ஹரியைப் பிடித்துக்கொண்டு விழுந்தான்.

87. ஹரிர்ஹரதி பாபாநி து₃ஷ்டசித்தைரபி ஸ்ம்ருத꞉
அநிச்ச₂யாऽபி ஸம்ஸ்ப்ருஷ்டோ த₃ஹத்யேவ ஹி பாவக꞉

(ஹரியஷ்டகம் 1) துஷ்டசித்தமுடையவர்கள் தன்னை ஸ்மரித்தாலும் அவர்கள் பாபங்களை ஹரிபோக்குகிறார்; எப்படியெனில் இச்சையில்லாமல் தன்னைத் தொட்டாலும் கொளுத்துகிற நெருப்பைப்போல (நாஸ்திகர் ஸ்மரித்தாலும் அவர்கள் நாஸ்திகபுத்தியின் காரணமாகிய பாபத்தைப் போக்குகிறார் என்றும் பொருள் கூறலாம்.)

88. யதா₃ ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்₃ருஸ்யேऽநாத்ம்யேऽநிருக்தேऽநிலயநேऽப₄யம் ப்ரதிஷ்டா₂ம் விந்த₃தே|
அத₂ ஸோऽப₄யம் க₃தோ ப₄வதி||

(தைத்தரியோபநிஷத் ஆநந்தவல்லி 7) கண்முதலியவற்றால் பற்றப்படாதவனும், சரீரமில்லாதவனும் அநிருக்தனும் அநாதாரனும் ஆகிய இந்தப் பரப்ரஹ்மவிஷயத்தில், எப்போது இந்த உபாஸகன் பயமின்மைக்காக இடைவிடாத ஸ்ம்ருதியை அடைகிறானோ, அதன் பிறகு அவன் பயமற்றவன் ஆகிறான்.

89. உத்₃கா₃யதீநாமரவிந்த₃லோசநம் வ்ரஜாங்க₃நாநாம் தி₃வமஸ்ப்ருஸ₃த்₃த்₄வநி꞉|
த₃த்₄நஸ்ச நிர்மந்த₂நஸ₂ப்₃த₃மிஸ்₂ரிதோ நிரஸ்யதே யேந தி₃ஸா₂மமங்க₃ளம்||

(பாகவதம் தசமஸ்கந்தம் 46.47) திசைகளின் அமங்களங்களைப் போக்கத்தக்கதாக, அரவிந்தலோசனனை (க்ருஷ்ணனை)க் குறித்து, உரக்கப்பாடுகிற கோபிகைகளின் சப்தமானது தயிர் கடைகிற மத்தோசையோடுகூடி ஆகாயத்தில் பரவிற்று.

90. தம் த்₃ருஷ்ட்வா ஸ₂த்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகா₂வஹம்
ப₃பூ₄வ ஹ்ருஷ்டா வைதே₃ஹீ ப₄ர்தாரம் பரிஷஸ்வஜே

(ராமாயணம் ஆரண்யகாண்டம் 30.39) சத்ருக்களை நாசம்செய்தவராய், மஹர்ஷிகளுக்கு சுகமளிப்பவராய், வீரன் என்று சிறப்புற்ற ராமபிரானை வைதேஹியான பிராட்டி பார்த்து ப்ரீதையானாள்; மேலும் தனது பர்த்தாவை நன்றாக ஆலிங்கனம் செய்துகொண்டாள்.

91. தேஷாம்ஸம்பாஷமாணாநாமந்யோந்யம்ஸவிபீஷண:
உத்தரம்தீரமாஸாத்ய கஸ்த ஏவ வ்யதிஷ்டத

(ராமாயணம் யுத்தகாண்டம் 17.6) திருவடி முதலிய அந்த வாநரத் தலைவர்கள் தமக்குள் அந்யோந்யமாகப் பேசும்போது, அந்த விபீஷணன் (சமுத்திரத்தின்) வடகரையை அடைந்து ஆகாயத்திலேயே இருந்தார்.

92. ஸர்வலக்ஷணஸம்பந்நா நாரீணாமுத்தமா வதூ:
ஸீதாப்யநுகதா ராமம் சசிநம் ரோஹிணீ யதா

(ராமாயணம் பாலகாண்டம் 1.27) ஸாமுத்ரிகாலக்ஷணங்கள் முழுமையுமுள்ளவளாயும், ஸ்த்ரீகளுக்குள் உத்தமவதூவாயுமுள்ள ஸீதையும், ரோஹிணீநக்ஷத்ரம் சந்த்ரனைப் பின்தொடருவதுபோல் ராமபிரானைப் பின்தொடர்ந்து சென்றாள்.

93. ஸக்ய: பச்யத க்ருஷ்ணஸ்ய முகமத்யருணேக்ஷணம்
கஜயுத்தக்ருதாயாஸஸ்வேதாம்புகணிகாசிதம்

(விஷ்ணு புராணம் 5.20.54) ஸகிகளே, (குவலயாபீடமான) யானையோடு சண்டை செய்த சிரமத்தாலுண்டான வேர்வைத்துளிகளையும் மிகச் சிவந்த கண்களையுமுடைய க்ருஷ்ணனுடைய திருமுகத்தைப் பாரீர்.

94. ஸோஹம் தே தேவதேவேச நார்ச்சநாதௌ ஸ்துதௌ நச
ஸாமர்த்யவாந் க்ருபாமாத்ரமநோவ்ருத்தி: ப்ரஸீத மே

(விஷ்ணுபுராணம் 5.7.70 க்ருஷ்ணனைக் காளியன் ஸ்தோத்ரம் செய்தது) தேவதேவேசனே, ஸ்ரீதேவரீரை அர்ச்சிப்பது முதலியவற்றில் நான் ஸாமர்த்யவானல்லன், ஸ்தோத்ரம்செய்வதிலும் ஸமர்த்தனல்லன், க்ருபைமாத்ரமாகிய மனோவ்ருத்தியால் என்னை அநுக்ரஹிக்கவேண்டும்.

95. நகரஸ்த்ரீகலாலாபமதுரம் ச்ரோத்ரேண பாஸ்யதி
மதுராம் ப்ராப்ய கோவிந்த: கதம் கோகுலமேஷ்யதி

(விஷ்ணு புராணம் 5.18.14) கோவிந்தன் மதுராநகரத்தை அடைந்து, அந்நகர ஸ்த்ரீகளுடைய ஸரஸமான இனியமொழிகளா

இற தேனைக் காதினால் பானம் செய்யப்போகிறான், (ஆகையால் அவன்) கோகுலத்திற்கு எப்படி வருவான்?

96. த்வயாநாதவதீநாதஹ்யநாதேவத்ருச்யதே
ஆந்ருசம்ஸ்யம்பரோதர்மஸ்த்வத்தஏவமயாச்ருத:

(ராமாயணம் சுந்தரகாண்டம் 38.41 பிராட்டி கூறியது) நாதனே, நாயகனாகத் தேவரீரைப்பெற பாக்கியம்செய்த அடியேன் அநாதை போல் காணப்படுகிறேனன்றோ? இரக்கம், மேலான தர்மம் என்று, உங்களிடம் என்னால் கேட்கப்பட்டதல்லவோ?

97. சரைஸ்துஸங்குலாம்க்ருத்வாலங்காம்பரபலார்தந:
மாம்நயேத்யதிகாகுத்ஸ்தஸ்தத்தஸ்யஸத்ருசம்பவேத்

(ராமாயணம் சுந்தரகாண்டம் 39.300 பிராட்டி திருவடியிடம் சொல்லியது) ககுத்ஸ்தகுலத்தவராகிய ராமபிரான் எதிரிகள் சேனையை அழித்து, பாணங்களால் லங்கையை வியாகுலப்படுத்தி என்னை அழைத்துக்கொண்டு போவாரேல் அது அவருக்குத்தக்கதாகும்.

98. யதோவாசோநிவர்த்தந்தே| அப்ராப்யமநஸாஸஹ| ஆநந்தம்
ப்ரஹ்மணோவித்வாந்| நபிபேதிகுதச்சந||

(தைத்திரீயோபநிஷத் ஆநந்தவல்லி 7) எந்த ப்ரஹ்மத்திலிருந்து வாக்குகள் மனதோடுகூட அடையமுடியாமல் திரும்புகின்றனவோ அந்த ப்ரஹ்மத்தின் ஆநந்தத்தை அறிந்தவன் எந்தப் பொருளிடத்திலும் பயப்படுகிறதில்லை.

99. ஏஷஹ்யேவாநந்தயாதி

(தைத்திரீயோபநிஷத் ஆநந்தவல்லி 7.1) இந்த (பரமாத்மாவே) ஸந்தோஷப்படுத்துகிறான்.

100. ஸர்வேவேதாஸ்ஸர்வவேத்யாஸ்ஸசாஸ்த்ராஸ்ஸர்வேயஜ்
ஞாஸ்ஸர்வஇஜ்யாசக்ருஷ்ண:| விதுக்ருஷ்ணம்ப்ராஹ்
மணாஸ்தத்வதோயேதேஷாம்ராஜந்ஸர்வயஜ்ஞாஸ்ஸமாப்தா:

(மஹாபாரதம்) எல்லா வேதங்களும், சாஸ்த்ரங்களோடுகூடி அறியத்தக்க எல்லாப் பொருள்களும், எல்லா யாகங்களும், யாகத்தில்

ஆராதிக்கப்பெறும் எல்லா தேவதைகளும் க்ருஷ்ணனே; எந்த ப்ராஹ்மணர்கள் உள்ளவாறே க்ருஷ்ணனை அறிகிறார்களோ அவர்கட்கு எல்லாயஜ்ஞங்களும் ஸமாப்தமாகின்றன.

101. யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்கோ நிரயோ யஸ்த்வயா விநா
இதி ஜாநந் பராம் ப்ரீதிம் கச்ச ராம மயா ஸஹ

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 30.18 ராமபிரானிடம் பிராட்டி சொன்னது) ராமபிரானே, தேவரீருடன் வாசம் என்பது யாதொன்றுண்டோ அஃதே எனக்கு ஸ்வர்க்கம், பிரிவே நரகம் என்று, விரஹத்தை ஸஹியாத எனது ப்ரீதியை முன்னமேயறிந்திருக்கிற தேவரீர் வனவாசத்துக்கு என்னோடும் எழுந்தருளவேண்டும்.

102. ஏவமுக்தா ஸமுத்தாய ஸீதா ஸசிநிபாநநா
ப்ரஹர்ஷேணாவருத்தா ஸா வ்யாஜஹார ந கிஞ்சந

(ராமாயணம் யுத்தகாண்டம் 116-15) கீழ்ச்சொல்லியபடி, (திருவடியால் வார்த்தை) சொல்லப்பட்டவளாய், சந்திரன்போன்ற முகத்தையுடையவளாய அந்தப் பிராட்டி, எழுந்திருந்து மிக்க ஆநந்தத்தினால் அவருத்தையாய் ஒன்றும் பேசவில்லை.

103. மதுரா மதுராலாபா கிமாஹ மம பாமிநீ
மத்விஹீநா வராரோஹா ஹநுமந் கத்யஸ்வ மே

(ராமாயணம் சுந்தரகாண்டம் 66.15 திருவடியைநோக்கி ராமபிரான் கூறியது) ஹநுமனே! அழகும் மதுரச் சொல்லும் உடையளாயும் உத்தமஸ்த்ரீயாயும் என்னைப்பிரிந்தவளாயும் எனக்கிஷ்டமுள்ளவளாயும் இருக்கிற ஸீதை என்ன சொன்னாள் என்பதை எனக்கு ஸங்கோசப்படாது சொல்லவேண்டும்.

104. யே ச வேதவிதோ விப்ரா யே சாத்யாத்மவிதோ ஜநா:
தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்

(பாரதம் ஆரண்யபர்வம் 88.26) எந்த விப்ரர்கள் வேதப்பொருளையறிந்துளரோ, எவர் ஆத்மஞானமுடையரோ, அவர்கள் மஹாத்மாவான க்ருஷ்ணனை ஸநாதநதர்மம் எனச் சொல்லுகிறார்கள். (ஸநாதநதர்மம் = ஸித்தோபாயம்)

105. ஸ்வேராவயர்மஜ்ஞரிபூணுமபிவத்ஸல
அஹ்நுஜ்ஞாதுமிச்ஹாமி ஹமிஷ்யாமியதாஹதம்

(ராமாயணம் யுத்தகாண்டம் 50.59) ராமபிரானிடம் பெரிய திருவடி கூறியது. நண்பரே, ராகவனே, தர்மத்தை யறிந்தவரே, ஸத்ருக்கள் விஷயத்திலும் வாத்ஸல்யமுடையவரே, அநுஜ்ஞை பெற்றுக்கொள்ள விரும்புகிறேன், வந்தபடியே போகிறேன்.

106. ஸாப்ரஸ்வெலந்தீமதவிஹ்வலாக்ஷீப்ரலம்வகாஞ்சீஹுணா
ஹேமஸூத்ரா|ஸலக்ஷணலக்ஷ்மணஸந்நிதாநம்ஜ ஹாமதா
ராநமிதாங்ஹயஷ்டி:||

(ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் 33.37) அதிஸௌந்தர்யமும், ஆயாஸத்தால் தளர்ந்த கால்நடையும், மதுபானத்தால் மதம் செருகிய கண்களும், தொங்குகிற அரைநூல் மாலையும் பொன்சரடும், போக சின்னங்களும் உடையதாரையானவள் வளைந்த கொம்பு போன்ற சரீரத்தோடு லக்ஷ்மணன் சந்நிதியை அடைந்தாள்.

107. அஹம்புநர்தேவகுமாரரூபமலங்க்ருதம்தம்ஸுதமாவ்ராஜந்தம்
நந்தாமிபஶ்யந்நபிதர்ஶநேநஹவாமிதுஷ்ட்வாசபுநர்யுவேவ

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 12.105) நானோ என்றால், தேவகுமாரரூபமும், அலங்காரமும், பிள்ளைத்தன்மையும், கம்பீர நடையழகுமுடைய அந்த ராமனை நெஞ்சினால் நினைத்தாலும் ஆநந்திக்கிறேன்; கண்களாலே பார்த்தாலோ யௌவனம் ப்ரகாசிக்கும் சரீரம் உடைய...

108. ராஜாதஶரயோநாம ரயகுஞ்ஜரவாஜிமாந்
புண்யஶீலோமஹாகீர்திர்ருஜுராஸீந்மஹாயஶா:

(ராமாயணம் சுந்தரகாண்டம் 31.2) திருவடிபிராட்டியிடம் கூறியது. தேர்களையும் யானைகளையும் குதிரைகளையும் அதிகமாக உடையவரும், புண்யசீலரும், பெருங்கீர்த்திமானும், ஸமபுத்தியுடையவரும், அதிகயசஸ்ஸுடையவரும் ஆகிய தசரதர் எனும் பெயருடைய ராஜா இருந்தார்.

109. யஜுர்வேதவிநீதஶ்ச வேதவித்பிஸ்ஸுபூஜித:
அதிஷ்யாதாரபாராஹர்தாசஸேநாநயவிஶாரத:

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 1.29) தநுர்வேதநுட்பங்களை யறிந்தவர்களுக்குள் ராமபிரான் சிரேஷ்டர், அதிரதவீரர்களால் போற்றத்தக்கவர், சத்ருவைக் குறித்துத்தானே சென்றுபோருமவர் சேனைகளை (பத்மவ்யூஹம் சக்ரவ்யூஹம் முதலிய வகைகளில்) வியூகம் செய்வதில் மிக்க திறமையுடையவர்.

110. அபிசேத்ஸுதுராசாரோ பஜதேமாமநந்யபாக்
ஸாதுரேவஸமந்தவ்யஸ்ஸம்யக் வ்யவஸிதோ ஹிஸ:

(கீதை 9.30-க்ருஷ்ணன் அருளியது) துராசாரமுடையனுயினும் என்னை பஜிப்பதையே முக்கிய பிரயோஜனமாகக்கொண்டு,என்னை யடைவானுயின், அவன் நல்லவ்யவஸாயரூபமான ஞானத்தை யடைகிறுன், சாதுவாகவே எண்ணற்குரியன்.

111. ஜநகாநாம்குலேகீர்திமாஹரிஷ்யதிமேஸுதா
ஸீதாபர்தாரமாஸாத்ய ராமம்தஶரதாத்மஜம்

(ராமாயணம் பாலகாண்டம் 67.21) ஜநகராஜன் விச்வாமித்ரரிடம் சொன்னது. எனது பெண் ஸீதை, தசராத்மஜரான ராமனைப்பர்த்தாவாக அடைந்து ஜநகவம்சத்திற்கே கீர்த்தியை உண்டாக்கப் போகிறுள்.

112. இந்த ப்ரமாணம் மஹாபாரதம் உத்யோக பர்வத்திலுள்ளது-த்ரௌபதியின் அல்குல் வர்ணனை-தக்க பெரியோர்களிடம் இதன் பொருளைக் கேட்டறிக.

113. ஶோபயந்தண்டகாரண்யம்தீப்தேநஸ்வேநதேஜஸா
அத்ருஶ்யததோராமோபாலசந்த்ர இவோதித:

(ராமாயணம் ஆரண்யகாண்டம் 38.15) பின்பு, ராமபிரான் ப்ரகாசிக்கிற தனது தேஜசால் தண்டகாரண்யத்தை சோபிப்பிக்குமவராய் வளரிளம் பிறைபோலக் காணப்பெற்றார்.

114. நதேவலோகாக்ரமணம்நாமரத்வமஹம்வ்ரணே
ஐஸ்வர்யம்வாபிலோகாநாம்காமயேநத்வயாவிநா

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 31.5–ராமபிரானிடம் லக்ஷ்மணன் சொன்னது) தேவரீருடைய கைங்கர்யத்தையொழிய தேவலோக ப்ராப்தியை (பரமபதத்தை) அடியேன் விரும்பவில்லை, அமரத்வத்தை (கைவல்யத்தை) விரும்பவில்லை, மூவுலக ஐச்வர்யத்தையும் விரும்பவில்லை.

115. ராவணஸ்யாநுஜோப்ராதாவிபீஷணஇதிச்ருத:
சதுர்பிஸ்ஸஹரக்ஷோபிர்பவந்தம்சரணம்கத:

(ராமாயணம் யுத்தகாண்டம் 17.17-ராமபிரானிடம் சுக்ரீவன் விபீஷணன் வரவு கூறியது) ராவணன் தம்பியென்று பிரசித்திபெற்ற விபீஷணர் நான்கு துணைவரோடு கருணைமிக்க தேவரீரைச் சரணம் புகுந்தார்.

116. ததோராமோமஹாதேஜா:ராவணேநக்ருதவ்ரணம்
த்ருஷ்ட்வாப்லவகசார்தூலம்கோபஸ்யவசமேயிவாந்

(ராமாயணம் யுத்தகாண்டம் 59.136) (திருவடிமேல் ராவணன் அம்புபோட்ட) பிறகு, மஹாதேஜஸ்ஸோருள்ள ராமபிரான், ராவணனால் ஏற்பட்ட காயத்தையுடைய திருவடியாகிய வானரத் தலைவனை பார்த்து கோபப் பரவசராயினர்.

117. த்விஷதந்நம்நபோக்தவ்யம்த்விஷந்தம்நைவபோஜயேத்
பாண்டவாந்த்விஷஸேராஜந்மமப்ராணாஹிபாண்டவா:

(மஹாபாரதம் உத்யோகபர்வம் 74.27–துர்யோதனனிடம் க்ருஷ்ணன் சொன்னது) சத்ருவின் அன்னம் உண்ணற்குரியதல்ல, சத்ருவிற்கும் உணவு தரக்கூடாது, துர்யோதனனே! பாண்டவர்களை, நீ, த்வேஷிக்கிறாய், பாண்டவர்கள் எனக்குப் பிராணன் போன்றவர்களன்றோ ?

118. யத்யதர்மோநபலவாந்ஸ்யாதயம்ராக்ஷஸேச்வர:
ஸ்யாதயம்ஸுரலோகஸ்யஸஸக்ரஸ்யாபிரக்ஷிதா

(ராமாயணம் சுந்தரகாண்டம் 49.18 ராவணனைப்பார்த்து திருவடி எண்ணியது) இந்த ராவணனாற் செய்யப்பட்ட அதர்மமானது

பலிக்காமற்போனால், இந்த ராக்ஷஸத் தலைவன் இந்த்ரனோடு கூடிய ஸ்வர்க்கலோகத்துக்கும் ரக்ஷகனாய் விடுவான்.

119. இத்யேவமார்தஸ்ய ரகுப்ரவீர: ச்ருத்வா வசோ வால்
யநுஜஸ்ய தஸ்ய| ஸஞ்ஜாதபாஷ்ப: பரவீரஹந்தா ராமோ
முஹூர்த்தம் விமநா பபூவ||

(ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் 24.24) ரகுகுலத்துப் பெருவீரராய், சத்ருவீரர்களை அழிப்பவராகிய ராமபிரான், (வாலிவதத்தின் பிறகு) இம்மாதிரி நலிந்திருக்கிற (வாலியின் தம்பியான) சுக்ரீவன் வார்த்தைகேட்டுக் கண்ணீர் உகுத்து ஒரு முகூர்த்தநேரம் மனதில் தளர்ச்சியுற்றார்.

120. இதஉபரி ம்ருதஸஞ்ஜீவநம் ராமவ்ருத்தாந்தம்

(ஸஹஸ்ரநாமபாஷ்யம் 391ம் திருநாம ஆரம்பம்) இறந்தோர்கட்கு உயிர் கொடுக்கத்தக்க சஞ்சீவியாகிய ராமவிருத்தாந்தத்தை, இந்தத் திருநாமமுதல் ஆரம்பிக்கிறோம்.

121. அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தமஸ்வீக்ருதப்ரணீதமணிபாது
கம்கிமிதிசாகுலாந்த:புரம்| அவாஹநபரிஷ்க்ரியம்பதகராஜ|
மாரோஹத: கரிப்ரவரப்ரும்ஹிதே பகவதஸ்த்வராயைநம:

(ஸ்ரீரங்கராஜ ஸ்தவம்—உத்தரசதகம் 57 கஜேந்த்ரன் மெல்லிய குரலைக் கேட்டபோது, விஷ்வக்ஸேனர் கொடுக்கும் கைலாகினை வேண்டாமலும், அழுக்கின்றி சுத்திசெய்யப்பெற்ற ரத்நமய பாதுகைகளைத் தரிக்காமலும், "ஈதென்ன"! என்று பெரியபிராட்டியார் முதலான அந்தப்புரப் பெண்கள் ஆகுலமெய்தவும் வாஹந ஆரோஹண காலத்திற்குத் தக்க அலங்காரம் அற்ற பக்ஷிராஜன் மேலேறுகிற பகவானுடைய த்வரையின் பொருட்டு நமஸ்காரம்.

122. யதா த்ருப்தஸ்ச மாதங்க: சசஸ்ச ஸஹிதோ வநே
ததா த்விரதவத்ராமஸ்த்வம் நீச சசவத்ஸ்ம்ருத:

(ராமாயணம் சுந்தரகாண்டம் 22.16-ராவணனைப்பார்த்து பிராட்டி சொன்னது) வனத்தில் மதத்தோடுள்ள யானையும் முயலும்

சண்டைசெய்ய விரும்பி எப்படி சேர்ந்துவருமோ, அப்படியே ராம பிரான் யானையைப்போலும் நீ அல்ப முயலைப்போலும் எண்ணப் படுகிறீர்கள்.

123. விபீஷணஸ்துதர்மாத்மாநதுராக்ஷஸசேஷ்டித:

(ராமாயணம் ஆரண்யகாண்டம் 17.24 ராமபிரானிடம் சூர்ப்ப ணகை சொன்னது) ராக்ஷஸகுலத்தினராயினும் ராக்ஷஸசேஷ்டித மில்லாத தர்மாத்மாவான விபீஷணரும் (என்னுடன் பிறந்தவரே)

124. ஶத்ரோ:ப்ரக்யாதவீர்யஸ்யரஞ்ஜநீயஸ்யவிக்ரமை:
பஶ்யதோயுத்தலுப்தோஹம்க்ருத:காபுருஷஸ்த்வயா

(ராமாயணம் யுத்தகாண்டம்106.6ராவணனன் ஸாரதிக்குச் சொன் னது) ப்ரக்யாதியான வீர்யமுடையவனும், பராக்ரமங்களைக் காணும் அனைவராலும் கொண்டாடத்தக்கவனுமான சத்ருவான, ராமன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, சண்டையில் ஆசை யுடைய நான் எல்லோராலும் நிந்தித்தற்குரியனாக உன்னால் ஆக்கப் பட்டேன்.

125. யோந்யதாஸந்தமாத்மாநமந்யதாப்ரதிபத்யதே
கிம்தேநநக்ருதம்பாபம்சோரேணாத்மாபஹாரிணா

(பாரதம் ஆதிபர்வம் 74.27)பரமாத்மாவிற்கு சேஷபூதனான ஜீவாத் மாவை, எவன் ஒருவன் ஸ்வதந்த்ரமாக நினைக்கிறானோ, ஆத்மா பஹாரமான, பெரிய திருட்டைச் செய்கிற அந்த கள்ளனாலே என்ன பாபம்தான் செய்யப்படவில்லை.

126. அதாதஸ்ஸாமயாசாரிகாந்தர்மாந்வ்யாக்யாஸ்யாமோ
தர்மஜ்ஞஸமய:ப்ரமாணம்வேதாஶ்ச

(ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரம்) பிறகு, அவ்வச்சமயாசாரவித்தமான தர்மங்களைச் சொல்லப்போகிறோம் - தர்மங்களை உள்ளபடியறிந்த பெரியோர்களுடைய ஆசாரம் (அனுஷ்டானத்துக்கு முக்ய) ப்ர மாணம. (இவர்கள் திருவுள்ளத்தை அநுசரித்த) வேதங்களும் பிர மாணம்.

127. நாந்ருக்வேத³விநீதஸ்ய நாயஜுர்வேத³தா⁴ரிண:
நாஸாமவேத³விது³ஷ: ஶக்யமேவம் ப்ரபா⁴ஷிதும்

(ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் 3.28—லக்ஷ்மணனைப் பார்த்து ராமபிரான் திருவடி விஷயமாகச் சொன்னது) ரிக்வேதத்தில் சிக்ஷையில்லாதவனுக்கும் யஜுர்வேதத்தில் தாரணையிலாதவனுக்கும், ஸாமவேதத்தை உள்ளவாறு அறியாதவனுக்கும் இப்படி வார்த்தை சொல்வது சாத்தியமல்ல.

128. நூநம் வ்யாகரணம் க்ருத்ஸ்நமநேந ப³ஹுதா⁴ ஶ்ருதம்
ப³ஹு வ்யாஹரதாநேந ந கிஞ்சித³பஶப்³தி³தம்

(ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் 3.29—லக்ஷ்மணனைப் பார்த்து ராமபிரான் திருவடி விஷயமாகச் சொன்னது) இந்த ஹநுமானால் பலவ்யாகரணங்கள் பலதடவை (ஆசார்யனிடத்தில்) அத்யயனம் செய்யப்பட்டன, இது நிச்சயம், ஆகையால் அநேக விஷயங்களைச் சொல்லுகிற இவ்வநுமானால் ஒரு சிறிதும் அபசப்தம் சொல்லப்படவில்லை.

129. கைங்கர்யநித்யநிரதைர் ப⁴வதே³கபோ⁴கை³ர் நித்யைரநுக்ஷண நவீநரஸார்த்³ர பா⁴வை:| நித்யாபி⁴வாஞ்சி²த பரஸ்பர நீசபா⁴வைர் மத்³தை³வதை: பரிஜநைஸ்தவ ஸங்க³ஸீய||

(வைகுண்டஸ்தவம் 75) தேவரீரிடம் நித்ய கைங்கர்யம் செய்பவர்களாயும், எப்போதும் அதிசயத்தை விளைவிப்பதையே புருஷார்த்தமாகக் கருதுபவர்களாயும், நித்யர்களாயும், க்ஷணந்தோறும் ஏற்படும் நவீன ரஸாநுபவமுடையவர்களாயும், எப்போதும் அந்யோந்ய சேஷத்வத்தை விரும்புபவர்களாயும், என்னால் பூஜிக்கத்தக்கவர்களாயுமுள்ள, தேவரீருடைய பரிஜனங்களாகிய சேனைமுதலியார் தொடக்கமானவர்களோடு சேர்ந்தவனாகக் கடவேன்.

130. நமந்த²ராயா நது மாதுரஸ்யா தோ³ஷோ ந ராஜ்ஞோ ந ச ராக⁴வஸ்ய| மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத்³ வநப்ரவேஶே ரகு⁴நந்த³நஸ்ய||

(ராமாயணம்) ராமபிரான் காட்டுக்குச்சென்ற விஷயத்தில், (கூனியாகிய) மந்தரையினுடைய கலகதோஷம், இளையதாயான கைகேயி

யின் தோஷம், தசரதசக்ரவர்த்தியின் தோஷம், ராமபிரான் சம்மதித்த தோஷம் ஆகிய இந்த தோஷங்களெல்லாம் காரணங்களல்ல, எனது பாபமே அதற்குக் காரணமாயிற்று.

131. பூமௌ ஸ்திதஸ்ய ராமஸ்ய ரதஸ்தஸ்ய ச ரக்ஷஸ:
நஸமம் யுத்தமித்யாஹுர் தேவகந்தர்வதாநவா:

(ராமாயணம் யுத்தகாண்டம் 103.6) பூமியில் நிற்கிற ராமபிரானுக்கும் ரதத்தின்மேலுள்ள ராவணனுக்கும் யுத்தம் ஸமமல்லவென தேவர்கள் கந்தர்வர்கள் தானவர்கள் சொன்னார்கள்.

132. பாபிஷ்ட: க்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்ச புண்யக்ருத்
ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவான் பவேத்

பாபிஷ்டனான க்ஷத்ரபந்து என்பவனும், புண்யம் செய்த புண்டரீகன் என்பவனும் ஆசார்யஸம்பந்தத்தால் முக்திபெற்றார்கள்; ஆகையால் ஆசார்ய சம்பந்தமுடையனாகவேண்டும்.

133. நிவாஸஶய்யாஸநபாதுகாம்ஶுகோபதாநவர்ஷாதபவா
ரணாதிபி:| ஶரீரபேதைஸ்தவ ஶேஷதாம் கதைர்யதோசி
தம் ஶேஷ இதீரிதே ஜநை:||

(ஸ்தோத்ரரத்நம்—40) தேவரீர் திருவுள்ளத்தின்படி ஶேஷத்தன்மை எய்தி வாஸஸ்தானம், சயனம், ஆசனம், பாதுகை, ஆடை, தலையணை, குடை இவை முதலான சரீர பேதங்களோடிருக்கையால், பெரியோர் ஆதிசேஷன் என்று சொல்லுகிற (திருவநந்தாழ்வானில் எம்பெருமான் எழுந்தருளி இருக்கிறார்)

134. ஸ யஸ்ய நாமாபஹாரிணி ஸ்திதே மநஸ்யநந்தே மம குத்ர தி
ஷ்டதி| யஸ்மிந் ஸ்ம்ருதே ஜந்மஜராந்தகாதிபயாநி ஸர்வாண்ய
பயாந்தி தாத||

(விஷ்ணுபுராணம் 1.17.36 ப்ராஹ்லாதன் ஹிரண்ய கசிபுவிடம் சொன்னது) தந்தையே! எவரை நினைக்குமளவில் பிறப்பு மூப்பு இறப்பு முதலியவற்றால் வரும் பயங்களெல்லாம்போகின்றனவோ, பயங்களை அபஹரிப்பவரும் அளவுகடந்தவருமாகிய அத்தகைய

நாராயணன் ஹ்ருதயத்தில் ஸ்திரமாயிருக்கும்போது எனக்குப் பய மென்பது எங்குளது ?

135. நியதாத்மா மஹாவீர்யோ த்யுதிமாந் த்ருதிமாந் வஶீ
புத்திமாந் நீதிமாந் வாக்மீ ஸ்ரீமாந் ஶத்ருநிபர்ஹண:

(ராமாயணம்-பாலகாண்டம் 1.9) ராமபிரான் விகாரமற்றவனும் மஹாவீர்யமுடையவனும், ஞானஸ்வரூபியாயும், ஆநந்தஸ்வரூபியாயும், ஸர்வஸ்வாமியாயும், புத்திமானும், நீதிமானும், வேதங்களை உபகரித்தவனும், உபயவிபூதி ஐச்வர்யவானும் சத்ருக்களை அழிப்பவனும் பிரஸித்திபெற்றவன்.

136. த்யௌ: பதேத் ப்ருதிவீ ஶீர்யேத் ஹிமவாந் ஶகலீபவேத் |
ஶுஷ்யேத் தோயநிதி: க்ருஷ்ணே ந மே மோகம் வசோ பவேத் ||

(பாரதம்—த்ரௌபதியிடம் கண்ணன் அருளிச்சொன்னது) சுவர்க்கம் விழுந்தாலும் விழும், பூமி சிதறியும் போகும், இமயமலை நொறுங்கியும் போகலாம், கடல் வற்றிப்போகலாம், ஆனால் த்ரௌபதியே ! எனது சொல் வீணாகமாட்டாது.

137. வாயஸேந ததஸ்தேந பலவத் க்லிஶ்யமாநயா
ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:

(ராமாயணம் சுந்தரகாண்டம் 38.24 பிராட்டி திருவடியிடம் சொன்னது) அந்தக் காகாஸுரனால் பலாத்காரமாக உபத்ரவிக்கப்பட்ட என்னாலே, சுகமாக நித்ரை செய்கிறவரும், சத்ருக்கள் நடுங்கும்படிச் செய்பவரும், ஸ்ரீமானுமாகிய அந்த ராமபிரான், பிறகு எழுப்பப் பெற்றார்.

138. வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவை: ஸஹ
ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ராதா ஹ்யேஷ விபீஷண:

(ராமாயணம் யுத்தகாண்டம் 17.27 ராமபிரானிடம் சுக்ரீவன் சொன்னது) இந்த விபீஷணன், எக்காரணத்தால் (இரக்கமற்ற) ராவணனுக்கு சகோதரன் ஆனானோ, அக்காரணத்தால் இவன் மந்திரிகளோடுகூட தீவிரமான தண்டனையால் வதைக்கத்தக்கவன்.

139. தஸ்மாத்க்ஷிப்ரம்ஸஹாஸ்மாபிஸ்துல்யோ பவது ராகவ
விபீஷணோ மஹாப்ராஜ்ஞஸ்ஸகித்வம் சாப்யுபைது ந:

(ராமாயணம் யுத்தகாண்டம் 18.38 சுக்ரீவன் ராமபிரானிடம் சொன்னது) ஆகையால் ராகவனே! மஹாப்ராஜ்ஞனாகிய விபீஷணன் அதிசீக்கிரமாக நம்மோடு சமானராகட்டும், நமது நேயத்தையும் அடையட்டும்.

140. தாஸாமாவிரபூச்சௌரிஸ்ஸ்மயமாநமுகாம்புஜ:
பீதாம்பரதரஸ்ஸ்ரக்வீ ஸாக்ஷாந்மந்மதமந்மத:

(பாகவதம் 10.31.2) அதிக துக்கமுடையரான கோபிகைகள் நடுவில், க்ருஷ்ணன் புன்முறுவலோடுகூடின தாமரை மலர்போன்ற முகத்தை யுடையனாய், பீதாம்பரம் அணிந்தவனாய், மாலை யணிந்தவனாய், மன்மதனுக்கும் மன்மதனாகிற பேரழகுடையனாய் ஸாக்ஷாத்காரமாய்த் தோன்றினான்.

141. அநித்ரஸ்ஸததம் ராமஸ்ஸுப்தோபி ச நரோத்தம:
ஸீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே

(ராமாயணம் சுந்தரகாண்டம் 36.44 பிராட்டியை நோக்கித் திருவடி சொன்னது) உத்தமபுருஷனும் எப்போதும் நித்திரையற்றவருமாகிய ராமபிரான், ஒருக்கால் தூங்க நேரிட்டாலும், ஸீதா எனும் மதுரமொழி சொல்லிக்கொண்டே விழித்துக்கொள்வார்.

142. ஸந்தேசைஸ்ஸாமமதுரை: ப்ரேமகர்பைரகர்விதை:
ராமேணாச்வாஸிதா கோப்யோ ஹரிணா ஹ்ருதசேதஸ:

(விஷ்ணுபுராணம் 5.24.20) க்ருஷ்ணனால் வசீகரிக்கப்பெற்ற மனமுடைய கோபிகைகள் மதுரமொழியாயும், ப்ரேமத்தை உள்ளடக்கியதாயும், கர்வம் அற்றதாயும், உள்ள க்ருஷ்ண சமாசாரங்களினால், பலராமனால் தேற்றப்பட்டார்கள்.

143. சௌர்யம் தேஜோ த்ருதிர்தாக்ஷ்யம் யுத்தே சாப்யபலாயநம்
தாநமீச்வரபாவச்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்

(கீதை 18.43 அர்ச்சுனற்குக் கண்ணன் கூறியது) சௌர்யம், தேஜஸ், எடுத்த கார்யத்தை முடிக்கிற சக்தி, கார்யமுடிவில் சாமர்த்

யம், சண்டையில் முதுகுகாட்டாமை, தானம், யஜமானத்வம் எனு மிவை, ஸ்வபாவமாக ஏற்பட்ட க்ஷத்ரிய வியாபாரங்கள்.

144. ஸ்நுஷா தஶரதஸ்யாஹம் ஶத்ருஸைந்யப்ரதாபிந:।
துஹிதா ஜநகஸ்யாஹம் வைதேஹஸ்ய மஹாத்மந:
ஸீதேதி நாம நாம்நாஹம் பார்யா ராமஸ்ய தீமத:॥

(ராமாயணம் சுந்தரகாண்டம் 33 16 திருவடியிடம் பிராட்டி கூறியது) சத்ருக்களின் சேனைகளை ஹிம்ஸிக்கும் தசரதசக்ரவர்த்தியின் மருமகள் நான், மஹிமையுள்ள விதேஹதேச மன்னனாகிய ஜநகருடைய பெண், ஸீதையெனும் பெயருடையேன், புத்திமானான ராமபிரானுடைய மனைவி.

145. ஸர்வகர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ: ஸர்வமிதம் அப்யாத்தோ(அ)வாக்யநாதர:

(சாந்தோக்யோபநிஷத் 3.14.2) (பரமாத்மாவானவன்) எல்லா கிரியைகளையும் போகப் பொருள்களையும் கந்தங்களையும் ரஸங்களையும் கல்யாண குணங்களையும் ஸ்வீகரித்தவன், வார்த்தை சொல்லாதவன், பூர்ணனாகையாலே உதாசீனன்.

146. ய ஏஷ ஸம்ப்ரஸாதோ(அ)ஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம்ஜ்
யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே| ஸ உத்த
ம: புருஷ: ஸ தத்ர பர்யேதி| ஜக்ஷத்க்ரீடந்ரமமாண: ஸ்த்ரீபிர்
வா யாநைர்வா ஜ்ஞாதிபிர்வா நோபஜநம் ஸ்மரந்நிதம் ஶரீரம்॥

(சாந்தோக்யோபநிஷத் 8.12.3) எந்த ஜீவாத்மா இந்த சரீரத்தை விட்டுப் பரமாத்மாவைக்கூடி (ஸ்வரூபாவிர்ப்பாவத்தைப் பெறுகிறானோ) அவன் உத்தமபுருஷன், அங்கு சிரித்தும் விளையாடியும் ஸ்திரீகள் வாகனங்கள் ஞாதிகளோடு ஸந்தோஷித்து பந்துஜனங்களருகே (இறந்த இச்சரீரத்தை நினையாமல்) நான்கு பக்கமும் ஸஞ்சரிக்கிறான்.

147. அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ

(நீளாஸூக்தம்) விஷ்ணுபத்னி (பெரியபிராட்டியார்) இந்த லோகத்தவரை ஆளத்தக்கவள்.

148. *ததஸ்ஸாஹ்ரீமதீபாலாஹர்துர்விஜயஹர்ஷிதா*
அவோசத்யதிதத்தத்யம்ஹவேயம்ஶரணம்ஹிவ:

ராமாயணம் சுந்தரகாண்டம் 58.89-பிராட்டி த்ரிஜடைக்குச் சொன்னது. (த்ரிஜடைதான் கண்ட ஸ்வப்னத்தைச் சொன்ன) பிறகு, மடந்தைப்ராயமுள்ள அந்தப் பிராட்டி லஜ்ஜையோடும் (ஸ்வப்னம் காட்டிய) ஜயத்தால் விளைந்த சந்தோஷத்தையுடையவளாய்க் கொண்டு அந்த ஸ்வப்னம் உண்மையாகிவிட்டால் "உங்களுக்கு நான் புருஷகாரமாவேன்" என்றாள்.

149. *தயாஸராஜர்ஷிஸுதோZபிராமயாஸமேயிவானுத்தமராஜ*
சந்யயா | அதீவராமஶ்ஶுஶுபேZதிகாம்யயாவிபுஶ்ஶ்ரி
யாவிஷ்ணுரிவாமரேஶ்வர: ||

(ராமாயணம் பாலகாண்டம் 77.29) தமது விளையாடல்களால் எல்லோரையும் சந்தோஷிப்பிக்கும் சக்ரவர்த்தித் திருமகனான அந்த ராமபிரான், பேரழகும் பெருங்காதலும் உள்ள உத்தம ராஜகந்யையான பிராட்டியோடே கூடினவராய், விபுவும் அமரர்களதிபதியுமான மஹாவிஷ்ணு மஹாலக்ஷ்மியோடு விளங்குமாபோல, மிகவும் ப்ரகாசித்தார்.

150. *தஸ்மின்ப்ரஹ்மாZஸ்தேதமேவம்வித்பாதேனைவாக்ரஆரோஹ*
திதம்ப்ரஹ்மப்ருச்சதிகோZஸீதி

(கௌஷீதகீப்ராஹ்மணோபநிஷத் 1.5 பர்யங்கவித்யை) அந்தத் திருவநந்தாழ்வான்மேலே ஸ்ரீமந்நாராயணன் இருக்கிறார்; அவரை உபாஸித்தவன், அவ்வாழ்வான்மேல் தனது காலை வைத்தேறுகிறான்; அவனைப்பார்த்து "நீ யார்?" என்று பரமாத்மா கேட்கிறார்.

151. *அத்யந்தபக்தியுக்தாநாம்நஶாஸ்த்ரம்நைவசக்ரம:*

அத்யந்த பக்தியுடையவர்கட்கு சாஸ்த்ரமுமில்லை க்ரமமுமில்லை.

152. *பரிஶ்ரமாத்ப்ரஸுப்தாசராகவாங்கேZப்யஹம்சிரம்*
பர்யாயேணப்ரஸுப்தஶ்சமமாங்கேபரதாக்ரஜ:

(ராமாயணம் சுந்தரகாண்டம் 38.21-பிராட்டி திருவடிக்குச் சொன்னது) நானும் ஸ்ரீராகவனுடைய மடியில் ஆயாஸத்தினால் நெடும்

பொழுது தூங்கினேன், பரதன் தமையனான அவரும் எனது மடி யில் கிரமமாக நித்திரைசெய்தார்.

153, 154. அவிகாராய ஶுத்தாய நித்யாய பரமாத்மநே
ஸதைகரூபரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே

(விஷ்ணுபுராணம் 1.2.1) அவிகாரனும் சுத்தனும் நித்யனும் பரமாத்மாவாயும் எப்போதும் ஏகரூபனும் எல்லாவற்றையும் ஜயிக்கும் மிடுக்குடையனும் இருக்கிற மஹாவிஷ்ணுவை நமஸ் கரிக்கிறேன்.

155. ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: பரேஷாம் ஶரணம் கத:
அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா

(ராமாயணம் யுத்தகாண்டம் 18,28) ராமபிரான் சுக்ரீவனுக்குச் சொன்னது. ஆர்த்தனாகவோ தீனனாகவோ இருந்தாலும் சத்ருக்கள் மத்தியில் சரணாகதி செய்த ஶத்ருவானவன், க்ருதாத்மாவினால் தன் பிராணனைக் கொடுத்து ரக்ஷிக்கத்தகுந்தவனாகிறான்.

156. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:

(கீதை 18.66 அர்ச்சுனற்குக் கண்ணன் அருளிச்செய்தது- இது க்ருஷ்ணசரமச்லோகம் என்று ப்ரஸித்திபெற்றது) எல்லா தர்மங் களையும் (விடவேண்டிய முறைப்படி) விட்டு என்னை ஒருவனையே உபாயமாகப்பற்று; உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட் டவனாக நான் செய்கிறேன் நீ சோகிக்காதே.

157. சிரம் ஜீவதி வைதேஹீ யதி மாஸம் தரிஷ்யதி
ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்

(ராமாயணம் சுந்தரகாண்டம் 67.10 ராமபிரான் லக்ஷ்மணனிடம் சொன்னது) வைதேஹி (பிராட்டி) ஒருமாதம் உயிரைத்தாங்கி யிருப்பளாகில், நீண்டகாலம் ஜீவித்திருப்பாள். கரிய கண்களை யுடைய அவளைவிட்டு ஒருக்ஷணம்கூட நான் ஜீவித்திரேன்.

158. கோபீஜநவல்லப:

கோபிகைகட்கு வல்லபனாயிருப்பவன்.

159. கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவே யம் மநஸ்விநீ
தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச ஶிரஸா சாபிவாதய

(ராமாயணம் சுந்தரகாண்டம் 38.56 பிராட்டி திருவடியிடம் கூறியது) நன்மனமுடைய கொஸல்யாதேவி லோகரக்ஷகனை எவரைப் பெற்ருரோ, அவரை நான் சௌக்யமா என்று விசாரித்ததாகச் சொல்லி, தலைகுனிந்து வணங்கினதாகவும் வணக்கம் செய்யும்.

160. அஹத்வா ராவணம் ஸங்க்யே ஸபுத்ரஜநபாந்தவம்
அயோத்யாம் நப்ரவேக்ஷ்யாமி த்ரிஸத்யைஸ்தைர் ப்ராத்ருபிஶ்ஶபே

(ராமாயணம் யுத்தகாண்டம் 19.21) ராவணனை பிள்ளைகள் பந்து ஜனங்களோடு சண்டையில் கொல்லாது அயோத்யா நகருக்குள் நுழைவதில்லையென்று, பிரசித்தியுடைய எனது தம்பிகள் மூவர் பேராலும் சபதம் செய்கிறேன்,

161. தேவாஸ்ஸ்வர்கம் பரித்யஜ்ய தத்ராஸந் முநிஸத்தம
விசேருரவநௌ ஸர்வே பிப்ராணா மாநுஷீம் தநும்

(விஷ்ணுபுராணம் 1.17.5) முனிசிரேஷ்டரான (மைத்ரேயரே) எல்லாதேவர்களும் ஹிரண்யகசிபுவின் பயத்தினுல் ஸ்வர்க்கத்தை விட்டு இந்த பூமியில் மனுஷ்யர்களாகச் சஞ்சரித்தார்கள்.

162. ஏஹி பஶ்ய ஶரீராணி முநீநாம் பாவிதாத்மநாம்
ஹதாநாம் ராக்ஷஸைர் கோரைர் பஹூநாம் பஹுதா வநே

(ராமாயணம் ஆரண்யகாண்டம் 6-16 ரிஷிகள் ராமனிடம் சொன்னது) இந்த வனத்தில் எழுந்தருளி, கோரராக்ஷஸர்களால், பலவிதமாக ஹதம் செய்யப்பட்டும் தியானம் செய்துகொண்டுமிருக்கிற பல முனிகளின் சரீரங்களைப் பார்க்கவேணும்.

163. ப்ரியா து ஸீதா ராமஸ்ய தாரா: பித்ருக்ருதா இதி
குணாத் ரூபகுணாச்சாபி ப்ரீதிர் பூயோ(அ)ப்யவர்த்ததை

(ராமாயணம் பாலகாண்டம் 77.26) தகப்பனரால் (தசரதனுல்) விவாகம் செய்விக்கப்பெற்ற பத்தினியாகையால் சீதை ராமபிரானுக்குப் பிரியையானுள். ஆத்மகுணம் அழகு முதலியவற்ருல் ப்ரீதி அதிகமாக சீதையினிடம் வளர்ந்தது.

164. பதிம்விஶ்வஸ்யாத்மேஶ்வரம்ஶாஶ்வதம்ஶிவமச்யுதம்

(தைத்திரீயோபநிஷத் நாராயணீயம் 6.1.11) பரமாத்மா, லோகங்கட்கு ஸ்வாமியாயும், சுதந்திரனாயும், சாஸ்வதமாயும் மங்களம் செய்பவனாயும் ஆச்ரிதர்களைக் கைவிடாதவனாயும் உள்ளான்.

165. யஸ்யாமதம்தஸ்யமதம்மதம்யஸ்யநவேதஸ꞉

(கேநோபநிஷத் 2.3) எவனால் பரமாத்மா, பரிச்சின்னனாக அறியப்படவில்லையோ (அபரிச்சின்னனாக அறியப்பட்டானோ) அவன் பரமாத்மாவை உள்ளபடி அறிந்தவன்; எவனால் பரிச்சின்னன் என்று அறியப்படுகிறானோ அவன் உள்ளபடி அறிந்தவனல்லன்.

166. யுவாஸுவாஸா꞉பரிவீதஆகாத்ஸஉஶ்ரேயாந்பவதிஜாய

மாந꞉|தம்தீராஸ꞉கவயஉந்நயந்தி||

(யஜுர்வேதம்) பரமாத்மா, யுவாவாகவும், பீதக ஆடையராகவும், சேனை முதலியார் தொடக்கமானவர் சூழவும் இங்கு அவதரித்தார்; அவர் அவதரித்தே ப்ரேயஸ்ஸுடையராகிறார்; தீரர்களான கவிகள் அவரை உள்ளபடி அறிகிறார்கள்.

167. அவஜாநந்திமாம்மூடாமாநுஷீம்தநுமாஶ்ரிதம்

பரம்பாவமஜாநந்தோமமபூதமஹேஶ்வரம்

(கீதை 6.11 அர்ச்சுனற்குக் கண்ணன் அருளியது) மூடர்கள் என்னுடைய மேன்மையை அறியாதவர்களாய்க்கொண்டு, எல்லாருக்கும் ஈச்வரனாயும் மநுஷ்யசரீரத்தை எடுத்துக்கொண்டும் இருக்கிற என்னை (சாதாரண மநுஷ்யனாக எண்ணி) அவமதிக்கிறார்கள்.

168. ஸபித்ராசபரித்யக்தஸ்ஸுரைஶ்சஸமஹர்ஷிபி꞉

த்ரீந்லோகாந்ஸம்பரிக்ரம்யதமேவஶரணம்கத꞉

(ராமாயணம் சுந்தரகாண்டம் 38.33. பிராட்டி திருவடியிடம் சொன்னது) அந்தக் காகாஸுரன், தமப்பனான இந்திரனாலும் மஹர்ஷிகளாலும் சுரர்களாலும், காப்பாற்றப்படாமல், மூவுலகங்களையும் கிரமமாகச் சுற்றி, ராமபிரானையே சரணடைந்தான்.

169. ஸத்யேநலோகாஞ்ஜயதிதீநாந்தாநேநராகவ꞉
குரூஞ்ஶுஶ்ரூஷயாவீரோதநுஷாயுதிஶாத்ரவாந்

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 12.29. தசரதசக்ரவர்த்தி கைகேயி இடம் சொன்னது) சத்தியத்தால் லோகங்களையும், தானத்தால் தீனர்களையும், சுச்ரூஷையால் குருமார்களையும், வில்லினால் (யுத்தத்தில்) சத்ருக்களையும், வீரனாகிய ராகவன் ஜயிக்கிறான்.

170. த்விதாபஜ்யேயமப்யேவந்நநமேயந்துகஸ்யசித்
ஏஷமேஸஹஜோதோஷஸ்ஸ்வபாவோதுரதிக்ரம꞉

(ராமாயணம் யுத்தகாண்டம் 36.11. மால்யாவானைப்பார்த்து ராவணன் சொன்னது) இரண்டுதுண்டாக வெட்டப்பட்டேனாயினும் ஒருவரையும் வணங்கமாட்டேன், இது எனக்கு ஸஹஜதோஷம்; ஸ்வபாவம் ஒருவராலும் கடக்கத்தக்கதல்ல.

171. அஹமஸ்யாவரோப்ராதாகுணைர்தாஸ்யமுபாகத꞉
க்ருதஜ்ஞஸ்யபஹுஜ்ஞஸ்யலக்ஷ்மணோநாமநாமத꞉

(ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் 4.12. லக்ஷ்மணன் திருவடியிடம் கூறியது) க்ருதஜ்ஞதையுடையராயும் சிறிய உதவியைப் பெரிதாக எண்ணுமவராயும் உள்ள இந்த ராமபிரான் அபிப்ராயத்தாலே நான் தம்பி; அவர் குணங்களிலீடுபட்டு (ஸர்வதேச காலாவஸ்த்தைகளிலும் கைங்கர்யம் செய்கிறேன்.(இது என் அபிப்ராயம்)லக்ஷ்மணன் எனும் பெயருடையேன்.

172. மந்யேப்ராப்தாஸ்ஸ்மதந்தேஶம்பரத்வாஜோயமப்ரவீத்
நாதிதூரேஹிமந்யேஹந்நதீம்மந்தாகிநீமித꞉

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 99.9 ஸத்ருக்நனையும் மந்திரிகளையும் நோக்கி பரதன் கூறியது) கங்கை இவ்விடத்திற்கு அதிதூரத்திலில்லை என்றே நான் எண்ணுகிறேன் ; ஆகையால் பரத்வாஜரிஷி எந்த தேசத்தைச் சொன்னாரோ அதை யடைந்தோமென்றே நினைக்கிறேன்.

173. க்வதேராமேணஸம்ஸர்க꞉கதஞ்ஜாநாஸிலக்ஷ்மணம்
வாநராணாந்நராணாஞ்சகதமாஸீத்ஸமாகம꞉

(ராமாயணம் சுந்தரகாண்டம் 35.2 திருவடியிடம் பிராட்டி சொன்னது) ராமபிரானோடு உமக்கு ஸம்பந்தம் எங்கே ஏற்பட்டது ?

லக்ஷ்மணனை எவ்வாறறிகின்றீர்? வாநரர்க்கும் மநுஷ்யர்க்கும் எப்படி ஸம்பந்தம் ஏற்பட்டது?

174. ஸர்வர்க்ஷஹரிஸைந்யாநாம்ஸுக்ரீவமகரோத்பதிம்
ராமஸுக்ரீவயோரைக்யம்தேவ்யேவம்ஸமஜாயத

(ராமாயணம் சுந்தரகாண்டம் 35.51 பிராட்டியிடம் திருவடி சொன்னது) காடிகள் வாநரங்களின் சேனைகட்கு, சுக்ரீவ மஹாராஜனுக்கினமையால், தேவியே! ராமபிரானுக்கும் சுக்ரீவனுக்கும் (ஸ்நேஹம் இப்படி) ஏற்பட்டது.

175. வசஸாஸாந்த்வயித்வைநம்லோசநாப்யாம்பிபந்நிவ
ஆப்ருச்சம்மதத்வேநராக்ஷஸாநாம்பலாபலம்

(ராமாயணம் யுத்தகாண்டம் 21.6 ராமபிரான் விபீஷணனிடம் சொன்னது) விபீஷணனைக் குளிரக்கடாக்ஷித்து நல்வார்த்தை சொல்லி, ராக்ஷஸர்களுடைய பலாபலங்களை எனக்கு உள்ளபடியே சொல்லவேண்டும் என்று கேட்டார்.

176. பர்வதாதிவநிஷ்க்ராம்யஸிம்ஹோகிரிகுஹாஶய:
லக்ஷ்மணம்த்வாரிவைஸாபஶ்யத்ப்ரஹ்வாஞ்ஜலிபுடம்ஸ்திதம்

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 16.26) மலைக்குகையில் படுத்திருக்கும் ஸிம்ஹம் மலையிலிருந்து புறப்பட்டாற்போல, ராமபிரான் தனது இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு, வெளி வாயிலில் கைகூப்பி நிற்கும் லக்ஷ்மணனைக் கடாக்ஷித்தார்.

177. அபராதஸஹஸ்ரபாஜநம்பதிதம்பீமபவார்ணவோதரே
அகதிம்ஶரணாகதம்ஹரேக்ருபயாகேவலமாத்மஸாத்குரு

(ஸ்தோத்ரரத்நம் 48) எம்பெருமானே! பல்லாயிரம் அபசாரங்கட்குறைவிடமாய், பயம் தருகிற ஸம்ஸாரப் பெருங்கடல் நடுவே விழுந்தவனாய், அதைத் தாண்டும் சக்தியற்றவனாய், உம்மைச் சரணடைந்தவனாயிருக்கும் அடியேனைப் பரமகிருபையாலே, திருவடிகளில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

178. ஏபிஶ்சஸசிவைஸ்ஸார்த்தம்ஶிரஸாயாசிதோமயா

ப்ராது:ஶிஷ்யஸ்யதாஸஸ்யப்ரஸாதம்கர்துமர்ஹஸி

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 104.12 ராமபிரானிடம்பரதன் கூறியது) வயதுமுதிர்ந்த இந்த அமைச்சர்களோடுகூட என்னாலும் தலைவணங்கிப் பிரார்த்தனை செய்யப்பட்டீர்கள்; ஆகையால் தேவரீருக்குச் சகோதரனும் சிஷ்யனும் தாஸனும் இருக்கிற அடியேன் விஷயத்தில் அநுக்ரஹம் செய்யவேண்டும்.

179. தந்துக்ருஷ்ணாஜிநதரம்சீரவல்கலவாஸஸம்

ததர்ஶராமமாஸீநமபித:பாவகோபமம்

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 19.26) மான்தோலை உத்தரீயமாகவும், மரவுரியைக் கீழாடையாகவும் தரித்துக்கொண்டு, எப்பக்கத்திலும் நெருப்பைப்போல் அணுகக்கூடாதவராய் தர்ப்பாஸனத்திலுள்ள அந்த ராமபிரானைப் பரதன் பார்த்தான்.

180. இச்சாமோஹிமஹாபாஹும்ரகுவீரம்மஹாபலம்

கஜேநமஹதாயாந்தம்ராமம்சத்ராவ்ருதாநநம்

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 2.22 தசரதசக்ரவர்த்தியிடம் பிராஹ்மணாதியோர் கூறியது) பருத்த நீண்ட கைகளையும் மஹாபலத்தையும் ரகுகுல வீரத்தையும் உடைய ராமபிரான், மிக உயர்ந்த (சத்ருஞ்ஜயன் எனும்) யானையின் மேலேறிக் கொற்றக் குடையின் வட்டத்தினால் சூழப்பெற்ற திருமுகமண்டலத்தையுடையராய்க்கொண்டு, வீதிகள் தோறும் உலாவருவதைக் காண விரும்புகிறோம்.

181. தேஹிமேததாமிதே

(யஜுர்வேதம் 1.8) நீ எனக்கு ஒருபலனைக்கொடு, நான் உனக்கு ஒரு ப்ரதிபலனைத் தருகிறேன்.

182. அந்த:ப்ரவிஷ்ட:ஶாஸ்தாஜநாநாம்ஸர்வாத்மா

(யஜுர்வேதம் 3.21) (எம்பெருமான்) சேதநருடைய உள்ளே வ்யாபித்து நியாமகனாயும் ஸர்வாத்மாவாயும் உள்ளான்.

183. பவித்ராணாம்பவித்ரம்யோமங்களாநாம்சமங்களம்
தைவதம்தேவதாநாம்சபூதாநாம்யோऽவ்யய:பிதா

(பாரதம் பீஷ்மபர்வம், பீஷ்மர் தர்மபுத்ரரிடம் சொன்னது) எவன் பவித்ரமான பொருள்களுக்கும் பவித்ரத்தை யுண்டாக்குபவனோ; மங்களவஸ்துக்களுக்கும் மங்களத்தையுண்டாக்குபவனோ, தேவதைகட்கெல்லாம் தைவதமானவனோ, எல்லாப்ராணிகட்கும் அழியாத பிதாவோ (அத்தகைய பரமாத்மாவின் திருநாமம் சொல்லும்.)

184. யதாபஶ்ய:பஶ்யதேருக்மவர்ணம்கர்தாரமீஶம்புருஷம்ப்ரஹ்மயோநிம்| ததாவித்வாந்புண்யபாபேவிதூயநிரஞ்ஜந:
பரமம்ஸாம்யமுபைதி||

(முண்டகோபநிஷத்) பொன்மேனியனும் கர்த்தாவாயும் ஈசனும் ப்ரஹ்மகாரணனுமுள்ள புருஷனை, ப்ரஹ்மஞானி எப்போது காண்கிறானோ, அப்போது வித்வானாகிய இவன் புண்யபாபங்களை விட்டு, நிரஞ்ஜநனாய்ப் பரமாத்மாவோடு ஸாம்யம் பெறுகிறான்.

185. அம்ஶாவதாரோப்ரஹ்மர்ஷேயோऽயம்யதுகுலோத்பவ:
விஷ்ணோஸ்தம்விஸ்தரேணாஹம்ஶ்ரோதுமிச்சாமிதத்த்வத:

(விஷ்ணுபுராணம் 5.1.2 மைத்ரேயர் பராஶர மஹர்ஷியிடம் கேட்டது) பராஶரமஹர்ஷியே! மஹாவிஷ்ணுவின் (அவதாரங்களுள்) யதுகுலத்தில் உத்பவித்த எந்த பூர்ணாவதாரம் உண்டோ அதன் மஹிமையை விரிவாக உள்ளபடியே கேட்க விரும்புகிறேன்.

186. அயம்ஸகத்யதேப்ராஜ்ஞை:புராணார்தவிஶாரதை:
கோபாலோயாதவம்வம்ஶம்மக்நமப்யுத்தரிஷ்யதி

(விஷ்ணுபுராணம் 5.20.49 நகரத்தினர் தம்முள் சொல்லிக்கொண்டது) இந்த கோபாலன், மங்கிக்கிடக்கும் யாதவவம்சத்தை அதிக விருத்திசெய்யப்போகிறார் என்று, புராணங்களின் அர்த்தங்களை நன்கறிந்த வித்வான்களால் சொல்லப்படுகிறார்.

387. அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா
ந த்வம் ஸமர்த்தஸ் தாம் ஹர்த்தும் ராமசாபாச்ரயாம் வநே

(ராமாயணம் ஆரண்யகாண்டம் 37-18 மாரீசன் ராவணனிடம் சொன்னது) எந்த ராமபிரானுக்கு பிரசித்திபெற்ற ஜாநகி தேவியார் இருக்கிறாளோ, அத்தகையோர் தேஜஸ் அளவிடமுடியாததல்லவோ? அவருடைய வில்லை ஆச்ரயித்துள்ள அந்த தேவியை வனத்தில் அபகரிக்க நீ ஸமர்த்தனல்லன்.

388. ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத

(கர்மகாண்டம்) ஸ்வர்க்ககாமன் ஜ்யோதிஷ்டோமமாகிற யாகம் செய்தல் வேண்டும்.

389. ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:

(ப்ருஹதாரண்யகோபநிஷத் 6.5.6) ஹே சிஷ்யனே! பரமாத்மாவானவன் ச்ரவணமநநத்யாந(தரிசனங்கட்கு) விஷயமாக்கத் தக்கவன்.

390. யத்யதாசரதி ச்ரேஷ்டஸ் தத்ததேவேதரோ ஜந:
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ் ததநுவர்த்ததே

(கீதை 3.21 அர்ச்சுனற்கு கண்ணன் கூறியது) (சாஸ்த்ர அறிவாலும் அநுஷ்டானத்தாலும்) சிரேஷ்டனானவன், எவற்றை அநுஷ்டிக்கிறானோ அவற்றை இதரஜனங்களும் அநுஷ்டிப்பர், அவன் எதை ப்ரமாணமாகக் கொள்கிறானோ அதையே லோகம் கொள்ளும்.

391. யயௌ தூர்யப்ரணாதேந பேரீணாஞ்ச மஹாஸ்வநை:

பேரிகையின் பேரொலியோடும் தூர்யத்தின் ஒலியோடும் போனார்.

392. யோ வஜ்ரபாதாசநிஸந்நிபாதாந் ந சுக்ஷுபே நாபி சசால ராஜா
ஸ ராமபாணாபிஹதோ ப்ருசார்த்த: சசால சாபஞ்ச முமோச வீர:||

(ராமாயணம் யுத்தகாண்டம் 59.139) ராக்ஷஸமன்னனான எந்த ராவணன் வஜ்ராயுதத்தின் அடிகளாலும் இடிகளின் வீழ்ச்சியாலும்

மனநடுக்கமும் சரீரநடுக்கமும் அடைந்திலனே, அவன் ராமபாணத்தினால் அடிபட்டவனாய் மனங்கலங்கி நடு நடுங்கி வீரனாயினும் வில்லையும் கூடக் கை நெகிழவிட்டான்.

193. பதிஸம்மாநிதா ஸீதா பர்தாரமஸிதேக்ஷணா

ஆத்வாரமநுவவ்ராஜ மங்கலாந்யபித்யுஷீ

(ராமாயணம் அயோத்யாகாண்டம் 16.21) ராமபிரானாகிய தனது பதியால் கௌரவிக்கப்பட்டு, கரியகண்களையுடைய ஸீதாபிராட்டி மங்களங்களைச் சொல்லிக்கொண்டே, (தன்னுடைய நாயகனான) ராமபிரானை வெளிவாயிற்படிவரையிலும் பின்தொடர்ந்து சென்றாள்.

194. ப்ரதேஹி ஸுபகே ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பாமிநி

பௌருஷம் விக்ரமோ புத்திர்யஸ்மிந்நேதாநி நித்யஶ:

(ராமாயணம் யுத்தகாண்டம் 131.77 ராமபிரான் பிராட்டியிடம் சொன்னது) அழகுமிக்கசீதையே! எவரிடத்தில் பௌருஷமும் விக்ரமமும் புத்தியும் நித்யமாயுண்டோ, எவரால் மிகவும் சந்தோஷம் அடைந்தனையோ அவருக்கு முத்துஹாரத்தைக் கொடு.

195. தம் பஞ்சஶதாந்யப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி| ஶதம் மாலாஹஸ்தா:| ஶதமஞ்ஜநஹஸ்தா:| ஶதம் சூர்ணஹஸ்தா:| ஶதம் வாஸோஹஸ்தா:| ஶதம் பூஷாஹஸ்தா:| தம் ப்ரஹ்மாலங்காரேணாலங்குர்வந்தி| ஸ ப்ரஹ்மாலங்காரேணாலங்க்ருதோ ப்ரஹ்ம வித்வான் ப்ரஹ்மைவாபிப்ரைதி||

(கௌஷீதகீப்ராஹ்மணோபநிஷத் 1.4) முக்தனாகப்போமவனை, ஐந்நூறு அப்ஸரஸ்த்ரீகள் எதிர்கொண்டுவருகிறார்கள், நூறு அப்ஸரஸ்ஸுக்கள் மாலையேந்திய கையினராயும், நூறுபேர் அஞ்ஜனம் ஏந்திய கையினராயும், நூற்றுவர் சூர்ணமேந்தியவராயும், நூற்றுவர் வஸ்த்ரம் கொணர்பவராயும், நூறுபேர் பூஷணஹஸ்தராயும், ப்ரஹ்மாலங்காரத்துக்கேற்றபடி அலங்கரிக்கிறார்கள்; அந்த ப்ரஹ்ம ஞானியாகிய வித்வான் இவ்வாறலங்கரிக்கப்பெற்று ப்ரஹ்மத்தையே அடைகிறான்.

196. சகாஸதம்ஜ்யாகிணகர்கஶைஶ்ஶுபைஶ்சதுர்பிராஜாநுவிலம்

பிபிர்புஜை:। ப்ரியாவதம்ஸோத்பலகர்ணபூஷண

ஶ்லதாலகாபந்தவிமர்தஶம்ஸிபி:॥

(ஸ்தோத்ரரத்நம் 33) நாண் உராய்தலாலுண்டான தழும்பினால் கடினமாகவும், சுபமாகவும் முழங்கால்வரவு நீண்டதாயும், பிராட்டியின் தலையணியான கருநெய்தல் மலர், கர்ணபூஷணம், அவிழ்ந்துள்ள முன் நெற்றிமயிர் இவற்றின் உராய்தலை அறிவிப்பதாகவும் இருக்கிற நான்கு திருக்கைகளால் ப்ரகாசிக்கிற பெருமாளை (நான் எப்போது ஸந்தோஷிப்பிக்கப்போகிறேன் ?)

197. ஏதத்ஸாம காயந்நாஸ்தே। ஹா 3வுஹா 3வுஹா 3வு। அஹமந்

நமஹமந்நமஹமந்நம்। அஹமந்நாதோऽஹமந்நாதோऽஹமந்

நாத:॥

(தைத்தரீய உபநிஷத்-ப்ருகுவல்லி) முக்தனானவன் நான் பரமாத்மாவுக்கு போக்யப்பொருள் போக்கியப்பொருள் போக்கியப் பொருள், நான் பரமாத்வாகிற போக்யப்பொருளை அநுபவிக்கிறவன் அனுபவிக்கிறவன் என்று சொல்லிக்கொண்டு, ஹாவு ஹாவு ஹாவு என்கிற இந்த ஸாமத்தை பாடிக்கொண்டிருக்கிறான்.

198. ப்ரஹ்மவிதாப்நோதி பரம்। ததேஷாऽப்யுக்தா। ஸத்யம்ஜ்

ஞாநமநந்தம்ப்ரஹ்ம। யோ வேத நிஹிதம் குஹாயாம்பர

மே வ்யோமந்। ஸோऽஶ்நுதே ஸர்வாந்காமாந்ஸஹ। ப்ரஹ்

மணா விபஶ்சிதேதி॥

(தைத்தரீய உபநிஷத் ஆநந்தவல்லி) ப்ரஹ்மஞானி பரமாத்மையடைகிறான்; அந்த ப்ரஹ்மத்தைக் குறித்து இந்த ரிக் அத்யயநபரர்களால் சொல்லப்பட்டது; சத்யமாயும் ஞானமாயும் அநந்தமாயும் ஹ்ருதய குஹையில் வைக்கப்பெற்றதாயும் உள்ள பரமாத்மாவை எவன் அறிகிறானோ, அவன் பரமபதத்தில், எல்லாக் குணங்களையும் ஸர்வஜ்ஞனாகிய பரமாத்மாவோடுகூட அனுபவிக்கிறான்.

199. ஆஹாரநித்ராபயமைதுநஞ்ச ஸாமாந்யமேதத்பசுபிர்நராணாம்| ஜ்ஞாநம் நராணாமதிகோ விசேஷோ ஜ்ஞாநேந ஹீநா: பசுபிஸ்ஸமாநா:||

(விஷ்ணுபுராணம்) மனிதர்களுக்கும் நாற்கால் பிராணிகட்கும் ஆகாரம் நித்திரை பயம் மைதுனம் ஒத்திருக்கும்; ஆனால் மனிதர்கட்கு ஞானமே பெருமையையும் விசேஷத்தையுமளிக்கிறது; அந்த ஞானமில்லாதவன் பசுக்களுக்கொப்பானவன்.

200. கதாம் பசூநாம் ஸஹஜந்மபந்துதாம் க்ருஹாச்ரயம் ப்ரேம வநேஷு பிப்ரத:| ததர்ச கோபாநுபதேநு பாண்டவ: க்ருதாநுகாராநிவ கோபிரார்ஜவே||

(கிராதார்ஜுநீயம்) பிறந்தநாளிலிருந்து (ஸஹவாஸத்தால்) பசுக்களின் பந்துக்களாயும், வீட்டின் மேலுள்ள ப்ரேமத்தைக் காட்டின் மேல் வைத்தும், தங்கள் வியாபாரத்தில் பசுக்களால் பரிஹஸிக்கப் படுபவர் போலுமுள்ள இடையர்களைப் பசுக்கூட்டத்தருகில் அர்ச்சுனன் பார்த்தான்.

201. பக்திஶ்ச ஜ்ஞாநவிசேஷ:

(பக்தியாவது ஞானத்தின் விசேஷமாம்).

202. அஹமஸ்ம்யபராதாநாமாலயோऽகிஞ்சநோऽகதி:| த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி:|| சரணாகதிரித்யுக்தா ஸா தேவேऽஸ்மிந் ப்ரயுஜ்யதாம்||

(பகவச்சாஸ்த்ரம்) அடியேன் அபசாரங்கட் குறைவிடம், அகிஞ்சநன், அகதி; "தேவரீரே எனக்கு உபாய பூதராகவேண்டும்" எனும் பிரார்த்தனை சரணாகதியெனப்படும்; அது இவ் வெம்பெருமானிடத்து செய்யத் தக்கது.

203. நதர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதீ நபக்திமாந்த்வச்சரணா
ரவிந்தே| அகிஞ்சநோநந்யகதிஶ்ஶரண்ய த்வத்பாதமூலம்
ஶரணம்ப்ரபத்யே||

(ஸ்தோத்ரரத்நம் 22) ஶரண்யனே! நான் கர்மயோகநிஷ்டனன்று, ஞானயோகநிஷ்டனன்று, உமது சரணாரவிந்தத்தின் கீழ் பக்தி செலுத்துபவனுமன்று, அகிஞ்சநன், அநந்யகதி; உமது திருவடிகளையே உபாயமாகப் பற்றுகிறேன்.

204. உபாத்தே ஸத்தாஸ்திதிநியமநாத்யைஶ்சிதசிதௌ ஸ்வமுத்திஶ்ய
ஸ்ரீமாநிதிவததி வாகௌபநிஷதீ| உபாயோபேயத்
வே ததிஹதவ தத்வம்நது குணௌ அதஸ்த்வாம் ஸ்ரீரங்கேஶய
ஶரணமவ்யாஜமபஜம்||

(ஸ்ரீரங்கராஜஸ்தவம் - உத்தரஶதகம் 87) "ஸ்ரீமானாகிற எம்பெருமான் தன்னை உத்தேசித்து, ஸத்தை ஸ்திதி நியமநாதிகளால் சித்தசித்துக்களை ஸ்வீகரிக்கிறான்" என்று உபநிஷத வாக்கு கூறுகின்றது; ஆகையால் இவ்விடத்தில் உமக்கு உபாய உபேயத்வங்கள் ஸ்வரூபம், குணங்களல்ல; ஆகையால் ஸ்ரீரங்கேசனே! உம்மை யாதொரு வ்யாஜமுமின்றி ஶரணமடைந்தேன்.

205. புண்யாநாமபிபுண்யோஸௌ (இவர் புண்யம் முதலிய உபாயங்கட்கு நிர்வாஹகர்.)

206. ராமோவிக்ரஹவாந்தர்மஸ்ஸாதுஸ்ஸத்யபராக்ரம:
ராஜாஸர்வஸ்யலோகஸ்யதேவாநாமிவவாஸவ

(ராமாயணம் ஆரண்யகாண்டம் 37.13 மாரீசன் ராவணனிடம் சொன்னது) ராமபிரான் உருக்கொண்ட தர்மம், ஸாது, ஸத்ய பராக்ரமன், தேவர்கட்கு இந்த்ரன் போலே எல்லா லோகங்கட்கும் ராஜா.

07. ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம் ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி| அஜாநதா மஹிமாநம் தவேமம் மயா ப்ரமாதாத் ப்ரணயேந வாபி||

கீதை 11.41 கண்ணனிடம் அர்ச்சுனன் சொன்னது) அஜாக்ரதையாலும் நெடுங்காலத்திய பழக்கத்தாலும், உமது மஹிமைகளை அறியாது, உம்மை நண்பன் என்று எண்ணிக்கொண்டு "ஹேக்ருஷ்ண! ஹேயாதவா! ஹேநண்ப!" என வாய்மீறிச் சொல்லப்பட்டவைகளை (மன்னிக்கவேண்டுகிறேன்.)

208. ப்ராஹ்மே முஹூர்த்தே சோத்தாய சிந்தயேதாத்மநோ ஹிதம்| ஹரிர் ஹரிர் ஹரிரிதி வ்யாஹரேத் வைஷ்ணவ: புமாந்||

(பராசரஸ்ம்ருதி) வைஷ்ணவபுருஷன் ப்ராஹ்மமுஹூர்த்தத்தில் விழித்துக்கொண்டு, தனது ஸ்வரூபத்துக்கிதமானவற்றைத் தியானம் செய்தல்வேண்டும் ஹரி: ஹரி: ஹரி: என்று உச்சரிக்கக்கடவன்.

209. ஏஷ தத்வா ச வித்தாநி ப்ராப்ய சாநுத்தமம் யச: லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி

(ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் 4.18 லக்ஷ்மணன் திருவடியிடம் கூறியது) இந்த ராமபிரான் அநேக பொருள்களைக் கொடுத்தும், உத்தமமான கீர்த்தியை அடைந்தும், லோகநாதனாக முன்பிருந்தும் இப்போது ஸுக்ரீவனை நாதனாக இச்சிக்கிறார்!

210. ஸர்வாத்மநா பர்யநுநீயமாநோ யதா ந ஸௌமித்ரிருபைதி யோகம்| நியுஜ்யமாநோபி ச யௌவராஜ்யே ததோப்யஷிஞ்சத் பரதம் மஹாத்மா

(ராமாயணம் யுத்தகாண்டம் 131.88) லக்ஷ்மணன் (ராமபிரானால்) இளவரசுபட்டத்துக்கு நியமிக்கப்பெற்று மிக நல்வார்த்தை சொல்லப்பெற்றும் அதிலே ப்ரவ்ருத்தியை ஸர்வப்ரகாரத்தாலும் எப்பொழுது அடையவில்லையோ; அதன் பிறகு மஹாத்மாவாகிய ராமபிரான் பரதனுக்கு அபிஷேகம் செய்தார்.

211. நகால: தத்ர வை ப்ரபு:

அந்தப் பரமபதத்தில் காலம் ப்ரபுத்வம்பெற்றிலதென்று பிரசித்தம்.

212. தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ
விஷ்ணோர்தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாத்மநஸ் தநும்

(விஷ்ணுபுராணம் 1.9.145) இந்தப் பெரியபிராட்டியார், எம்பெருமான் தேவதையாக அவதரிக்கும்போது, அதற்கேற்ற தேவதாரூபம் கொள்கிறாள்; மநுஷ்யரூபமான அவதாரத்தில் மநுஷ்யரூபமே கொள்கிறாள்; மஹாவிஷ்ணுவின் திருமேனிக்கேற்கவே தனது திருமேனியைச் செய்கிறாள் என்பது பிரஸித்தம்.

213. ஸர்வேஷாமேவ தர்மாணாமுத்தமோ வைஷ்ணவோ விதி:
ரக்ஷதே பகவான் விஷ்ணுர் பக்தானாத்மஶரீரவத்

(மஹாபாரதம் மோக்ஷதர்மம்) எல்லா தர்மங்களுக்குள்ளும் வைஷ்ணவதர்மமானது உத்தமமானது, பகவான் மஹாவிஷ்ணு, தனது பக்தர்களைத் தன் சரீரத்தைப்போல் ரக்ஷிக்கிறார்.

214. க்ருஷ்ணாஶ்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாஶ்ச பாண்டவா: | க்ருஷ்ண: பராயணம் தேஷாம் ஜ்யோதிஷாமிவ சந்த்ரமா: ||

(பாரதம் த்ரோணபர்வம் 183.24) பாண்டவர்கள் க்ருஷ்ணனை ஆஶ்ரயித்தவர்கள், க்ருஷ்ணனை பலமாயுடையவர்கள், க்ருஷ்ணனை நாதனாகக் கொண்டவர்கள்; பூர்ணசந்த்ரன் நக்ஷத்ரங்கட்கு நாதனாதல்போல், க்ருஷ்ணன் பாண்டவர்கட்குப் பாராயணனாயிருக்கிறான்.

215. ஸஹோவாச வ்யாஸ: பாராஶர்ய:

பராஶரமஹர்ஷியின் புத்ரனான அந்த வ்யாஸர் சொன்னார்.

மேற்கோள் விளக்கவுரை (ப்ரமாணத்திரட்டு) முற்றிற்று.

க. சாஸ்த்ரார்த்த நுட்பங்கள்

(ஒவ்வொரு குறிப்பின் முடிவிலுள்ள எண், இப் பதிப்பிலுள்ள பக்க எண்.)

(இங்குள்ள குறிப்புக்களைத் தொகைவகைப்படுத்தித் திருவாய்மொழிக்குப் பட்டர் அருளிய "மிக்க இறை நிலையும்" எனும் தனியனில் கூறப்பெறுகின்ற அர்த்தபஞ்சகத்தின் பெருந்தலைப்புக்கள் ஐந்திலும் உட்பிரிவுகள் பலவற்றிலும் பிரிவு செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன் - பதிப்பாசிரியன் மயிலை மாதவதாஸன்.)

ஜீவாத்மாஸம்ஸாரத்தில் உறங்குகிறது 1, ஆண்டாளுக்கும் தேஹாத்மாபிமானிகள் ரிஷிகள் ஆழ்வார்கள் பெரியாழ்வார் ஆகியவர்க்கும் உள்ள தாரதம்யம் 1, 2, ஜீவாத்மா, எம்பெருமானுக்கு சேஷமாயிருத்தல் 2 அது அர்த்தப்படாதபடி, ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யங்களை எம்பெருமான் தருதல் 2 அதற்குக் கரணகளேபரங்களைத் தந்து, ஸ்ருஷ்டி நடத்தி, சாத்திரங்களையும் கொடுத்து, தானே அவதரித்துத் தனது ஸ்வரூபரூப குணசேஷ்டிதங்களால், எம்பெருமான் ஜகத்தைவாரிப் பிடியாக எடுத்தல் 4 மார்கழிமாதம் வைஷ்ணவமாதம் 9 பகவத்விஷயத்தில் ஆபிமுக்யம் பிறந்தால் கொண்டாடுவது காலத்தை 8,9 சேஷி சேஷபூதரையும் சேஷபூதர் சேஷியையுமபேக்ஷை 9, 10 பகவதநுபவத்துக்குப் புறம்பானது த்யாஜ்யம் 10 பகவத் ப்ரவணர் தேஹயாத்ரையை, விதி, தானே பின்செல்லும் 11,12 விமுகனுக்கு பகவல்லாபம் உண்டாகும்நாளே நன்னாள் 12 எம்பெருமான் க்ருஷிபலித்தநாள் 12 எம்பெருமானே நமக்கு ரக்ஷகன் எனும் விசுவாசம் பிறந்தநாளே நன்னாள் 13, 14 ப்ராப்தாப்ராப்தவிவேகம் பண்ணினால் ஓரிரவும் ஒரு பகலுமே யுள்ளன 14 பகவத்ஸம்பந்தமே கௌரவம் தரும் 15 இச்சையே அதிகாரம் தரும் 15 இச்சை சாதனமல்ல சைதந்ய கார்யமாமித்தனை 16 அபுநராவர்த்தியாகிற மோக்ஷம் 15 அல்லோம் என்னுதார் எல்லோரும் அதிகாரிகள் 16 சத்தியும் ப்ராப்தியும், அத்தலையிலே பூர்ணமாகையாலே, இத்தலைக்கு இச்சைக்கு மேற்பட வேண்டுவதில்லை 16 அபரிச்சிந்ந விஷயத்திற்கு துணைதேட்டம் 16 பிரதிகூலரையும் அகப்பட அழைத்தல், அவர்களைத் திருத்துதற்காக 16 வகுத்தவிஷயத்திற்கு இச்சைக்கு மேற்பட வேண்டுவதில்லை. 17 த்ரிபாத் விபூதியிலடங்காத வஸ்து எம்பெருமான் 19 பரமபத அநுபவத்திற்கு தேஹாந்தர பரிக்ரஹம் தேவை 20 வசிஷ்

டாதிகள் ஆசாரப்ரதானர் 20 ஆத்மாவிற்கு நிலைநின்ற ஐசுவரியம், பகவத் ப்ராத்யாஸத்தி 20 ஆத்மாவிற்கு ஸ்ரீமத்தாகிறது பகவத் ஸ்பர்சம் 20 அஹங்காரஸ்பர்சம், தேவதாந்தர ஸ்பர்சம், அந்ய சேஷத்வம், ஸ்வஸ்வாதந்த்ரியம் ஆகிய நான்கும், ஆத்மாவிற்கு விரோதிகள் 21 அஹிம்ஸையாகிற சாமாந்யவிதி, யாகத்தில் ப்ராணிகளைப் பலியிடுதற்கு விரோதமாகாது 23 ஸ்வார்த்தமாகச் செய்தால் நிஷித்தம் அத்தலைக்கு என் வருகிறதோ என்று அஞ்சிச் செய்தால் தர்மம் 23 ஜீவாத்மா, வைமுக்யம் செய்கிறபோதும் எம்பெருமான் ஆபிமுக்யம் செய்கிறான் 27 கண்ணன் நாராயணனாக லித்தமான வஸ்து 27 ஸ்வரக்ஷணத்தில் அந்வயமின்மை 27 உபாயாந்தரபேக்ஷயம் 27 ஆகிஞ்சந்யம் 27 அத்தலையில் நிறைவாலும், இத்தலையில் குறைவாலும், எம்பெருமானே உபாயம் 28 ஸ்வரூப ஞானமுடையார் யாத்ரையை, அஃதிலார் நிந்திப்பர் 30 ஸதாசார்யப்ரஸாதம் அடியாக, ஸ்வரூப யாதாத்ம்ய ஞானம், பரிபூர்ணமாகும் 31 எம்பெருமானுக்குக் கிருபை க்ஷமை முதலியன கல்யாண குணங்கள் 31 பகவத்கைங்கர்யத்துக்குத் தகுதியானவை, ஞானபக்தி வைராக்யங்கள் 31 த்ரைவர்ணிக ஜந்மத்தைக் காட்டிலும், ஞான ஜன்மத்தில், உபாயோபேய தேவதாந்தரபரர்கள் இல்லாமையால் இதற்கு ஏற்றம் 32 மங்களாசாஸனம், ஸர்வாநிஷ்ட நிவர்த்தகம் செய்யும் கூர்மையுடையது 32 பகவத்விஷயத்தை அசலறியாதபடி, ரக்ஷித்துக்கொண்டு போருகை, ஆசார்யக்ருத்யம் 32 நாராயண சப்தத்தில், மந்த்ரமாதா என்பதற்குரிய லக்ஷணங்கள் உண்டு 32 அநுகூலர்க்கு அணுகலாம்படியும், பிரதிகூலர்க்கு அணுக ஒண்ணுதபடியும், இருப்பதால் கதிர்மதியம் போன்ற முகம் 33 எம்பெருமானையும், ஏனைய உபாயங்களையும், பற்றினவர்களுக்குக் கர்மாநு குணமாகப் பலன் தருவன் எம்பெருமான் 33 எம்பெருமானையே உபாயமாகப் பற்றினவர்களுக்குக் கிருபாநுகுணமாகப் பலன் தருவன் 33 மார்கழி நோன்பு, காமநாதிகாரிகளுக்கு சாதனமாயும், நிஷ்காமருக்கு நித்யமாயும், பகவத் ப்ரபந்நருக்குக்கைங்கர்யமாயும் போருகை 33 எம்பெருமானையொழிய, ப்ருதக்ஸ்தித்யுபலப்தி இல்லாதபடிப் ப்ரவேசித்து, ஸ்வஸத்தையை லபித்தேன் எனும் ப்ரஹ்லாநுபவமே நீராட்டம் 34 கர்மம் அடியாக விஷயம் நன்றாகவும் தீதாகவும் தோன்றுவதன்றி, விஷயத்தைப் பற்றியே நன்மையும் தீமையுமில்லை 35 க்ருத்யாக்ருத்யவிவேகம் 35 பரமபதத்தில் மேன்மை காணலாமே தவிர, தயாதி குணங்களைக் காண இயலாது 37 அங்கு போக்தாக்கள் அஸங்குசிதராயிருப்பர், இங்கு (லீலாவிபூதியில்)

போக்யம் அஸங்குசிதமாயிருக்கும் 37 வஸ்துவுக்கேற்றம் குணநிக்யத்தாலே 37 நில்லென்றால் முடிந்தேன் எனும் இளையபெருமாள் படியே பக்தி 38 ஒன்றறிந்தன்றிக்கே வ்யதிரேகத்தில் மூச்சடங்கும் படியான சக்ரவர்த்தியின்படி ஸ்நேஹம் 38 அதிகாரிதான் முமுக்ஷுவே, ஞானபலம் உண்டாகவேணும், த்யாகமாத்ரத்தையே ஸ்வீகரித்து, ப்ராப்யத்திலே ருசியின்றிக்கே, தான் நினைத்தபடியே நடக்கில் நாஸ்திகத்வமே பலித்துவிடும் 40 சொல்லுகிறவர்கள் ஆசார்ய பதம் நிர்வஹிக்கைக்காகச் சொல்லுகிறார்களல்லர், கேட்கிறவர்கள் தங்களுக்கு அஜ்ஞாதமாய்க் கேட்கிறார்களல்லர், "போதயந்த: பரஸ்பரம்" என்று, இங்ஙனே யல்லது போது போகாமலிருந்தபடி 41 ஆர்த்தநாதம் கேட்டற்கே, திருவநந்தாழ்வான்மேல் அசங்காதே கிடக்கிறபடி 43 உணவுஎது என்பதுபற்றிய ஆராய்ச்சி 45 சரீரத்துக்கு வருகிற நன்மை சரீரிக்கே 46 சேஷபூதர் கிஞ்சித்காரம்பற்றிய விவரணம் 48 எம்பெருமான் ஸர்வபூதஸுஹ்ருத்தாயிருப்பினும், ததீயரைக்கொண்டல்லது முன்னிடாமை, பூர்வர்கள் ஆசாரம் 49 வர்ணாச்ரமோசிதமான நித்யகர்மங்கள், யதாவதனுஷ்டேயமாகை எந்த அதிகாரிக்கு 53 ஞானயோக பக்தியோகங்களில், அந்வயம் அநந்வயம் பற்றிய ஆராய்ச்சி 54 விதிபூர்வமாகச் செய்தலைவிட, ப்ரீதிபூர்வமாகச் செய்தல் தித்திக்கும் 54 எம்பெருமானுடைய கல்யாண குணங்களை அநுஸந்தித்தலுக்கு ஒப்பாகாது, அவன் போரப் பொலியக்கொடுக்கும் பரமபதம் 54 கைங்கர்யம் இவர்களுக்கு (கோபிகைகளுக்கு) ப்ரதானபலன், நாடு செழுத்திருக்கை அவாந்தரபலன் 55 அஷ்டாக்ஷர ஸம்வித்தர் ஒருவர் இருந்தாலே நாடு வாழும் 55 விதிபூர்வகமாகவோ க்ருஷை இருப்பது? 59 வ்யாப்திக்குக் கருத்து, ஸதசையுண்டாக்குகை 59 உத்தமர் மத்யமர் அதமர் எவர் எவர் 60, 61 கர்மஞானபக்தி யோகநிஷ்டர், ப்ரபந்நர் ஆகிய நான்கு அதிகாரிகளுக்கும், எம்பெருமான் திருநாமம் செய்யும் உதவிகள் 62 இச்சையுடையார் ஈச்வரனைப்பற்றி, க்ருதக்ருத்யராகை 67 க்ருஷ்ணஸ்பர்சமே, தாரகமாக வளர்ந்த பசுக்கள் 67 பெரிய திருமந்த்ரம், வாத்ஸல்ய ப்ரகாசகம் 69 அநந்யார்ஹ சேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்யபோக்யத்வங்களாகிற ஆகாரத்ரய ஞானங்கள் 69 ஞானிகளுடைய ஹ்ருதயங்களில் சுகஸ்பர்சத்தாலே எம்பெருமான் கண்வளருகை 69 சிஷ்யர்களுக்கு ஆசார்யர் செய்கிற பேருபகாரம் (3ம்பாட்டில்) கூறப்படுகிறது 69, 70 பகவத் சமாச்ரயணம் செய்வாருக்கு, தேவதைகள் கிஞ்சித்காரம் செய்தல் 70, 71 "சோறும் தண்ணீரும் தாரகம் என்றிருப்பார்க்கு

நான் ப்ரபு, ஸ்ரீவைஷ்ணவர்கள் எனக்கு ப்ரபுக்கள்" என்று யமன், தனது கிங்கரரிடம் சொல்வது 71 ஆச்ரிதவிரோதிகளைக் கண்டால் தன்னைப் பேணாதே, மேல்விழுமவன் எம்பெருமான் 71 ஒருபாகவதன் பேரை, ஒரு அபாகவதன் தரிப்பது, அவனையும் யமன் கோஷ்டியில் பட்டோலை பார்க்கப் பெறாதாகை 72 எம்பெருமான் ஸ்வரூபத்துக்குச் சேர்ந்தது பாலநவிதி 74, 75 பாபமேபச்சையாக ரக்ஷிக்கும் பகவானும் பாகவதர்களும் (தோஷபோக்யம் எனும் கருத்து) 76 நெடுநாள் தன் பக்கலிலே, ஸம்ஹ்ருதமாய்க் கிடக்கும் ஜகத்தை, "நானும் இவர்களுமாய்க் கலக்கவேண்டும்" என்று, எம்பெருமான் தனது பேறாக எண்ணி ஜகத்ஸ்ருஷ்டி செய்கிறான் (இது ஸமஷ்டிஸ்ருஷ்டி) 78 எனவே, எம்பெருமானே ஜகத்காரணபூதன் (ஊழிமுதல்வன்) ஆகிறான் 78 புண்ய பாபாநுகுணமாக அன்றிக்கே, க்ருபையாலே, எம்பெருமான், ஜீவாத்மாக்களுக்கு உபகரணங்களைத் தருகிறான் 78 ப்ரஹ்மன் வ்யஷ்டிஸ்ருஷ்டிக்குக் காரணபூதன் 80 ஆர்த்திக்கு முற்பாடனாய் ஈச்வரன் ரக்ஷித்தல் 82 பகவத்ஸமாச்ரயணம் நதீ மாத்ருகம்போலே சாதம் 82 ஆழியாவது அபரிச்சேத்யமான ஞானம்; மழைக்கண்ணன், பகவத்காருண்ய வர்ஷநிர்வாஹகன்; பகவத்குணாம்ருத வர்ஷிகளான ஆசார்யர்கட்கும் ஆசார்யபதம் வகிப்பன் இவன்; முதலிய நல்ல நுண்கருத்துக்கள் இப்பாட்டின் ஸ்வாபதேசத்திலுள்ளன 84, 85 பெருமாள் முடிசூடத்தவிர்ந்தது விபீஷணாழ்வானுக்கும் சுக்ரீவ மஹாராஜர்க்கும் முடிசூட்டுகைக்காகவே 87 தன் சங்கல்பத்தைக் குலைத்தாகிலும் ததீயர் சங்கல்பத்தை நிறைவேற்றுமவன் எம்பெருமான் 87 நாமஸங்கீர்த்தனம் குடிநீர்போலே 87 பகவதனுபவம் செய்பவனுக்கு, விக்நங்கள் நாசமாகவே விலகும் 87 நித்ய விபூதியி லிருப்பின் வர்ணனை 89 ஞானம் விசதமானால் அவ்விடம் அணித்தாய் (இக்கரையெனும்படியாய்), இவ்விடம் தூரமாயிருக்கும் 90 தூய்மையாகிறது பகவத்ஸ்பர்சம் 93 தூய்மைதருவது பகவத்ஸம்பந்தம் 96 ப்ரபந்நனுக்கு ஒரு சக்தியும் தேடவேண்டா, அசக்தி ஸம்பாதிக்கவும் வேண்டா, நின்ற நிலையில் அதிகாரம் அமையும் 97 இட்ட காலடிக்குப் புண்பட்டிருக்கும் அவன், உபாயத்தில் துணிவு புறப்படவொட்டாது, உபேயத்தில் துணிவு புறப்படாதிருக்கவொட்டாது 97 ப்ரேமம் அடைவுபார்க்க ஒட்டாது 98 அஞ்சலி எம்பெருமானுக்குப் பொறுக்கவொண்ணாதாகை 98 இவன் ஏதேனும் இடினும் கொள்ளுகைக்கு அவன் தன்னை அமைத்துக்கொள்வன் (வராஹமூர்த்திக்கு கோரைக்கிழங்கு நிவேதித்தல்) 98 இடுகிறவன் நெஞ்சில்

ஈரமே பார்ப்பது 98 ஸ்வாபதேசத்தில் ஆயர்குலம் எனில் அநந்ய ஸாதனரான பாகவதர்குலம் 101 முதலேழ்பாட்டிலுள்ள சாஸ்த்ரார்த்தசங்க்ரஹமும் 6-15 பாட்டுக்களில் எழுப்புகையின் சாஸ்த்ரார்த்த சங்க்ரஹமும் 101-104 பகவத்விஷயத்திலே அவகாஹிக்கையாவது பாகவதஸம்ச்லேஷைகார்யகமாகை 109,110 ஆச்ரிதனுடைய ஹ்ருதயத்தைக் கணிசித்துக்கிடக்குமவன் 112 திருவவதாரத்துக்கு நாற்றங்கால், பிறந்தபிறவிகள் போராமே, திரியப்பிறக்கைக்கு அடியிட்டபடி (எனவே துயிலமர்ந்தவித்தினை) 112 அவனுடைய லாபத்துக்கும் சேஷபூதனுடையலாபத்துக்கும் ரக்ஷகமான திருவடிகள் 112 யோகிகள்=யோகாப்யாஸம்பண்ணுகிறவர்கள்=வ்ருத்திநிஷ்டர்கள்=எழுப்புகிறவர்களைப் போலிருப்பவர்கள் 113 முனிவர்கள்=மநநசீலர்கள்=குணநிஷ்டர்கள்= உறங்குகிறவர்களைப்போல் இருப்பவர்கள் 113 " ஹரி " என்கையாவது, பகவதனுபவ விரோதிகளைப் போக்கியருளவேணுமென்கை, 113 முனிவர்களும் யோகிகளும்=ஒருப்ரவ்ருத்திக்கு க்ஷமரன்றிக்கேயிருக்கிற குணநிஷ்டரும் கைங்கர்ய நிஷ்டரும் பரத லக்ஷ்மணர்களைப்போலேயிருக்குமவர்கள் 113 அவனாலே பயங்கெட்டால் அத்தலைக்குப் பல்லாண்டு பாடுமித்தனையே 114 பகவத்ஸம்பந்த ஞானம் பிறப்பதற்குமுன்பு இழவுபேறுகள் தன்னளவிலேயாயிருக்கும், அந்த ஞானம் பிறந்தபின்பு இழவுபேறுகள் அவனளவேயாயிருக்கும் 114 எம்பெருமான் திருநாமம் செவி வழியே புகுந்து வவ்வலிடும் 114 ஸ்வாபதேசத்தில் முதலேழ்பாட்டுக்களின் சாரசங்க்ரஹம் 114, 115 புள் என்பது ஞானநுஷ்டானங்களாலே பகவத்ஸம்பந்த கடகரான பாகவதர்கள் 115 தத்தத்வர்ணாச்ரமோசிதமான காலீநகர்மங்கள், பகவத்குணாநுஸந்தான பூர்வமாக பகவத் கைங்கர்ய ரூபங்களாகை 115 எழுப்புகை, பகவதாராதனகாலமாய்த்து எழுந்திராய் எனல் 115 எம்பெருமானுக்கு, ப்ரதிபாதகத்வேந கோயிலான திருமந்த்ரம் 115 சங்கத்வநி ப்ரணவம் 115 உகாரத்தை மத்யத்திலே உடைத்தாகையாலே பரிசுத்தமாய், பகவத்ஸம்பந்த ஞாபகமாய், அகிலாத்மவர்க்கத்துக்கும் பகவத் கைங்கர்யோபயுக்தமாய் தக்ஷிணாவர்த்த சங்கதுல்யமான ப்ரணவம் 115 பேய் ஆவது ப்ரக்ருதி, முலைகள் அஹங்காரமமகாரங்கள், நஞ்சுண்டு என்பது அவையாகிற விஷத்தை அனுபவித்தல் 115 கள்ளச்சகடம் காலோச்சுகை காமக்ரோதங்களை நிவர்த்திப்பித்தல் 116 முனிவர்களும் யோகிகளும்= குணாநுபவபரரும் கைங்கர்யபரரும் 116 பகவத்ஸம்பந்தம் மெய்யாகில் எல்லாருடைய ஸம்ருத்திக்கும் உகக்கவேணும் 116 காம்யத்தில்

பலச்ரத்தையில்லையாகில் தவிரலாம், நித்யகர்மம் அவச்யம் அநுஷ்டித்தேயறவேணும், அநுஷ்டானத்துக்குப் பலமில்லை, அகரணே ப்ரத்யவாயமுண்டு 120 முகம் தோற்றாமே நின்று வாத்ஸல்யத்தாலே ரக்ஷிக்கக்கடவ ஸர்வேச்வரனை நாராயணன் 122 தனது ஸௌசீல்யத்தாலே பிறந்து "மூர்த்தி" ஆயினான் 122 கண்ணுக்குத் தோன்றும்படி நின்று விரோதிகளைப் போக்குமவன் ஆகையாலே கேசவன் 122 ஆனைச்சாத்தன் = அஹங்கார நிவர்த்தகரான மஹாபாகவதர் 124 கீசுகீசென்று பேசின பேச்சரவம், பிரிந்தால் மறுபடி கூடுந்தனையும் தரித்திருக்கைக்காக பரஸ்பரம் ஸம்ச்லேஷித்து, விச்லேஷவ்யஸநம் தோற்றும்படியாகப் பேசும் அரவம் 124 காசும்பிறப்பும் கலகலப்ப = திருமந்த்ரமும் த்வய சரமச்லோகங்களும் ஒன்றோடொன்று சேர்ந்து த்வநிக்க 124 வாசநறுங்குழல் மிக்க பரிமளத்தையுடைய பகவத்விஷயவ்யாமோஹம்...த்வநி 125 ஸம்ஸாரிகளுக்கு ராத்ரியில் பரஹிம்ஸாதி சிந்தனமும், நரகாவஹமான விஷயாநுபவமும், தமோகுணாபிபவத்தால் வந்த நித்திரையுமாய்ச் செல்லும் 125 ஆழ்வார்கட்கும் ஆண்டாளுக்குமுள்ள வாசி 127, 128 அக்ரூரயானம், அர்ச்சிராதிகதி, திருவேங்கடயாத்ரை போல போகையே ப்ரயோஜனம் 129 தேசப்ராப்தியிலும் அர்ச்சிராதி மார்க்கமேபோக ரூபமாய் இருக்கக்கடவது 129 கேசியைப் பிளந்து நம்மையும் தன்னையும் உண்டாக்கித் தந்தவன் 133 ப்ரணயித்வம் போனாலும் ஆர்த்த ரக்ஷணம் தவிருமோ 134 ஸ்வாபதேசத்தில் எருமை சிறுவீடுமேய்வான் பரந்தன என்பதன் பொருள் அஜ்ஞானமானது ஸத்வோதய காலத்தில் விடப்பட்டுத் தனக்கு அபாச்ரயம் தேடிப்போகை 135 போவான் போகின்றாரைப் போகாமல் காத்தல் = பகவத்ஸந்நிதிக்குப் போகையே ப்ரயோஜனமாகப்போமவர்களை, பாகவதர்களை முன்னிட்டல்லது திருவடி தொழக்கடவோமல்லோம் என்கிற நியமத்தையுணர்த்திப் போகாமல் தடுத்தல் 135 மாவாய் பிளந்தானை = அஹங்கார நிரஸகனை, மல்லரைமாட்டிய தேவாதிதேவனை = காமக்ரோத நிவர்த்தகனான நித்யஸூரி நிர்வாஹகனை 135 ஸ்வரூபத்தை யுணர்ந்துவந்து அனுபவிக்கையும் அவன் காரியமிறே 136 புறம்பு நிற்கிறவர்கள் இளையபெருமாளைப் போலேயும் முமுக்ஷுக்களைப்போலேயும் உள்ளுக்கிடக்கிறவள் நித்யஸித்தரைப்போலேயும் 136 "துவளில் மாமணிமாடம் என்று எடுத்துக் கழிக்கவேண்டா, அது ஜீவாத்மாவினுடைய அபஹதபாப்மத்வாதிகளைப்போலே, இது பரமாத்மாவினுடைய அபஹதபாப்மத்வாதிகளைப்போலே அங்கு ப்ரத்வம்ஸாபாவம், இங்கு ப்ராகபா

வம் 137 அபஹ்ருதபாப்மத்வாதிகள் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உண்டாயிருக்கச்செய்தே, ஹேயஸம்பந்தார்ஹமாயிறே இவன் வடிவிருப்பது. ஹேயப்ரதிபடமாகையாலே அநர்ஹமாயேயிருக்குமவன் 138 உபயவிபூதியுக்தனாகையாலே ஐச்வர்யம் விஞ்சியிருக்கும், அத்தையும் மேலிடும்படியாயிருக்கும் தண்ணளி, ஆச்ரயம்அதுவாகையாலே கழிக்க ஒண்ணாமல் கிடக்கிறது நாதத்வம் 138 அபிமதலாபம் அவனால் செய்யலாகில் இவர்கள் பதறுகிறதென் என்றிருந்தாள் அவள், உபேயம் அவனேயாகில் இவள்கிடந்து றங்குகிறதென் என்றிருந்தார்கள் இவர்கள் 139 ஆத்மாவுக்கு ஞானாநந்தங்களன்று நிரூபகம் சேஷத்வமே நிரூபகம் 139 பகவத்ஸம்பந்திகளுக்கு எல்லாம் அடிக்கழஞ்சு பெற்றிருக்கிறபடி 140 மாமாயன் = ஆச்சர்ய குணசேஷ்டிதங்களாலே அபலைகளான பெண்களை எழுதிக்கொண்டு அவர்களுக்கு இஷ்டவிநியோகார்ஹமாம்படி பவ்யனாயிருக்குமவன் 142 மாதவன் = அந்த ஸௌலப்யத்துக்கு குருகுலவாஸம் பண்ணின இடம் 142 வைகுந்தன் = ஸ்ரிய:பதித்வத்தாலே வந்த மேன்மைக்குத் தகுதியான தேச விசேஷத்தையுடையவன் 143 ஞானம் பரிமளிக்கையாவது அநுஷ்டான சேஷமாயிருக்கை 143 மணிக்கதவம் தாள்திறவாய் என்பது ஸ்வாபதேசத்தில் தேஹாத்மாக்கள் இரண்டிலுமுண்டான மமகாரத்தைத் தவிர்த்தல் 144 திருத்தாயார் = அநந்யோபாயத்வஸ்வரூபஞானம் 144 வாகாதி இந்த்ரியங்கள் பகவத்விஷயங்களிலே ப்ரவணங்களாகையாலே ஒரு காரியத்திலும்சக்தையல்லளென்பது ஊமையோ அன்றிச் செவிடோ என்னுமிடம் 144 ஸ்வப்ரவ்ருத்தி ஸாமாந்யமும் உபாய விரோதியாகையாலே இதில் அந்வயியாதபடி தடுத்துவைத்தார்களோ, அதாவது மநஸ்ஸை தடுத்ததோ 144 உபாய வைலக்ஷண்யம் ப்ரவ்ருத்யந்தரத்தில் அந்வயியாதபடி மோஹிப்பித்ததோ 144 ஸ்வார்த்தப்ரவ்ருத்திஸாமாந்யம் உபாயவிரோதி, பரார்த்தப்ரவ்ருத்தி ஸாமாந்யம் உபாயபலமாயும் உபாயாநுகூலமாயும் இருக்கும் 145 அவனுடைய ரக்ஷகத்வத்தையுணர்ந்தால் தனக்கு யத்நம்பண்ண ப்ராப்தியில்லை, தன் சேஷத்வத்தையுணர்ந்தாலும் ப்ராப்தியில்லை 148 ஸித்தோபாய நிஷ்டர்க்கு விளம்ப ஹேது இல்லாமையாலே ப்ராப்யத்தில் த்வரையாலே பதறுகிறார்கள் 148 ஸித்தோபாய நிஷ்டர்க்கும் கர்மஞான பக்திகளுண்டு, இவர்களுடைய க்ரியாகலாபம் கைங்கர்யத்திலே அந்விதமாயிருக்கும், ஞானம் ஸ்வரூபத்திலே அந்விதம், பக்தி ப்ராப்யருசியிலே அந்விதம் 148, 149 ப்ராப்யத்தில் த்வரையில்லையாகில் அசித்தோடொக்குமத்தனை 149 ஆநந்தரூபனாய்

ஆநந்தகுணகனாய் ஆநந்தாவஹனாயிருக்கிற க்ருஷ்ணனுடைய அநுபவமிறே ஸாக்ஷாத்ஸுகமாகிறது 149 ஜீவத்வாரா அன்றோ அநுப்ரவேசம் 151 உகவாதார்க்கும் ஸத்தையை நோக்கி உகந்தார்க்கும் வத்ஸலன் (எம்பெருமான்) 151 வ்யாப்திக்கு ப்ரயோஜனம் வேண்டின இடத்தே ஸ்புரிக்கவல்லனாகை 151, 152 வெறுமையேபச்சையான...தார்மிகன் 152 அத்வேஷமாத்ரமுடையார்க்குத் தன்னைப் பெறுகைக்கு ஸுக்ருதமும் ருசிஜநகனும், உபாயமும் ப்ராப்யனுமாயிருக்கிறவன் (எம்பெருமான்) 152 வேண்டுமிடத்தே ஆவிர்ப்பவிக்கைக்கன்றோ அவனுடைய வ்யாப்தி 155 கும்பகரணன்=தமோகுணம் 156 ஸாத்விகனான அதிகாரிக்கு நித்ரையாவது ஸ்வாநுபவதசையாலே இதர விஷயங்கள் தோற்றாதிருக்கை 156 சோம்பலாவது வ்யாபாராந்தராக்ஷமதை 156 தேற்றமாய்வந்துதிற என்கையால் இவ்வதிகாரிக்கு (உபாயநிஷ்டருக்கு) லோககர்ஹை வாராமல் லௌகிகாநுவர்த்தநம் கார்யமென்றதாய்த்து 156 ரக்ஷ்யவர்க்கத்திலே, தன்கைகால் நீட்டமாட்டாதவர்களையிறே உகப்பது (எம்பெருமான்) 158 ஆத்மாக்களுக்குத் தொகையுண்டானாலிறே 159 ஈச்வரன் ஒருவனுமே ஸர்வாத்மாக்களுக்கும் நியமநாதிகளைப் பண்ணுவன் 159 பகவத்ஸம்ருத்திபொறாதார் பாகவதர்களுக்கு சத்ருக்கள், பாகவதஸம்ருத்திபொறாதார் எம்பெருமானுக்கு சத்ருக்கள் 160 ஸ்வாபதேசத்தில் கற்றுக்கறவை=ஸஸந்தானரான சிஷ்யர்; செற்றார்=உபாயாந்தரபரரும் உபேயாந்தரபரரும்; அவர்கள் திறல்=ஸ்வார்த்தபரதை; பொற்கொடி=ஞானவைசித்யத்தையுடையவள்; அளகம்=வ்யாமோஹம்; புனமயில்=பரமபக்தியையுடையவள்; தோழிமார்=பாகவதர்கள் 166 விடச்சொன்னவையும் பற்றச்சொன்னவையும் அன்றிறே உபாயம், விடுவித்துப் பற்றுவித்தவனிறே உபாயம் 167 கைங்கர்யலக்ஷ்மியிறே இவ்வாத்மாவுக்கு நிலைநின்றஸம்பத்து 171 கர்மத்தாலேயாதல் தேவதாந்தரபஜநத்தாலேயாதல் வரும் ஐச்வர்யம் அந்தவத்தாயிருக்கும் 171 ப்ராப்ய விரோதிகளின் நசையற்றபடியாலே, தோற்றிமாயும் ஸம்பத்தன்றியிலேயிருக்கை (நிலைநின்றஸம்பத்து) 171 ஆழ்வாருடைய கைங்கர்யஸ்ரீ, விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற எறிப்பாய்ந்தது 171 ஈச்வரன் அபிநிவேசமறிந்து விள்கை விள்ளாமை விரும்பியுள்கலந்தார்க்குத் தன்னைக் கொடுக்கும் 172 ஆச்ரித விரோதிகளைப் போக்குமது தன் சினம் தீர்ந்தானாக நினைத்திருக்கை 173 ராமபிரான், தன்திருமேனியிலே அம்புபட்டபோது ஆறியிருந்தான், திருவடி மேலே அம்புபட்டபோது

